காவ்யா

சங்கரதாஸ் சுவாமிகளின்

நாடகக் களஞ்சியம்

தொகுப்பாசிரியர்

முனைவர். அரிமளம் சு. பத்மநாபன்

டாக்டர் அரிமளம் சு. பத்மநாபன் அரங்கிசைக் கலைஞர், ஆய்வறிஞர், இசை அமைப்பாளர், சொற்பொழிவாளர், இசை நாடகக் கருத்தாளுநர், தேசிய சேர்ந்திசை பயிற்றுநர். 38 ஆண்டுகள் இசைத்துறை அனுபவமும் 26 ஆண்டுகள் ஆசிரியப்பணி அனுபவமும் கொண்டவர். இரு நூல்களின் ஆசிரியர். இசை ஞானச்சுடர், அருட்பா இசைமணி, சுகநாதலய ஞானமணி, நாடக நற்றமிழ் ஞாயிறு போன்ற விருதுகளைப் பெற்றவர். தற்போது செம்மொழி நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

சங்கரதாஸ் சுவாமிகளின்
நாடகக் களஞ்சியம்

தொகுப்பாசிரியர் முனைவர் அரிமளம் சு.பத்மநாபன்
முதல் பதிப்பு : நவம்பர், 2008
வெளியீடு : காவ்யா
16, இரண்டாம் குறுக்கு வீதி, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
☎ : 044-2372 6882
கணிணி அச்சு : ஸ்ரீ ராம் கிராபிக்ஸ், சென்னை. ☎ : 98416 23852
அட்டை வடிவமைப்பு : செல்வம்
அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை-5
பக்கங்கள் : XXXVI+1133 = 1169
விலை : ரூ.600/-

பசும்பொன் தேவர் நூற்றாண்டு நிறைவு விழா
(2008) சிறப்பு வெளியீடு

Sankarathas Swamikalin
Naataka Kalanchiyam

Edited by Dr.Arimalam S. Padmanabhan
First Edition : November, 2008
Published by : KAAVYA
16, Second Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai-600 024.
☎ : 044-2372 6882
Typeset by : Sri Raam Graphics, ☎ : 98416 23852
Printing at Mani Offset, Chennai-5.
Pages : XXXVI+1133 = 1169
Price : Rs.600/-

தமிழ்நாடகத்துக்கு ஒரு சுவாமிகள் :
ஆய்வு முன்னுரை

"ஒரு நல்ல நாடக இயக்குநர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், நாடகம் காணும் ரசிகர், இசை அமைப்பாளர், பாட்டு மயமாகவே நாடகமேடை இருந்த நிலையை மாற்றி நாடக மேடையை விவாத மேடையாக ஆக்கிய வசனகர்த்தா, பழமையான புராணக்கதை மாந்தர்கள் வழியே பழமையில் இருந்து சீர்திருத்தம் கொண்டு வரமுனைந்த ஒரு சீர்திருத்தவாதி, உடை ஒப்பனையாளர், விதூசகன் வழியே உலகியல் நிலையை உணர்த்திய நடப்பியல் கலைஞர், தமிழ் இலக்கியங்களை எல்லாம் பயின்று தேவையானபடி விரிவுரை செய்துகாட்டிய புலமை மிக்க தமிழ் ஆசான், திறமான புலமை எனில் வணக்கம் செய்து பயன்படுத்தி மொழியாக்கம் செய்த மொழி பெயர்ப்பாளர் என்றெல்லாம் மக்களிடம் இன்று பேசப்பட்டுக் கொண்டிருக்கும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடக உலகிற்கு நல்ல ஒரு முனைவர் ஆவார்" என்பார் முனைவர் கே.ஏ.குணசேகரன். (தமிழ் நாடகங்களும் சங்கரதாஸ் சுவாமிகளும்)

பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் உயர்ந்த உரைநடை எழுதுபவர். மனோன்மணீயம் சுந்தரனார் படைப்புகளில் கவிதைகள் கொஞ்சும். பரிதிமாற் கலைஞர் எழுதுவது எப்போதுமே பண்டிதர் நடையாக இருக்கும். ஆனால் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் படைப்புகள் அனைத்திலும் நாம் காணக்கூடியது உயர்ந்த நடை, எளிய முறையில் பாமரனும் புரிந்து கொள்ளும் வசனம், தெளிவான சந்தங்களில் பாட்டு-சொல்லப்படும் கருத்துகளிலே நியாயமும் தர்மமும் குலையாமல் இருந்தது என்பர்.

சங்கரதாஸ் சுவாமிகள் வ.உ.சி. மாவட்டம் தூத்துக்குடி வட்டத்தைச் சேர்ந்த வெள்ளையத் தேவன் பரம்பரையில் (பகதூர்) தாமோதரத் தேவர் என்பவரின் மகனாக 1867 ஆண்டு (ஆவணி மாதம் 22ஆம் தேதி) செப்டம்பர் 7-ல் பிறந்தார். தாயின் பெயர் பேச்சியம்மாள். இவரது இயற்பெயர் சங்கரன்.

தன் இளமைப் பருவத்திலேயே தமிழ் மொழியைக்

கருத்தூன்றி படித்தவர். 16 வயதினிலேயே கவிகள் இயற்றுவதில் திறமை பெற்றவர். 24-வது வயதில் நாடகத்துறையில் சேர்ந்தார். நாடக நடிகராகவும் ஆசிரியராகவும் பணியாற்றினார். இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் முதன்மை மிக்கவர். எனினும் நாடகத் தமிழின் தந்தை என நாடு போற்றும் நல்லவர். தன் ஆயுள் முழுவதும் நாடகக் கலையே உயிர் மூச்சாகக் கொண்டு பணியாற்றியவர். இல்லற வாழ்வின்றி வாழ்ந்தவர்.

“பாட்டைத் திருடிப் பகட்டுவதைக் காட்டிலும் ஒட்டைத் திருடி உண்பதே மேல்” என்ற கொள்கை கொண்டவர்.

இவரது தந்தையும் ‘இராமாயணப் புலவர்’ என்ற பட்டத்துடன் தமிழ்ப்புலமை மிக்கவர். அவரிடமே தொடக்கக் கல்வியைப் பெற்றார். பிறகு வண்ணச்சரபம் பழனி தண்டபாணி சுவாமிகளிடம் பாடம் கேட்டார். அதனால் அந்தப் புலமையைப் பெற்றார். “ஞானப் பழத்தைப் பிழிந்து” என்ற பாடலில் “பழனி மலையில் சந்ததம் குடிகொண்ட சங்கரன் கும்பிடும் தண்டபாணித் தெய்வமே” என்று தன் குருவையும் குறிப்பிடுகின்றார்.

சுவாமிகள் நாடக நடிகராகவே தொடக்கக் காலத்தில் நல்ல நடிகராகவே விளங்கினார். ராமுடு அய்யர், கல்யாண ராமய்யர் ஆகியோரின் நாடகக் கம்பெனிகளில் சேர்ந்து நடித்து வந்தார். எமதருமன், இரணியன், இராவணன், சனீசுவரன், கடோத்கஜன் போன்ற கதாப் பாத்திரங்கள் அவருக்கு பொருந்தின.

ஒருமுறை ஓர் ஊரில் சனீஸ்வரன் வேடம் ஏற்று நடித்து முடித்தார். முடியும்பொழுது அது அதிகாலை நேரம். தனது வேடத்தைக் கலைப்பதற்காக ஆற்றுக்கும் சென்றுள்ளார். விடிந்து விட்ட நிலையில் சலவைத் துறைக்குச் சலவை செய்ய வந்துள்ளாள் அந்தத் தொழில் செய்யும் பெண்ணொருத்தி. அவளோ கர்ப்பிணிப் பெண்ணுங்கூட, இவரது அச்சமூட்டம் உருவங் கண்ட அப்பெண் பயந்து நடுங்கி மயங்கி விழுந்துவிட்டாள். வீழ்ந்தவள் உயிரும் பிரிந்து விட்டது. தனது அச்சமூட்டும் வேடம் ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் உயிரைப் பறித்து விட்டதைக் கண்ட சங்கரதாஸ் அன்று முதல் நடிப்புத் தொழிலைக் கைவிட்டுவிட்டு முழுநேர நாடகாசிரியராக மாறினார் என்று குறிப்பிடுவர் அ.ராமசாமி (சங்கரதாஸ் சுவாமிகள்).

பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி பல்வேறு தமிழ்க் கலைஞர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இடம்தந்து உதவியது. பாரதியார், சங்கரதாஸ் சுவாமி, கி.ரா., ம்.அரங்கநாதன் என்று பட்டியல் தொடர்கின்றது.

புதுச்சேரியில் சுவாமிகளின் நாடகங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. நல்ல வசூல் ஆயிற்று. ஞானசௌந்தரி, பாதுகா பட்டாபிஷேகம், லங்கா தகனம், சுலோசனா சதி ஆகிய நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. சுவாமிகளின் உடல்நிலை சுமாராக இருந்ததால் மேடையின் பக்கத்தட்டி அருகே கான்வாஸ் சேரில் படுத்துக் கொண்டே நாடகத்தைக் கவனிப்பார். இது டி.கே.சண்முகம் அவர்களின் கூற்று.

ஜெயராம் நாயுடு, வயலின் சமுத்திரா நாராயணசாமி, மிருதங்கம் பக்கிரி மற்றும் ஒருசில நாடகக் கலைஞர்கள் சுவாமி களுக்கு அனைத்து வகையிலும் பணிபுரிந்து வந்தார்கள். இவரது நாடகங்கள் புதுவை 'கெப்ளே' தியேட்டரின் நடத்தப்பட்டன.

மறைவு

பக்கவாதநோய் கொண்ட சுவாமிகளுக்குச் சென்னையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அது பலன் தராமல் போகவே அவரது மாணவரான புதுவை ஜெயராம் நாயுடு சுவாமிகளைப் புதுச்சேரிக்கு அழைத்துப் போனார். அங்கு அவருக்குப் பேச முடியாத நிலை ஏற்பட்டது.

இவர் 1922 ஆம் ஆண்டு நவம்பர் 13–ஆம் நாள் இரவு 11 மணிக்கு மறைந்தார். புதுவை கருவடிக்குப்பம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அவருக்கு ஒரு நினைவு மண்டபமும் எழுப்பப்பட்டது. இதற்கு தஞ்சை இராமையாதாஸ், அவ்வை சண்முகம், புதுவை ஜெயராம் நாயுடு, தோழர் வ.சுப்பையா போன்றோர் உதவினர்.

இவரது நினைவு நாளை கலை இலக்கிய பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், புதுவை அரசின் கலைப்பண்பாட்டுத்துறை போன்றவை சிறப்பான முறையில் அஞ்சலி செலுத்தி வருகின்றன. சுவாமிகள் வாழ்ந்த தெரு அவர் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகிறது.

நாடகப் பாடல்கள்

"ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, நடை பாவனையாலும் இனிய கீதங்களாலும் இடத்திற்குத் தகுந்தபடி வசனத்துடன் இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம். என்னால் வரையப் பெற்ற ஒவ்வொரு சரித்திரங்களிலும் இடத்திற்குத் தகுந்தபடி பலவர்ண மெட்டுகளைத் தெரிந்தெடுத்து இராக தாளத்துடனும் அநேக முது மொழிகளைக் காட்டிச் சொற்சாதுர்யத்துடனும் நீண்ட அனுபவத்துடனும் வரையப் பெற்றவை.

தமிழ்நாட்டிலுள்ள நடிகர்கள் மிகுதியாகப் பாடும் பாடல்கள் எல்லாம் என்னால் இயற்றப் பெற்றவையே. சில பாடல்களுக்கு வர்ண மெட்டுக்களே குறித்திருக்க மாட்டேன். ஏனென்றால் அவை புதிதாக என்னால் கற்பனை செய்யப்பட்டவைகளே. எல்லாப் பாடல்களும் அடிக்கடிப் பாடக் கேட்பதே." (பவளக் கொடி சரித்திரம், முன்னுரை) என்பார் சுவாமிகள்.

ஒருமுறை உடுமலை சரபம் முத்துசாமிக் கவிராயர் "உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும் போல் இருக்கின்றன" என்றாராம். உடனே சுவாமிகள் "கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும் போல் இருக்கின்றனவே" என்றாராம். இது விளையாட்டு பேச்சன்று. முள்ளும் முரடும் என்றால் பலாப்பழம் என்றும் கல்லும் கரடும் போல் என்றால் கற்கண்டு என்றும் பொருள். வழக்கமான உரையாடலிலும் கூட புலமை நயம் வெளிப்படுவது போற்றக் குரியதே.

பார்சி நாடகங்களும், ஆந்திரப் பகுதியிலிருந்து வந்த நாடகங்களும் சென்னையில் வந்த அளவுக்குத் தமிழகத்தின் தென் பகுதிக்கு வரவில்லை. பெரிய நாடகக்காரர்கள் ஒருசிலர் தவிர வேறு யாரும் பார்த்ததில்லை. ஆயினும் சுவாமிகள் அவற்றையும் கண்டறிந்து தமது நாடகங்களில் புதிய உத்திகளாக அவற்றைப் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலேயர் ஆட்சி காரணமாக கிறிஸ்துவின் வரலாறு பற்றிய நாடகங்கள், பாடல்கள் பரவலாக தமிழகத்தில் நடத்தப்பட்டன. இவையே சுவாமிகளின் நாடகங்களில் மேற்கத்திய இசை இடம்பெறக் காரணம். கதாகாலட்சேபத்தின் தாக்கம் மிகவும் அதிகம் உள்ளது. பம்பாயிலிருந்து வந்த பெரிய நாடக இசைக் கலைஞர்கள் அங்கூர் பாலா, நரசிம்மநாயுடு, நாராயண வியாஸ், கமலா ஊர்மிளா, வெங்கடாசலய்யா போன்றவர்களின் பாடல்களைக் கேட்டுத்தான் இந்துஸ்தானி இசையின் தாக்கம் சுவாமி

களின் நாடகங்களில் ஏற்பட்டது என்பார் கலைமாமணி ஏ.கே.காளீஸ்வரன்.

தெருக்கூத்தில் இடம்பெறும் பாடல்கள் பல்லவி அனுபல்லவி போன்ற அமைப்பு இல்லாது இருக்கும். அவை தருக்கள் எனப்படும். இடையிடையே தாளக் கட்டுடன் பாடல் வசன நடையில் அமையும். இதனை இசை வசனநடை என்று கூறுவர். சுவாமிகளின் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இடம்பெற்றுள்ள 'மன்னா என் ஆசை மறந்திடாதீர்' என்ற பாடல் இதற்கு ஒரு சான்றாகும். சில பாடல்களில் ஆந்திர நாடக இசையும் தெருக்கூத்து இசையையும் கலந்த நிலையில் சில பாடல்களைப் புனைந்துள்ளார். அவற்றை உச்ச ஸ்தாயியில் இழுத்துப் பாடுவார்கள். உதாரணமாக வள்ளி திருமணத்தில் இடம்பெற்றுள்ள 'ஆயலோட்டும் பெண்ணே' என்ற பாடலைக் கூறலாம். நாட்டுப்புற இசையில் ஒப்பாரி, தெம்மாங்கு, சிந்து வகைகள் போன்றவற்றையும் நலுங்கு போன்ற சடங்குப் பாடல்களையும் நாடகங்களில் பொருத்தமாக பயன்படுத்தி யுள்ளார். 'எந்த சக்களத்தி மேல்' எனும் பவளக்கொடி நாடகப் பாடல் நலுங்குக்குச் சிறந்த உதாரணமாகும் என்றும் கூறுவர்.

பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகம் 'மனோகரா'. அதற்கு சுவாமிகளே பாடல்களை எழுதினார்.

"நேரில் உற்றிடும் கருமத்தால் ஜாதி
ஜென்மத்தால் ஜாதி இல்லை என்று ஓதிடும்
உணர்ந்துபார் இந்நேரமே
காழம் எதற்கு சொல்லு
சாஸ்திரங் கொண்டென்னை வெல்லு
பாமரமாய்த் தில்லுமுல்லு பண்ணிப்
பேசவேண்டாம் நில்லு".

"மேற்குலத்து மாதாஆவாயோ சொல்லடி-மீனாட்சி
மேற்குலத்து மாதாஆவாயோ சொல்லடி
விஸ்தாரம் நீ உரைத்தாலும் தக்கது நல்லதல்லடி"

என்று மீனாட்சியிடம் தர்க்கம் உரைக்கும் வண்ணம் பாட்டு எழுதினார்.

"காயாத கானகத்தே
நின்றுலாவும் நற்காரிகையே

மேயாத மான் புள்ளி
மேவாத மான்
சாயாத கொம்பு இரண்டு
இருந்தாலும்-அது என்
தலை நிமிர்ந்து பாயாத மான்"

என்ற வள்ளித் திருமணப் பாடல் பெரும் புகழ்ப் பெற்றது- ஸ்ரீ வள்ளி, ராஜ பார்ட் ரங்கதுரை போன்ற திரைப்படங்களிலும் பயன்படுத்தப்பட்டு பரவியது.

மக்கள் கலைஞர்

இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்கச் சேதுபதி சங்கரதாஸ் சுவாமிகளது செல்வாக்கினையும் புலமைத் திறனையும் பாராட்டிட தனது அவைக் களத்துக்கு அழைக்க விரும்பினர்.

"சேதுபதி மன்னரைப் பாடாதப் புலவர்கள் ஒருவரும் இல்லையே. சுவாமிகள் மட்டும் ஏன் இன்னும் மன்னர் மீது பாடவில்லை. நேரில் வந்து ஒரு பாடல் பாடினால் உங்களுக்கும் பெரும்பொருள் தருவாரே மன்னர்" என்று மன்னரின் செயலாளர் அழைத்தாராம். சுவாமி மனிதரைப் பாடுவதில்லை என்று நோன்பு கொண்டவர். பலர் வந்து வற்புறுத்தியபோது, "மன்னனும் மறவன், நானும் மறவன். என்னைவிட மன்னன் எந்த வகையிலும் உயர்ந்தவன் அல்லன்" என்று சினத்துடன் பதில் சொல்லி அனுப்பினராம் என்பார் டி.கே.சண்முகம்.

சென்னை சபாவில் சுவாமிகளின் கோவலன் நாடகம். நாடகத்தைப் பலரும் பாராட்டினர். உ.வே.சா.வும் மனமுவந்து பாராட்டினார். அத்துடன் "சுவாமிகளே! ஏன் இளங்கோ வடித்த சிலப்பதிகாரத்தைத் தாங்கள் நாடகமாக ஆக்கம் செய்து மேடை ஏற்றக் கூடாது" என்றும் வினவினார்.

சுவாமிகளும் சிலம்புவழி நாடகம் செய்து சென்னையிலேயே அரங்கேற்றினார். நாடகம் பார்த்த பலர், முந்தைய நாடகத்தில் கோவலனும் கண்ணகியும் மாலை மாற்றிக் கொள்வார்களே அந்தக் காட்சியும் இன்ன பிற காட்சிகளும் ஏன் காட்டப்படவில்லை எனக் கேட்டனர்.

"பார்வையாளர்களின் மத்தியில் 'அம்மானை' எனும் தமிழ் இலக்கிய வடிவத்தின் அடிப்படையில் உள்ள கோவலன் கதையைத்

தான் பொது மக்கள் விரும்புமாறு செய்தேன். உடனடியாகப் பெரிய மாற்றத்தைச் செய்தால் அதாவது சிலம்புவழி நாடகம் செய்தால் மக்கள் எளிதில் மனம் வாங்கிக் கொள்ளமாட்டார்கள். மக்கள் வழிநின்று மெல்ல மெல்லப் பெரிய மாற்றத்தினைச் செய்ய இயலும்'' என்று சுவாமிகள் விளக்கினார். உ.வே.சா. ஐயரும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டார்.

கூத்துப் பொட்டல்களில் தெருக்கூத்துக்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் ஆர்மோனியம் பின்பாட்டுடனும் திரைச்சீலைகளுடனும் அரிதாரம் பூசிய முகங்களுடனும் பளபளக்கும் உடை ஒப்பனைகளுடனும் ஒரு வித்தியாசமான கலை வடிவம் வந்தது. ஆம், ஒரு நாடக அரங்கம் வந்தது. சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் என்று தமிழக மக்களால் அது பரவலாகப் பேசப்பட்டது. இன்றளவும் பட்டித் தொட்டிகள் எல்லாம் நடத்தப்பட்டு வருகின்றன.

அரிதாரம் பூசுதல், திரைகள் கட்டுதல், இசைக்கலைஞர்களின் இருப்பிடத்தை மாற்றல், ஒத்தக்குழலுக்குப் பதிலாக ஆர்மோனியம், மிருதங்கம், டோலக் ஆகிய கருவிகளைப் பயன்படுத்துதல், கோமாளிக்குப் பதிலாக விதூசகனை உருவாக்கல் போன்ற மாற்றங்களைச் செய்தார். பாமரத்தனத்தையும், செவ்வியல் தன்மையையும் இணைத்துப் பாலமாக அமைத்து கதை, இசை, இசைக்கருவி, மொழி எனப் பலதுறைகளில் கவனம் செலுத்தினார் என்றும் குறிப்பிடுவார்.

தெருக்கூத்தினை விரட்டி அடித்தவர் சுவாமிகள் என்று சிலர் குறை கூறுவர். குணசேகரனோ இதனைக் குணமாகக் காண்பார் : "தெருக் கூத்துக் கூறுகளைத் தம்வயப்படுத்தி இம்மண்ணின் தன்மைக் கேற்ப நாடகம் செய்தவர் சுவாமிகள்'', என்று.

எழுத்துத்திறன்

சங்கரதாஸ் சுவாமிகள் எழுத்தாற்றல் மிக்கவர். ஒரே இரவில் ஒரு நாடகத்தை எழுதி முடிக்கும் திறன் கொண்டவர். "அன்று மாலை சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று 'அபிமன்யு சுந்தரி' அம்மானைப் பாடல் பிரதியொன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு அரிக்கன் விளக்கை அருகில் வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினார். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் நிம்மதியாக உறங்கிக்

கொண்டிருந்தார். அவரது படுக்கை அருகே அபிமன்யு நாடகம் மங்களப்பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள்! அதற்கேற்ற உரையாடல்கள்! ஆரம்பத்தி லிருந்து முடிவுவரை அடித்தல் திருத்தல் கிடையாது. ஒரு புத்தகத்தைப் பார்த்து நகல் எடுக்கும் வேலையைக் கூட இவ்வளவு விரைவாகச் செய்யமுடியாது. கற்பனையாக நான்கு மணிநேரம் நடைபெறக்கூடிய ஒரு நாடகத்தையே எழுதி முடித்துவிட்டார்" என்பார் தி.க.சண்முகம்.

நாடகப் பிரதிகள்

1. வள்ளித்திருமணம், 2. பவளக்கொடி, 3. சத்தியவான் சாவித்திரி, 4. அல்லி அர்ஜுனா, 5. நல்லதங்காள், 6. ஞானசௌந்தரி, 7. அபிமன்யு சுந்தரி, 8.சுலோசனாசதி, 9. சீமந்தினி, 10. இலங்காதகனம், 11. பிரபுலிங்கலீலை, 12. மிருச்சகடிகை, 13. ரோமியோ ஜுலியட், 14. காலவரிஷி, 15. பிரகலாதா, 16. சுதிஅனுசுயா, 17. பாதுகாபட்டாபிஷேகம், 18. சாரங்கதாரா, 19. சிங்காரலோச்சனி, 20. லலிதாங்கி, 21. பூதத்தம்பி, 22. பாரிஜாத புஷ்பகரணம் அல்லது பாமாவிஜயம், 23. லைலா மஜ்னு, 24. மஞ்சுகோஷா, 25. மார்க்கண்டேயா, 26. பக்தி துருவன், 27. துஷ்யந்தன், 28. மணிமேகலை, 29. வளையாபதி, 30. குண்டலகேசி, 31. சிறுத்தொண்டன், 32. பார்வதி கல்யாணம், 33.கந்தர்வதத்தை, 34. ஸ்காந்தம், 35. ருக்மாங்கதன், 36. ப்ரோஜிஷா நூர்ஜஹான், 37. மலையாள பங்கஜ வல்லி, 38. கடுங்குயில்குன்றத்து கொலை, 39. வாலி மோட்சம், 40. பக்த குசேலா, 41. சுபத்திரா அர்ச்சுனா, 42. ஜெர்மன் சண்டை, 43. மதுரைவீரன், 44. தாவ்பீச், 45. சரசசல்லாப உல்லாச மனோரஞ்சனி, 46. கருடசர்வ பங்கம், 47. தேசிங்கு ராஜன், 48. கட்சயக்ஞும், 49. விராட பர்வம், 50. நயதமயந்தி, 51. கர்ணா அர்ச்சுனா, 52. பிலோமினாள், 53. அலாவுதீன், 54. கிருஷ்ணதுலாபாரம், 55. சனிக்கூத்து, 56. தாரா சசாங்கம், 57. மா.பா.ரா., 58. தனஅமராவதி, 59. ருக்மணி கல்யாணம், 60. மச்சரேகா, 61. சௌ.சௌ., 62. அனுமான் சபதம், 63. அதிரூப அமராவதி, 64. இந்திரசபா, 65. கட்டபொம்மன், 66. கோவலன், 67. சதாரம், 68. அலி பாதுஷா

இப்பட்டியல் சித்திரத் தேவரால் தயாரிக்கப்பட்டது. இவர் சுவாமிகளின் மாணவர். இந்த நாடகங்களை 69 தமிழ் நாடகக்

கம்பெனிகளின் பட்டியலையும் நாடகக் கலைஞர் ஏ.கே.காளீஸ்வரன் தயாரித்துள்ளார்.

இவற்றில் 16 நாடகங்களே கிடைத்துள்ளன அவற்றில், சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, அல்லி சரித்திரம், அபிமன்யு சுந்திரி, சதி அனுசுயா, சுலோசனா சதி, பிரஹலாதன், அரிச்சந்திர மயான காண்டம், வள்ளித் திருமணம், லவகுச ஆகியவை புராணம் நாடகங்கள். கோவலன் சரித்திரம் இலக்கிய நாடகம். ஞான சௌந்திரி, சீமந்தனி ஆகியவை சமய நாடகங்கள். நல்லதங்காள் நாட்டுப்புறக் கற்பனை நாடகம். சாரங்கதரன் மொழிபெயர்ப்பு நாடகம்.

சுவாமிகளின் நாடகங்கள்

எக்காலத்துக்கும் பொருத்தமானவை ; என்றும் காலத்தால் அழியாதவை. சுவாமிகளைப் போன்று அவர் மாதிரி அவருக்கு இணையாக என்று நாடக உலகில் எவரையும் குறிப்பிட முடியாது. சுவாமிகளின் நாடகங்களில் மாற்றம் எதுவும் செய்யத் தேவையில்லை. நவீனத் தேவைகளையும் நிறைவு செய்யும் தன்மைகள் கொண்டவை அவை. இன்றும் நாளையும் வரக்கூடிய நாடகம், திரைப்படம் போன்ற கலை வடிவங்களில் சுவாமிகளின் தாக்கம் நிச்சயம் இருக்கும். தமிழ் நாடகத்துறையில் இந்தப் பாடல்தான் பாடவேண்டும், இப்படித்தான் பாடவேண்டும், இவ்வாறு தான் வசனம் பேச வேண்டும் என்று ஒரு முறையான தமிழ் நாடக வடிவத்தை உருவாக்கியவர் சுவாமிகள். அவர் அமைத்துக் கொடுத்த வடிவின் பரிணாம வளர்ச்சிதான் இன்றைய நாடகங்களும் திரைப்படங்களும் என்று கூறலாம். சுவாமிகளின் நாடகங்களில் பாடல், இசை, நடிப்பு, வசனம் ஆகிய நான்குமே ஒருங்கிணைந்து செயல்படும். பாடல்கள் இடம்பெறும் காட்சிகள் பார்வையாளர்களை மிகவும் ஈர்க்கக்கூடியவை என்பார் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராஜேந்திரன்.

இன்றைய தமிழ் நாடக உலகுக்குப் புதிய பாதை அமைத்து, அதிலே நடந்து செல்வதற்கு நாடகக் கலைஞர்களுக்கு ஊன்று கோலாக உதவிக்கரமளித்து வாழ்ந்தவர் மாமேதை பேராசான் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார்கள் என்பார் எஸ்.வி.சகஸ்ர நாமம்.

தெய்வீக வழிபாட்டில் நாடகம் நடத்துவதால் ஊர்

நலமடையும், மழை பெய்யும் என்ற நம்பிக்கைகள் இன்னமும் உள்ளது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், தென்னாற்காட்டில் ஒரு பகுதி, புதுவையைச் சேர்ந்த காரைக்கால் பகுதிகளில் சுவாமிகளின் நாடகங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. தென் மாவட்டங்களில் அவரது நாடகங்கள் நடைபெற்ற அளவுக்கு வடமாவட்டங்களில் நடைபெறாமல் போனதற்கு அங்கு இதற்கான கலைஞர்கள் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம் என்பார் பி.எஸ்.நாகராஜ பாகவதர்.

நாடகப் பணியில் வெறுப்பு வந்து துறவு பூண்டு தலயாத்திரை மேற்கொண்டார். அதனால் சங்கரன் சங்கரதாஸ் சுவாமிகள் ஆனார். இறுதியில் புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளையைச் சந்தித்து சந்தக் குழிப்புகளிலே காணப்படும் தாளவகைகளையும் நுணுக்கங் களையும் கற்றுக் கொண்டார். பிறகு பிள்ளையின் வற்புறுத்தலுக்கு இணங்க சுவாமிகள் மீண்டும் நாடக உலகிற்குள் நுழைந்தார்.

பரமேஸ்வரய்யர், வள்ளி வைத்திய நாதய்யர், பி.எஸ். வேலு நாயர் போன்றோரின் நாடக ஆசிரியராக விளங்கினார். 1910-ல் 'சமரச சன்மார்க்க நாடக சபை'யை நடத்தினார். இதில்தான் எஸ்.ஜி.கிட்டப்பாவும், மதுரை மாரியப்பாவும் பயிற்சி பெற்றனர். 1916-ல் ஜெகநாதஅய்யரால் 'பாலமீன ரஞ்சனி சங்கீத சபை' என்னும் சிறுவர் நாடகக்குழுவில் ஆசிரியர் ஆனார். 1918-ல் மதுரையில் 'ஸ்ரீதத்துவ மீனலோசினி வித்துவ பாலசபா' என்ற சிறுவர் நாடகக் குழுவைத் தாமே தொடங்கினார். இதில்தான் அவ்வை தி.க.சண்முகம் சகோதரர்கள் பயிற்சி பெற்றனர். 1921-ல் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட போதிலும் சாய்வு நாற்காலியில் படுத்த வண்ணம் நாடக ஆசிரியராகப் பணியாற்றிய பாங்கு குறிப்பிடத் தக்கது.

நாடக இசை

அக்காலத்தில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற கர்நாடக இசை அரங்குகளில் வடமொழியும் தெலுங்கும் ஆதிக்கம் பெற்றிருந்தன. எனவே தமிழசை வளர்க்கப் பலரால் பெரு முயற்சிகள் எடுக்கப் பட்டன. சுவாமிகள் தமிழிசை மரபை நிலைநிறுத்த தமது நாடகங்களைப் பயன்படுத்தினார். அருணகிரிநாதருக்குப் பின் சந்தங்களை மிக அதிகமாகப் பயன்படுத்தியவர். கர்நாடக இசையிலிருந்து சில இராகங்களைத் தேர்ந்தெடுத்து பாத்திரங்கள்,

சம்பவங்கள் ஆகியவற்றிற்குப் பொருத்தமாகப் பாடல்களை எழுதி இசையமைத்தார். மரபு இசையைப் பாமர மக்கள் ரசிக்கும்படி செய்து பாடலைக் கேட்டதும் அதன் இராகத்தின் பெயரை அடையாளம் கண்டு சொல்லும் அளவுக்குச் செய்தவர் சுவாமிகள் ஒருவரே. அரங்கில் நடத்தப்படக் கூடிய இசை நாடகங்களை முதன்முதலில் வெற்றிகரமாகப் படைத்துக் காட்டியவர் சுவாமிகள். அவற்றில் வீரம், காதல், சோகம், கோபம், மகிழ்ச்சி, சாந்தம் என ஒவ்வொரு சுவைக்கும் ஏற்ப பாடல்களையும் இசையையும் சுவாமிகள் அமைத்திருந்ததால் அவை வெற்றி பெற்றன என்பார் குன்னக்குடி வைத்தியநாதன்.

அத்துடன், கர்நாடக இசையில் உள்ள கீர்த்தனை வடிவமைப்பை உருவாக்கியவர் சுவாமிகள். இசையமைப்புத் துறைக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்பவர். தமது திரைப்பட இசையமைப்புக்கு முன்னோடியாக விளங்குபவர். நாடகத்திற்கும் இசைக்கும் சுவாமிகள் ஓர் பல்கலைக்கழகம் என்றும் கூறுவார்.

இசை நாடகம்

சங்கரதாஸ் சுவாமிகளின் அரங்க முறைமையில் இசைக்கு முக்கியமான இடமுண்டு. இதுபற்றிப் பிறிதோரிடத்தில் எழுதும் பொழுது 'பாடலே அரங்காக' (Singing as Theatre) எனக் குறிப்பிட்டுள்ளேன். அதாவது இந்நாடக முறைமையில் பாடல்களின் இசை நாடகத்தின் கட்டத்துக்கமைய பாத்திரங்களின் உணர்ச்சி நிலைமைகளுக்கு மைய அமையும். இதனால் தம் குரல் வளத்தாலும் இசைத் திறனாலும் இசையனுபவத்தை வெளிப் பாட்டுக்குப் பயன்படுத்தும் ஆற்றலிலும் பெயர் பெற்ற பாடகர்கள் முக்கிய நடிகர்கள் ஆயினர். எம்.ஆர். கோவிந்தசாமி, எல்.ஜி.கிட்டப்பா பின் நாட்களில் எம்.கே.தியாகராஜ பாகவதர் போன்றோர் இத்தகையோரே என்பார் கலாநிதி கா.சிவத்தம்பி.

அத்துடன் சுவாமிகளிடத்துப் புராணத்துவம் பெற்ற இந்நாடக வடிவத்துக்கு இன்றும்தான் ஏற்புடைத்தான ஒரு பெயர் அமைய வில்லை. சிலர் இசை நாடகம் என்பர். 'ஸ்பெஷல் நாடகம்' என்ற குறியீடும் உண்டு. இது இசை நாடகத்திலும் பார்க்க வரலாற்றுப் பொருத்தமுடைய ஒரு பெயராகும். சுவாமிகளின் நாடகங்களின் அச்சுப் படிகளிலேயே சில இடங்களில் 'ஸ்பெஷல் நாடகம்' என்று வருகிறது. இது ஒரு சுவாரஸ்யமான பெயர். அக்காலத்து நாடகங்கள் பெரும்பாலும் கம்பெனி நாடகங்களாகவே

அமையும். ஆனால் சில நடிக, நடிகையர் ஒன்றுகூடி ஏற்கனவே தாங்கள் பரிச்சயப்படுத்தி வைத்திருந்த நாடகங்களை நடிப்பர். முக்கிய ஒரு வேறுபாடு. ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் எனப் பிரபல நடிக நடிகையர்களை நடிக்கச் செய்தலாகும். நடிப்புக்கு மாத்திரம் இல்லாமல் இசைக்கு-ஆர்மோனியம் மிருதங்கத்துக்கும் பிரபல வித்வான்கள் அழைக்கப்படுவர். இதில் பல போட்டா போட்டிகள்-ராஜ பார்ட்காரருக்கும் ஸ்திரீபார்ட் காரருக்கும் போட்டி, நடிகருக்கும் ஆர்மோனியக்காரருக்கும் போட்டி என நடைபெறும். இந்த அரங்குதான் சினிமாவின் வருகைக்கு முன்னர் தமிழ் மக்களின் ஜனரஞ்சக அரங்காக இருந்தது என்பார்.

இசைப்புலமை

நாடகப் பிரதியை உருவாக்குதல், திரை அமைப்பு, பாத்திரங்கள் அறிமுகம், ஆர்மோனியம், பின்பாட்டு, ஒப்பனை, பல்வேறு இசைவடிவங்கள் என நாடகத்தின் அனைத்துக் கூறுகளிலும் புதிய உத்திமுறைகளைப் பயன்படுத்தி தமது நாடக சகாப்தத்தைத் துவக்கி வளப்படுத்தியவர் சுவாமிகள் என்பார் அரிமளம் சு.பத்மநாபன்.

"தன்யாசி, பைரவி, மோகனம், கானடா, காப்பி, முகாரி, கேதார கௌளம், யதுகுலகாம்போதி, செஞ்சுருட்டி, தர்பார், ஆரபி, வேதகாந்தாரி, சங்கராபரணம், அடாணா, காம்போஜி, நாத நாமக்ரியா, ஸரவேரி, ஷண்முகப்ரியா, நாடகக் காட்சிகள், பாத்திரங்கள், பாவம் ஆகியவற்றுக்கேற்ப பயன்படுத்தியுள்ளதாக பி.எஸ்.நாகராஜ பாகவதர் தனது வினா நிரலில் கூறியுள்ளார். (தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக்கூறுகள்) அத்துடன் தர்க்கங்களில் ராகமாலிகையைப் படுத்தியுள்ளார். ராகத்திலுள்ள சாயாஸ்வரம், தீர்க்கஸ்வரம், நியாஸஸ்வரம் ஆகியவற்றை சாகித்தியத்தில் பதத்திற்கேற்ப அருமையாக பயன்படுத்தியுள்ளார். ராகங்களின் ஸ்வரூபத்தை மிகச் சுருக்கமாகவும் பளிச்சென்றும் விளங்கும்படி கையாண்டுள்ளார். நல்ல வித்வத் உள்ளவரும் பாடலாம். சாதாரணமாகப் பாடக் கூடியவர் பாடினாலும் ராகஸ்வரூபம் நன்கு விளங்கும். இதற்கு சுவாமிகளின் பாடல்கள் அனைத்தையுமே சான்றாகக் கொள்ளலாம். மிஸ்ர நடையிலும் நிறைய அமைத்துள்ளார். குறிப்பாக தர்க்கங் களில் பல்லவி பாடுவது போல அனுலோமம், பிரதிலோமம் செய்தும், காலப்ரமாணங்களை வேறுபடுத்தியும் செய்துள்ளார்.

சுவாமிகளின் நாடகங்களில் இசையே பிரதானம். தமது இசைப் புலமையை முழுவதுமாக வெளிப்படுத்த இசையைக் கருவியாகக் கொண்டார். ஒரு விஷயத்தை வசனமாகச் சொல்வதைவிட இசையின் மூலமாக வெளிப்படுத்தும் போது ரசிகர்களுக்கு அதிகச் சுவையை ஏற்படுத்துவதுடன், அவர்கள் மனத்திலும் நிலைக்கச் செய்கிறது. நாடகத்தின் காலத்தை இரவு முழுவதும் நீட்டிக்க இசைக் கருவியாகப் பயன்படுகிறது என்பார்.

சங்கரதாஸ் சுவாமிகளின் மாணவர்கள்

ஜி.எஸ்.முனுசாமி நாயுடு, ஜெகந்நாத நாயுடு, சாமிநாத முதலியார், சீனிவாச ஆழ்வார், நடேசபத்தர், ராஜா, வி.எம்.கோவிந்தசாமிப் பிள்ளை, சி.கன்னையா, சி.எஸ். சாமண்ணா ஐயர், மகாதேவ ஐயர், சூரிய நாராயண பாகவதர், சுந்தரராவ், கே.எஸ்.அனந்த நாராயணஐயர், பி.எஸ். வேலு நாயர், பைரவ சுந்தரம் பிள்ளை, சீனிவாசப் பிள்ளை, எஸ்.ஜி. கிட்டப்பா சகோதரர்கள், டி.கே.சண்முகம் சகோதரர்கள், பாலாம்பாள், பாலாமணி, அரங்க நாயகி, வி.பி.ஜானகி, கோரங்கி மாணிக்கம், டி.டி. தாயம்மாள், மதுரை மாரியப்ப சுவாமிகள், சங்கரலிங்கக் கவிராயர், சந்தான கிருஷ்ண நாயுடு, டி.கே.சுந்தர வாத்தியார், எஸ்.எஸ். சண்முகதாஸ், மதுர பாஸ்கரதாஸ், உடுமலை நாராயணகவி, கோவை லட்சுமண தாஸ்.

எனப் பலர் இவரது மாணவர்கள்.

புதுக்கோட்டை நாடக நடிகர் சங்கத்தில் 200, மதுரை நாடக நடிகர் சங்கத்தில் 500, திண்டுக்கல் நடிகர் சங்கத்தில் 300, கரூர்-100, மணப்பாறை-80, மானாமதுரை-20, கும்பகோணம்-150, சிவகங்கை வட்டாரம்-50, மாயவரம்-150, ஆக மூவாயிரம் கலைஞர்கள் சுவாமி களின் நாடகங்களைத் தமிழகமெங்கும் நடத்தி வருகின்றனர்.

1. வள்ளித் திருமணம்

நம்பிராசனிடம் குடிமக்கள் வந்து தங்கள் விளைநிலங்களில் விலங்குகளின் தொல்லைகளைப் பற்றி முறையிடுகின்றனர். சித்தூர் நாட்டு வேள்வி மலைக்கு நம்பிராசன் வேட்டைக்குப் போகிறான். அங்கே வள்ளிக் கிழங்கெடுத்த பள்ளத்தில் ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுக்கிறான். அதனை அரண்மனைக்குக் கொண்டுவந்து நங்கை மோகினியிடம் கொடுக்கிறான். 'வெள்ளிக்கொடி' என்று

அதற்குப் பெயரைச் சூட்டி வளர்க்கின்றனர். வெள்ளிக்கொடி என்னும் வள்ளி தன் சகோதரர்களுடன் வளர்கிறாள். தினைப்புனங் காப்பது அவர்களது குல மரபு. அதன்படி வள்ளியும் தன் சகோதரர்களின் துணையுடன் புனங்காக்கப் போகிறாள். அவ் வழியே வந்த நாரதர் அவளது அழகைக் கண்டு, முருகனுக்கு ஏற்றவள் என்று முடிவு செய்கிறார். வள்ளியோ ஆண்டியின் மகனை மணந்துகொள்ள மறுக்கிறாள். நாரதரோ முருகனிடம் போய் முறையிடுகிறார். முருகனும் வேடன் உருகொண்டு வந்து அவளை அடைய முயல வேடர்கள் விரட்ட விருத்தனாக (கிழவன்) வந்து சரசம் செய்கிறான். இறுதியில் முருகன் பிள்ளையாரை வேண்டி, அவளது யானை பயத்தை முன்வைத்து மிரட்டுகிறான். யானையை விரட்ட தன்னை மணந்து கொள்ள வேண்ட அவளும் ஒப்புக் கொள்கிறாள். முருகன் வள்ளிக்கு மாலை சூட்டி மகிழ்கிறான்.

இது சிவகுமாரன் வேடுவச்சியை மணந்தகதை. இறைவனுக்குச் சாதி வேறுபாடுகள் கிடையாது. அவன் விரும்பி னால் தாழ்ந்தகுலத்துப் பெண்ணை மனைவியாகக்கூட ஏற்றுக் கொள்வான் என்பது இதன் கருத்து.

இது 1936-ல் மதுரை மு.கிருஷ்ண பிள்ளையாலும் 1947-ல் பி.நா.சிதம்பர முதலியார் பிரதர்ஸாலும் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

2. அல்லி சரித்திரம்

அர்ஜுனன் ஒரு மகாபாரத பாத்திரம். வில்லுக்கு மட்டுமன்று விவாகங்களுக்கும் விஜயன்தான். அவன் அல்லியை மணந்து கொண்ட கதைதான் இது. தென்மதுரை ராணி அல்லி. அவளுக்கு ஆண்வாசனையே பிடிக்காது. பெண் ராஜ்யத்தை ஆண்ட பெண்ணரசியாக இருந்தாள். அர்ஜுனனும் கிருஷ்ணனும் மதுரைக்கு வந்தனர். அவளது அழகையும் ஆற்றலையும் அறிந்தவுடன் அவளையே மணந்து கொள்ள வேண்டும் என்று துடிக்கின்றான். கிருஷ்ணனும் பல உபாயங்களைக் கூறுகிறான். பாம்பு வடிவில் அவளது படுக்கை அறைக்குப் போய் அவளது தூக்கத்தில் கள்ளத் தாலி கட்டி விடுகின்றான். அவள் சூடான நெய்க் கொப்பறையில் கையை நனைத்து சத்தியம் செய்யச் சொல்லுகிறாள். பீமனோ சூடான நெய்யைக் குடித்துவிட்டுப் போய் விடுகிறான். போரில் அல்லியைப் புலிக்கூண்டில் பிடித்து

விடுகின்றனர். இறுதியில் மணந்து கொள்ள சத்தியம் வாங்கி விடுவித்து மணந்து கொள்ளுகின்றான் அர்ஜுனன். பெண்ணானவள் எவ்வளவு ஆற்றல் மிக்கவளாக இருந்தாலும் ஆணுக்குக் கட்டுப் பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதை மையக் கருத்தாக அமைந்துள்ளது.

இது 1927-லும் 1934லும் மதுரை மு.கிருஷ்ண பிள்ளையால் அச்சிடப்பட்டது.

3. அரிச்சந்திர மயானகாண்டம்

வாய்மை என்பதை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட நாடகம். ஒருவனுக்கு எத்தனை துன்பங்கள் வந்தாலும் வாய்மையில் தவறக் கூடாது என்பதை இந்தக் கதை வற்புறுத்துகிறது.

அரிச்சந்திரன் வாய்மைக்காக நாடு நகரங்களை இழக்கிறான். மயானம் காக்கும் தோட்டியாகிறான். தன் மனைவி சந்திரமதியை இழக்கிறான். அவனது மகன் லோகிதாசன் மரணமடைகிறான். மகனையும் மனைவியையும் இன்னார் என்று அறியாமல் எட்டி உதைக்கிறான். அவனுக்கு உண்மை தெரிந்த பின்னும் கடமையில் தவறாது தன் மனைவியை வெட்டத் தயாராகிறான். என அடுக்கடுக்காகத் துன்பக் காட்சிகள் உடையது அரிச்சந்திர மயான காண்டம்.

இது 1938இல் மதுரை பி.நா.சி.பிரதர்ஸ், ஏஜண்டு மு.கிருஷ்ண பிள்ளை அவர்களால் வெளியிடப் பெற்றது. “எஸ்.கலியாணராம ஐயரவர்களும் எஸ்.வி.மகாதேவி ஐயரவர்களும் இன்னும் அவர்களைச் சேர்ந்த சங்கீத வித்வான்களும் ‘அரிச்சந்திரா’ நாடகத்தை நாகரீகமாக நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் என்னைத் தூண்டுகோல் செய்து பட்டாபிஷேகத்திற்காக இந்த அரிச்சந்திர நாடகத்திலுள்ள ‘மயான காண்டத்தை’ பாட்டுகளும் வசனங்களும் இசைத்துத் தரும்படி வேண்டிக் கொண்டார்கள். அதற்கிணங்கி காசிக் காண்டத்தின் இறுதியிலிருந்து ஆரம்பித்து மயான காண்டம் முடிய அதற்கேற்றவாறு ஐயரவர்கள் கொடுத்த வர்ண மெட்டுக்களின் பிரகாரம் பாட்டுகளும் வசனங்களும் இசை தாளத்துடன் வரைந்து ஈய்ந்தனன். மேற்கூறிய நாடகத் திறமணிகள் தம்பூர், கோடி, பிடில், மிருதங்கம் முதலிய வாத்தியங்களோடும் பக்க மேள குதூகலத் தோடும் உயர்ந்த, திரை, உடைகளோடும், மண்ணெண்ணை பிரகாசத்தோடும் இப்பாண்டியநாடு முற்றிலும் நடத்தி நிகரில்லை

என ஜெயக்கொடி நாட்டி, சிங்கமுகத் தோடாக்களும், பொன் மாலைகளும் சன்மானம் பெற்று இப்பெயரானுக்குப் புகழும் மறக்காத ஞாபகச் சாசனத்தையும் செய்து வைத்தார்கள்" என்பார் சுவாமிகள்.

4. நல்லதங்காள்

வடமதுரை காசிபன் தர்பார் மண்டபத்தில் தேச விசாரணை நடைபெறுகிறது. குடிகள் நாட்டில் பஞ்சம் என்று முறையிடுகின்றன. கணவன் காசிபன் சொல்லையும் கேளாது தன் ஏழு பிள்ளைகளுடன் காட்டு வழியே பல்வேறு துன்பங்கள் அடைந்து குழந்தைகளைக் கூட்டி வருகையில் வேட்டையாட வந்த அண்ணன் நல்லண்ணன் தன் தங்கையையும் தங்கை குழந்தைகளையும் காண்கிறான். தன் வீட்டுக்குப் பல்லக்கில் அனுப்பி வைக்கிறாள். அவனது மனைவி மூளி அலங்காரி நாத்தனார் நல்ல தங்காளை நல்லபடி வரவேற்கவில்லை. அண்ணிக் கொடுமை அதிகரிக்கின்றது. தனக்கும் தன் குழந்தைகளுக்கும் ஆன பசியைப் போக்கக் கூட அவள் முன்வரவில்லை. நல்லதங்காள் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். திரும்பும் வழியில் புகுந்த வீட்டுக்கும் போக முடியாத நிலையை எண்ணிப் பார்த்து பாழுங்கிணற்றில் குழந்தைகளைத் தூக்கிப்போட்டுவிட்டு தானும் விழுந்து உயிரை விடுகின்றாள். நிலைமையை அறிந்த நல்லண்ணன் அலங்காரியையும் அவளது உறவினர்களையும் சூழ்ச்சி செய்து கொன்று விடுகிறான். நல்லதங்காளின் கணவனும் உடைவாளால் உயிரை மாய்த்துக் கொள்கிறான். நல்லண்ணனும் தன் உயிரை விட முயலும்போது சிவபெருமான் வந்து தடுத்தாட்கொள்கிறார். மாண்டவர்களுக்கும் உயிர் தந்து மங்களமாய் நாடகம் முடிகிறது.

இது நாட்டுப்புறக் கதை. சொத்துரிமை பெண்களுக்கு இல்லா விட்டால் அவர்கள் பெருந்துன்பம் அடைவர் என்ற உண்மையை உலகுக்குச் சொல்ல வந்த கதை. இது பாவைக்கூத்து, கதைப்பாட்டு, நாடகம், சினிமா எனப் பல வடிவங்களில் இயங்கி வருகிறது.

1937-ல் மதுரை புக்ஷாப் மு.கிருஷ்ண பிள்ளையால் வெளியிடப்பட்டது. "புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்ட இதனை முதல் முதல் சுவாமிகளால் நாடகரூபமாக ஆக்கப் பெற்றது. இதில் ஸ்திரீப்பார்ட் கல்யாண ராமய்யரும், ராஜபார்ட் எஸ்.வி.மகா தேவன் ஐயரும் நடித்தனர்" என்பார் அவர்.

5. சத்தியவான் சாவித்திரி

சாலவபுரி மன்னன் கஜகேது.துயுமத்சேனின் நாட்டை இவன் முற்றுகையிட்டு அரசனையும் அரசி பத்மாட்சியையும் சிறைபிடித்து அவர்களின் கண்களைக் குருடாக்கி விடுகிறான். சத்தியவான் துயுமத்சேனனின் மகன். அவன் தன் நண்பனோடு காட்டு வழியாக வரும்போது நந்தவனத்தில் சாவித்திரியைச் சந்திக்கிறான். அவளைச் சிங்கத்திடமிருந்து காப்பாற்றுகிறான். அவர்களுக்குள் காதல் பிறக்கிறது. பின் அவன் அவளைப் பிரிந்து வருகிறான். அன்னை தந்தையரைக் கண்டு மனம் வருந்துகிறான். சாவித்திரி சத்யவானை மணக்கத் துடிக்கிறாள். நாரதர் வந்து அவனது அற்ப ஆயுள் பற்றி கூறுகிறார். சாவித்திரியின் தந்தை திருமணத்தை மறுக்கிறான். நாரதர் தன் முயற்சியால் சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் திருமணத்தை முடித்து வைக்கிறார். பிறகு எமன் சத்தியவானின் உயிரைப் பறிக்க முயல்கிறான். எமனிடம் சாவித்திரி வாதாடுகிறாள். மாங்கல்ய பிச்சை கேட்க எமன் மறுக்க மூன்றுவரம் கேட்கிறாள். அவற்றால், மாமன் மாமியர்க்கு கண்பார்வையும், இழந்த நாடும் நகரும் பெறுகிறாள். இறுதியில் குழந்தை வரத்தின் மூலம் கணவனது உயிரையும் மீட்டு விடுகிறாள். எமனும் தன் மனைவி சாமளாவுக்குப் பதிவிரதைக்குரிய பண்புகளை எடுத்து உரைக்க சத்தியவானுக்கு உயிரைத் தருகிறான். முடிவில் சத்தியவானுக்கு அனைவரும் முடிசூடுகின்றனர்.

மகாபாரதக் கிளைக் கதையிலிருந்து உருவாக்கப்பட்ட நாடகம் இது. சாவித்திரியின் கற்பு நிலையை விளக்குவதே இதன் நோக்கம்.

இது 1935-ல் மதுரை புக்ஷாப் மு.கிருஷ்ணபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. அவரே "தொட்டாலும் கை மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும் என்னும் முது மொழிக்கு இணங்க சுவாமிகள் நாடகங்கள் சொற்சுவை முதலிய நவரசங்கள் ததும்பும் இச்சரிதை மகாபாரதத்தினின்றும் எடுத்து சிங்காரம், வீரம், சோகம் என்னும் மூவிரசமும் ததும்ப அவ்வவ்விடங்களுக்குத் தகுந்த நாகரீக வர்ண மெட்டுக்கள் அமைத்துச் சொற்சுவை மலியப் பாடி வெளியிட்டதைப் பல நாடக நடிகர்கள் வாங்கிப் படித்து அதன்படி நடத்திக்காட்டி வருவது எங்கும் கண்கூடாகக் காணலாம்" என்பார் முன்னுரையில்.

இந்நாடகம் சென்னையில் நிகழ்த்தப்பட்டபோது

வி.எஸ்.வேலுநாயர் சத்தியவானாவாகவும் ஸ்திரி பார்ட் அநந்த நாராயணன் அய்யர் சாவித்திரியாக நடித்தனர். இறுதிக் காட்சியில் 'வித்தில்லா சம்பிரதாயம் மேலில்லை கீழில்லை' என்று சாவித்திரி எமனிடம் பாடியதும் பாரதியார் எழுந்து "வென்றாள் சாவித்திரி" என்று உரக்கக் கூவினார் என்பதும் ஒரு செய்தி.

6. பவளக்கொடி சரித்திரம்

இது இசையாலும் பாடல்களாலும் வசனங்களாலும் சிறந்து விளங்கி மக்களால் பெரிதும் விரும்பப்பட்டது. பாடலிலேயே நகைச்சுவை இடம்பெற்றிருக்கும். "பவளக்கொடியாளை நான் பார்க்க வேணுமே" என்ற பாடல் இத்தகையது. நகைச்சுவை ததும்பும் நாடகக் காட்சிகள் நிறைந்தது பவளக்கொடி நாடகம் என்பார் எஸ்.எஸ்.ராஜேந்திரன். தனது இளம்பிராயத்தில் இந்நாடகத்தில் அர்ச்சுனனாக நடித்தவர்.

இது மகாபாரதக் கதையாக இருந்தாலும் பவளக்கொடி மகா பாரதப் பாத்திரம் இல்லை; தனிப் புனைவுதான். அர்ச்சுனனுக்கும் அல்லிக்கும் பிறந்த மகன் புலந்திரன். அவன் விளையாட பவளத் தேர் கேட்டு அழுகிறான். பவளத்தேர் செய்ய பவளம் வேண்டும். செய்தியை அறிந்து அர்ச்சுனன் அல்லியின் அனுமதியோடு பவளக் காட்டிற்கு கிருஷ்ணனோடு செல்கிறான். அங்கே அவளது அழகைக் கண்டு அர்ச்சுனன் அவளை மணந்து கொள்ளத் துடிக்கிறான். கிருஷ்ணனின் உதவியோடு அவளை மணந்து கொள்வதுதான் கதை. இறுதியில் அல்லியையும் சமாதானப்படுத்துவதோடு கதை முடிகிறது. அல்லி, சுபத்திரை, பவளக்கொடி ஆகியோரின் சக்களத்தி சண்டை சுவையானது.

இது 1936-ல் முதலில் மதுரை மு.கிருஷ்ணப் பிள்ளையால் அச்சிடப்பட்டது. இக்கால கட்டத்தில் கிராமபோன் இசைத் தட்டுக்களாக வெளியிடப்பட்டன.

7. இரணியன் நாடகம் அல்லது பிரஹலாதன்

இது விஷ்ணுவின் நரசிம்ம அவதாரக் கதை. இரணிய வதம் தான் நாடக முடிவு. இரணியன் சாகா வரம் பெறுகிறான். அதனால் ஆணவம் ஏற்பட்டு 'தானே கடவுள்' என்று இறுமாப்பு அடைகிறான். அனைவரையும் அவனால் வணங்க வைக்க

முடிகிறது. ஆனால் அவனது மகன் பிரகலாதனை வணங்கச் செய்ய முடியவில்லை. அத்துடன் அவன் விஷ்ணுவையே வணங்குவேன் என்று உறுதியோடு இருக்கிறான். அவனைப் பல வழிகளிலும் சித்திரவதை செய்தும் அவன் மறுத்து விடுவதோடு மரணத்தையும் வெல்லுகிறான். இறுதியில் அவனுக்காக விஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்து தூணில் தோன்றி இரணியனைக் கொல்லுகிறார்; பிரகலாதனைக் காப்பாற்றி விடுகிறார். இதில் பிரகலாதனைக் கொல்ல விஷம், யானை, கடல், நெருப்பு எனப் பல்வேறு கொடுமைகள் பார்ப்பவரை ஈர்க்கும்.

இது 1926-ல் முதலில் மதுரை கு.மாயாண்டி பிள்ளையால் அச்சிடப்பட்டது. பின்னர் 1936-ல் மதுரை புக்ஷாப் மு.கிருஷ்ண பிள்ளையால் அச்சிடப்பட்டது. 2005-ல் சாகித்திய அகாதெமி அச்சிட்டு வெளியிட்டது.

அக்காலத்தில் புராணக் கதைகளைத்தான் மக்கள் விரும்பினர். கடவுளைப் பற்றிய கதைகளாக இல்லையென்றால் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதன் காரணமாகவே சுவாமிகள் புராணக் கதைகளையே நாடகமாக்கினார் என்பார் எஸ்.எஸ்.ஆர்.

8. சீமந்தனி

சோமவார விரதம் பெண்டிர்க்கு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்கிட எழுதப்பட்ட நாடகம் இது. சமயப் பிரச்சார நாடகம் என்றும் சொல்வர். சீமந்தனி சித்திர வர்மனின் மகள். அவளது சாதகப்படி 14ஆவது வயதில் அவளுடைய கணவன் மரணமடைவான் என்று அறிவிக்கப்பட்டது. அவளுக்கும் திருமணம் ஆனது. 14வது வயதும் வந்தது. யாக்கு வல்கியர் என்றும் முனிவரின் மனைவி மைத்ரேயி செய்யச் சொன்ன சோமவார விரதத்தைக் கடைப்பிடிக்கிறாள். தன் கணவன் சந்திராங்கதனை மரணத்தின் கோரப் பிடியில் இருந்து காப்பாற்றி விடுகிறாள்.

1969-ல் டி.என்.சிவதாணு வெளியிட்டார். அவர் தன் என்னுரையில் "அந்தக் காலத்தில் சிறுவர் நாடகக் குழுக்களில் சிறுவர்களால் நடித்துக் காட்டப்பெற்ற தமிழ்ச் சுவை மிகுந்த ஒரு சிறந்த இலக்கிய நாடகம் சீமந்தனி. பாமர மக்களிடையே பரவிக் கிடந்த கதைகளை எல்லாம் இலக்கிய நாடகங்களாக்கி ஒவ்வொரு நாடகத்திலும் அருமையான கருத்துக்களைப் புகுத்தி ஆடகக்

கலையாம் நாடகக் கலையினால் மக்கள் நல்ல பயனடைய முடியும் என்று சங்கரதாஸ் சுவாமிகள் எடுத்துக்காட்டியுள்ளார்," என்பர்.

9. சுலோச்சனா சதி

இது இராமாயணக் காப்பியத்திலிருந்து எடுத்து உருவாக்கப் பட்ட கதை. சுவாமிகள் இராமாயணக் கதைக் கூறுகளை வைத்து லவகுச, இராமாயண யுத்தம், மயில் ராவணன், பாதுகா பட்டாபி ஷேகம், லங்காதகனம், வாலிமோட்சம் எனப் பல்வேறு நாடகங்களை உருவாக்கினார். அந்த வரிசையில் ஒன்றுதான் சுலோசனா சதி. ஆதிசேடனின் மகள் சுலோசனா. இராவணன் மகன் இந்திர சித்தனை அவள் மணந்து கொண்டாள். ஆதிசேடனால் மட்டுமே அவனுடைய உயிருக்கு ஆபத்து என வரம் பெற்றிருந்தாள். அதன்படி ஆதிசேடனின் வடிவமான இலக்குவனனின் அம்பால் அழிக்கப்படுகிறான். சதி சுலோசனாவின் துயரம்தான் நாடகத்தின் முடிவு.

இது 1913-ல் ஆரியகான சபாவுக்காக எழுதினார். வேலு நாயரும் கே.எஸ்.அநந்த நாராயண ஐயரும் அப்போது நடித்தனர். 1924-ல் தஞ்சையில் எம்.ஜி.நடராஜப் பிள்ளையும் ஐயரும் நடித்தனர். ஐயரே சுலோசனாவாக நடித்தது கவனிக்கத்தக்கது. 1918-ல் சிறுவர் களுக்காக சிறு மாற்றங்களுடன் சுவாமிகள் எழுத அதனை மதுரை தத்துவ மீனலோசினி வித்துவபால சபையினர் நடித்தனர்.

சிலர் 'சதி சுலோசனா' என்று விளம்பரப்படுத்தினர். பொருளில் பொருத்தமுண்டு என்றாலும் சுவாமிகள் 'சுலோசனா சதி' என்ற பெயரில் ஆழமான பொருள் உண்டு. சுலோசனா உடன்கட்டை ஏறுவதோடு நாடகம் முடியும். உடன்கட்டைக்குச் சதி என்று பெயர்.

இந்நாடகத்தை 1966-ல் டி.என்.சிவதாணு சங்கரதாஸ் சுவாமி கள் நினைவு மன்றம் சார்பில் அச்சிட்டார்.

10. சதி அனுசுயா

இந்தியப் பெண்கள் கணவனே கண்கண்ட தெய்வம் எனும் கற்புக் கோட்பாட்டினைக் கொண்டவர்கள். இந்தக் கருவை மையமாகக் கொண்ட கதை அமைப்பு உடையதுதான் இந்த நாடகம்.

மாண்டவ்ய முனிவரின் சாபத்தால் தன் உயிரை விடுந்து

விட்டால் இழக்க இருந்தான் சூர்தாஸ். அவனது மனைவி விடியாமல் செய்து அவனது உயிரை மீட்டு விட்டாள். அனுசுயாவின் கற்பின் மேன்மை அகிலம் எல்லாம் பரவியது. மும்மூர்த்திகளின் தேவியர்களும் பொறாமை கொண்டனர். நாரதர் அவர்களின் பொறாமை நெருப்புக்குத் தூபம் போடுகிறார். மூர்த்திகள் மூவரும் அனுசுயாவைச் சோதிக்க அவளது இருப்பிடத்துக்குப் போகின்றனர். நிர்வாணமாக வந்து பிச்சை இட்டால்தான் பெற்றுக் கொள்வோம் என்று மூவரும் நிர்பந்தம் செய்கின்றனர். அனுசுயாவோ மூவரையும் குழந்தைகளாக்கி தொட்டிலிலிட்டு தாலாட்டத் தொடங்கி விட்டாள். மூவருக்கும் இச்சாபோஜனம் அளித்து விடுகிறாள். மூன்று தேவியரும் அறிவு பெற்றனர். அனுசுயாவின் கற்புத்திறனும் அறிவு நுட்பமும் வெளியானது.

11. கர்விபாஸ்

குறு நாடகம்தான் 'கர்விபாஸ்'. இதற்கு 'அடங்காப்பிடாரி' என்ற பெயரும் உண்டு. சதி அனுசுயாவிற்கு நேர்மாறானப் புருஷனை ஆட்டிப் படைக்கும் அடங்காப் பிடாரி மனைவியாக 'கர்வி' என்ற ஒரு பெண்ணைச் சித்தரித்து, அவளுக்கும் காவிய நாயகி அனுசுயாவே, அறிவுரை சொல்லி அனுக்கிரஹமும் செய்து பேயாக இருந்த அவளைக் குடும்பப் பெண்ணாக மாற்றினாள்.

இந்த நாடகத்தில் வி.கே.ராமசாமி அடங்காப்பிடாரியின் புருஷன் அனுபவானந்தனாக நடித்தார். அவரது கம்பெனி நாடகங்களில் சிறப்பானவைகளில் இதுவும் ஒன்று என்பார். (எனது கலைப்பயணம்)

சுவாமிகள் கலைக்காகவே துறவு பூண்டாரோ என்று கருதத் தக்கவாறு நாடகக் கலைக்குப் பெரும் பணிபுரிந்துள்ளார் என்று இந்த நாடகத்துகக அணிந்துரை எழுதினார் டாக்டர் மு.வ. இது 1967-ல் டி.என்.சிவதாணுவால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

12. கோவலன் சரித்திரம்

"சிலப்பதிகாரத்திலுள்ள இக்கோவலன் சரிதையை நாடகமாக நடத்தி ஆனந்திக்குமாறு, நாலாவிதமான வர்ண மெட்டுகளில் பாட்டுக்கள் அமைத்து, இராகம், தாளம் இவைகளைச் சுட்டிக் காண்பித்து என்னால்தான் முதன்முதல் நாடகமாக நடத்திக்

காண்பிக்கப்பெற்றது" என்பார் சுவாமிகள்.

மாச்சோட்டான் செட்டியும் மாணாக்கன் செட்டியும் கோவலன் கண்ணகி திருமணத்தைப் பேசி முடிக்கின்றனர். மாதவி திருமணத்தில் ஆட்டம் ஆட வருகிறாள். மாதவி எறிந்த மாலை கோவலன் கழுத்தில் விழுகிறது. பேச்சுப்படி கோவலன் மாதவியால் திருக்கடையூருக்குக் கூட்டிச் செல்லப்படுகிறான். பருவம் அடைந்த கண்ணகி நடந்த விசயங்களை அறிந்து கலங்குகிறாள். கண்ணகியின் நிலை எழுதப்பட்ட கடிதம் கண்டு கோவலனும் வருந்துகிறான். அவளைக் காணப் புறப்பட மாதவியோ ஒரு தங்கப் பதுமையைத் தந்துவிட்டுச் செல்லுமாறு நிர்பந்திக்கிறாள். கோவலன் கண்ணகியை நினைத்திட பதுமை உருவாகி, அவனை அனுப்பாவிட்டால் துடைப்பத்தால் அடிப்பேன் என்று மிரட்டுகிறது. கண்ணகி அஞ்சன மையால் இதனை அறிந்து பதுமையை எரித்து சாம்பலாக்கு கிறாள். மாதவியைப் பாம்பு கடித்ததாகச் சொல்லி மாமா கோவலனைத் திரும்ப அழைத்துப் போகிறான். கோவலன் தன் ஆபரணங்களைத் தந்துவிட்டு கண்ணகியைப் பார்க்கப் போகிறான். கோவலன் கண்ணகியோடு வாணிகம் செய்ய மதுரைக்குப் போகிறான். வழியில் தடுத்தத் திருடர்களைக் கண்ணகி எரித்து விட்டு, கணவன் வேண்டுகோளுக்காக அவர்களுக்கு உயிரும் தருகிறாள். மதுரையில் கோவலனும் கண்ணகியும் மாதரி வீட்டில் அடைக்கலம் அடைகின்றனர். சிலம்பு விற்கச் சென்ற கோவலனை வஞ்சிப்பத்தன் மன்னனிடம் கள்வனாக்கி கொலைக்களம் அனுப்ப, கோவலன் தானே உயிரை மாய்த்துக் கொள்ளுகிறான். கண்ணகி கணவனின் மரணம் அறிந்து மன்னனிடம் வழக்காடி வென்று மன்னன் குடலை மாலையாகப் போட்டுக் கொள்கிறாள். கோவலனோடு மாதவியும் இறந்ததை அறிந்து இருவரையும் தகனம் செய்துவிட்டு ஒற்றை முலையைத் திருகி எறிந்து மதுரையில் உள்ள தீயவர்களை எரித்தழிக்கிறாள்; காளியாக மாறுகிறாள்.

பரத்தையரை நாடும் பணக்கார இளைஞனின் சீர்கேடான வாழ்வாக நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. கோவலன் செட்டி கதை என்றும் இவர் பெயர் வைத்திருந்தார்.

1939-ல் மதுரை கிருஷ்ணப் பிள்ளையும், 1949-ல் சென்னை பி.நா.சிதம்பர முதலியார் பிரதர்ஸ்ஸும் இந்நாடகத்தை அச்சிட்டனர். 1930-ல் கிராமபோன் இசைத்தட்டுகளாகவும் வெளி வந்தன.

13. ஞான சௌந்தரி

ஞான சௌந்தரி ஒரு மன்னரின் மகள். எனினும் பெற்ற தாய் இல்லாதவள். சிற்றன்னையின் நிழலில் வளர்ந்தாள். ஒரு முறை மன்னன் வேட்டைக்குச் சென்றபோது சிற்றன்னை சௌந்தரியைச் சுவடு இல்லாமல் அழித்துவிடத் திட்டம் போடுகிறாள். வனத்தில் கொண்டு போய் கொன்றுவிட ஆட்களை ஏவிட அவர்களே அவளது கைகளை மட்டும் வெட்டி விடுகின்றனர். அவளை இன்னொரு நாட்டு இராஜகுமாரன் மணந்து கொள்கிறான். அவர்களுக்குக் குழந்தை பிறக்கிறது. சிற்றன்னைக்கு சௌந்தரியின் நிலை தெரியவருகிறது. அவளைக் கொன்றுவிட மீண்டும் திட்ட மிடுகிறாள். சௌந்தரி மீண்டும் வனத்துக்கு அனுப்பப்படுகிறாள். அங்கே மரியன்னையின் அருளால் இழந்த கைகளைப் பெற்று ஞான சௌந்தரி ஆகிறாள். கணவனோடு சேர்ந்து மகிழ்வதுடன் கதை முடிகிறது.

இது கிறித்தவ மதம் சார்ந்த பக்தி நாடகம். சிற்றன்னையின் கொடுமை, மரியன்னையின் அருள் என இரண்டையும் விளக்குவது இக்கதை.

இது 1927லும் 1936லும் மதுரை மு.கிருஷ்ணபிள்ளையாலும் இந்நாடகம் அச்சிடப்பட்டது.

14. சாரங்கதரன்

அஸ்தினாபுரத்தில் நரேந்திரனின் சபை. அவன் தன் மகன் சாரங்கதரனுக்கு மணமுடிக்க விரும்புகிறான். சித்திராங்கியின் ஓவியம் கொண்டுவரப்படுகிறது. அரசனுக்கு அவளைத் தானே மணந்து கொள்ளும் ஆசை பிறக்கிறது. வந்த வேதியர்களிடம் பெண்ணை வாளுக்கு மாலையிடச் சொல்லி மணமுடிக்கக் கூறுகிறான். சித்திராங்கதன் சபையில் சித்திராங்கி இதுபற்றி சந்தேகப்படுகிறாள். அவளுக்கு சாரங்கதரனை மணக்க ஆசை. அவளது தந்தை வாக்கால் சம்மதிக்கிறாள். அவர்கள் அஸ்தினா புரத்துக்கு வருகின்றனர். நரேந்திரனோ தன் மகனை வேசிக்குப் பிறந்தவன் என்றும் அவனுக்கு ஆட்சி உரிமை இல்லை என்றும் தானே அவளுக்கு ஏற்றவன் என்றும் கூறுகிறான். சித்திராங்கி தனது கௌரி விரதம் பற்றி கூறி அப்போதைக்குத் தப்பிவிட முயலுகிறாள். சாரங்கதரனும் அவனது தோழனும் புறாவைப் பறக்க

விட்டு விளையாடுகின்றனர். சாரங்கதரனின் புறா சித்திராங்கி இருப்பிடத்திற்குப் போய்விட தோழன் போய் கேட்கிறான். அவள் மறுத்துவிட சாரங்கதரன் போய் கேட்கிறான். அவளோ முத்தம் தந்தால் புறாவைத் தருவதாகக் கூற அவனோ பித்தம் பிடித்தவள் என்று விலகிப்போகிறான். அவளோ அரசனிடம் அவன் தன்னைப் பெண்டாள வந்தான் என்று பொய்க் குற்றம் சாட்டுகிறாள். அசரனோ மகனுக்கு மாறுகால் மாறுகை வாங்கிட தண்டனை விதிக்கிறான். சிவபெருமான் அவனுக்கு உயிர் தருகிறான். சித்திராங்கி அக்னிப்பிரவேசமாகிறாள். நரேந்திரன் நாட்டைவிட்டு காட்டுக்குப் போகிறான். சாரங்கதரனும் உலகப்பற்றை விட அவரது நண்பன் நாடாளுகிறான்.

மகனைக் காதலிக்கும் பெண்ணைத் தந்தை மணக்க விரும்பும் ஒரு பழமையான இந்தியத் தொன்மத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட நாடகம் என்பார் அ.ராமசாமி.

இதனை 1929லும் 1938லும் மதுரை புதுமண்டபம் புத்தகஷாப் மு.கிருஷ்ணபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. "இதனை சென்னையில் வைத்து எழுதி முடித்தேன். அதன் பின்னர் எனது மாணவர்கள் தஞ்சையில் நடித்துக் காண்பித்ததை செவிக் கண்ணுற்ற ஒவ்வொருவரும் அன்புடன் ஆமோதித்து இன்னுஞ் சிலமுறை இச்சரித்திரத்தை நடத்தக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கிசைந்து அவ்விதமே நடத்திச் சென்றனன்" என்பார் சுவாமிகள்.

15. அபிமன்யு சுந்தரி

இதுவும் மகாபாரதக் கதையை ஒட்டிய கதை நாடகமாகி யுள்ளது. மகாபாரதத்தில் இல்லாத கதை. முறைப்பெண் உரிமை பற்றிய பிரச்சனைதான் கதையின் கரு. கிருஷ்ணனின் மகள் சுந்தரி. அவளை மணந்து கொள்ள அருச்சுனனின் மகள் அபிமன்யு மணந்து கொள்ள விரும்புகிறான். ஆனால் துரியோதனன் மகன் லக்கணன் மணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்து விடுகிறான். அபிமன்யூ விற்காக பீமன் மகன் கடோத்கஜன், சகாதேவனது மகன் தொந்திச் செட்டி எனப் பலர் அவனுக்கு உதவ முன் வருகின்றனர். இறுதியில் சுந்தரியை அபிமன்யு மணந்து கொள்வதோடு நாடகம் முடிகிறது.

டி.கே.சண்முகம் எல்லா நாடகங்களிலும் நாரதர் வேடமே போட்டு வந்தார். அவரை ராஜபார்ட் வேடத்தில் பார்க்க வேண்டும்

என்ற ஆசையும் இந்த நாடகத்தை ஒரே இரவில் சுவாமிகள் எழுதி முடித்தார். அது 1919-ஆம் ஆண்டு. 1994-ல் திரு.சிவதாணு அச்சிட்டுள்ளார்.

எனினும் முதலில் 1938-ல் முதரை கு.மாயாண்டி பிள்ளையால் அச்சிடப்பட்டது.

16. லவகுச

இதுவும் இராமாயணக் கதைக் கூறு. உத்திர காண்டத்தின் கதை நிகழ்வுகளே நாடகம் ஆக்கப்பட்டுள்ளது. அவதாரமாக இருந்தாலும் இராமன் மனிதனாகப் பிறந்தவுடன் மனிதனுக்குரிய பலவீனங்களோடும் வாழ வேண்டியநிலை ஏற்பட்டது என்பதை விவரிக்கும் கதை.

ஒரு வண்ணான் தன் மனைவியுடன் சண்டையிடும் போது சீதையின் கற்பு சந்தேகத்துக்கு உள்ளாக்கப்படுகிறது. இராமன் கர்ப்பிணியான சீதையை மீண்டும் காட்டுக்கு அனுப்பி வைத்து விடுகிறான். அங்கே சீதை வான்மீகியின் ஆதரவுடன் லவனைப் பெற்று எடுக்கிறாள். ஒருநாள் அவள் காணாமல் போகவே குசைப் புல்லால் லவனைப் போலவே குசனை உருவாக்குகிறார் வான்மீகி. இருவரும் சீதையின் பிள்ளைகளாக வளர்கின்றனர். இராமனின் அசுவமேத யாகக் குதிரையை அவர்கள் கட்டிப் போடுகின்றனர். மீட்க வந்த வீரர்களையும் சத்ருக்கனன், பரதன், அனுமன் போன்றோரை அவர்கள் வெல்லுகின்றனர். இறுதியில் இராமன் வந்து போரிட முயலும்போது உண்மை தெரிகிறது. மீண்டும் இராமனுக்குச் சந்தேகம் ஏற்பட பூமி பிளக்க சீதை பூமாதேவியிடம் போய்ச் சேருகிறாள். இராமனும் இறந்து போகிறான். இவையே நாடகத்தின் சோக முடிவு.

இது முதலில் 1940களுக்குள் மதுரையில் அச்சாகியிருக்க வேண்டும். அதுபற்றிய விபரம் தெரியவில்லை. 2000-ல் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நாடகத்தைப் பதிப்பித்தது.

"சுவாமிகளின் நோக்கம் இராமாயணம், மகாபாரதம் அல்லது புராணங்கள் அல்லது காப்பியங்கள் தரும் பக்தியைப் பரப்பிடும் நோக்கம் கொண்டதல்ல. பாமர மக்களுக்குப் புரியும் வகையில் நாடக வடிவை அமைத்து, கருத்துக்களைத் தரும் நோக்கமே அவருடைய முக்கிய நோக்கம். இராமனை அவதார புருஷனாகக்

காட்டும் நோக்கம் சுவாமிகளுக்கு முக்கியமாகப் படவில்லை. அதற்கு மாறாக லவகுசன், மயிலிராவணன், வாலி, அநுமன், பாதுகை, இறுதிப் போர் போன்றன மையக் கதாப்பாத்திரங்களாக ஆகியுள்ளன. மகாபாரதத்திலிருந்து அவர் எடுத்த கதைகளும் கூட கிளைக் கதைகள்தான். அல்லி, பவளக்கொடி, அபிமன்யூ இவையெல்லாம் வாய்மொழி மரபில் தனித்தக் கதைகளாக மக்களிடம் பரவி ஒவ்வொரு பிரதேசத்தோடும் இதிகாசக் கதையைத் தொடர்புபடுத்தும் இயல்புடையன. வட்டாரம் சார்ந்த, வாழ்க்கை சார்ந்த, நியதிகள் சார்ந்த, ஒழுக்கம் உணர்த்தும் கதைகளைப் புராணங்களிலிருந்தும் வாய்மொழி மரபுகளில் இருந்தும் எடுத்துக் கொண்ட சுவாமிகளின் கவனத்தைக் கவர்ந்தவர்களில் பெண் பாத்திரங்களே அதிகம். சந்திரமதி, நர்மதா, அனுசுயா, ஞான சௌந்தரி, நல்லதங்காள், கண்ணகி, சீதை எனத் துயருள் வாடும் பல பெண் கதாபாத்திரங்களின் சோக உணர்வு அதிகம் காணப் படுகின்றன. அதே போல் திருமணம் சார்ந்த எதிர்நிலைகள் முக்கிய இடம்பெற்றுள்ளன" என்பார் அ.ராமசாமி.

சுவாமிகளின் நாடகங்களில் பெரும்பாலானவை சினிமாவாகி யுள்ளது. சில திரைப்படங்கள் மீண்டும் மீண்டும் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. நல்லதங்காள், சத்தியவான் சாவித்திரி போன்றவை அத்தகையன.

ஏ.பி.நாகராஜன் தனது 'நவராத்திரி' படத்தில் சுவாமிகளின் நாடகத்தையும், 'திருவிளையாடல்' படத்தில் "ஞானப்பழத்தைப் பிழிந்து" என்ற பாடலையும் சேர்த்துள்ளார். கே.பி.சுந்தரம்பாளின் குரலால் இப்பாடல் பெரிதும் போற்றப்பட்டது. சுவாமிகளின் நாடகங்களில் நடிக்கும் நற்பேறு இவருக்குக் கிடைத்தது.

சுவாமிகள் வள்ளலார் வழி நடந்தவர். சமயப்பற்று அதிகம் கொண்டிருந்தவர். 'நாடகங்களில் மக்களுக்கு ஒரு செய்தி இருக்க வேண்டும்; அது தனிமனிதனையோ சமுதாயத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும்' இதுவே சுவாமிகளின் குறிக் கோளாகவும் இருந்துள்ளது.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களை முதலில் மதுரை புக்ஷாப் மு.கிருஷ்ணப்பிள்ளையும் கு.மாயாண்டிபிள்ளையும் முப்பதுகளிலும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அறுபதுகளில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (சங்கீத நாடக சங்கம்)

நான்கு நாடகங்களை (அபிமன்யு சுந்தரி, சதி அனுசுயா, சுலோசனா சதி, சீமந்தினி) வெளியிட்டது. சென்னை சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் இதற்கு உதவியது. 2000-ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் (லவகுச), 2005-ல் தில்லி சாகித்திய அகாதெமியும் (பிரஹலாதன் சரித்திரம், சாரங்கதரன்) வெளியிட்டது.

இப்போது காவ்யா சங்கரதாஸ் சுவாமிகளின் 16 நாடகங்களைப் பசும்பொன் தேவரின் நூற்றாண்டு நினைவாக (2008) தற்போது வெளியிடப்படுகிறது. இதனைத் தொகுத்தும் பகுத்தும் பிழைகள் திருத்தியும் உதவினார் முனைவர் அரிமளம் சு.பத்மநாபன் அவர்கள். அவரது ஆர்வமும் அயராத உழைப்பும் இவ்வெளியீட்டுக்குப் பெரிதும் உதவியது. தமிழ் நாடக வரலாற்றில், இது குறிப்பிடத் தக்க முயற்சி; நாடகத்தமிழுக்கு இம்முயற்சி ஒரு பெரும்பணி.

சுவாமிகளின் நாடகங்கள் படிக்கவும் நடிக்கவும் பயன்படுவன. நாடக ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் அறிஞர்களும் இத்தொகுப்பைப் படித்து பயன்பெறுவார்களாக.

காவ்யா சண்முகசுந்தரம்

முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் நலிவுற்றிருந்த தமிழ் நாடக மேடைக்குப் புத்துயிரளித்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாடகவரலாற்றில் வியத்தகு மாற்றங்களையும் பல்வேறு உத்திகளையும் புகுத்திப் பெரும் புரட்சியைச் செய்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். தமிழ் நாடகத்தின் முதல் நவீன நாடக கர்த்தா சுவாமிகளே யாவார்.

சுவாமிகளின் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை இயற்றியிருந்த போதிலும் எமக்கு முதுபெரும் நாடகக் கலைஞர்களின் வாயிலாக முழுமையாகக் கிடைத்த 16 நாடகப் பிரதிகள் மட்டும் இந்நூலில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. அவற்றில் 'கர்வி பார்ஸ்' என்பது ஒரு முழு நீள நாடகமன்று. சதி அநுசுயா நாடகத்துடனான ஒரு சிறு இணைப்பு போன்று நகைச்சுவை நிறைந்த குறு நாடகமாகப் படைத்துள்ளார் சுவாமிகள். தமிழ் நாட்டின் பதிப்பு வரலாற்றில் முதன்முறையாக சுவாமிகளின் நாடகங்கள் ஒரே தொகுப்பில் 'காவ்யா' மூலம் வெளிவந்திருப்பது மிகுந்த பாராட்டிற்குரிய முயற்சியாகும்.

1930களில் சில நாடகங்களும், 1950களில் சில நாடகங்களும் அச்சில் வந்தன. நீண்ட இடைவெளிக்கப் பின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 'லவகுச' நாடகமும் சாகித்ய அகாதமியால் இரண்டு நாடகங்களும் பதிப்பிக்கப்பட்டன. இந்நிலையில், இந்நூலில் இடம் பெற்றுள்ள பல நாடகங்கள் இன்று கிடைப்பதற்கு அரியனவாகவே உள்ளன. இவற்றையாவது இன்றைய, எதிர்காலத் தலைமுறையினர் படித்தும், நடித்தும் பயனுற வேண்டும் என்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

பழந்தமிழ் நாடக மரபின் அல்லது நாடகத் தமிழின் எச்சங்களாக இன்றைக்கு விளங்குபவை தெருக்கூத்தும், சுவாமிகளின் நாடகங்களுமே என்றால் மிகையில்லை. தெருக்கூத்தில் அடவுகளும் ஆடல்களும் முதன்மை வகிக்கின்ற நிலையில் சுவாமிகளின் நாடகங்களில் இசையே முதன்மை வகிக்கின்றது. சுவாமிகளின் நாடகங்கள் முழுமையான இசை நாடகங்களே; மேலை நாடுகளில் உள்ள (Opera) ஆபராக்களோடு ஒப்புநோக்கத்தக்கவை.

ஆங்கில நாடகமேதை ஷேக்ஸ்பியரோடு பல்வேறு நிலை

களிலும் ஒப்பு நோக்கத்தக்கவர் நம் சங்கரதாஸ் சுவாமிகள். நாடக நடிகர், நாடக ஆசிரியர், கவிஞர், நாடக இயக்குநர், படைப்பாளி எனப் பல பரிமாணங்களை உடையவர் சுவாமிகள். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் நடிக்கப்படுவதற்கானவையாக மட்டுமின்றி படிக்கப் படுவதற்கான இலக்கியமாகவும் ஆங்கிலேயர்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ்ச் சூழலில் அறிஞர் உலகம் சுவாமிகளை வெறும் கூத்தாடியாகவே கண்டது. ஷேக்ஸ்பியர், Sonnet என்னும் 14 வரிக் கவிதையைத் தமக்கேயுரிய 'ஷேக்ஸ்பீரியன் ஸானெட்' என உருவாக்கியதைப் போன்றே சுவாமிகளின் சந்தப்பாடல்கள் ஞானசம்பந்தரிலிருந்தும், அருணகிரிநாதரிலிருந்தும் மாறுபட்டவை. அவை 'சுவாமிகளின் சந்தங்கள்' என்றே அழைக்கப்படுகின்றன. ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் இலக்கிய நயமும் செறிந்துள்ள சுவாமிகளின் நாடகங்கள் தமிழ் நாட்டில் படிக்கப்படவே இல்லை என்பது மிகவும் வருந்துதற்குரியது.

பாடல்கள், இசை, வசனம், நடிப்பு, காட்சி அமைப்பு, அரங்க அமைப்பு என எதிலும் வரைமுறையின்றி நடத்தப்பட்டு வந்த தமிழ்நாடகம் சுவாமிகளால் முறையான நாடகப் பிரதியைப் பெற்றது. பாடல்கள், இசையமைப்பு, குறைந்த வசனம், காட்சி யமைப்பு, திரைச்சீலை, நடிகர்களுக்கு முறையான நடிப்பு, இசை, மொழிப்பயிற்சிகள் என நாடகத்தின் அனைத்துக் கூறுகளிலும் சுவாமிகள் கவனம் செலுத்தி வரைமுறைகளை ஏற்படுத்தினார். சுவாமிகளின் நாடகங்களை மதிப்பீடு செய்யும் பொழுது அவருடைய அக்காலச் சூழலின் பின்ன்ணியில் அவற்றை அணுகவேண்டும்.

அக்காலத்தில் நாடகம் முழுதும் பாடல்களே இடம் பெற்றிருக்கும். வசனமே இருக்காது, நடிகர்கள் அவர்களுக்குத் தோன்றுவதைப் பேசுவார்கள். அந்நிலையை மாற்றி, பாடல் களுக்கிடையில் சிறு, சிறு வசனங்களை எழுதி சுவாமிகள் தம் நாடகப் பிரதிகளை உருவாக்கினார். காட்சிகளுக்கான பாடல்கள் அவற்றிற்கான இராக, தாளங்களையும் குறிப்பிட்டு அவற்றைப் பாட நடிகர்களுக்கும் இசைக் கருவியாளர்களுக்கும் சுவாமிகளாலேயே முறையான பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதன் காரணமாகவே சூாவமிகள் நாடக ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியர் என்று போற்றப் பட்டார். அக்காலத்தில் வாழந்த நாடக ஆசிரியர்கள், நடிகர்கள் பலரும் சுவாமிகளின் மாணவர்களே.

சுவாமிகளின் நாடகங்களில் இசை வெள்ளமாகப் பாயும். இரவு முழுவதும் நடத்தப்படுகின்ற நாடகங்கள் பாடல்கள் மூலமே வெற்றி பெற்றன. தமிழ் மரபு வழித் தெருக்கூத்தினைத் தம் நாடகங்களுக்கு அடிப்படையாகக் கொண்ட சுவாமிகள் தம்முடைய நாடகங்களில் இலக்கிய வளம், சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் மிக்கப் பாடல்களைப் படைத்தார். தமிழ் மொழியின் சிறப்பு மிக்க வண்ணம், சந்தம், வெண்பா, கலிப்பா, கலித்துறை, விருத்தம் கழிநெடிலடிகள் என அனைத்து வகைப் பாக்களையும் காட்சி களுக்கும் கதாபாத்திரங்களுக்கும் பொருந்தும் வகையில் படைத்துள்ளார். அத்துடன் தமிழக நாட்டுப்புற இசைப்பா இனங்களான நொண்டிச் சிந்து, தென்பாங்கு (தெம்மாங்கு), கும்மி, ஒப்பாரி, லாவணி, காவடிச்சிந்து, கண்ணிகள் ஆகியவற்றிலும் பாடல்களை இடத்திற்கு ஏற்ப இயற்றியுள்ளார். நாடகத்தில் புதுமைகளைப் புகுத்துவதில் வல்லவரான சுவாமிகள் அக்காலத்தில் இந்துஸ்தானி இசையில் அமைந்து, மிகவும் பிரபலமாக விளங்கிய பார்சி நாடகப் பாடல்கள், கஜல், பஜன் ஆகியவற்றின் வர்ண மெட்டுகளிலும் பாடல்களை இயற்றி ஆங்காங்கே பல காட்சிகளில் இடம்பெறச் செய்துள்ளார். ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக மேற்கத்திய இசையையும் தம் நாடகங்களில் பயன்படுத்தி 'இங்கிலிஷ் நோட்' அல்லது நோட்டு என்று தலைப்பிட்டுப் பாடல்களைப் புனைந்தார். (எடுத்துக்காட்டாக சத்தியவான் சாவத்திரி நாடகத்தில் சாவித்திரியும் எமனும் பாடுகின்ற 'திவ்ய புருஷர் நீர் யார்' என்ற தர்க்கப்பாட்டு)

இசையமைப்பிலும் தாள நுணுக்கங்களிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த சங்கரதாஸ் தம் நாடகங்களில் தென்னிந்தியச் செவ்விசை (கர்நாடக இசை), நாட்டுப்புற இசை, தமிழ்த்திருமுறை இசை, இந்துஸ்தானி இசை, மேற்கத்திய இசை என அனைத்து வகை இசைகளையும் தம் நாடகங்களில் பயன்படுத்தியுள்ளார். இசை நாடகங்களைப் படைப்பதில், கீர்த்தனை நாடங்களைப் படைத்த அருணாசலக்கவிராயரையும், கோபாலகிருஷ்ண பாரதியாரையும் தமக்கு முன்னோடிகளாகக் கொண்டார். இராம நாடகம், நந்தனார் சரித்திரம் ஆகியவற்றின் தாக்கத்தையும், சுவடுகளையும் சுவாமி களின் நாடகங்களில் பரவலாகக் காணமுடியும்.

அக்காலத்தில் மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கிய பாடல்களின் வர்ணமெட்டுகளைப் பயன்படுத்திய சுவாமி களால் தமிழ் இசையுலகில் வர்ணமெட்டுக் காலம் ஒன்று

துவங்கியது என்றே கூறலாம். கி.பி.1900 முதல் 1945 வரையிலான காலத்தை 'வர்ணமெட்டுக்காலம்' என்றே கூறலாம். சுவாமிகளின் சம காலத்தவரான மகாகவி பாரதியாரின் கவிதைகளைப் படிப்போர் இவ்வுண்மையை உணரமுடியும்.

இந்நூல் குறிப்பிடப்பட்டுள்ள சில வர்ணமெட்டுக்களுக்கான இராக, தாளங்களை மட்டும் முது பெரும் இசைநாடகக் கலைஞர்கள் வாயிலாகப் பாடக்கேட்டுக் குறிப்பிட்டுள்ளேன். பல மெட்டுக்கள் சுவாமிகளுடைய பாடல்களிலேயே அமைந்துள்ளன. சுவாமிகளின் சமகால நாடக ஆசிரியர்களும் கவிஞர்களும் பின் வந்தவர்களும் சுவாமிகளின் நாடகப் பாடல்கள் பலவற்றையுமே தங்கள் பாடல் களுக்கான வர்ணமெட்டுகளாகக் கொண்டனர். பிற்கால நாடக மேடைகளில் பாடப்பட்ட விடுதலைப்போராட்டப் பாடல்கள் பலவும் சுவாமிகளுடைய பாடல்களின் வர்ணமெட்டுகளில் அமைந்தவையே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (எடுத்துக் காட்டாக விஸ்வநாததாஸ் பாடிய 'கதர்க்கப்பல் கொடிதோணுதே').

தம்முடைய இசைப் பாடல்கள் மூலம் பண்டிதர்களே கேட்டு மகிழ்ந்த கர்நாடக இசையையும் பிற செவ்விசை வடிவங்க்ளையும் சந்தத் தமிழையும் பெருவாரி மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமை சுவாமிகளையே சேரும். சுவாமிகளுடைய நாடகங்களை பெருவாரி மக்களுக்கான (மரபு வழி) நாடக அரங்கு **(Popular (Traditional) Theatre)** என அ்ழைப்பதே பொருத்தமாக இருக்கும். பைரவி, தோடி, காம்போதி, தன்யாசி, யதுகுலகாம்போதி, மோகனம், பியாக் (பெஹாக்), சிந்துபைரவி முதலான பல இராகங்களைப் பாமர மக்களும் கேட்டு இன்புறுவதுடன் அவற்றை அடையாளம் காணவும் செய்தவை சுவாமிகளின் நாடகப் பாடல்கள்.

சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துப் பாடல்களின் வர்ண மெட்டுகளில் பாடல் எழுதியவர்களில் முழுமையான வெற்றி பெற்றவர் சுவாமிகள் மட்டுமே என்பதில் ஐயமில்லை.

தொடக்கத்திலிருந்து 1960 ஆம் ஆண்டு வரை தமிழ்த் திரையுலகில் சுவாமிகளின் 'பாய்ஸ் கம்பெனி' நாடக மரபே ஆதிக்கம் செலுத்தி வந்தது என்பது வரலாற்று உண்மை. எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா, எம்.ஜி.ஆர். சிவாஜி கணேசன், எஸ்.எஸ். இராஜேந்திரன், டி.ஆர்.மகாலிங்கம், எம்.என்.நம்பியார், யு.ஆர்.ஜீவரத்தினம், மனோரமா முதலான

நூற்றுக்கணக்கான கலைஞர்களும் சுவாமிகள் வழிவந்தவர்களே யாவர். அத்துடன் இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், காட்சியமைப்பவர்கள், கதாசிரியர்கள், ஒப்பனையாளர்கள் என அனைத்துக் கலைஞர்களும் சுவாமிகளின் மரபு வழிப்பட்டவர்களே. மேலும் இந்நூலில் காணப்படும் நாடகங்களே தொடக்க காலத் தமிழ்த்திரைப் படங்களாக உருவாயின.

ஒரு நூற்றாண்டு கடந்து இன்றளவும் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் சுமார் 2000க்கும் மேற்பட்ட இருபாற் கலைஞர் களாலும் சுவாமிகளின் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவை கிராமப்புற மக்கள் வாழ்க்கையின் ஓரங்கமாகவே விளங்கி வருகின்றன.

குறிப்பாக சுவாமிகளின் 'கோவலன் நாடகம்', 'கோவலன் செட்டி கதை' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். எனவேதான் இந்நாடகத்தில் கவுந்தியடிகள் பாத்திரம் இடம்பெறவில்லை.

முன்னரே குறிப்பிட்டுள்ளபடி இந்நூலில் இடம்பெற்றுள்ள நாடகங்களுக்கான மூலப்பிரதிகளாக 1930களில் மு.கிருஷ்ணப் பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்ட பதிப்புகளும், பிற்காலத்தில் வந்த சில பதிப்புகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. முதுபெரும் இசைநாடகக் கலைஞர்களாக விளங்கிய அமரர் பி.எஸ். நாகராஜ பாகவதர், இன்று 90 அகவையைத் தாண்டியும் எனக்குப் பல்லாற்றானும் நாடகங்கள் பற்றிய அரிய தகவல்களைத் தந்துதவி வரும் ஏ.கே.காளீஸ்வரன் ஆகியோர்க்கும், தம்மிடமிருந்த நாடகப் பிரதிகளையெல்லாம் இப்பணிக்காக என்னிடம் கொடுத்து உதவிய பெரும்பாக்கம் இசைநாடக ஆசிரியர் கலை நன்மணி பத்மநாபன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஈராயிரத்தாண்டில் நான் எழுதிய 'தவத்திரு சங்கரதாஸ் சுவாமி களின் நாடகங்களில் இசைக் கூறுகள்' என்னும் நூலும், 2002 இல் எழுதிய 'சங்கரதாஸ் சுவாமிகளின் சந்தங்கள்-ஓர் ஆய்வு' என்னும் நூலும் வெளிவந்ததன் பயனாகத் தமிழ்நாட்டில் சுவாமிகளின் நாடங்கள் பற்றிய மறுசிந்தனைகள் தோன்றின. அதன் காரணமாக பல்கலைக்கழக இசைத்துறைகளிலும் தமிழ்த்துறைகளிலும், சுவாமி களின் நாடகங்கள் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளதுடன் அவை குறித்த பல ஆய்வுகளும் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

சுவாமிகளின் நாடகங்கள் யாவும் முத்தமிழ்க் கருவூலங்களாக விளங்குபவை. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறை மாணவர்களும், ஆய்வாளர்களும் படித்துப் பயன்பெற வேண்டியவை. ஷேக்ஸ்பியர் நாடகங்கள் குறித்து எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டதைப் போன்று சுவாமிகளுடைய நாடகங்கள் குறித்தும் எழுதப்பட வேண்டும். இப்பணிக்குத் துணைபுரியும் வகையில் 'காவ்யா' சண்முகசுந்தரம் இந்நூலை வெளியிட்டிருப்ப தற்குத் தமிழுலகம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது. 'காவ்யா'வின் இம்முயற்சி தமிழ்ப்பதிப்பு வரலாற்றில் ஒரு முக்கியமான பதிவை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைக் கண்ணுறும் நாடகக் கலைஞர்களும் அறிஞர்களும் தங்களிடையே உள்ள நாடகப் பிரதிகளை (அச்சு / கையெழுத்துப் பிரதிகள்) தந்து உதவினால் அவற்றை அடுத்த தொகுப்பாக வெளியிட முயற்சிக்கலாம். சங்கரதாஸ் சுவாமிகளின் புகழ் உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். உலகெங்கிலுமுள்ள தமிழன்பர்கள் இம்முயற்சி வெற்றிபெறத் துணை நிற்குமாறு வேண்டுகின்றோம்.

அன்புடன்

அரிமளம் சு.பத்மநாபன்

பொருளடக்கம்

1. வள்ளி திருமணம் 1
2. அல்லி சரித்திரம் 44
3. அரிச்சந்திரா-மயான காண்டம் 101
4. நல்லதங்காள் சரித்திரம் 144
5. சத்தியவான் சாவித்திரி 195
6. பவளக்கொடி சரித்திரம் 277
7. இரணியன் நாடகம் அல்லது பிரஹலாதன் சரித்திரம் 359
8. சீமந்தனி 451
9. சுலோசனா சதி 530
10. சதி அநுசுயா (அநுசுயா) 622
11. கர்விபார்ஸ் 709
12. கோவலன் சரித்திரம் 728
13. ஞான சௌந்தரி 804
14. சாரங்கதரன் சரித்திரம் 854
15. அபிமன்யு சுந்தரி 915
16. லவகுச நாடகம் 1008

1. வள்ளி திருமணம்

வள்ளி திருமணம்

காட்சி 1

வேள்விமலைப்பொழில் சித்தூர் நாடு

நம்பிராஜன் சபை

மானே நானும் சமர் செய்ய - என்ற மெட்டு

நம். ஐங்கரனே சங்கரனறு முகனே
பொங்குவர மருள்தாருஞ் சண்முகனே
சங்கையாகவே தினம் இரு கரங்குவித்தேன்
எங்குமருள் புகழ் தங்குந் தமிழ் தரும்

வச. சேவகா! என்னுடைய புத்திரர்களை அழைத்துக் கொண்டு வா.
(சேவகன் சென்று விட்டான்)

நம்பிராஜன் புத்திரர் வருகிறார்கள்

கொச்சிமலை குடகுமலை - என்ற மெட்டு

புத். இந்த மலை அந்தமலை எங்குஞ் சுற்றிவந்தோம்
தந்தை யழைத்ததினால் மகிழ்ந்தோம்
கந்தப்பனின் சொந்தமான கழுகுமலை வந்தோம் (இ)
ஆறுதலை வேலன் மீது பாட்டுக்களைப்பாடி
அவன் - புகழையுங்கொண்டாடி
சிற்றா ரதுக்குச் செல்வோஞ் செந்தில் அப்பன் மீது பாடி (இ)

நம்பிராஜனிடம்

புத். தந்தையே! நமஸ்காரம்.

நம். புத்திரர்களே! அமருங்கள்

புத். புத்திரர்களே! நமது குலதெய்வமாகிய ஆறுமுகக் கடவுளைத் துதிசெய்வோம் வாருங்கள்

முருகனைத் துதித்தல்

சோதரரே வருவீர் - என்ற மெட்டு

இராகம் - ஆனந்தபைரவி தாளம் - ஆதி.

பல்லவி

புத். வா ஆறுமுகனே வா
தருணம் முருகா

திருமால் முருகா
நீல - மயில் மிசை ஏறியே (வா)

அனுபல்லவி

பார் புகழ் மகிழும் பாலவடி வேலவா
நேரம் வந்தருள் செய் கோலாகல முடனே
பார் புதல்வர்களைக்
கார் உனையல்லாது
யார் உயர்நலமுடனருள்தர (வா)

நம். (வச) புத்திரர்களே! நமது நாட்டிலுள்ள சகலரும் இவ்வாறு ஆறுமுகனை அனுதினமும் அவாவுடன் பூஜித்து வருகின்றார்களா?

புத். பிதா! அவ்விதமே செய்துவருகிறார்கள்

குடிகள் முறையிடுதல்

மகானுபாவனே - என்ற மெட்டு

குடி. ராஜாதி ராஜனே குறைதீரும் நேசனே
மோசஞ் செய்த நாசமுற்றும் சொல்வோம் ராஜனே (ரா)
துஷ்ட மிருகங்கள் நாங்களிட்ட பயிர்களை
நஷ்டமாக்கி கஷ்டப்பட செய்தவேதனை (து)
கூட்டமாய் வந்தோம் குறை சொல்லத்துணிந்தோம்
பாட்டமான மிருகமதனை வாட்டவே பணிந்தோம் (கூ)
விரட்டாவிடில் வீட்டில் வசிப்பதே கஷ்டம்
நாட்டிலுள்ள எங்கள் குறை தீர்ப்பீருமதிஷ்டம் (வி)

வச. ஐயா! நாங்களிட்ட பயிர்களை எல்லாம், காட்டிலுள்ள துஷ்டமிருகங்கள் வந்து அழித்து நாசப்படுத்திவிட்டன. ஆகையால் எங்கள் மீது கிருபை செய்து எங்கள் குறையைத் தீர்க்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

நம். குடிகளே! நீங்கள் சென்று வாருங்கள். நாங்கள் சென்று வேட்டையாடி உமது குறையை தீரும்படி செய்கிறோம். சென்று வாருங்கள். (குடிகள் சென்றுவிட்டார்கள்)

நம். புத்திரர்களே! நாம் வேட்டையாட வேண்டிய திருப்பதால், நீங்கள் சென்று அதற்கு வேண்டிய சகலவிதமான ஆயுதங்களுடன் வந்து சேருங்கள்

புத். உத்திரவின் படியே செய்து வருகிறோம்.

நம். சென்று வாருங்கள் (புத்திரர்கள் சென்று விட்டார்கள்)

காட்சி - 2

காடு

இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி

பல்லவி

நம். வில்லை எடுத்து வாடா
அடா எடுத்து வாடா
வில்லை எடுத்து வாடா (வி)

அனுபல்லவி

எல்லையில் லாதபல தொல்லை மிருகங்கூடி
புல்லைமேய்ந்ததுபோக நெல்லை யழித்ததடா (வி)

(ஓடாதே நில்லு நில்லு)

நம். சிங்கத்தை கொல்லு கொல்லு
சீக்கிர மாகவெல்லு
யானையைக் கண்டால் நில்லு
மானைக்கண் டாலும் நில்லு

புத்திரர்களே! யானை, மான், இந்த இரண்டு இனங்களைத் தவிர மற்ற மிருகங்களை யெல்லாம் கொல்லுங்கள். சற்று அமர்ந்திருக்கிறேன்.

புத். பிதா! அடுத்த காட்டில் ஏதோ இரைச்சல் கேட்கிறது. அங்கு சென்று வேட்டையாடி விட்டு வருகிறோம்.

நம். அப்படியே செய்யுங்கள். விடை தந்தேன்! சென்று வாருங்கள்.

(ஒரு வேடன் ஓடிவந்து நம்பிராஜனிடம்)

ஐயனே! நாங்கள் வேட்டை முடிந்ததும் வள்ளிக்கிழங்கு போட்டிருந்த தோட்டத்திற்குச் சென்றோம். வள்ளிக்கிழங்கு வெட்டிய இடத்தில் ஒரு சிறு பெண் குழந்தை ஒன்று அழுது கொண்டிருக்கிறது.

நம். உண்மைதானா?

வே. உண்மைதான்.

நம். வா போய்ப் பார்க்கலாம்.

காட்சி- 3

வள்ளிக்கிழங்கு தோட்டம்

நம். என்ன ஆச்சரியமாயிருக்கிறது! குழந்தையை என் கையில் எடுத்துத் தாருங்கள்

(குழந்தையை வாங்கி முத்தமிடுகிறார்)

எல்லாம் அந்த கந்தப்பனின் செயல். நமக்கும் பெண் குழந்தை இல்லை என்று அறிந்து இந்தப் பெண் பாக்கியத்தை அளித்தார் போலும். வாருங்கள் அரண்மனைக்குச் செல்லலாம்.

காட்சி - 4

வேள்வி மலை பொழில்

நங்கை மோகினி

நங். வேட்டைக்குச் சென்றவர்கள் இன்னும் ஏன் வரவில்லை. சேடியே! நீ சென்று பார்த்துக் கொண்டு வா.

சேடி. அம்மணி வெளியில் சென்று பார்த்தேன். சமீபத்தில் வந்துவிட்டார்கள்.

நங். வந்துவிட்டார்களா?

(நம்பிராஜன் வந்துவிட்டார்)

நங். நாதா நமஸ்காரம்

புத். தாயே நமஸ்காரம்

நம். காதலி! நாங்கள் வேட்டையாடச் சென்றோம். வேட்டை முடிந்ததும் நமது மைந்தர்கள் வள்ளித் தோட்டத்திற்கு சென்றார்களாம். வள்ளிக் கிழங்கு வெட்டிய இடத்தில் இந்தப் பெண் குழந்தை இருந்தது என்று தெரிவித்தார்கள். பின்னால் நான் சென்று இந்தக் குழந்தையை எடுத்து வந்தேன். பெற்றுக்கொள்.

(குழந்தையை வாங்கி நங்கை மோகினி முத்தமிடுகிறாள்)

(மக்களா எந்தன் மக்களா - என்ற மெட்டு)

நங். கண்மணி! அருமைப்பெண்மணி

நம். காருண்ய திருக்குமாரன் அருளே

தோன்றிய பாவையே எந்தன் (கண்)

(குட்டியே பிரமனை சிறையினில் என்ற மெட்டு)

நாங்கள் செய்தபாக்கிய வசத்தினல் எழுந்தாய்
நங்கை மோகினி முத்தம் தந்திட மகிழ்ந்தாய்

சங்கை யில்லா தவது வாகவே வந்தாய்
செங்கை யானவடி வேலனிங்கு உனை
மங்கையாகவுரு அங்கம் செய்து வைத்த (கண்)

நங். ஏ! கண்மணி! உன்னைப் பெற்ற பாக்கியமே பாக்கியம். எங்கள் துர்பாக்கியம் இன்றோடு தொலைந்தது. புனிதவதியான நீயும் எங்களுக்குப் புத்திரியாக வரவேண்டுமானால் நாங்கள் அதிர்ஷ்டசாலியே. மங்கையே! உனக்கு என்ன வேண்டும் தெரிவி! பால் வேண்டுமா? பழம் வேண்டுமா?

நம். நங்கை மோகினி! நமது ஜென்மத்தை ஈடேற்ற வந்த எந்தனருமைக் கண்மணியைக் கண்ணில் கருவிழியைப் போல் பாதுகாத்துவர வேண்டும். நமது புத்திரிக்கு நாம தேயம் என்ன வைக்கலாம்.

நங். நீங்களே யோசித்து சொல்லுங்கள்.

நம். புத்திரர்களே! உங்கள் அபிப்பிராயம் யாதோ?

புத். தங்களிஷ்டம் போல் தான்.

நம். காதலி! வள்ளிக்கிழங்கு வெட்டிய குழியிற் கிடைத்ததால் 'வள்ளி நாயகி' என்றே நாமமிட்டேன்.

புத். அவ்வாறே அழைக்கிறோம்.

நம். கண்மணி நான் சபாமண்டபம் சென்று வருகிறேன்.

நங். நாதா சென்று வாருங்கள்.

(நம்பிராஜன் சென்றுவிட்டார்)

சேடி. (வள்ளிக் குழந்தையை தாலாட்டுகிறார்கள்)

ஆராரோ ஆரிரரோ - எங்கண்ணே நீ
ஆராரோ ஆரிரரோ
ஓடுமான் ஓடி வர எங்கண்ணே
ஒன்பது மான் பின் தொடர அந்த
மானோடும் பாதையெல்லாம் எங்கண்ணே
தானோடி வந்த முத்து
ஆராரோ ஆரிரரோ - எங்கண்ணே நீ
ஆராரோ ஆரிரரோ

காட்சி - 5

நம்பிராஜன் சபை

புத். தந்தையே! நமஸ்காரம்.

நம். புத்திரர்களே! உங்களை அழைத்த காரணம் தெரியவருமா?

புத். தெரிவியுங்கள் தந்தையே!

நம். நமது தினைப்புனத்தில் கிளி, மைனா, புறா இவைகள் போன்ற பறவை இனங்கள் வந்த முதிர்ந்த கதிர்களைக் கொத்திக் கொத்தி நாசம் செய்கிறதாம். அதற்கு யாராவது ஒருவர் காவலிருக்க வேண்டும். அதற்கு யாரை அனுப்புகிறது?

புத். பிதா! அதற்கு நம்முடைய தங்கை வள்ளியைத்தான் அனுப்ப வேண்டும். ஏனென்றால் அக்கம்பக்கங்களிலும் பெண்கள் தான் மிகுதியாய்க் காவல் செய்துகொண்டிருக்கிறார். பெண்களுக்குப் பெண் துணையாக இருக்கும். தங்கள் அபிப்பிராயம் யாதோ.

நம். நீங்கள் உரைத்தது சரிதான். அவ்வாறே செய்வோம். வள்ளி நாயகியை அழைத்துக்கொண்டு வாருங்கள்.

வள்ளி நாயகி வருகிறாள்

இராகம் - காம்போதி - தாளம் - ரூபகம்

பல்லவி

வள். கயிலை நாதனே

அனுபல்லவி

வேதா மாமலர்ப்பாதா பார்வதி நாதா கதி தரும் (கை)

சரணம்

கங்கை மதியைச் சடையில் தரித்தோனே
மங்கை உமையாளை மாலை முடித்தோனே
பங்க யனுக்கருள் செய்த விநோதனே
பாரும் ஏழையைக் காரும் திருவருள் தாரும் (கை)

விடையேறும்

நம்பிராஜன் சபை

ஒய் நாரதரே - என்ற மெட்டு

வள். பணிந்தேன் பிதா
இப்-பாவை வள்ளியாளையழைத்திடச் செய்ததை
ஏனோ சொல்வீர் பிதா (பணி)

வச. தந்தையே நமஸ்காரம்

நம். மங்களமே
மானே - வள்ளி நாயகியே உன்னை யழைத்ததும்
மொழிவேன் பைங்கிளியே (மானே)

வச. கண்மணி! வள்ளி உன்னை யழைத்த விவரம் தெரிவிக்கிறேன். அமர்வாய்.

வள். தெரிவியுங்கள் பிதா

- முன்பாட்டின் தொடர்ச்சி-

நம். காட்டிற்கு நீபோக வேண்டும்
தினைப்-புனங் காவல் புரிந்திட வேண்டும்
மேட்டின் மேலேறிய கவண் கல்லினாலோட்ட
செல்வாய் இத்ததியே (மானே)

நம். வச. வள்ளி நமது தினைப்புனத்தில் முதிர்ந்த கதிர்களைப் பறவைகள் வந்து கொத்திக் கொத்தி, நாசஞ்செய்கிறதென்று காவலாளிகள் வந்து தெரிவித்தார்கள். ஆனது பற்றி உன்னைத் தினைப்புனத்திற்கு காவலாளியாக அனுப்ப எண்ணங் கொண்டிங்கழைத்தேன். உன்னிஷ்டம் யாதோ தெரிவிப்பாய்.

வள். பிதா தங்கள் கட்டளைப் பிரகாரம் செய்து வரச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் நான் அழைக்கும் போதெல்லாம் எனது அண்ணன்மார்களும் தாங்களும் வந்து பார்த்துவிட்டு போகவேண்டும். மேலும் எனக்கு வழிதெரியாது.

நம். வள்ளி! உன்னைத் துணையின்றித் தனிமையாய் அனுப்புவேனா? உன் அண்ணன்மார்களைக் கூடவே அனுப்பித்தினைப்புனத்தில் வேண்டுஞ் சௌகரியங்களைச் செய்து வரும்படி சொல்லி அனுப்புகிறேன்.

வள். தங்களிடஷ்டப்படியே செய்யுங்கள்.

நம். குமாரர்களே! உங்கள் இஷ்டம் யாது?

புத். தங்கள் இஷ்டமே.

நம். நான் மேற்சொல்லிய பிரகாரம் வள்ளியை தினைப் புனத்திற்கு அழைத்துக் கொண்டு போய் வேண்டுஞ் சௌகரியங்களைச் செய்து விட்டு வாருங்கள்.

புத். உத்தரவின் படியே செய்துவருகிறோம்.

நம். சென்று வாருங்கள்

(வள்ளி தன் அண்ணன் மார்களுடன் தினைப்புனத்திற்குச் சென்றுவிட்டாள்)

காட்சி - 6

தினைப்புனம்

புத். தங்காய்! இந்தப் பரண் மீதேறி அமர்ந்துகொள். ஏதாவது பறவைகள் வந்தால் இந்தக் கவண் கல்லினால் எறிந்து விரட்டி விடவேண்டும். நாங்கள் சென்று வருகிறோம். நீ அழைக்கும்பொழுதெல்லாம் வந்து பார்த்து விட்டுப்போகிறோம். நாங்கள் போகலாமா?

வள். அண்ணா! சென்றுவாருங்கள்.

இராகம் - எது குலகாம் போதி தாளம் ஆதி.

கண்ணிகள்

வள். சுந்தர மான இந்தச் சோலை சிங்காரம்
சொல்லமுடியாதிதன் பெருமை விஸ்தாரம்
அந்தரத்தோர்கள் அதிசயத்திடவே
அறிவை மா ரே நமதகங்களித்திடவே (சுந்)

தினைப் பயிர்களிருக்குஞ் செழிப் பதைப் பாராய்
சேயிழை காள் நம் கண் முன்னே நேராய்
மனக் கவலைகளெல்லாம் மாற்றலாம் சீராய்
மங்கையரே நல்லிங்கிதங் கூறாய் (சுந்)

பாவையரே இந்தப் பரணலங்காரம்
பகர்ந்திடச் சேயனுக் கிது வெகுதூரம்
கனகத்தினால் செய்த கால்களின் ஜோதி
கண்களுக் கென்னேரம் அணியதுக்யாகி (சுந்)

வச. பாங்கி மார்களே! இந்தத் தினைப் புனமானது செழிப்பாக வளர்க்கப் பட்டிருப்பது மன்றி இந்தப் பரணும் அதி விநோதமாக அமைந்திருக்கிறது. ஆகவே நம் வீட்டில் இருப்பதைப் பார்க்கிலும் இந்தத் தினைப் புனத்திலிருப்பது மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. உங்கள் மனமெப்படியிருக்கிறது. சொல்லுங்கள்.

சசி. அம்மணி! தாங்கள் சொல்லியபடியே எங்களுக்கும் இந்த இடத்திலிருப்பது ஆனந்தமாகத் தானிருக்கிறது தாயே.

வள். தாதிகளே பறவைகளெல்லாம் கூட்டமாகக் கூடிதினைக்கதிரைக் கொய்வதற்காக வருகிற சப்தம் கேட்கிறதாகையால் அவைகளைக் கதிர்களில் நெருங்கவொட்டாமல் ஓட்டிவிட வேண்டும் வாருங்கள்.

இராகம்-எதுலகாம்போதி தாளம்-ரூபகம்

வள். ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
சோ!

சிச்சிலிகாள் காக்கைகளா
செம்பருந்து கூட்டங்களா
பச்சைநிற மயிலினங்காள்
பண்ணிசைக்குங் குயிலினங்காள்
சோ சோ
மரங்கொத்திக் குருவிகளா
மாடப் புறாவினங்காள்
தரந்தரப் பக்ஷிகளா
சம்பங்கிக் கோழிகளா
சோ சோ
கூடுகட்டும் தூக்கணங்காள்
கொற்றராஜாளிப் பக்ஷிகளா
பாடும்வானம் பாடிகளா
பைரிநாண்வெண் கொக்கினங்காள்
கொண்டலாத்திக் குருவிகளா
கூடிவரும் பறவைகளா
நண்டுதேடும் உள்ளான்களா
நாகணவாய்ப் புள்ளினங்காள்
சோ. சோ. சோ.

வ.ம். சேடிகளே! தினைக்கதிர்களைக் கொய்யவந்த பக்ஷிகளை எல்லாம் கவண் கல்லால் எறிந்து விரட்டிவிட்டேன். இன்னும் வரும் பக்ஷத்தில் என்னிடம் வந்து தெரிவியுங்கள்.

(நாரத முனிவர் வருகிறார்)

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

நா. திருப்பணி ஆறுமுகம் உருப்பதிய நினைத்தால்
கருப்பிணி வோட்ட மெடுக்கும் (திரு)

அநுபல்லவி

விருப்பமுட னடியார் வேண்டியபொழுதினில்
வெல்லம்போல் துதிசொல்லும் நெல்வேலி நகரினில் (திரு)

ஏறு மயிலேறி யென் றியம்பும் பாட்டருணகிரி
ஈசனுக்குப் பிள்ளை குருவானநிலையைத் தெரிந்தும்
ஏகாந்த இன்பத்தை ரமித்து

நீறு காஷாயம் ருத்ராக்கம்
நேர்ந்த சின்னங்களின் சத்து
நிச்சயத்தைக் கண்டுணர்ந்து
நெஞ்சையோர் நிலையில் வைத்து (திரு)

வ.ம். சுவர்க்க சாம்ராஜ்ய இந்திராதி தேவரும், என்னை எதிர்காணில் இருந்த நிலை கலங்கி எழுந்திருந்து வணங்குவார். ஏன்? தமக்கு எப்பொழுதும் என்னால் உத்தரபாகத்தில் நன்மையுண்டாவதாக விருந்தாலும் பூர்வத்தில் அகோர யுத்தமோ அல்லது வேறு கலகமோ பார்க்கும் படியாக நேரிடுமே என்ற ஏக்கமே யல்லாது வேறில்லை. எனது பிதாவாகிய பிரம்ம தேவன் என்னை சிருஷ்டித்து இவ்வுலகில் துஷ்ட நிக்கிர சிஷ்ட பரிபாலனம் நடத்தும் பொருட்டு அதற்குக் காரண கர்த்தாவாக என்னை நியமித்திருக்கிறார். இல்லாது போனால் எனக்கு நாரதா கலகப்பிரியா என்ற வாக்கியம் எங்கும் நிலைபெறுமா? நிற்க. நான் இன்று இத்தினைப்புனம் பக்கமாக வந்து கொண்டிருக்கும் பொழுது 'சோ'வென்னும் மிருதுவாகிய குரல் எனது யாழின் நரம்பின் இனிமையைப்பின் படுத்தி இரு செவி வழியாகப் புகுந்து என்னைப் பரவசப்படுத்தி இங்கிழுத்துக் கொண்டு வந்து விட்டது. நல்லது. இந்தத் தினைச் சோலையைக் கவனிக்கிறேன். (நாலுபக்கமும் சுற்றிப்பார்த்து) ஆஹா! இதுவென்ன ஜோதி மயமாய் தோன்றுகிறது. ஆச்சரியமாகவன்றோ இருக்கிறது.

இராகம்-தந்யாசி தாளம்-ஆதி

பல்லவி

சுந்தரம் நிறைந்துததும்பும் சிறந்த மங்கையிவள்
எந்தஉல கிங்குயேன் வந்தாள்

அநுபல்லவி

அந்தர மிருந்துதேவர் துந்துபி முழங்க
இந்திரன் வணங்கும் எங்கள் கந்தசாமிக் குத்தகுந்த (சுந்)

சரணம்

வானமதி யானதவ மானமுற் றிவள்முகத்தை
கூனமா யொளிந்து கொண்டதோ-கண்டம்

வந்து சங்கம் நின்றுளம் தளர்ந்து வளர்ந்து ஒதுங்கி
வாரிது நீரில் மறைந்ததோ

நானுரைத்தால் வருந்தாட்சி
நாவடக்கா மலென்மாட்சி
தீனநின்கண் ணுக்குக் காட்சி
திவ்யகிருப கடாட்சி (சுந்)

நல்லது. அருகிற் சென்று இவள் யாரென்றறிந்து நமது கலகத்திற்கு வேண்டிய வழி தேடிக் கொள்வோம்.

(வள்ளியிடம் போகிறார்)

(வள்ளி நாரதமுனிவரைக்கண்டு)

திண்டுக்கல் ஜானகி-என்ற மெட்டு

இராகம்-சங்கராபரணம்

புண்ணியமே உருவாகிய முனியே
புனத்தில் எழுந் தருளும்
பூரண ஆகம விதியாவு மறியும் ஞான
போதா எழுந் தருளும்
அண்ண லானடியை யநுதினம் மறவாத
அன்பே எழுந்தருளும்
ஆசை விருப்பு நீக்கி அருந்தவமேபுரியும்
அய்யா எழுந் தருளும்

வ.ம். சுவாமி! அடியாள் நமஸ்கரிக்கிறேன். தாங்கள் இங்கெழுந்தருள இத்தலமும் யானும் என் முன்னோர்களும் என்ன புண்யம் செய்தோமோ தெரிகிலேன்.

நார. பெண்கள் நாயகமே! உன்னுடைய வரலாற்றைக் கேட்க மிக ஆவலுண்டாகிறது. சொல்லுவாயா?

வள். சுவாமி! தாங்கள் எது கேட்டாலும் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

(தர்க்கம்)

இராகம்-பிலஹரி தாளம்-ஏகதாளம்

நார. எக்குலத்தி லேயுதித்தாய்
இத்தருணத்தில் புகலாய் அம்மா

வள். மிக்க வலி பெற்றிடும்
குறக் குலத் திலே யுதித் தேன் முனியே

நார. அன் புடனே உன்னை யீன்ற
தாய் தந்தை யர் பேர தென்ன அம்மா

வள். அய்யன் நம்பி ராஜன் என்
அன்னை பேர் மோகினி யென் பார் முனியே

நார. அன் புட னுன்னை ஊரார்
அழைக்கும் நாம மென்ன அம்மா

வள். வள்ளியென இவ் வனத்தில்
வாழுவோ ரெல்லா மழைப்பார் முனியே

நார. கிள்ளை மொழி வள்ளி நீ
கேவல மாய்க் காவல் செய்வ தேனோ அம்மா

வள். தள்ள லாமோ எங்கள் குற
ஜாதி வழக்கத் தொழிலை முனியே

வ.ம். சுவாமி! எங்கள் ஜாதியில் பெண்களை தினைப்புனத்தில் காவல் வைப்பது வழக்கம். அதுபோல் என்னை எனது தாய் தந்தையர்கள் நியமித்திருக்கிறார்கள்.

நார. ஓ கோ! மெத்த சந்தோஷம்! அம்மா வள்ளி, இன்னும் உனக்கு விவாகமாகவில்லை போலிருக்கிறதே!

வள். ஆம் சுவாமி! என் தாய் தந்தையர்கள் அது விஷயம் இதுவரையும் கவனிக்கவில்லை. இனிமேற்கொண்டு கவனிப்பார்கள்.

தர்க்கம்

இராகம்-பிலஹரி தாளம். மிச்ரசாபு

நார. பருவ காலத்தை வீணாய்
பாழாக்கி விட லாமோ தாயே

வள். மருவிய விதி தன்னை
மாற்ற எவரா லாகும் முனியே

நார. விதி விதி யென்ப தெல்லாம்
வீண் வார்த்தை யல்ல வோ தாயே

வள். வியென்ப தொன்றில்லா விட்டால்
தெய்வமும் தானேது முனியே

நார. பா லுண்டு பசி யாற
காலம் ஒன்று வேண்டு மோ தாயே

வள். பாலோ டாயினும் கால
மறிந் துண்ண வேண்டு மே முனியே

நார. காலிருந்தும் நடக்கக்
கருதாம லிருப் பாரோ தாயே

வள். காலம் தனக் கிசைந்த
கோல மல்ல வோ வேணும் முனியே

நார. கழுகு மலை முரு கன்
கௌரவம் தெரியுமா தாயே

வள். செழுங் கதிர் வேல வனைத்
தெரிந்து செய்வ தென்ன முனியே

நார. விண் ணாடர் குறை தீர்த்த
வேலா யுத னல்ல வோ தாயே

விருத்தம்

வள். புலியது பசுவின் தோலை போர்த்திமுன் திரிவதைப்போல் வலிபெறு தவவேடத்தை வஞ்சனை யாகக் கொண்டு நலியவும் இதங்கள் பேசி நயமொழி யுரைத்து நின்றீர். பலிபெறும் பிச்சையாண்டிப் பாலனை மணஞ்செய்வேனோ.

வ.ம். சுவாமி! தங்களுக்கு இந்தக் காரியமெல்லா மெதற்கு இல்லறத்தி லுள்ளவர்கள் முயற்சிக்க வேண்டிய காரியத்திற்குத் துறவியாகிய தாம், ஏன் இவ்வளவு சிரம மெடுத்துக்கொள்ள வேண்டும்? அன்றியும் பிச்சைக்காரன் பிள்ளையாகிய முருகனைக் கல்யாணஞ் செய்துகொள்ள என் மனமிசையாது.

நார. அம்மா! எங்கள் ஆறுமுகக் கடவுளின் பெருமையை அறியாத உனக்கு அறிவிக்க வேண்டுமென்றே விஷயம் துணிகிறேன். கவனித்துக் கொள்.

முருகன் திருமால் மருகன் - என்ற வர்ணமெட்டு

சிவசண்முக குருபரன் பெருமை அந்த
தேவாதி தேவர்கள் மூவர்க்குமில்லை (சிவ)

அனுபல்லவி

தவயோகியர் சார்ந்து தினம் பணி
தணிகாசல நகராகிய ஸ்தலமேவிய (சிவ)

சரணம்

சிரசிலே குட்டிப் பிரமனை முன் சிறையிட்டவன்
ஒரு - குற்றமில்லாத சிவனுக்குபதேசம் செய்த குருநாதன்

எட்டுத் திசையும் புகழ்ந்திடு நன்னி தன்
ஏந்திழை யாவர்க ளும்மகிழ் விநோதன்
மட்டிலடாணா ராகப்ரிய சங்கீதன்
மதுரத் தமிழ் முனிவர்க் கருள்
ஒரு சுப்பிர மணியப்பெயர் (சிவ)

வ.ம். தாயே! இவ்வளவு பெருமைக்கிடமாகிய பகவானை நீ மணஞ்செய்து கொள்ளுவதினால் வரும் கெடுதி யாதோ நான் அறிந்திலேன் அம்மா! இனியாவது உண்மை தெளிந்து உத்தமமான மொழியை என் காது குளிர நிரப்பு கேட்கலாம்.

வள். சுவாமி! முருகனுடைய பெருமைகளை நன்றா யெடுத்துச் சொன்னீர்கள். அதுபோல் எங்களுடைய பெருமையும் எடுத்துச் சொல்லுகிறேன் கவனித்துக் கேளுங்கள்.

அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து.

பாளைவாய்க் கமுகில் வந்து-என்ற வர்ணமெட்டு

கண்ணிகள்

மேருவெற்பை யோரசைப்பி னாலசைத்துப் பம்பரம்போல்
மேதினியி லாட்டிநிலை நாட்டுவோம்
எங்கள்-ஜாதிக்குள்ள வித்தையெல்லாங் காட்டுவோம்
அட்டமாசித் திகளெல்லாம் இஷ்டம்போல் செய்து முடிப்போம்
துஷ்டயெம னையும் கையா லாட்டுவோம்
பிரம்ம-சிருஷ்டிக்குமுன் னுள்ளதையும் காட்டுவோம்

முனிநாதரே! மேரு என்று சொல்லக்கூடிய பர்வதத்தைப் பம்பரம்போல் சுற்றும்படி செய்வோம். இன்னும் பிரம்ம சிருஷ்டிக்கு முன் இன்னது இருந்ததென்று எங்கள் ஜாதியில் பிறந்த சின்னக் குட்டிகளும் உள்ளங்கையில் காட்டுவார்கள். மேலும்,

விருத்தம்

அத் தமதில் தலையோடு கொண்டிரந் துண்ணுகின்ற
ஆண்டியான
பித்தன் மகன் பித்தனுக்கு எனைக்கட்டிக்கொடுத்திட
பிரியங்கொண்டு
உத்தமர்போல் நடித்திந்த தினைப்புனம்வந் தேதேதோ
உளறுகின்றீர்
இத்தொழிலை எத்தனைநாளாய்க் கைக்கொண்டீ
ருமதுதகுதியற்கைதானோ.

வம். நாரத முனிவரே! தாங்கள் எவ்வளவு தான் எடுத்துரைத்தாலும் கேவலம் ஆண்டியின் மகனைக் கல்யாணம் செய்து கொள்ள நான் இசையமாட்டேன். அதுவுமன்றி என் தாய் தந்தையர்கள் பார்த்துச் செய்து வைக்க வேண்டிய காரியத்தை தாம் ஏதேதோ என் மனத்திற்குப் பிடிக்க வார்த்தைகளைச் சொல்லி என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள். இனி எனக்குக் கோபமுண்டாகும், பேசாமல் போய் வாரும்.

வெண்பா

நாரத. காட்டில்வாழ் வேட்டுவர் தம் கன்னிகையே பல்வளஞ்சேர்
நாட்டிற் பிறந்தாயேல் நாகரீகம்-வேட்டுவருக்
கென்னசுகம் என்னபலம்
என்னநலம் என்னபுகழ் இங்கு

வ.ம். அம்மா! வேடர்களுடைய செயலைக் கேட்டுமிருக்கிறேன். நேரில் கண்டுமிருக்கிறேன். காட்டில் வாழுவோர் வேட்டையை விரும்புவோர் தானே நன்றாய்த் தெரியும். ஆயிரம் காகங்கள் ஒன்று கூடினாலும் ஒரு கல்லைக்கண்டால், ஒரு காகம் போனயிடம் மறுகாகத்திற்குத் தெரியாமல் எப்படி ஓடுமோ அப்படிப்போல் அநேகம் வேடர்கள் வில், அம்பு, கத்தி, கட்டாரி முதலான ஆயுதங்களோடு பட்டு வந்தாலும் எங்கள் வேலாயுதப் பெருமானை கண்ட மாத்திரத்தில் குதிங்கால் பிட்டத்தில்பட ஓடி ஒளிக்க இடந்தேடவே முயலஹேதுவாகும். ஆதலால் வேடர்களுக்கு என்ன பலம்? என்ன வீரம்? என்ன தொழில்? என்ன குடியிருப்பு? ஆகவே என் வார்த்தையைக் கேட்டு கழுகுமலையில் வீற்றிருக்கும் எம்பெருமான் ஆறுமுகக் கடவுளை நீ திருமணஞ் செய்துகொண்டால் என்னாளும் சுகித்திருக்கலாம். கரும்புதின்னக் கைக்கூலியும் தருகிறேன் என்றால் வேண்டாமென்று சொல்லுவார் உன்னையன்றி ஒருவரையும் நான் காணேன் அம்மா!

தர்க்கம்

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி

நா. சொல்லுமென் வார்த்தை கேளம்மா-தள்ளாதே சும்மா

அநுபல்லவி

அல்லும் பகலுமிந்த அவஸ்தையை விடுத்து
அவனியர் தொழவிருப் பாய்செவி கொடுத்து (சொ)

வள். கைவரிசை செல்லாதுபோம் கற்றுவந்தாலும் (கை)

அநுபல்லவி

பொய்யான தவவேடம் புனைந்துவந் தவரே
பூமியிற் கோள்சொற்கள் புகலும்நா ரதரே (கை)

சரணம்

நா. உனக்காகவே நான் சொன்னேன் ஒகோ இந்தச்சினமேன்
மனக்கவலை கொள்ளாதே மானிலத் தியல்புதான் (சொ)

வள். எனக்குப் பரிந்துகொண்டு இசைக்கவந்ததுபோதும்
இனிப்புனத் தில்நிற்காம லெங்கேனும் போயோதும் (கை)

நா. வேறொரு வருமில்லை மேதினி யிலும்சொந்தம்
ஆறுமுகனைச் சேர்ந்தா லடைவாயே பிர்மானந்தம் (சொ)

வள். கூட்டிக் கொடுப்பதுங்கள் கோத்திரத்தின் முறையோ
ஒட்டமாய்சொல்லவந்தீர் உமக்கென்ன அக்கரையோ (கை)

நா. கூட்டிக்கொடுப்பதெங்கள் கோத்திரத்திலுமில்லை
சீமாட்டியுன்னைக் காட்டி மணமுடிப்பேன் (சொ)

வ.ம். தாயே! அணுவளவேணும் நாகரீகமென்பதை ஞாபகத்திலுங் கொள்ளாத வேடருக்கு மகளாக இருப்பதினாலே ஜாதிக்குத் தகுந்த புத்தியென்னும் பழமொழிக்கு மாறுதலில்லாத விதமாய் மொழிகிறாய் போலிருக்கிறது. ஆனாலும் பரவாயில்லை. இனியேனும் இக்குலாபேக்ஷையை விட்டு, என் மொழிப்படி முருகக்கடவுளை உன் மனத்தில் நாயகனாக அடைய எண்ணுவாய் அம்மணி!

இராகம்-பரசு தாளம்-ஆதி

பல்லவி

வள். திருட்டு நாரத முனியே
தினைப்புனக் குறத்தியென் னிடத்தினிற் பிதற்றுறீர் (திரு)

அநுபல்லவி

உருட்டும் புரட்டுக் கொண்டு மிறட்டுறீ ரடிக்கடி
குறட்டுக் கம்பா லெறியும் முரட்டுஜாதியார் நாங்கள்
கொஞ்சு வேனா கந்தனைக் கொஞ்சுவேனா
சும்மா பஞ்சப் பாடலைப்பாடுகிறீர் (திரு)

வ.ம். நாரத முனிவரே! வீணாக எனக்குக் கோபத்தை மூட்டாதீர்கள். இதுவரை பெரியோர்களை நிந்தித்துப் பேசுவது கூடாது எனப் பொறுத்திருந்தேன். இனிமேலும், தங்கள் வார்த்தையைக் கேட்டு மனம் சகிக்கமாட்டேன். மரியாதையாகப் போங்கள். சகி வாடி நாம் போவோம்.

இராகம்-பரசு தாளம்-ஆதி

பல்லவி

நா. அறிவில்லா சிறு குறத்தி நான்
அடிக்கடி யுரைப்பதை தடுத்தவ மதிக்கிறாய்

அநுபல்லவி

நெறியுட னேநான் சொல்லும் நீதி தனை
எறிவேல்புன் நுழைந்தாப்போ லிசைத்தாய் காது கேளாமல்
இது தகுமா ஞாய வழி யாகுமா கேட்க
ஏனுனக்கு ஞான மில்லை (அறி)

வ.ம். நான் உனக்கு உபகாரத்தின் பொருட்டு வேண்டிய நீதிகளை எடுத்துச் சொல்லியும் அவைகளையெல்லாம் நன்மையென எண்ணாமல் வெந்த புண்ணில் வேலெறிவது போலக் கொடுமையான மொழிகளைச் சொல்லுகிறாய். இது சரியல்ல. என் வார்த்தையைக் கேள். நான் இங்குவந்து உன்னைப் பார்த்தபொழுதே உனக்குத் தகுந்த மணவாளன் அந்தக் கழுகுமாமலை வேலனெனத் தீர்மானம் செய்து விட்டேன். ஆகையால் எவ்விதத்திலும் அன்னவருக்கே உன்னை மாலை சூட்டி என் கண்களால் தரிசிப்பேன். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்! போய் வருகிறேன்.

காட்சி - 7

திருக் கழுகாசலம்

அயில்வேலன் மயில் மீதமர்ந்திருக் கிறார்

நாரதர் வருகிறார்

விருத்தம்

சுப். அன்னையே யென்ற னப்பனே திருச்சிற்
றம்பலத் தமுதனேயென நான்

உன்னையே கருதி யுன்பணி புரிந்திங் குலகிலே
கருணை யென்பது தான்
என்னையே நிலையா யிருந்துளம் வருந்தி
யிருக்கின்றே னென்றுள மெலியும்
மன்னுமென் வுடம்பின் மெலிவுநா னிருக்கும்
வண்ணமும் திருவுள மறியும் (திருவருட்பா)

'மயிலேறியே வருவாய்' -என்ற மெட்டு

இராகம்-தோடி தாளம்-ரூபகம்

பல்லவி

நாரர.	ஞான	தேசிகா - மெய்
	நலமாகவே	அயில்வேலையும்
	பலமாகவே	வேரூன்றிய (ஞா)

அநுபல்லவி

காலைவேளை	யெழுந்துஓடி
கானில்வந்து	நின்றேன்பாடி
சோலைநிறை	யோரம் ஓடி
கண்டேன்கனி	யொன்றைநாடி
கலகலவென	ஒலிஇசையுடன்
பலமுடனதை	பருகுவாய்ரசம் (ஞா)

நாரர. அறுமுகனே! அடிபணிந்தேன்.

சுப். நாரதமுனிவரே!

பாட்டு

திண்டுக்கல் ஜானகி - என்ற மெட்டு

எங்கெங்கு சென்றீர் ஏதேது கண்டீர்
எந்தனுக் கெடுத்துரைப்பீர்
அங்கங்கு நடந்த அதிசயம் யாவையும்
அன்பாய் எடுத்துரைப்பீர் தவ நாரத முனியே (எங்)

வ.ம் நாரத முனிவரே! தாம் இப்பொழுது எங்கிருந்து வருகின்றீர்? ஏதோ முகமானது மலர்ச்சியுடையதாய்க் காணப்படுகிறதே! என்ன விசேடம்?

நாரர. எம் பெருமானே! நான் திரிலோகமும் சென்று மும்மூர்த்தி களைத் தம்பதி சமேதராகக் கண்டானந்தங் கொண்டு இப்பூலோகத்திற் சித்தூர் என்னும் வனமார்க்கமாக வந்து

கொண்டிருக்கும் பொழுது கதிர் முதிருந் தருணத்திலிருக்கும் தினைச் சோலை மத்தியில் ஒரு கனியைக் கண்டு வந்தேன். அக்கனியானது,

வெண்பா

மாங்கனிக்கும் தேன்கதலி வண்கனிக்கும் மேலினிக்கும்
பூங்கனியைக் கண்டுமனம் பூரித்தேன் - நான்கனிந்தேன்
ஐயா முருகையா அக்கனியை இக்கணமே
கொய்யாமற் கொய் தணைத்துக்கொள்.

சுப். நாரதமுனிவரே! தாம் கனியென்று சொல்லியதைக்கேட்க என் மனத்திற்கு அதிக ஆவலை உண்டுபண்ணுகிறது. ஆகையால் நீர்

தர்க்கம்

இராகம்-அடாணா தாளம்-ரூபகம்

சுப். மாக்கத்திற் கண்ட கனிதனக் குற்ற
சிலாக்கிய மென்ன முனியே

நாரத. அதை நோக்கும் பொழுதே புலன்களுக் கெல்லாம்
சுவைதருந் தீங் கனியே

சுப். பக்ஷிகள் கண்டால் இந் நேர மதைப்பற்றி
பக்ஷித்தி டாதோ சொல்வீர்

நாரத. பக்ஷிகள் கண்டால் பறந்தோடும் ஆகையால்
பக்ஷமுடன் செல்லுவீர்

சுப். எட்டாத கொம்பி லிருக்கும் கனியை
எப்படிக் கொய்திட லாம்

நாரத. எட்டும்படிக்கிரு கொம்புண் டதைப்பற்றி
ஏறிப் பறித்திட லாம்

சுப். மிக்க மேன்மையுள்ள அக்கனிக் கெவ்விதம்
மேவுங் குறிக ளுண்டு

நாரத. குளிர்ந்த முகமுண்டு கொங்கை யிரண்டுண்டு
கோதில்லாக் கண்களுண்டு

சுப். பெண்களுக் குள்ள குறிக ளிருப்பதால்
பேசுமோ வாய் திறந்து

நாரத. ராகப் பண்களுக் கெல்லாம் சுவைதரு மேஅந்தப்
பைங்கிளி வாய் திறந்தால்

தர்க்கம்

இராகம்-பியாக் தாளம்-ஆதி

சுப். நீர்சொன்ன வார்த்தையால் நேரிழை யாமென
நிச்சய மாகவே நான் தெரிந்தேன்
சீர்பெரு மாதவ ரே அந்த மாதெவள்
செப்புவீ ரறிந்திட வே நினைந்தேன்

நாரா. வனத்தொரு புறத்தினில் தினைப்புன மொன்றுண்டு
மங்கை யவளைநா னங்கு கண்டேன்
கனத்துப் புடைத்ததனக் குறக்குலப் பெண்ணவள்
கவண்கண்டு மிகஅதி சயங் கொண்டேன்

சுப். பேரழ குடையவ ளெனப் புகழ்ந் தீரவள்
பேரென்ன இப்பொழு தே புகல்வீர்
தாரணி மீதினில் யார்செய்த மாதவத்
தால்வந்த வளதை யும் புகல்வீர்

நாரா. வள்ளிக் கிழங்கு பறித்த குழி தன்னில்
வந்தவள் வள்ளியெ னும் பெய ராள் - நீர்
கொள்ளத் தகுந்த நல் லியலுடையாள் இந்தக்
குவலயத் திற்றனக் கிணை கிடையாள்

வ.ம். சுவாமி! அவளுடைய அழகை எடுத்துச்சொல்ல என்னால் முடியாது. தாங்கள் தாமதிக்காமல் வேள்வி மலைச் சாரல் இருக்கும் தினைப்புனத்திற்குப் போய் எப்படியாவது தந்திரஞ் செய்து அந்தக் குறமாதைக் கைப்பற்றி வந்தால்தான் வீரமும், புகழும், மேன்மையும், கீர்த்திப்பிரதாபமும் பெற்றவராவீர்கள். அவளைச் சாமான்யமாக எண்ணிவிடக் கூடாது. எளிதில் தங்கள் கையில் அகப்படமாட்டாள். தங்களுக்காக நான் வேண்டிய கோகர்ணம், கெஜகங்கணம் வைத்துப் பார்த்துவிட்டேன். எனது இந்திராஜலமெல்லாம் எள்ளளவும் பயன்படாது போய்விட்டது. இது விஷயத்தில் தான் தெரிய வேணும். தாங்கள் சாமர்த்தியங்கள்.

சுப். நாரதமுனிவரே! இதோ புறப்பட்டுப் போகிறேன். நீர் சென்று வாரும்.

தினைப்புனம்

காட்சி - 8

சுப்பிரமணியர் வேட ரூபத்தோடு வருதல்

இராகம்-வசந்தா தாளம்-ஆதி

பல்லவி

சுப். தினைப்புன மென்பது இதுதானோ-தவ
சீல மிகு நாரதர் சொன்ன (தினை)

அநுபல்லவி

வனப்பையுற் றடைந்தவர் கண்களைக் கவரும்
வானுற வோங்கி வளம்பெற வளரும்நல் (தினை)

சரணம்

பற்பல ஜாதிப் பறவைகள் யாவும்
பண்புடன் வாழ்ந்திட வந்திங்குமேவும்
அற்புத னாமந்த அமரர்கள் கோவும்
ஆயிரங் கண்களாலுங் கண்டவாவும் நல் (தினை)

வ.ம். எந்தச் சமயம் நாரதர் வந்து தினைப்புனம் காவல் புரியும் வள்ளிப் பெண்மயிலின் ரூபத்தின் பெருமையைப் புகழ்ந்து பேசினாரோ, அதுமுதல், என்மனம் கலங்கி நிலைதவறி, செயல் மறந்து, இந்த இடந்தேடி நான் வருவதற்கு முன்னாலேயே என் கட்டிற்கடங்காத மனமானது வலிய இங்கோடி வந்துவிட்டது. சத்தமொன்றுங் கேட்கவில்லையே! நல்லது கவனிப்போம். (சுற்றிப்பார்த்து)

விருத்தம்

சுப். ஆலோல மென்று குரல் காட்டி வீசும்
இந்த அரும்புனத்தே
சேலோடும் கண்ணைத் தினை மீது வைத்த
சிங்காரி தன்னைக்
காலோடு கால் சேர்த்தனு ராகபோகக்
கலவி செய்தால்
பாலோடு சேர்ந்த பழம் போல்
தித்திக்கும் பழுதில்லையே

வ.ம். நாரதமுனிவர் கூறிய வள்ளியென்னும் பெண்மயிலாள் இவளே! சந்தேகமில்லை. மலைநாட்டில் பிறந்தவளாகையால் இவள் முன்னே மற்றக் கோலம் பூண்டு போவதிலும் வேடனாக உருமாறிப் போவது நலமென்றெண்ணி இந்த ரூபத்துடன் வந்திருக்கிறேன். நல்லது ஒரு காரணம் வைத்துக் கொண்டு செல்கிறேன். யார் நம்மைத் தெரிந்தழைக்கப் போகிறார்கள்?

காட்சி - 9

(பாட்டு தர்க்கம்)

இராகம்-கமாஸ் தாளம்-சாப்பு தாளம்

கண்ணிகள்

சுப். வலைதப்பி யேகுற மான்களே - இங்கு
மான்வரக் காணீரோ நீங்களே
சிலை தப்பி எந்தனின் கைக் கணை தப்பியே
சித்த மயக்கங் கொள்ள தத்தித் தத்தி என்றன் (வலை)

சகி. ஆர்காணும் நீர் சிலை வேடரே-மானை
யார் புனத்தில் வந்து தேடுறீர்
நீர்கண்ட மானுக்கு காலுண்டோ கையுண்டோ
நேருக்கு நேராக நீரும் மொழிவதுண்டா (ஆர்)

சுப். வள்ளி மானே இவ் வழி யாகவே-ஒரு
புள்ளிமான் வரக் கண்டதுண்டோ
உள்ளபடி எந்த னுள்ளங் கவர்ந்ததால்
மெள்ளப் பிடித்துக்கைக் கொள்ள யிங்கு வந்தேன் (வள்)

சகி. அத்தை மகன்போல்வாய் போக்குறீர்-சும்மா
ஆள் நோட்டம் பாராமல் ஏய்க்குறீர்
எத்துக் கள்ளாகாமப் பித்துக்கள்ளா சுத்த
வித்தைக் கள்ளா மெத்தக் கற்ற கள்ளா போம் போம் (ஆர்)

சுப். பெண்காள்! பயப்படாதீர்கள். என் கை அம்பின் குறிப்பைத் தவறி ஒரு மான் இந்தப்புனத்தில் வந்து புகுந்தது. அதைத்தேடி வந்தேன். நீங்கள் கண்டிருந்தால் சொல்லுங்கள்.

வள். ஐயா வேடரே! நான் சொல்லுவதைக் கவனியுங்கள்.

விருத்தம்

வள். ஒரு மானைத் தேடிப் படர் கானகத்தில் உளகளந்த
பெருமானடைந்த வினையறியமாற் பெடைமடமான்
தருமானிரண்டு விழி மானுலாவுமித் தினைப்புனத்தில்
வொருமானைத் தேடியலைவதென்னே மதிமன்னவனே.

வ.ம். வேடரே! மானைத் தேடிக்கொண்டு வனமெல்லாம் திரிந்தொருவர் அவஸ்தைப் பட்டாரென்பதைக் கேள்விப் பட்டிருக்க வில்லையா! ஆயினும் பரவாயில்லை. நீர் தேடிவந்த மானுக்கு ஏதாவது அடையாளமுண்டோ! சொல்லும்?

சுப். பெண்கள் நாயகமே! நான் தேடிவந்த மானின் அடையாளங்களைத் தெரிவிக்கிறேன் கவனித்துக்கொள்.

விருத்தம்

இராகம். பைரவி

பைர. காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையேபுல்
மேயாதமான் புள்ளிமேவாதமான் நல்லஜாதிமான்
மேவும் கானகமடைந்து நறு
சந்தனமும் புனுகும் கமழும்
களபங்களணிந்து சுணங்கு படர்ந்த (மேயாத)
தேனும் பாகும் தினை மாவும்
தின்பதல்லால் ஒரு புல் ஒருபோதும் (மேயாத)
கானக் குறவர் கண்மணி என வளர்
கானக் குயிலை நிகர் குரலுடையது (மேயாத)
மின்னலே வெட்கி மறைந்திடும் தன்மையில்
பொன்னிறம் கொண்டு புனம் திரி மான் - புல் (மேயாத)

இராகம். காப்பி

சாயாத கொம்பிரண் டிருந்தாலும் தலை நிமிர்ந்து
பாயாதமான் அம்மானைத் தேடிவந்தேன் ஆரணங்கே

வ.ம். பெண்ணே! தெரிந்துகொண்டனையா? இன்னும் வேண்டியதைக் கேள் தெரிவிக்கிறேன்.

விருத்தம்

வள். எந்தமானிடவேடர் நீர்காண் வேட்டைக்
கேற்றமான் மலையிலுண்டு இம்மான் நம்பி
தந்தமான் உமது வலைக்கு அகப்படாமான்
சவுரியமான் தைரியமான் ஜாதிமான் நான்
அந்தமான் மகனனங்கன் தனக் காற்றாமல்
ஆண்பிள்ளை ஒரு பெண்பிள்ளையிடம் வந்து அபயம் போட்டு
சொந்த அம்மான் மகன்போ லேதேதோ சொல்லுகிறீரென்
தோழியை விட்டினி அடித்துத் துரத்துவேனே

வ.ம். ஏ வேடா! என்னை ஏமாற்றலாமென நினைத்து மானைத் தேடி வந்ததாக வழக்கு வைத்துக் கொண்டு வாயில் வந்ததை யெல்லாம் பிதற்றுகிறாய். இம்மான் நம்பிராஜனுடைய மான். ஸ்தைரியமிஞ்சிய மான். ஆகையால் இந்தத் தினைப்புனத்தை விட்டு சீக்கிரம் போய்விடு. இல்லாது போனால் என் தோழிகளை விட்டு நையப்புடைத்து அனுப்புவேன் ஜாக்கிரதை!

சுப். பெண்ணே! உன்னை என் கண்ணால் பார்த்த பிறகு கவனிக்காமல் சென்றால் மன்மத துரோகியாவேன் ஆகையால்,

----

(பாட்டு தர்க்கம்)

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஏகதாளம்

சுப். மானைப்பிடியே வனக்கிள்ளையே!
மடமாமயிலே! குயிலே!

வள். மான்பிடிக் கிள்ளை வனக்குயி லிங்கே
வரக்காணோம் போங்காணும் வேடரே

சுப். தேனே செந்தேனில் தெளிரசமே யெங்கும்
தித்திக்கும் மாங்கனியே

வள். தேனுங் கனியும் தினைப்புனத் துண்டோ
திருட்டுத் தனமேன் வேடரே

சுப். செந்திருவே வால சுந்தரியே நல்ல
தேவ ரம்பை ஸ்திரீயே

வள். செந்திரு சுந்தரி ரம்பை நானல்ல
தினைப்புனங் காப்பவள் வேடரே

சுப். ஆணிப்பொன்னே முழு மாணிக்கமே விலை
யற்ற நவ ரத்தினமே

வள். ஆணிப்பொன் மாணிக்க ரத்தின மானதோ
ராள்போ லிருக்குமோ வேடரே

வ.ம். ஏ வேடா! நீ கெட்ட எண்ணத்துடன் இங்கு வந்து ஏதோ தாருமாறான மொழிகளைச் சொல்லி நிற்கிறாய். இது உனக்குத் தகாது. உன் மானம் அழிந்துபோக நேரிடும். சீக்கிரம் இந்த இடத்தைவிட்டு அகன்று போய்விடு.

விருத்தம்

சுப். ஈடோட நின்றமணி மயமாக இழைத்த குழை
தோடோ டிலங்கிய சுந்தரியே தொலையாத யெந்தன்
பாடேதும் உந்தன் செவிக்கேற்க நான்படும் பாடறிந்தும்
ஓடோ டெனப் புகல்வ தேற்குமோ மட மானே.

பாட்டு

இராகம்-பூரிகல்யாணி தாளம்-ரூபகதாளம்

பல்லவி

சுப். சித்ரமா மயிலே எழில் கலப (சி)

மகுடங்கள்

மிகு-திவ்யகானரச மேவு பூங்குயிலே (சி)
சேர நாடி மோக மாகி னே னடி (சி)
தினமு மருவ உருகி வாடி னே னடி (சி)
சித்த மயக்க மிகுத் தது கலவி புரி யடி (சி)
சிவனொடு சமர் புரிந்த மதனன்
விடுகணைபட மெலிகுறேனடி (சி)

சரணம்

நித்த முன்னை மற வேனுண்மை கேளடி
நேசஞ் செய்ய இது வேனல்ல நாளடி
உத்தமியேநா னுனக் கென்று மாளடி
உறுதி யாகச் சொன் னேன்
உணர்ச்சி கொண்டு நீ புணர்ச்சி செய்திட (சி)

வ.ம். பெண்ணே! நான் சொல்வதைச் சற்று கவனி. நாமிருவரும் அனுதினம் இரதியும் மதனும் போலவும், மலரும் மணமும் போலவும், மானும் கலையும் போலவும், மாடப் புறாவைப் போலவும் கூடிக்கூலாவி மதனாவேசம் கொண்டு புளகிக்க நித்திய போகத்தை அனுபவிக்கலாம். புறப்படு, தாமதிக்காதே!

விருத்தம்

வள். படுக்காளி நீயாரோ பித்துக்கொள்ளி யென்று
பார்த்திருந்தேன்
கொடுக்காலே கொட்டாத தேள்தனைப் பூச்சியென்று
கொள்வார் போன்றாய்
துடுக்கான சேடிமார்கள் உன்னையினி விடமாட்டார்
சொன்னேன்
தடுக்காமல் என்மொழியை மறுஜெனன மென்று எண்ணி
செல்வையே

வ.ம். ஏ வேடா! இதுவரை ஏதோ உளறுகிறாய் என்று பொறுத்திருந்தேன். நீ அதை யோசிக்காமல் கொட்டினால் தேள் கொட்டாது போனால் பிள்ளைப்பூச்சி யென்று எண்ணுவது

போல் எண்ணிவிட்டாய். என் சேடிகளும் சேவகனும் பொல்லாதவர்கள். அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்வேனாகில் உன்னைப் பஞ்சுப் பொதியில் நெருப்பு வைத்துக் கொளுத்துவதுபோல் செய்துவிடுவார்கள். உடனே இதை விட்டகன்று போய்விடு நிற்காதே!

பாட்டு தர்க்கம்

மந்தகாசமுக-என்ற மெட்டு

சுப். பூரணச் சந்த்ரிகை போதி துல்லாசமாய்
புணர வருவாயடி மாதரசே

வள். சார மில்லாத வீண்மொழி யாடுதல்
சம்மத மில்லையென் றறிவாயடா

சுப். ஏன் சம்மதமில்லை எனக்குரைப் பாயதை
இந்தப் பருவம் வீண் போகலாமா

வள். நான்சற்று முன்மனம் போலெண்ணி நிற்கிலேன்
நாட்ட மறிந்துநீ யழைக்கலாமா

சுப். நாட்ட மறியினும் வாட்டுறான் மாரனும்
நாயகி யாளே மருவ வாடி

வள். சேட்டை மொழிகளை செப்புவ தாலினி
சீச்சீ அற்பன் செயலிது வாகுமே.

விருத்தம்

சுப். சோலைநற் கிளியே உந்தன் சொற்படி நடப்பேன் இட்ட வேலை ஊழியங்கள் செய்வேன் வேறொரு விஷயம் சொல்லேன் லீலை செய்தணைந்து போக நிலைதனில் நிற்பேன் என்னை மாலையிட்டணை வாய் காலை மனதினால் பிடித்தேன் மானே.

பாட்டு

வந்தவேளை யிதுநல்லவேளை-என்ற மெட்டு

சுப். மாதே உன்னை யின்று கண்ட போதே மிக
மையல் மீறுதடி என்ன செய்வேன்
ஐயையோ நானெவ் விதத்தினி லுய்வேன் உந்தன்

சையோகம் நேர்ந்தால் மனமகிழ்வேன்
பாவி அந்த சிலை மாரன் விடுங் கொடும்
பாணங்கள் தைத்தென்னை வாட்டுதடி-மனம்
நாணம் ஒளித்தாசை மூட்டு தடி - உன்னைக்
காணும் போதே குளி ராட்டு தடி
ஏந்திழை யே உன்னைச் சேராம லேசெல்ல
எந்தன் மனம்சம்ம திக்குதில்லை-அடி
உந்தனா லிப்போது வந்த தொல்லை-இதிற்
சந்தேகம் வேண்டாம்நம் பெந்தன் சொல்லை-(மா)

வ.ம். பெண்ணே! உனக்குக் கருணையில்லாமல் போனால் உன் கையால் என்னைக் கொன்றுவிடு. அந்தப் பாவி உருவிலிகையில் காட்டிக் கொடுக்காதே! அவனது பூங்கணைகள் என் மார்பில் தாக்கி உயிர் வதைத்து சித்ரவதை செய்கிறது. கோடி வந்தனம் செய்கிறேன். புண்ணியமுண்டு. நானும் உனக்குத் துணையாக இருந்து பறவைகளை ஓட்டுகிறேன். மனமிரங்குவாயடி கண்ணே! ஒரு முத்தங்கொடு!

பாட்டு

கண்ணாயிரம் படைத்த* - காவடிச்சிந்து

வள். துஷ்டா நீ என்னசொல்ல லுற்றாய் ஞாயமுமல்ல
தொடுகயிற்றைக்கொடு எமனு முனைப்பிடிப் பானடா-மிகு
துயரம துற்றிடச் சதைசதை யைப்பொடிப் பானடா
கத்தாதே கழுதைபோல் அத்தானோ அவனிமேல்
கலவிசெ யச்சொல்லி யருகிலழைத்திடு மூடனே-நீதி
கருகி விடுத்தினி நடடா மடத்தன வேடனே
குற்றேவ லுக்குரிய முட்டாள் லீலைபுரிய
குவலய முற்றிலும் அவமதியைச்சொலு மேயடா-உன்
குலமும் நசித்திடும் எனை நீ விடுத்தகல் வாயடா

வம். அடடே படுபாவி! என் தந்தை அண்ணன்மார்கள் நீ சொல்லிய வார்த்தைகளைக் கேட்டால், உன் மண்டையை இரு பிளவாக்கி, நாய் நரி முதலானவைகளுக்கு இரையாக்கிவிடுவார்கள். அறிவில்லாதவனே! உனக்கு கெட்டகாலம் கிட்டிக்கொண்டது போலிருக்கிறது. அதனால்தான் என்னிடத்தில் இவ்வித

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து.

அசம்பாவிதமான மொழிகளை விடுத்து நிற்கிறாய். மதியற்ற வேடனே! இனியேனும் இவ்விடத்தை விட்டு அகன்று போய்விடு!

விருத்தம்

சுப். கைத்தலந் தனிலே வந்த கட்டிமாம் பழமே தேனே
சித்திரப் பதுமா யுந்தன் திருமேனி தன்னைச் சேர
எத்தனை துயரம் துன்பம் எனக்கு வந்தாலும் உன்னை
முத்தமிட் டணைத்து கூடிச் சுகிக்காது விடுவேனோ

பாட்டு

அருமா மறையோர்-என்ற மெட்டு

மயிலே எனை நீ மருவா விடிலோ
மதனார் கணையா லுயி ரழிவேன்
அதனா லிதுவே ளையினி எனையே
அணைவா யெனில் நான் மிகவே மகிழ்வேன் (மயி)

அங்கம் நொந்து வருந்துகின்றது
அண்டி வந்து சுகங்கொடடி
அடமேன் விடுவா யிதமே மொழிவாய்
அழகார் முகமா மதி மாதரசே (மயி)

விருத்தம்

வள். கள்ளுண்டு வெறியைக்கொண்ட கானவர் கையிற் சூலம்
முள்ளுண்டு ஈட்டியுண்டு முனையம்பு முண்டு நெஞ்சத்
துள்ளுண்டு கோபம்வந்திங் குனைக்கண்டால் சகியார் சென்னி
தள்ளுண்டு விழத்தரிப்பார் சாற்றினேன் ஓடிப்போடா

வ.ம். அடே சண்டாளா! என் அண்ணன்மார்கள் வருகிற சப்தங் கேட்கிறது. அவர்கள் கையில் ஈட்டி, பாலா, சூலம், கத்தி, கட்டாரிகளெல்லாம் தயாராக வைத்துக் கொண்டிருப்பார்கள். நீ அவர்கள் கையில் அகப்பட்டாயோ உன் சிரசைக் கொய்து விடுவார்கள். ஓடிப்போய்விடு, அதோ வருகிறார்கள் பார்!

சுப். (தனிமொழி) இவளுடைய இனத்தார்கள் வருகிறார்கள். இந்தச் சமயம் நம்முடைய பலத்தைக் காட்டுவது அழகல்ல. அதற்குக் காலம் வரும். இப்போது ஒரு அற்புத லீலை காட்டுவோம்! (வேங்கைமரமாகிறார்)

(வள்ளியின் அண்ணன்மார்கள் வருகிறார்கள்)

நம். குழந்தாய் வள்ளி! சௌக்கியமாக இருக்கிறீர்களா? சந்தோஷமாகத்தானே இரு. அம்மா இந்தப் பயிர்கள் இன்னும் ஒரு வாரத்தில் முதிர்ந்து பக்குவமாய்விடும். (வேங்கை மரத்தைப் பார்த்து) ஆஹா! என்ன ஆச்சரியம்! இந்த இடத்தில் மரம் எப்படி உண்டானது? இதனால் தினைப் பயிர்கள் சேதமடையுமோ இதை வெட்டிவிட வேண்டும். அடே! இங்கேவா!(கவுளி சப்தத்தைக்கேட்டு) இதென்ன அதிசயமாக இருக்கிறது! குழந்தாய் வள்ளி! இந்தக் கவுளி சொல்லியதை நினைக்க இந்த மரத்தை வெட்டக்கூடாது. ஏனென்றால் நம்முடைய குலதெய்வத்தின்அருளால் உண்டானது போலிருக்கிறது. நல்லது குழந்தாய், நாங்கள் அடுத்த காட்டில் வேட்டையாடப் போகவேண்டும். நீ சந்தோஷமாக இரு.

(போகிறார்கள்)

(வேங்கைமரமாகி நின்றவர் வேடரூபத்துடன் வந்து)

(பாட்டு தர்க்கம்)

இராகம்-பிலஹரி தாளம்-ஆதி தாளம்

பல்லவி

சுப். ஆய லோட்டும் பெண்ணே அடி (ஆய)

அநுபல்லவி

ஆவியே என் னாருயிர்சஞ் சீவியே மன்மத னென்னும்
பாவியே மலர்க்கணைகள் தூவியே வாட்டுறான் வாராய் (ஆய)

பல்லவி

வள். மாய வேடா போடா அடா (மா)

அநுபல்லவி

மங்கையென்னிடத்தில் வந்து சங்கையில்லாவார்த்தைகளை
இங்கித மாகவேபேசி இங்குநிற்க லாகுமோடோ (மா)

பல்லவி

சுப். பாயுந் தென்ற லாலே அட (பா)

அநுபல்லவி

பாங்கியே சித்தஜன் கணை ஓங்கியே தைத்த தால்மன
மேங்கியே வாடி னேன் மோக னாங்கியே யெந்தனைக்காராய்(பா)

வ.ம். அடி மாதர் குலதிலகமே! எங்கேயோ பயந்து ஓடி விட்டான் என்று நினைத்தாயோ. கண்ணே! நான் இதைவிட்டுச் சென்றால் அங்கஜன் வளைத்துக்கொள்ளுகிறான். ஆகையால் பெண்ணே!

பாட்டு

இராகம். ஹமீர் கல்யாணி

எந்த வூரோ-என்ற வர்ணமெட்டு

சுப். ஆசை யுன்மேல் நான்கொண்டிட நீவெறுக்க லாமா
அஞ்சுகமே வஞ்சகம் செய் தால்எளிதில் போமா

வள். காம மோக மேனுனக்கு நீயடைவாய் கேடு
கல்யாணஞ் செய்ய எண்ணுதல் நல்லதல்ல ஓடு

சுப். ஓடுவதற் காகவாநா னுன்னைத் தேடி வந்தேன்
உத்தமியே மாரன்விடும் வாளியினால் நொந்தேன்

வள். மாரன்வாளி யால்மயங்கி மாதராசைகொண்டு
வார்த்தைபேசு வதினாலே ஏதுலாப முண்டு

வ.ம். அடே துஷ்டா! இதுநேரம் வரை எங்கேயோ ஒளித்துக் கொண்டிருந்து இப்போது வெளிப்பட்டாய்! என் தந்தை பார்த்தால் உன் கதி எப்படி முடிந்திருக்கும்? ஏண்டா மறுபடியும் திரும்பிவந்து வீணான வார்த்தைகளைச் சொல்லுகிறாய்? உனக்கு மான அவமானம் கொஞ்சம் கூட இல்லை போலிருக்கிறதே!

பாட்டு

இந்தக் கோபமேனடி-என்ற மெட்டு*

இராகம். தோடி தாளம்-ஆதி

பல்லவி

சுப். வேல்விழி மாதரசே - உனை
வேண்டி நின்றுங்கோபம் ஏண்டி கொண்டாய் பாபம்(வேல்)

அநுபல்லவி

ஆல்மிசை தாங்கும் அரிமகன் வில்லேந்தி
அஞ்சுமல ரம்புவிட நெஞ்சுதுளை யுண்டதடி
பெண்கள் தொழில் வஞ்சமிலை அம்புபுரி கஞ்சமுக (வேல்)

ஒத்துக்கு மத்தளம்போல் தென்றலுங் கூடி
உள்ளேபுகுந்தென்னுயி ருண்ணலா மோடி
பித்துக்கு மாறாய் மருந்து மில்லை யோடி(வேல்)

* நாடகம் : கோவலன் சரித்திரம்

வ.ம். பெண்ணே! உன்னை அடைவதைப் பார்க்கிலும் இந்த ஜீவனைப் பெரிதாக நினைக்கமாட்டேன். மான அவமானம் கவனிக்க மாட்டேன். முறையாக நீ என் மனம்போல் இணங்காவிடில் மேல் காரியம் நடக்கும். கண்ணே மனமிரங்குவாய்.

தர்க்கம்

இராகம்-எதுலகாம்போதி-ரூபகதாளம்

சுப். அன்னமே ஓ செழுந் தேனே
உன்னாசையா லிங்கு வந்தேனே
அம்புவி மாதே வம்பு செய் யாதே
அணங்கன் தானே சினங்கொண் டானே
ஆகையால் நானே மோகங் கொண் டேனே
அடியே கொடியே மருவிட (அன்)

வள். இன்னமும் ரோஷமில்லையா எங்கேயாகிலு சொல்லையா
ஈனமூடா கானவேடா ஏழ்மை போலே தோழி மாராலே
ஏகியும்போகா தோழியே நீ தான் எத்தா பித்தா சரியல (இன்)

வ.ம். அடேவேடா! அதோ! எனது தந்தை முதலானவர்கள் வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள். நீ மரியாதையாகப் போகிறாயா அல்லது அவர்களை அழைத்துவரச் சொல்லட்டுமா?

சுப். பெண்ணே! வருத்தப்படாதே! நான் போய் வருகிறேன். (தனிமொழி) இவள் முன்னே பஞ்சை போல் சுற்றிச் சுற்றி வந்து மட்டு மிஞ்சி கெஞ்சியும், ஒரே சாதனையாகப் பேசிவிட்டாள் என்ன செய்வது? நாரதரோ நம்மைப் பெருமையாக நினைத்து இவளிடம் சபதம் செய்து வந்துவிட்டார். நல்லது சமீபத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கும் நம்பிராஜனிடம் செல்வோம்.

(வேடனாக நின்ற முருகன் இவ்வுருவை மாற்றி கிழட்டு வுருவெடுத்துக் கொண்டு மீண்டும் நம்பிராஜனிடம் செல்லுகிறான்)

காட்சி - 10

மரம் நிறைந்த பொழில்

நம்பிராஜனும் புத்திரர்களும் அமர்ந்திருக்கிறார்கள்

புத். பிதா! சமீபத்தில் யாரோ ஒரு வயது சென்ற கிழவர் வருகிறார் போல் தெரிகிறது.

நம். புத்திரர்களே! அழைத்துக் கொண்டு வாருங்கள்.

(தள்ளாடிய கிழவர் வந்துவிட்டார்)

நம். சுவாமி! நமஸ்காரம். இவ்வளவு முதிர்ந்த காலத்தில் இந்த வழிவந்த காரணம் யாது? அடியேனுக்குத் தெரிவிப்பீர்.

கிழ. அப்பா! நீ மங்களமாக இருக்கவேண்டும். நான் காசியிலிருந்து வருகிறேன். தற்சமயம் கன்னியாகுமரிக்குப் போய்த் தீர்த்த மாட வேண்டும். வழிதெரியாததால் திகைத்து நிற்கிறேன். இதுதான் எனது சவிஸ்தாரம். தளர்ந்த வயதானதால் எனக்குத் தாகமும், பசியும் அதிகரிக்கின்றன. என்ன செய்யப் போகிறேனோ தெரியவில்லை.

நம். சுவாமி! கவலைப்படவேண்டாம். சமீபத்திலுள்ள ஒரு வனத்தில் எனது புத்திரியாகிய வள்ளி என்னும் ஒரு பெண், பறவை விரட்டி விளையாடிக் கொண்டிருக்கிறாள். தங்களை அவளிடம் ஒப்புவித்து தங்களுக்கு வேண்டிய உணவு முதலியவைகளைத் தரும்படி செய்யலாமென்று எண்ணுகிறேன். தங்களிஷ்டம் யாதோ?

கிழ. உன்னிஷ்டப்படியே செய்து முடிப்பாய். இதுமுதல் உன் குடும்பம் தழைத்தேற ஆசிர்வதித்தேன்.

நம். புத்திரர்களே! வாருங்கள் போகலாம். சுவாமி எழுந்தருளும், (கிழவன் கோலை ஊன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடக்கிறார்)

காட்சி - 11

தினைப்புனம்

(வள்ளி பரண் மீதிலமர்ந்திருக்கிறாள்)

நம். வள்ளிக்கொடியே! இப்பெரியவரை வணங்கி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்.

வள். சுவாமி! நமஸ்கரிக்கிறேன்.

கிழ. வள்ளி! நீ சீக்கிரத்தில் நல்ல கணவனை அடைவாயாக.

வள். தாத்தா! அமர்ந்துகொள்ளுங்கள்.

கிழ. இருக்கிறேன். என்னருகில் வா.

நம். குழந்தாய்! இந்தப் பெரியவரை உனக்குத் துணையாக வைத்துக் கொள். அவருக்கு வேண்டும்போது நல்ல அறுசுவை நிறைந்த

உணவளித்து அன்புடன் ஆதரித்து வரவேண்டும் கண்மணி! நாங்கள் சென்று வருகிறோம்.

வள். சென்று வாருங்கள்.

நம். சுவாமி! குழந்தையைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கிழ. நீங்கள் சென்று வாருங்கள்.

(நம்பிராஜன் தன் புத்திரர்களுடன் சென்றுவிட்டான்)

வள். தாத்தா! தாங்களிருப்பது எந்தவூர்? இப்பொழுது எந்த ஊருக்குப் போக இந்தவிடத்திற்கு வந்தீர்கள். உங்கள் தாடி ஏன் வெள்ளையாகயிருக்கிறது? அது உங்களுக்கு கஷ்டமாக இருக்கவில்லையா?

கிழ. உனக்கு எல்லாம் கஷ்டந்தான். தாடியுங் கஷ்டந்தான்.
வாடி யென்றால் கஷ்டந்தான் உனக்கென்ன குமரி.

இராகம். அடாணா தாளம்.ரூபகம்

மார்க்கத்தில் கண்ட - என்ற மெட்டு

கண்ணிகள்

கிழ. ஆருக்கு வந்த விருந்தென்று நீமதி
யாம லிருக்கிறாய் பெண்ணே

வள். உமக் கானதைக்கேளு மடியாள் பணிவிடைக்
காளா யிருக்கிறேன் ஐயா

கிழ. மெத்தப் பசிவந்து சித்தங் கலக்கிநான்
இத்தருணம் நொந்தேன் பெண்ணே

வள். இத்தருணந் தேனுந் தினைமாவு தருகிறேன்
தின்று பசியாறு மையா

வள். தாத்தா! பசி தீரும் பொருட்டு இதோ சென்று தேனும் தினைமாவும் பிசைந்து தருகிறேன்.

கிழ. உன்னிஷ்டம்போல செய்.

(வள்ளி ஒரு பாத்திரத்தில் தினைமாவுடன் தேனைக் கலந்து பிசைந்து, பெரியவருக்குக் கொடுக்கிறாள். கிழவன் தின்று கொண்டிருக்கையில்)

பாட்டு முன் தொடர்ச்சி

கண்ணிகள்

கிழ. நஞ்சைக் கலந்திங்கு தின்னென்று தந்தாயே
ஞாயமோ சொல்லடி பெண்ணே

வள். நல்லதைச் செய்திட பொல்லாங்கு நேர்ந்தது
நானென்ன செய்குவேன் ஐயா

கிழ.(வம்.) வள்ளி தினைமாவைத் தந்து என் தொண்டை விக்கி,

கண்ணிகள்

கிழ. தண்ணீர் தவிக்குது உள்நாக் குளறுது
தாகமதைத் தீர்ப்பாய் பெண்ணே

வள். தண்ணீ ரருந்திட வாருஞ் சுனையோரம்
கண்ணீர் விடுக்காது இன்று

கிழ. காணும்வரைவழி சோம்பாம லேஎந்தன்
கைப்பிடித்தேகிடு பெண்ணே

வள்.வம். தாத்தா! வாருங்கள் போகலாம். இந்தக் கம்பைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

கிழ.(வம்.) ஏ வள்ளி! எனக்குக் கம்பைப் பிடித்துக் கொள்ளச் சக்தியில்லை. நீ என் கையைப் பிடித்துக் கொள். நான் வருகிறேன்.

(வள்ளி கிழவருடைய கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போகிறாள்)

காட்சி - 12

நீர் நிறைந்த கேணி

வள்.(வம்.) தாத்தா! இந்தக் கேணியிலிறங்கி தண்ணீர் அருந்துங்கள்.

பாட்டு

முன் தொடர்ச்சி

கண்ணிகள்

கிழ. நீர் நிறைந்த மடு ஓரங் கூட்டி வந்து
கொல்ல நினைத்தாயோ வள்ளி

வள். கொல்ல நினைத்தும்மைக் கூட்டி வரவில்லை
மெல்ல குடித்தேறு மையா

கிழ. வள்ளிக் கொடியேஎன் கையில் தடிகொடு
அள்ளிக் குடிப்பேன் மானே

வள். இம்-மடியைப்பிடித்து நீர் மடுவிலிறங்கிடும்
படியோரம் தெரியுது ஐயா

கிழ. அப்படியானால் சரிதான், வள்ளி! என்னருகில் வா.

(இப்படி இருவருமாக விளையாடி, முடிவில் மடுவில் நீரருந்தியவர் கால் தவறியவர் போல் பாவனைகாட்டி தண்ணீர் நிறைந்த மடுவிலிருந்து சொல்லுகிறார்)

மத்தினமே மோர் - என்ற மெட்டு

பல்லவி

கிழ. இந்தக்-கிணத்திலே னைத்தள்ளவா
அழைத்து வந்தாய்
வள்ளி அழைத்து வந்தாய் (கி)

அநுபல்லவி

இத்தினம் நானே நத்திவந்தேனே
சித்தினியே நீதியாமா ஓதிடுவாய்
வள்ளி ஓதிடுவாய் (கி)

வள். நிந்தனைசொல்லி எந்தனைத் தள்ளி
கையைப் பற்றி ஏறுவீர் கரை யோரமே
கிழவா கரை யோரமே
இது நல் நேரமே (கி)

கிழ. வள்ளி! இப்படிச்செய்ய எத்தனை நாளாய் நினைத்திருந்தாய்! நான் உனக்குச் செய்த கொடுமையென்ன? இந்த நரைத்த கிழப்பழத்தைக் கொல்லுவதற்கு இதுதான் சரியான தந்திரமென்று செய்தாயா? உன் கையைக் கொடு பிடித்துக் கொண்டு மெள்ள மெள்ளக் கரையேறுகிறேன்.

வள். தாத்தா! என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள், நான் வெளியே இழுத்து விடுகிறேன்.

கிழ. உன்னிஷ்டம்போல் செய்.

(வள்ளியின் கையைப் பிடித்துக்கொண்டு கிழவன் கரையேறிவிட்டார்)

பாட்டு

கிழ. தாக விடை தீர்த்தாய் மோகவிடை தீர்ப்பாய்
தண்ணீ ரோரம்வந்த பெண்ணே

வள். தாடி நரைத்த கிழவரென் றெண்ணினேன்
வாடியென்று சொல்ல லாமா

கிழ. மோடி செய்யவேண்டாம் வாடி யென வேண்டாம்
தாடியொரு முத்தம் தாடி

வள். ஓடிநீர்போய்விடும் உயிரையுங் காத்திடும்
உளறிக்கொட்ட வேண்டாம் கிழவா

வ.ம். நீர், பழுத்த கிழவனென்று பரிதாபப்பட்டேன். இவ்வளவு தூரம் பேசுவீரென்று முன்னமே தெரிந்திருந்தால் உம்மோடு இவ்வளவு நேரம் பேசியிருக்க மாட்டேன். இருக்கட்டும்?

கிழ. என்ன தெரிவித்தாய்? நீ இதைவிட எவ்வளவு தூரம் எடுத்துரைத்தாலும் நான் பயப்படுவேனென்று எண்ணாதே.

பாட்டு

(சல்லாப லீலை செய்வோம்-என்ற மெட்டு)

கிழ. ஒரு முத்தந் தந்திடுவாய்
உத்தமி மாதே

வள். சித் தமும் வீணா குதே
பித்தமோ பேதே

கிழ பத்தினி மாதே
பகர் வா யிப் போதே

வள். அறிவில்லாத் தீதே
அகல்வீர் தப்பாதே

கிழ. ஆவியுன்னைச் சேர்ந்தணைய
ஆவல்கொண் டேனே

வள். நாவியென்று எண்ணி நொந்தேன்
நாடாதீர் தாமே

கிழ. தாமதஞ் செய்யாதே

வள். வாய் மதம் பேசாதே

கிழ. சோதனை செய்தேனே

வள். வேதனை உய்தேனே

கிழ. வந்திடுவாய்க் கோபந்தள்ளி
வருந்தவேண்டாம் வள்ளியே

வள். நடந்திடுவீர் நீர்விரைந்து
மார்க்கமதில் நாடியே

கிழ. வள்ளிக்கொடியே! உன்னைச் சோதித்தேன். என் மீது கோபித்துக் கொள்ளாதே! தளர்ந்து நரைத்த எனக்குப்

பெண்டாட்டியும் வேண்டுமா? இதுதான் சிறுபிள்ளைத்தனம். என்னமெல்லாமோ உன் வாயில்வந்தபடி யெல்லாம் பேசி விட்டாய். இருக்கட்டும். இவ்விடத்தில் நாமிருந்தால் ஏதாவது மிருகங்கள் வந்து நம்மைத் தொந்தரவு செய்யும் ஆனதால் போகலாம் வா.

வள். உமக்கு மிருகத்தைக் கண்டால் பயமாயிருக்கிறது. எனக்கு மிருகத்தைக் கண்டால் சந்தோஷம் உண்டாகும்.

கிழ. நீ மிருகத்தைக் கண்டால் பயப்படுகிறதில்லையா?

வள். எப்படிப்பட்ட மிருகங்களாய் இருந்தாலுஞ்சரி, பயப்படுகிற தில்லை. ஒரு மிருகமிருக்கிறது. அதற்குத்தான் பயப்படுவேன்.. அந்த மிருகம் இந்தக் காட்டிலே கண்டிப்பாய் கிடையாது.

கிழ. அதென்ன புலியா?

வள். இல்லை.

கிழ. சிங்கமா?

வள். இல்லை.

கிழ. மானா?

வள். இல்லை.

கிழ. கரடியா?

வள். இல்லை.

கிழ. யானையா?

வள். தாத்தா அதுதான்.

கிழ. ஏ வள்ளி! நான்தான் சிறிது நேரத்திற்கு முன்னாலே ஒரு பெரிய யானை, ஒரு பெண் யானையைத் துரத்திக்கொண்டு போகப் பார்த்தேனே!

வள். இந்தக் காட்டிலா? யானையைக் கண்டீர்?

கிழ. நாம் இந்தக் காட்டில்தானே இருக்கிறோம்.

வள். சரி வாரும் போகலாம்.

கிழ. சரி சரி! (இப்பொழுது தான் வள்ளி என் வலையில் சிக்கினாள். சகல விஷயங்களுக்கும் முதற்கடவுளாகிய எனது அண்ணாவை யானை உருவாக வரச்சொல்லி இந்த வள்ளியை காந்தர்வ விவாஹம் செய்து கொள்ளுகிறேன்).

பாட்டு

இராகம்-ஆனந்த பைரவி தாளம்-ஆதி

பல்லவி

கிழ. சோதரரே வருவீர்
யானையாய்த் தெரிவீர்
உதவி செய்குவீர்
சுகந்தருமொழியிவள் முன்னே (சோ)

அநுபல்லவி

மாதரசி யாளை மாமணம் புரிய
கோ நானுமுனை கும்பிட்டழைத்தேனிங்கு (சோ)

வ.ம. அண்ணா! இந்த வள்ளியின் முன்னிலையில் பெரிய யானையாக வந்து பரிகாசஞ் செய்யும்படி பணிவுடன் தொழுது நிற்கிறேன்.

(யானைமுகத்தான் காட்டானையாக வருதல்)

வள். தாத்தா! நான் என்ன செய்யப்போகிறேன். இதோ பாரும்! எனக்கு பயமாயிருக்கிறதே! ஐயோ! என் தாய் தந்தையரையும் காணவில்லையே! தாத்தா! தாத்தா!!

(வள்ளி இப்படிச் சொல்லிப் பயந்து நடுநடுங்கி கிழவனைக் கட்டிப்பிடிக்கிறாள்

கிழ. வள்ளி! என்னைத் தொடாதே. நானோ ஏழைக்கிழவன். யானையின் துதிக்கையில் என்னைத் தள்ளிவிடலாமென எண்ணுகிறாய் போலும்.

வள். ஆபத்துக்காலத்தில் கைவிடலாமா?

கிழ. இந்த யானையைப் போகும்படி செய்கிறேன். என்னை விவாகம் செய்து கொள்ளுகிறாயா? சொல்.

வள். இந்த யானையினின்று நீர் காப்பாற்றினால் உம்மை மணந்து கொள்ளுகிறேன்.

கிழ. அப்படியானால் உன்குல தெய்வத்தின்மீது சத்தியம் செய்து தரவேண்டும்.

வள். என் வாயினால் சொன்னால் போதாதா?

கிழ. உன்குலதெய்வத்தின் மீது சத்தியம் செய்துதான் தர வேண்டும். அப்படியானால் இந்த யானையைப் போகும்படி செய்கிறேன். இல்லாவிட்டால் உன்பாடு யானையின் பாடு.

(யானை வள்ளியினருகில் வந்து விட்டது)

வள். தாத்தா! யானையைப் போகும்படி செய்யும். சத்தியம் செய்து தருகிறேன்.

கிழ. யானையே நீ போய் வா.

(யானை மறைந்துவிட்டது)

வள். தாத்தா! உம்மை ஏய்த்து விட்டேனே.

கிழ. ஏய்த்துவிட்டாயா? யானையே! ஓடிவா

(மீண்டும் யானை திரும்பி விட்டது)

வள். தாத்தா! இதென்ன சங்கடமாயிருக்கிறது. உம்மைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறேன். யானையைப் போகச் சொல்லும்.

கிழ. சத்தியம் செய்து கொடு. யானை போய்விடும்.

வள். தாத்தா! எங்கள் குலதெய்வமாகிய குமரேசன் மீது ஆணையாக உம்மை மணந்து கொள்கிறேன். (யானை போய்விட்டது)

(கிழவர் மறைந்துவிட்டார்)

(வள்ளி கிழவனுக்கு மணந்து கொள்கிறேனென்று சத்தியம் செய்து கொடுத்தேனே யென்று புலம்புகிறாள்)

(அடைக்கலமே-என்ற மெட்டு)*

இராகம்-ஆரபி

பல்லவி

வள். வேல வனே வேல வனே
கோலாகல முடனே
நீலமயின் மீதேறும் (வே)

அநுபல்லவி

தாடி மீசை நரைத்த கிழவனைத்தொட்டு
கூடி மணந்திருக்க சம்மதப்பட்டு
வாடி மனமும் நொந்தேன் பேதைநான்கேட்டு
வாயாடி சத்தியஞ் செய்தேன் மானமும் கெட்டு (வே)

தேவர்கள் புகழ்ந்திடும் ஆறுமுக நாதா
தினந்துதி செய்தேன்நான் தாமரைப் பாதா
இந்த வேளை வந்தருள் தந்திடும் போதா
இருகரங் குவித்தேன் நான் தெரிசனந் தாதா (வே)

---

* நாடகம்: கோவலன் சரித்திரம்

வள். சுவாமி! உம்மையே மணந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இரவு பகலாய் எண்ணியிருந்தேனே. இப்பொழுது என் மனம் வாதையடைகிறதே! ஹா!

(கிழவராயிருந்தவர் ஆறுமுகம் பன்னிரு கரங்களோடு வேல் பிடித்தவராய் வந்து)

சுப். வள்ளியே! அஞ்சேல்! அஞ்சேல்! உன்னிடம் சத்தியம் வாங்கினவன் நானே. உன் பத்தியை அறியுமாறு இவ்வித சம்பவங்களை எல்லாம் செய்தேன். என்னருகில் வா. (வள்ளி சுப்பிரமணியக் கடவுளைத் தெரிசித்து அருகில் செல்கிறாள்)

வள்ளிக்கும் கந்தனுக்கும் காந்தர்வ விவாகம் நடக்கிறது

(தேவர்கள் பூமழை சொரிகிறார்கள்)

(இந்தச் சமயத்தில் நம்பிராஜனும் அவன் புத்திரர்களும் வருகிறார்கள்)

வேலனுக்கும் வேடருக்கும் சண்டை

(வேடர்கள் மடிந்துவிட்டார்கள். வள்ளி தன் தந்தையும் சகோதரரும் இறந்துவிட்டதைப் பற்றி புலம்புகிறாள்)

(ஆகா நான் என்ன செய்வேன்-என்ற மெட்டு)

வள். ஐயா நீர் மடிந்தீரோ அடியோடு சாய்ந்தீரோ
ஆறுமுகன் என் றறிந் தீரோ
தெய்வமே தெய்வமே தெய்வமே

வ.ம். சுவாமி! இவர்தான் என் தந்தை, இவர்கள் என் அண்ணன்மார்கள். அவர்கள் செய்த பெரும் பிழையைப் பொறுத்து முன்போல் ரக்ஷிக்க வேண்டும்.

(இறந்தவர் முற்றும் உயிருடனெழுந்து முருகனைத் தொழுதார்கள்)

கொச்சி மலை - என்ற மெட்டு

நம். நீல மயி லேறி வரும்
வேல வரே வாரும்
நல்ல வரமுந் தாரும்
இந்த பாக்யவதி வள்ளியுடன்
கழுகாசலஞ் சேரும் (நீ)

நம். சுவாமி! இச்சிறியோர் உம்மை இன்னாரென்று உணராமல் உளறியதற்குத் தண்டனை போதுமானது. எங்கள் நாடும் குடும்பமும் தழைத்தேறும்படி நல்ல வரந்தரும்படி உமது பாதத்தைப் பணிந்து நின்றோம்.

சுப். தந்தேன்! சென்று வாருங்கள்.

காட்சி - 13

திருக் கழுகுமாமலை

சாக்ஷாத் ஸ்ரீசிவசுப்ரமணியக் கடவுள் வள்ளி தெய்வானை யம்மை சமேதரராய் முப்பத்து முக்கோடி தேவர்கள் சூழ நீலமயிலின் மீது ஆரோகணித்து இருக்கிறார்

(இந்த வேளையில் நாரதர் எழுந்து)

நா. முருகா! இம்மாதிரி சம்பவத்தை நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்தேன். இன்று தான் என் மனமும் தேவர்கள் மனமும் குதூகலமடைந்தன.

சுப். தேவர்களே! சென்று வாருங்கள்.

வள்ளியம்மை சரித்திரம் சம்பூர்ணம்

----

2. அல்லி சரித்திரம்

அல்லி சரித்திரம்

காட்சி - 1

மதுரை நகரம்

அரு. பரமாத்மா! நாம் மதுரை வந்து சேர்ந்து விட்டோம். நீர் இந்த இடத்திலேயே இருக்க வேண்டும். நான் நகரத்திற்குச் சென்று மீனாக்ஷியம்மனைத் தரிசித்துவிட்டு வருகிறேன்.

கிரு. அருச்சனா! நீ சென்று ஆக வேண்டிய காரியங்களை எல்லாம் முடித்துக் கொண்டு வா!

அரு. அப்படியே செய்கிறேன்.

(அருச்சுனன் நகரத்தினுள்ளே செல்லுகின்றான்)

(முத்து விற்கும் செட்டி ஒருவன் தான் அல்லிராணிக்கு அளக்க வேண்டிய முத்தில் கலம் முத்துக் குறைவாகிறதென்று புலம்புதல்.)

(ஆ என் நல்லதங்கா என்ற மெட்டு)*

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்.

செ. ஐயோ நான் என்ன செய்வேன்
அங்கு நான் ஏது சொல்வேன்
அளவில்லா முத்துப் போனதே
தெய்வமே தெய்வமே தெய்வமே (ஐ)

செ. சோமசுந்தரக்கடவுளே! ஒருநாளும் குறையாத முத்து இன்று குறைந்துவிட்டதே! அல்லி அம்மாளுக்கு இந்தச் சங்கதி தெரிந்துவிட்டால் என்மேல் கோபப் படுவாரே! அவருக்கு பதில் நான் என்ன சொல்லுவேன்! ஏ மீனாக்ஷித்தாயே! நீ தான் துணை.

வயிறு கொதிக்கிறதே
வாய்குழறி நிற்கிறதே
வகையொன்றும் நானறியேனே
தெய்வமே தெய்வமே தெய்வமே (ஐ)

செ. நினைக்கும் பொழுதெல்லாம் என் வயிற்றில் தீப்பற்றுகிறதே இருக்கட்டும். இன்று முத்தைச் சரியாய்க் கொண்டு அளக்காத பட்சத்தில் என் தலை பறிபோய்விடுமே! இந்த வேளையில் எனக்கு யார் உதவி செய்யப்போகிறார்கள்? நீயே கதி.

---

*நாடகம் : நல்லதங்காள் சரித்திரம்

(இந்தச் சமயத்தில் அர்ச்சுனன் தீர்தத யாத்திரை செய்துவிட்டு அந்த வழியே வருகிறான்.)

அரு. அந்த இடத்தில் யாரோ ஒருவன் அழுதுகொண்டு இருக்கிறான் அருகிற்சென்று யாரென்று விசாரிக்கிறேன்.

இராகம்-ஸ்ரீராகம் தாளம்-ஆதி.

பல்லவி.

அரு. எந்தவூரோ நீ. இங்கு சொல்-உனக்
கிந்தவித துன்பத்தையார்
செய்துவிட்டு அங்குசென்றார். (எ)

அநுபல்லவி.

பொருளைப் பறிகொடுத்து நிற்பவர்போல் நீர்தவித்து.
இருகரத்தாலடித்து இப்படிப் பரிதவித்து (எ)

(அருச்சுனனுக்குப் பதிலுரைத்த முத்து விற்கும் செட்டி மதுரைக்கு அரசியான அல்லியின் வீர, தீர, பராக்கிரமங்களையும் அவளுடைய பேரழகையும் பற்றி விவரிக்கிறான். ஆண்களை அடக்கியாளும் அல்லியின் அரசாட்சி பற்றியும் கூறுகிறான். இதனைக் கேட்க அர்ச்சுனன் அல்லியின் மீது மையல் கொள்கிறான். உடன் தன் தோழனான கிருஷ்ணபரமாத்மாவை மனத்தில் நினைத்து அவ்விடத்திற்கு வரும்படி அழைக்க கிருஷ்ணனும் அங்கு தோன்றி நிற்கிறார்.*)

இராகம்-அடாணா தாளம்-ஆதி.

பல்லவி

கிரு. அழைத்த விபரமென்ன
அர்ச்சுனா எனக்கிப்போது அன்புடனுரைத்திடுவாய் (அ)

அநுபல்லவி

தழைத்த மரம் நிறைந்த சகல வளம்பெருகும்
தாரணி புகழ் மதுரை பரிந்து விரைவுடனே (அ)

சரணம்

காவலர்கள் உனக்கென்ன பிழைகள் புரிந்தாரென்று
கவலை நீ கொண்டாயா-இல்லை
கானக வழியில் வந்த அசுரர் குலம்தனைக்

---

* இந்நாடகப் பகுதியின் மூலப்பிரதி கிடைக்கவில்லை. எனவே அப்பகுதியின் சுருக்கம் தொடர்ச்சிக்காகத் தரப்பட்டுள்ளது.

	கண்டு	மருண்டாயா
	ஆவி யெனையேயுந்தன்	அருமைச்சகோதரனை
	அடுத்து நினைவு வர	அயர்ந்து மயங்கினையோ (அ)

வ.ம். அர்ச்சுனா! எதற்காகத் திடீரென்று என்னையிங்கு அழைத்தாய் தெரிவி.

அர். தெரிவிக்கிறேன்.

அணை ஜாலமினி - என்ற மெட்டு

அர்.	கண்ணனே யண்ணலே	கார்மேக வண்ணனே
	காத்தருள் செய்குவீர்	காருண்ய புண்யனே
கிரு.	சொக்கர் நகர் வந்த	சுமித்திரை நாதனே
	சொல்லுவாய் சீக்கிரம்	வந்த விநோதனே

வ-ம். சீக்கிரமாகத் தெரிவி. அழைத்ததின் கருத்தை.

(காதகனாகிய கஜகேது)

அர்.	அல்லி யென்ற ஒரு	பெண்மணியாள்-முழு
	அரசு புரிகிறாள்	வீண் மதியாள்
	கோபமே குடிகொண்ட	துன்மதியாள்-அவள்
	கொஞ்சமும் அஞ்சாத	பாதகியாள் (அ)
	விருதுகள் கட்டிய	துன்மார்க்கி-வீண்
	ஜெயக்கொடி நாட்டிய	தைநோக்கி
	கத்தியாலறுத்துமே	அதைத் தாக்கி-நாம்
	நத்தியே செல்வோம்	நகர் நோக்கி. (அ)

வ-ம். தேவகிபாலா! இது என்ன ஆச்சரியம். நம்போன்ற எத்தனையோ ஆண் சிங்கங்கள் இருக்க, கேவலம் ஒரு பேதை கல்வியிலும், வீரத்திலும், சாமர்த்தியத்திலுஞ் சிறந்தவளாகி, இந்த ராஜ்ய பாரத்தை அப்பேதையின் கீழடக்கி ஆளுவதென்றால், இதைவிட என்ன வேண்டும். இவை முற்றிலும் காதினால் கேட்டு நாம் இந்தக் கொடிகளையும், விருதுகளையும் அறுத்தெரியாது செல்வது நம்போன்ற புருஷர்களுக்கு அழகாகுமா! ஒருக்காலுமாகாது. ஆதலால் என்போரில் கிருவை கூர்ந்து விடைதாரும். இதோ ஒரு நொடியில் சென்று விருதுகளையும், கொடிகளையும் அறுத்தெறிந்து அந்த மாதின் மமதையை அடக்கி வருகிறேன்.

இராகம்-தர்பார் தாளம்-ஆதி.

பல்லவி

கிரு. அவள் எப்படி யிருந்தால் நமக்கென்ன-நாம்
இந்தயிடந் தன்னைத்தேடி
வந்தது தீர்ந்தது போவோம். (எ)

அநுபல்லவி

குப்புறக் கிடந்தழுதோன் செப்பிய படியேஅல்லி
இப்புவியை ஆள்வதினால் தப்பித மொன்றுமில்லை (எ)

வ-ம். அர்ச்சுனா! தீர்த்த யாத்திரை செய்ய வந்தோமோயன்றி ஜெயக்கொடிஅறுக்கவரவில்லை. தவிர, "குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுவதுபோல்" செய்யவேண்டு மென்கிறாய். இந்திரப் பிரஸ்தத்தைப் பரிபாலித்து வந்த உன் தந்தையாகிய பாண்டுவிற்குப் பின் ஐவர்களாகிய நீங்கள்,

சரணம்

தன்னுடைய தந்தையர்கள் முன்னமாண்ட தேசத்தையே
தானுமரசாக்ஷி செய்யக் கண்டாய்-அது
தானே யல்லாமல் நமது ஜோலிக்கு வரவில்லையே
தையல் மீது ஏனோ சினங் கொண்டாய்

வ-ம். என் நீ கோபிக்க வேண்டும். இந்த மதுரையம்பதியைபரி பாலித்து வந்த பாண்டியனுக்குப் புத்திரனில்லாததினால் தன் புத்திரியாகிய இந்த அல்லி என்னும் பெண்மணிக்கு மகுடா பிஷேகம் செய்திருக்கிறார்கள். மேலும்

(முன்பாட்டின் தொடர்ச்சி)

கன்னியர்கள் பூமியாளக் கூடாதென மனுமுறையில்
கண்டிருக்கிறதோ பாரில் பெண்டீரு மெதிரே நேரில்

வ-ம். பெண்கள் இராஜ்யபாரஞ் செய்யக்கூடாதா? எந்தக் காரணத்தைக் கொண்டு என்முன் இப்படி அநீதியான வார்த்தையைத் தெரிவித்தாய். அதை எனக்கு விளக்கிக்காட்டு.

பாட்டு

(அச்சாரே பானுமேரா என்ற மெட்டு)

அர். நேரிலவளைப் பாராதிவ்வூரை விட்டு வரமாட்டேன்
நிச்சயம் நிச்சயமிது மைத்துனரே நான் (நே)

நீரென்ன சொன் னாலுமவ்வல்லி
நேர்மை காணாதவனோ காண்டீபவில்லி
பாராமற்போனாலும் ஊரார்வசைசொல்லி
பழிப்பாராகையினாலே சகிக்கேனானினிமேலே
வசைக்காளாக்காமல் கிட்டிக்கேளு மென்துரையெ (நே)
வானமழை தடுக்க மலையை முன்னெடுத்தாய்
மாயமாவுங்கன்றும் மடியவும் தொடுத்தாய்
கூனல் நிமிர்த்தவட்குக் கோலமுங் கொடுத்தாய்
குறித்தொருத்தியை வர வழைத்திடவருத்தமோ
அல்லியென்றிடும் அம்மாதை யழைத்திடுமையா
அல்லாதுபோனால் நீரொன்றுஞ் சொல்லவேண்
(டாம் போவீரையா (அல்)

வ-ம். ஐயனே! தங்களிஷ்டம். ஆனால் ஒன்று, அல்லி யென்னும் பெயரழகைப் பற்றிக் கேட்டமாத்திரத்தில் அம்மாதைப் பார்க்கவேண்டு மென்ற அவாமேலிடுகிறது. அருள்புரிவீர்.

கிரு. அவளைப் பார்ப்பதென்றால் எளிதில் முடியாது. அந்த அல்லி என்னும் பெண்.

கபரதரகா-என்ற மெட்டு*

பல்லவி

அரண்மனையில் இருப்பவளைப் பார்த்திட ஆகுமோ
ஆகாது வாவாநம் நகரம்போய்ச் சேரலாம் (அ)

அநுபல்லவி

கட்டென்ன காவலென்ன கரிபரி என்ன
காலாள்தேர் முதாலான சேனைகளென்ன
அட்ட திசையி லவள் அதிகாரமென்ன
ஆகையினால் நாமணுக ஏதும்வழி கிடையாது (அ)

வ-ம். இதற்கு இன்னுமொரு தந்திரமிருக்குது, அதாவது,

சரணம்

பல பல விலங்கினம் இனங்களுண்டாக்கி
பயிரை யழிக்கச்செய்வேன் வனமதை நோக்கி
கொலைசெய்து வேட்டையாட வருவாளே நோக்கி
கொஞ்சமும் அஞ்சவேண்டாம் இங்கேயும் நீ வாட
(வேண்டாம் (அ)

* இராகம் : சிந்துபைரவி

வ-ம். மிருகங்களை இதோ படைத்தனுப்புகிறேன். நேரில் பார்க்க முடியாது. அநேக மிருகங்களை ஏவி குடிகளிட்ட பயிரை அழிக்கும்படி செய்கிறேன். அப்பொழுது அல்லியிடம் குடியான வர்கள் முறையிடுவார்கள். உடனே அவள் வேட்டையாடக் காட்டிற்கு வருவாள். அப்பொழுது நீ பார்த்துக்கொள்ளலாம்.

காட்சி - 2 சபை

அல்லி தேசவிசாரணை.

(பாட்டு)

ஆடல்பாடல்கூடிய - என்ற மெட்டு

அல். மாதுபாக மானவா வானவா வந்தனம்
மாமறை புகழ் சொல்லு மாசிலாத்தாயகா
வாகாசிற்பரா தற்பரா வாமனோகரா
வடிவநிலா சிறியநிலா
மதிபுனைவாய் நதியணிவாய்
மாரனீறாடி யோய் மாலயன்தேடி யோய்
மங்களா சங்கரா
கானமேவுரஞ்சிதா கந்தவேளின்பிதா
காலனை விழமோது கருணாகராசிவா
காலமேற்றவா நீற்றவா கட்கடாக்ஷவா
கரியுரியாய் அரியறியாய்
விரிசடையாய் பிலியுடையாய்
கால்களுங்கூரரா கங்கணம் பூணரா
காரணா ஆரணா

(சேடிகள் அடி பணிதல்.)

அணைய ஜாலமினி-என்ற மெட்டு.

சே. அம்மணி தேவியே அடியினைப் பணிந்தோமே
ஆதரித்தருள் செய்து போற்று மின்னோமே
அல். அமருங்கள் அமருங்கள் அன்பான தோழிகாள்
அஞ்சாமல் என்னிடம் இன்பமாய்க் கூறுங்கள்
சே. வந்தோம் பணிந்தோம் அமர்ந்தோம் பயந்தோம்
வரும்வினா தெளிவுடன் உணர்ந்திடத் துணிந்தோம்
அல். அன்புடன் வினவிட ஆவல்நான் கொண்டேனே
ஆங்காங்கு நடந்ததை அறியமுன் வந்தேனே

சே. அம்மணி நமஸ்கரிக்கின்றோம்.

அல். சேடிகளே அமருங்கள். மீனாம்பிகையின் கிருபா கடாக்ஷத்தினால் இதுவரை நமது ராஜ்யபாரம் வெகு நீதியோடு நடந்து வந்ததுடன் மீண்டும், நமது ராஜ்யத்தின் சீர்திருத்தத்தைப்பற்றி வினாவி அறியப் பிரியப்படுகிறேன்.

நாரதரே ஞாயமோ-என்ற மெட்டு.

இராகம்-பியாக் தாளம்-சாப்பு.

பவளச் சேனா மந்திரி-இப்
பாரினி லுள்ளதே வாலயங் கள்தோறும்
பூஜை செய்கின்றாரா.

காத்துநின்ற நாரை-என்ற மெட்டு

அந்தணர் யாவரும் ஆறுகாலந்தோறும்
தந்தமேள வாத்திய கோஷமா யெல்லோரும்
செந்தமிழ்த் தேவாரம் திருப்புகலழங்காரம்
செப்புமுறை ஒப்பிடவே தப்பிதமில்லாமலவர் (ப)

வ-ம். பவளச்சேனா! ஆறாதாரத்திலு மேலாகிய இம்மதுரையம் பதியில் ரவியைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் மீனாக்ஷியம்மன் சந்நிதானத்திலும் மற்றுமுண்டான சகல ஆலயங்களிலும் மேளம், சின்னம், தேவாரம், திருவாசகம், இன்னுமுண்டான சகல வைபவத்துடன் அனுதினமும் காலாகாலங்களில் சரிவர ஆறுகால பூஜை செய்து வருகின்றார்களா?

பவ. அம்மணி! தாங்களுரைத்தவாறே எல்லோரும் பயத்துடனும் சகல வைபவத்துடனும் பணிவாய் நடத்தி வருகின்றார்கள்.

அல். பவளச்சேனா! ஆனந்தித்தேன். எல்லாம் நம் அங்கயற் கண்ணியின் கிருபையே!

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்.

நஞ்சை புஞ்சை பயிர்கள் மேவ
நல் மழையும் பெய்தனவா
அஞ்சேலென வந்துநீரும்
ஆறு ஏரி பெருகியதா.

வ-ம். பவளச்சேனா! நமது நாட்டிலுள்ள நஞ்சை புஞ்சை இவைகளுக்கெல்லாம் போதுமானபடி மழை பெய்து மிகுந்த நீர் வைகைநதி, ஏரி இதுபோன்ற தடாகங்களிளெல்லாம் பெருகி நிற்கிறதா?

பவ. அம்மணி! இந்த வருஷம் போதுமானபடி மழை பெய்தது. அக விலையும் சௌகரியமாய் இருக்கின்றது.

இராகம்-மோகனம் தாளம்-ஆதி

பல்லவி

அல். வாணிபஞ் செய்யுமவர்
காணி குறைவி ல்லாமல்
வர்த்தகஞ் செய்கின்றாரா (வா)

அநுபல்லவி

வாங்கியவிலைக்குச்சொற்ப லாபம் வைத்துமே விற்று
ஓங்கிய துலாவதில் ஒன்றுபோலே நிறுத்து
உரத்த ஒலி யில்லாமல் கிறுத்த குரலுடனே (வா)

வ-ம். வர்த்தகரெல்லாம் தாம் வாங்கிய விலைக்குச் சொற்ப லாபம் வைத்து சரியாகத் துலாக்கோலால் நிறுத்தும் அளந்தும் சரிவர வாணிபஞ் செய்கின்றாரா?

பவ. அம்மணி! இது விஷயத்தில் நிரம்பப் பயந்து சொற்ப லாபத்திற்கு சரிவர விற்று வருகிறார்கள்.

காதனாகிய கஜகேது - என்ற மெட்டு

அல். எதிர்சமர் செய்திடும் வீரரவர்
கதிர் முனைக் கருவியால் பழகுராரா
எதிராடி வருவோரை முதுகடித்து
தாக்கிடும் வகைதனை அறிந்தனரா-வந்தோர்
ராஜ்யமதைப் பெறத் தெரிந்தனரா (எ)

வ-ம். நமது தேசத்தின் மீது எதிரிகள் படையெடுத்து வராதபடி சமர் செய்வதற்கு வேண்டிய சகல வித்தைகளையும் தெரிந்து வருகின்றாரா.

பவ. அதில் யாதொரு குறைவில்லை.

குடிகள் வருகிறார்

கு. நாங்கள் என்ன செய்யப் போகிறோம். மிருகங்கள் வந்து எங்களுடைய பயிர்களை எல்லாம் அழித்து நாசப்படுத்து கின்றதே! மகாராணி! நீர் தான் காப்பாற்றவேண்டும்.

அல். பவளச்சேனா! வெளியில் ஏதோ இரைச்சல் கேட்கிறது. இன்னதென்று தெரிந்து வருவாய்.

(பவளச்சேனா வெளியே போய் வருகிறாள்)

* நாடகம்: சத்தியவான் சாவித்திரி. இராகம் - பியாக்

ப. அம்மணி! குடிகளிட்ட பயிர்களை மிருகங்கள் வந்து அழிக்கிறதென்று குடிகள் வந்து முறையிடுகிறார்கள்.

அல். பவளச்சேனா! குடிகளுக்கு வருந்துன்பத்தைத் தீர்க்க வேண்டியது நமது கடமை, குடிகளைச் சென்று வரும்படி கட்டளையிட்டேன் தெரிவிப்பாய்.

ப. அப்படியே! செய்கிறேன்.

அல். சேவகி! இங்கே வா, நீ சீக்கிரமாகச் சென்று கொடிய விலங்கினங்களைத் துலைப்பதற்குத் தகுந்த,

பாட்டு

மணிப்புரஞ் சென்று-என்ற மெட்டு

வேட்டைக்குத் தகுந்த வில்லம்பு ஈட்டி
வேல்தடி ஆயுதங்கள்
தாட்டிகமாகவே ஓட்டிவதைத்திட தடிகளுடன் வாள்கள்
இரும்புதட்டி வலைகள் எட்டிப் பற்றுங் கடிநாய்கள்
துருப்புடனே கொடிகள் வில் துப்பாக்கிப் போர்வீரர்கள் (வே)

வ-ம். நான் சொல்லிய பிரகாரஞ் சென்று வேட்டைக்குத் தகுந்த சகலவிதமான ஆயுதங்களுடனே வேட்டைக்காரர்களையும் மற்றுமுண்டான நாய் துருப்புகள் வலைகள் இவைகளுடன் வந்து சேரவேண்டும்.

3-வது களம்

அல்லி வேட்டையாடுதல்

பாட்டு.

கட்டியகட்டுகள் பட்டுப்பட்டென்று - என்ற மெட்டு*

அல். கட்டப்பாரை கையில்கொண்டு குழிதோண்டி
காட்டுக்கழிகள் ஊணி நாட்டுங்கள்
காண்டாமிருகங் குதித்தோடிப் போகாமற்
கானமுழுதும் வலைகட்டுங்கள்
கொட்டு பிரிந்தவல் பம்பைமுரசு
கொடிய உறுமிபறை கொட்டுங்கள்
கோரமிருகங்கள் ஓடிவிடாமல்
குடல்கள் சரியக் குத்தி வெட்டுங்கள்
தப்பட்டை கொட்டுங்கள் வேட்டு முழக்குங்கள்
தாளங்கள் போட்டு சூழ்ந்து நில்லுங்கள்

* நாடகம்: பவளக் கொடி. இராகம் - பியாக்

தாவிமிருக மகன்றோடிப் போகாமற்
சார்ந்து உங்கள் வலியால் வெல்லுங்கள்
வேலாலெறியுங்கள் வாளாலெறியுங்கள்
வில்லை வளைத்தம்பு எய்திடுங்கள்
வேட்டைநாயேவுங்கள் ஈட்டியினால்குத்துங்கள்
வீரப்புலிதனைக் கொய்திடுங்கள்

(இந்தச் சமயத்தில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு அல்லியைக் காண்பிக்கிறான்.)

கிரு. அருச்சுனா! பார்த்தாயா! இவள்தான் அல்லி.

அரு. இவள்தானா? அல்லி!

(என்று சொல்லிக்கொண்டு எட்டிப் பிடிக்கப் போகிறான். கிருஷ்ணன் தடுக்கிறான்.)

கிரு. அருச்சுனா! என்ன காரியஞ் செய்தாய். நானும் உன்னோடு தீர்த்தயாத்திரைக்கு வந்தேனே இருக்கட்டும்; அல்லியைப் பார்த்தாய் விட்டதல்லவா? வா நம் நகருக்குச் செல்லலாம்.

பாட்டு

(கண்மணியே தன்மையுள்ள என்ற மெட்டு)

அரு. அல்லியென்னும் பேருடைய மெல்லியிவள் மீதுமையல்
ஆசைமிக மீறுதையா ஆதலினாலேது செய்வேன்

கிரு. ஆகைமீறுகின்றதென பேசுவதா லாபமென்ன
ஆகையால் போகலாம்வா அர்ச்சுனா நம்தேசத்துக்கு

அரு. அச்சுதனே ஆயர்குல பச்சைநிற கோபாலனே
அந்தமாதை எந்தனுக்கு
அன்பாய்ச்சேர்த்து வைப்பாய் நீயே

கிரு. எனக்கு நல்ல வேலை சொன்னாய்
மனக்குறையால் மையலானாய்
ஈதுதர்மநீதியல்ல இந்த்ரபிரஸ்தம்போவோம்வாராய்

வ-ம். அருச்சுனா! முதலில் அல்லியைப் பார்த்தால் போதுமென்று தெரிவித்தாய். அதன்படி உனக்குக் காண்பித்தேன். இப்பொழுது அல்லியைக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாய். அது என்னால் முடியாத காரியம். நீ இப்பொழுது அஸ்தினா புரத்திற்கு வருகிறாயா? இல்லையா?

பாட்டு

நகர்வளம் போய்ப் பார்க்கவேண்டும்-என்ற மெட்டு.

அரு. மாலை சூட்டாமல் வரலாகுமா
வாதுநீரோதாமல் மாதை நான் நோக்கியே உறவாடி (மா)
மாயவனே யுந்தன் சோதனையாகுமா
சகாயம் நீர் செய்யாமல் வேதனைபோகுமா
கண்ணாகார்வண்ணா நான் அல்லியெனும்மாதை சொந்த
மனையாக (மா)

வ-ம். பரமாத்மா! என்னவார்த்தை தெரிவித்தீர்! நானிதுவரை எத்தனையோ பெண்மணிகளைப் பார்த்திருக்கிறேன். இது மாதிரி ஒரு மங்கையைப் பார்த்ததில்லை. இவளைப் பார்த்தது முதல் என் மனம் அவள் மையலில் பாய்ந்து விட்டது. இனிமேல் எவர் சொன்னாலும் கேட்கமுடியாது 'அல்லி' யெனும் அந்தப் பெண்மணியைத் திருமணஞ்செய்யாமல் ஒரு அடியெடுத்து வைக்கமாட்டேன்.

கிரு. பேஷ்! நன்றாயிருக்கிறது. புண்யக்ஷேத்திரங்களுக்கெல்லாஞ் சென்று.

(பாட்டு)

தீர்த்த-யாத்திரை வந்த பலனிதுவோ
நிதியோயென் கதியோயுன் மதியோவீண் வாதுரைவேண்டாமே (தீர்)
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளவா வந்தாய்
களிப்புடன் கலியாணம் செய்திடத்துணிந்தாய்
காலம் வீண்போகாது அவள் சுபாவமும் பொல்லாது
அறிந்திடு (தீர்)

வ-ம். உன்னோடு நானும் போக்குப்புகலில்லாமல் தீர்த்த யாத்திரைக்கு வந்தேனே! இனிமேல் உன்பாடு அவள்பாடு எனக்கொன்றும் தெரியாது. நான் உன் அண்ணனிடஞ் சென்று சங்கதியைத் தெரிவித்து விடுகிறேன். இதோ செல்லுகிறேன் இந்திரப் பிரஸ்தத்திற்கு.

அரு. சென்றுவாரும் நமஸ்கரிக்கிறேன்.
(கிருஷ்ணன் தனக்குள்ளே : இவனை விட்டுவிட்டு நான் செல்லலாகுமா? செல்லலாகாது.)

கிரு. அருச்சுனா! நான் சொல்லுகிறபடி கேள். அந்த அல்லியைக் கலியாணஞ் செய்யவேண்டுமென்றால் நான் சொல்லுகிறபடி கேட்க வேண்டும். உன்னால் முடியுமா? தெரிவி.

அரு. உம்முடைய அருளிருக்கும்போது ஏன் என்னால் முடியாது. சீக்கிரமாகத் தெரிவியும் செய்கிறேன்.

கிரு. நீ சீக்கிரமாகச் சென்று அந்த அல்லியின் கைவிரலில் அணிந்திருக்கிற மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு வந்து தரவேண்டும். இல்லையேல் நடப்பேன் பிரயாணம்.

அரு. அதற்குத் தகுந்த உபாயஞ் சொல்லும்; அதன்படி செய்கிறேன்.

கிரு. நல்லது கலியாணஞ் செய்யவில்லையா என்றால் உன் வீட்டில் பெண்ணிருக்கிறதா என்று கேட்கிறாய். சரி இருக்கட்டும் தந்திரஞ் சொல்லுகிறேன். அதாவது;

பாட்டு

சத்தியம் நீர் செய்தால் நம்புவேன் - என்ற மெட்டு*

பல்லவி

கிரு. மோதிரம் நீகொண்டு தருவாய்-அவன்
விரலி லணிந்திருக்கும் அழகு நிறைந்த ஒரு (மோ)

அனுபல்லவி

இவ்வுரு மாறியே பேடிபோலெடுப்பாய்
இந்த அல்லியிடத்தில் சேடிபோல் நடிப்பாய்
அவளிங்கு சயனிக்க கதையொன்று விடுப்பாய்
அயர்ந்து தூங்கும் வேளையில் கணையாழி எடுப்பாய் (மோ)

வ-ம். அர்ச்சுனா! அல்லி வேட்டையாடுமிடத்தில் இவ்வுருவை மாற்றி பேடிரூப மெடுத்து அந்த அல்லிமுன் சேடிபோல் நடிக்க வேண்டும். அந்தச் சமயம் அல்லி களைப்பினால் அயர்ந்து நித்திரை செய்வாள். நீ சமயம் பார்த்து அவள் கைவிரல் அணிந்திருக்கிற மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு வந்து என் கையில் தரவேண்டும். அப்படித் தந்தால் உடனே கலியாணம்.

அரு இது உண்மைதானா?

கிரு. நீ போகும்பொழுதே உண்மைதானா? நன்மைதானா? என்கிறாய். சந்தேகம் வேண்டாம் போய் வருவாய்.

அரு. இதோ செல்லுகிறேன்.

(அர்ச்சுனனும் கிருஷ்ணனும் சென்று விட்டார்கள்)

---

* நாடகம்: கோவலன் சரித்திரம்

காட்சி - 4

இராகம்-அடாணா தாளம்-ஆதி

பல்லவி

அல். ஓடுதே! சிங்கம்! ஓடுதே! மான் ஓடுதே!
யானை-திரண்டு ஒருபுறமாய் மிரண்டுபலதிசையில் (ஓ)

அநுபல்லவி

பாயும் புலியினங்கள் பரிந்து விரைவுடனே
பார்த்துப்பார்த்துமே நம்மை எதிர்த்து ஜெயித்திடாமல் (ஓ)

சரணம்

துள்ளிக் கழுதைப்புலிக் கள்ளி மீதினிற் பாய்ந்து தள்ளி
அல்லியாளைக் கண்டதுவும் சொல்லியே திரண்டுருண்டு
புள்ளிமா னினங்க ளெல்லாம் சல்லியஞ்செய்துமேயங்கு (ஓ)

(பேடி ரூபங்கொண்டு அருச்சுனனும் அல்லியுடனே நின்று கொண்டு சேடிபோல் நடிக்கிறான்)

அல். சேடிகளே! பார்த்தீர்களா? மிருகங்களெல்லாம் எங்கே? என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் இந்த மிருகங்களெல்லாங் கிடு கிடு கிடு வென நடுங்க வேண்டாமா? இருக்கட்டும் எனக்கு ஒருவிதமான அலுப்புமேலிடுகிறது. காரணம் இன்னதெனத் தெரியவில்லை.

பாட்டு

பார்ஸி நோட்

அம்பிகா! அம்பிகா! அம்பிகா!!!
அம்பிகா அம்பிகா அம்பிகா
உடல் வலியினால் மிக வருந்தியே
நொந்து நின்றேன் (அ)
கால்கைகள் சோருது பதறுது
தாகமேல் ஆகுது உயிர்போகுது
படுந்துயரதை மனமகிழ்வொறு தீர்த்தருள்வாய் (அ)
இரு-கால்கள் மிகவும் ஓய்ந்துபோகுதே (க)
கருத்துடன் சகிகேளடி
என்-காலைச்சற்று பிடியடி
வருத்தந்தீரடி நான்கொண்ட
வருத்தந்தீரடி
இந்த-வாதை வேட்டையால் வந்ததாமடி (க)

வ-ம். சேடிகளே! என்னால் நிற்க முடியவில்லை. நான் கீழே படுத்துக்கொள்கிறேன். நீங்கள் என் உடம்பைப் பிடித்து எனக்கு நன்றாய் நித்திரை வரும்படி ஒரு கதையுஞ் சொல்லுங்கள்.

அரு. நான் சொல்லலாமா?

அல். நீ தான் சொல்லு.

(அர்ச்சுனன் தன் வரலாற்றையே கதையாகத் தெரிவிக்கிறான்)

நொண்டிச் சிந்து.

அரு. அம்மணி சொல்லுகிறேன்-ஒரு
அழகுள்ள விசித்திரக் கதையை நானே
இந்திரப்பிர சித்த மென்றோர்-நகர்
இங்கிருந்து வெகுதொலை இருக்குதம்மா
அதையொரு மன்னன் ஆண்டார்-அவரை
அன்புள்ளநற் பாண்டென்று உரைத்திடுவார்
இவருக்கும் ஐந்து புதல்வர்-அவர் பெயர்
தருமன் பீமன் நகுலன் சகாதேவனாம்
அவர்களில் பார்த்தனொருவன்-துரொபதையை
அன்புடனே மாலைசூட்ட வில்லைவளைத்தான்
அழகிற் சிறந்த உருவன்-அவன்
ஆய்ந்தாய்ந்து பார்த்துப்பேசுந் தன்மைவாய்ந்தவன்
வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவன்-உலகில்
விருப்பங்கொண்ட சிலமாதை புணர்ச்சி பெற்றவன்
அல்லிக் கிசைந்த கணவன்-இந்த
ஆங்காரக் குணமதை அடக்கியாள்பவன்
அல்லிக் கிசைந்த கணவன்.

(என்று சொல்லிவிட்டு கணையாழியைக் கழற்றிக்கொண்டு ஓடிவிடுகிறான்.)

பாட்டு

ஆரடா ஆரடா-என்ற மெட்டு

ஓடாதே ஓடாதே ஓடாதே ஓடாதே ஓடாதே நீ நில்லடா
கூடாத செய்கைக்குடன் பட்டு வீண் கதை
கூறியதன்மை யெல்லாமறிந்தேனதை
ஏடான ஓலையை எமன் கிழித்ததை
எண்ணாததாலுனக் கென்னடாயோக்யதை
நில்லடா நில்லடா நில்லடா நில்லடா நில்லடா சொல்லுகிறேன்

(அல்லி அடங்காத கோபங்கொண்டு தன் வேலையாட்களைக் கோபிக்கிறாள்)

பாட்டு

முன்னமே சொன்னேனடி-என்ற மெட்டு.

துக்கடா

அல். கேளடி செங்கமலம்-மிகு
கீழ்மையான கேவலம்
கேட்டை வானொரு பாதக னானவன்
கிட்டிவந்த சபலம்
கள்ளனொருவனடி-வந்த
காரணமறியேனடி-தன்
கைகளி னாலென்றன் காலைப் பிடித்துக்
கதையொன்று சொன்னானடி
தேடிப்பிடிக்கவேணும்-பலம்
சேருமென் வீரமும் ராஜாங்க நேர்மையுஞ்
சீக்கிரங் காட்டவேணும்

வ-ம். சேடிகளே! நீங்கள் எங்கே சென்றிருந்தீர்கள். எல்லாமிருந்தும் இந்த மாதிரி திருட்டு வேஷம் போட்டு, என்னிடம் பலவாறு வீண் வார்த்தைகளைப் புகட்டிச்சென்றானே! என் கையிலகப் பட்டிருப்பானாகில் அவன் கதி அதோ கதி தான்! நீங்கள் சீக்கிரமாகச் சென்று அந்தச் சண்டாளன் எங்கு சென்றிருந்தாலும் சரி, முன்பின் விடாமல் தேடிப் பிடித்து அழைத்து வாருங்கள்.

சே. அம்மணி! அப்படியே செய்கிறோம். உத்திரவு தாருங்கள்.

5-வது களம்

சத்தியம் நீர் செய்தால்-என்ற மெட்டு

பல்லவி

அரு. கணையாழி நான் கொண்டு வந்தேனே
கண்ண பிரானே. (க)

அநுபல்லவி

பேடி யுருவெடுத்துச் சேடிபோல் நடித்தேன்
ஓடியே வில்லின் அம்பை கைதனிற் கொடுத்தேன்
கடிந்து மொழியும்படி கதை யொன்று விடுத்தேன்
கணையாழி யெடுத்ததும் உமையிங்கு அடுத்தேன். (க)

வ-ம். கண்ணபிரானே! நீர் சொல்லியவாறு அல்லியிடஞ் சென்று, கணையாழியைக் கொண்டு வந்து விட்டேன். இதோ பெற்றுக் கொண்டு, மணமாலைக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யும்.

கிரு. அர்ச்சுனா! நீ மஹாபுத்திசாலி. இரவில் நித்திரை செய்தாயா! இல்லையா? சீக்கிரமாய்த் தெரிவி.

அரு. பரமாத்மா! கேலியா செய்கிறீர்? உமது தந்திரத்தை அறிவேன்.

பாட்டு

இராகம்-எதுகுலகாம்போதி தாளம்-ரூபகம், ஆதி.

கிரு. தாகவிடாய் தீரதுற்கு தண்ணீர் தந்தால்நானுனக்கு (தா)
தையலாளல்லியைமணஞ் செய்துவைப்பேன்விஜயா
சஞ்சலம்நெஞ்சிற்கொள்ளாமற் என்சொல்லுக்குமிசையா
தாளமுடியாதென்னால் சோகமானேனதனால்
ஆவியகலு முன்னால்போய் வருவாயே இன்னாள் (தா)

வ-ம். அர்ச்சுனா! எனக்கு தாகம் அதிகமாயிருக்கிறது. எப்படியாவது எனக்கு ஜலம் கொண்டுவந்து கொடுப்பாயானால் அப்பால் உனக்கு கல்யாணம் செய்துவைக்கிறேன் போய் வா சீக்கிரம்.

அரு. சுவாமி! தங்களிஷ்டப்படி இந்தக்காட்டில் தேடி தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தவுடன் வேறு பதில்மொழியொன்றுஞ் சொல்லாது கல்யாணஞ் செய்துவைக்க வேண்டும் போய்வருகிறேன்.

(போகிறான்)

கிரு. (தனிமொழி) அர்சுனனோ! எனக்கு ஜலம்கொண்டு வருவதாகப்போகிறான். இவன் ஜலம் எடுக்கும் குளத்தில் அல்லியின் உருவம் அவனுக்குத் தோன்றும்படி அல்லியைப் போல் ஒரு சித்திரமெழுதி குளத்துக்கரையிலிருக்கும் மரத்தின் கிளையில் கட்டிவைத்து பல பல கேலிவிளையாட்டுகளைச் செய்து முடிவில் அல்லியை மணமுடித்து வைக்கிறேன்.

காட்சி - 6

அல்லிக்குளம்

அரு. இதோ! ஒரு குளந்தெரிகிறது. அதில் நமது மைத்துனர்க்கு ஜலம் எடுத்துக்கொண்டு போவோம். (குளத்தைப் பார்த்து) ஆ! என்ன ஆச்சரியம்! நமது மைத்துனர், என்னைத் தண்ணீர் கொண்டுவா அனுப்பிவிட்டு அல்லிமாதையும் எனக்கு முன்னாடியே இங்கு அனுப்பியிருக்கிறார். கண்ணே! அல்லிமாதே!! ஏன் வெட்கப்படுகிறாய்? இங்கு யாருமில்லை வா.

பாட்டு

எக்குலத்திலேயுதித்தாய்-என்ற மெட்டு*

தண்ணீரிலேயிருக்க தையலரே காரியமேன்-சொல்லு-உன்னால்
தாயே அண்ணன் தம்பிமாரை நான் மறந்தேன் உன் மனமோ-
கல்லு
என்னைப்போலே உந்தனுக்குளங்குகிடைப்பான் கணவன் மானே-நீ
இந்தவித தொந்தரவு தந்துமனம் நோகச்செய்வதேனே

வ-ம். ஏ பிரியநாயகி! ஏன் என்னை இவ்வித அவஸ்தைக்குள்ளாக்கு கிறாய்.

பாட்டு

என்னையுமடிப்பவர்கள்-என்ற மெட்டு*

வாடி வாடி அல்லிமாதே மஞ்சமீது கொஞ்சிடுவோம்
மலர்மாலைகள் சூடிடுவோம் மருவிவிளையாடிடுவோம்
மோடி நீ செய்வதேனடி மோகமாகினேனானடி
மோசமெண்ண மாகுமோடி முத்தமொன்று நீ கொடடி
சித்தமும் மயங்குதடி பித்தமிங்கு கொண்டேனடி
சீக்கரமிந்தத் தண்ணீரை நீக்கியெந்தன் சொல்லைக்கேட்டு
(வா)

(கிருஷ்ணன் அல்லி உருவத்தை மரத்தினின்றும் அவிழ்த்து விடுகின்றார். அருச்சுனன் குளத்தில் குதித்து அல்லிமாதை தேடிக் காணாது கரையில் ஏறிநின்று)

அரு. இதுவென்ன மதிமோசம் போனோம்! அல்லியானவள் தண்ணீரிலிருக்கிறாளென்று தேடிப்பார்த்துங் காணோமே! வீண மயக்கம். நல்லது, நேரமாகிறது. கண்ணனோ தாகத்தால் வருந்துவார். சீக்கிரம் ஜலத்தை எடுத்துக்கொண்டு போவோம்.

காட்சி - 7

கானகம்.

அரு. மாதவா! இதோ தண்ணீர்கொண்டு வந்திருக்கிறேன். தாகந் தீர்த்துக் கொள்ளுங்கள்.

---

* நாடகம்: வள்ளி திருமணம். இராகம் - பிலஹரி

* நாடகம்: கோவலன் சரித்திரம்

பாட்டு

இராகம்-பியாக் ஆதி-தாளம்.

பல்லவி

கிரு. இது நேரம் ஏது நீ செய்தாய் அர்ச்சுனா (இது)

அநுபல்லவி

அதிக தாகமாக நானனலிலிடு மெழுகாய்
மதியுருகி நீர்கொண்டுவரச் சொன்னேன் தாமதமாய் (இது)

சரணம்

வனமுழுதிலுமோடிக் குளந்தேடி அலைந்தாயா
வழிதுறை தெரியாமல் மனநிலை குறைந்தாயா
சனிபோல் நானிருக்கிறேனெனவும் நீ நினைந்தாயா
தனியே தாகத்தால் வெம்பிச் சாகட்டு மென்றிருந்தாயா (இது)

வ-ம். பற்குனா! என் தாகம் தீருவதற்கு ஜலம்கொண்டு வருகிறேனென்றுபோய் எவ்வளவு நேரமாயிற்று. இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்?

பாட்டு

(கண்ணாயிரம்படைத்த-என்ற மெட்டு)*

அரு. கண்ணா கனகமணி வண்ணா நான் சொல்வதைக்கேள்
கடுகியபுனல்கொடு வரமிகுவிரைவினில் ஓடினேன்-நீரில்
கரியகுழலரிவை உருவதுதெரியவும் சாடினேன்
எண்ணாமல் தண்ணீருள்ளே பெண்ணாளிருந் தாளென்று
எனதுமனமிளகி புனல்முழுதும் முழுகித் தேடினேன்-ஆதலால்
இருகரமுமயர உருகிமனதுமிக வாடினேன்

வ-ம். கோபாலா! தங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரப்போன அந்தக்குளத்தில் அல்லியைப்போலுருவம் தெரிந்தது. அதை உணராமல் அவள்தான் வந்துவிட்டதாகக்கருதி குளத்தில் இறங்கித் தேடிப்பார்த்தேன்; ஒன்றுமில்லை, ஏமாந்து போனேன், அதெல்லா மிருக்கட்டும்; சீக்கிரம் அந்த அல்லிமாதை நான் விவாகஞ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

பாட்டு

இராகம்-எதுகுலகாம்போதி தாளம்-ரூபகம் ஆதி.

கிரு. கண்ணிரண்டு சொருகுதடா
கனத்தூக்கம் வருகுதடா (கண்)
காணுவாய் நித்திரை செய்தபின் கல்யாணம்
செய்துவைப்பேன்
காண்டீபா நீ நம்பு ஒருக்காலுமென்மொழிதப்பேன்
கானகமாகையால் மிருகங்கள் வருங்காத்திரு
நானுமெழுவேனொரு நாழிகைபொறுத்திரு (கண்)

வ-ம். விஜயா! எனக்கு கொஞ்சம் நித்திரை வருகிறது. என் தலைக்கு அணைபோல் உயரமாக உன் துடையைக் கொடுத்திரு. ஒரு நாழிகை நேரத்துக்குள் நித்திரை தெளிந்து கல்யாணஞ் செய்து வைக்கிறேன்.

அரு. சுவாமி! நான் பலவிதமாக அவஸ்தைப்படுவது உமக்கு வேடிக்கையும் விளையாட்டுமாக விருக்கிறது. உம்மைவிட்டால் எனக்கு வேறுகெதியில்லை என்பதும் தங்களுக்கு நன்றாய்த் தெரியும். நான் துடையைக் கொடுக்கிறேன். சீக்கிரம் நித்திரை செய்து விழியுங்கள்.

(கிருஷ்ணன் நித்திரைசெய்கிறான்)

பாட்டு

நல்லது மாதகிமானே-என்ற மெட்டு

அரு. பாரக்கருங்கல்லை யெடுத்து-துடைக்குப்
பதிலாயணைபோற் கொடுத்து-எண்ணுங்
காரியங்கைக்கொள்ளத்தொடுத்து-அல்லியைக்
காண்பதற்குச் செல்வேன் அடுத்து

(அர்ச்சுனன் பாராங்கல் ஒன்றை தலைக்கு அணைபோல் கொடுத்து எழுந்து அல்லிமாதை நோக்கிப்போகிறான். கிருஷ்ணன் எழுந்து)

கிரு. இவன் கல்லைத்தூக்கிக்கொண்டுவரும்போது எங்கே நமது தலையில் போட்டுவிடுகிறானோ என்று நினைத்தேன். நல்ல வேலை தலைக்கு உயரமாகவைத்துப் போய்விட்டான். இனி நாம் சும்மாயிருக்கலாது. அவனோ அல்லியைத் தேடிப் போகிறான். நாம் நடுவழியில் ஓர் குறத்திவேடம் பூண்டு அவனைச் சந்தித்து குறிபார்த்து வேண்டியதைச் சொல்லி, குளிகைகொடுத்து அல்லிபிறந்த குளத்திலுறைக்கும்படி செய்து

அதனால் அவனைப் பல கஷ்டங்களடையச் செய்து பின்னால் விவாகத்தை முடித்து வைக்கிறேன்.

(போகிறார்)

காட்சி - 8

(குறத்தி வருகிறாள்)

கு. கொச்சிமலை பச்சைமலை எங்களது நாடு
குறவரெல்லாம் வாழுவதும் எங்களது நாடு
யானைமலை குதிரைமலை எங்களது நாடு
அந்த-ஐயனாரும் அறுமுகனும் வாழுவதென் நாடு
தேவாதி தேவரெல்லாந் தபசுசெய்யும் நாடு
உயர்-சித்தர்களும் பக்தர்களும் தேடிவரும் நாடு
அமராவதி இந்திரனும் வாழுமந்த நாடு
உண்மை-தவறாமல்நான் குறியுரைப்பேன் தந்தால் நல்ல யீடு

வ-ம். குறியோ குறி! குறி கேட்கலையோ குறி!

(அர்ச்சுனன் எதிரே வருகிறான்)

பார்ஸி-நோட்.

அரு. இந்த நல்வேளை சுந்தரி போலே
எந்தனி நேரே வந்த நீ யாரு

கு. செங்கைக் குறிபார்த்து சொல்லுங் குறத்தி
சிங்கத்தை யிங்கு அழைக்கும் திறத்தி

அரு. அப்படி யானால் இப்பொழு தேனும்
செப்புவா யானால் சொற்படி யாமோ

கு. செப்பிட எனக்கு சாமர்த்திய முண்டு
இப்பொழுதே எதைக் கேட்டாய் நிகண்டு

அரு. ஊரெனக் கேது பேரனக் கியாது
உண்மையை யிங்கு ஒளியாம லோது

பாட்டு

(பழுப்புக் கருப்பு-என்ற மெட்டு)

அரு. என்கையை நீபார்த்து உண்மைக் குறிசொன்னால்
இங்கு வெகுமதி யாயுனக்கு
இச்சையா யாடை யாபரணங்க ளெல்லாம்
ஈந்திடுவேன் சந்தேக மெதற்கு

எழில்பெற்றிடு உருவத்தொடு
எதிர்நிற்கிற ஒரு சித்தினி (என்)

(குறிசொல்லுகிறாள்)

கு. அஸ்தினாபர மன்னன் புத்திரன்
ஐவரில் நீர் கெம்பீரன்
நல்ல-அழகு விஜய மாரன்
பல-விலையில் விப காரன்

திரு- மாலுடனே இங்குவந்தீர் யாத்திரை உதாரன்
திரு மதுரை அல்லியின்மேல்காதல் மிகக்கொண்டு
தேடி ஓடி வந்தீர் மருண்டு
பதம் பாடி மோக முண்டு

க்ஷேத்ர-தெரிசனத்தில் பலமதனைக் கைமேற்பலன்கண்டு

கு. ஐயா! நீரிருப்பது அஸ்தினாபுரம். உமது தந்தை பெயர் பாண்டு மன்னன். தாயார் பெயர் குந்திதேவி. உமது உடன் பிறந்தவர் ஐந்து பேர்; உமதுபெயர் அருச்சுனன்; நீர் யாத்திரைக்கு வந்த இந்தச் சமயம் மதுரை ராணியாகிய அல்லியின்மேல் ஆசை கொண்டு உடன் வந்த கண்ணனையும்மறந்து காதலுடன் இங்கு வந்திருக்கிறீர்; இது தான் சங்கதி, சரியாயிருக்கிறதா?

பாட்டு

முன்தொடர்ச்சி

அரு. கண்டது கண்டாப்போல் முன்னுள்ள யாவையும்
கட்டுவச்சிச் சொன்னா யின்னமொன்று

நான். காதல்கொண்ட அல்லி மாதெனைச்சேரஇக்
காலம் வருவாளோ சொல்வாயின்று
கண்டத் தணியுங் காரி
வந்துற்றிடு சிங்காரி (கண்)

வ-ம். குறத்தியே! உன் குறியைப்பற்றி சந்தோஷித்தேன். ஆனால் இன்னமொன்று. அல்லியென்று சொன்னாயே, அந்தமாதை நான் கலியாணஞ் செய்துகொள்ள முடியுமா? முடியாதா?

கு. நீர் அந்த அல்லியைக் கலியாணஞ் செய்து கொள்ளும்படி செய்கிறேன். நான் கேட்டதைத் தருவீரா?

அரு. தருவதில் தடையில்லை. சீக்கிரமாய்ச் சொல் தருகிறேன்.

கு. என்னிடம் மூன்றுமாத்திரைகள் இருக்கின்றன. அவைகளைத் தருகிறேன். நீர் கொண்டு போய் அல்லி குளத்திலுள்ள

படித்துறையில் உறைத்துக் கரைக்கவேண்டும். அந்தமாத்திரை நீரில் கரைந்ததும் அந்த அல்லி உமது மேல் காதல் கொண்டு உம்மையே விவாகஞ் செய்து கொள்வாள்.

கட்டி முத்தமிட்டிடக் கல்லாயிருக்குதே என்ற-மெட்டு

அரு. அப்படியானால் மருந்தை ஆரணங்கே தா.

கு. ஆடை ஆபரண மெல்லாம் முன்பு கையில் தா.

அரு. அம்மருந்து பலிக்காமல் போனா லென்ன செய்வது.

கு. அவ்வுடமை எந்தனுக்கு ஏனெனக்கது.

அரு. நானறிய உன் குடிசை எங்கேதா னிருப்பது.

கு. நாலுமலைக்கு நடுவே தானிருப்பது.

அரு. நாலுமலைக்கு நடுவே நானறிவ தெவ்விதம்.

கு. ஏழுகுடிசைக் கெதிரே என் குடியிருப்பது

அரு. நல்ல தங்கு உன்னைவந்து நானழைப்ப தெவ்விதம்.

கு. சக்கம்மா ராமக்கா ளென்றாற் பாப்பீர் என்னிடம்.

வ-ம். ஐயா! இந்த மாத்திரையை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளும் மெத்தனமாக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் என் பெயர் கெட்டுப்போம். போய்வாரும்.

அரு. அது எனக்குத் தெரியாதா? சென்று வருகிறேன்.

பாட்டு

வாழ்ந்தவாழ்வும் போச்சே-என்ற மெட்டு.

அரு. உன்-ஆசையாலே நானே-இங்கு
அலைகுறேனடி தேனே-உன்
அல்லியே மெல்லியே
அல்லியே மெல்லியே (ஆசை)

காட்சி - 9

மாத்திரைகளை உறைத்தல்.

அரு. ஏ அல்லி! மோகனாங்கியான உன்னைப் பார்த்ததுமுதல் என்மனமானது மோகாந்த கரத்தில் மூழ்கி வாதை யடைகிறது. இந்த வேளை என் முன்வந்து நாதா! என்றழைத்துச் செவ்விதழ் முத்தமொன்று தரக்கூடாதா? கண்மணி.

(அல்லியின் வேலைக்காரிகள் தண்ணீரெடுக்க வருகிறார்கள்)

சேடி. இதென்ன! யாரோ ஒரு மனிதன் இந்தப்படியின்மீது அமர்ந்து கொண்டு, நமது அல்லியின் பெயரைச் சொல்லி ஏதோ சில மாத்திரைகளை நீரில் உறைத்துக் கறைக்கிறான். என்ன துணிவு. இருக்கட்டும்; நாம் போய் நமது அரசியிடம் தெரிவிக்கலாம்.

சேடி. ஐயா! நீர் யார்.

மணிப்புரஞ் சென்று-என்ற மெட்டு

சேடி. எதற்காக வந்தீர் ஏக்கத்தால் நொந்தீர்
எம்மிடம் உரைத்திடுவீர்
இனி மேல் நீ ரிப்படி செப்புவீரானால்
தண்டனைக் குள்ளாவீர்

அரு. அழகு நிறைந்த அல்லியின் பெயரை
அறைவதினா லென்ன
நீங்கள் அவசரமாகவே சென்றிங் கவளை
அழைத்துமே வருவீ ரின்று —

சேடி. ஐயா! நீரென்ன செய்வீர். அம்மணியின் பெயரைச் சொல்லாமல் இருக்கமுடியாதோ? நீரிங்கேயே இரும். உம்மை வந்து பார்க்கிறோம். இன்னும் சிறது நேரத்தில்.

அரு. சீக்கிரமாக அல்லியைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

(சேடிகள் சென்று விட்டார்கள்.)

காட்சி - 10

அல்லி தர்பார்.

பாட்டு.

கும்மி வர்ணமெட்டு

சகி. தங்கக்குடமெடுத்து நாங்கள் தண்ணிக்குப்போயிருந்தோம்
அங்கு நடந்தசேதி சொல்ல அஞ்சிமிகப் பயந்தோம்
பெண்ணாசை கொண்டதொடு மனப்பித்துப் பிடித்தபயல்
மண்ணாசை நீக்கியவன் மருந்து உறைக்குஞ்செயல்
அல்லி அல்லியென்பான் அடியடி வாடியென்பான்
இல்லையோ க்ருபையென்பான் இனிவிடு மோடியென்பான்
இப்படிச்சொல்லிக்கொண்டு அவனிருந்து மருந்துறைப்பான்
தப்பிதமென்று சொன்னாலவன் தானுங்கேளாதிருப்பான்

வ-ம். மகாராணியாரே! நாங்கள் வழக்கம்போல் ஜலம் கொண்டுவர தாங்கள் பிறந்த குளத்திற்குப் போயிருந்தோம். அங்கே ஒருவன் படித்துறையில் உட்கார்ந்து ஏதோ கையில் சில மாத்திரைகளை வைத்துக்கொண்டு, தங்கள் பெயரைச் சொல்லி உரைத்துக் கரைத்துக் கொண்டிருந்தான். நாங்கள் அவனை அதட்டிப் பார்த்தோம்; அவன் சித்த சுவாதீனமில்லாதவன் போல் தங்கள் பெயரையே சொல்லித் திரிகிறான்.

அல். அடிதோழியரே! நான் பிறந்த குளத்தின் கரையில் உட்கார்ந்துக் கொண்டு கொஞ்சமேனும் அஞ்சிடாமல் என் பேரைச் சொல்லி மருந்துறைக்கும் தைரியமுடையவனும் இருக்கிறானா? அவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரி, இந்தச்சமயமே கொன்று மறுவேலை பார்க்கவேண்டும். ஆகையால்,

பாட்டு

ஐமேலேகுதரத்து-என்ற மெட்டு

வாய்கூசாமலெந்தன் பேரைச்சொல்வோனுக்
கென்னமாய் தண்டஞ் செய்திடலாம்
மாதர்களே ஓதிடுவீர்
மாறாக நாம் விட்டால் நேராய் நகைத்
திடாரோ ஊராரெல்லாம்

வந்தவன் அந்தர
இந்திரனாயினும் சந்திரனாயினும்
அவன் வாணாளை யொழிக்க இதுவேகாலமதிக்க
மதிமே வியதாம் விதமே மொழிவீர்
வஞ்சகம் நெஞ்சினில் கொண்ட
வண்டனைச் சும்மா விட்டிடலாமா (வா)

வ-ம். சகிகளே! அவனை இந்தக்ஷணமே இழுத்துக்கொண்டுபோய் வைகையாற்றில் சுடுமணலில் கட்டியுருட்டிவிடுங்கள். போங்கள்.

காட்சி - 11

ஆற்று மணல்

பவ. ஐயா! இங்கே வந்து இப்படி நில்லும். அல்லி வந்து சேருவாள்.

அரு. அப்படியா! நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்.

பவ. என்னடி செங்கமலம்! நம்மால் சிறிது நேரங்கூட இந்த மணலில் நிற்க முடியவில்லை. இவன் எப்படியடி நிற்கிறான்.

ஆற்றங்கரை

பாட்டு

எந்தவூரோ நீ யிருப்பதேது-என்ற மெட்டு

அரு. ஆற்றுமணலில் வீற்றிருக்க அல்லிவருவாளோ
ஆணைந்துவிலை செய்து சுகம் அன்பாய்த்தருவாளோ
குளிர்ந்தஇந்தஇடத்தில்வந்து கூடுவாளோஅல்லி
கொஞ்சிமுத்தமொன்று தருவாளோ கேலிசொல்லி
சில்லென்றுகுளிர்ச்சி மிகச்சேர்ந்தஇந்தவிடத்தில்

அவள். சேர்ந்திருந்தால் தானேயின்பம் ஜெனிக்கு மெந்தனுளத்தில்

வ-ம். மாதர்களே! உங்கள் அரசியாகிய அந்த அல்லிமாது இங்கே எப்பொழுது வருவதாகச் சொன்னாள்? போய் சீக்கிரம் அழைத்துக் கொண்டு வாருங்கள்.

சேடி. ஐயா! நீர் இங்கேதான் இரும். நாங்கள் சென்று அழைத்து வருகிறோம்.

சகி. அடி! என்னடி நம்முடைய கால்கள் சூடுபொறுக்கமாட்டாமல் கொப்பளமுண்டாகிறது. இவனென்ன மகிழ்ச்சிகொண்டு நமது ராணியார் எப்பொழுது வருவார்களென்று ஆனந்தமாய் கேட்கின்றானே! வாடி, போய் இந்தச் சமாச்சாரத்தை ராணியிடம் சொல்வோம்.

(போகிறார்கள்)

12-வது களம்

அல்லியின் சபை

சகி. மகாராணியாரே! தங்கள் உத்தரவுப்படி அவனை ஆற்றுமணலில் நிறுத்தினோம். அவனுக்கொன்றும் அவஸ்தையாகத் தோற்றவில்லை. எங்களுடைய கால்களெல்லாம் கொப்பளித்து விட்டது அம்மணி!

பாட்டு

போகாதே கூடியெனை-என்ற மெட்டு

அல். ஆஹா இதுவே ஆச்சர்யமடி ஆரணங்கேமாதே
ஆற்றுமணல் சூடுதாக்காதிருக்க அவன் மயாங்கற்று
ஆசையென்மேலுற்று அடைந்தான் போக்கற்று-இனி
அவனை எளிதினில் நாமும் விடுத்தால்
நகையாரோ சற்று ஆதலாலே மற்று

ஆலோசனை விட்டு நீர் அதிசீக்கிரமாய்
உயிர்போக்கிவர இசைவீரம் மட்டு
எந்தன் சொற்குட்பட்டு நீரிப்போதே நீரிப்போதே (ஆ)

வ-ம். அடி! அவனை இப்போது என்ன செய்யவேண்டுமென்றால் கொலைக்குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதுபோல் நான் சொல்வதைக் கவனியுங்கள்.

பாட்டு

என்பேரைச்சொல்-என்ற மெட்டு

ஆற்றுமணல் சூடுதாக்காதிருக்க
அவன் மாயங் கற்றிருப்பான்
ஆனதினாலவனைத் தூக்கில் போட்டிட்டால்
ஆவியொழிந்திறப்பான் ஆவியொழிந்திறப்பான்
அண்டியே இன்று போய்க்கொன்றுவாரும்
அந்தப்படு பாவிதன்னை அந்தப்படு பாவிதன்னை
அந்தப்படு பாவிதன்னை

வ-ம். அடி! இப்பொழுதே நான் சொன்னபடி அவனைத் தூக்கில் போட்டுக்கொன்று விடுங்கள் போங்கள்.

சகி. அம்மணி! உத்தரவுபோல் செய்கிறோம். (போகிறார்கள்)

காட்சி - 13

தூக்குமரம்

தங்கை எங்கே-என்ற மெட்டு.

தாளம்-சாப்பு

அரு. எங்கே! எங்கே! எங்கே!
இங்கே-வருவாளென்ற மங்கை யல்லி மாதை இங்கு
(எங்கே)
பெரும்-மடுவிலிருந்து கூட்டி மணற்கரை சேர்த்தீர்
பருவ-மங்கை வருவாளா இங்குமே காத்தீர்
வீண்-காலதாமதம் வேண்டாம் கன்னிமார்களே (எங்கே)

அரு. பெண்களே! எவ்வளவு நேரமாகிறது. இன்னும் உங்களரசி வரவில்லையே! போய் அழைத்துக்கொண்டு வாருங்கள் சீக்கிரம்.

சகி. ஐயா! இதோ இந்த இடத்தில் நின்று அந்தக் கயிற்றை கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டால் உடனே எங்கள் ராணியார் வந்து தங்களை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய்

கல்யாணஞ் செய்து கொள்வார்கள். ஊம். சீக்கிரம் போட்டுக் கொள்ளும்.

பாட்டு

நல்வாக்கு நீ கொடடி எடுப்பு

அரு. பார்த்துமறியேனடி பாவையரே உண்மையடி-நீங்கள்
பண்பாயதனை எனக்குக் காண்பித்தாலந்தப்படி
செய்வேண்டி.

வ-ம். அடி பெண்களே! நீங்கள் சொல்லியபடி அந்தக் கயிற்றைப் போட்டுக்கொள்ளத் தெரியவில்லை. ஆகையால் உங்களில் எவரேனும் முதலில் போட்டுக் காண்பித்தால் அப்பால் நான் அதன்படி செய்கிறேன்.

(செங்கமலம் என்ற தாதியானவள் போட்டுக் காண்பிக்கிறாள்.)

அதுசமயம் கால் இடறிவிட கழுத்தில் கயிறு சுருக்கிட்டு மடிகின்றாள்.

பாட்டு ஷெ தொடர்ச்சி

அரு. நாக்கைப் பிதுக்குவதும் நல்லூஞ் சலாடுவதும்
நான்கண்டு கொண்டேனடி நீ யிறங்கிவாடி நாரியரே
போதுமடி

செங்கமலம் இறந்தவுடன் பவளச்சேனா மற்றவரைக் கூட்டிக்கொண்டு அல்லியிடம் செல்கிறாள்.

காட்சி -14

அல்லியின் சபை

அல். பவளச்சேனா! உன் முகம் ஏன் வாட்டமாக இருக்கிறது. தெரிவி..

பவ. அம்மனி தாங்கள் சொல்லிய பிரகாரம் அந்த சண்டாளனைக் கொண்டுபோய் தூக்குமரப்படியில் ஏறும்படி சொன்னோடிம். அவன் நீங்கள் யாராவது ஏறி நின்று காண்பித்தால் அதன்படி செய்கிறேனென்று தெரிவித்தான். உடனே நமது செங்கமலத்தை ஏறி நின்று காண்பிக்கும்படி செய்தோம். திடீரென்று தூக்கு மரத்தின் கயிறு அறுந்து விழுந்து இறந்து விட்டாள் செங்கமலம்.

பாட்டு

அல்.	சேனைக்கதிபதி	செங்கமலம்	
	செத்து	மடிந்தாளோ	
	செத்துமடிந்தாளோ உயிர்	இத்தினந்துறந்தாளோ	(சே)
	வேகமதாவே	பாதகனைக்கொன்று	
	காளி கோயில் முன்னே	போடுபலி இன்று	(சே)

வ-ம். பவளச்சேனா! அந்தப் பாதகனை அழைத்துக்கொண்டு போய் காளியம்மன் முன்னிலையில் நிறுத்தி பலியிட்டு வாருங்கள்.

பவ. அம்மணி! அப்படியே செய்து வருகிறோம்.

காட்சி - 15

காளி கோவில்

பவ. ஐயா! இங்கே நில்லும். அல்லியம்மாள் இப்பொழுது வருவார்கள்.

(அர்ச்சுனன் நின்று கொண்டிருக்கிறான்.)

கொலையாளிகள்

கொ. ஏ மகாமாயி! செகத்ரக்ஷிணி! ஏ பயங்காரி! துஷ்டர்கள் சங்காரி! இந்த நரபலியை ஏற்றுக் கொள்ளுவாய் ஜெகத்காரணி.

காளி சொல்லுகிறாள்

கொலையாளிகளே! உங்கள் அரசிக்கு எப்படி ஆண் வாடையாகாதோ, அதே மாதிரி எனக்கு இந்த ஆண் பலியை ஏற்றுக் கொள்ள முடியாது.

பவ. வாஸ்தவந்தான். அம்மணியிடஞ் சென்று தெரிவிப்போம். வாருங்கள்.

காட்சி - 16

அல்லியின் சபை.

பவ. அம்மணி! தாங்கள் உத்திரவின்படியே கொண்டு காளியின் முன்னிலையில் நிறுத்தி பலியை ஏற்றுக்கொள்ளும்படி வருந்தினோம். அதற்குக் காளிதேவி! உங்கள் அரசிக்கு எப்படி ஆண் வாடையாகாதோ, அதேமாதிரி நானும் ஆண் பலியை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டது.

என்னுடன் பிறந்த பொன்னுருவி-என்ற மெட்டு

அல்.	மந்திரம் தந்திரம்	முற்றிலுங் கற்றவன்
	முன்னே அங்கே	வந்து நின்றவனே

அந்த. மூர்க்கனைக் கொண்டுபோய் பூதக்கிடங்கினில்
மூடுங்கள் இவ்விருள் வேளையிலே.

வ-ம். அவனை அழைத்துக்கொண்டு போய் பூதக் கிடங்கினில் போட்டுக் கொல்லுங்கள்.

பவ. அப்படியே செய்கிறோம்.

காட்சி - 17

பூதக் கிடங்கு

(அர்ச்சுனனைப் பூதக்கிடங்கில் தள்ளிவிடுகிறார்கள்)

காட்சி - 18

அல்லி தர்பார்

(பரமாத்மா மெல்லிவேடம் பூண்டு வருகிறார்

பாட்டு

மைத்துனா மைத்துனரே - என்ற மெட்டு

மெல்லி. கணவனைக் காணாமலே கலங்கித் தவிக்குறேன். இனி என்ன செய்குவேனான் ஏந்திழையாள் புருஷனைக் காணாமலே புலம்பித் தவிக்குறேன். வருஷமொன்றாகவே வாடித் தவிக்கிறேன்.

(சகிகள் மெல்லியை அல்லியின் தர்பாருக்கு அழைத்துச் செல்கிறார்கள்)

அல்லி. யாரம்மா நீ?

மெல. என் பேர் மெல்லி என்பார்கள்

அல். நீ எங்கு வந்தாய்?

மெல். நானிங்குதான் வந்தேன்

அல். எதற்காக நீ வந்தாய்

மெல். என் கணவனைத் தேடி

அல். உன் நாதன் எவர்? பெயரென்ன?

மெல். அவர் கதையைச் சொல்லுகிறேன்.

அல். அவ்விதம் நீ சொல்லிடுவாய்

மெல். அம்மா, மகாராணியாரே! என் பேர் மெல்லி. எனக்கு கல்யாணமாகி வருஷம் ஒன்றாச்சு. என் புருஷனுக்கு என் தங்கையாகிய அல்லி மீது அதிக ஆசையேற்பட்டு அவளையும் கல்யாணம் செய்து கொடுக்கச் சொல்லிக் கேட்டார். என் பெற்றோர்கள் சம்மதிக்காததினால் அவருக்கு என் தங்கை

அல்லி மீதுண்டான ஆசையால் பைத்தியம் பிடித்து நின்றவிடத்திலெல்லாம் அல்லி! அல்லி!! என்று சொல்லிக் கொண்டே திரிவார். தண்ணீர் துறைகளயில் உட்கார்ந்து கொண்டு கல்லையும் மண்ணாங்கட்டிகளையும் எடுத்து உறைத்துக் கொண்டேயிருப்பார். என்னை விட்டுப் பிரிந்து எட்டு நாளாச்சு. இன்னும் வரவேயில்லை. நானும் தேடாத இடமேயில்லை. அம்மணி!

அல். பெண்ணே, உன்னுடைய புருஷன் என் பேரைச் சொல்லிக் கொண்டே குளத்தங்கரையில் மாத்திரைகளை உறைத்துக் கொண்டிருந்ததால் கோபங்கொண்டு அவனை பூதக் கிடங்கில் தள்ளிவிட உத்திரவிட்டேன். நீ இப்போதே அங்கு போய் அவனை அழைத்துச் செல். அடி சகி! நீயும் கூடப்போய் பூதக் கிடங்கினின்றும் அவனை விடுவித்து இவளிடம் சேர்ப்பித்துவிட்டு வா.

(மெல்லியும் சகியும் போகிறார்கள். அர்ச்சுனன் அங்கு பாடிக் கொண்டிருக்கிறான்)

பாட்டு

பருவ காலத்தை வீணாய் - என்ற மெட்டு

அரு. மன்மதன் கணைகளென் மார்பைப் பிளக்குதடி அல்லி - உன்
மனமிரக்கங் கொண்டு வருவதைப் போதடி அல்லி
சித்தஜன் கோபங் கொண்டு சீறி வதைக்கிறாண்டி அல்லி - என்
தேகம் நொந்தேன் நீ வந்து சேருவதைப்போ அல்லி

சகி. அம்மா, இதோ உன் கணவன், அழைத்துக் கொண்டு போ! நான் போகிறேன். (போகிறாள்)

மெல். ஐயா, வாருங்கள். உங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்கள்.

அரு. யார்! யார்!! அல்லியிடந்தானே! இதோ வருகிறேன். புறப்படு சீக்கிரம்!

காட்சி - 19

கானகம்.

பகவான் நித்திரைசெய்துகொண்டிருக்கிறார்.

அருச்சுனன் வருகிறான்.

அரு. ஆஹா! நல்லவேளை, இன்னும் நித்திரைசெய்து கொண்டிருக்கிறார். நாம் போய்வந்த சமாச்சாரம் தெரியாதபடி இருக்கட்டும்.

அருச்சுனன் கல்லையெடுத்துவிட்டு முன்போல் துடையைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு,

பாட்டு

திண்டுக்கல் ஜானகி என்ற மெட்டு

அரு. இன்னும் நித்திரைசெய்தால் எப்படி நான்பிழைப்பேன்
எழுந்தருள் செய்யுமை யா
என்மனச் சோகந்தீர ஏந்திழையாளை
மணமே செய்துவையுமை யா

வ-ம். கோபாலா! எவ்வளவு நேரமாகத் தாங்கள் நித்திரைசெய்து கொண்டிருக்கிறீர்கள்? என்னுடைய துடைகளும் வலியெடுத்துக் கொண்டதே! சீக்கிரம் எழுந்திருங்கள்.

கிரு. பார்த்தா! நான் வெகுநேரம் நித்திரை செய்திருப்பேன்போல் தோன்றுகிறது! உன்னுடைய அதிஷ்டந்தான். என்றுமில்லாத தூக்கம் இன்றுவந்தது. இன்னும் என் கண்ணை விழித்து உன்னைப் பார்க்க முடியவில்லை! அருச்சுனா! இதுவரையில் என் தலைக்குக்கீழ் உன்னுடைய துடையை வைத்துக் கொண்டிருந்தாயே உன் துடைவலிக்கிறதோ, பாபம் என்னால் உனக்கு பெருங்கஷ்டம்!

அரு. சுவாமி! ஒருவிதத்திலா பலவிதத்திலும் வலிதான், போகட்டும், அல்லி மாதைக் கல்யாணம் செய்துவையுங்கள்!

பாட்டு

சாகஉமக்கு விதிவந்ததோ - என்ற மெட்டு*

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ரூபகதாளம்.

அரு. என்ஜீவன் எமலோகம் போகுது
இன்னமுமக்குக் கேலியாகுது
அன்பிருந்தால் மணஞ்செய்துவையும்
அல்லாவிட்டாலென் சிரசைக் கொய்யும்
அல்லியென்னும் பெண்ணைச்சேர்வதெப்போ
ஆனந்தமாய் லீலை செய்வதெப்போ
கொல்லுதையோ பாவி மார னம்பு
கோபாலனே உனக்கேனோ வம்பு

கிரு. விஜயா! அதெல்லாமிருக்கட்டும். நான் நித்திரைசெய்யும்போது ஒரு சொப்பனங்கண்டேன். அது உண்மையாயிருக்குமென்று

* நாடகம்: பவளக் கொடி சரித்திரம்

நம்பு வதற்கில்லை. ஆனாலும் அதைச்சொல்லுகிறேன்கேள், நீ என் தலைக்குக்கீழ் ஒரு பாராங்கல்லை வைத்துவிட்டு நீ காட்டின் வழியாக அல்லியைத்தேடிச்சென்றதாகவும், அங்கோர் குறத்தி உன்னைச் சந்தித்து உன்னிடமுள்ள ஆடையாபரண மெல்லாம் வாங்கிக்கொண்டு ஏதோ குளிகை கொடுத்ததாகவும் அதைக் கொண்டு அல்லி பிறந்த குளத்தின் கரையில் உறைக்கும் போது அல்லியினுடைய தோழிப் பெண்கள் உன்னைப் பிடித்துக் கொண்டுபோய் பல அவஸ்தைப்படுத்தி விடுத்ததாகக் கேட்டேன். இவை யாவும் உண்மையா! பொய்யா! சொல்?

அரு. மைத்துனா!

விருத்தம்.

கிரு. அணிபணி யுள்ளதெல்லாம் அவளிடம் சென்றுவாங்கித்
துணிவுடன் வந்தாயானால் தோகையா ளல்லிமாதை
மணமது செய்துவைப்பேன் மறுத்துரை யாடிடாமல்
குணமுட னின்றே யந்தக் குறத்தி யினிடஞ்செல்வாயே.

வ-ம். அருச்சுனா! இப்படி யாராவது செய்வாருண்டோ! ஏன் உனக்கு அவ்வளவு அவசரம். நான் தான் தூங்கிவிழித்தவுடன் உனக்கு வேண்டியதைச் செய்வதாகச் சொன்னேனே! சரி, சீக்கிரம் அந்தக் குறத்தியிடஞ்சென்று என் ஆடையாபரணங்களை வாங்கிக் கொண்டுவா!

அரு. அப்படியே ஆகட்டும் சுவாமி!

(மலைத்தொடர்)

(பாட்டு)

சிலம்போ என்றமெட்டு* - மேலெடுப்பு

அரு. என்னயிந்தக் கெதியாய் விடுத்த
ராமக்கா ராமக்கா ராமக்கா
இங்கு சீக்கிரத்தில் வந்திடடி
ராமக்கா ராமக்கா ராமக்கா
உண்மையாய் சொல் ஏமாற்றினையே
ராமக்கா ராமக்கா ராமக்கா
உன்மருந்து பலிக்காமற் போச்சுதடி
ராமக்கா ராமக்கா ராமக்கா

-----

* நாடகம்: கோவலன் சரித்திரம்

(பாட்டு தர்க்கம்)
என்னஏவல் சொன்னாலும் - என்ற மெட்டு

குற. எவனடாயென் பேரைச்சொல்லி
இங்கே கூப்பிட்டாய் சொல்லு
அரு. எனையறியாயோ நீ முன்னே
ஏண்டி வந்திங்கே நில்லு
குற ஏதக்கென்னை நீ அழைத்தாய்
இங்கவ் விபரஞ் சொல்லு
அரு. என்னுடமை யாவுங்கொண்டு
தந்துநீ அங்கே செல்லு
குற. ஏதடா உடமைகள் பாதகா ஓடடா
அரு. இனியுனை யெளிதினில் விடுவேனோ விடுவேனோ
கொடு கொடு கொடு கொடு இப்போது

குற. அடே அய்யே! நீ யார்? எங்கேயிருப்பது? நகைகளாவது ஆடைகளாவது நான் எப்போ உன்னிடம் வாங்கினேன். என்ன சுத்தப் பொய்க்காரனாயிருக்கிறாயே! போபோ! இங்கே நிற்காதே! என் புருஷன் அண்ணன்மார்கள் பார்த்தால் உன்னைக் கொன்று போடுவார்கள்.

அரு. ஓகோ! ஏது நீ மகா ஜாலக்காரியாக இருக்கிறயே! என்னை நீ பார்க்கவில்லையென்று சாதிக்கிறாயே. என்னுடைய உடமை களையெல்லாம் வாங்கிக்கொண்டு மருந்து கொடுக்கவில்லையா! என்னை ஏமாற்றலாமென்று பார்க்கிறாயா! அது முடியாத காரியம்!

விருத்தம்

அரு. மருந்தது பலிக்காவிட்டால் வந்துகேள் உடமையெல்லாம்
திரும்பநான் தருவேனென்று செப்பினை மறந்திட்ட
கருந்தடங் கண்ணிநீயோர் கைக்காரி யறிந்து கொண்டேன்
பொருந்தநீ கொடுக்காவிட்டால் போகநான் விடமாட்டேன்.

பாட்டு

இராகம்-மோகனம் தாளம்-ஆதிதாளம்.

விடமாட்டேன் உன்னை விடமாட்டேன்
மிக இதமுரைத்தாலும் விடமாட்டேன்

அடமாகிய மொழியதுமேனோ - என்
ஆடையாபரணமெல்லாம் நீ என்னிடமே தராமல் (விட)

வ.ம். இந்தா! மரியாதையையாக எல்லாம் கொண்டு வந்து கொடுத்தாலாச்சு, இல்லையேல் உன்னை லேசாக விட்டுப் போவன் என்று நினைக்காதே!

பாட்டு

ஓங்கு புகழ்தங்கும் லலிதாங்கி நானடா - என்ற மெட்டு

குறத்தி. அண்ணன் தம்பியான குறவரே இங்கு வாரீர்
அநியாயமிவன் செய்து நிற்பதைப் பாரீர்
புண்ணாக மேனி மெலிந்தேன். வேதனையடைந்தேன்.
இந்தப் - போக்கிரிப் பயலை யோட்டி அப்பால்
பலபல சேதிகளை பேசி நிற்கிறான்
பாவையென்மடி பிடித்திழுத்து நிற்கிறான்

(குறத்தியின் அண்ணன்மார்கள் வருகிறார்கள்)

குற. அண்ணே! இவன் என்னிடத்தில் குளிகை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக நகைகளைச் சொடுத்து விட்டுப் போதனான். அதுக்கும் அதுக்கும் சரியாப்போச்சு. இப்போ நகைகளை எல்லாம் கேட்சிளேன். அதெப்படித் தரமுடியும்?

அரு. அய்யா, இவன் என்னிடம் குளிகையைக் கொடுத்து என் ஆபரணங்களை எல்லாம் வாங்கிக் கொண்டாள். ஆனால் அந்தக் குளிகையால் என்னுடைய காரியம் எதுவும் முடிய வில்லை. ஆகையால் இவள் கூறியபடி என்னிடம் என்னுடைமைகளைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

குற. இந்தாடா அய்யே! உன்னுடைமைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு போ. இங்கே நில்லாதே

கானகம்

அரு. சுவாமி! தாங்கள் சொல்லியபடி இதோ ஆடையாபரணங்களை வாங்கி வந்துவிட்டேன். இனியேனும் அல்லியை எனக்கு மணம்முடித்து வைப்பீரய்யா.

கிரு. அருச்சுனா, இப்போது உன்னை ஒரு பாம்பாக்கி நான் ஒரு பாம்புப் பிடாரனாக வேடம் பூண்டு உன்னை அல்லியின் அரண்மனைக்கு கொண்டு வந்துள்ளது. உனக்கு என்ன செய்ய வேணடுமோ செய்கிறேன். பின்பு அவளைக் கல்யாணஞ் செய்து வைக்கிறேன்.

காட்சி - 20

மதுரை நகரில் கடைவீதி.

இராகம்-புன்னாகவராளி தாளம்-ஆதி.

பாம். நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைக்கொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே (நா)

(பாம்புப்பிடாரன் இந்தப்பாம்பை ஆட்டிவைக்குஞ் சமயம், பாற்குடங் கொண்டுபோகுஞ் சிலமாதர்கள் தங்கள் குடங்களை இறக்கிவைத்துவிட்டு வேடிக்கைபார்த்தார்கள். அந்தச் சமயம் அந்தப்பாம்பு, அந்தக் குடத்திலுள்ள பாலை முற்றிலுங் குடித்துவிட்டு மீண்டும் ஆடியது.)

அல். சேடிகளே! ஏன் உங்கள் முகம் வாட்டமாயிருக்கின்றது. தெரிவியுங்கள்.

சேடி. அம்மணி! நாங்கள் வரும் வழியில், ஒரு பாம்புப் பிடாரன் தன் பாம்பை ஆட்டிவைத்துக்கொண்டிருந்தான். நாங்கள் பாற்குடத்தை இறக்கி வைத்து, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தச் சமயம் திடீரென்று, அந்தப் பாம்பு, எங்கள் குடங்களிலுள்ள பாலை முற்றிலும் குடித்து விட்டது. இதைப்பற்றித்தான் கவலை.

அல். சேடிகளே! கவலைப்படவேண்டாம்! அமருங்கள். சேவகி! இங்கேவா! நீ சீக்கிரமாகச் சென்று தெருவில் ஒருவன் பாம்பை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கின்றானாம்; அவனை அவன் பாம்புடன் என்முன்னே அழைத்துக்கொண்டுவா.

சேவகி. அப்படியே செய்கிறேன்.

காட்சி - 21

கடைத்தெரு

(பாம்பாட்டி இடம்)

சேடி. ஏ, பாம்பாட்டி! உன்னை எங்கள் மகாராணி அழைத்து வரும்படி கட்டளையிட்டார், எங்களோடு வா போகலாம்.

பாம். என்னாத்துக்கு வாரேனுங்க, நீங்க போங்கோ, பாம்பைக் கூரையில் மூடிக்கினு வாரேனுங்க.

(எல்லோருமாக அல்லியிடம் போகிறார்கள்)

அல்லிராணி தர்பார்.

சகி. அம்மணி! பாம்புப் பிடாரன் வந்திருக்கின்றான். அழைத்துக் கொண்டு வரவா?

அல். இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்.

பாட்டு

நாதர்முடிமேலிருக்கும்-என்ற மெட்டு

அத்திமரத்திலே முட்டை யிட்டு
ஆவரங்காட்டிலே குஞ்சு பொரிச்சு
குஞ்சுக்கு இரைதேடப் போனபாம்பே
குதித்துக்குதித்து நின்றாடாய் பாம்பே
நானாட்ர பாம்பு நல்ல பாம்பு-என்
தம்பியாட்ர பாம்பு தண்ணிப் பாம்பு.

பாம். அம்மோய்! பாம்புப் பிடாரன் கும்பிடுகிறேன் அம்மோய்!

அல். அடே பாம்புப்பிடாரா! உன்னிடத்தில் என்னென்ன பாம்புகள் இருக்கின்றன.

பாம். அம்மோய்! சொல்றேன் அம்மோய்! கேட்டுக்கிங்கே அம்மோய்!

பாட்டு

இராகம்-புன்னாகவராளி தாளம்-சாப்பு

பாம்பு விபரஞ் சொல்வேன்
பாராளும் ராணியே கேளாயம்மா
சோம்பலில்லாமல் பரி
சுத்தகுணமதுஉற்ற அம்மா
கல்லுபிளந்து செல்லும்
கட்ட விரியனென்றிட்ட பாம்பு அம்மா
சொல்லுங் குணமுடைய நல்ல
கொம்பேறி மூக்கனென்றிட்டபாம்பு அம்மா
பச்சை நிறப்பாம்பு அதை
பார்த்தால் பயங்கொள்ளும் வண்ணப்பாம்பு அம்மா
மாணிக்க நாகமது என்
வசத்திலிருக்கிப்போதே பார்க்கலாம்

அல். அடே! மாணிக்கநாகம் இருக்கிறதல்லவா? அதையெடுத்து விளையாடச்செய் பார்க்கலாம்.

(பாம்புப்பிடாரன் பாம்பை ஆட்டுவிக்கிறான் அல்லிராணி அதைப்பார்த்து சகிகளிடம்)

பாட்டு

இராகம்-பூரிகல்யாணி தாளம் ரூபம்.

பல்லவி

அல். ஆடும்வினோதத்தைப்பாரடி பார்க்க
ஆசைப்படாதவ ராரடி (ஆடு)

அநுபல்லவி

தோடுங்கடகமு மாகச் சிவபிரான்
சூடும்பாம்புகளும் ஈடாகுமோடிதான் (ஆடு)

சரணம்

இப்பிடாரன் குழல் கானமும் இசை
வாகக்கேட்கவரும் ஞானமும்
தப்பிப்போகாமற் ஜதிக்கிணங்கி நின்று
தத்தித்தை தித்தித்தை ததிங்கிணத்தோமென்று (ஆதி)

அடி சகிகளே!

பாட்டு

மாலை விழுந்தபோதே-என்ற மெட்டு*

மாணிக்கநாகமிது என்
மனதிற்குகந்ததிது கிட்டி
வந்துநிற்கிற விந்தைபற்பல கண்டதைச்சொல
எந்தவிதமுடியும் இய
லாதுநானெப்படியும் இவன்
இங்குவேண்டுஞ் செல்வங்களீந்திதை
இன்றுவாங்க விரும்புறேன் புவி
தாங்குகின்ற அரவோ இங்கு
தானெப்படி வரவோ சிவ
சங்கரன்பிரி யங்கள்கொண்டா
வங்கள்கங்கண மொன்றுகொண்டதும்
இந்தவித விந்தையை யறிந்ததே

* நாடகம்: கோவலன் சரித்திரம், இராகம்-புன்னாக வராளி தாளம்-ஏகம்

வ-ம். அடி தோழிகளே! இந்தப்பாம்பு ஆடினதைப் பார்த்ததிலிருந்து என் மனமானது அந்தப் பாம்பினிடத்தில் அதிக விருப்பத்தை யுண்டாக்குகிறது. ஆகையால் பாம்புப்பிடாரனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துவிட்டு இதை நாம் வைத்து வளர்ப்போம் என்ன சொல்லுகிறாய்?

சகி. அம்மணி! தங்கள் மனம்போல் வைத்துக்கொள்ளலாம். பாம்புப்பிடாரனிடம் கேட்போம்!

அல். அடே பாம்புப்பிடாரா! இந்தப்பாம்பை எனக்குக் கொடுத்துவிடு. உனக்கு வேண்டிய பொருள்கள் கொடுக்கிறேன். வாங்கிக்கொண்டு போ, சம்மதந்தானா?

பாம். அம்மோய்! இது என்னுடைய பாம்பல்ல அம்மோய்! என் தங்கச்சி வளக்கிற பாம்பு அம்மோய்! அவ இதைக் காணாது போனா தூங்கமாட்டா அம்மோய்! இதை விலைக்குக் கொடுக்க மாட்டா அம்மோய்! கொடுங்க அம்மோய்! வவுரு பிளைக்கணுங்க.

அல். அடே! இதை விலைக்குக்கொடுக்க இஷ்டமில்லாவிட்டால் இன்று இரவுமட்டுமாவது இங்கே இருக்கட்டும். வேண்டிய ஆடை ஆபரணங்கள் தருகிறேன். அதைக் கொண்டுபோய் உன் தங்கையிடம் கொடுத்தால் சந்தோஷப்படுவாள். நாளை காலையில்வந்து வாங்கிக் கொண்டுபோ, என்ன சொல்லுகிறாய்?

பாட்டு

பூவருந்திருவே-என்ற மெட்டு*

பாம். இளைத்துப்போகுமம்மா பாம்பு
இளைத்துப்போகுமம்மா
இரவிலிருந்தா லொருவர்கையிலும்
இரையெடுக்காது இரையெடுக்காது (இளை)

வ-ம். அம்மோய்! இந்தப்பாம்பு என் தங்கச்சியை காணாமற்போனா இளைச்சுப்போகுங்கோ! அம்மோய்! இதுக்கு என் தங்கச்சி கொடுக்கிறாப்போல நீங்க கொடுக்கமாட்டீங்க அம்மோய்!

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

அநுபல்லவி எடுப்பு

அல். களைத்துப்போகாமலெந்த விதத்திலும் நல்லுணவு
களைக்கொடுத்திருப்பேனவ் விதத்திற்குமாறாகவும்

---

* இராகம் - புன்னாகவராளி தாளம்-ஏகம்

இளைத்துப்போனால் குறைந்த இடைக்கு
ரத்தினங்களைநிறுத்துக் கொடுப்பேனுனக்கு
சர்க்கரைப்பாகு கலந்திருக்கும் ருசியான
பலவர்க்கமாமிட்டாய் வகைகளும்பெருஞ்
ஜாடி நிறைவான நெய்யினாலே பாகமாய்க்கிளறிச்
சமைத்த அல்வாவகைகளும்
முக்கனி பசுவின்பாலும் முன்னமே இந்தப்பாம்பிற்கு
அக்கறையாயுண்ணவைப்பே னப்புறமையமெதற்கு (இளை)

வ-ம். அடே! இந்தப்பாம்பு இளைத்துப்போகுமென்று பயப்படாதே! இதற்கு என்னென்ன ஆகாரங் கொடுக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுத்துப் பத்திரமாகப் பாதுகாப்பேன். ஒருவேளை இன்றிரவு உன் தங்கையைப் பிரிந்திருக்கும் துக்கத்தால் இளைத்துப் போனால் அதற்கு இரட்டிப்பாக ரத்தினங்களை நிறுத்துக் கொடுக்கிறேன். அடி இந்தப்பாம்பை நிறுத்துக்கொண்டு எடை எவ்வளவு இருக்கிறது பார்த்துவா; பாம்புப்பிடாரா நீயும் கூடப்போ.

பா. அம்மோய்! இந்தப்பாம்பு எண்பத்தொம்பது பலம் இருக்குது அம்மோய்! நான் போய்வரனுங்க அம்மோய்! (போகிறான்)

அல். சகிகாள்! எனக்கு நித்திரைவருகிறது. சயனித்துக் கொள்ளுகிறேன். நீங்களும்போய் சயனித்துக்கொள்ளுங்கள். (சகிகள்போனபின் பாம்புஉருவாக இருந்த அர்ச்சுனன் தன் சுயரூபமாகிறான்.)

அரு. ஆஹா! இவளோ மஞ்சமீது நித்திரை செய்து கொண்டிருக் கிறாள். ஒருவேளை நான் சமீபமாகப் போகும்போது விழித்துக் கொள்வாளாகில் மோசம் வந்துவிடும். ஆகையால் இவள் நித்திரை நீங்காதிருக்க கோபாலரை பிரார்த்தித்துக் கொள்வோம்.

பாட்டு

(முத்திநெறியறியாத-என்ற மெட்டு)

கண்ணனெனுங் கோபாலா
கண்ணிருக்கு மணிலோலா
புண்ணியனே நானிந்தப்
பூவைமயி லைக்கூட
எண்ணியதால் மூதேவி
என்னும்பெய ரொன்றுமொரு

பெண்ணையிவள் முகமேவிப்
பெருநித்ரை புரிவிப்பாய்
என்னையொரு பாம்பாக்கி
இவள்மடியில் விளையாட
இன்னருள் நீ செய்ததனை
எப்போதும் நான் மறவேன்
சின்னமதன் போராட்டந்
தீரவிரை வாயிந்தக்
கன்னிமயக் கங்கொள்ள
கருணைபுரி மாதவனே

வ-ம். என தாசைக்குகந்த அல்லிமாதே! ஆ! இவள் விழித்திருந்து என்னோடு கொஞ்சி விளையாடினால் எப்படியிருக்கும்? பெண்ணே!

(பாட்டு)

தும்பினமோரி-என்றமெட்டு

மலரணையழகாய் விரித்திருக்கிறது
மருவவராததேனோ மடமானே
சிலைமதன் கணைகள் பலபல விடநான்
உலைமெழு கானேனே
கொலைபுரிவதுவும் நலமல மயிலே
குலவியணையவா நீதானே

(அர்ச்சுனன் அல்லியுடன் ஆனந்தமாக இருக்கிறான். விடியும் சமயம் சகிகள் அல்லிராணியை அழைக்கிறார்கள்.)

சகி. மகாராணியாரே! எழுந்திருங்கள்! பொழுதுவிடிந்து வெகு நேரமாகிவிட்டது. இதுநாள்வரை தாங்களிப்படி நித்திரை செய்ததில்லையே? அம்மணி! இது என்ன தங்களுடைய முகம் ஏதோ மாறுதலான தோற்றத்தையடைந்திருக்கிறது; மேலும் ஆடை யாபரணங்களெல்லாம் தாருமாறாக இருக்கிறது. காரணமென்ன? தங்கள் உடம்பிற்கு இரவு ஏதேனும் அசௌக்கியம் ஏற்பட்டதா? தாயே!

அல். அடி தோழிகளே!

விருத்தம்

மங்கையாளொருத்தி யாசையினோடு
வளர்த்திட்ட பாம்பிதாகையினால்

சங்கையில்லாமல் இரவிலென்னிடத்தில்
சரசங்கள் செய்திருந்திடலாம்
இங்கிதல்லாமல் வேறொருவிதமு
மெந்தனுக் குத்தெரியாது
உங்களுக்கிருக்கு மையங்கள்நீங்கி
உளமகிழ்ந் தருகில்வீற்றிருப்பீர்.

வ-ம். சகிகளே! பாம்புப்பிடாரன் தன் தங்கை வளர்த்த பாம்பு என்று சொன்னானல்லவா? அதனால் இந்தப்பாம்பு இராத்திரியெல்லாம் என்னோடு விளையாடிக்கொண்டிருந்தது. அதுசமயம் என்னையும் அறியாதபடி நித்திரையில் ஆழந்துவிட்டேன். ஆகையால் என்னுடைய ஆடையாபரணங்களும் சீர்குலைந்தது தெரியாமலிருந்தது. வேறொன்றும் தேகத்திற்கு சுகக்குறைவில்லை.

(இதுசமயம் பாம்புப்பிடாரன் வாசலில் கத்துகிறான்.)

பாம். அம்மோ அம்மோய்! பாம்புப்பிடாரான் வந்திருக்கிறேன். அம்மோய்! பாம்பைகொடுங்க அம்மோய்.

அல். அடி சகிகளே! பாம்புப்பிடாரன் வந்துவிட்டான். அவனிடம் இந்தப் பாம்பை எடுத்துக் கொடுத்துவிடுங்கள்.

(சகிகள் பாம்பைப் பாம்புப்பிடாரனிடம் கொடுக்க அதைப் பாம்புப்பிடாரன் வாங்கிப்பார்த்து)

பாம். அம்மோய்! இதென்ன அம்மோய்!! நாகப்பேன் இளிச்சுப்போனா, கண்ணு உள்ளேபோனா, சதை சப்பிப்போனா, மூக்கு தள்ளிப்போனா, கனங்குறைஞ்சுபோனா அம்மோய்! நிறுத்துக்கொடுங்க அம்மோய்!

அல். அடி சகிகளே! அந்தப்பாம்பை நிறுத்து குறைந்த இடைக்கு இரட்டிப்பாக ரத்தினங்களைக் கொடுத்து அனுப்பிவிடுங்கள்.

(பிடாரன் பாம்பைக் கொண்டுபோகிறான்)

காட்சி - 22

வசனம்

கிரு. அருச்சுனா! உன் எண்ணம் முடிந்துவிட்டதல்லவா. இனிமேலாவது நம் நகருக்குச்செல்வோம்.

அரு. பரமாத்மாவே! உமது மகிமையே மகிமை. உமது மகிமையை நான் எவ்வாறு புகலுவேன். இன்னுமொன்று பாக்கியிருக்கிறதே, அதைமுடிக்க இன்னும் மனம்வர வில்லையா?

கிரு. என்ன பாக்கியிருக்கிறது? அதை எனக்குத்தெரிவி.

அரு. அதுதான்? கலியாணம்; மறந்துவிட்டீர்போலும்.

கிரு. இன்னுமொரு தந்திரஞ் செய்யவேண்டும். அதாவது, இன்னும் பல மிருகங்களை ஏவி இந்தக் குடிகளிட்ட பயிரை அழிக்கும்படி செய்கிறேன். மீண்டும் அல்லி வேட்டைக்கு வருவாள். தாகவிடையினால் தத்தளித்து வரும்வழியில் நாமிருவரும் நான் ஒரு கிழட்டு பிராமணத்தியாகவும், நீ ஒரு கிழட்டுப் பிராமணனாகவும் வேஷமிட்டு, தண்ணீர்ப்பந்தல் வைத்து அதிலமர்ந்திருக்கவேண்டும். அவள் தண்ணீர்சாப்பிட்ட அன்பினால் நம்மையும் அவளோடு அழைப்பாள். நாமும் உடனே போய் சமயம்பார்த்து தாலியைக் கட்டிவிடவேண்டும். இதுதான் தந்திரம். உனதிஷ்டமென்ன?

அரு. உமது இஷ்டப்படிதான்! வாரும் போகலாம்.

காட்சி - 23

கானகம்.

(அல்லி குடிகளின் க்ஷேமத்தைக்கருதி மிருகங்களை வதைத்து களைப்படைகிறாள்.)

அல். சகிகளே! எனக்குதாகம் அதிகரிக்கிறது; சீக்கிரம் கொஞ்சம் ஜலம்கொண்டுவாருங்கள். அதோ காணப்படுகிறதே! தண்ணீர்பந்தலா? வாருங்கள் போய்ப்பார்ப்போம்.

தண்ணீர்பந்தல்

வசனம்.

கிரு. அர்ச்சுனா! அதோ அல்லிராணி சகிகளுடன் இந்த இடத்தை நாடி வருகிறாள். ஆகையால் இந்தக் காவியாடைகளையும் வெளுத்த தாடிமீசையும் அணிந்து கிழவனாக நடித்துக் கொள். நான் உன்னுடைய பத்தினியாக பெண்வேடம் தரித்துக்கொள்ளுகிறேன். நீ ஒன்றும் பேசக்கூடாது. நான் மற்ற காரியங்களைப் பார்த்துக் கொள்ளுகிறேன்.

(வேடம் மாறிக்கொள்ளுகிறார்கள்.)

கிரு. அம்மணி! வாருங்கள். உங்களுடைய முகங்களைப்பார்த்தால், தாகத்தால் வருந்துகிறவர்கள்போல் காணப்படுகிறது. இதோ குளிர்ந்த ஜலம் இருக்கிறது. சாப்பிடுங்கள் அம்மணி.

(அல்லிராணி சேடிகள் தாகசாந்தி செய்துகொள்ளுகிறார்கள்)

அல். அம்மா! இந்தக் கானகத்தில்வந்து ஜீவனுக்கு முக்கிய ஆதாரமாகிய தண்ணீர்ப்பந்தல் வைத்துப் பாதுகாக்கும் உங்கள்

தருமம் சிறந்ததாகும். ஆனால் தங்களைப் பார்த்தால் எங்களைப் போல் இளம்பெண்ணாக தோற்றுகிறது. அதோ சற்று தூரத்தில் நிற்கும் அவரைப் பார்த்தால் வயது முதிர்ந்தவராகக் காணப்படுகிறது. அவர் யார்? தாங்கள் யார்? நீங்களிருப்பது எந்தத் தேசம்? அது விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிரு. அம்மணி! என்பெயர் கிருஷ்ணம்மா. அவர் என்னுடைய பர்த்தா. அவர்பெயர் காண்டீப அய்யர். எங்கள் சுயதேசம் இந்திரப்ரஸ்தம். புத்திரபாக்கியத்தின் பொருட்டு காசி முதல் ராமேஸ்வரம்வரை யாத்திரைசெய்து பல தர்மங்களும் செய்து வருகிறோம். அதில் இந்தத் தருமம் சிறந்ததெனக்கருதி நாங்கள் தங்கும் இடங்களிலெல்லாம் செய்து கொண்டு வருகிறோம்.

அல். அம்மணி! மெத்த சந்தோஷம். இவ்வளவு பரோபகார தர்மத்தைக் கைக்கொண்ட தங்களை எனது அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய் சிலநாள் வைத்திருந்து அனுப்பலாமென்று நினைக்கிறேன். ஆகையால் தாங்கள் புருஷனுடன் வந்திருந்து பிறகு உங்கள் சுயதேசம் போகலாம் வாருங்கள். அம்மணி!

கிரு. அம்மணி! தாங்களோ இந்த பாண்டியநாட்டை யாளும் அரசி! ஆகையால் தங்கள் உத்தரவுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறோம் அம்மணி!

அல். மெத்த சந்தோஷம். வாருங்கள் போகலாம்.

(எல்லோரும் போகிறார்கள்)

காட்சி - 24

அல்லியின் அரண்மனை.

கிரு. அம்மணி! இன்றையத்தினம் எங்களுக்கு ஒரு நோன்பு நோற்கவேண்டும். ஆதலால் தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம், குங்குமம், இன்னும் இதற்கு வேண்டிய சாமான்கள் முற்றுங் கிடைக்கும்படி செய்யத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

அல். நீங்கள் பூஜைமண்டபத்திற்குச் செல்லுங்கள். சொல்லிய சாமான்கள் அங்குவந்துசேரும்.

கிரு. அப்படியே செல்லுகிறோம்.

அல். சேடியே! எனக்கு ரொம்ப அலுப்பாயிருக்கிறது. சற்று இந்த மஞ்சத்தின்மீது சயனித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் சென்று வாருங்கள்.

அல்லிராணி அந்தப்புரம்

அல்லிராணி மஞ்சத்தில் சயனித்திருக்கிறாள்.

கிரு. அர்ச்சுனா! உன் தந்தையாகிய இந்திரனிடமிருந்து இந்தத் தாலியை வரவழைத்தேன். சீக்கிரம் இந்தச் சுபவேளையில் இதை இவள் கழுத்தில் கட்டிவிடு. ஊம்:

(அருச்சுனன் அல்லிகழுத்தில் தாலியைக் கட்டுகிறான்)

வசனம்.

அரு. கோபாலகிருஷ்ண பரமாத்மா! என்னுடைய எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அவள் கட்டியிருக்கும் விருதுகளையெல்லாம் அறுத்தெறிந்துவிட்டுப் போகலாம் வாருங்கள். (போகிறார்கள்.)

சகி. அம்மணி! அம்மணி!! இதென்ன தங்களுடைய கழுத்தில் அதிசயமாக இருக்கிறதே?

அல். (எழுந்து) என்னடி அதிசயம் கண்டுவிட்டீர்கள்?

சகி. தங்களுடைய கழுத்தில் இதுவரைஇல்லாததும் நாங்களிதுவரை இவ்விதம் பார்த்திராத மாங்கல்யமாகத் தோற்றப்படுகிறதே! தாங்கள் கவனிக்கவில்லை போலிருக்கிறதே! அம்மணி!

(அல்லி கழுத்திலிருக்கும் தாலியை எடுத்துப் பார்த்து)

அல். ஆஹா! என்ன ஆச்சரியம்; இதை யார் என்னுடைய கழுத்தில் கட்டியது? ஏதோ சூதாகவன்றோ நடந்திருக்கிறது! ஊம். சீ, இந்தக் காரியம் செய்தவர்கள் யார்? அவன் யார்?

பாட்டு

ஸ்ரீ ராமசந்திரரே-என்ற மெட்டு

அல். எட்டி யிருட்டுவேளை கிட்டித்திருட்டுத்தாலி
கட்டிவிடுத்துநடந் தானடி
பட்டிமுரட்டுக்காளை கெட்டநடத்தைக்காகக்
கட்டை கழுத்திவிடுவார் போல
சட்டிப்போனதெந்த மட்டிப்பயல்
அவன்-காமவிகாரங்கொண்ட சுட்டிப்பயல்
நான்-கண்டாலிப்போதிரண்டு துண்டாக்குவேனெனைத்தன்
பெண்டாக்கவோ நினைத்திட்டான் பாவி (எட்டி)

வ-ம். அடி! நீங்களெல்லாம் இங்கே காவல்தான் புரிந்து கொண்டிருந்தீர்களோ? பவளச்சேனை! எந்தக் கொடியவஞ்சகனோ கபடமாக உட்பிரவேசித்து இக்காரியத்தைச் செய்திருக்கிறான். சீக்கிரம் இந்த அரண்மனை முழுவதும் எவரேனும் இருக்கிறார்களா என்று பார்த்துவாருங்கள் போங்கள்.

பவ. அம்மணி! அரண்மனை எங்கும் தேடிப்பார்த்துவிட்டோம். ஒருவரையும் காணோம். நேற்றிரவு இவ்விடத்திற்கு அழைத்து வந்த அந்தப் பெண்ணையும் கிழவனையும் காணவில்லையே! அவர்கள் போனவிதமுந் தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் வஞ்சகமாக நம்மை ஏமாற்றி எவருடைய போதனை மேலாவது இக்காரியத்தைச் செய்து விட்டுப் போயிருக்காலாமென நினைக்கிறேன் அம்மணி!

அல். பவளச்சேனை! சீக்கிரம் நான் சொல்லுகிறபடி நிருபம் எழுதி பலதேசத்தரசர்களுக்கும் அனுப்பவேண்டும்; எழுது.

கடிதம்

அல். மனுமுறைப் படிதங்கள் மாநிலங் காவலபுரி
மன்னாதி மன்னர் கட்கு
மதுரைமா நகரையொரு அரசியா யரசுபுரி
மங்கையா ளல்லி யென்னும்
தனுர்வேத விற்பனி ஜெயவீர சர்ஜனி
தனைநேரி லாவிற் பனி
சத்ராதி யர்க்குவரு மித்திராதி யர்க்குமுயர்
தனமருள வந்தவசனி
சினமேவு கட்கடை சிவந்தெழுதி வரவிட்ட
சித்திர விநோத நிருபம்
திருடனெவ னோஇரவி லென்கழுத் திற்றாலி
சேர்த்தகன் றா னானதால்
மனமொன்று சந்தேகம் வந்திட்ட துங்கள்மேல்
மாசத்தி யஞ் செய்திட
வரவேணு மிதுசமயம் இல்லையே லெதிரிட்டு
வந்துங்க ளைக்கொல் வனே.

வசனம்

சீக்கிரம்! இந்த மாதிரி பல நிருபங்களை எழுதி சகல தேசத் தரசர்களுக்கும் அனுப்பி விடுங்கள் (நிருபம் அனுப்ப ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வருகிறார்கள்)

அல்லிராணி தர்பார்

கிரு. அம்மா! இங்கே என்ன செய்யவேண்டும்?

பவ. எங்கள் அரசி கழுத்தில் கிடக்கும் மாங்கல்யம் கட்டியது நானல்லவென்றும், கட்டியவர்களும் தெரியாதென்றும் சொல்லி அதோ காய்ந்துகொண்டிருக்கும் நெய்க் கொப்பரையில் கையை நனைக்கவேண்டும்.

(கிருஷ்ணபகவான் சத்தியம் செய்தபின்)

பீமன். பரமாத்மா! இதோ நானும் சத்தியஞ்செய்து விடுகிறேன். நெய்க் கொப்பரை குளிர்ந்திருக்கும்படி அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்.

(பகவான் கண்சாடை காண்பிக்க பீமன் நெய்யையெல்லாம் குடித்து விட்டு கொப்பரையை உருட்டிப்போகிறான்.)

பவ. அம்மணி! இந்திரப் பிரஸ்தத்தையாளும் தர்ம பூபதியின் சகோதரர் பீமராஜர் நெய்யையெல்லாம் குடித்துவிட்டுப் பாத்திரத்தையும் கீழே எறிந்துவிட்டுப் போகிறார்.

அல். (கோபத்தோடு) ஆஹா! அப்படியா சமாச்சாரம்? பவளச்சேனை! தாமதியாது நமது சைனியங்களைச் சித்தப்படுத்து இப்பொழுதே புறப்பட்டுபோய் அவர்கள் வம்சமென்பதே இல்லாமல் செய்யவேண்டும். புறப்படுங்கள் சீக்கிரம்.

(எல்லோரும் போகிறார்கள்)

காட்சி - 25

தர்மராஜா தர்பார்

பாட்டு

இராகம்-மத்தியாவதி தாளம்-ஆதி

பல்லவி

சகா. ஆலோசனை செய்வதேன் அண்ணா தாங்களிப்போது (ஆ)

அநுபல்லவி.

மேலோர் புகழும்தர்ம ராஜராம் தங்கள் மீது
வாளேந்தி நிற்கும்அல்லி மேலே சண்டைக்குச்செல்ல (ஆ)

சரணம்

பெண்ணென்று தாம்கவலை கொள்ளவேண்டாமிவ்வேளை
தன்னை யெதிர்த்தபசு தன்னைக்கொல்வது போல (ஆ)

வ-ம். அண்ணா! எது காரியத்திற்கும் ஆலோசிக்கிறீர்கள். கேவலம் ஒரு ஸ்திரியானவள் பட்டாபிஷேக பாக்கியத்தைப் பெற்று ராஜரீகம் செய்யும் நேர்மையை அடைந்தாலும், ஆயுதாதிகளை அறையில்கட்டி அமர்க்களம் நின்று போர்புரிய ஆண் தன்மை உண்டாகுமோ ஒருக்காலுமுண்டாகாது. அப்படியானால் தற்காலம் படைகளோடு நம் நகரைச்சுற்றி வளைத்து அறைகூவி நிற்கிறாளென்றால் அது அறியாமை. ஸ்திரீகள் எவ்வளவு அரிய பெரிய செயல்களைச்செய்து முடிக்க வல்லவர் களாயிருந்தாலும், "எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவமென்பதிழுக்கு" என்ற மேலோர் மொழியைச் சிந்திக்காமல் இந்த விதமாய்ச் சிற்சிலகாரியங்களில் பிரவேசித்து நஷ்டத்தையும் அவமானத்தையுமடைய நேரிடுவதனாலன்றோ பெரியோர்கள் பெண்களுக்குப் பேதையரென்று பொதுவாக ஒரு நாமதேயத்தைச் சூட்டிவைத்திருக்கிறார்கள். இவ்விஷயங்களை நன்கு தெரிந்திருந்தும் தாங்களிப்போது மந்திராலோசனை செய்வதை நினைத்தால், எனக்கொன்று தோன்றுகிறது. அதாவது இப்போது நம்மை எதிரிட்டிருக்கும் அல்லி என்பவளைப் போராடி வதைத்தால், "ஆவை யொருநூறு பழி செய்ததொரு ஸ்திரீயை" என்ற நியாயத்தால் நூறு பசுவைக் கொன்ற பாபம் வந்து சேர்வதோடு நம்போன்றவரும் அந்நியராஜர்களும் பெண்ணோடு மலைந்தவரென்று நகைக்கும்படி நேரிடுமென தேவரீர் திருவுளத்தில் சஞ்சலமுண்டாயிருக்கிறதென்று தெரியவருகிறது. அதற்குச் சமானமாக பிரபல நியாயஞ் சொல்லுகிறேன் கேளுங்கள். "அறிவுடை முதியோரென்றும் ஆண்டிளையோர்களென்றும், சிறியவர் பெரியவரென்றும் திருத்தகுவளத்தரென்றும், வறியவரென்றும் வீரர் மதிக்கிலர் யாவரேனும், விறல் வரிபடைத்து நேரில் வெஞ்சமர் விளைப்பாரன்றே" என்றதால் பெரியவரென்றும், சிறயவரென்றும், செல்வரென்றும், தரித்திரரென்றும், அறிவுடையேரென்றும், மடையரென்றும், மங்கையரென்றும், மைந்தரென்றும் பார்க்க வேண்டியதில்லை. யாவராயிருந்தாலுஞ் சரி. எப்பொழுது தம் வலியைக்கொண்டு எதிரிடலானார்களோ அவர்களை அப்பொழுதே சமர் விளைத்து நிற்கவேண்டியது அவசியமாயிற்று. ஆகையால் அடியேனுக்குச் சற்று உத்தரவு கொடுங்கள். நான் அதி விரைவாகச்சென்று என்கையிலுள்ள வில்லை வளைத்துக் கூர்மையான கணைகளைத் தொடுத்து விடுத்து,

அல்லியினுடலைச் சல்லடைக் கண்களாக்கி, வாகை மாலை சூடி, வெற்றிச்சங்கை எடுத்து பம்பம் என்று முழக்கி கீர்த்தியை நிலைநாட்டி வருகிறேன் அண்ணா!

தர். தம்பி சகாதேவா! அவசரப்படாதே! சற்றுப்பொறு. (கிருஷ்ணரைப் பார்த்து) கோபால கிருஷ்ண பரமாத்மா! இப்பொழுது பாண்டியநாட்டரசி நம் நகரைச்சுற்றி சைனியங்களோடு போருக்குச் சித்தமாயிருப்பதால், பீமனுடன் தாங்களும் சென்று போர் முகத்தில் எவ்விதம் தங்களுக்குச் செய்யச் சித்தமோ அவ்விதம் நடத்திவைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிரு. பீமனும் நானுந்தானே போய்வரவேண்டும். சரி, பீமா புறப்படு போகலாம். (போகிறார்கள்)

சகா. அண்ணா! கிருஷ்ண பரமாத்மாவுக்கும் பீமண்ணாவிக்கும் விடைகொடுத் தனுப்பியிருக்கிறீர்கள். அவ்விருவரும் அதிரத வீரர்களாகையால், பிறர் சகாயங் கருதாமல் வெகு விநோதமான போர்செய்து நிற்பார்கள். அதனைப் பார்க்க எனக்கு அவா மேலிடுகிறது. ஆதலால் எனக்கும் சற்று உத்தரவு கொடுக்க வேண்டுமென மிகுந்த தாழ்மையோடு வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன் அண்ணா!

தர். சகாதேவா! அப்படியே போய்வா.

(சகாதேவன் வணங்கிப்போகிறான்)

நகு. அண்ணா! கோபால கிருஷ்ண பரமாத்மாவுக்கும், பீமண்ணாவுக்கும், தம்பி சகாதேவனுக்கும் அல்லிமீது போருக்குச் செல்லும்படி உத்தரவு கொடுத்தனுப்பியிருக்கிறீர்கள். அம்மூவரும் அதிரதவீரர்கள். அவ்வல்லிக்குத் துணையாக தேவர்கள்வந்து போர் தொடுத்தாலும் விடமாட்டார்கள். ஒருவேளை அந்த அல்லியைக் கொன்றாலும் கொன்றுவிடுவார்கள். அவ்விதம் கொன்றுவிடும்படி நேரிட்டால் பெண்ணைக் கொன்ற பாபம் வந்துசேர்வதோடு நம்போன்ற ராஜர்கள் பெண்ணைக் கொன்றார்களென்று பழிச்சொல் சொல்லும்படி ஏற்படும், ஆகையால் அவ்வித அசம்பாவிதங்கள் ஒன்றும் நடவாதிருக்கும்படி செய்வதற்கு நாமும் அங்கே போகலாம் வாருங்கள் அண்ணா!
(போகிறார்கள்)

யுத்தகளம்

கிரு. (அல்லியைப்பார்த்து) அம்மா அல்லி! உன்னுடன் சண்டை போடவேண்டுமோ. அப்படியே ஆகட்டும். ஆனால் எனக்கு

அதிகமாகச் சண்டை போடத்தெரியாது. இருந்தாலும் சண்டையில் கெட்டிக்காரனைக் கூட அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஊம்.

அல். ஆமாம். உனக்கென்ன? மாடுமேய்க்கத்தானே தெரியும்! போர்க்களத்தில் நின்று சண்டையிடத் தெரியுமா! ஊம். நில். உன்னால் ஆனவரையும் பார்!

கிருஷ்ணன் அல்லியுடன் சண்டைசெய்து
முடிவில் பீமனிடம் ஓடுகிறார்.

கிரு. அப்பா பீமா! என்னாலானவரை பார்த்துவிட்டேன். இனி உன் சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும். இது நாள்வரை நன்றாகச் சாப்பிட்டுவிட்டுப் படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்தாயே! ஏதோ அவளிடம் உன் வலிமையைக் காண்பித்து ஜெயம் பெற்று வந்துசேர். ஊம். புறப்பட்டுப்போய் வா!

பீம. ஆ! ஆ! பரமாத்மா! இதோ போய் ஒரு நிமிஷத்தில் அவளைப் புறமுதுகிடவோட்டி நான் வெற்றியடைந்து வருகிறேன். தாங்கள் இங்கேயே இருந்து பார்த்துக்கொண்டிருங்கள்.

(அல்லியிடம் போய் நிற்கிறான்)

அல். அடே! நெய்யையெல்லாம் குடித்தவனல்லவா நீ? இதோ பார், உன் தொந்திவயிற்றைக் கிழித்து அந்த நெய்யையெல்லாம் கீழே சிந்தும்படி செய்கிறேன். நில் சண்டைக்கு!

பீமன் அல்லியின் வாளாயுதத்தாலடிபட்டு தாங்கமுடியாமல் கிருஷ்ணன் நிற்கும் இடத்தைத்தேடி ஓட்டம் பிடிக்கிறான்)

பீம. பரமாத்மா! இனிமேல் இங்கே நிற்கக்கூடாது. வாருங்கள் அதோ தெரிகின்ற ஆலமரத்திலேறிக்கொண்டு நான் அவளிடம் வெற்றிபெற்று வந்த சமாச்சாரத்தையும் அவள் என்னை வாளாயுதத்தாலடித்த அடியையும் கணக்குப்பார்த்துச் சொல்லுகிறேன் வாருங்கள்! வாருங்கள்!!
(போகிறார்கள்)

புலிக்கூண்டு

சகா. நான் சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்ததில் அல்லியென்பவள் அயோநிதையென்றும், ஆலவாய் சொக்கநாதர் அருளேயல்லாமல் மீனாம்பிகையின் பரிபூரண கிருபாகடாக்ஷம் உடையவள் என்றும், எதிர்நின்று யுத்தஞ்செய்து எவரும் இவளை வெல்ல மாட்டாரென்றும் நன்கு தெரியவந்தது. ஆகையினாலே, எனது

புத்திநுட்பத்தால் தந்திரமார்க்கத்தை அனுசரித்து இப்புலிக் கூட்டை அமைத்து வந்திருக்கிறேன். அந்த அல்லியென்னும் பெட்டைப்புலி இப் புலிக்கூண்டில் அகப்பட்டால்தான் அடங்கும். இல்லையேல் பஞ்சவரென்னும் எங்கள் பெயரை குற்றியலுகரப்புணர்ச்சியாக்கிப் பஞ்சு அவர் எனப்பிரித்து பறக்க அடிக்கும் தடையில்லை. எனக்கு முன் யுத்தத்தில் போன இவர்களின் நிலை என்ன விதமாக இருக்கிறதென்று சற்று யோசித்தால், கோபால கிருஷ்ண பரமாத்மாவோ கபடநாடக சூஸ்திரவாதாரி; மயாவித்தை கற்றவர்; ஜெகஜால வேடிக்கைகாட்டுகிறவர் என்றாலும் அவருடைய கெஜகர்ணம், கோகர்ணம், இந்திர மகேந்திர ஜாலங்களெல்லாம் அல்லியிடத்தில் செல்லாது. ஆகையினால் மானம் போனாலும் போகிறது, பிராணனிருந்தால் போதுமென உயிர்தப்பிழைத்து ஓடியிருப்பார். பீமண்ணாவோ அப்படியில்லை! சுபாவத்திலேயே முரட்டுக் குணமுடையவர்; முன்பின் யோசியாமல் கதாயுதத்தைத் தூக்கிகொண்டு கும்பலில் நுழைந்து விடுவார். கரந்துறை படைகள் புறம்பே வளைத்துக்கொண்டு மொத்து மொத்தென்று மொத்தினாலும் சட்டை பண்ணாமல் சண்டையிட்டே நிற்பார். என்றாலும் அவருடைய கெதி அதோகெதியாகவே சண்டை முடிந்திருக்கும். நல்லது அதோ சைனியங்களோடு வரும் அல்லிமாதைக் கவனிக்கிறேன்.

அல். (சகாதேவனைப் பார்த்து) அடே நீயார்? வில்லுங்கையுமாக நிற்கிறாய். யுத்தம் செய்ய வந்திருக்கிறாயா!

இராகம்-அடாணா தாளம்-ஆதி.

சகா. அல்லியே யுன்னையடக்கச் சொல்லியே ஜெயிக்க வந்தேன் (நானே.
நீ-துள்ளியே வாயாட வேண்டாம் என்னுடன் எதிர்த்து வாராய் தானே. (அ)
ஓடுகின்ற சிங்கமதை யானையு மெதிர்ப்பதுபோல்
நாடு மிந்த நேரமதில் ஓடிடாம லிங்கு வாராய். (அ)

வ-ம். ஏ ஸ்திரீயே! கொஞ்சம் நிதானித்து நில். சிற்சில பேரை புறமுதுகிட ஓட்டினோமென்று கெர்வங் கொள்ளாதே. என்னை இன்னாரென்று தெரியுமா? தருமநந்தனரின் சகோதரர்களில் இளைய சகாதேவனென்று அறிந்துகொள். உனது ஆர்ப்பாட்ட படாடோபங்கள் என்னிடம் பலிக்காது, “பெண்புத்தி பின்புத்தி”

என்பதற்கிணங்க சண்டை செய்ய வந்திருக்கலாமென நினைத்து உனது அபிப்பிராயங்களை அறிந்து சண்டை செய்யலாமென நினைக்கிறேன். ஸ்ரீராமபிரான் தாடகையென்னும் அரக்கியைக் கொல்லுவதற்கு ஆலோசனை செய்துகொண்டு நின்றவராகி, பின் விசுவாமித்திரர் சமாதான நியாயம் சொல்லக்கேட்டே வதைத்திருக்கிறார். ஆகையால் இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளுக்குத் தக்கவிடைகள் கொடுக்கவேண்டும். அதற்கு மத்தியில் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் விளங்கப்பட்டாலும், என்னிடம் கேள், அதற்குப் போதுமான சமாதானஞ் சொல்லுகிறேன். அப்படியே போர்தொடங்க வேண்டுமென்றாலும் பின் வாங்குவேனென்று நினைக்காதே! உன் அபிப்பிராயமென்ன?

இராகம்-அடாணா தாளம்-ஆதி

அல். இந்திர ஜாலம் சொல்லாதடா என்கோபமுந்தாளாதடா
என்னிடமெதிர்க்க வந்தமூடா
வில்லை-சொல்லாமலே வைத்துவிட்டு
செல்லாவிடி லுன்னையிங்கு
சித்திரவதை செய்திடுவேன் கேடா (இ)

அநுபல்லவி

சண்டை செய்ய நீ வந்தாயோ
தன் பலமு மறிந்தாயோ
தாருமாறு வார்த்தை வேண்டாம்
சாஸ்தியாய் நீ துள்ளவேண்டாம் (இ)

வ-ம். அடே! நீ சகாதேவனா? சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றவனா? என்னோடு சண்டைசெய்ய வந்தவனா அல்லது நியாயங்கள் பேசவந்தவனா? உன்னிடத்தில் நான் யாதொன்றும் சொல்ல வேண்டுவதில்லை. படுகளத்தில் வந்து எப்போது நின்றுவிட்டார்களோ. அப்புறமிங்கே ஒப்பாரியென்னடா? நில் சண்டைக்கு; உன் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்.

சகா. ஏ ஸ்திரீயே! வீணாகக் கெட்டுப் போகாதே! நான் சொல்லுகிற வார்த்தையை நன்றாய் ஆலோசித்துப்பார். நீ ராஜ முறையே நடத்தும் ராணியல்லவா? எப்பொழுது நீ ஒரு ராஜரீகத்துக்குரியவளாகி விட்டாயோ அப்பொழுதே மநுதர்ம சாஸ்திரத்தை யநுசரித்து நடக்கவேண்டும். மநுவானவர்

அரசர்களின் யுத்தத்தை பற்றி இருபத்துநான்கு அத்தியாயங்களை மிகு சிறப்பாகச் சொல்லியும், அவ்விஷயம் முடியாதது கண்டு ஏற்குமிடங்களில் பொது விதியாகவும் சொல்லிவைத்திருக்கிறார். அவைகளில் ஒரு வழிக்கும் உன் நிலை யொத்ததாகக் காணப்படவில்லை. ராஜாங்கத்தார் அதாவது, அரசர்கள் ஒருவரை யொருவர் எதிரிட வேண்டுமானால், முன்பு தூது போக்கித் தன்னிலைமைகளுக்கு இன்ன இன்னவித இடையூறுகளை விளைவித்திருக்கிறாய் என்றும், அல்லது உன் நடத்தை இத்தன்மையான கெடுதலை உலகத்திற்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் தன்னால் கூடியவரை அவனுக்குப் புத்திபுகட்டி பயன் படாவிட்டால், இன்னகாலத்தில் இன்ன விஷயமாக யுத்தத்துக்கு வருகிறேனென்று தெளிவாய்ச்சொல்லி விட்டுப் போர் தொடங்க வேண்டும். அப்படி தொடங்கிய பின்னும் எதிரிகளினால் வினாவப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதிலைச் சொல்லிவரவேண்டும். அப்படியில்லாமல் படுகளத்தில் ஒப்பாரியாவென்று தடி முரட்டுத் தனமாய்ப் பேசினால் அது யுத்தமுறையாகுமா? அதிருக்கட்டும். நீ சண்டைக்கு வந்திருக்கிறது இன்னதற்கு என்றாவது சொல்லு பார்ப்போம்.

அல். ஏண்டா வீணான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு நிற்கிறாய்? என்னிடம் சண்டைக்கு வந்தாயோ கதைகள் படிக்கவந்தாயோ? என் ஆணையைக் கடந்து நெய்யைக்குடித்து வந்தவனை நையப்புடைத்து அனுப்பினேன். அதுபோல் உனக்கும் வேண்டுமானால் தருகிறேன் வாங்கிக்கொண்டுபோ.

சகா. ஏ ஸ்திரீயே! சற்றாவது மதியாமல் என் வார்த்தைக்குச் சரியான பதிலுஞ் சொல்லாமல் இப்படித் தாருமாறாகப் பேசினால் நான் பொறுக்கமாட்டேன். அதிருக்கட்டும். உன் கழுத்தில் யானைத் தலைபோல் தொங்குகிறதே! அது என்ன?

அல். என் கழுத்தில் தொங்குவதா? எந்தச் சண்டாளனோ நான் நித்திரை செய்யும்போது இந்தத் தாலியைத் திருட்டுத்தனமாக வந்து கட்டிவிட்டுப் போய்விட்டான். அவனைக் கண்டு பிடித்துக் கொல்ல வென்றே வந்திருக்கிறேன்.

சகா. ஆஹா! பேஷ்!! பேஷ்!! கழுத்திலே தாலிகட்டிய போது தனக்குப் போதுமான பாதுகாப்பில்லாத நீதானா என்னை யுத்தத்தில் ஜெயிக்கப் போகிறாய்! உன்னை இப்படிக் கெர்வபங்கஞ் செய்து தாலியைக் கட்டி வந்தவர் எனது அண்ணா அர்ச்சுனர்தான்.

உனக்குத் தகுந்த கணவரும் அவரே! எப்பொழுது பெண்ணாகப் பிறந்து விட்டாயோ அப்பொழுதே ஒரு புருஷன் வேண்டியது அவசியம். ஆகையால் மரியாதையாக என்னோடு வந்துவிடு; இல்லையேல் வீண் அவமானம் உண்டாகும். வேறொரு வரை நீ மணஞ்செய்து கொள்ளலாமென நினைத்தாலும் முன்னொருவர் மாங்கல்யதாரணம் செய்த பெண்ணென்று மற்ற ராஜர்கள் விரும்பமாட்டார்கள் என்ன சொல்லுகிறாய்?

அல். அடே! நீதான் இந்நேரம் மநுதர்ம சாஸ்திரத்தைப் பற்றி நியாயம் பேசியவனோ! உனதண்ணன் அர்ச்சுனன் தான் இந்தத் தாலியைக் கட்டியவனோ! நீங்கள் நீதியுடன் ராஜ்யபாரம் நடத்துகிறவர்களோ பலே நன்றாயிருக்கிறது! எந்தச் சாஸ்திரத்தில் திருட்டுத்தாலி கட்டச் சொல்லியிருக்கிறது? அந்த அயோக்கியப் பயலாகிய அர்ச்சுனனா எனக்குப் புருஷன்? மட்டிப்பயல்களே! இன்னுஞ் சற்று நேரத்திற்குள் உங்களெல்லோரையும் நாசஞ்செய்து விடுகிறேன். பார்! நில் யுத்தத்திற்கு!

சகா. ஏ ஸ்திரீயே! நீ சற்றாவது அறிவில்லாதவள்; யோக்கியதை யில்லாதவள்; கருத்தில்லாதவள்; மதியில்லாதவள். இன்னும் சொல்லுகிறேன். கெட்டுப் போகாதே! எப்படியும் நீ எனது அண்ணாவுக்கு மனைவியாகி விட்டாய். அதனாலேதான் மதினியென்று மரியாதையாகப் பேசினேன். அந்த கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளாதவளாகி விட்டாய். இருக்கட்டும், உன்னிஷ்டம்போல் நில் யுத்தத்துக்கு!

இராகம்-அடாணா தாளம்-ஆதி.

பல்லவி.

எண்ணிப் பாராமலே என்ன உளறினை அண்ணி
நீ-உன்னிவாய் பேசாமல் வில்லம்பு பூட்டிவா எண்ணி (எ)

அநுபல்லவி

நெருப்பில் புழுவந்து அண்டிடில் மீளுமோ
உப்பில்லாமலறு நற்சுவையாகுமோ
விரகாக்கினி மேலாகுது
சரவாக்கினி விடுவேனிது. (எ)

வ-ம். சகாதேவன் சண்டை செய்துகொண்டே ஓடிப் புலிக்கூட்டில் நுழைகிறான்; அல்லியும் அவன்பின் செல்லுகிறாள். அது சமயம் பக்கத்திலுள்ள கதவை கிருஷ்ணன் ஓடிவந்து மூடிவிடுகிறார். முன் பக்கத்துக் கதவைச் சகாதேவன் மூடிவிடுகிறான்.

(பாட்டு)

சகா. அகப்பட்ட திந்த அல்லிப்புலி
இதைப்பார்க்கக் கொடும் ஒரு சல்லி
இகத்தில் பெருத்த திதன் வலி
இனி சேட்டைப்பண்ணா திந்த எலி (அ)

(கிருஷ்ணன், பீமன், அர்ச்சுனன் வருகிறார்கள்)

பாட்டு

சிந்து தர்க்கம்.

அரு. அன்பு நிறைந்த எந்தன் அல்லிமனையாளே
அட்டியேனோ சொல்லடி தாலிகட்டினவன் நானடி
வீண் அகங்கார மாகவே ஒன்றும் பேசவேண்டாம்
வந்து என்னைச் சேரடி

அல். ஞாய மாகுமா?

அரு. ஞாய மாகுமே.

அல். துன்பம் நேருமே.

அரு. இன்ப மாகுமே.

அல். வம்பு ஏனடா.

அரு. நம்பி னேனடி.

அல். என்னைக்-கள்ளத்தனமாக மெள்ளத்தாலிகட்டிச்
சென்றாயே அது தர்மமா.

அரு. அது மர்மமே

அல். என்னை வெளியிடு

அரு. உண்மை சொல்லிடு

அல். கேடு வந்திடும்

அரு. என்-இஷ்டம் போலிங்கு வந்த அன்னநடைமானே
சேர்ந்திடு கேடு நீங்கிடும்.

அல். அடே! திருட்டுப்பயலே! ஏன் வீண்வார்த்தைகள் பேசுகிறாய். இப்போது நான் வெளியில் வந்தால் உன்னைக் கொல்லுவேன். இதோ என் கையில் இருப்பது என்னவென்று நினைத்தாய்?

(இது சமயம் தருமன், நகுலன், வருகிறார்கள்)

தரு. அம்மா! பாண்டிய நாட்டரசியே! எல்லாம் இனிதாங்கள் எங்கள் மீது மனஸ்தாபம் வைத்துக்கொள்வதால் பிரயோசனமென்ன? இனிமேல் நடக்கும் விஷயங்களுக்கு தாங்கள் மனநிம்மதியடைய வேண்டியதுதான். வேறொன்றுமில்லை.

அல். தர்மராஜரே! உமது தம்பியை அடக்கியாள முடியாமல் இப்படி என்னிடம் வந்து சமாதானம் சொல்லுகிறீர். இந்த அக்கிரமச் செய்கை அடுக்குமா? இந்தக் கூண்டெனக்கு ஒருபெரிதா? ஆனால் நியாயமென்பதை எல்லோரும் அநுசரித்து நடக்க வேண்டியது. ஆனாலும் பரவாயில்லை, என்னை இந்தப் புலிக்கூண்டிலிருந்து வெளியில் விடுங்கள். அதற்குமேல் பேசிக்கொள்ளலாம்.

கிரு. அம்மா! அல்லி மகாராணி! நீ இப்படிப் பிடிவாதமாய்ப் பேசக்கூடாது. எப்போது பெண்ணாகப் பிறந்தாயோ அப்போது ஒரு நாயகனுடனிருந்து இல்லறதர்மப்படி நடக்க வேண்டியதவசியம். ஆகையால் இந்த அர்ச்சுனன் உனக்குத்தக்க கணவனென்பதை உலகமே ஒப்புக்கொள்ளும். அதனால் மீனாம்பிகையின்மீது சத்தியமாக இவர்களை ஒன்றுஞ் செய்வதில்லையென்று சொல்வதுடன், உன்கையிலுள்ள கட்கத்தையும் அர்ச்சுனனிடம் கொடுத்து மனச் சமாதானமும் அடைந்து கொள்ளம்மா!

அல். தாங்கள் சொல்லும் வார்த்தையும் தர்மராஜா சொல்லும் வார்த்தையும் உங்களுக்கே ஒத்ததாகயிருக்கும்.தங்களிஷ்டம் போல் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் மீது சத்தியமாக நானொன்றும் செய்வதில்லை. இதோ பெற்றுக் கொள்ளுங்கள்.

அல்லி கத்தியை அர்ச்சுனனிடம் கொடுக்கிறாள். அர்ச்சுனன் கூண்டைத் திறந்து விடுகிறான். இத்துடன் அல்லி அர்ச்சுனனைக் கரம் பிடிக்கிறாள்.

- சுபம் -

அல்லி சரித்திரம் முற்றும்

------

3. அரிச்சந்திரா – மயான காண்டம்

அரிச்சந்திரா – மயான காண்டம்

மயான காண்டம்

காட்சி - 1

அரிச்சந்திரன் தோட்டி உருவோடு மயானம்

செல்ல புறப்படுகிறான்

இராகம். சங்கராபரணம் *விருத்தம்*

அரி அண்ணலே கயிலைவாசா யப்பனே வுமையாள் நேசா
விண்ணனே விடைமீதேறும் வேந்தையே வருவாயிங்கு
வண்ணனேவுமதுபாதம் வருந்தியேயழைத்தேன் மூன்று
கண்ணனே காசிநாதா கடையனை யாள்வாய் போற்றி

இராகம்-நீலாம்பரி தாளம்-ரூபகம்

கண்ணிகள்

அரி சம்போ கெங்காதரா
சத்தி மனோஹரா
இக்கதி நேர்ந்ததே
என்ன செய்வேன் (ச)
சத்தியம் ஜெயமென்று
பத்தியுட னிருந்தேன்
நத்திய யெந்தனுக்கு
விதித் தாயோ (ச)

அரி ஏ.கருணாஹரா! கங்காளா! கங்கைவேணியா

"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்றபடி நெறியை வழுவாதுகடைப்பிடித்தொழுகிய எனக்கு இக்கதியும் வாய்க்கவேண்டுமா? சந்தனமென் குறடுதான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைபடாது ஆதலால் இதைவிட இன்னும் சேடான கெதிவரினும் என் சத்தியவிரதத்தினின்று தவறுவேனா? ஒருக்காலும் தவறமாட்டேன். இவ்வாறு இப்பெயரான் இப்பெருந்துன்பத்திலழுத்த என்ன குறை செய்தேன்! என்மனமாற ஒருவருக்கும் தீங்கையிழைக்க வில்லையே சத்தியமே தலை காக்கும் என்னும் முதுமொழி தவறாது இது வரை காத்துவந்தேன் கைலைநாதா! உண்மை என்பது நீயேயானால் இக்கடையன் சத்தியவிரதத்தினின்று தவறாதபடி காக்கவேண்டும். நான் வந்து ரெம்ப நேரமாய்விட்டது. ஆகையால் எனது ஐயனிட்ட கட்டளையை நிறைவேற்றுகிறேன்.

(முன் தொடர்ச்சி)

சுடலைக்கு	நானடுத்து
சுடுங்கோலைக்	கைப்பிடித்து
சுடவரும்	பிணங்களை
வேக	வைப்பேன்

(அரிச்சந்திரன் சென்று விட்டான்)

காட்சி - 2

மயானம்

(அரிச்சந்திரன் சவஞ்சுடுங்கோலைப் பிடித்துக் கொண்டு காவலனாக நிற்கின்றான்)

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

பல்லவி

அரி	காக்க	வைத்தாயே	சிவமே	
	சுடலை-காக்க	வைத்தாயே	சிவமே	(கா)
	பாழுமுடலை-காக்க	வைத்தாயே	சிவமே	
	நாறும்பிணத்தை-காக்க	வைத்தாயே	சிவமே	

அநுபல்லவி

வாய்க்கரிசிநாற்பண முழத்துண்டுங் கூலிவாங்கி
நாய்நரிகூடித்தின்னும் பிணஞ்சுடுங்கோலைத்தாங்கி (கா)

சரணம்

நாடுநகரிழந்து	நல்மனையைப் பிரிந்து	
காடுவழிகடந்து	காஷ்டமுட்டிடவந்து	
பேய்வந்துயாடிப்பாடி	பிணங்களைச்சுற்றித்தேடி	
தாவியெடுத்துண்பதை	தனையனை எண்ணநாடி	(கா)

அரி எங்கே பார்த்தாலும், இருள்மயமாய்த் தெரிகிறது, மனிதர்களின் சப்தம் என்பதே கிடையாது. பேய்களின் ஆரவாரங்களும், பிணங்களைச் சுற்றி நின்றுகொண்டிருக்கும் நாய் நரிகளின் இரைச்சலும்தான் என் காதில்படுகிறது. ஆகாயமும் என் ஆன்மாவைப்போல் மந்தாரகரத்தில் மயங்கித் தவிக்கிறது, சூரியகுலத்தில் திருச்சங்கு மன்னர் வயிற்றில் பிறந்து எல்லா வற்றையும் இழந்து தாயைவிட்ட கன்றைப்போலவும்,

நீரைப்பிரிந்த பாலைப்போலவும் அநாதியாய்த்தவித்து நிற்கிறேனே, இவ்வாறு இப்பாவியை வருத்த எத்தனை நாளாய் நினைத்துக் கொண்டிருந்தீர். அன்று நான் கனவில் கண்டதெல்லாம் நன்றென முன்னிற்கின்றனவே. இவைகள் அனைத்தும் அவதியன்றோ. சூரிய மரபில் தோன்றி, ஒருக்கால் அயோத்தியைப் பரிபாலித்து வந்த இந்தப்பாவி அரிச்சந்திரன் புலையனேர்க்கு அடிமையாகிப் பேய்கள் வாழும் பிதிர்வனத்தில் பித்தனைப்போல் பிணத்தைக் காத்து நின்றான் என்று சொல்ல இவ்வாறு செய்தனையோ இவைகள் அனைத்தையும் என் நன்மைக்கே என்று எண்ணினேனே அல்லாது சிறிதளவு கூட நிந்திக்கவில்லை. இந்த நிலைமையிலிருந்து இன்னும் கீழான நிலைமையில் வைத்தாலும் அதையும் நான் அனுபவித்தே தீரவேண்டும். கங்கைவேணியா! இதுவும் உன் கருணையோ?

ஆசையான பாசத்தை அறவே நீக்கிட இவைகள் முற்றும் நன்மை அல்லவா. இவ்வாறு துன்பக்கடலில் நான் வராமலிருந்தால் இவ்வுண்மைகளை எல்லாம் நான் அறியமுடியுமா? ஒருக்காலும் முடியாது. தேவதேவனே! என்னை உன்மனம் போன்றவாறு செய்யத் துணிந்தாலும் **'சத்தியம்'**. என்னும் நிலைமையைத் தவறாமலிருக்கும்படி காப்பது உனதுபாரம், அநித்தியம் இவ்வுலகை ஆலகாலமென நினைத்தேனே அல்லாது அமுதமென எண்ணவில்லை. மாற்றறியாத் தோற்றலுள்ள தயாநிதியே! நீயேகதி. இனிமேல் என் கடமையைச் செய்கிறேன்.

அரி யாரோ! ஒருவன் வந்து கொண்டிருக்கிறான் அவனை யாரென்று கவனிக்கிறேன்.

இராகம்-கானடா விருத்தம்

அரி யாரடா பயலேயிந்த யருள்நிறை யிருளில்யிங்கு
யாரடா ஈமந்தன்னிற் அச்சமிலாது வந்தாய்
கூறடா பேருமூரும் கொடியனைப் போலே நின்றாய்
பாரடா பேசாவிட்டால் பதறிட மாட்டுவேனே

சத்யகீர்த்தி வருகிறார்

அரி யாரடா நீ! கொஞ்சமும் நெஞ்சமஞ்சாது இச்சமயத்தில் இந்த ஈமத்தை நாடிவந்தவன்.

இராகம்-தோடி விருத்தம்

சத். கோரமா யதட்டி யென்னை கூவிய ஐயா கேளும்
தீரனாம யோத்தி மன்ன ரடிதனைக் காணநாளும்
வீரமாய் ஆவல் கொண்டு விரைவினில் ஈமம் நாடி
ஓரமாய் வந்தேன் இங்கு உண்மையை அறிகுவீரே

சத். ஐயனே! நான் சத்தியகீர்த்தி தங்களைப்பார்க்க வேண்டுமென்ற பேரவாவுடனே இவ்விருளில் தங்கள் முன்னிலையில் வந்தேன்.

அரி. சத்தியகீர்த்தி! இவ்விடத்திலிருக்கிறேன் என்று உனக்கு தெரிவித்தது யார்? தெரிவி.

சத். தெரிவிக்கிறேன். தங்களைத் தேடிச்சேரி முற்றிலும் அலைந்தேன். இறுதியில் தாங்கள் இவ்விடத்தில் இருப்பதாக சிலர் தெரிவித்தார்கள் ஆதலால் தெரிந்து வந்தேன்.

அரி. சத்தியகீர்த்தி! என் பொருட்டு நீயும் ஏன் அவதிப்பட வேண்டும். என் கஷ்டத்தை நான்தானே அனுபவிக்க வேண்டும். இதற்கு யார்தான் என்ன செய்ய முடியும் இருக்கட்டும் அமருவாய்.

(நீயே சகாயமென)*

இராகம்-சகானா தாளம்-மிச்ரசாபு

கண்ணிகள்

சத். அறியாத துக்கம் வந்து
வருத்திய தால்நான் நொந்து
ஐயனே இங்கு வந்தேன் பொறுத்தருள்வீர்
தெரியாது வந்தயென்னை
தேற்றியே ஆதரிப்பீர்
தேடித்தேடி அலைந்தேன்
பாடிப்பதம் பணிந்தேன் (அ)

சத். ஐயனே! உம்மைப்பிரிந்தது முதல் என் மனம் ஓரிடத்தில் நில்லாது மேலும் மேலும் துன்பத்தையே மூட்டுகிறது. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்தகநக நட்பது நட்பு என்னும் முதுமொழிப்படி என் எண்ணங்களெல்லாம் நட்பு நிறைந்திருப்பதால் உம்மை மறக்க மார்க்கமில்லை. ஆனாலொன்று அதை நினைக்கும்பொழுது என் மனமெல்லாம் கலங்கி நிற்கிறது. என்னவெனில்-

* நாடகம்: கோவலன் சரித்திரம்

(ஏழு பிள்ளையுடன்)*

இராகம்-தேசிகத்தோடி தாளம்-ரூபகம்

கண்ணிகள்

சத். பொன்வளத்தைவிட்டு பேய்களத்தைத் தொட்டு
பிணத்தைச் சுடுவதும்
விதியோ விதியோ விதியோ

பொன்னைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அயோத்திமாநகரை அரசாண்ட நீரும், பாழும் பூதங்கள் வாழும் இப்பிதிர்வனத்தில் காவல்வேலை கரத்தில் தாங்கிப் பிணங்களை தகனஞ் செய்ய வந்திருப்பதும், உமது தலைவிதியோ? ஹா! என்மனம் சகிக்கவில்லையே! (பொ)

அரி விதிதான் என்னசெய்யும்
கதிதான் என்னசெய்யும்
மதியென்று அறிகுவாய்
நீயே நீயே நீயே

உயர்பதவியைத்தரும் மும்மூர்த்திகளும்கூட கடக்க அரிதாகிய கொடுந்தன்மையையுடைய விதியை எளியவராகிய நம்மால் வெல்லமுடியுமா? ஒருக்காலும் முடியாது. புத்தியில் சிறந்த சத்தியகீர்த்தியே! ஈசன் இன்னும் இதைவிட இழிவான நிலைமையில் வைக்காமலிருக்க வேண்டுமே என்ற உள்ளன்புடன் வாழ்த்த வேண்டும்.

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும் - முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயலும்.

என்றபடி நாம் இதைவிடத் தாழ்வான நிலைமையில் இருந்தாலும் நம்முடைய புகழ் மாறிவிடுமா? ஒருக்காலும் மாறாது. ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொள். (வி)

சத். இப்போது செப்பினேன் அப்பனே இப்பிழை
தப்பாது காத்திடும்
ஐயா ஐயா ஐயா (த)

அரி. அப்பிழையைத் தள்ளு
அரிசியை நீ கொள்ளு

* நாடகம்: நல்லதங்காள்

அன்புடன் ஈய்ந்தேனே
நானே நானே நானே (த)

அரி சத்தியகீர்த்தி! என்னை அடிமைகொண்டவர் இந்த வாய்க்கரிசியை நான் உண்ணும்படி ஆக்கினையிட்டார். நீயுமுண்ண வேண்டியதிருப்பதால், அந்தப்பாவம் என்னைச் சூழாதிருக்கும்படியுள்ள உண்மையை எனக்கு உரைத்திடு.

சத். பசுவைத் தின்னும்படி செய்து பின் சாணத்தை தெளித்து அரிசியை எடுத்துச் சமைத்துச் சாப்பிட்டால் பாவமொன்றும் நம்மை பிடிக்காது.

அரி அவ்வாறே செய்து கொண்டுவா

சத் இவ்வாறு இப்பெருந் துன்பத்தை மேலும் மேலும் அடைந்து கொண்டே வந்தால், நாம் எந்தக்காலத்தில் சுகத்தையடைகிறது?

அரி. அதைப்பற்றி அறிந்த ஈசனைத்தான் கேட்கவேண்டுமே அல்லாது என்னால் சொல்லமுடியாது.

காட்சி - 3

மயான காண்டம்

இருள்நிறைந்த வனம்

(பாம்பால் கடித்திறந்த தேவதாசனை எடுத்துக் கொண்டு மயானத்திற்கு செல்லுகிறாள்)

இராகம் முகாரி விருத்தம்

சந். அப்பனே அம்மாவென்று அழைத்திடும் பெருமைபோச்சே
ஒப்ப நீ சும்மாவந்து உரைப்பது இன்று போச்சே
அப்பளஞ் சாதங்கேட்கும் அருமொழி மறைந்துபோச்சே
கப்பிய விஷமுமேறி காட்டினில் இறக்கலாச்சே

ஆஹா! நான் என்ன செய்வேன் - என்ற மெட்டு

கண்ணிகள்

சந். அப்பனே தேவதாசா
அருமைப்பொற் பிரகாசா
அரவத்தால் அழிந்தாயோடா
மகனே மகனே மகனே (அ)

வச. அடாலோகிதாசா! உன்னை பத்து மாதம் சுமந்து
பெற்ற வயிறு முற்றும்
பற்றி எரியுதடா
நற்றவ மெங்கே சொல்லடா
கண்மணி கண்மணி கண்மணி

தந்தைவந்		துன்னைக் கேட்டால்	
சிந்தையாள்		என்ன சொல்வேன்	
விந்தையாய்		வந்து நேர்ந்ததே	
லோகிதா	லோகிதா	லோகிதா	(த)
பொன்னிறச்		சூர்யவம்சம்	
தன்னிலை		மாறி மோசம்	
சேர்ந்தாயோ		எமன்கைப் பாசம்	
கண்மணி	கண்மணி	கண்மணி	(பொ)

சந். அடா! லோகிதாசா! இப்படிச் செய்ய எத்தனைநாளாய் நினைத்திருந்தாய். உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வித்தைகளைக் கற்பித்து சூரியகுலத்திற்கு ஒரு சூரியப்பிரகாசமாக இருக்க வைத்தோமே! இப்பொழுது உன்னுயிர் அழிந்து விட்டதே! இந்தப் பாம்பு உன்னைக் கடிக்க வேண்டுமென்று எத்தனை நாளாக நினைத்திருந்ததோ? நினைக்கும் பொழுதெல்லாம் உன்துக்கமே மேலிடுகிறது. நாடிழந்து, நகரிழந்து, தந்தையைப்பிரிந்து தாயுடன் கூடிவாழ்வதில் என்ன பிரயோஜன மென்று எண்ணி உயிர் விட்டாயோ? இல்லை, “சத்தியமே தலைகாக்கும்” என்னும் நீதியை நமது தாய் தந்தையர் முறைவழுவாது நடந்து வந்தும் இவ்விதத் துன்பம் நமக்கு நேர்ந்ததேயென்று எண்ணி உயிர் விட்டாயோ? எதற்காக உயிர் விட்டாய்? ஏ கண்மணி! ஏ தேவதாசா! ஹா! உன்னைப் பிரிந்த நானும் இனிமேல் ஒரு விநாடியாவது உயிர் வைத்திருக்கலாமா? இருக்கலாகாது.

எங்கு பார்த்தாலும் இருள்மயமாய்த் தானிருக்கிறது. பேய்களின் ஆரவாரமும் மிருகங்களின் இரைச்சலுமே மேலிடுகின்றனவே யல்லாது, மனிதருடைய ஒலியே கிடையாது.

லோகிதாசனை தன் தோளிலேந்திக் கொண்டு மயானத்திற்குச் செல்கிறாள்.

(ஐயனே! ஐயனே)

சந். செல்லுவேன் செல்லுவேன் செல்லுவேன்
சேயனைத் தோள்தனிற் தாங்கியே
பெரும்பிணந்தனை சுடு ஈமமதில் நான் செல்லுவேன் (செ)
ஓங்கியே பாங்கியே இரங்கியே
பாலனை கொண்டுநான் ஏகிட

மனம் பதறிய இருள்வழி தனிற் நான் செல்லுவேன் (ஓ)

(சந்திரமதி லோகிதாசனை எடுத்துக்கொண்டு மயானத்திற்குச் சென்றுவிட்டாள்)

காட்சி - 4

மயானம்

அரிச்சந்திரன் பரண்மீதமர்ந்திருக்கிறான்

(சந்திரமதி தேவதாசனை கொண்டுவருகிறாள்)

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

சந். பாலா என்ன காலம்வந்ததடா
மகனே! மகனே!
இப்பாவிபடுந்துய ரோங்கிடச் செய்தாயோ (பா)

(சந்திரமதி தேவதாசனை கீழே இறக்கி வைக்கிறாள்)

சந். காசிநாதா! என் மனம் பதறுகிறதே எவ்வாறு என் புத்திரனைத் தகனஞ் செய்யப் போகிறேனோ? என்னை இவ்வாறு துன்பத்திலழுந்த நீ யெத்தனை நாளாய் நினைத்திருந்தாய் அநாதியாய்வந்து தவித்து நிற்கிறேனே. இதுவும் உன் திருவருளா?

இராகம் முகாரி விருத்தம்

சந். வனத்தினி லுன்னைத் தேடி மனத்துய ரோடுவுன்னை
சின்னத்துநான் தோள்மேற்றாங்கி தினத்தினில் ஈமம்வந்து
கனத்ததோர் பிணங்கள் சுட்டுக் களித்திட்டகட்டை தேடி
மனத்துயர் நோக காஷ்ட மடுக்கிநான் யடக்குவேனே

ஏழுபிள்ளையுடன் - என்ற மெட்டு

இராகம்-முகாரி. தாளம்-ரூபகம்

சந். பஞ்சணை மெத்தையிற் கொஞ்சி யிருந்த நீ
இப்பாழு மயானத்திற் வந்தாய்
வந்தாய் வந்தாய்
இந்தப்-பாவி செய்த குறை தாவியே மூண்டதால்
கூவியே நின்றேனே பாலா
பாலா பாலா (பா)
சுள்ளி பொறுக்கியே நள்ளிரவு நேரம்
கொள்ளியும் வைப்பது ஏண்டா
ஏண்டா ஏண்டா
பள்ளிக்குப்போய் வீடு திரும்பி வரும் வரை

பார்த்துப் பார்த்து நிற்பார்	மகனே	
மகனே	மகனே	(சு)

சந். நீ பள்ளிக்கூடத்திற்குப் போய் திரும்பி வரும் வரை உன் தந்தை நீ வருவதை எதிர்கொண்டழைப்பாரே. அவ்வளவு மேன்பாடு தங்கிய உத்தம மன்னன் வயிற்றில் பிறந்து வளர்ந்து நீ இந்தச் சுடுகாட்டிலா வந்து படுத்திருக்க வேண்டும். ஆ தெய்வமே. இதுவும் உன் சோதனையா?

(சந்திரமதி காஷ்டமடுக்கி லோகிதாசனை அதன்மேல் படுக்க வைத்து நெருப்பை மூட்டி காஷ்டத்தை சுற்றி வருகிறாள்)

இராகம்-முகாரி விருத்தம்

மன்னனே நமது ஆசை மைந்தனை நாதந் தீண்டி
மன்னனே மறித்து நின்றான் மாய்கையாம் பற்றைத்தாண்டி
மன்னனே மறித்து மருகினிற் வைத்து வேண்டி
மன்னனே கொள்ளி வைத்து யக்கினி மூட்டுவேனே

மாங்காய் அழுகிப்போச்சே - என்ற மெட்டு*

சந்,	அப்பா	மகனே வுன்னை	
	எப்போது	காண்பே னோடா	
	தப்பாது	செப்பிடுவாயே	
	மகனே! மகனே!	மகனே!	(அ)
	நெருப்புப்	பிடிக்க லாச்சே	
	உருப்பு	மறைந்து போச்சே	
	பெருத்து	நகைக்க லாச்சுதே	
	தெய்வமே! தெய்வமே!	தெய்வமே!	(நெ)

இதைக் கண்ணுற்ற அரிச்சந்திரன் சத்தியகீர்த்தியிடம் மொழிகிறான்

இராகம்-பைரவி விருத்தம்

அரி. புகையது கிளம்பியங்கு போகுது பாராய் மந்திரி
வகையது தெரியே னந்த மனமது கலங்கிடாமல்
தகை யருள் இருளிலிங்கு தாட்டிக மாக வந்து
நகை பெற காஷ்ட மூட்டி நன்றென செய்திட்டாரே.

அரி. மந்திரி! பார்த்தாயா? சமீபத்தில் புகைகிளம்புகிறது. இருள் நிறைந்த இந்த நேரத்தில் என் உத்திரவின்றி பிணத்தைச் சுடுவது யாராயிருக்கலாம்? அருகில் சென்று பார்க்கிறேன்.

* நாடகம்: கோவலன் சரித்திரம்

சத். சென்று வாருங்கள் ஐயனே.

விருத்தம்

அரி. யாரடி கள்ளி நீ தான் அடர் வன மிருளில் தானாய்
பேரிடி மழையில் வந்து பிணமதைத் தகனஞ் செய்தாய்
கூறடி உண்மை யிங்கு கொழுத்துமிப் பிணத்தை யொத்தாய்
பாரடி உதைத்தேனிப்போ பாலனை எடுத்துச் செல்வாய்

(விண்டலமும் மண்டலமும்)

நாடகம் - சத்தியவான் சாவித்திரி
இங்கிலீஷ் நோட்

அரி. சண்டாளியே இந்தவேளை
இப்பிணத்தைத் தூக்கிச் செல்வாய்
தகனஞ் செய்ய விடமாட்டேன்
இந்த- சாமவேளையில் நீ ஈமந்தன்னை நாடி நீலிபோல் வந்தாயடி
சற்று- தாமதஞ் செய்யாமல் பாலனைத் தூக்கியே சென்று வருவாயடி
நற்- சத்தியமீறியே இப்பெரும் பாதகம்
இத்தினம் செய்தாயடி
வீண்-தாமதஞ் செய்யாமல் செல்லடி
மீண்டும்-தானாகவருந்தியிங்கு வாயாடிப்
புலம்ப வேண்டாம்
வந்தவழி நாடிச்செல்லடி

அரி. மூடத்தன்மை நிறைந்தவளே! உன்னை நீலி என்றே எண்ணுகிறேன். ஏனென்றால் இருள் நிறைந்த இந்த நடுச்சாமத்தில் தனியாய் வந்து என் உத்திரவு இல்லாமல் இந்தப் பிணத்தைத் தகனஞ் செய்து நிற்கிறாய். உன்பிணத்தைத் தகனஞ்செய்ய வேண்டுமானால், எனக்குத் தர வேண்டிய கால்பணம், முழத்துண்டு, வாய்க்கரிசி, இம்மூன்றையும் என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் கண்டிப்பாய் தகனஞ் செய்ய முடியாது. சென்று வா மங்கையே!

(*இந்த யிடத்தில் இருளாயிருந்ததானால் அரிச்சந்திரன் சந்திரமதி எப்படிப்பட்டவளென்று உணராமல் வாடி, போடி, கள்ளி என்று சொன்னான். அதன்பின் அவள் மொழிந்ததைக் கேட்டு நன்றாய்க்

கற்றுணர்ந்தவளென்று உணர்ந்து மிகவும் மரியாதையாய் சமாதானம் சொல்லுகிறான். புராணத்திற்கிணங்க இசைத்தேன் என்பதை உணருவீர்களாக.)

இராகம்-முகாரி விருத்தம்

சந். கள்ளிநா னில்லை ஐயா கபடியு மில்லை ஐயா
நல்லிருள் வேளைவந்த நான் பேயு மில்லை ஐயா
சுள்ளியைப் பொறுக்கி நானும் சுட்டுமே நிற்கும் வேளை
தள்ளியே உதைக்கலாமா தாளிணைப்பணிந்து நின்றனே்.

சந். ஐயா! நீரென்னை நிந்தித்துப் பேசவேண்டாம். நானே அநாதை என் கையில் ஒருகாசுகூட கிடையாது. அப்படிக் காசு இருந்தால் நான் தனித்து வருவேனா? இந்தக் குறைக்கொள்ளிக்கட்டைகளைப் பொறுக்கி அடுக்கி அதன் மீது என் புத்திரனை வைத்துத் தகனஞ் செய்வேனா? இதையெல்லாம் அறிந்து இப்பாவி பெற்ற பாலனைத் தகனஞ் செய்ய அநுக்கிரகஞ் செய்யவேண்டும். ஆதலால்.

ஆயென் ஜானகியை - என்ற மெட்டு

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

சந். பாதம் பணிந்து நின்றேன்
இப்-பாவித் துணிந்து வந்தேன்
பாழுந் துயரால் நொந்தேனே
ஐயா ஐயா ஐயா (பா)
கோடை யிடிவிழுந்து
மேடை யுடைந்தாற் போலே
ஓடி நோக மிதித்தீரே
ஐயா ஐயா ஐயா (கோ)
பத்துமாதஞ் சுமந்து
பெற்றெடுத்த பாலனை
எத்தியுதைக்க லானதே
தெய்வமே தெய்வமே தெய்வமே (ப)
காலைக் குவித்து நின்றேன்
கருணை புரியும் நொந்தேன்
கால வினையுஞ் சேர்ந்ததே
தெய்வமே தெய்வமே தெய்வமே (கா)

சந். ஐயா! யாதொரு ஆதாரமில்லாத எனக்கு உமது பாதந்தான் கெதி. நீர் இப்பாவிமீது கருணை கூர்ந்து இப்பாலனைத் தகனஞ் செய்யும்படி அநுக்கிரகஞ்செய்ய உமது திருப்பாதத்தைப் பணிந்து நிற்கிறேன்.
(என்று சொல்லிக்கொண்டு சந்திரமதி விழுந்து அரிச்சந்திரன் காலைப்பிடிக்கிறாள்)

இராகம்-அடானா தாளம்-ஆதி

பல்லவி

அரி. எட்டி நில்
காலைக்-கட்டியாய்ப் பிடித்துத்தொட்டு
சுட்டிட விடை கேட்காதே (எ)

அநுபல்லவி

சொந்தமான உன்மைந்தனை
உதைத்ததால் நீநொந்தனை
வந்தெனை வருந்தாதினி
சிந்தையும் ஒழிந்தே னங்கு (எ)

சரணம்

தாயே-உணர்வா யிங்கு நீயே
எழுந்திங்கு நிற்பாயே
சொந்தமோ யுரைப்பாயே
காற்பண முழத்துண்டு வாய்க்
கரிசியும் நீ தருவாய்
காலதாமதஞ் செய்யாமல்
பாலகனைத் தகனஞ் செய்வேன் (எ)

அரி. பெண்பாவாய்! நீ என்னைச் சுடுகாட்டிற்குச் சொந்தக்காரன் யென்று எண்ணி இவ்வாறு உரைக்கின்றாய். சொந்தக்காரன் நானல்ல. என்னை அடிமையாகக் கொண்ட பறையன் எனக்கிட்ட கட்டளைப்படி காற்பணமும், கொள்ளித்துண்டும், வாய்க்கரிசியும், நீ தர வேண்டியது அவசியமே! ஆயினும் ஒன்றுமில்லாதவளென்று என் முன்னிலையில் நீ புலம்பித் தவித்ததால் எனக்குச் சேர வேண்டிய வாய்க்கரிசியை மட்டும் தள்ளிவிட்டு என் எஜமானுக்குத் தரவேண்டிய மற்ற இரண்டையும் கட்டாயம் கொடுத்தால்தான் தகனஞ் செய்வேன் இல்லையேல், கண்டிப்பாய்த் தகனஞ்செய்ய முடியாது.

இராகம்-முகாரி விருத்தம்

சந். கொடுத்திட வகையுமில்லை கொடுப்பவர் யாருமில்லை
அடுத்துநா னடைந்ததொல்லை அளவுக்கு மெல்லை யில்லை
விடுத்ததைக் கேட்டயிந்த மெய்யிடையாளின் சொல்லை
தடுத்துரை செய்யாமல் நீர் தகனமுஞ் செய்வீரய்யா.

சந். என் கையில் காசுயிருந்தால் ஒண்டியாக இந்தயிடத்திற்கு வருவேனா? ஒருக்காலும் வரமாட்டேன். இந்த ஏழையின் மீது கருணை கூர்ந்து விடை தாரும்.

தள்ளுவாரே யெந்தனைக்கை - என்ற மெட்டு

இராகம்-நாதநாமக்கிரியை தாளம்-ரூபகம்

கண்ணிகள்

சந். கையிலொரு காசுமில்லை
கடனும் வாங்க மார்க்க மில்லை (கை)
மெய்யுடன் உரைத்த சொல்லை
கை விடாது காரும் தொல்லை (கை)
பணமிருந்தால் நொந்து வாடி
பாலனைச் சுமந்து வோடி
ஈமந்தனில் பயந்து நாடி
எதற்கு வாரேன் உம்மைத் தேடி (கை)

ஐயே! இச்சிறியாள் மீது தயைகூர்ந்து இப்பாலனைத் தகனஞ் செய்ய விடை தாரும். எனக்கு யாரும் துணை கிடையாது. விற்பதற்கும் பொருள் கிடையாது. ஆனதால் நீர் தடை செய்யாது விடையளிப்பீர் ஐயனே.

அரி. உன்னிடத்தில் பொருளொன்றும் கிடையாதே?

சந். ஐயே! மெய்யாகக் கிடையாது.

(அதோ வருகிறான்)

இராகம்-ஆபேரி தாளம்-ரூபகம்

பல்லவி

அரி. நில் லாதே
நீ-நில் லாதே

என்முன்-நில் லாதே
பொய்-சொல் லாதே (நி)
எதைப் பொறுத் தாலு மிந்தப்
பொய்யைப் பொறுக்க மாட்டேன்
வதை செய்யா மலே நீயும்
மயானம் விட்டுச் செல்லுவாய் (நி)

ஏ மாதரசே! என்ன தெரிவித்தாய். இன்னொருமுறை அவ்விதம் தெரிவிக்காதே! எதை பொறுத்தாலும் பொறுப்பேன் பொய் என்னும் இக்கொடிய விஷத்தைப் பொறுக்கமாட்டேன். ஏனென்றால் பொய்என்னும் பாசத்தை அறவே தொலைக்க் கங்கணங் கொண்டவனாகிய இம்மெய்யனிடம் அப்பாழும் பொய்யைச் சொல்லாதே. இதுவரை நீ பேதமை எனும் இரக்கத்தால் மன்னித்தேன். இனிமேல் இவ்வாறு உரைத்திடில் உன்னுடைய மொழியைக் கேட்கப் பிரியமில்லை. சென்று வா.

இராகம்-மோகனம் விருத்தம்

அரி. பொய்யதைப் புகன்றதாலே போகவும் விடையுமீய்ந்தேன்
மெய்யதை இகழந்ததாலே மேனியும் கலங்கி நொந்தேன்
ஐயனு முரைத்தவாறு அவை முற்றும் வினவிநின்றேன்
பையவே நடந்து நீயும் பாவையே செல்வாயங்கே

என் முன் பொய்யை உரைத்ததால் விடை தந்தேன் நிற்காதே. சென்றுவா.

இராகம்-முகாரி விருத்தம்

சந். ஐயனே விடையுந் தந்தீர் அரும்பாவிக் காரு மில்லை
ஐயனே வைய மீதில் வாழ் மனை முற்ற மில்லை
ஐயனே காசுந் துண்டும் மளித்திட யொருவ ரில்லை
ஐயனே பணிந்து நின்றேன் அறிவையைப் போற்று வீரே

ஐயனே! நான் எள்ளளவாகிலும் பொய் சொல்லவில்லை திக்கற்றவளுக்குத் தெய்வமே துணை. இன்று நீரே கதியென உண்மையை யுரைத்தேனே யல்லாது, பிசகில்லை. ஆனதால் கருணை கூர்ந்து என் பாலனைத் தகனஞ் செய்யும்படி விடைதாரும் மெய்யனே!

இராகம்-அடானா தாளம்-ஆதி

பல்லவி

அரி பொய்யைப் புகன்றதால் நீ போ
இந்த-மெய்யனிடம் வந்தழுது
பையவே நீமுன் தொழுது (பொ)

அநுபல்லவி

கையிலொரு பொருளில்லை
வையமீதில் யாருமில்லை
பொய்யதனால் நேர்ந்த தொல்லை
பையனோடு செல்வா யெல்லை (பொ)

சரணம்

தீயிடும் புரையனென்று
வாயிடும்பு பேசி நின்று
தெய்வமென்று நீயுமழுதாயோ
இல்லை-மெய்யனை அடிமைகொண்ட
ஐயன்வீர வாதுக்குரிய
பணமில்லை என்றோத வந்தாயோ
உன்-தந்திரமெல்லாம் நானறிந்தேன்
இந்திரஜாலமும் தெரிந்தேன்
மந்திரமொன்று ஓதவேண்டாம்
சுதந்திரமிங்கு தந்திடேனே (பொ)

பேதாய்! உன்னையறிந்தேன். உன் இந்திரஜாலமெல்லாம் என்னிடத்தில் செல்லாது. உன்னிடம் கொடுக்க வகை ஒன்று மில்லையே? நன்றாய் ஆலோசித்து பதில் சொல். நீ அருகிலிருந்த விறகுகளைக் கூடத்திருடியே வந்திருப்பாயென எண்ணுகிறேன் பெண்களிலும் நீ நல்ல தந்திரம்படித்தவள். சீக்கிரமாய்ச் சென்றுவா.

சந். ஏன் இவ்வாறு உரைக்கின்றீர். உம்மையறியாமல் என்னிடத்தில் என்ன பொருளிருக்கின்றது? இந்த ஏழை மீது தயவு செய்து பாலனைத் தகனஞ் செய்யும்படி விடை தாரும் ஐயனே!

அரி. பொருளொன்றும் உன்னிடத்தில் இல்லையே!

சந். இல்லை

அரி. ஹா! என்ன துணிவு

இராகம்-மோகனம் விருத்தம்

பதியில்லை சுற்றமில்லை பற்றிட வகையுமில்லை
கதியில்லை முற்ற மில்லை கைதனில் காசுமில்லை
விதியில்லை என்றுநொந்து விழுந்துமே புலம்புமாதே
மதியுறுந் தாலி தன்னை மங்கையே விற்றுத் தாராய்.

பேதாய்! மின்னலைப்பழிக்கும் பொற்தாலியை உன் கழுத்தில் அணிந்து கொண்டு வகையொன்றும் இல்லை இல்லையென்று தெரிவிக்கிறாய்.

கபரதரஹான் - என்ற மெட்டு

இராகம்-சிந்துபைரவி தாளம்-ஆதி

பல்லவி

அரி. விற்றுத் தருவாய்
மின்னலைப்போன்ற தாலியை (வி)
மேதினியில் உன்னைப்போல
பாவியை நான் பார்த்ததில்லை (வி)

அநுபல்லவி

மின்னலைப் பழிக்குதுன் கழுத்தினில்தாலி
தன்னிலை அறிந்தும்நீ அழுதாயேநீலி
முன்னே விற்பாயேஅதை விலையங்குகூறி
முழத்துண்டும் காற்பணமும்
க்ஷணத்தில் தருவாய் நீயே (வி)

பேதாய்! நீ வேகமாய்ச் சென்று எனக்குத் தரவேண்டிய கூலிக்காக உன் தாலியை விற்றுத்தரவேண்டும். இல்லையேல் உன் பாலனை எடுத்துச் செல்ல வேண்டும். இனிமேல் ஒரு விநாடிகூட இங்கே தாமதிக்கக்கூடாது. சென்று வா. விடை தந்தேன்.

சம்போ சங்கரனே - என்ற மெட்டு

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

பல்லவி

சந். நிலையின்று மீறலானதே
நீதியுமாறி-புலையன் காணவும் நேர்ந்ததே (நி)

அநுபல்லவி

தேவாதி தேவராலும் தேடிக்காணாததாலி
மாபாவி பார்த்திட வைத்தாயே இங்குகேலி (நி)

சரணம்

சத்திய மீறவில்லை அநித்தியஞ் செய்ததில்லை
இக்கதியாளின்தொல்லை தீரவோமார்க்கமில்லை
மாலையிட்டவரன்றி மற்றவர் யறியாரே
காலையிலிப்புலையன் காணவும் வைத்தாரே (நி)

ஹா! தேவர்களும், சித்தர்களும் காணமுடியாத இந்த மாங்கல்யத்தை, மயானத்தைக் காத்துக் கொண்டிருக்கும் இந்தப் புலையனும் பார்த்துரைப்ப தென்றால், சத்தியமென்னும் விரதத்தினின்று தவறினேனோ?

அஞ்ஞானத்தைநீக்கி மெய்ஞானத்தைக் கைக் கொண்ட எனது தந்தையாருக்கு சடையை அணிந்த ஈசன் வரமளித்தாரே, அந்த ரகசிய வார்த்தையிலுள்ள பொருளும் இந்தவூருக்கு வந்தபின் பொய்யானதோ? மதியைஅணிந்த ஈசன் சொன்னவார்த்தையும் இன்றோடு முடிந்து போயிற்றோ. எங்களை இவ்வாறு துன்பத்திலாழ்த்த கங்கணங்கட்டி நின்ற கௌசிகமுனியின் எண்ணமும் இன்றோடு நிறைவேறிற்றோ. இரக்கத்தில் சிறந்த என் நாயகரை விற்றதினால் மேன்பாடு தங்கிய, குலம், அழகு, உயர்வு இம்மூன்றும் மாறுமே யல்லாது, என்பதிவிரதா தர்மமுமா மாறவேண்டும். ஜெகதீசா! நீயே கதி!

(சந்திரமதி சொன்னதை முற்றும் அரிச்சந்திரன் நன்கு கவனிக்கிறான்)

அரி. இப்பெண்! பகர்வதைக் கவனித்தால் என் பத்தினியாயிருப் பாளோ? இப்பாலன் என் புத்திரனாக யிருப்பானோ? ஆஹா! ஏன் என் புத்திமாறி நிற்கிறது. அறியாது மயங்கலானேன். இருக்கட்டும். வினவுகிறேன்.

இராகம்-கீர்வாணி விருத்தம்

அரி. மாலையைக் கண்டேனென்று மயங்கியே தயங்கு கின்றாய்
ஆலையின் கரும்புபோல அலறியே துடித்து நின்றாய்
வாலையின் புகழை நொந்து வருந்தியே புலம்புகின்றாய்
காலையில் நீயாரிந்தப் பாலனார் பகருவாயே

நான் உன் தாலியைக் கண்டேனென்று மனது நொந்து புலம்புகின்றாயே நீ யார்? இந்தப் பாலன் யார்? எனக்குத் தெரிவிப்பாய் பெண்மணி.

இராகம்-முகாரி விருத்தம்

சந். மதிதயன் பெற்றயென் பேர் சந்திரமதியே யென்பார்
பதியவர யோத்தியாண்ட அரிச்சந்திர மன்னரென்பார்
விதியினால் நொந்தபால னவனைலோ கிதனேயென்பார்
கதியினால் காட்டிற்பாம்பு கடித்ததால் நொந்தேனையா

கன்னோசி நாட்டுச் சந்திர குலத்தரசனாகிய மதிதயன் பெற்றெடுத்த என்னை சந்திரமதி என்பார்கள். என்னை அன்புடன் மாலையிட்டவர் அயோத்தியாபுரியைப் பரிபாலித்த சூரியகுலத்து திருச்சங்கு மன்னரின் புத்திரரான அரிச்சந்திரனாவார். இந்தச் சிறுவன் எங்களிருவருக்கும் பிறந்த புதல்வன். இவன் பெயர் லோகிதாசன் என்று சொல்லுவார்கள். இவன் காட்டிற்குச் சென்றிருக்கும் சமயம் நாகப்பாம்பால் விஷந்தீண்டி இறந்ததால் தூண்டியில் அகப்பட்ட மீனைப் போல் இம்மயானத்தை நாடித் தகனஞ்செய்ய வந்தேன், ஆதலால் கருணைகூர்ந்து, தகனஞ் செய்யும்படி விடைதாரும் ஐயனே!

(இந்த வார்த்தைகளைக் கேட்ட அரிச்சந்திரன் வேரற்ற மரம்போல் விழுந்து பாலனைத்தன் மடியின்மீதுவைத்துக் கொண்டு அழுது புலம்புகிறான்)

அரி. ஹா! எவ்வாறு சகித்திருப்பேன்.

இராகம்-முகாரி விருத்தம்

சூரியகுல மின்றோடு துன்பத்தால் அழிந்துபோச்சோ
காரியின் யெண்ணமாறி கௌசிகன் சதிக்குள்ளாச்சோ
பாவிநான் பெற்றபாலன் பார்புகழ் ஆண்டிடாமல்
தாவியே விஷத்தாலெந்தன் தனையனும் மாண்டாயோடா

வேட்டைகளாடிய - என்ற மெட்டு

அரி. அப்பா மகனேநான் எப்பிறப்பில் காண்பேன்
தப்பாது சொல்லிடு தந்தையும் நானே
விந்தையும் நேர்ந்ததடா
மகனே - சிந்தையும் நொந்ததடா (அ)

அடா கண்மணி! உன் தலையில் இப்படியுமா எழுதியிருந்தான் பிரம்மதேவன். நம்மைப் பெற்றெடுத்த தந்தை நிலையில்லா உயிரை வளர்த்துக்கொண்டு கேவலம் ஒரு புலையனுக்கு அடிமையாகி விட்டானே, இனி எப்படி நம்மை மீட்கப்போகிறான் என்று எண்ணி உயிர் விட்டாயோ?

தேவாதி தேவர்கள்	பாராது நின்றாரோ	
மாரனைப்போலுரு	வாக நீ தோன்றி	
மடிந்திட	நின்றாயோடா	
விஷம்-தீண்டிடச்	சென்றாயோடா	9(தே)
கட்டியணைத்து	முத்தமிட்ட நானும்	
எட்டி யுதைத்திங்கு	தட்டி நின்றேனே	
கெட்டியே	சென்றாயடா	
வாயை-பூட்டியே	நின்றாயடா	(அ)
பாரில் புகழ்பெரு	மயோத்தி மா நகரைப்	
பரிபாலித்திடாமல்	அப்பாம்பால் நீ மாள	
கூரியே	சென்றாயோடா	
உந்தன்-வீரிய	மெங்கேயடா	(பா)

அரி. தேவதாசா! உன்னைப்பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டி, சீராட்டி, தாலாட்டிய சமயத்தில் நீ

"மக்கள் மெய் தீண்ட லுடற் கின்ப மற்றவர்
சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு"

என்பதற் கிணங்க இன்பம் நிறைந்த சொற்பொழிவுடன் எங்கள் மனதை ஆனந்திக்கச் செய்தாயே! இப்பொழுது பேய்கள் வாழும் இம்மயானத்தில் வந்து திக்கற்றவனாய் பரிதவித்து புலம்புகிறாயே! சூரிய குலத்திற்குப் பெருஞ் சூன்யம் வைத்து நன்றாய் எரியக் கூடிய திருவிளக்கை அமிழ்த்ததுபோல் இருளாகச் செய்தாயே!

"சோகத்தில் சிறந்தது புத்திர சோகம்"

என்னும் நீதியின் ஆசையால் உன்னைத் தவிர்த்து, இக்கொடிய உலகில் எவ்விதம் வாழுவேன். ஆ! நான் என்ன செய்யப்போகிறேன்! ஏ கருணாகரா! இதுவும் உன் திருவருளோ?

(இந்தச் சமயத்தில் சந்திரமதியும் துக்கக்கடலில் மூழ்கினவளாகி இவர்தான் தன் நாயகரெனத் தெரிந்து அவருடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு)

சந். நாதா!

"புண்ணியமாம், பாவம்போம், போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்"

என்றபடி ஊழ்வினைக்குறைகள் ஒன்று சேர்ந்து, மூண்டதேயல்லாது வேறில்லை. "பொற்பழி வில்லாத பல புத்திரரைப் பெறலின் ஓர்

நற்புதல்வனைப் பெறுதல் நன்றாமே" என்பதுபோல் பூவுலகிற்கு கதிரவனை யொத்த மேனியாய் ஒரு அருமைப் புத்திரனைப் பெற்றெடுத்தோமே அவன் உயிரோடிருந்து நமது பெயரை மறக்காது வாழ்ந்திருக்கக்கூடாதா? இருக்கட்டும், இனிமேல் யார்தான் என்ன செய்யக்கூடும். வருந்த வேண்டாம் ஐயனே! நான் வந்து ரொம்ப நேரமாய் விட்டபடியால் அடியாள் மீது கிருபை கூர்ந்து-

(உமாபதி தனையனே)

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ஆதி

பல்லவி

சந்தி. நாதா . தகனஞ் செய்குவீர்
பாதமும் பணிந்தேன்
பதியே நான் நொந்தேன்
கதியால் வியந்தேன் (நா)

அநுபல்லவி

நீ தா தகனஞ் செய்யும்
போதா சிகையில்வையும்
வேதா - மனங்கசிந்து சோதன் தேவதாசனை (நா)

சரணம்

ஓடி-கானக மதில்நாடி
லோகிதா சனைத் தேடி
வந்தேனே ஈமம் கூடி
பாடி-பரமனருள் தேடி கரங்குவித்தேன்
நாடி-தயங்கிடாமல் வாடி நொந்த மகனை (நா)

சந். நாதா! என்னை அடிமை கொண்ட ஐயரிடம் துரிதமாக வந்து சேருகிறேன் என்று விடைபெற்று வந்தேன். ஆனதால் கருணைகூர்ந்து இந்தப் பாலகனைத் தகனஞ் செய்யும்படி வேண்டுகிறேன் ஐயனே!

இராகம்-சங்கராபரணம் தாளம்-ரூபகம்

கண்ணிகள்

அரி. செய்யலா மோதகனம்
செய்யலா மோ்தகனம்
செய்யலாகாது யிங்கே அறிந்திடுவாய் (செ)

பொற்கொடியே! தெரிவிக்கிறேன். என்னை அடிமையாகக் கொண்ட புலையன் எனக்கிட்ட கட்டளைப் பிரகாரம் நான் நடக்க வேண்டியது அவசியமே, ஆயினும், எனக்கு வரவேண்டிய அரிசி

இல்லையென்றாலும், புலையனேர்க்குச் சேர வேண்டியதாகிய கால் பணமும் முழத்துண்டும் வாங்க வேண்டியதவசியமாகையால் உன்னை யடிமை கொண்ட-

வேதிய ரிடஞ்சென்று
காற்பணம் முழத்துண்டு
வாங்கி வருவாயின்று விடைதந்தேன் (வே)

வேகமாய்ச் சென்று புலையனேர்க்குச் சேரவேண்டிய கால்பணமும், முழத்துண்டும் வாங்கிக் கொண்டு வருவாய் அவ்வாறில்லாமல் நான் தகனஞ்செய்தால் வரம்பு மீறியதாகும் சத்தியமே உருவாக வந்திருக்கும் நாம்-

சத்திய மீறலாமோ
முத்தியு மேலேறுமோ
இத்தினம் சென்று வாராய் விடைதந்தேன் (ச)

யாதொரு தடையும் செய்யாமல் வேகமாய்ச்சென்று அந்த இரண்டையும் வாங்கிக்கொண்டு வருவாய் கண்மணி!

சந். நாதா!

"ஈக்கு விடம் தலையில் எய்தும், இரும்தேளுக்கு
வாய்த்தவிடம் கொடுக்கில்வாழுமே - நோக்கரிய
பைங்கண் அரவுக்குவிடம் பல்லளவே-
"என்னை அடிமையாகக் கொண்ட வேதியருக்கு"
அங்கமுழுதும்விடமே ஆம். என்றபடி -

எப்பொழுது பார்த்தாலும் சிவந்தகண்ணுடன் கோபக் குறியாகவே இருப்பார். மீண்டும் நான் சென்று வினவினால் தருவாரோ? தரமாட்டாரோ? நான் அறியேன். இருந்தாலும் நான் போய் நேரில் கேட்டு வாங்கி வருகிறேன். நான் போய்வருமளவும்-

(சம்போ கங்காதரனே)

இராகம் - முகாரி தாளம் - ரூபகம்

பல்லவி

சந். பாலனைக் காத்தருள்வீரே
பாவியாள் பெற்ற (பா)
விடமுண்ட மைந்தனை
இடமதில் வைத்தேகுறேன்
நடந்துபோய் வரும்வரை
கடந்து போகாமல் நீரும் (பா)

நாதா! தாங்கள் கோரியவாறு என்னை அடிமைகொண்டு வேதியரிடஞ் சென்று முழத்துண்டும், காற்பணமும் வாங்கிக் கொண்டு வருகிறேன். நான் போய்த் திரும்புமளவும் புத்திரனை வேறுயாரும் தொடாதபடி காத்துக் கொள்ளும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொண்டேன் நாதா!

அரி. கண்மணி! கவலையடையாதே! சென்று வா, புத்திரனை நான் பார்த்துக்கொள்கிறேன்!

சந். நாதா! விடைபெற்றுக் கொள்கிறேன்.

(சந்திரமதி சென்றுவிட்டாள்)

காட்சி - 5

கௌசிகரின் தபமண்டபம்

கௌசிகன் ஆலோசனை

கௌ. இம்மட்டில் விட்டேனோ! இந்த அரிச்சந்திரனையும் சந்திரமதியையும். தேவதாசன் தொலைந்தான். சந்திரமதி தகனஞ் செய்கிறதற்கு காலகண்டனிடம் வருகிறாள் **“இதுதான் சரியான தந்திரம் என் புத்திக்குப் புலப்படுகிறது இருக்கட்டும்”** சந்திரமதி வரும்வழியில் காசிராஜனுடைய புத்திரனைக் கையோடு எடுத்து வந்து கொன்று, இந்த இடத்தில் தேவதாசனைப்போல் செய்கிறேன். அப்படிச் செய்தால்தான் இவர்கள் பொய் சொல்லும்படியாக ஏற்படும். அதன்பிறகு வசிஷ்டரிடஞ்சென்று அவன் கெருவத்தைப் பங்கப்படுத்து கிறேன். இதுதான் சரியான தந்திரம். இதோ செல்லுகிறேன். காசிராஜன் அரண்மனைக்கு இந்த அரிச்சந்திரனை ஜெயிக்காவிட்டால் நானும் ஒரு தவரிஷியா? சே! சே! இவன் எனக்கு எம்மாத்திரம் ஒரு கை பார்க்கிறேன்.

(கௌசிகன் சென்றுவிட்டார்)

காட்சி - 6

இருள் நிறைந்த வனம்

ஆலமரத்தின் நிழல்

அடைக்கலமே அடைக்கலமே - என்ற மெட்டு*

இராகம்-ஆரபி தாளம் - ஆதி

பல்லவி

சந்.
சங்கரனே சங்கரனே
சம்போகெங் காதர சங்கரனே (ச)

* நாடகம்: கோவலன் சரித்திரம்

அநுபல்லவி

பாழும் வேதியருக்கு	விலையாக முடித்தாய்	
பாலனுமரவத்தால்	மாண்டிட விடுத்தாய்	
பேய்கள் வாழும் ஈமத்தில்	புலம்பிட பதித்தாய்	
நாய்கள் போலலைந்து	நடந்திட விதித்தாய்	(ச)

ஏ, கருணாகரா! இதுவுமுன் சோதனையோ, நடந்து நடந்து என் கால்களும் கொப்பளித்துவிட்டதே. இருக்கட்டும் வேதியரிடஞ் செல்லுகிறேன்.

(சந்திரமதி சென்று விட்டாள்)

காட்சி - 7

காசிராஜன் அரண்மனை

மதனவல்லியின் பள்ளியறை

(காசிராஜன் மனைவி படுக்கையறையிலிருந்து எழுந்து தன் புத்திரனைக் காணோமென்று புலம்புகிறாள்)

நீயே சகாய மென - என்ற மெட்டு

இராகம்-சகானா தாளம்-மிச்ரசாபு

மத	தேவாதி	தேவனே	
	தீன	தயாபரனே	
	தேடிப்பரிதவித்து	நொந்தேனே	(தே)
	சுவரில்	கன்னம் பெயர்த்து	
	சூழ்ந்தயர்ந்	தகைப் பார்த்து	
	மைந்தனைத்	தானெடுத்து	
	சிந்தனையும்	விடுத்தோர்	(தே)

மத. ஏ. கருணாகரா! இதுவும் உன் திருவருளோ! நாங்கள் எல்லாரும் அயர்ந்து நித்திரைசெய்யும் சமயத்தில் யாரோ திருடர்கள் வந்து என் புத்திரனை அவன் அணிந்திருந்த நகையோடு எடுத்துச் சென்று விட்டார்களே! இருக்கட்டும் மன்னனிடம் தெரிவிக்கிறான். ஹா.

இந்தச்சமயத்தில் காசிராஜன் வருகிறான்

இந்தக் கோப மேனடி - என்ற மெட்டு

இராகம்-தோடி தாளம்-ரூபகம்

பல்லவி

காசி நொந்து வருந்து வதேன்
உன்-சிந்தை கலங்கியே
விந்தையாக இங்கு (நொ)
பித்தம்பிடித்தவள் பத்தியடித் தார்ப்போல்
இத்தின முன்கையால் அடித்து அலறியே (நொ)

காசி ஏ மதனவல்லி! உன் முகம் ஏன் வாட்டமாகயிருக்கிறது தெரிவி. உனக்கு நேர்ந்த குறையை நினைத்து கன்னத்தில் அடித்துக் கொண்டும், தலையோடுதலை மோதிக் கொண்டும், பறிக்கக் கொடுத்தவள்போல் பரிதவிக்கிறாய். உன் முகத்தைப் பார்த்தால் துக்கக்குறியே மேலிடுகிறது. ஏன் இவ்வாறு சிந்திக்கிறாய், தெரிவி.

எப்படி யிருந்தால் நமக்கென்ன - என்ற மெட்டு

இராகம்-தர்பார் தாளம்-ஆதி

பல்லவி

மங்கையே இங்கு அழுவதேனோ
மங்கள வல்லியே நீயே
சங்கையில்லாமல் உரைப்பாய் (ம)

அநுபல்லவி

காலையில் துயிலெழுந்து
கவலையால் அழுது நொந்து
ஆலையின் நீர் போல் கண்ணீரை
மாலை மாலை யாய் வடித்து (ம)

சரணம்

நித்திரை நடுச் சாமத்தில்
பித்தத்தால் கனவு கண்டு
சித்தமுங் கலங்கினாயோ சொல்லு
இல்லை-உத்தம நிறைதவறி தப்பிதமும் நீ செய் தாயோ
இத்தினமே சத்திய மாய் புல்லு
பத்தினி யென் மாதரசே
நத்தி வேண்டி னேன் சரசே
புத்தி யான கண் ணரசே
போதும் போதும் பெண் சரசே (ம)

காசி கண்மணி! நீ ஏன் புலம்பித்தவிக்கிறாய் நித்திரையினின்று எழுந்தவள் ஜலக்கிரீடை செய்யாமல், தலைவிரி கோலமாய் கண்ணீரை விடுத்து பறிக்கக் கொடுத்தவள் போல் பரிதவிக்கின்றாயே! உனக்கு நேர்ந்த குறை என்னவோ தெரிவி.

மத ஹா! என் மனம் எப்படிச் சகிக்கப் போகிறது. தங்களிடம் எவ்வாறு தெரிவிப்பேன்.

இராகம்-முகாரி விருத்தம்

மத. ஐயனே யயர்ந்து நானு மறைதனிற் துயிலுங் காலை
ஐயனே வந்து கன்னம் வைத்தவர் செய்த வேலை
ஐயனே அணிந்திருந்த அரும் பொரு ளாடையோடும்
ஐயனே எடுத்து சென்றார் பையனை இங்கு காணேன்.

இந்த வார்த்தையைக் கேட்ட மன்னன் திடீரென்று விழுந்து மூர்ச்சையாகிப் புலம்புகிறான்)

மாதவமே இவ்வுருவாய் - என்ற மெட்டு

இராகம்-முகாரி தாளம்-ஆதி

கண்ணிகள்

காசி. கண்மணியே கண்மணியே
கலங்க வைத்தாய் கண்மணியே
மகனே மகனே மகனே (க)
மஞ்சமதில் படுத்திருந்த
அஞ்சுகமே எங்கு சென்றாய்
மகனே மகனே மகனே (ம)
திருடர் கையில் சேர்ந்தா யோடா
திரும்பி இங்கு வருவா யோடா
மகனே மகனே மகனே (தி)

அடா கண்மணி! நேற்றுமாலையில் எங்களிடம், மொழிந்த மொழிகளை எல்லாம், மறந்து, இப்பாவிகள் தனித்துத் தவிக்கும்படி எங்கேயடா சென்றாய். எங்களைச் சோதிக்கத்தான் இவ்வாறு செய்தாயோ? உனக்கு இவ்வித பெருந்துன்பம் செய்தவர் யாரென்று தெரிந்தால் அவர்களை லேசாய் விட்டுவிடுவேனா? சித்திரவதை செய்வேனடா ஆ! மகனே!

மத. நாதா! நாமிருவரும், இவ்வாறு மேலும் மேலும் மாறி மாறி புலம்பிக் கொண்டிருந்தால் நம்முடைய குறை எவ்வாறு தீரும். ஆனதால் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு சபைக்குச் சென்று வேண்டும் ஏற்பாடுகளைச் செய்யுங்கள் ஐயனே!

காசி. பைங்கிளியே! இதோ சென்று விசாரித்துக் கொண்டு வரும்படி செய்கிறேன். நீ கொஞ்சமும் கவலையடையாதே!

(காசிராஜன் சென்று விட்டான்)

காட்சி - 8

காசிராஜன் சபை

மந்திரிகளும் காவலர்களும் அமர்ந்திருக்கிறார்கள்

(அரசன் துக்கக்குறியோடு வருகிறான்)

மானே நானும் - என்ற மெட்டு

மந். ஐயனே வந்தேன் அடியிணைப் பணிந்தேன்
அறைவீர் விரைவாய் அறிந்திடத் துணிந்தேன்
ஆறாத கவலையால் வருந்துவதேனோ
கூறும் கூறும்
பாரும் பாரும் (ஐ)

மந். ஐயனே! நமஸ்காரம், என்ன, ஒருவாறு விசனத்துடன் வந்திருக்கிறீர்கள். இச்சிறியோன் அக்குறையை அறிய அவாக் கொள்ளுகிறேன். ஆனதால், கிருபை கூர்ந்து தெரிவிப்பீர்கள்.

மாதவமே இவ்வுருவாய் - என்ற மெட்டு

கண்ணிகள்

காசி. பத்துமாதம் சுமந்து பெற்ற
புத்திரனைக் காணவில்லை (ப)

காசி. மந்திரி! நான் வழக்கம்போல் என் பத்தினியிடம் சென்றேன். அவள் மிகவும் துக்கக் குறியாகயிருந்தாள். நான் அவளிடம் வினவியதில் அவளுரைத்ததாவது:- நமது புத்திரன் தூங்கும் சமயம் யாரோ திருடர் வந்து அணிந்திருந்த ஆடை ஆபரணங்களோடு சுவரில் கன்னம்வைத்து:-

(முன்போல்)

எடுத்துச் சென்றார் என் மைந்தனை
என்ன செய்வேன் தீர் வேதனை (எ)
மஞ்சத்தில் படுத்திருந்த பாலனை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்
இதுதான் விஷயம்.

(ஒப்பேனென்றவள் சொன்னாளா)

மந். தப்பா திப்போ விடை தருவீர்
அப்பாவியைப் பிடிப்பேனருள் புரிவீர்
இப்பெருங் கவலையை நீர் விடுவீர்

இப்பாவி நான் செல்வேன்	உள மகிழ்வீர் (த)
கொஞ்சமும்	நெஞ்ச மஞ்சாது
கொலைக்-கொடுமையைச்	செய்தா னிப்போது
வஞ்சகஞ் செய்தானை	அஞ்சாது
பிடித்து வருவேன்	தப்பாது (த)

விடைதாருங்கள். இப்பெரும் பாதகத்தைச் செய்த சண்டாளனைத் தேடிப் பிடித்து மைந்தனையும் பொருளையும் உமது முன்னிலையில் கொண்டு வந்து சேர்க்கிறோம்.

காசி. விடை தந்தேன் சென்று வாரும்.

(காசிராஜன் அந்தப்புரத்திற்குள் செல்லுகிறான்)

மந். காவலாளிகளே! நீங்களெல்லாரும் நேற்றிரவு எந்த இடத்திலிருந்தீர்கள்.

காவ. நாங்கள் வழக்கம்போல் நாலுவீதியும் காவல் புரிந்தோம் ஐயனே.

மந். அடாமூடர்களே! ஜாக்கிரதை! நீங்கள் கூறியவை யாவும் பெரும் பொய். ஏனென்றால் நேற்றிரவு நமது அரண்மனைச் சுவரில் கன்னமிட்டு நமது இளவரசனை ஆடையாபரணத்தோடு திருடிச் சென்றிருக்கிறார்கள். இன்னுஞ் சிறிது நேரத்தில் திருடனையும், இளவரசரையும், கொணர்ந்து சேர்க்காவிடில், உங்களை லேசில் விட மாட்டேன். தெரிவியுங்கள் பதில்.

தலை. விடை தாருங்கள். பிடித்துக் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறோம் ஐயனே.

மந். சென்று வாருங்கள்

(காவலாளிகள் சென்று விட்டார்கள்)

காட்சி - 9

மரம் அடர்ந்த வழி

கௌசிகர் காசிராஜனுடைய புத்திரனை சந்திரமதி கண்ணுக்குத் தன் புத்திரன் தேவதாசனைப் போற் தெரியும்படி சந்திரமதி வருகிற வழியில் மாறுதல் செய்கிறார்)

சந்திரமதி வருகிறாள்

(காசிராஜன் புத்திரனைச் சந்திரமதி தன் புத்திரனென நினைத்து எடுத்துப் புலம்புகிறாள்)

இராகம்-முகாரி விருத்தம்

சந். அப்பனே மகனே யுன்னை ஒப்பிட மன்னன் முன்னே
செப்பியே விடையும் பெற்றுச்சென்றிடும் யெந்தன் முன்னே
தப்பிடப் பூதம் வந்து தனையனாம் உன்னைத் தூக்கி
கப்பிய பாவி நோகக் கதறியே வந்த தோடா.

சந். தேவதாசா! உன்னை ஒருவரும் தொடா திருக்கும்படி உன் தந்தையிடம் ஒப்புவித்து வந்தேனே! நீ இந்தயிடத்திற்கு எப்படியடா வந்தாய். ஒருவேளை என் கண்ணுக்குத்தான் இப்படித் தோன்றுகிறதோ? தேவதாசா.

கண்மணி மைந்தனுக்கின்று - என்ற மெட்டு

இராகம்-புன்னாகவராளி தாளம்- ரூபகம்

சந். உன்-தந்தை யறியாது சென்று
பூதம்-தூக்கியே வந்ததோ இன்று
இத்-ததியாள் வழி யதி வேகமாய்
தடுமாறியே செலும் வேளையில்
நீ-தாவியே வந்தாயோ சுழன்று
பாவி-கூவினேன் துயரத்தா லுழன்று

சந். ஆ மகனே! உன்னை இந்த இடத்திற்கு எடுத்துக் கொண்டு வந்தவர் யாராயிருக்கலாம். என் மனதிற்கு ஒன்றும் புலப்படவில்லையே! திரும்பவும் உன்னை எடுத்துக்கொண்டு மயானத்திற்குச் செல்லுகிறதா? இல்லை வேதியரிடஞ் செல்லுகிறதா? ஏ ஜெகதீசா! நீயே கதி.

(இந்தச் சமயத்தில் தலையாரிகள் வருகிறார்கள்)

தலை அடே! பார்த்தாயா? இந்த யிடத்தில் யாரோ ஒரு பெண்பிள்ளை அழுதுகொண்டிருக்கிறாள். அவள் முன்னே ஒரு பையனும் படுத்துக் கொண்டிருக்கிறான். ஒருவேளை இவள்தான் இந்தப் பெரும் பாதகத்தைச் செய்தாளோ இருக்கட்டும் வா அருகிற் போய்க் கேட்டுத் தெரியலாம்.

(தலையாரிகள் சந்திரமதியின் அருகில்வந்து பார்க்கிறார்கள். அது காசிராஜனுடைய பிள்ளையாக யிருக்கிறது)

தலை அம்மே! இந்தப் பிள்ளையை எதற்கு எடுத்து வந்தாய். ராஜா பிள்ளையைக் காணவில்லை, காணவில்லை, யென்று தவிக்கிறார்கள். நீ இங்கே வைத்துக் கொண்டு கண்ணீர் விடுகிறாய் வா நம்பராஜாவிடம். உன்னை விடமாட்டோம்.

சந். ஐயே! என்னை வருத்தாதீர்கள் நான் வருகிறேன் வாருங்கள். (என்று சொல்லிக்கொண்டு பையனைத் தன் தோளின் மேல் தாங்கிக் கொண்டு)

எனக்கு நல்ல வேலை சொன்னாய் என்ற மெட்டு

இராகம்-சங்கராபரணம்,தாளம்-ஆதி

கண்ணிகள்

சந். கள்ளி யென்று பேரும் வைத்து
தள்ளியென்னைக் கொண்டார் களே
கொள்ளி வைக்க காசு துண்டும்
வாங்க யேகும் எனை மறித்து (க)

சந். விசாலாக்ஷி! இதுவரை பட்ட கஷ்டங்க ளனைத்தும் போதாவா? இன்னுமா நான் துன்பத்திலாழ்த்த வேண்டும்? தயாபரியே! இவர்கள் முன்னிலையில் நான் என்ன சொன்னாலும் ஏற்காதென்றே எண்ணுகிறேன். ஆனாலும் உண்மையையே உரைக்கின்றேன்.

தலை அம்மா! போ! போ!

(என்று காசிராஜன் முன்னிலையில் தள்ளிக்கொண்டு அதட்டுகிறார்கள்)

சந். "ஏழைசொல் அம்பலமேறாது" நான் எவ்வளவு தூரம் உண்மையை உரைத்தாலும் அவர்கள் நம்பப் போகிறதில்லை. கள்ளியென்று பெயர் படைத்து இருப்பதைவிட இறப்பதே மேலென எண்ணுகிறேன். இல்லை என்று மறுப்பதைவிட இந்தத் தொல்லையே ஒப்புக்கொள்ளுவதே உத்தமம் என எண்ணுகிறேன். ஆனாலும் நான் படுங்கஷ்டம் நான் தானே அனுபவிக்க வேண்டும்.

* சந்திரமதி சத்தியந் தவறாதவளே, ஆனால் தான் செய்யாத சங்கதியை செய்தேனென்று ஒப்புக் கொள்ளுகிறாளே. அப்படியானால் அந்த வார்த்தை சத்தியத்தை மீறினதாகத்தானே யாகும் என்று ஒரு கேள்வி வருமிடத்து, அடியில் காண்பீராக

மெய்யுரை செயிற் போ யென மேவியது வீணா
மைய மிதி னில்லை யத னாற் புரை யிலாத
பொய் யுரையு மெய்யோடு பொருந்து மென நாடித்
தையலவ ரோடிது தனைப் பகல லுற்றாள்

அரிச்சந்திரபுராணம்(எஉ)

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு.

நான் செய்ததை மறுத்தால் பொய்யாகும். செய்யாததை செய்தேனென்று ஒப்புக் கொண்டால் குற்றமில்லாத பொய் வார்த்தை மெய்யாகுமே அல்லாது வேறில்லை. மேலும்

சத்தியம் நீர் செய்தால் நம்புவேன் - என்ற மெட்டு*

(பின் எடுப்பு)

சந். இறந்து போன பாலனை கைதனில் வைத்து
இல்லையென் றுரைத்திடில் விடுவாரோ சம்மதித்து
தொல்லை வந்து நேர்ந்ததே சூழ்ந் தென்னைத் தடுத்து
சொல்லை மறப்ப தில்லை நலமென நினைத்து
மாண்டு விட எண்ணங் கொண்டேனே
மகனை மயானம் விட்டு பாவிநான் விதியுங்கெட்டு (மா)
(சந்திரமதியைத் தலையாரிகள் தள்ளிக்கொண்டு போய் காசிராஜன் சபையில் நிறுத்துகிறார்கள்)

காட்சி - 10

காசிராஜன் சபை

காசி. மந்திரி! நமது புத்திரனைத் தேடிச் சென்றவர்கள் இன்னும் வரவில்லை.

ஜப்தகலந்தரு - என்ற மெட்டு

காசி. தேடிச் சென்ற தூதர்கள்
ஓடியேன் வரவில்லை
செப்பிடு வா ய்இங்கு ஒப்பிடவே (தே)

மந். தப்பாது யிப்போது வந்துமே சேருவார்
அப்பனே உமதிடஞ் செப்பிடவே

தலை ஐயனே ஐயனே தேடி
மெய்யுட னோடி
பையனைக் கொன்ற பாவியை
கையோட்டு கூடி
வந்தோம் வந்தோமே இங்கு
பணிந்து நின்றோம்

-----

* நாடகம்: கோவலன் சரித்திரம்

தலை தங்கள் உத்திரவின்படி சென்று காடெல்லாம் தேடித் திரிந்தோம். முடிவில் இந்தப் பெண்பிள்ளை ஒரு மரத்தடியில், நமது இளவரசரை முன்னே கிடத்தி புலம்பிக் கொண்டு இருந்தாள். உடனே கையோடு பிடித்துக் கொண்டு வந்தோம் ஐயனே!

காசி. இவள்தானா என் மைந்தனைக் கொன்றவள்? என்ன விந்தையா யிருக்கிறது. நீங்கள் சொல்வது மெய்தானா?

தலை. அதில் யாதொரு சந்தேகமு மில்லை. யாவையும் மெய்யே ஐயனே!

காசி. தலையாரிகளே! அமைதியாக யிருங்கள்.

இராகம்-சங்கராபரணம் விருத்தம்

காசி. உத்தமி இவளை யென்று உணர்ந்து நான் கவலை கொண்டேன்
அத்தனை காவல் மீறி அரவமு மில்லா வேளை
சித்தமு மில்லா திந்தச் சேயனை எடுத்துச் சென்று
சத்தமு மில்லா திந்த சதி யிவள் செய்கு வாளோ

காசி. மந்திரி! இம்மாதைப் பார்த்தால் கற்பில் சிறந்த உத்தமியைப் போல் தோன்றுகிறது. அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பது போல் இவள் முகக்குறிப்பைப் பார்த்தால் இத்தீய தொழிலை செய்திருக்கமாட்டாளென் என்றே எண்ணுகிறேன். உமது கருத்தைத் தெரிவிப்பீர்.

மந். ஐயனே!

வெண்பா

உடலின் சிறுமைகள் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்-மடவரால்
கண்ணள வாய் நின்றதோ? காணும் கதிரொளி தான்
விண்ணளவு ஆயிற்றோ விளம்பு.

என்றபடி உருவத்தால் ஒருவர் சிறப்பை மதிக்கலாகாது அந்த அம்மையிடத்தில் கேட்டு அதன்பின் நாம் நீதியை உணர வேண்டும்.

காசி. அதுவும் வாஸ்தவந்தான்.

இராகம் மோகனம் விருத்தம்

காசி. கற்புரு வாகவந்த கற்புடை மங்கை யாளே
நற்பெரு முந்தன் சேதி நவிலுவாய் உண்மை யிங்கே
தற்புகழ் கொண்டே னென்று மதியில் நீ யெண்ணிடாதே
சொற்களைச் சோராதிங்கு துரிதமாய் சொல்வாய் நீயே.

காசி. அம்மையே! உன் முகத்தைப் பார்த்தால் உண்மையென்னும் அழகு நிறைந்திருக்கிறது. உன் கையில் இறந்துபோன என் பாலனை வைத்திருக்கிறாய். இவனைக் கொன்றவர் யாரெனத் தெரிந்து வரும்படி தலையாரிகளை அனுப்பியதில் உன்னைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால், உன் சவிஸ்தாரத்தைத் தெரிவி.

சந். தெரிவிக்கிறேன ஐயனே!

இராகம் விருத்தம் முகாரி

சந். தலைவிரி கோலத்தோடு சதிசெய்த யென்னைக் கண்டீர்
கொலையுண்ட பாலனோடு கொணர்ந்ததை நீரும் கண்டீர்
இலையென்று சொல்லொண்ணாத இறைச்சியின் நாற்றங்கண்டீர்
கலைமிக உணர்ந்த மன்னா கருத்துரை அறிகுவீரே.

சந். அரசனே! சதாகாலமும் மாமிசங்களையே தின்று இந்தச் சரீரத்தை வளர்த்து வந்தேன் .நேற்றையத்தினம் மாமிசம் எங்கும் கிடையாததால் உமது மைந்தனை எடுத்துச் சென்று கொன்று தின்னுவதற்காக இருந்த சமயம். இந்தத் தலையாரிகள் வந்து என்னைக் கையோடு கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள். ஆனால் இந்தக் கொலைக்குப் பாத்தியப் பட்டவள் நானே என்றுணரும். இதில் ஐயமில்லை.

காசி. மந்திரி! தெரிந்து கொண்டீரா? விஷயத்தின் கருத்தை.

கபரதரஹா- என்ற மெட்டு

பல்லவி

காசி. சோதனை தானோ
வாதனை வலிய வந்த
போதனை தானோ
மந்திரியே விந்தையாக நொந்து வந்த மங்கையின் (சோ)

அநுபல்லவி

உத்தமி யிவளைப் போல் பார்ப்பது கஷ்டம்
சித்தமு நொந்த தாலே உடைத்தாளே இஷ்டம்
பத்தினி யாளைக் கொன்றால் பாவமும் இதேஷ்டம்
இத்தினமுநீ யுணர்ந்து சத்தியமாக உரைப்பாய் (சோ)

காசி. மந்திரி! இவளைப் பார்த்தால், உத்தமம் நிறைந்த சத்திய வதியாகத் தோன்றுகிறது. நமது மைந்தனைக் கொன்றவள், இவளில்லை என்றே தெரிகிறது. எந்த விதமான காரணத்தைக்

கொண்டு இவள்தான் கொலை செய்தாளென்று நான் எப்படி நிச்சயப்படுத்துகிறது. உமது கருத்தை எனக்குத் தெரிவிப்பீர்.

மந். ஐயனே! நான் நன்கு உணர்ந்தேன் உமது கருத்தை, ஆனால், இவளை விசாரியாது நிராதிபதியாக நாம் விட்டுவிட்டால் இந்த உலகத்திற்கு பெருந் துன்பம் ஏற்படும். ஆகையால் இதையறிய என் புத்திக்கு ஒரு ஆலோசனை தோணுகிறது அதாவது.

மந். பழி செய்த பாதை வழி பார்த்து நாம் ஓடி
பாதசுவடை அடை யாள மாய்த் தேடி
இருசுவடு மொன்று போல் இருந் திடில் நாடி
இவளை விட லாகாது எந்தன் மனமுந்தாளாது (சோ)
பார்த்து வருவோம்
பாதையும் அழியு முன்னால் (பா)
பார்க்கா விடில் ஏற்காது வீண்
மார்க்க முற்றும் நானோதினேன் (பா)

மந். ஐயனே! கன்னம் வைத்துச் சென்ற யிடத்திலும் வீதியிலும் நடந்திருக்கும் பாதச் சுவடுகளையும், இந்த அம்மையின் பாதச் சுவடுகளையும் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் பொழுது சரியாக இருந்தால் இவளே இந்தக் கொலையைச் செய்தவள். இல்லையேல் தங்களிஷ்டம் போல் செய்யலாம்.

காசி. இதில் மாறுதல் ஒன்று மில்லையே.

மந். இல்லை.

காசி. தலையாரிகளே! நீங்கள் இந்த அம்மையை அழைத்துக் கொண்டு போய் நமது மந்திரி சொல்லுகிற பிரகாரம் களவுபோயிருக்கும் இடத்திலுள்ள பாதச் சுவடுகளும் இம்மங்கையின் பாதச் சுவடுகளும் ஒன்று போலிருக்கின்றனவா அல்லது வெவ்வேறாக இருக்கின்றனவா என்று தெரிந்து வந்து சொல்லுங்கள். அழைத்துக் கொண்டு போங்கள்.

தலை. உத்திரவின் படியே செய்து வருகிறோம்
(தலையாரிகள், சந்திரமதியை அழைத்துக் கொண்டு காற்சுவடுகளைச் சரியாயிருக்கின்றனவா என்று பார்க்கப் போகிறார்கள்)

கௌ. நான் மறந்து விட்டேனென்று எண்ணி விட்டாயோ சந்திரமதி. உன் காற் சுவடுகளைப் போலிருக்கும்படி சபித்தேன். சென்று வருகிறேன் ஆசிரமத்திற்கு.

(தலையாரிகளும் சந்திரமதியும் திரும்பி வருகிறார்கள்)

அரசனிடம்

தலை. ஐயனே! சென்று தடங்களைத் தேடிப் பார்த்ததில் இந்த அம்மையின் காற்சுவடுகள் தானிருக்கின்றன.

காசி. ஆஹா! என்ன விந்தையா யிருக்கிறது. என் மனதிலொன்றும் புலப்படவில்லை. ஏனென்றால், இம்மாது அந்தக் கொடிய பாதகத்தைச் செய்ய முன் வருவாளா? வரமாட்டாள். ஆனாலும், கால் அடையாளங்கள் எல்லாம் ஒன்று போல் இருக்கின்றன. நியாயப்படி தண்டனை செய்ய வேண்டியதே அல்லாது வேறில்லை. இருக்கட்டும், கண்ணால் கண்டதும் பொய், காதினால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பது மெய் என்றபடி தீர விசாரித்ததில் எல்லாம் ஒன்றுபோல் நிறைந்திருக்கின்றன.

விருத்தம்

பத்தினி இவள் தானிந்தப் பாலனை வதைத்தா ளென்று
இத்தினஞ் சென்று பார்த்த இவர்களின்மொழியை நம்பி
சத்தியமாக நானும் சதி செய்ய ஞாயங் கண்டேன்
மித்திரா அடிமை வீர வாகுவை அழைப்பா யிங்கே

காசி. மந்திரி! நமது புலையனான வீரவாகுவை அழைத்துக் கொண்டு வரும்படி செய்யும். அவ்விதமே செய்கிறேன். விடை தாருங்கள்.

காசி. சென்று வாரும் விடை தந்தேன்.

சே. ஐயனே! வீரவாகு வந்து விட்டான்.

காசி. வரும்படி செய்.

வீரவாகு வருகிறான்

கலியுகவிந்தை மிகமலிந்து இந்த - என்ற மெட்டு

வீர. காலைநேர மெழுந்து கள்ளைக் குடித்து வந்து
பள்ளைப் படித்து நின்றேனே
சேரியி லோடி
கொம்பை முழக்கி வந்தேனே (கா)

வீர. ஐயனே காசி நாதா மெய்யனே செம் பொற் பாதா
புலையனை அழைத்திரோ கியாதா
சத்திய நாதா
இத்தினம் பணிந் தேனே போநே (ஐ)

வீர. மகாராஜா! இந்தப் புலையன் அடிபணிந்தேன்.

காசி. வீரவாகுவே! உன்னை அழைத்த காரியத்தைத் தெரிவிக்கிறேன். அதன்படி செய்வாயா?

வீர. ஐயனே! உத்திரவின் படியே செய்யத் தயாராய் காத்துக் கொண்டிருக்கிறேன்.

காசி. தெரிவிக்கிறேன்.

இராகம்-மோகனம் விருத்தம்

காசி. கோரமாய் வந்தவீர வாகுவே சொல்வே னிங்கு
ஓரமாய் நின்று நீயும் உத்தமி மங்கை யாளை
தீரமா அழைத்துச் சென்று செய்குவாய் கொலையும் இன்று
பாரமாய் விடையுந் தந்தேன் பாலனைக் கொன்ற தாலே

காசி. விரவாகுவே! இந்த அம்மையை நமது காசி பட்டணத்திலுள்ள மயானத்திற்கு அழைத்துச் சென்று கொலை செய்யும்படி விடை ஈய்ந்தேன் சென்று வா.

வீர. உத்திரவின்படியே செய்து விடுகிறேன்

(சந்திரமதியிடம்)

வீர. அம்மையே வாரும் மகாராஜா சொன்னதை அறிந்தீரா.

சந். அறிந்தேன் எல்லாம் வல்லவன் செயல்.

வீர. வருவதில் தடை யொன்று மில்லையே.

இராகம்-முகாரி தாளம்- ரூபகம்

சந். தடை யொன்றுஞ் செய்யவில்லை
விடையை நான் மீற வில்லை
கடை யாளும் வந்திடு வேனோ
தெய்வமே! தெய்வமே! தெய்வமே! (த)

சந். எந்தத் தம்பதிகளைப் பிரித்தேனோ இல்லை முன் ஜென்மாந்திர வினைகள் தான் அவ்விதம் மூண்டதோ அறியேன். தயாபரியே நீதான் துணை.

(வீரவாகு சந்திரமதியின் கைகளை ஒரு கயிற்றால் கட்டி போ, போ, என்று அதட்டி அழைத்துச் செல்லுகிறான்)

காட்சி - 11
இந்திரலோகம்
வசிஷ்டர் வருகிறார்

வசி. இந்திரபூபதி! கௌசிகர் நீண்டகாலமாக களங்கமில்லாத அரிச்சந்திரனை பொய்யனென்று விளங்கும்படி செய்த இடையூறுகள் முற்றும் இன்றோடு நீங்கும் வேளை வந்துவிட்டது. ஆனதால் நீரும் பார்க்க வேண்டியதிருப்பதால் வாரும் போகலாம்.

காட்சி - 12
மயானம்
அரிச்சந்திரன் காவல் புரிந்து கொண்டிருக்கிறார்
(வீரவாகு சந்திரமதியை அழைத்துக் கொண்டு வருகிறான்)
காட்டைக் கலைத்து விடடா - என்ற மெட்டு

இராகம்-அடானா தாளம்-ஆதி

பல்லவி

வீர. காவலனே இங்கு வருவாய்
இங்கு-ஓலமிடும் பாவி யாளைக்
காலையில் கொலை செய்திட
கத்தியைக் கரத்தில் பெறுவாய் (கா)

அநுபல்லவி

மன்னவரின் புத்திரனை
இன்னல் விழி யாள் வதைத்தாள்
கன்னல் மொழி சித்தினியை
இந்நேரத்தில் நீ தொலைக்க (கா)

வீர. ஐயே! நமது காசி மன்னரின் புத்திரனை இந்தப்பாவித் திருடிச்சென்று கொன்றாள் என்று என்னைஅழைத்து இவளைத் தவறாது கொலை செய்யும்படி கட்டளையிட்டார். நான் உன்னிடம் ஒப்புவித்தேன் நீ தவறாது மண்டை சிதறும்படி சிரத்தை வெட்டி உயிரை மாய்ப்பாய் நான் சேரிக்குச் சென்று வருகிறேன்.

இராகம் முகாரி விருத்தம்

அரி ஐயனே பணிந்துநின்றேன் அறைந்ததைச் சிரமேற்கொண்டேன்
ஐயனே துணிந்து நானும் அவதியைக் கொல்ல நின்றேன்
ஐயனே தணிந்து நானும் அளித்தயிவ் வாளுங் கொண்டேன்
ஐயனே சென்றுவாரும் அடிதனைப் போற்றி நின்றேன்.

அரி. ஐயனே! நீருரைத்தவாறு இந்தப் பெண்மணியைக் கொலை செய்து விடுகிறேன். தாங்கள் சென்று வாருங்கள்.

(வீரவாகு போய்விட்டான்)

இராகம்-சங்கராபரணம் விருத்தம்

அரி. புண்ணிய வதியே யுன்னை புலையனார் கள்ளி யென்று
எண்ணியே சதியுஞ் செய்ய எனக்கருள் தந்து சென்றார்
பண்ணிய வினையுமுண்டு பாவியான் உன்னை வெட்ட
நண்ணியே வாளை ஏந்தி நங்கையே வந்து நின்றேன்.

அரி. என்னை அடிமைகொண்ட புலையனார் எனக்கிட்ட கட்டளைப்படி உன் சிரத்தை இந்தக் கூரிய கட்கத்தால் வெட்டத் துணிந்தேன் முன்செய்த வினைதான் இங்ஙனமூண்டதோ அறியேன். துக்கமேலிட மேலிட ஆனந்தமே முன்னிற்கிறது. சத்தியமே ஜெயம் காதலி! இவ்வளவு துன்பத்திற்கும் துணிவாய் நின்ற ஜோதிமயத்தைப் பணிந்துகொள்.

இராகம்- சங்கராபரணம் விருத்தம்

சந். சத்தியம் நிறைந்த மன்னா சகலரும் புகழு மன்னா
பத்தியாய் பணிந்துநின்றேன் பாவியாள்நானும் உம்மை
இத்தினம் நொந்திடாமல் இறையவ னடியைத் தேடி
முத்தியைப் பெறவே நானே உமதடி வணங்கி னேனே.

சந். நாதா! கற்புடைய மங்கைக்குக் கணவனே துணை என்னும் நீதிக்கிணங்க உமதடியே சதமென சதா காலமும் தியானித்துக் கொண்டிருக்கிறேன். இன்று உமது திருக்கரத்தால் என்னுடைய உயிர் மோக்ஷ வீட்டிற்குப் போகப் போகிறது. இந்த மாயமான இல்வாழ்க்கையை இன்றோடு வெறுத்தேன். இன்னும் ஒரு கடைசி வேண்டுகோள், அதாவது இப்பத்தினியாள் உயிர் பிரிந்து போய் விட்டதே என்று சத்தியத்தினின்று தளராதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் உங்களுக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்.

அரி. ஆஹா! ஆஹா!

(அரிச்சந்திரன் அடங்காத துயரத்தோடு சந்திரமதியின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு வெப்பத்தை தாங்க முடியாமல் மனத்தில் அழுந்துகிறான்)

இராகம்-மோகனம் விருத்தம்

அரி. பாரமோ கனமுமில்லை பாலனும் இறந்த தொல்லை
நேரமோ உன்னை யன்றி ஒருவரும் இங்கு இல்லை
சோரமோ நிறைந்த நீயும் இறப்பதில் ஐய மில்லை
கோரமாய் உன்னை வெட்ட குனிந்துமே நிற்பா யிங்கு

(என்று சொல்லிக் கொண்டு புலையனாரிட்டபடி வாளை ஓங்கினான். அந்த சமயம் கௌசிகர் வந்து அரிச்சந்திரன் கரத்தைப் பிடித்துத் தடுக்கிறார்)

இராகம்-அடானா தாளம்-ஆதி

கௌ பொறு பொறு வெட்டாதே
நற்-புத்தியில் சிறந்தவனே சத்தியம் நிறைந்தவனே (பொ)

அநுபல்லவி

பத்தினி சந்திரமதியை
இத்தினம் நீ வெட்டவேண்டாம்
அத்தினங் கொடுத்த நாட்டை
சத்தியமாய் இல்லை யென்றால் (பொ)

சரணம்

பொய்யான ஒரு மொழியை
மெய்யாக நீ தான் மொழிந்தால்
பொய்யாது இறந்தவனைத் தருவேன்
சொல்லைத்-தள்ளாது உரைத்து விட்டு
கொல்லாது உன் மனை தொட்டு
நில்லாது விடையும் பெற்றுச் செல்லுவாய்
பாராளும யோத்திநாடு
பார்த்திட வழியுந்தேடு
பத்தினி சந்திரமதியை
இத்தினம் கூட்டியே யோடு (பொ)

கௌ. அரிச்சந்திரா! பொறு பொறு வெட்டாதே எனக்கு உன் நாட்டைக் கொடுத்ததிற்தான் உனக்கு இவ்வளவு துன்பமும் நேர்ந்தது. அந்த அயோத்தியாபுரியை உமக்கு நான் கொடுத்ததில்லை என்று இரண்டெழுத்துள்ள வார்த்தை ஒன்றே போதுமானது. அப்படி

நீ உரைத்துவிட்டால் உன் புத்திரனை எழுப்பித் தருகிறேன். அதன் பிறகு நீ உன் மனைவி மக்களோடு மங்களமாய் உன் நாட்டிற்குப் போய்ச் சேரலாம்.

இராகம் பூர்வகல்யாணி விருத்தம்

அரி. ஐயனே மெய்யனென அறிந்தும் நீர் அநீதி யாக
ஐயனே பொய்யைச் சொல்ல அரைந்ததும் வீணும் போமோ
ஐயனே நாடு வேண்டாம் நன்மனை மக்கள் வேண்டாம்
ஐயனே சென்று வாரும் அடியிணை போற்றி நின்றேன்.

அரிச்சந்திரனும் சந்திரமதியும் விஸ்வாமித்திரர்
காலில் விழுந்து சொல்லுகிறார்கள்

இராகம்-அடானா தாளம்-ஆதி

பல்லவி

அரி-சந் எதைப் பொறுத் தாலும் பொறுப்போம்
பொய்-யதைப் பொ றுக்கவே மாட்டோம்
மெய்யதை மறக்க மாட்டோம் (எ)

அநுபல்லவி

சத்திய விரதங் கொண்டு
உத்தம நிலையைப் பூண்ட
பத்தினிப தியானை நீர்
இத்தினம் வருத்த வேண்டாம் (எ)

சரணம்

நாளு முடலை நம்பி கூவி உழல்வ தென்றால்
பாழும் நிலையுஞ் சதமாமோ
கலைஞானம் தெரிந் துணர்ந்த
மலையான நீரு முன் வந்து
கொலையைத்தடுத் துகாப்ப தாமோ
ஆலைக் கரும்பு போல அலறித் துடித்திட்டாலும்
பாலையொற்ற நிலையை எந்நாளுமறக்க
மாட்டோம் (எ)

அரி. சுவாமி! எதைப் பொறுத்தாலும் பொறுப்பேன். இந்தப் பொய்யென்னும் வார்த்தையைப் பொறுக்க மாட்டேன். தபரிஷியாக இருந்தும் கேவலம் இந்த மானிடவாழ்வே சதமென நினைத்து நான் சரிசெய்வதைத் தடுத்தீர் எங்கள் பேரில் கிருபை செய்து சென்று வாருங்கள்.

(விசுவாமித்திரன் முகவாட்டத்தோடு இந்திர லோகத்திற்கு செல்லுகிறார்)

அரி. சந்திரமதி! சத்திய மென்னும் நிலையை நிறுத்த
நாடிழந்து நகரிழந்து குடியிழந்து பொருளிழந்து
துன்பத்திலி லாழ்ந்து மூழ்கினோம்
பதிவிரதையாகிய உன்னை புலையனிட்ட கட்டளைப்படி

இராகம்-மோகனம் விருத்தம்

அரி. பத்தினி மாதே நீயும் பணிந்துமே யிங்கு நிற்பாய்
சத்தியம் மறவாதிந்த உத்த மன் நானும் நொந்து
இத்தினம் கத்தியாலே வெட்டிடத் துணிவு கொண்டேன்
எத்தினம் காணுவனோ ஈசனே அருள் செய்வாயே

(என்று சொல்லிக் கொண்டு அரிச்சந்திரன் வாளை ஓங்கி சந்திரமதியின் கழுத்தை வெட்டவும், அந்த கத்தியானது மாலையாக மாறி சந்திரமதியின் கழுத்தில் வந்து விழுந்தது. அந்த சமயத்தில் அரிச்சந்திரனும் சந்திரமதியும் ஈசனைத் துதி செய்கிறார்கள்.

மங்களம்

சோகமேனண்ணா - என்ற மெட்டு

இராகம்-பூர்வகல்யாணி தாளம்-ரூபகம்

பல்லவி

அரி-சந் பாதம் போற்றினோம்
வேத நாதா (பா)

அநுபல்லவி

துதிக்கை யான ரன்திரு
மால்முரு கேசனும்
கூடிநாடி வந்துகாரும்
பாடினோம் மெங்களைக் காரும் (பா)

சரணம்

சித்தர்கள் பத்தர்கள் நத்தியே தேடிடும்
செம்பொற் பாதத்தை நாம் பணிந்தோம்
தேவாதி தேவர்கள் யாவரு மோங்கிட
இத்ததியே முத்திபெற பத்தியுடன் பாடி நாங்கள் (பா)

மயானகாண்டம்

சம்பூர்ணம்

4. நல்லதங்காள்

நல்லதங்காள்

காட்சி - 1

காலம் - முற்பகல்

இடம் - வடமதுரை தர்பார் மண்டபம்

பாத்திரங்கள் - காசிபன், மந்திரி சுகுணவுதாரன் குடிகள்

வடமதுரை-காசிபன்

தேசவிசாரணை

(ஸ்ரீராகவனே உன் சரணம்)

ஈசுவரதுதி

இராகம்-ஸ்ரீராகம் தாளம்-ஆதி

பல்லவி

சோமசுந் தரன் பெருமை திரு
சுந்தர அலங்கிருத
அந்தர மனோஹரத (சே)

அநுபல்லவி

தேவாதி தேவர்தினம்
மறவாது துதிமனம்
மூவாதி முதலான
முக்கண்ண னேயுனைப் பத்தியாய் துதித்தேன் நான்

சரணம்

மான்மழு தாங்கும்ஈசா
மங்கை வல்லியின் நேசா
மறைபுகழ் ஜெகதீசா
மதுரையம்பதி வாசா
மாநில மீதினி லேயுயர் கதிதரும்
கானிலருந் தவஞ் செய்துமே பதிபெறு

கா.வ-ம் மந்திரி! நமது நாட்டில் சாக்ஷாத் முழுமுதற் கடவுள் சிவபிரான் கிருபாகடாக்ஷத்தினால் இதுவரை யாதொரு இடையூறும் இல்லாமல் நமது ராஜ்யபாரம் நடைபெற்று வந்தது. மீண்டும் இதுபோல் ஓங்கிவளரும் பொருட்டு,

அன்னவரையே சதா காலமும் தியானித்துக் கொண்டிருக்கிறேன். நமது நாட்டில் ஏதாவது குறையிருந்தால் தெரிவியும்.

மந்- ஐயனே! நமது நாட்டில் இதுவரை யாதொரு குறைவில்லாமல் நடைபெற்று வருகிறது.

கா- மந்திரி! ஆனந்தித்தேன். வெளியில் ஏதோ இரைச்சல்கேட்கிறது. இன்னதென்று அறிந்து வாரும்.

(மந்திரி வெளியில் சென்று பார்த்து வருகிறார்)

மந்- ஐயனே! குடிகள் வந்து வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கா- என்முன் வரும்படி செய்யும்.

மந்- சேவகா! குடிகளை அழைத்துக் கொண்டு வா.

குடிகள் வந்து முறையிடுகிறார்கள்

வாசுதேவனே - என்ற மெட்டு

கண்ணிகள்

குடி- ஐயனேயின்று அடிபணிந்துமே நின்றோம். ஆதரித்து யெங்கள் குறை யாற்றிட வந்தோம் (ஐ)

கா- பன்னீர் வருடமாய் நாட்டில் பஞ்சம் நேர்ந்ததால் பசியாலிங்கு ஓடி வந்தோம் எங்கள் துன்பத்தால் (ப)

நாங்களிட்டதோர் யெங்கள் நஞ்சை புஞ்சைகள்

நாளுக்குநாள் வாட்டமுற்று நாசமானதே (நா)

குறையைத்தீர்த்திட வரிக் கூலிநீக்கிட குடிகள் மீது கருணைக் கூர்ந்து அரசு காத்திட (கு)

வசனம்

குடி- ஐயனே! நமது நாட்டில் மழையில்லாமல் ஜனங்கள் ரொம்ப வருந்துகிறோம். பயிரிடுகிறதற்குத் தண்ணீர் கிடையாது, கதிரவன் பிரகாசத்தினால் காய்ந்துவிட்டன பயிர்கள்.

விருத்தம்

கா- குடிகளே வந்துநீங்கள் குறைவுறும் பஞ்சத்தாலே
இடியது இடித்தாற்போல என்முன்னே கதறிநீங்கள்
படியமு துணவுகேட்டுப் பணிந்துமே வந்தவுங்கள்
மடிநிறை பணமுந்தாரேன் மார்க்கமே செல்லுவீரே

குடிகளே! நீங்கள் கவலையடைய வேண்டாம். மேலும் மழை பெய்து நமது நாடு செழிப்படைகிறவரை நீங்கள் பகுதிப் பணம் கட்ட வேண்டியதில்லை. தற்சமயம் உங்களுக்கு வேண்டுமளவு நமது அரண்மனை பொக்கிஷத்திலிருந்து பணம் கொடுக்கும்படி செய்கிறேன். மந்திரி! மழையில்லாமல் குடிகள் வருந்துவதைக் கேட்டால் என் மனோதிட மெல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டது, இருக்கட்டும்.

குடிகளைக் காப்பது கொற்றவன் பாரம்

ஆனதால் நமது பொக்கிஷத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய அளவு பொன்னையும் தானியங்களையும் கொடுக்கும்படி செய்யும்.

(மந்திரி குடிகளையழைத்துச் செல்கிறான்)

காட்சி - 2

காலம் - முற்பகல்

இடம் - அந்தப்புரம்

பாத்திரங்கள் - நல்லதங்காள், பிள்ளைகள், காசிபன்

(அந்தப்புரம்)

நல்லதங்காள் தன் ஏழுபிள்ளைகளோடு
வீற்றிருக்கிறாள் காசிபராஜன் வருகிறார்

நாதா! நமஸ்கரிக்கிறேன்

மங்களமுண்டாகுக (குழந்தைகளை ஆதரிக்கிறான்)

நல்ல : பிராணநாதா! என்றுமில்லாவிதமாகத் தங்களுடைய முகமானது மிகுந்த வாட்டத்தையுடையதாகக் காணப் படுகிறதே காரணமென்ன? மனதிலுள்ளதை அடியாளுக்குச் சொல்லக்கூடாதா நாதா

கா : கண்மணி! வேறொன்றுமில்லை, குடிஜனங்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க வகையில்லையே என்ற வருத்தமே அல்லாது வேறு துக்கம் ஒன்றுமில்லை.

நல்ல : நாதா, நமது நாட்டில் பன்னிரண்டு வருடமாக மழையில்லாத தால் நாமும் புத்திரர்களும் மற்றும் நம் பிரஜைகளும் கஷ்டப்பட நேர்ந்தது. அவைகளை எண்ணி எண்ணி வருத்தப் பட்டுக் கொண்டிருந்தால் ஜீவிக்க வருவாய் ஏதேனுமுண்டோ? இல்லை. ஆகையால்,

பாட்டு

நடந்ததென்ன சொல்லம்மா-என்ற மெட்டு

இராகம்-நாதநாமகிரியை தாளம்-ஆதி

பல்லவி

அன்பரே துன்பம் விடுப்பீர் அடி
யாள் மொழிகடை பிடிப்பீர் (அன்)

அநுபல்லவி

முன் கல்யாணகாலத்தில் முறைப்படி சீதனம்
முழுவதும் கொடுத்ததை அறிவீரந்தத்தினம்
பின் தேடிப்போனதில்லை பிரியமாயித்தினம்
பிள்ளைகளோடு போனால் பேணியீவார்கனம் (அன்)

சரணம்

பஞ்சத்தின் கொடுமையால் பாலகர் வாடி
பரிதவித்தழுகின்றார் பசிக்கன்னந் தேடி
அஞ்சுவதேன் மதுரை நகர் வழிகூடி
அண்ணன் வீடுபோய் வருவோம் உறவாடி (அன்)

வசனம்

நாதா! இனி எவ்வளவுகாலம் இவ்வித கஷ்டத்துடனிருக்க முடியும்? நான் சொல்லுகிறபடி தாங்கள் உத்தரவளிக்க வேண்டும். அதாவது நாமிருவரும் மக்களுடன் நான் பிறந்த நாடாகிய மதுரைக்குப் போய் வருவோம் என் சகோதரன் தங்களையும் குழந்தைகளையும் மிகுந்த அன்புடன் ஆதரிப்பார். ஆலோசிக்க வேண்டாம் நாதா புறப்படுங்கள்.

காசிபன்

பெண்ணே! என்ன உன் மனது இவ்விதம் நாடியது? என் காலவேற்றுமையோ கண்ணே! நான் சொல்வதைக்கேள். உன்னையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு காடடைந்தாவது நாடடைந்தாவது உலகம் பழி கூறாவண்ணம் வாழ்வேனே யல்லாது நீ தெரிவித்தபடி உன்னோடு மதுரைக்குப் போக என் மனம் சற்றேனும் இடங்கொடாது. ஆகையால் வேறேதேனும் வழியைச் சொல்; அதன்படி செய்வோம்.

நல்லதங்காள்

விருத்தம்

உத்தம நற்குணத்தீர் உமக்கொருதுக்கம் வேண்டாம்
புத்திரரெழுவரோடு பூவைநான் பயணமாகி
இத்தினம் மதுரைநோக்கி என தண்ணனிடத்தில்சொல்லி
மெத்தவும் செல்வம் பெற்று விரைவினில் வருகுவேனே.

(பாட்டு, தர்க்கம்)

இங்குவந்த என் புறாவை-என்றமெட்டு*

கண்ணி

காசி : தாலிகட்டிக்கொண்ட முதல்
தனிவழியே போனதில்லை

நல்ல : சஞ்சலமுன் னில்லையதால்
தனிவழியே போனதில்லை

காசி : மாலையிட்டுக் கொண்டமுதல்
மறுத்தொருக்கால் போனதில்லை

நல்ல : வாழ்வுமிகுந்திருந்ததாலே
மன்னா நாமும் போனதில்லை

காசி : இன்பமுள்ள பெண்மயிலே
என் வார்த்தையைக் கேளடி நீ

நல்ல : எம்மொழியுந்தடுப்பதுண்டோ
எனக்கறியச் சொல்லும் நாதா

காசிபன் வசனம்

பெண்ணே! இந்த நிலைமையில் மக்களுடன் நீ தனியே மதுராபுரி சென்றால் உன்னை அங்கு யாரும் மதியார்கள். நான் சொல்வதைக் கவனி. வீணாக என் மொழியைத் தடுத்துச் செல்லாதே. வேறேதேனும் நாம் கஷ்டப்பட்டுக் குழந்தைகளைக் காப்பாற்றுவோம். என்ன சொல்லுகிறாய்?

நல்லதங்காள்

நாதா! தாங்கள் இவ்விதம் சொன்னால் நான் மறுத்துப் பேச இடமுமுண்டோ? தற்சமயம் குழந்தைகள் படும் அவஸ்தையைக் கவனித்தால் என்னால் இனி அரைக்ஷணமும் இந்தவிடத்தில் இருக்க முடியாது. வேறு ஜீவனம் செய்வதற்கும் சக்தியற்ற நிலைமையில் இருக் கிறோம். ஆகையால் தயவுசெய்து அடியாளுக்கு,

* நாடகம்: சாரங்கதரன்

பாட்டு

நல்வாக்கு நீ கொடடி-என்ற மெட்டு*

கண்ணி

உத்திரவு தாரும் நாதா நீர்
உளமகிழ்ந்தே இப்பொழுது
புத்திரர்களோடு நானே இன்று
போய்வருவேன் அண்ணன் வீடு (உத்)

துக்கம் நீர் கொள்ளவேண்டாம் நான்
சுருக்கிலண்ணன் வீடுசென்று
பக்குவமாயிருந்து இந்தப்
பாலகரைக் காப்பாற்றென்று (உத்)

வசனம்

நாதா! பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த இந்த ஏழு மக்களையும் கொடிய வறுமையுடைய பஞ்சத்திற்கு இரையாகக் கொடுக்காது அடியாளுடன் அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். வேறுயாதொன்றும் நினைத்து தாங்கள் வருந்தவேண்டாம் நாதா.

(பாட்டு தர்க்கம்)

தள்ளிவைத்துத்தாலிகட்ட-என்ற மெட்டு

கண்ணி

கா பூவையே நாம் புல்லறுத்து விற்றாலும்பிழைப்போம்
நல் பூமுடித்த கூந்தலிலே புல்லெடுக்க என் விதியோ
கா விறகு வெட்டி நாம் சுமந்து விற்றாகிலும் பிழைப்போம்
நல் வெட்டி வேர்முடிக்கும் கூந்தலிலேவிறகெடுக்க என் விதியோ
கா சாணிதட்டி விற்றாகிலும் தையலே நாம் பிழைப்போம்
நல் சந்தனம் இழைத்தகையால் சாணித்தட்டத் தலை விதியோ
கா கூலிவேலை செய்துநாம் குழந்தைபசி தீர்த்திடுவோம்
நல் குங்கும மெடுத்தகையால் கூலி செய்ய என் விதியோ

வசனம்

நாதா! தாங்கள் தெரிவித்தபடி அரும்பாடு பட்டாகிலும் ஜீவிக்கலாமென்றால் அதற்கும் வழியில்லாது தவிக்கும்படியல்லவோ காலம் ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் என் மனம்போல் உத்தரவு

* நாடகம்: கோவலன் சரித்திரம்

கொடுத்தனுப்புங்கள் நாதா, இனி என்னால் தாமதிக்க முடியாது குழந்தைகளே வாருங்கள் போவோம்.

காசிபன் வசனம்

பெண்ணே நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஒரே பிடிவாதமாய் உன் மனம்போல் செய்யத் துணிந்துவிட்டாய், ஆயினும் பரவாயில்லை நீ சென்றவிடத்தில் ஏதேனும் அவமானம் ஏற்பட்டால் இந்நாட்டையும் என்னையும் மறந்துவிடு. இம்மொழியை உறுதியாய் நம்பு.

நல்லதங்காள் பாட்டு

கழுகுமாமலை முருகோனே-என்ற மெட்டு

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-சாப்பு

கண்ணி

சற்றுங் கவலைவேண்டாம் நாதா என்றன் நாதா
தலைவிதிபோல் நடக்குமிது தெரியாதா (சற்)

நற்றவ முண்டு துன்பம் நாடாது ஒன்று
நல்லண்ணன் வீடு சென்று நான்வருவே னின்று (சற்)

என்மீது அண்ணன் அன்புள்ளான் அன்புள்ளான்
எள்ளளவாகினுமென் சொல்லைத் தள்ளான் (என்)

பொன்னும் நல்ல ஆடையும் பூணும் படி கொடுத்து
புதிய விருந்தளித்து மகிழ்வா னருகடுத்து (சற்)

வசனம்

நாதா! தாங்கள் சொல்லியவண்ணம் யாதொரு குறைவும் ஏற்படாது கவலைகொள்ளாதீர்கள். எது எப்படியாயினும் விதியின்படி முடியுமல்லாது வேறொன்றும் நடவாது சென்று வருகிறேன். குழந்தைகளே! வாருங்கள்.

காசிபன்

ஹா! என்னருமைப் புதல்வர்களையும் உன்னையும் எவ்விதம் பிரிந்திருப்பேன், ஐயோ பெண்ணே உன் மனம் போலாகட்டும். நான் கொஞ்சத்தூரம் வந்து வழியனுப்பிவிட்டு வருகிறேன்.

(வீதி)

வாணியன் எண்ணெய் விற்றுவருகிறான்

(பாட்டு)

கண்ணி

இராகம்-நீலாம்புரி ஆதி-தாளம்

எண்ணெய்விற்று வாணியன் எதிரே வருகிறானே
என்ன துன்பம் நேருமோ கண்மணியே

வ-ம் : நாதா! நாம் புறப்படுகின்றோமென்று அவர்கள் வராமல் இருப்பார்களா? இதைப்பற்றித் தாங்கள் வருந்தவேண்டாம்.

(விறகு சுமந்து ஒருவன் வருகிறான்)

பாட்டு (மெட்டு)

கண்ணி

விறகு சுமந் தொருவன் வேகமாய் வருகின்றான்
விற்பனியே இது ஆகாதடி

நல்-வ : நாதா! வரும் விதி வந்தே தீரும் இவ்வளவு தூரம் வந்த பிறகு இவைகளையெல்லாம் பார்ப்பது சரியல்ல வாருங்கள்.

கா-வ : பெண்ணே! அதோ பார் பூனை குறுக்கே ஓடுகிறது. இதையேனும் கவனித்துத் திரும்புவாய்.

நல்-வ : இப்படியெல்லாம் சகுனம் பார்த்தால் ஒருகாரியமும் நடவாது. நாங்கள் சென்று வருகிறோம். சந்தோஷமாகவிருங்கள்.

குழ-வ: தந்தையே நாங்கள் சென்று வருகிறோம். உத்தரவு கொடுங்கள்.

கா-வ : என்னருமைக் கண்மணிகளே! ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்.

நல்லதங்காள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகிறாள்.
காசிபன் மூர்ச்சையாகிறான்.

காட்சி முடிவு

காட்சி - 3

காலம் - பிற்பகல்

இடம் - காடு

பாத்திரங்கள் - நல்லதங்காள், குழந்தைகள்

நல்லதங்காள் பாட்டு

இராகம்-சாவேரி தாளம்-ஆதி

பல்லவி

இருண்ட வானத்தில் மைந்தர் எழுவரும் வாடுகின்றனர்
இதற்குநா னென்செய்குவேன் (இரு)

அநுபல்லவி

வருந்துன்ப மெனதல்ல வாடிநொந்திட்ட ஏழை
மாதுநான் ஜெகதீசா மனமிரங்கு மிவ்வேளை (இரு)

ஆறிரண்டு வருடமாக மழையில்லாமல்
அவதிமிக அடைந்திட்டோம்
அதுவும் போதாதென்று ஆதரவில்லாக் காட்டில்
அலைந்துமேனி களைத்திட்டோம்
வேறு துணையில்லாமல் வினையால்நொந் தயர்ந்திட்டோம்
வேதன் விதியிதென்று மிகவுமன மஞ்சிட்டோம் (இரு)

நல்-வ: கண்மணிகளே! நடந்து வாருங்கள் இன்னுங் கொஞ்சத் தூரந்தான் இருக்கிறது. நாம் பாதி வழிக்குமேல் வந்துவிட்டோம். வாருங்கள்.

(மக்களா யெந்தன் மக்களா)

பாட்டு

குண. பசிக்குதே அம்மா பசிக்குதே
கால் கொப் பளிக்குதே
பதறியே மனம் சிதறியே தினம்
கதறினோம் கால்கள் தவறுதே அம்மா (ப)

குண-வ- அம்மா! இனிமேல் ஒரு அடிகூட என்னால் நடக்க முடியாது கால்களெல்லாம் அயர்ந்து விட்டன. கண்களிருளுகின்றன. காதுகளடைத்துப் பசியின் மிகுதியால் நாவு உலருகிறது.

பாட்டு

வேந்தனே இது நியாயமா - என்ற மெட்டு

கண்ணி

நல் உனது வாக்கினால் பசியென்று சொல்ல
உற்றதோவிதி மைந்தனே
மனலிலிடுமெழுகு போலவும் உருகி
வாடினான் நொந்தேனே
காட்டிலே அன்னமேதடா இது
கர்த்தன் செய்திட்ட சூதடா
நாட்டிலே மாமன் வீட்டிலே கையை
நீட்டி வாங்கி உண்போமடா

நவம் : புத்திரர்களே! ஏன் நீங்கள் வருந்த வேண்டும். கவலையடையாது பின்பற்றி வாருங்கள். இன்னுஞ் சிறிது தூரஞ் சென்றதும் அங்கே ஒரு சுனையிருக்கிறது. அந்தச் சுனையில் நீருண்டு நாம் மீண்டும் செல்லலாம்.

(மீண்டும் நடக்கிறார்கள்)

அடுத்த வனம்

கதிரவன் மறையுஞ் சமயம் சமீபத்து விட்டது. இந்தச் சமயத்தில் பசியாலும் களைப்பாலும், நொந்தவர்கள் கைவசமிருந்த கட்டமுதை அவிழ்த்து பசியைத் தணித்துக் கொண்டு மீண்டும் நடக்கிறார்கள். எதிரில் ஒரு வேடன் வருகிறான்.

(பாட்டு)

சாவித்திரி உறுதியுளாள்-என்ற மெட்டு

துக்கடா

வேட்டையிலே விருப்பங் கொண்டேன்
வில்லம்பு நானிங்கு கையிற்கொண்டேன்
காட்டினிலே அலைந்துநின்றேன் ஒன்றுங்
காணாமலே மனம் வாடுகின்றேன்
கண்டாலோ ரெண்டான
துண்டாக இன்றேபோம்
நாலா பக்கமுஞ் சுற்றிப்பார்த்து நல்லதங்கை ஏழு
பிள்ளைகளுடன் வருவதைக் கண்டு

வே-வ- ஏ அப்பா! இதென்ன யாரிது, ஒரு பொம்பளே வர்ரா, அவளே சுத்திக்கிட்டு எத்தனை குட்டிக வருது, சோக்காத்தான் இருக்கா ஊம் வரட்டும், இன்னேக்கி பெரிய வேட்டை தான்.

பாட்டு

ஆணில் அழகா அர்ச்சுனனே-என்றமெட்டு

கண்ணி

கொஞ்சத் துரந்தா னிருக்குது பாலரே
கூடிவாருங்கள் விரை வாக
சஞ்சல மிஞ்சி யழுது புலம்பித்
தவித்திட வேண்டாம் மனம் நோக
உங்களைக் கண்டவுடனே சந்தோஷமாய்
ஓடி வந்தங்கே உப சரித்து
மங்களஸ்னானஞ் செய்வித்தன்னம் வடிப்பாள்
வாய்க்கு ருசியாகவே சமைத்து
முக்கனி சர்க்கரை கற்கண்டு நெய்பால்
முதலானவை யோடன் னங் கிடைக்கும்
தக்கவிதமான மிட்டாய் லட்டுகளும்
சந்தோஷமா யுண்ணவே கிடைக்கும்

ந-வ- (வேடனைப் பார்த்து) அய்யா! மதுரைக்குப் போகும் வழி இந்த மார்க்கந்தானே தயவு செய்து சொல்லுங்கள் புண்ணியமுண்டு.

வே-வ-இந்தா! நீ யாரு எங்கிருந்து வருகிறே. இதுகளெல்லாம் ஒங்கொழந்தையா ஐயோ உன்னை பார்த்தா பாவமாயிருக்கிதே.

பாட்டு

அல்லியென்று சொல்லும்-என்ற மெட்டு

சிந்து

நல். காசிதேசம் வாழும் ராஜர் தேவி நானே
காலவேற்றுமையி னால் ஏழு
பாலர் வாட்டமான தால் இந்தக்
கானகத்தில் வந்து பாதை தப்பிநொந்து
கலங்கலானேன்அத னால்
வந்த கவலைதான்
என்னை அகலவே
மன மகிழொடு
அதி விரைவிலே

நல்ல விபரமாய்
தென்மா மதுரையூர்
செல்லும் வழியினை
இங்கே உரை செய்வாய் இந்தக்
காட்டை நீங்கிப்பாண்டி நாட்டிலேநல் லண்ணன்
வீட்டைக்கண்டு சேரவே

நல்-வ -அய்யா! எந்த வழியாகப் போகவேண்டும் அதைச் சொல்லுங்கள். இந்தக் குழந்தைகளின் வறுமையைத் தீர்க்க வேண்டும். சீக்கிரம் சொல்லுங்கள்.

வேடன்

இந்தா அம்மே! நீ இப்போ சொன்ன ஊரெல்லாம் எனக்குத் தெரியாது. நான் இந்தக்காட்டிலே இருக்கப்பட்டவன். இங்குள்ள பறவைகளைப் பிடித்து சாப்பிடுவதுதான் எனக்கு ஆகாரம். வேணுமின்னா உனக்கும் இந்தக் குட்டிகளுக்கும் கொண்டு வந்து தருகிறேன். அத சாப்பிட்டுக்கிட்டு எங் கூடவே சந்தோஷமாக இரு. உனக்கு நான் அடிமையாயிருக்கிறேன். நீ சொல்றதெயெல்லாங் கேக்குறேன். எனக்கு உன்னே பார்த்ததும் ஒரு மாதிரியாயிருக்குது. நாமிருவரும் புருஷனும் பெண்டாட்டியுமாக இருக்கலாம் என்ன சொல்றே.

பாட்டு

ஆட்டுத்தோலுக்கிடங்கொடுத்த-என்ற மெட்டு

கண்ணி

பாதகமொழி ஓதலாகுமா
பாவியேமுழு மூடா மூர்க்கப்
பதிதனே வன வேடா மனம்
பதறுதே குடி கேடா என்
பக்கம் வந்திடில் துக்கம் வந்திடும்
பாதையை விட்டுப் போடா
உயர்ந்தகுலத்தில் பிறந்து வளர்ந்த
உத்தமமான மங்கை அடே
உனக்கு நானொரு தங்கை என
உறுதியாய் எண்ணுயிங்கே இல்லால்
உலகம் பழிக்கும் வசையுங்கேடும்
உண்டாமில்லையா சங்கை
மைந்தருடனே நடந்து வனத்தில்
வந்த என்னை நீ கண்டு மிகு

மையல் பித்தமுங்கொண்டு கெட்ட
வார்த்தைகள் பல விண்டு இங்கு
வம்பு செய்து வருந்தி நிற்கிறாய்
மடையா கேடுனக் குண்டு

வசனம்

அடே வேடா! அறிவில்லாத்தனமாக என்னிடம் வாய்கூசாது உன் மனம் போனபடியெல்லாம் பேசுகிறாய். இதனால் உனக்குக் கேடுண்டாகும். ஆகையால் இனிமேல் அவ்வித எண்ணங்கொள்ளாது மதுரைநகர் வழியைச் சொல்ல இஷ்டமிருந்தால் சொல்லு, இல்லையேல் உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டுபோ. என்னிடம் நீ வீண் வார்த்தைகளைப் பேசினால் எனக்குக் கோபம் வரும்.

வேடன்

அடி என் கண்ணே? நீ என்ன சொன்னாலும் இப்போ என் காதிலே ஏறாது. நான் உன்னைப் பார்த்ததும் எப்படியாவது உனக்கு அடிமையாய் இருந்துவர என் மனசிலே நினைச்சுட்டேன். அதுபோல நீயும் மனமிரங்கி என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு சந்தோஷமாயிரு. அதுதான் நல்லாயிருக்கும் ஆகையால்,

பாட்டு தர்க்கம்

இராகம்-செஞ்சுருட்டி,தாளம்-ஆதி

கண்ணி

வே. மரகதமயிலே மானே தேனே
மருவ வாடி

நல் மடையா நீ போடா மதியில்லா மூடா
வாதாகுமோடா

வே வாதுகள் என்னிடம் ஓதிடவேண்டாம்
மாதேவாராய்

நல் தீதுகள் சொல்லிய தீயனே வேண்டாம்
சென்றிடுவாய்

வசனம்

அடே மூடா! காட்டில் பேய்களைப் போல் அலைந்து திரியுங் குடிகேடா கொஞ்சமும் முன்பின் யோசனை செய்யாமல் ஏதோவாயில் வந்தபடியெல்லாம் உளறுகின்றனை சென்றிடு. இல்லையேல்; உன்னைச் சாம்பலாகச் செய்வேன்.

வேடன்

அடி நீ நல்ல சமத்துக்காரி! யானை, சிங்கமெல்லாம் என்னைப் பார்த்த மாத்திரத்தில் கிடுகிடுவென நடுங்கும் அப்படியிருக்க நீயென்னைக் கண்டு நடுங்காமல் கேலியாகப் பேசிப் பார்க்கிறாய். என் சொற்கிணங்கி வருகிறாயா? அல்லது உன்னையும் உன் மக்களையும் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டுமா?

நல். கொச்சகம்

புன்னகையால் முப்புரமுன் பொடியான துண்மையெனில்
சின்னமதன் விழியனலால் தேகமழிந்தா னெனினும்
என்னருமை வாக்காலே இவ்வேடனீறாகச்
சொன்னமொழி பிசகாமல் தோற்றுவிப்பாய் சங்கரனே

வசனம்

ஏ மகாதேவா சம்போ! கைலாசபதி! பார்வதிசமேதா! இதுவும் உன்திருவருட்செயலோ? நான் என்னகரத்தில் பஞ்சக்கஷ்ட மாய் இருக்கிறதென்று எண்ணி குழந்தைகளோடு வரும் சமயத்தில் கணவனாவது வேறு மனுஷாளாவது துணையில்லாதபோது இந்தப் பாவி வேடன் பெண்டிக்கிழுக்கிறான். ஆனதால் யான் பதிவிரதை யென்பதுண்மையெனில் இவன் வெந்து நீறாகக்கடவது.

(வேடன் எரிந்து போகிறான்)

காட்சி முடிவு

காட்சி - 4

காலம் - மாலை

இடம் - வனம்

பாத்திரங்கள் - நல்லண்ணன், வேடர்கள் மந்திரி

நல்லண்ணன் வேட்டையாடுதல்

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்

பல்லவி

ஓடுது பார்
கூடி-யாடிச் சாடிவழி நாடியேவேகமாய் (ஓடு)

அநுபல்லவி

கரடி செந்நாய்களும் கூடி
கடுவாய் புலிசிங்கம்பின் னோடி
காடு மேடு மடு தாவியே வேகமாய் (ஓடு)

சரணம்

மான்குட்டி கூட்டங்கள் கோடி
மரை துள்ளித் துள்ளி விளை யாடி
குடிக ளிட்ட பயிர் மடிந்திட யழித்தவை (ஓடு)

வில்லை வளைத்ததைக் கொல்லுவேன்
குடி சொல்லைத் தள்ளாதிங்கு வெல்லுவேன்
காட்டு முள்ளம்பன்றி நாய்நரி கூட்டங்கள் (ஓடு)

நல்லண்ணன் வசனம்

வேடர்களே! பார்த்தீர்களா மிருகங்களை குடிகள் கஷ்டப்பட்டு, உழுது, பண்படுத்தி, நீர் பாய்ச்சி, வளர்த்து முதிர்ந்த களைமுற்றும் அழித்து விட்டன. அடுத்த வனத்திற்கு ஓடிவிடாதபடி வழியை மறித்துப் பெரிய வலைகளைக் கட்டுங்கள், நான் ஒருபக்கமிருந்து அவைகளைக் கொன்று வருகிறேன்.

விருத்தம்

காட்டில்நான் வேட்டையாடிக் களைப்புமே லிட்டதாலே
வாட்டமு முற்றுமேனி மலைந்துமே நிற்பதாலே
பாட்டமாய்த் தென்றல்வீசும் பாதையில் இந்தவேளை
நீட்டமாய் படுத்துநானும் நித்திரை செய்குவேனே

ந-ன்-வ- மந்திரி நான் வேட்டையாடியதால் களைப்பாயிருக்கிறது. சற்று இந்த இடத்தில் நித்திரை செய்துவிட்டு அதன்பின் நாம் போகலாம்.

மந்- ஐயனே! தங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்

நல்லண்ணன் தென்றல் வீசும்படி ஒரு கல்லின் மீது நித்திரை செய்கிறான்

நல்லண்ணன் கனவுகாணுதல்

ந-ன்வ- ஹா! தங்கா நீ எங்கிருக்கிறாய் உன்னை வேடனா துரத்துகிறான். மான்குட்டியா வேண்டும்......ஏன் இப்படிச் சொல்லுகிறாய் ஹா! ஹா!

(நித்திரையினின்று எழுந்திருக்கிறான்)

ந.ன்- மந்திரி! என் தங்கை வந்தாளே எங்கே

மந்- தங்கையாவது! தமக்கையாவது! கனவு கண்டீர் போலும் ஐயனே! எழுந்திருங்கள்.

ந.ன்- மந்திரி! ஆம் கனவுதான் கண்டேன். அதைத் தெரிவிக்கிறேன்.

நொண்டிச்சிந்து

மந்திரி சொல்லுகிறேன் - கேளும்
மந்தாரம் நிறைந்த இந்தக் கல்லிலமர்ந்து
அயர்ந்து நான் படுத்திருந்தேன் - அப்போது
ஆச்சரிய முடனேர்ந்த கனவைக் கேளும்
பன்னிரண்டு வருஷமாக - நாட்டில்
பஞ்சம் வந்து நேர்ந்ததாலே தங்கையும் நொந்து
பாலகர் எழுவரோடு - சேர்ந்து
பார்த்திட வரும் வழியில் வேடனும் வந்து
நிந்தனை செய்துமே நின்றான் - தங்கை
நீற்றிவிட்டாள் சாம்பலாகக் கற்பினருளாள்
மீண்டுமவள் என்முன் வந்து-பணிந்து
வேண்டியேநந்தென்மதுரை ஏகியே நின்றாள்
இதுதான் சேதி ஐயா - எனக்கு
எடுத்துரைப்பீர் உள்ளபடி இங்கு நீர் மெய்யாய்

ந.வ.ம்- மந்திரி! இதுதான் நான்கண்ட கனவின் கருத்து, இதனால் என் தங்கைக்கு ஏதாவது துன்பம் நேரிடுமோ?

மந்- துன்பம் ஒன்றும் ஏற்படாது. மேலும் இம்மாதிரி ஒருக்காலும் நடவாது! வாருங்கள் அடுத்த வனத்திற்குப் போகலாம்.

நல்லண்ணன்

மந்திரி! அதோபாரும் ஒருபெண்மணி குழந்தைகள் பலசூழ வருகின்றாள். கொடிய மிருகங்கள் நிறைந்திருக்கும் இந்தக் காட்டில் இவர்களிங்கு வரக்காரணமென்ன? வெகு தூரமிருந்து வருகிறவர்களைப் போல் காணப்படுகிறது. அன்றியும் அவர்களின் நிலையைப் பார்த்தால் பெரிய இடத்தைச் சார்ந்த குடும்பம் உடையவர்களாகத் தோன்றுகிறது. ஒருவேளை வழிதவறி இந்த மார்க்கமாக வருகின்றார்களோ என்னவோ? நல்லது, அவர்களை யாரென விசாரித்து வேண்டிய உதவி செய்வோம். வாருங்கள்.

குண-வ- அம்மா! என்னால் இனி ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது. இன்னும் நம்முடைய மாமன் அரண்மனை எவ்வளவு தூரமிருக்கும்?

ந.கை கண்மணிகளே! வந்துவிட்டோம். இன்னும் கொஞ்சத் தூரந்தானிருக்கிறது வருந்தாதீர்கள் வாருங்கள். போகலாம்.

நல்லண்ணன், நல்லதங்காள் முன்பு
சென்று ஆதரவாக வினாவுகிறான்

பாட்டு தர்க்கம்

ஒன்றுக்கும் அஞ்சாத-என்ற மெட்டு

கண்ணி

நன் ஏழுபிள்ளைகளோடு இங்கு வந்த நீ
யாரெனக்குச் சொல்வா யம்மா

நல் என் துயரத்தையும் கஷ்டகாலத்தையும்
எப்படிச் சொல்லுவே னையா

நன் எல்லா விதமும் நீ சொல்லாது போனாலும்
இருக்கும் ஊரெது சொல் லம்மா

நல் ஈசன் விசுவேசன் வாழுங்காசிநகர்
என்பதே என் தேச மையா

நன் காசிநகரென்று மொழிந்தனையே உன்றன்
கணவன் பெயர்யாது அம்மா

நல் காவலராய் அந்நகதர் ஆளுவோரே
கணவர் எனக்காகு மையா

நன் அரசனுக்கு மனையாளாயிருந்தும்
அவதி வந்ததென்ன அம்மா

நல் ஆகாதோகுக்கெதி நாட்டில் பன்னிரண்
டாண்டு பஞ்சமானா லையா

நன் பஞ்சகாலத்தினால் அஞ்சிவரும் சிறு
பாவையுன் பேர்யாது அம்மா

நல் பாவியென்னைநல்ல தங்கையுமென்றே இந்தப்
பாரோருரைப் ளையாபார்க

நல்லண்ணன் தன்னுடைய தங்கையென
அறிந்து மனம் வருந்தல்

பாட்டு

ஆகா என் ஜானகியை-என்ற மெட்டு

இராகம்-முகாரி தாளம்-சாப்பு

கண்ணி

ஐயோ உன்னை நான் இவ்விதமாய்க் காண
இறைவனமைத்த விதியோ தங்காய் தங்காய் தங்காய்
சீருடனே வாழ்ந்த நீ யாருமில்லா பர
தேசிபோல் ஆனாயே தங்காய் தங்காய் தங்காய்
மைந்தர்களோடு நீயும் கால்நடையாகவே
வரவும் ஈசன் செயலோ தங்காய் தங்காய் தங்காய்

நல்லண்ணன்

தங்காய்!! என் பிரிய சகோதரி கடவுளின் சோதனையோ. ஐயோ!! என்னகாலம் நான் கனவில்கண்டது நிஜமாய் முடிந்தது. உங்கள் நாட்டில் என்ன கஷ்டம் நேர்ந்தது. உங்களை எல்லாம் இந்தக் கோலத்துடன் பார்க்க மனம் சகிக்கவில்லையே ஜெகதீசா.

நல்லதங்கை விருத்தம்

மங்களமாகஎன்னை மணஞ்செய்து வைத்த அண்ணா
தங்கிய எமது நாட்டில் சார்ந்திடு மழையில்லாமல்
எங்களின் செல்வமெல்லாம் இழந்தாலுமெனது நாதர்
இங்குற நாணிநின்றார் யாரை நான் அனுப்புவேனே.

வசனம்

அண்ணா! எங்களுடைய நாட்டில் பன்னிரண்டு வருஷம் மழையில்லாமல் பஞ்சம் நேர்ந்துவிட்டது. அதனால் குடிகள் வந்து முறையிட்டார்கள், தங்கள் மைத்துனர் தன் கைவசமிருந்த பொருள்கள் முற்றும் கொடுத்துக் காப்பாற்றி வந்தார்கள். இன்னும் பஞ்சத்தின் கொடுமை நீங்கவில்லை. நான் பஞ்சம் தீரும் வரை பாலரோடு அண்ணன்வீடு போக வேண்டுமென்று வினவினேன். சம்மதியாது முடிவில் விடையளித்தார். அதன் பின்பு நானும் என்பாலரும் நடந்து வந்தோம்.

ந-ன். தங்கா! உன்னை மாலையிட்டு அனுப்பினது முதல் நான் வந்து பார்த்ததேயில்லை, மேலும் எவ்வளவோ சீராட்டுகளோடு என் தந்தை உனக்கு மணமுடித்து வைத்தார். உன்னை வலது கண்ணாகவும் என்னை இடது கண்ணாகவும் பாவித்து வந்த தந்தை ஒருநாள் தெரிவித்ததாவது அடா தம்பி! அடிக்கடி உன் தங்கையாக நல்லதங்கையின் க்ஷேம லாபங்களைப் பற்றி விசாரித்து அறிய வேண்டுமென்று சொல்லி யிருந்தார். இதன்படி நடக்கத் தவறினேன். அதனாலேதான் நீங்கள் இவ்விதக் கஷ்டத்தை அநுபவிக்க நேர்ந்தது. இருக்கட்டும் தங்கா குழந்தைகளை அழைத்துக் கொண்டு.

பாட்டு

இனிதாகப் பேசுந்தேனே-என்ற மெட்டு

துக்டா

நன் அன்புடனரண்மனை செல்லம்மா (அன்)
வேட்டையாடிப்பின்னால் வருவேனம்மா (அன்)

நல் தாங்களில்லா வீட்டில் அண்ணா
தனிமையாய் நானென் பிள்ளைகளோடு
சார்ந்தால் நலமுண்டா அண்ணா

நன் உந்தன் அண்ணியிருக்கிறாள் உபசரிப்பாள்
இனியாதொன்றுக்கும் வருந்தாதே அம்மா

ந.கை அண்ணா அறிவாளோ என்குணம்
பெற்ற அன்னையிருந்தால் தன்மையறிவாள்
அதனால் நான் போகேன் அண்ணா

ந.ன் அந்த விதம் ஒன்றும் நேராதம்மா
துன்பம் யாவும் வந்து தீர்ந்ததம்மா

ந.கை தாமும் உடன் வருவீர் இப்போதங்கு
சஞ்சலமிருந்த பஞ்சத்தினாலே
தவிக்கும் எம்மோடு அண்ணா

நல்லண்ணன் வசனம்

தங்கா! உங்களைக் கண்டவுடன் அரண்மனையிலுள்ளவர்கள் எல்லோரும் சந்தோஷத்தோடு உபசரிப்பார்கள். அன்றியும் அலங்காரி உன்னையும் குழந்தைகளையும் கண்டால் மிகு அன்புடன் வரவேற்பாள். அடிக்கடி உன்னுடைய ஞாபகமே அவளுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் நீ குழந்தைகளோடு அரண்மனையில் சந்தோஷமாகப் போயிரு. நான் சீக்கிரம் வேட்டையை முடித்து வந்து சேருகிறேன்.

ந.கை அண்ணா! தங்கள் உத்தரவின்படியே அரண்மனைக்குச் செல்லுகிறேன். தாங்கள் சீக்கிரம் வேட்டையை முடித்துவந்து சேருங்கள். குழந்தைகளே வாருங்கள்.

குழ.ள் மாமா! எங்களுக்கு விளையாட மான்குட்டி ஒன்று கொண்டு வாருங்கள்.

ந-ன் அப்பா! உங்களுக்கு வேண்டியதெல்லாம் கொண்டு வருகிறேன். சந்தோஷமாகப் போயிருங்கள்.

நல்லதங்காளையும் குழந்தைகளையும்
பல்லக்கில் ஏற்றி அனுப்புகிறான்.

காட்சி முடிவு

காட்சி - 5

காலம் - மாலை

இடம் - நல்லண்ணன் மாளிகை

பாத்திரங்கள் - நல்லதங்கை, பிள்ளைகள், மூளி, அலங்காரி

தென் மதுரை நகரம்

(நல்லதங்காள் நகரத்தைக் கண்ணால் கண்டதும் சிவிகையை விட்டிறங்கித் தன் மக்களோடு நடந்து செல்லுகிறாள்

நல்லண்ணன் அரண்மனை

நல்லண்ணன் மனைவி அலங்காரி நல்லண்ணன் வரவை எதிர் பார்த்தவள் நல்லதங்காள் வருவதைக் கண்டு விசனமுற்று ஆலோசனை செய்கிறாள்

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

அங்கொருத்தி வருகிறாள் என்குடிக்குச் சனிபோலே
அவள் தாண்டி நல்லதங்காள் (அங்)

அநுபல்லவி

பொங்குமாபூஷணங்கள் பொருள்கள்பலகொடுத்தும்
போதாதென்று இன்னமும்வாராள் அதோ ராஜவீதியிலே (அங்)

அலங்காரி

என்னடி விந்தையாயிருக்கிறது. இந்தச்சனியனைஇங்கு தாம்பூலம் வைத்து அழைத்தோமா! தாலிகட்டின சமயத்தில் என் குடியைக் கெடுத்தது போதாதா. இன்னும் ஏதாவது பாக்கியிருந்தால் தெரிவிக்கலாமென்று ஆலவட்டத்துடன் வருகிறாள் இருக்கட்டும், இன்றுதான் பார்க்க வேண்டும் இவள் திறத்தை. தலைவாசல் தாழிட்டு வா சீக்கிரம்.

ஏழுபிள்ளைகளுடன் நல்லதங்காள் வந்து நிற்கிறாள்

ந.கை இதென்ன கதவு தாழிட்டிருக்கிறது. அண்ணியார் எங்கு சென்றிருப்பார்? ஒருவேளை நித்திரை செய்கிறாரோ? இருக்கட்டும், அழைத்துப் பாக்கிறேன்.

பாட்டு

இராகம்-முகாரி-தாளம்-ஆதி

கண்ணி

ஏழுபிள்ளைக்காரியடி அண்ணியரே அண்ணி
ஏனோ கதவடைத்தாய் அண்ணியரே
மெத்தப் பசியாலே நொந்து அண்ணியரே அண்ணி
மெலிந்து தள்ளாடுகின்றார் அண்ணியரே
பாழும் பஞ்சம் வந்ததாலே அண்ணியரே அண்ணி
பாலருடன் வந்தேன் நானே அண்ணியரே

வசனம்

ஆ! இதுவும் தெய்வ சோதனையா? என் நாதன் உரைத்தவை யாவும் உண்மையே! இருக்கட்டும். அண்ணி! அண்ணி! அண்ணி! நான்தான் நல்லதங்காள் வந்திருக்கிறேன். என் பேரில் இவ்வளவு தானா கருணை. இந்தக் கதவைத் திறக்கக்கூடாதா?

கதவைத் தன் கற்பின் மகிமையால் திறக்கும்படி வேண்டுதல்

விருத்தம்

தேவாரப் பண்கேட்டுத் திருக்கதவு திறந்ததுவும்
போவாரை ஏமாற்றும் பூதநிலை விடுத்ததுவும்
நாவாரும் சொல்லென்றால் நானுரைத்தபடியின்று
சேவானே இக்கதவு திறந்திட நீ அருள்வாயே

வசனம்

பரம்பொருளே! கற்பு என்னும் பதிவிரதா தர்மத்தினின்று அணுவளவும் பிசகா தவளேயானால் இந்தக்கபாடம் திறக்க வேண்டும்.

நல்லதங்காள் வேண்டுகோளுக்கிணங்க அலங்காரி தாழிட்ட கபாடம் திடீரென்று திறந்துவிட்டது. நல்லதங்காளும் ஏழு பிள்ளைகளும் வீட்டிற்குள் ஓடிப்பார்க்கிறார்கள். அலங்காரி கோபத்துடன் எழுந்திருக்கிறாள்.

பாட்டு தர்க்கம்

வேறாயெனை விடலாகுமா-என்ற மெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

துக்டா

நல் மன்னியரே எந்தன் மன்னியரே
மன்னனையேமணந்தவளே பேர்
சிறந்தவளே சீர் தந்தவளே

அல மண்டைவலிபாரம் மாறாதஇந்நேரம்
தண்டையிட்ட காலால் தட்டி நீயாரு
நல் நல்லதங்கை யென்பேரு
அல அவளிங்கில்லை பாரு
நல் சற்றே திரும்பி நீ பாரு
அல என்ன சங்கடம் பாரு
நல் மக்கள் பசியினால் மிக்க துடிக்கிறார்
அல மக்களுக்கு யாரிங்கே வடித்து வைத்திருக்கிறார்
நல் மட்டில்லா பஞ்சத்தால்அடிபட்டு வந்திருக்கிறேன்
அல வரிசையாய்ச் சீதனம் வாரிக் கொடுத்திருக்கிறேன்
நல் பிள்ளைபசி பொல்லாது
அல பேசாது போ நில்லாது
நல் பெற்ற வயி றெரியுது
அல கற்றவள் தான் தெரியுது
நல் பேதம்நினைக்க லாமா
அல பிடிவாதம் நீ செய்யலாமா
நல் எந்தன் மன்னியரே

அலங்காரி வசனம்

ஏண்டி! உனக்குப் புத்திகெட்டுப் போனதா? எனக்கு நாலு நாளாய் மண்டையிடி வந்து தொல்லைப் படுத்துகிறது. நீ என்னைக் கூப்பிட்டுச் சொல்லக் கூடாதா. நான் இந்தக் கதவைத் திறக்கமாட்டேனா? காணாத குறைக்கு என் வீட்டிலுள்ள தின்பண்டங்களையும் எடுத்துக் கொடுத்துக் கெடுத்துவிட்டாய். இந்த ஏழுபிள்ளைகளும் உன் வயிற்றில் தானா பிறந்தார்கள்? கொஞ்சமும் வெட்கமில்லாமல் பன்றி பல குட்டிகளைப் போட்டாற்போலப் போட்டுக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாயே.

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

பஞ்சைக் கோலத்துடன் வந்த பாவிபெற்ற மக்களுக்கு
பதட்டம் இத்தனையென்னடி (பஞ்ச)

அநுபல்லவி

தஞ்சமென்றுஇங்கேவந்த தடிச்சிறுக்கிமக்களுக்கு
கொஞ்சங்கூடப்பயமில்லை கொடுப்பேன்கன்னத்திலறை (பஞ்)

சரணம்

உங்கள்-அப்பன் பாட்டன் தேடிவைத்த ஆஸ்தியிங்கிருக்குதென்று
ஆவலோடுஒடி வந்தீரோ நீங்கள்
அப்போதுகொண்டுபோனது போதாதென்று சொல்லியிப்போ
தள்ளிக்கொண்டு போக வந்தீரோ
இப்படிக்கொழுத்துப்போயி ஏழுஎட்டுப் பிள்ளைகளை
ஏதுக்கடி நீயும் பெற்றாய் இங்கேயும் பஞ்சமும் வர (பஞ்)

அலங்காரி குழந்தைகளைப் பிடித்தடிக்கிறாள்

இராகம்-மோகனம் தாளம்-ஆதி

பல்லவி

குண. அத்தேஎங்கள் அத்தே
அதட்டிமிரட்ட வேண்டாம் திட்டிவிரட்ட வேண்டாம்
மாமன்வீ டென்று யெண்ணி
மகிழ்ந்துநா மிங்கு வந்தோம்
வாதுமொழி ந்ததினால்
தாயும் நாங் களும் நொந்தோம்
வாயாடி யுளற வேண்டாம்
பேயாடித் திரியவேண்டாம் (அத்)

வசனம்

அத்தே! உமக்கும் மண்டையிடி வந்ததால் பித்தமேலேறி பைத்தியம் பிடித்துவிட்டதுபோல் தெரிகிறது புத்தியிருந்தால் இவ்வாறு புலம்புவீரா? வெளியில்போ என்றால் போவதில் தடையில்லை. ஏன் இவ்வாறு எங்களை வருத்த வேண்டும்?

அல-வம்- சரிதான்! சரிதான்! நீ என்னசெய்வாய் உன்னையும் தேடிப் பெற்றாளே ஒருத்தி.

குண-வம்- அத்தே! உம்மிடத்தில் கேள்வி ஒன்று கேட்க எண்ணுகிறேன். கேட்கலாமா?

அல-வம்- என்னடா கேள்வி?

குண-வம் மரியாதை இல்லாமல் மலடியைப்போல் பேசுகிறீர் இரண்டு கண்ணுந் தெரியாதவனுக்கு நல்லகண்ணு என்று பெயர் வாய்த்தாற்போல் அழகில்லாத உமக்கு அலங்காரி என்று பெயரிட்டது யார்? அவரை நான் பார்க்க வேண்டுமே.

யூக- அடா தம்பி! இதுகூட உனக்குத் தெரியாதா? அலங்காரி இல்லை, அகங்காரி யென்றே பெயர்.

அல- அடா! தடிக்கழுதைகளே உங்களுக்கும் புத்தி இப்படி வந்ததோ, வெளியே போங்கள்.

யூக- உங்கள் அப்பன் வீட்டிற்கு வரவில்லை, என் மாமன் வீட்டிற்கு வந்தோம்.

அல- போக்கும் புகலுமில்லாத தடிக்கழுதைகளே. வெளியே நின்று கேளுங்கள் உங்களுக்கு வேண்டியதைத் தருகிறேன். வெளியே போங்கள். (அடிக்கிறாள்)

பாட்டு தர்க்கம்

இந்த உடலைநம்பியிருக்கலாமா-என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-அடதாளம்

கண்ணி

நல்- அருமை மக்களை நீங்கள் அடிக்கலாமா
அடிக்கலாமா கையை ஒடிக்கலாமா (அரு)

அல- இந்தச் சிறுக்கி மக்களை நன்றாயடிக்கவேணும்
அடிக்கவேணும் கையை ஒடிக்கவேணும் (இந்)

நல்- என்னைஅடித்தாலும் தோஷமில்லை அண்ணி
எள்ளத்தனையும் வித்தியாசமில்லை (என்)

அல- ஏழுபிள்ளைப்பெற்ற நாயே போடி
ஏதுக்கு நீ இங்கு வந்தாயோடி (ஏழு)

வசனம்

நல்- அண்ணி சிறுவர்கள் தெரியாது சொல்லிவிட்டாலும் நீர்தானே பொறுத்துக்கொள்ள வேண்டும்

பாட்டு தர்க்கம்

தில்லாந்திரி தில்லாந்திரி - என்ற மெட்டு

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ரூபகம்

கண்ணி

நல்- சொந்தமென்று வந்தேன் அண்ணி சோர்ந்தனர் மக்கள்
பசியால்சந்தோஷமாய் மக்களுக்கு சாதம் படைப் பாயே நீயே

அல- என்னசொந்தம் போடிஉனக்கு அன்னம்கிடையாது
இந்நாட்டிலும் பஞ்சம்வர இங்கெதற்கு வந்தாய்

நல்- வந்தாலென்ன அண்ணியரே வறுமைமக்கள் பசியால்
நொந்து மிக வாடுகிறார் இந்தவேளை பாராய் பாராய்

அல- கல்யாணத்தில் சீதனங்கள் கனமாய்க் கொடுத் தேனே
கன்னியதை விற்றுண்ணாமல் இங்கெதற்கு வந்தாய்

நல்- எங்கள் நாட்டில் பஞ்சமேலிட்டதால் இங்கு வந்தோம். எதற்காக எங்கள் மீது இவ்வாறு கோபிக்கிறீர். அண்ணி! நாங்கள் உமக்குச் செய்த பிழைகளென்ன?

(பாட்டு தர்க்கம்)

ஆலிங்கனம் செய்தேன்-என்ற மெட்டு

நல் நல்லண்ண ராஜருடன் நான் பிறந்த சோதரியாள்
செல்வமில்லாநாட்டை விட்டுச் சீராடவந்தேனே

அல வந்துமென்ன உனக்கு வாரித்தந்துமென்ன
நாத்தியாயிருந்து மென்ன
பஞ்சைக் கோலத்துடன் பாசாங்கு செய்யவே (வந்)

நல் பாசாங்கு செய்யவில்லை பஞ்சம் பிழைக்கவந்தேன்
ஏசாதீர் அண்ணியரே என்ன பிழை நான் செய்தேன்

அல செய்வதென்ன நீயுமென்னை வைவதென்ன
உன் பிள்ளைகள் நொய்வதென்ன
ஒன்று கூடியின்று பன்றிகள் போல் வந்து (செ)

வசனம்

ந.கை அண்ணி! பசியென்னுங்கொடிய நோய் வந்து எங்களை வாட்டுவதால் அந்தப்பசி தீரும்பொருட்டு ஏதாவது ஆகாரம் கொடுக்கும்படி விரும்புகிறேன்.

அலங்காரி

கோட்டை கோட்டையாக நெல்லைக்குத்தி அரிசியைக்குமித்து வைத்திருக்கிறோமென்று வந்தாயா? இப்படி வயிறு வளர்ப்பதைப் பார்க்கிலும் பிச்சை யெடுத்துண்ணலாமே ஏண்டி நீ கொடுத்து வைத்தவள் போல வந்து கேட்கிறாயே.

நல்லதங்காள்

அம்மா! பசிவந்து எங்களை வாட்டுகிறது எதைப் பொறுத்தாலும் இப்பசியைப் பொறுக்க முடியுமா? முடியாது.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை,
தானம், தவமுயற்சி, தாளாண்மை, - தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல், பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

வசனம்

என்றபடி பசி வந்த காலத்தில் இவைகளெல்லாம் ஓடிப்போய் விடும். இவைகளெல்லாம் உமக்குத் தெரிந்தவைதானே. இப்பொழுதாவது என் பேரில் தயவு செய்து கொஞ்சம் ஆகாரம் கொடும் அண்ணி!

பாட்டு தர்க்கம்

நீயே சகாயமென - என்ற மெட்டு

இராகம்-சகானா தாளம்-தப்பு

பல்லவி

ந.கை. அண்ணி மெத்தப் பசியால் அழுகிறார் மக்களெல்லாம் அன்னம்
படைத்திடுவாய் அவசரமாய்

அநுபல்லவி

அல. கண்ணில் காணேனே சோறு கண்டபாவி இங்குயாரு
கனத்த தலைவலியால் அறிவிழந்தேன் பாரு

சரணம்

ந.கை. கூழாவது கொஞ்சம் கொடுத்தால் புண்ணியமம்மா
குழந்தைகள் பசிதீர்த்தால் மகிழ்வாரம்மா

அல. கூழுக்கு மாவில்லையே கொள்ள வகையில்லையே
கொடுப்பேன் கேழ் வரகதைக் கொண்டு சமைத்துக் கொள்வாய்

நல்லதங்காள் வ-ம்

தாயே! மனமிரங்கி கேழ் வரகு மாவாவது கொஞ்சங் கொடுத்தால் அதைக்கொண்டு குழந்தைகளுக்குக் கூழ் காய்ச்சிக் கொடுத்து அவர்கள் பசியைத் தணித்துக் கொள்ளச் செய்கிறேன்.

அலங்காரி

சரி! இதோ தருகிறேன்(ஒரு பானையைகொடுத்து) இந்தப் பானையில் அதோ அந்தக் கிணற்றிற்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து அதோ கிடக்கிற வாழைமட்டையை எடுத்து அடுப்பில் வைத்து இந்த மாவைக் கரைத்துக் கூழ் காய்ச்சிக் குடித்துவிட்டுச் சீக்கிரம் இந்த இடத்தை விட்டு எங்கேனும் போய்விடுங்கள். ஊம்.

நல்லதங்காள் பானையில் ஜலம்கொண்டுவந்து அடுப்பில்வைத்து வாழைமட்டையை எடுத்துத் தீ மூட்ட சிவனைக் குறித்துத் தோத்திரம் செய்கிறாள்

பாட்டு

பொன்னார் மேனியனே-என்ற மெட்டு

கண்ணி

நல்- பச்சை வாழைத்தண்டு பசையற்றிட்ட கேழ்வரகு
இச்சையற்றவள்போல் இந்த ஏழுபிள்ளைகட்கும்
பிச்சையாய் கொடுத்தாள் இதைப்பேணியே கூழாக்க
அச்சம் நானடைந்தேன் சிவமே அக்கினி பற்றச்செய்யே

கற்பின் மகிமையால் வாழைத்தண்டு எரிகிறது.
கூழ் கொதித்துக் கொண்டிருக்குஞ் சமயம் அலங்காரி
வந்து பார்த்துப் பொறாமை கொள்கிறாள்.

அல- இந்த வாழைத்தண்டு எரியாது என்றல்லவா நினைத்தேன். நீ மந்திரதந்திரம் படித்த குறத்தியைப்போல் எப்படியோ தீயைப் பற்றும்படிச் செய்துவிட்டாயே?

பாட்டு

பாலனும் பாம்பாலே மாண்டான்-என்ற மெட்டு

கண்ணி

நல் பாலரும் பசியால்வாடி பதைக்குறார் அண்ணி
மிகத் துடிக்கிறார் அண்ணி (பா)
பன்னிரண்டு வருடமாகப் பாரில் மழையில்லாமலே
பஞ்சம் வந்து சூழ்ந்ததாலே பாவியாய் நொந்தோம்
இங்கு மேவியே வந்தோம் (பா)

பி-ள்.வ.ம் மாமி! கொஞ்சம் கஞ்சி கொடுங்க சீக்கிரம் பசிக்குது.

(அலங்காரி குழந்தைகளை அகப்பையால் அடிக்கிறாள்)

நல்லதங்காள்

குழந்தைகளே! இப்படி வாருங்கள். கஞ்சி சூடாறட்டும். அவசரப்படாதீர்கள். அண்ணி தங்களுக்கு இந்தச்சிரமம் வேண்டாம். நானே குழந்தைகளுக்குக் கொடுக்கிறேன்.

அலங்காரி

ஓகோ! என்னடி அவசரம் பிச்சைக்கு வந்ததுமல்லாமல் அதிகாரம் வேறு செய்கிறாயே? மானமில்லாதவளே. இந்தக் கூழை உங்களுக்குக் கொடுப்பதைவிட பசுமாடுகளுக்குப் போட்டால் பெரும்

* நாடகம்: அரிச்சந்திரா - மயான காண்டம்

புண்ணியமுண்டு. போடி அங்கே எனக்குக் கூழ் ஊத்தத்தெரியும். நீயும் அவர்களோடு சேர்ந்து வாங்கிச் சாப்பிட்டு விட்டு தொலைந்துபோ.

அலங்காரி கூழை அகப்பையால் குழந்தைகள் கையில் கொடுக்கிறாள்.
அவர்கள் பசியால் பானையில் கைபோட்டு எடுத்துச் சாப்பிட
அலங்காரி கோபங்கொண்டு
பானையை உடைத்துவிட்டு

வசனம்

பிசாசுகளா! நாய்நரிகள் மாதிரி என்மேல் விழ வருகிறீர்களே! போங்கள், வெளியே எங்கேயாவது போய் பாழுங்கிணற்றில் விழுந்து சாகுங்கள். போடி. ஏண்டி நீலிபோல் அழுதுகொண்டிருக்கிறாய் வந்த வழியைப் பார்த்துப் புறப்படு. இனி க்ஷணநேரமும் இங்கு நிற்கக் கூடாது நின்றால் மேல்காரியம் நடக்கும் மரியாதையாகப் போய்விடு. (அறைக்குள் போகிறாள்)

நல்லதங்காள் பாட்டு

இராகம்-புன்னாகவராளி தாளம்-அடதாளம்

கண்ணி

அண்ணன்வீடென நானும் எண்ணங் கொண்டு வந்தேன்
அண்ணியர் குணம் பொல்லாதே கண்ணான கணவன்சொல்லைக்
கடந்து வந்த லாபம் கைமேல் பலித்ததே
காதகி எந்தனுக்கு (அண்)

ஆ. மீனாக்ஷிசுந்தரேசா! பாவியாகிய என்னை இவ்விதம் துன்பத்திலாழ்த்த உங்களுக்கு என்ன அபராதத்தைச் செய்தேனோ? ஐயோ! எங்களுடைய கஷ்டகாலத்தைத் தீர்க்க இங்கு வரவேண்டுமென்று புறப்படுந் தருணம் அநேக அபசகுனங்களைக் கண்டு தடுத்துப் போகவேண்டாமென்று சொல்லிய வார்த்தையை நிராகரித்து வந்ததின் பலன் இங்கு பிரத்தியக்ஷமாக விளங்கியதே.

பாட்டு

வீடலால வாயிலா- என்ற மெட்டு

இராகம்-தோடி தாளம்-ரூபகம்

கண்ணி

ந-கை. நாதன் சொல்லியவார்த்தை மீறியிந்
நாளில் வந்ததோர் பாபமே
வேதைதந்தது ஆனதாலங்கு

மீண்டுபோவது ஞாயமா
பேதை என்மதி அண்ணன் அன்பொடு
பேணுவானென நம்பினேன்
தீதுசெய்தனள் மூளிநாமென்ன
செய்யலாமாசை மக்களே

வீதியில் அடுத்த வீட்டார் நல்லதங்காளைக் கண்டு அரண்மனையில் நடந்த சங்கதிகளை அறிந்து பரிதாபத்துடன் தங்களுடைய வீட்டில் அரசன் வருகிறவரை வீற்றிருக்கும்படி வேண்டுதல்

நல்லதங்காள் பாட்டு

பருவகாலத்தை வீணாய்-என்ற மெட்டு

கண்ணி

அண்ணன் வீடு தேடிவந்து
அடுத்த வீட்டிலே இருக்கலாமோ
உண்ணும் அன்னம் நீர்கொடுத்தால்
ஊர்வசை சொல்லாதிருக்கப் போமோ
வேட்டையாடி அண்ணன் வந்து
கேட்டபோ தடைந்திடுவார் வேதனை -மன
வார்த்தை கேட்க வில்லை எந்தன் தீவினை

வசனம்

சகோதரரே! இதுசமயம் என்னை எவ்வளவு உபசாரமொழிகளைச் சொல்லி உங்களுடைய கிருகத்திலிருக்கச் சொன்னாலும் என்னுடைய மனநிலைமை அவ்விதமிருக்கச் சம்மதிக்கவில்லை. ஆகையால் அடியாள் மீது கிருபை வைத்து இங்கு அரண்மனையில் நடந்தவைகள் வேட்டைக்குப் போயிருக்கும் என் அண்ணராகிய உங்கள் அரசர் வந்ததும் அவரிடம் தெரிவியுங்கள். நான் சென்று வருகிறேன். குழந்தைகளே! வாருங்கள். (போகிறார்கள்)

காட்சி முடிவு

காட்சி - 6

காலம் - காலை

இடம் - வனம்

பாத்திரங்கள் - நல்லதங்காள், குழந்தைகள்

மரம் நிறைந்த வனம்

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

நல் மயங்காதீர் மக்களா பசிதாகத்தால் (மய)

அநுபல்லவி

சுயஞ்சோதியான ஈசன் சோதனையாகுமிது
அயர்ந்து வாடுவதாலே அகலுமோ துன்பமது (மய)

சரணம்

பண்ணிய புண்ணியபாவம் பலனடையாமல் போமோ
எண்ணி வருந்துவதால் ஏதொரு லாபமாமோ (மய)

யூகசீலன் வ-ம்

அம்மா! எங்களைப்பெற்ற உமக்கு இப்பெருந்துன்பம் வரலாமா? ஊரிழந்து, தந்தையைப் பிரிந்து, கடும் புலிகள் வாழும் இக்கானகத்தில் எங்களால் அடையும் கஷ்டத்திற்கு அளவுண்டோ? இப்பாழுது மக்களால் அல்லவா நீர் இவ்வித கோலத்திற்கு ஆளானீர். மீண்டும் எதற்காக இந்தக் கானகத்திற்கு வந்தீர்? நானும் என் தம்பி குணசீலனுந்தவிர மற்ற என்னருமைத் தம்பிமார்கள் இதனுடைய கஷ்டம் இன்னதென்று அறியாததால் மேலும் மேலும் அழுதுகொண்டே வருகிறார்கள். சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க் கபாய மொருநாளு மில்லை என்னும் நீதியை வழுவாது நடந்ததின் பயனாவிது?

ந-கை. கண்மணி யுகசீலா!
"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்தவருமோ இருநிதியம்"

முன் செய்தவினை சேர்ந்து மூண்டபோது தெய்வத்தை நாம் நொந்து கொள்வதில் என்ன பயனாகும். வாருங்கள்.

குணசீலன்

அம்மா! தாகத்தினால் நாவுலர்ந்துவிட்டது. பசியின் மிகுதியால் காதுகள் அடைக்கின்றன. கைகால்கள் சோர்ந்துவிட்டன. இனிமேல் ஒரு அடிகூட எடுத்துவைக்கமுடியாது. இந்த விடத்திலேயே நாங்களிருக் கிறோம். தயவு செய்யும் அம்மணி!

நல்லதங்காள்

கண்மணிகளே! இந்தவிடத்தில் இருக்கலாகாது, இன்னும் கொஞ்சத்தூரம் நடந்து சென்றால் நமக்கு முன்யாராவது வந்தாலும் வருவார்கள். அவர்களிடம் கேட்டு நாம் கேணியிருக்குமிடத்திற்குப் போகலாம். வாருங்கள் (போகிறார்கள்)

இடையர்கள் வருகிறார்கள்

ராமன்- ஏண்டா கருப்பா! நேத்துக்கூத்துப் பார்க்கப் போனாயா?
கருப்பன்- அண்ணே! என்னாத்துக்கு அப்படிக்கேட்டே
ராமன்- இல்ல, உன்னாண்ட கேட்கலானு தான் வேறென்ன
க-ன்- கருத்தப் பசுவுலே பாலு கறந்தாயா?
ரா-ன் பாலு கொஞ்சுண்டு தான் தந்தது
முத்தன் அண்ணே! அண்ணே! ஓடியா, ஓடியா, ஓடியா.
க-ன் ஏண்டா! சின்னப்பயலே!
மு-ன் அண்ணே! கல்லுக்குள்ளே நீலப்பாம்பு இருக்குதண்ணே!
ரா-ன் ஒருகல்லெடுத்துப் போட்டு கொள்ளுடா
மு-ன் நீங்க வாங்கண்ணே
க-ன் நாட்டாமைக்காரே மகனைக் கூட்டிக்கடா

எல்லாரும் ஓடிப்போய் கல்லினுள்ளே பாம்பு இருக்கிறதென்று கல்லை எடுத்துப்பார்த்தார்கள். பாம்பரணை இருந்ததால் எல்லாரும் நகைக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நல்லதங்காள் ஏழு பிள்ளைகளோடு அழுது கொண்டு வருகிறாள்.

பாட்டு

எக்குலத்திலே யுதித்தாய் - என்றமெட்டு*

கண்ணி

நல் ஆடுமேய்க்கும் அண்ணமாரே
அகன்றுபோக வேண்டாமிங்கு நில்லும்
ஆதரவாய் எங்களுக்கு நீர் தயவாய்
உண்மைமொழி சொல்லும்
தாகமீறுதெங்களுக்குத் தண்ணீரெங்கு
கிட்டும் வழி காட்டும்
தாமதம் நீர் செய்யலாமோ சஞ்சலங் கொண்டு
அலறுமுறை கேட்டும்

வசனம்

ஐயா! எங்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதால், நானும் என் மக்களும் இவ்வித கோலத்திற்குள்ளானோம். எங்களுக்குத் தாக மேலிடுவதால் தண்ணீர் இருக்கும் கேணியை நாடி இந்த வனத்திற்கு வந்தோம். ஆனதால் தயவுசெய்து, எங்கள் தாகம் தீரும் பொருட்டு நல்லநீர் நிறைந்த கேணியிருக்குமிடத்தைத் தெரிவியுங்கள் சகோதரரே!

* நாடகம்: வள்ளி திருமணம், இராகம்-பிலஹரி தாளம்-ஏகம்

இடையர் வசனம்

இன்னும் கொஞ்சத்தூரம் போனால் பெரிய பெரிய கேணி இருக்குதுங்க. அதில் தண்ணி பெருகியிருக்கு. நீங்க ஓரத்துல நின்னு, இரச்சுக்குடிங்க, கிணத்துக்குள்ளே எறங்கக்கூடாது. தெரிந்ததுங்களா தாயே! இந்தக் குழந்தைகள் முகமெல்லாம் வாடிப்போயிருக்கிறதே. கொஞ்கம் பாலுதருகிறோம். சாப்பிட்டுப் போங்களேன்.

ந-கை அய்யா! அதெல்லாம் வேண்டாம். (போகிறாள்)

காட்சி முடிவு

காட்சி - 7

காலம் - முற்பகல்

இடம் - கிணற்றின் கரை

பாத்திரங்கள் - நல்லதங்கை, பிள்ளைகள்

நல்லதங்காளும் தன் பிள்ளைகளும்
கேணியில் தண்ணீர் சாப்பிடுகிறார்கள்

வசனம்

இந்த உலகத்தில் என்னைப்போலும் ஒரு பாவியுமுண்டோ. கெட்ட குடியே கெடும் என்னும் முதுமொழி எனக்கே தகும். காட்டில்திரியும் கள்ளியைப்போல என் வாழ்நாளை வீண் நாளாகக் கழிக்கிறேனே. தேவதேவனே! இவ்வளவு கஷ்டப்பட்டும் இன்னும் குறைதீர மார்க்க மில்லையே! இருப்பதைவிட இறப்பது மேலல்லவோ? தயாபரனே! கருணாகரனே! என் மனதிற்கு ஒரு ஆலோசனைப் புலப்படுகிறது. அதன்படி செய்யலாமென எண்ணுகிறேன். இருக்கட்டும். என் புத்திரனிடம் இதைத் தெரிவித்து நான் கோரியவாறு செய்து முடிக்கிறேன். நான் கற்புநிலை தவறாதது மெய்யேயானால் என்னையும் என் மக்களையும் புண்ணிய லோகத்திற்குச் சேரும்படிக் கட்டளையிடும் தேவனே!

நல்லதங்காள் தன் புத்திரரின் மூத்தவனாகிய யூகசீலனுடன்
ஆலோசனை செய்கிறாள்

விருத்தம்

மானம் மரியாதை போச்சுது வந்த இந்த விடத்திலே
ஈனமேவியே வறுமை சூழ்ந்திட ஏழையாகிஇப் பூமியில்
ஏனிருந்திட வேண்டுமோஇனி இறந்து போதலே ஞாயமே
ஊனம் வந்த பின் வாழ்தல்தீதுநீ ரோடிவாருங்கள் பாலரே

நல்.வ.ம் கண்மணி! யூகசீலா! நாம் இம்மண் மேலிருந்து என்ன பலனடைந்தோம். இருப்பதைவிட இறப்பது மேலல்லவோ?

யூக-வ-ம். அம்மா! ஏன் அவ்வாறு நமது உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்? அவ்வாறு நாம் செய்வதென்றால் பாவமெல்லாம் ஒருங்கு சேர்ந்து நம்மைச் சூழுமல்லவா?

பாட்டு

வாடா மதிமுகனே-என்ற மெட்டு

கண்ணி

நல்

மானம் போனபிறகு பிராணனிருக்கலாமோ
ஆனவரை சொல்லியும்
அனியாயம் மூளிசெய்தாள் மக்களா (ம)

செத்தாலும் தோஷமில்லை சேரலாம் நல்லகெதி
அத்தன் விஸ்வேசனுக்கும்
அடைக்கலமாகச் சாவோம் மக்களா (ம)

ஒருரோமம் போனாலும் கவரிமான் வாழாது
உண்மை மொழி நமக்கே
தன்மையறிவீர் நீங்கள் மக்களா (ம)

இப்புவிமீது நொந்து எத்தனைநாள் பட்டினியாய்
இருக்க உங்களாலாகும்
செப்புமொழி தள்ளாதீர் மக்களா (ம)

குழந்தைகள் ஆறுபேர்களையும் கிணற்றில் தள்ளிவிட்டு
நல்லதங்காள் மூர்ச்சையாகிக் கீழே விழுகிறாள்
(நீயே சகாயமென)

இராகம்-சகானா தாளம்-ரூபகம்

யூகசீலன் கண்ணிகள்

அருமைத்தம்பியைவிட்டுப்	பெரும்பாவி உயிர்தொட்டு
அடுத்துயிருக்கலாமோ	கண்ணீர்விட்டு
மாறாதபஞ்சம் வந்து	மாய்த்ததே பின்தொடர்ந்து
தவறாதுநான்விழுந்து	சேராதுமைப் பணிந்து (அ)

யூகசீலன் வசனம்

அன்னையே! உம்மைப்போல் ஒரு தாயை நான் எந்த ஜென்மத்தில் பார்க்கப் போகிறேன். நாங்கள் உமது திருவயிற்றில் ஜெனித்து இப்பாமும்

கேணியிலா இறக்கவேண்டும். மேலும் மேலும் துக்கமே மேலிடுகிறதே அல்லாது வேறில்லை. நமது நாட்டில் பஞ்சம் வந்து நொந்ததை நினைத்து அழுவேனோ? தந்தையிடம் விடைபெற்று வரும் வழியில் கண்ட அபசகுணங்களை நினைத்தழுவேனோ? காட்டில் வரும் வழியில் வழிமறித்த வேடன் செய்த கொடுமையை நினைத்தழு வேனே? தென் மதுரைவந்து மாமன் வீட்டில்பட்ட அவதியை நினைத்து அழுவேனா? மீண்டும் கானகம் வந்து களைத்து நொந்ததை நினைத்து அழுவேனா? இல்லை என்னருமைத் தம்பிகளை இந்தக் கேணியில் தள்ளிவிட்டுப் பாவியைப் போல் பரிதவிக்கிறேதே! இதை நினைத்து அழுவேனா? நான் எதை நினைத்து அழுகிறது? இவை ஒருபக்கமிருக்கட்டும். தாயே, நான் இதுவரைபட்ட கஷ்டங்களெல்லாம் என்னைச் சூழந்து வாட்டுகிறது. ஆனால் ஒன்று அதை நினைக்கும் போதெல்லாம் நான்படும் வாதைக்கு அளவில்லை. அதாவது பத்துமாதம் சுமந்து பெற்ற தாயாகிய உமக்குச் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யாமல் இறக்கப் போகிறேனே என்ற எண்ணந்தான் மேலும் மேலும் வாட்டுகிறது அம்மா!

பாட்டு

முன்தொடர்ச்சி

நானிறந்தாலுந்தனை நாட்டில் யார் காப்பாற்றுவார்

ஏனின்னுந்தாமதம்

ஈசன் பதம் போய்ச் சேர்வோம் மகனே மகனே மகனே

நல்லதங்காள் முதல் குழந்தையையும் கிணற்றில் தள்ளி கீழே விழுந்து மூர்ச்சை தெளிந்து எழுந்து

நல்லதங்காள்

அடா யூகசீலா! உன் தலையிலும் இவ்வாறு பிரமதேவன் எழுதினானா? வடமதுரையைப் பரிபாலித்து வந்த மன்னரின் வம்சமும் இன்றோடு முடியுங்காலம், நேர்ந்ததோ ? மீனலோசனியே! தயாபரியே! நாடிழந்து மன்னனை பிரிந்து மக்களை மறந்து தனியாக நானும், இனிமேல் இவ்வுலகிலிருப்பேனா? ஹா தெய்வமே! நானும் என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன். ஜெகதீஸ்வரி! ஜெகதீஸ்வரி! நீயேகதி!

நல்லதங்காளும் கேணியில்விழ எத்தனிக்கிறாள்

விருத்தம்

ஈராறு வருடமாய்த் தீராத பஞ்சமே
விட்டதை நினைத்தழுவனோ
தாராளமாகவரும் போதுகண் டிட்ட அப
சகுனத்தை நினைத்தழுவேனோ
போராடி வனவேடன் பெண்டாள வந்தவொரு
புன்மையை நினைத்தழுவேனோ
பாராது நிந்தையால் அலங்காரி செய்த பெரும்
பாதகம் நினைத்தழுவனோ

நல்லதங்காள் வசனம்

ஆ தெய்வமே! என்னைப்போல் இவ்வுலகில் ஒருவரும் இவ்வளவு கஷ்டத்தை அடைந்திருக்க மாட்டார். ஒருவேளை என் அண்ணன் தேடி வந்தாலும் வருவார். ஆதலால் என் மாங்கல்யத்தைக் கழற்றி இந்தக்கல்லின் மேல் வைத்துவிட்டு இக்கேணியில் விழுகிறேன்.

நல்லதங்காள் தன் மாங்கல்யத்தைக் கழற்றித்தன் அண்ணன் கண்ணுக்குத் தவிர வேறொருவருக்கும் தெரியாதிருக்கும்படி சாபமிடுகிறாள்

நல்.வ-ம்- அங்கையற் கண்ணியே! இவ்வடியாருடைய மாங்கல்யம் என் அண்ணனுக்கு மாத்திரந்தெரியும்படி அநுக்கிரகஞ் செய்வாய் அம்மணி!

விருத்தம்

நல் அம்மையே மாங்கல்யத்தை அருகினில் கழற்றிவைத்தேன்
அம்மையே உந்தன்பாத மநுதினந் துதியும் செய்தேன்
அம்மையே ஏழுமக்கள் அலறியே வீழ்ந்ததாலே
அம்மையே நானுமுன்றன் அடிமலர்ச் சேருவேனே

நல் ஹா! ஹா!

நல்லதங்காள் கிணற்றில் விழுந்துவிட்டாள்

காட்சி முடிவு

காட்சி - 8

காலம் - முற்பகல்

இடம் - மதுரை அரண்மனை அந்தப்புரம்

பாத்திரங்கள் - நல்லண்ணன், அலங்காரி

மதுரை நகரம்

(அலங்காரி அந்தப்புரம் நல்லண்ணன் வருகிறார்)

அல-வ-ம் நாதா! நமஸ்கரிக்கிறேன்

ந-ன் கல்யாண்! காதலி! எங்கே ஒருவரையுங் காணோமே என் தங்கை குழந்தைகள் எல்லோரும் எங்கேயிருக்கிறார்கள்? கண்ணே!

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

வந்த தங்கை எங்கே இங்கு (வந்)

அநுபல்லவி

சிந்தைமயங்கி மெலிந்து வருந்தியே
சுந்தரந்தங்கிய மைந்தர்கள் தம்முடன் (வந்)

சரணம்

பஞ்சகாலத்தால் வறுமைய டைந்து
பலவிதமாக மனதில் நினைந்து
சஞ்சலங்கொண்டு தன்பதிதனி லிருந்து
தமையன்பதி செல்லலாமென விரைந்து (வந்)

வசனம்

அலங்காரி! அவர்களின் நாட்டில் பன்னிரண்டு வருடமாக மழையில்லாது பஞ்சமேலிட்டு அதனால் வருந்தி ஏழைகளைப் போல் அநாதையாகப் பரதேசிக் கோலத்துடன் இங்கு நம்மை வேண்டி வந்த தங்கையும் என்னருமையான மருமக்கள்மாரும் எங்கே இருக்கிறார்கள் சீக்கிரம் சொல்.

அல. நாதா! எல்லோரும் வந்திருக்கிறார்கள். வாருங்கள். ஆகாரம் தயாராகியிருக்கிறது. சாப்பிட்டுக் களை தீர்ந்தபின் அவர்களைப் பார்க்கலாம் எழுந்திருங்கள்.

நல்லண்ணன்

அடி! நான் கேட்டதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் எனக்கு உபசரணை செய்து அழைக்கிறாயே இது என்ன! அங்கம் பதறுதடி. நான் அவர்களைக் காட்டில் சந்தித்தவுடன் என் அறிவானது ஒன்றிலும் செல்லாது வேட்டையைச் சீக்கிரம் முடித்து அவர்களை ஆதரிக்க வேண்டி மிகு அவசரமாய் இங்கு வந்தேன்.

பாட்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குமேல்-என்ற மெட்டு

கண்ணி

அல. அந்நிதம் உரைக்கலாமா ஆஎந்தன் சீமானே (அநி)
நன்னகரையாண்டஎந்தன் நாத்தியாள்வந்தாளென்று
கண்ணியமாய்க்கண்டவுடன் காலலம்பஜலங்கொடுத்தேன்
வண்ணவண்ணப்பாய்விரித்தேன் வரிசையாய் உட்காரவைத்தேன்
வந்தவர்கள்க்ஷேமமெல்லாம் வகையுடனே விசாரித்தேன்

வசனம்

நாதா! நாத்தினார் அவர்கள் வந்தவுடன் வேண்டிய உபசரணையோடு பஞ்சபட்சண ஆகாராதிகளெல்லாம் கொடுத்து ஆனந்தமடையச் செய்தேன். இரவு மேடைமேல் அவர்களை நித்திரை செய்யும்படிவிட்டு நான் இங்கு தனியாக நித்திரை செய்தேன். காலையில் எழுந்து அவர்களைப் பார்க்கப் போனேன். ஒருவரையும் காணவில்லை. ஒருவேளை இந்நகரைச் சுற்றிவரப் போயிருக்கிறார்களோ என்னவோ? எங்கே போவார்கள் இன்னும் சற்றுநேரத்தில் வந்து சேருவார்கள்.

ந-ன் ஓகோ! இங்கு என்னவோ நடந்திருக்கிறது நல்லது. அடி வா இப்படி.

பாட்டு

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

ந.ன். இத்தனை உபசாரங்கள் இனிதாய் நீசெய்திருந்தால்
இதைவிட்டு ஏன்போறாள் என்னருந்தங்கை (இத்தனை)

அநுபல்லவி

சத்தியவதிபோல சாதிக்கிறாயடி
சண்டாளிநீ என்ன சதிசெய்தாயடி

சாருமே பாபம் உன்னைச்
சாருமே பாபம் இனி
தாங்காதென் கோபம்
சரியாய்ச் சொல்லடி (இத்)

அல. வாட்டங்கொண்டு நிற்கவேண்டாம்
மன்மத துரையே
மையல் விளையும் சர்க்கரையே வேறு
மாறுதலிங்கு ஓதுவதில்லை
கேளும் என்னுரையே

ந-ன். அண்ணன்தங்கை எங்களைப்போல்
யாருமில்லையடி உலகில்
யாருமில்லையடி எந்தன்
ஆசைதீர்ந்திட அவள் முகம்பார்த்து
பேசவேணுமடி

அல. கூறுதற்கு முன்பதட்டம்
கொண்டிடப்போமா என்னை
கொஞ்சிடுங்காமா அந்தக்
கோதைசேதியை ஓதிடுமுன்னே

வசனம்

அடி! என்ன படுமோசஞ்செய்தாய் நீ தெரிவித்தபடி சகல உபசாரங்களும் செய்திருந்தால் என் தங்கை எங்கு போகக்கூடும். அப்படி அவளுக்குச் சினேகிதையானவர்கள் எவ்வளவுதான் வேண்டிக் கொண்டாலும் அவர்களுடைய மனையில் ஜலங்கூட சாப்பிட மறுத்து விடுவாளே. அதிலும் மக்கள் எழுவரோடு அதிகாலையில் சென்றவள் இதுநேரம்வரை இங்கு வராமலிருக்கக் காரணமில்லை அடி! உண்மையாக நடந்தவற்றைச் சொல் இதுவரை நீ இம்மாதிரியாக நடந்து கொண்டதில்லை. வீணாக என் கோபத்திற்குப் பாத்திரமாகாதே. நீ ஏதேனும் என் அருமைத் தங்கைக்குக் கொடுமைகளைச் செய்து வசை மொழிகள் பேசி துரத்திவிட்டனையா? சொல் சீக்கிரம் நான் இனி அவளைப் பாராது உயிருடனிருக்கப் போவதில்லை ஆ! தங்காய்! என் பிரிய சகோதரியே நீ எங்கிருக்கிறாய்? ஐயோ!

அலங்காரி

ஆஹா! நன்றாயிருக்கிறது. நான் என் நாத்திக்குச் செய்த உபசாரங்களுக்கு இவ்வளவு வேண்டியதுதான். இதுதான் பாபமொரு பக்கம் பழி ஒருபக்கம் என்பது நாதா! என்மீது தங்களுக்குச்

சந்தேகமிருந்தால் (சேவகனைச் சுட்டிக்காட்டி) அதோ நிற்கிறானே அவனிடத்திலே கேட்டுப்பாருங்கள் தங்கள் தங்கைக்குச் செய்த உபசாரங்களை (சேவகனிடம்) ஏண்டா இங்கு நேற்று வந்தார்களே அவர்களுக்கு நான் செய்த உபசாரங்களை மகாராஜாவுக்குச் சொல். அதைக் கேட்டாவது தெரிந்துகொள்ளட்டும். (கண் சமிக்ஞை செய்கிறாள்)

நல்லண்ணன்

அடே! இங்கே வா. நேற்று என் தங்கையும் அவள் குழந்தைகளும் வந்தார்களே ஏதேனும் அவர்கள் மனவருத்த மடைந்தார்களா? அல்லது இங்கு அவர்கள் இல்லாத காரணம் ஏதேனும் உனக்குத் தெரிந்தால் சீக்கிரம் சொல்.

சேவகன்

மகாராஜா! மகாராணியவர்கள் தங்களுடைய சோதரியாகிய என் அம்மணிக்கும் குழந்தைகளுக்கும் செய்த மரியாதைகளை இவர்கள் முன்னால் எடுத்துச் சொன்னால் இவர்களை முகஸ்துதி செய்ததாகவும் ஆகையால் அவர்கள் செய்த உபசாரங்களைச் சொல்ல வேண்டுமானால் இப்பொழுதே என்னுடைய உத்யோகத்தை நான் விட்டுவிட வேண்டும்.

நல்லண்ணன்

(சேவகனைத் தனியாக வைத்துக்கொண்டு) அடே! நடந்தவற்றை ஒளியாமல் உண்மையாகச் சொல் இங்கு என்ன நடந்தது?

சேவகன்

மகாராஜா! நான் இப்போது சொல்வதெல்லாம் உண்மைதான். நேற்று ராஜவீதியிலே தங்களுடைய தங்கையும் குழந்தைகளும் வருகிறதைப் பார்த்ததும் ராணியவர்கள் கோபத்தோடு கதவுகளைத் தாழிடச்சொல்லி மண்டையில் பத்து போட்டுத் தலைவலிக்கிறரென்று நித்திரை செய்தாங்க, உடனே தங்களுடைய தங்கையும் குழந்தைகளும் இங்குவந்து கதவைத் தட்டினாங்க, பிறகு கதவு தானாகத் திறக்கும்படி செய்தாங்க, குழந்தைகளையெல்லாம் அடித்தாங்க, கூழ்காச்சும்படியாகப் பச்சை வாழை மட்டையை வைத்து எரிக்கும்படி செய்தாங்க, அந்த அம்மணி கற்பு மகிமையாலே அதுவும் எரிந்ததுங்க. கடைசியாகக் கூழ்ச்சட்டியையும் அவர்கள் தலையிலே போட்டு உடைத்து இங்கு இருக்கப்படாது என்று சொல்லி ஏசிப்பேசி அனுப்பிவிட்டாங்க. குழந்தைகளெல்லாம் அழுதுகொண்டே போனதுங்க, என்னை அதட்டிப் பேசி இவைகளை யெல்லாம் தங்களிடம் சொல்லக்கூடாது என்று ராணியவர்கள் உத்தரவு செய்தாங்க. இவ்வளவுதான் மகாராஜா (அழுகிறான்).

ந-ன் ஆ! தங்காய் உனக்கும் குழந்தைகளுக்கும் செய்த கொடுமைகளைச் சகிக்கமாட்டாது எங்கு சென்றாய்? (போகிறான்.)

காட்சி முடிவு

காட்சி - 9

காலம் - நண்பகல்

இடம் - வீதி

பாத்திரங்கள் - நல்லண்ணன், அடுத்த வீட்டார்

சோமசுந்தரக்கடவுளே! இதுவும் உன் சோதனையா? இல்லறத்திற் கேற்ற மனைவி வேண்டும் செல்வத்திற்கேற்ற ஈகை வேண்டும் என்னும் பழமொழியும் பொய்யாகுமா? என் தங்கையைக் காணாது அந்தப் பாழும் அரண்மனைக்குப் போகிறதில்லை.

அடுத்தவீட்டார் வருகிறார்கள் அவர்களைப் பார்த்து

பாட்டு

தக்கபாராங்கல்லை-என்ற மெட்டு

கண்ணி

இந்த மதுரை ஊ ராரே எந்தன்
தங்கையைக்கண்டீரோ நீரே அவள்
சென்றவிடமுரைப் பீரே தேடி
எங்குங்காணேன்பெரி யோரே
பஞ்சத்தினால் சிந்தை நொந்தாள் சிறு
பாலரோடென்மனை வந்தாள் பொல்லாப்
பாதகிமுளி என்மனை யாள் என்ன
செய்தாளோ எங்கோ அடைந்தாள்

அடுத்தவீட்டார் வசனம்

மகாராஜனே! அரண்மனையில் நேற்றுநடந்த விருத்தாந்தமெல்லாம் எங்களுக்குத் தெரியவரும் என்ன செய்யலாம். கஷ்டகாலம். நாங்கள் எவ்வளவோ சொல்லிக் குலசேகரி அன்னையாரைத் தடுத்தோம் அவர்கள் ஒரே பிடிவாதமாய்க் குழந்தைகளோடு இந்த மார்க்கமாகப் போனார்கள். தங்களிடத்தில் அரண்மனையில் நடந்தவைகளைச் சகிக்காது போனதாகச் சொல்லச் சொன்னார்கள்.

நல்லண்ணன்

ஐயோ! கடவுளே! என்னருமைச் சகோதரிக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்ததைக் கேட்க என் மனம் சகிக்கவில்லை. நான் போய் அவள் கோபத்தைத் தணித்து அழைத்துக் கொண்டு வருகிறேன்

(போகிறான்)

காட்சி - 10

காலம் - நண்பகல்

இடம் - வனம்

பாத்திரங்கள் - நல்லண்ணன், இடையர்கள்

வனம்

நல்லண்ணன் தங்கையைத் தேடி வருகிறான்

பாட்டு

தேரிமேரிஜோடி-என்ற மெட்டு

துக்டா

என் தங்கையைக்காணேனே   தேடித்தேடி   (என்)
தெரியாமல்மோசம்போனேனே   தேடித்தேடி   என்னைக்
காணாமல் பேசாமல்போவாளோ   அவள்
கார்யவிரோதமும் செய்வாளோ   நான்
பூணாரம் தங்கைக்குப் பூட்டுவேனே
பொங்கியுள்ளன்பு பாராட்டுவேனே
பூமி புகழ்ந்திடுமா முத்து
சாமிக்குள் ளேகற்ற சீர்பெற்ற நானிங்கு தேடித் தேடி   (எ)

வசனம்

ஹா! தங்காய் இந்த வனமுழுதுஞ் சுற்றிப் பார்த்துங் காணவில்லையே அய்யோ, குழந்தைகள் ஏழுபேரும் கூடப்போகின்றார்களே, என்ன கஷ்டம். ஹா சகோதரி நீ சென்றவழியே வருகிறேனே உன்னைக் காணவில்லையே. எங்கிருக்கிறாய்? அதோ இரண்டு பேர்கள் வருகிறார்கள் கேட்போம்.

இடையர்கள் வருகிறார்கள்

நல்லண்ணன்

யாதவர்களே! கற்பிற்கரசியான என் தங்கை ஏழுமக்களுடன் இந்த வழியாக வரக்கண்டீர்களா? பார்த்திருந்தால் சொல்லுங்கள்?

யாதவர்கள்

மகாராஜா! அவங்க தங்கள் தங்கையிண்ணு தெரியாதுங்க. ஏழுபிள்ளைகளைக் கூட்டிக்கிட்டு நேத்து இந்த வழியாவந்தாங்க. குடிக்கத் தண்ணி வேணுமென்னாங்க. நாங்க பாலு தருகிறோ மென்னோம். வாண்டாமின்னாங்க. அதோ தெரியுது பாருங்கோ. அந்தக் கிணத்துப் பக்கம் தண்ணி குடிக்கப் போனாங்க. அப்புறம் எங்களுக்குத் தெரியாது மவராஜா.

ந-ன் அப்படியா போய்ப்பார்க்கிறேன். நீங்கள் நில்லுங்கள்

(போகிறான்)

காட்சி முடிவு

காட்சி - 11

காலம் - பிற்பகல்

இடம் - வனத்தில் கிணற்றின் கரை

பாத்திரங்கள் - நல்லண்ணன் இடையர்கள்

மீண்டும் நல்லண்ணன் நல்லதங்காளைத் தேடும்போது
கேணியின் பக்கத்தில் ஒரு கல்லின்மீது மாங்கல்ய
மிருக்கிறது அதைப்பார்த்து ஆலோசனை செய்கிறான்

நல்லண்ணன்

இந்தக் கல்லின் மேல் இந்த மாங்கல்யத்தை வைத்துவிட்டுச் சென்றவர் யார்? ஒருவேளை நமது தங்கை வந்தவிடத்தில் அடையாளமாக் வைத்துச் சென்றாளோ? குலசேகரியையும் காணேன். இருக்கட்டும் கிணற்றில் பார்க்கிறேன்.

விருத்தம்

பொல்லாத மூளிசெய்த புண்பெறுங் கொடுமையாலே
எல்லோருமிக்கிணற்றில் இறந்திட வந்ததோதான்
நல்லோர்கள் புகழுங்காசி நகர்பதி வந்துகேட்டால்
சொல்லாடலெதுவோ சோமசுந்தரக்கடவுளானே

பாட்டு

இராகம்-முகாரி தாளம்-ஆதி

அப்பா புலந்திரனே-என்ற மெட்டு*

கண்ணி

பஞ்சகாலத்தினாலே பாலரெழுவரோடு
பாதகன் வீடு வந்தாயோ தங்காய் தங்காய் (ப)
வஞ்சகி மூளிசெய்த வாதை சகித்திடாமல்
வந்து மடியலானாயே தங்காய் தங்காய் (ப)
அண்ணா நீ இல்லாவீட்டில் ஆகாது போகவென்றாய்
அதனைத் தடுத்துரைத்தேனே தங்காய் தங்காய் (ப)

வசனம்

ஹா மானவதி! என் பிரியசகோதரி, என் குலமணியே! நம்மையீன்ற அன்னை தந்தையர் இந்தக் கொடும் துன்பம் நேரிடும் என்றெண்ணி அவர்கள் முன்னே இறந்தனரோ? மாதர்க்கரசியே ஐயோ! ஒன்றா இரண்டா, ஏழுகண்மணிகளான மக்களையும் ஒரு க்ஷணப்பொழுதில் மானத்திற்கும் கோபத்திற்கும் பலிகொடுத்தனையே, ஆ! வயிறு எரிகிறதே எப்படிச் சகிப்பேன். ஹா கஷ்டம். யார்தான் பார்த்துச் சகிப்பார்கள். மாமன் செல்வத்திற்கு மருமக்கள் காணியாட்சி என்பாரே. ஐயோ இந்த ஆட்சி பெறத்தானா என்மனை தேடி வந்தீர்கள். பசித்து வந்த வயிற்றுக்கு ருசிக்கும் அன்னம் கொடுக்காத பாவியானேனே.

நல்லண்ணன் யாதவர்களை அழைத்துக் கிணற்றில் கிடக்கும் தங்கை, குழந்தை, முதலானவர்களைக் கரையில் எடுத்து வைக்கும்படி செய்து புலம்புதல்

பாட்டு

திருக்கடையூர் தனிலே-என்ற மெட்டு*

கண்ணி

ந-ன் தங்கையே என் நிதியே கற்பு
தையலான மதியே
இங்கு நீ வந்திந்தப் பாழுங்கிணற்றினில்
ஏனிறந்தாய்மைந்த ரோடித் தினத்தினில் (தங்)

---

* நாடகம்: பவளக்கொடி

* நாடகம்: கோவலன் சரித்திரம்

மூளிபழி காரி மூ
தேவிபொல் லாநாரி
காளவிடம்போல் கடிந்து சொல்ல நொந்து
கண் கலங்கிமடிந் தாயோ இங்குவந்து (தங்)
உன்னாதற் கெந்தவிதம் நான்
உரைப்பேனில்லை சம்மதம்
என் பாபமே உன்னை இப்படிச் செய்தது
இல்லையேல்மூளியு மேனுன்னை வைத்து (தங்)

நல்லண்ணன்

ஆ தங்காய்! உன்னைச் சதமென்று திருமணஞ்செய்தவன் உங்களது கொடுமையான துர்மரணத்தைக் கேட்டு எப்படிச் சகிப்பான் அப்பா மருமக்களா? என் வாய் நீர்வற்ற மண்ணைச் சொரிந்தீர்களே. இது சரியோ இதோ உங்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை முன்னாலே பாவி என் கையால் செய்து முடிக்கிறேன்.

நல்லண்ணன் யாதவர்கள் உதவியால் தங்கை, குழந்தை முதலானவர்களைத் தகனஞ்செய்து அலங்காரிசெய்த பழிக்குப் பழிவாங்க எண்ணங்கொண்டு மதுரைநகர் செல்லுகிறான்

காட்சி முடிவு

காட்சி - 12

காலம் - மாலை

இடம் - மதுரை அரண்மனை அந்தப்புரம்

பாத்திரங்கள் - நல்லண்ணன், அலங்காரி

மதுரை நகர்

அலங்காரி அந்தப்புரம்

அலங்காரி

நாதா! என்னுடைய நாத்தினாரைப் பார்த்தீர்களா? எங்கே இருக்கிறார்கள்? என்ன சொன்னார்கள்? இங்கெப்பொழுது வருவார்கள். என்மீது தாங்கள் வீணாகக் கோபம் கொண்டு போனீர்களே? நானென்ன அவ்வளவு கொடுமைத்தனம் செய்பவளா? இனிமேலும் அதைச் செய்ய என் மனம் துணியாதே.

நல்லண்ணன்

காதலி! உன்னருமையான நற்குணத்தைக் கண்டு மெச்சினேன். நீ இவ்வளவு உபசரணைகள் செய்திருந்தும் அவள் நன்கு பாராட்டாது போய்விட்டாள். தொலைந்தனள். போனாலும் சரி, வந்தாலுஞ்சரி, நான் கால் வலிக்க நடந்தது தான் லாபம்.

அலங்காரி

நாதா! நான் தான் முன்னாலேயே தெரிவித்தேனே! நீங்கள் அதைச் சிறிதும் கவனிக்காது என் பேரில் விசனித்துச் சென்றீர்களே. நான் அவ்வளவு தூரம் கொடுமையும் செய்வேனா?

நல்லண்ணனும் அலங்காரியும் தன் புத்திரனுக்கு விவாகம் நடத்த வேண்டிய விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்கிறார்கள்.

பாசுபதம் போலமதன்-என்ற மெட்டு

கண்ணி

மங்கையே நம் மைந்தனுக்கு
மாலை சூட்டிடவே-மண
மாலை சூட்டிடவே
மாறுதலெது மோதிடாமலே
கூறுவாய் பதிலே-வீண்
தாமதிக்கா மலே

அல-வ-ம் நாதா! செய்ய வேண்டியதவசியமே எந்தப் பெண்ணைத் தெரிந்தெடுத்தீர்கள்?

ந-ன் நீ தானே அறிந்து சொல்

அல எனது சகோதரனான கேகயராஜனுக்கு ஒரு புத்திரி இருக்கிறாள். அவள் பெயர் காமசுந்தரி. அவளைத்தான் செய்யலாமென எண்ணுகிறேன்.

ந-ன் உனக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதந்தான். அதற்குச் சரியான ஏற்பாடுகளைச் சரிவர செய்கிறேன்.

அல நாதா! நான் சென்று வருகிறேன்

(அலங்காரி சென்றுவிட்டாள்)

ந-ன்- சேவகா! மந்திரியை அழைத்துக் கொண்டுவா

ம-ரி- ஐயனே! நமஸ்காரம்

ந-ன் மந்திரி! நமக்குள்ளடங்கிய சகல சிற்றரசர்களுக்கு நமது மைந்தனுக்குக் கலியாணமென்றும், என் மைத்துனருக்கு

மாத்திரம் நல்லதங்காளும் அவளுடைய மக்களும் இறந்துவிட்டதாக லிகிதம் அனுப்பும்படி செய்யும்

ம-ரி அவ்விதமே செய்கிறேன் (மந்திரி சென்றுவிட்டார்)

ந-ன் சேவகா! ஒரு சிற்ப சாஸ்திரியை அழைத்துக் கொண்டு வா

சேவ- உத்திரவின்படியே (அழைத்துக்கொண்டு வருகிறான்)

சிற்- ஐயனே! நமஸ்காரம்

நன்- சிற்பசாஸ்திரியே! நமது அரண்மனை முன்னிலையில் ஒரு சூத்திரப்பந்தலிட்டு நான் கோருகிறசமயம் அதைத்தட்டி விட்டால் அடியிலிருந்தவர்கள் அடியோடு மாண்டு போகும்படி செய்ய வேண்டும்.

சி-ரி- மகாராஜா! உத்தரவு (சிற்பசாஸ்திரி சென்றுவிட்டான்)

காட்சி முடிவு

14-வது களம்

காலம் - காலை

இடம் - மதுரை அரண்மனை

பாத்திரங்கள் - நல்லண்ணன், காசிபன்

வடமதுரை காசிபராஜன் வருகிறான்

சத்தியம் நீர்செய்தால் நம்புவேன்-என்ற மெட்டு*

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

மைத்துனரே வாரும் க்ஷேமமா
பத்தியுட னேபணிந்தேன்
இத்தினமும் நானும்நொந்தேன் (மை)

அநுபல்லவி

காசி வந்தயென் மங்கையும்
மக்களும் எங்கே
வழுத்துவீர் எனக்கு நீர்
நொந்ததை யிங்கே
சிந்தை கலங்காது நீர்
விந்தையா யிங்கே
சீக்கிரம் மொழியும் நீர்

* நாடகம்: கோவலன் சரித்திரம்

யாவையு மொருங்கே
மைத்துனரே கூறும்க்ஷேமமா?
வழுத்துவீர் நீரே (மை)

காசி.வ-ம் மைத்துனரே! என் மனைவியும் மக்களும் வந்தார்களே! அவர்களெல்லோரும் எங்கேயிருக்கிறார்கள்?

நல்லண்ணன் விருத்தம்

அரண்மனை வந்தயெந்தன் அன்புள்ள தங்கையாளை
வரமில்லா மனைவியான வதியலங்காரி தானும்
தரமில்லா வாதுபேசி தடுத்துரை செய்ததாலே
பரமென்ற பொருளைத் தேடி பாவையு மாண்டிட்டாளே.

வசனம்

மைத்துனரே! என் தங்கையும் என்னருமை மருமக்களும் நான் காட்டில் வேட்டையாடிய சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். நான் அவாவுடன் வரவேற்று முத்துப்பல்லக்கிலேற்றி அரண்மனைக்குப் போகும்படி ஏற்பாடு செய்தேன். அரண்மனைக்கு அவள் வந்ததும் நீலியாகிய அலங்காரி செய்த கொடும் வஞ்சகத்தை மேலிட்டு தானும் தன்மக்களுமாக இந்தச் சண்டாளன் வருகிறதற்குள்ளாக பாழும் கேணியில்போய் விழுந்து இறந்து விட்டார்கள். அக்கொடுமையை நன்குணர்ந்து பழிக்குப்பழி வாங்க நினைத்து நேற்றுச்சில சூழ்ச்சி செய்து அலங்காரியை அடியோடு தொலைத்து விட்டேன்.

காசிபன்

மைத்துனரே! இறந்துவிட்டார்களா? நான் என்ன செய்யப் போகிறேன் ஏ குலசேகரி! உனக்குப் புத்தியும் இவ்வாறு நேர்ந்ததோ இருக்கட்டும் மைத்துனரே என் துர்பாக்கியந்தான் இவ்வாறு நேர்ந்தது. உமது மனைவியாவது உயிருடனிருக்கக் கூடாதா? அவளையுமா நீர் கொல்ல வேண்டும். இருக்கட்டும். அவர்கள் இறந்த இடத்தையாவது எனக்குக் காண்பிக்கக் கூடாதா?

ந-ன் வாருங்கள் போகலாம்.

நல்லண்ணனும் காசிபராஜனும் நல்லதங்காளும் அவள் மக்களும் இறந்த இடத்தைப் பார்க்க புறப்பட்டுவிட்டார்கள்

15-வது களம்

காலம் - முற்பகல்

இடம் - வனத்தில், கிணற்றின் கரை

பாத்திரங்கள் - காசிபன், நல்லண்ணன்

கேணியுள்ள பொழில்

காசிபன் விருத்தம்

பத்தினி மாதேநீயும் பாலர்கள் எழுவரோடு
அத்தினம் விடையும்பெற்று அரண்மனை வந்தநீயும்
பித்தனைத் தவிக்கவிட்டு பிரிந்துமே உயிரைவிட்டாய்
சத்திய நீதியாமோ தையலே விசனமுற்றேன்

வசனம்

சோமசேகரா! கருணாகரா! இதுவும் உன்சோதனையோ? என் அன்பு நிறைந்த மங்கையையும் என் மக்களையும் இவ்வாறு துன்பத்திலாழ்த்த எத்தனை நாளாய் நினைத்திருந்தாய் இருக்கட்டும். அவர்களுடைய உயிரை ஏற்றுக்கொண்ட எமதர்மன் என் உயிரையும் ஏற்றுக்கொள்ள மாட்டானா? கட்டாயம் ஏற்றுக்கொள்வான். சத்தியமென்பது உண்மையானால் என்னுயிரையும் இப்பொழுதே ஏற்றுக் கொள்ளும்.

காசிபன் தன் உடைவாளால் உயிரைப் போக்கிக் கொண்டான்
இதையறிந்த நல்லண்ணன் அடங்காத துயரத்தோடு

நல்லண்ணன்

சந்திரசேகரா! இவை முற்றும் உன் சோதனை போலும்? தங்கையிழந்து, மருமக்களிழந்து மைந்தரிழந்து இந்தப் பாவி மட்டுமா? உலகத்திலிருந்து வாழவேண்டும். இவர்களையெல்லாம் ஏற்றுக் கொண்ட எமன் என்னுயிரையும் ஏற்றுக்கொள்ள மாட்டானோ? கட்டாயம் ஏற்றுக் கொள்வான் இதோ என்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறேன்.

நல்லண்ணனும் தன்னுயிரை கட்கத்தால் வெட்டத் துணிகிறான்.
அந்தச் சமயம் பசுபதி ஒரு பெரிய சந்நியாசியாக வந்து கட்கத்தை எட்டிப் பிடித்துக் கொள்கிறார்.

பசுபதி

ஏ உத்தமனே! பொறு பொறு வெட்டாதே! உன் புத்தியை மெச்சினேன் இங்கே இறந்த உன் தங்கை, மருமக்கள், மைத்துனர் இவர்களை யெல்லாம் எழுப்பித்தருகிறேன். நீ அழைத்துச் சென்று மங்களமாய் வாழ்வாயாக.

இறந்தவர்களாகிய குலசேகரி, காசிபன் இவர்களுடைய புத்திரர்களெல்லாம் எழுந்து பசுபதியை வணங்குகிறார்கள்

பசுபதி ரிஷபவாகனத்தில் காக்ஷி
எல்லோரும் பாடுகிறார்கள்

இராகம்-சுருட்டி தாளம்-ரூபகம்

பித்தாபிறை சூடிப்பெரு மானேயரு ளாளா

எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை

வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூரருட் டுரையுள்

அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே

மங்களம்

நல்லதங்காள் சரித்திரம் முற்றுப்பெற்றது.

5. சத்தியவான் சாவித்திரி

சத்தியவான் சாவித்திரி

காப்பு

நண்பனுயிர் மீட்டுவந்த நாயகிசா வித்திரியார்
பண்புதனை நாடகமாயப் பாடவே-விண்புலவர்
முன்பாகப் போற்றுமுயர் மூர்த்தியெனுந் தந்திமுக
னன்பாகி யீவா னருள்

விநாயகர் துதி

என்முகம் பார்த்தருள் சண்முகனே-என்ற மெட்டு

இராகம்-தோடி தாளம்-ஆதி

பல்லவி

மணிச்சத்தம் பொலிதிரு கழற்சித்தனே
வந்தருள்செய் தந்திமுக கர்த்தனே (மணி)

அநுபல்லவி

வாணுதலாள் உமை பாலகனே உன்னை
வந்தித்தேன் வந்திப்போ தைந்தத்தனே
வடிவினிலொரு கரிமுகனெனும் (மணி)

சரணம்

மாயையாலுழலும் ஏழையாகுமென்னை
வாழ்வியாது விடல் நீதியல்ல
வாசகாதியிசை ராக தாளநிலை
மாறிடாமல் முறை யோடுசொல்ல
வரமருள
இதுதருணம்
அரனருளும்
ஒருபுதல்வ (மணி)

சரஸ்வதி துதி

நடந்ததென்ன சொல்லம்மா-என்ற மெட்டு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி

கல்விக்குரிய கலைவாணி-உன்றன்
கழலடி பணிகிறோம் கருணைசெய்பேணி (கல்)

அநுபல்லவி

செல்வமுன் னருளன்றி ஜெகத்தினற்கேது
திகழு மறிவில்லாற்குன் நிலைதெரியாது
பல்வகை புகழ்மறை பகர் மொழிமாது
பாரதிநீ கடைக்கண் பாரெங்கள்மீது (கல்)

சரணம்

உம்பர் நற்கீரன் ஞான சம்பந்தனோடும்
குலவிய நால்வர்ஒட்டக் கூத்தன் சொல்நாடும்
கம்பன் ஔவையார்காள மேகமும்பாடும்
கவிவலியுனதருள் சனகர்கொண்டாடும் (கல்)

இயலிசை நாடக மெனுந் தமிழ் விரிவாய்
இருப்பதெவ்விதங்கற்போ மென்பதைத் தெரிவாய்
தயவுசெய்துயர் வித்தை தந்தருள் புரிவாய்
தருணமிதுவே யுந்த னருள்மழை சொரிவாய்(கல்)

காட்சி - 1

நேரம் - இரவு
இடம்-சாலவபுரி
பாத்திரங்கள்-கஜகேது, மந்திரி, சேனைகள்
(கஜகேது துயுமத்சேனனது கோட்டையை முற்றுகையிடுதல்)

கஜகேது (பாட்டு)

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

பல்லவி

கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டு நாம்
கொடியை நாட்டுவோம் (கோ)

அநுபல்லவி

கொடியை நாட்டுவோம் நாம்
கொடியை நாட்டுவோம்

சரணம்

கோலமோடு வரு யானையும்
கூறுதேர் குதிரை சேனையும்
குறையாமல் மிகு நிறைவாக இங்கு
வரலான வித மதனாலே
குத்துவோம் வெட்டுவோம்
தட்டுவோம் கட்டுவோம் (கோ)

கொற்றவனுக்கொரு புத்திரனுண்டவன்
சத்தியவானென்னும் வீரன்-படை
கொண்டே திரண்டிடில் மண்டலீகர்களைக்
கொன்றுகுவித்திடுஞ் சூரன்-பகை
கோடிக்கு மஞ்சாத தீரன் மிகு
கோபப்ரதாப கெம் பீரன் ரண
கோரவரு தேறுசம் மாரன் அவன்
குணமான மாமன் மனைதேடிப்போனா
னதுநாளி லந்த விதம் நாடி
கூட்டுஞ்சேனையோடு நாட்டில் வந்தோமவன்
மீட்டுமிங்கேவந்தால் மோசம்-இங்கு
கொஞ்சமும் நெஞ்சனஞ்சான் நமது
குலத்துக்கு வந்திடும் நாசம்-நல்ல
குறியோடு படை எறிவீர்கள் தள
முறிவான போது தெரிவீர்கள்
கொடியபோர் முடியவே
சடிமதில் இடியவே (கோ)

(வ.ம்) வீரர்களே! சத்தியவானென்னும் பலாஷ்டியன் இல்லாத நேரத்தைப் பல நாளாகக் கவனித்தோம். இன்று தான் அது சம்பவிக்க நேர்ந்தது. இனித்தாமதிக்கலாகாது.

“கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து”

என்பது ராஜநீதி முதுமொழி. அதாவது

“ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு”

என்பதுபோல, அரசர்கள் தமக்குக் காலமும் இடமும் வாய்க்கும் வரை ஓய்ந்திருந்து அவைகள் வாய்த்த வேளையில் முன் வாடியிருந்த கொக்கு அது தப்பிய மீன்களைப் பிடித்துக் கொள்வதுபோல்மாற்றார் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கிணங்க, நாமும் இந்த வேளையில் படையோடு இவ்வரணைச் சூழ்ந்துவிட்டோம். இனி உங்கள் தீரவீர பராக்கிரமங்களைக் காட்டி இக்கோட்டைக்குள் நுழைவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யுங்கள் பார்க்கலாம்!

காட்சி - 2

நேரம் - இரவு

இடம்- அந்தப்புரம்

பாத்திரங்கள் - துயுமத்சேனன், சுமாலி முதலியோர்

(துயுமத்சேனன் நித்திரையிலிருக்கிறான், சுமாலி வருகிறான்)

சுமா : மகராஜ் இன்னும் நித்திரையா?

துயு : சுமாலி என்ன சமாச்சாரம்?

சுமா : கஜகேது, என்னும் அரசன் நமது கோட்டையை முற்றுகை யிட்டு உள்ளே பிரவேசித்துவிட்டான். ஆஸ்தான மண்டபங் களெல்லாம் அதோகெதியாகிவிட்டன.

(துயுமத் பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

பல்லவி

சீக்கிரங்கூட்டிவாடா சுமாலி நீ (சீக்)

அநுபல்லவி

தேடிமணிப்புரம் ஓடியென் மைந்தனை (சீக்)

சரணம்

தாக்கிப்பகைவர் தளங்களெல்லாம்
சண்டையிட்டு வெற்றி கொண்டே விரட்டிட (சீக்)
நல்லதருணத்தை நாடி கஜகேது
நம்மை வெல்லவந்தா னாகையாலிப்போது (சீக்)
இங்கேநடக்கும் விதத் தை நீ சொல்லாதே
எள்ளளவுந்தாமதித் தங்கு நில்லாதே (சீக்

வ-ம் : சுமாலி! இவ்வேளை உன்னையல்லாமல் உற்றதுணை ஒரு வரையுங் காணோம். ஆகையால் அதிவிரைவாகப் போய் மணி புரத்திலிருக்கும் எனது குமாரன் சத்தியவானைக் கூட்டிக் கொண்டு வா.

சுமா : அடே அப்பா! இது என்னாலே முடியாத காரியம். எள்ளுப் போட்டால் எள்ளுவிழுவதற்கு இடமில்லாமல் எங்கு பார்த்த போதிலும் சமுத்திரம்போலே தேர், யானை, குதிரை, காலாட்கள் என்னும் நான்கு வகைப் படைகளோடு எதிரிகள் சூழ்ந்து நிற்கிறார்கள். இந்த வேளையில் வெளியேற என்னால் எப்படி முடியும்? என்னைக்கண்டால் தலையைக் கொய்து

விடுவார்கள். அப்படி என் தலைபோய்விடுமானால் என் பெண்டாட்டி இனந்தெரியாமல் என்னைப்போல் ரணக்களத்தில் தலையற்ற வேறொருவன் உடலோடு உடன்கட்டை ஏறினால் எனக்கு அவமானமல்லவா? அதனாலே நான் போகமாட்டேன்.

துயு : விகடப்பிரசங்கா! இது உனது வேடிக்கை மொழி உபயோகிப் பதற்குக் காலமன்று. என் மைந்தனைக் கூட்டிவந்து சேர். காரியமிஞ்சியபின் நீ கூட்டிவந்தால் பயனில்லாமல் போகும். தாமதிக்காதே! தாமதிக்காதே!! சீக்கிரம் புறப்படு.

சுமா : இதோ போய் வருகிறேன். (போகிறான்)

காட்சி - 3

நேரம் - அதிகாலை

இடம்- தர்பார் மண்டபம்

பாத்திரங்கள் - கஜகேது, சேவகன் முதலியோர்

கஜகேது துயுமத்சேனனது தர்பாரிலிருந்துகொண்டு சேவகர்களிடம் துயுமத்சேனனையும் பத்மாக்ஷியையும் அழைத்து வரச்சொல்லுகிறான்

(கஜகேது பாட்டு)

வாடிநீவாடிநீ-என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகதாளம்

கொண்டுவா கொண்டுவா
கொற்றவனையு மவன் பத்தினியையு மிங்கு (கொ)
குத்தியவர்க ளிருகண் கெடுத்திட
கோட்டையை நீக்கிக்கா ட்டுக்குள் விடுத்திட
கொஞ்சமேனு மின்று நெஞ்சில்
சஞ்சலங் கொள்ள வேண்டாம்
கோப மானேன் ஆதலாலே (கொ)

(வ-ம்) ஏன் இன்னும் வீண்நேரம் போக்குகிறீர்கள். துயுமத்சேனனை யும் அவன் மனைவியையும் பிடித்துக்கட்டிக் கொண்டு வாருங்கள். அவர்கள் கண்களைக் கெடுத்து காட்டில் ஒட்ட வேண்டும். சீக்கிரங் கொண்டுவந்து என்முன்னே நிறுத்துங்கள்.

(துயுமத்சேனனையும் பத்மாட்சியையும் தூதர்கள் அழைத்து வருகிறார்கள்)

(துயுமத் பாட்டு)

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்

கண்ணி

ஒருபிழையும் நாங்கள் செய்த தில்லையே

உமதுமனது மிளகியருளை யுதவுமெல்லையே

(கஜ(வ.ம்) அடே வீரர்களே! கொஞ்சமேனும் தயை தாட்சண்யம் பார்க்காமல் இருண்ட ஆரண்யத்தில் இவர்களை இழுத்துக் கொண்டு போய்க் கண்களைக் குத்தி அங்கு விட்டுவிட்டு வாருங்கள்.

(துயுமத் பாட்டு)

எமதரசை நீர் கைப்பற்றிக் கொள்ளும்

இத்தினத்தில் கண்குத்திக்கெடுக்கும் எண்ணத்தைத்தள்ளும்

(வ-ம்) ஐயா கஜகேது என்னும் அரசனே! இது ராஜதர்மமல்ல. ஒருவர் நாட்டை ஒருவர் புஜபல பராக்கிரமத்தால் அபகரித்துக் கொள்ளல் அரசருக்குரிய நீதியென்றாலும், கண்ணைக் கெடுத்துக் காட்டிலோட்டிவிட எந்த நீதிசாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறது? தயவு செய்து இக்கடின தண்டனையை நிவர்த்தித்து எங்களைப் பராரியாக்கியேனும் நாட்டைவிட்டகற்ற மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

(கஜ(வ.ம்) சற்றேனும் உங்கள்மீது பச்சாதாபம் எனக்கு உண்டாகாது. ஏண்டா சேவகரே இன்னும் ஏன் தாமதம்.

(துயுமத் பாட்டு)

கண்ணிழந்து காட்டில் வசிப்ப தெய்விதம்-உமது

கரத்தினாலெங்கள் சிரத்தைக்கொய்திடும் எமக்குச்சம்மதம்

(பத்மாக்ஷி-வ-ம்) ஐயா புண்ணியவானே! எங்களிருவர்களின் கண்களைக் கெடுத்துக் காட்டில் விடுவதைப் பார்க்கிலும், உமது கரத்திலிருக்கும் இந்தக் கட்கத்தினாலே இவ்விடத்தில் தானே எங்கள் சிரசைக் கொய்துவிடும். மனத்திருப்தியோடு சம்மதிக்கிறோம்.

(கஜ) சீக்கிரம் இழுத்துப்பாருங்கள். இழுத்துப் போங்கள்

சேவகர் துயுமத்சேனனையும் பத்மாக்ஷியையும் கொண்டு போகிறார்கள்

காட்சி - 4

நேரம் - முற்பகல்

இடம் - நந்தவனம்

பாத்திரங்கள் - சாவித்திரி, தோழிகள், சத்தியவான், சுமாலி

(சாவித்திரி சகிகளோடு நந்தவன விநோதம் பார்க்க வருகிறார்கள்)

(சாவித்திரி - பாட்டு - தர்க்கம்)

இராகம் - அமீர்கல்யாணி - தாளம் - ஆதி

கண்ணிகள்

சா- மந்தகாசமுக மாதர் நீங்களெல்லாம்
வாருமென்னோடுபூங் காவனம் போகலாம்

சகி- வருவோம் விரைவில் வனிதாமணியே
மாளவிராணி யிருகண் மணியே

சா- கைகோர்த் துலாவலாம் காட்சிகள் பார்க்கலாம்
கந்தமலர்கொண்டு செண்டுமுண்டாக்கலாம்

சகி- கருத்தின்படியே நடப்போம் தவறோம்
காலாலிட்ட பணியைச் செய்குவோம்

சா- பஞ்சரக் கிள்ளைபோல் பண்களும் பாடலாம்
பாதம் பெயர்ந்தெழும் பாவைபோ லாடலாம்

சகி- பாரிலுன்னெண்ணம்போல் பாங்கிலே கூடுவோம்
பண்ணிசை யோடுநாம் பாடி டுவோம்

சா- அடி சகிகள்!

அச்சாமோரி லாகிஸே - என்ற மெட்டு

இராகம்-பியாக் - தாளம் - ஆதி

பல்லவி

இன்றுகாணும் நேர்த்தியைப்போல்
என்றும் கண்ட தில்லையே
இல்லையே கண்ட தில்லையே (இன்)

அனுபல்லவி

தென்றலின் வாசம் திவ்யசந் தோஷம்
தேனாறு போலோடு தேவி சேஷம் (இன்)
மல்லிகையில் வண்டு வந்துமது உண்டு
மாறாது ராகம் ரீங்காரம் கொண்டு (இன்)

வ-ம்- சகிகளே! என்றுமில்லாத விந்தையாக இன்று காணப்படுகிறது. பற்பல நிற பேதவர்ணப் புஷ்பங்கள் மலர்ந்து விரிந்து கோட்டுப் பூக்களெல்லாம் தேர் அலங்கரித்தது போலவும், நீர்ப்பூக்களெல்லாம் சித்திரப்படம் விரித்தது போலவும், நிலப்பூக்களெல்லாம் வர்ணபேதங்களை தனித்தனித் தொழிலாளர்கள் வெவ்வேறாகப் பிரித்துக் குவித்துவைத்தது போலவும், புதர்ப்பூக்களெல்லாம் சித்திரவேலைக்காரர்கள் அமுக்கிய தூறுகோலில் உள்ள மிதமிஞ்சிய ஐவகை வர்ணங்களையும் அங்கங்கு உதறியவைபோலவும் காணப்படுகின்றன. ஆஹா! என்ன நேர்த்தி! என்ன நேர்த்தி!!

சகி- ஆம் அம்மா! இங்குள்ள கிளிகள் உன் சொற்களைக் கேட்டும், அன்னங்கள் உன் நடையை மதித்தும், மயில்கள் உன் சாயலைக் கண்டு வெட்கியும், அங்கங்கு பதுங்கி நாணமுறுகின்றன பார்!

சா- அடி தோழிகளே! நீங்கள் சொல்லுவது முகநட்பு வார்த்தையாகிய உபசாரமேயன்றி வேறில்லை. இருக்கட்டும், நீங்கள் நான்கு திசைகளிலும் பிரிந்துபோய் நாம் தொடுத்தும் புனைந்தும், கட்டியும், சூடியும், எறிந்தும் வியைாடுவதற்குரிய பலவித மலர்களைப் பறித்துக் கொண்டு வாருங்கள். நீங்கள் வருகிற பரியந்தம் நான் இந்தக் காட்டுமலைப்பக்கம் விநோதம் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். நீங்கள் காலதாமதம் செய்யாமல் அதி விரைவாக வந்து சேருங்கள்.

சகி- அப்படியே ஆகட்டுமம்மா. (போகிறார்கள்)

(சத்தியவானும் சுமாலியும் வருகிறார்கள்)

சத்- (பாட்டு தர்க்கம்)

இராகம்-பியாக் தாளம்-ஆதி

துக்டா

மணிபுரம்விட்டோம் பரிவிசை விட்டோம்
வழிபல கடந் திட்டோம்
வானோங்கிவளருமிப்பூங்கா வனமதில் வந்திட்டோம்
நான் சொல்வேன் கேள் (மணி)

சுமாலி- துணிவு பிறந்தே பிறகு தொடர்ந்தே
துயரமோடே வந்தேன் - நான்
சொன்னால் நீ கேட்கமாட்டாய் சோகமதால்நொந்தேன்
மெய் சோருதே? (துணி)

சம்பாஷணை

சத்- மித்திரா! உன் மெய் சோருவதற்குக் காரணமென்ன?

சுமா- எனக்கு மெய் சோருவதற்குக் காரணமென்னவென்றா கேட்கிறாய்?

சத்- ஆம்.

சுமா- கேள்! கேள்!!

சத்- என்னடா கேள்! கேள்!! என்கிறாய்?

சுமா- என் மெய் சோருவதற்குக் காரணந்தானே?

சத்- ஆம்.

சுமா- அதுதானே கேள்! கேள்!! என்கிறேன்.

சத்- நீ சொன்னால்தானே நான் கேட்பேன்.

சுமா- நீ கேட்டால்தானே நான் சொல்லுவேன்.

சத்- நான் தான் கேட்கிறேனே.

சுமா- நான்தான் சொல்கிறேனே.

சத்- நீ எங்கே சொல்லுகிறாய்

சுமா- நீ எங்கே கேட்கிறாய்

சத்- சொன்னாலல்லவோ கேட்கலாம்.

சுமா- கேட்டலல்லவோ சொல்லலாம்.

சத்- கேட்டுத்தான் விட்டேனே சொல்லியழு.

சுமா- என்ன! என்ன!!

சத்- நான் கேட்டுத்தான் விட்டேனே நீ சொல்லு என்கிறேன்

சுமா- நீ கேட்டுவிட்டாயல்லவா.

சத்- ஆம்.

சுமா- ஆனால் சும்மாயிரு.

சத்- நான் கேட்டுவிட்டேன் நீ சொல்ல வேண்டாமா?

சுமா- நீதான் முன்னே கேட்டுவிட்டாயே! இனிநான் சொல்வதில் என்ன பிரயோசனம்? நீ முன்பு கேளாதிருப்பாயானால் நான்

இப்பொழுது உனக்குச் சொல்லித் தெரியப்படுத்தலாம். நீ கேட்டிருக்கும் விஷயத்தை மறுபடியும் நான் சொல்ல ஒருபோதும் இஷ்டமில்லை விட்டுவிடு.

சத்- நான் என்ன விஷயத்தைக் கேட்டுவிட்டேன் என்று நினைத்துக் கொண்டாய்?

சுமா- அதைத்தானே நானுங்கேட்கிறேன். நான் என்ன விஷயத்தைச் சொல்லிவிட்டேனென்று நினைத்துக் கொண்டாய்?

சத்- நான் கேட்ட சமாச்சாரத்தைச் சொல்லவா? நீ சொன்ன சமாச்சாரத்தைச் சொல்லவா?

சுமா- நான் சொன்ன சமாச்சாரத்தைச் சொல்லு.

சத்- மெய் சோருதே, என்ற சமாச்சாரந்தான் நீ சொல்லியது.

சுமா- அதுதானே. மெய் சோருதே என்று நான் பாடினேனே! அதைத்தான் நீ கேட்டுவிட்டாயே. மறுபடியேன் கேட்கிறாய் என்றுதான் நான் உன்னைக் கேட்கிறேன்!

சத்- அதுவல்லடா முட்டாளே! மெய் சோருதே என்று நீ சொல்லியதற்குக் காரணமென்ன? எதற்காக மெய் சோருதென்று கேட்கிறேன்?

சுமா- அப்படி விபரமாகக் கேட்டாலல்லவோ நானும் விபரமாகப் பதில் சொல்லுவேன்.

சத்- சொல்லு.

சுமா- அதுவா, இன்று வேகமாகக் குதிரைச்சவாரி செய்துவந்ததாலே எனக்கு மெய்சோருது.

சத்- உன்னோடு நானுங் குதிரைச்சவாரி செய்து வந்தவன்தானே! எனக்குண்டான வருத்தம்போலேதான் உனக்கும் வருத்த மிருக்கும். அதற்கென்ன? கொஞ்சம் இந்த நந்தவனத்தில் சற்றுநேரந் தாமதித்திருந்து அப்பால் பிரயாணப்படுவோம்.

சுமா- அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். உன் வருத்தத்திலும் என் வருத்தம் அதிகமல்லவோ?

சத்- எதனாலே?

சுமா- குதிரையினாலே!

சத்- நானுங் குதிரையேறித்தானே வந்தேன்.

சுமா- உன் குதிரையைப்போல சாமான்யமுள்ள குதிரையா? என் குதிரை!

சத்- ஆனால் என் குதிரையைப் பார்க்கிலும் விசேஷமான குதிரையா உன் குதிரை!

சுமா- தடையென்ன? ஒரு ஆளா? இரண்டாளா? இருபத்தெட்டு ஆள்கள் அல்லவோ என் குதிரைக்கு வேலையாளாக நியமித்திருக்கிறேன்!

சத்- அப்படியா?

சுமா- அப்படித்தான்!

சத்- அந்த இருபத்தெட்டு பேர்கள் உன் குதிரைக்கு என்ன வேலை செய்கிறார்கள்.

சுமா- அப்படி விபரமாகக் கேட்டாலல்லவோ என் குதிரையினுடைய விசேஷம் விளங்கும்!

சத்- சொல்லு! சொல்லு!!

சுமா- கவனமாகக் கேள். ஒரு கவிராயர் என் குதிரையின் வேகத்தைப் பார்த்து வியப்படைந்து ஒரு வெண்பா பாடி வர்ணித்திருக்கிறார். அதனை முன்பு சொல்லுகிறேன்.

வெண்பா

எட்டுப்பேர் முன்னே இழுக்க இருபதுபேர்
பிட்டத்தைத் தொட்டு நின்று பின் தள்ள-கிட்டும்
புருஷன் சுமாலியது போர்செய் குதிரை
வருஷம்போம் காதம் வழி

சத்- போதும்! போதும்!! உன் குதிரை மிகவும் விசேஷம் பொருந்தியதுதான். இருந்தாலும் நாமிருவரும் இன்று ஆறு நாழிகை நேரத்தில் அறுபது யோசனைதூரங் கடந்து வந்தபடியால் நம் இருவர்களுடைய

(பாட்டு) தொடர்ச்சி

பரியுமிளைத்துத் தரையில்நடக்கப்
பதறுது பதறுதடா
பாராய்நீ இங்குசுமாலி பயணத்தை நிறுத்திடடா
தங்கிப் போ வோம் (பரி)

சுமா- குதிரையைப் பற்றிப் பேசுகிறாயென்
குணத்தை நீ பேசவில்லை-உன்
கூடநான் வந்ததுகுற்றம் கொஞ்சமோ மிகு தொல்லை
சாப் பா டெங்கே

சத்- அடே! இந்த இடத்தில் ஆகாரம் எப்படிக் கிடைக்கும்? நீ இநத இரண்டு குதிரைகளையும் ஓட்டிக்கொண்டு போய்த் தண்ணீர் குடிப்பித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு வா. நாம் தாகசாந்தி செய்து சற்று இளைப்பாறி அப்பால் புறப்பட்டுப் போவோம்.

சுமா- அப்படியே (போகிறான்)

சத்- (நாலாபக்கமுஞ் சுற்றிப்பார்த்து) ஆஹா!

பாட்டு

இராகம்-கமாஸ் தாளம்-ஆதி

பல்லவி

இந்த வனப்பெருமை என்ன சொல்லுவேன்
என்ன சொல்லுவேன் நான் என்ன சொல்லுவேன் (இந்த)

அநுபல்லவி

எந்தவிடத்தினிலும் இதனைப்போல்கிடையாது
என்பதிற் சந்தேக மேது இசைந்திப்போது (இந்த)

சரணம்

வகைவகைமலர்த்தோட்டம் மதுவண்டினங்கள்கோஷ்டம்
மயிலினங்களினாட்டம் மகாசிரேஷ்டம் (இந்த)

சாவி- (சிங்கத்தைக்கண்டு பயந்து)

ஐயோ, நானென்செய்வேன்! இந்தச் சிங்கம் என்னை விடாமற் துரத்திப் பின் தொடர்ந்து கொல்லவருகிறதே! சகிமார்களையும் இன்னும் காணோமே! ஜெகதீசா! என்னைக் காப்பாற்றுவதற்கு யாருமில்லையா ? எங்குபோய் ஒளித்து உயிர்தப்புவேன்? ஆ!ஆ!! பரமேஸ்வரா!

(பாட்டு)

சத்- ஓலமிட்டவோர் மாதின் குரல் கேட்குது
ஓடிவிரைவாகப் பார்க்கவேணுமே நானிப்போது
சிங்கந்தன்னைப் பங்கமடையக் கொல்லுவேன்
சீக்கிரத்திலிந்தமா தாபத்தை நீக்கிச் செல்லுவேன்

(சிங்கத்தைக் கொன்றுவந்து)

இதென்ன ஆச்சரியம்! ஒரு பெண் அழுங்குரலைக் கேட்டதும், என்னை அறியாமலே ஆக்ரோஷங்கொண்டு அவளைக் கொல்லத் துரத்திய ஒரு பெரிய சிங்கத்தைத் தேகபல

மனோதைரிய வலியால், கையிலே ஆயுதமில்லாமலே அதனைக் குத்திக்கொன்றுவிட்டேன். அச்செய்கையாலே களைமேலிட்டு வருகிறது. நல்லது இந்தவிடத்தில் கொஞ்சம் சயனித்துக் களைதெளிந்து எழுவோம். அதற்குள் சுமாலியும் வருவான். அப்பால் பிரயாணப்பட்டுப் போகலாம்.

(சயனித்துக்கொள்ளுகிறான்)

(தனிமொழி)

சா- ஆஹா! நான் கையெடுத்த தெய்வம் என்னைக் காப்பாற்றியது என்றே சொல்ல வேண்டும். இல்லையேல் நான் அழுங்குரலைக் கேட்டதும் முன்பின் ஆலோசியாமல் கையில் ஆயுதமில்லாத போது, இந்த அரசிளங்குமரன் ஓடிவந்து சிங்கத்தைக் கொன்று என்னுயிரை ரட்சித்திருப்பாரா? ஐயோ, பாவம்! இவர் களைப்பு மேலிட்டுக் கீழே விழுந்துவிட்டார்போலும். நல்லது, நாம் இவர் அருகில் போய் களை தெளிவதற்கு வேண்டிய உபசார கைங் கரியங்களைச் செய்வோம். இல்லாதுபோனால் நமக்குத் தெய்வத்துணைப் பலன் இனி ஒருக்காலுங் கிடைக்காது. நன்றி மறந்தாருக்குத் தெய்வ சகாயங் கிடைப்பது எங்கேனும் உண்டா? (சத்தியவான் அருகில்போய்ப் பார்த்து) ஆ! ஆ!! இவர் என்ன அழகோடு கூடி விளங்குகிறார். நித்திரையிலிருக்கும் பொழுதே இவ்வளவு பிரகாசமாக இவரது முகம் காந்தியைக் கொடுக்குமானால், களைநீங்கி எழுந்து உலவிப்புன்னகை புரியும்போது எவ்வளவு சுந்தரமாக விருக்கும். காணக்காண என்னை அறியாமலே எனக்குப் பரவசமாகின்றது, இவர்

பத்தியம்

இராகம்-ஆனந்தபைரவி

அண்டர் தொழு மாரனோ தண்டுளப வண்ணலோ
அன்புரதி என்று மகி ழின்பமதனோ
கண்டுபணி வார்வினை துண்டுபட மோதிய
கந்தனெனு மெங்களுமை தந்தசுதனோ
மண்டல மிலங்க வரு கின்ற மதியோ
மங்கையர்ந லங்கவர வந்த விதியோ
கொண்டபுக ழெங்குமுற நின்ற பதியோ
கோகனகன் செய்தனுப்பி வைத்த சதியோ

தொடர்ச்சி (பாட்டு) தாளம்-ஏகம்

பார்க்க இந்தவனம் நல்ல
நந்தவனம் எனக்குச்
சொந்தவனம் வந்த
இவனும் யௌவனம் எனக்குங் கவனம் (இந்த)

வ-ம். இவன் இந்திரனாக இருப்பானோ? இல்லை! இல்லை!! அவனுக்குத்தேகமெங்கும் ஆயிரங் கண்களுண்டு. புருஷோத்த மனாகிய துளபத்தாமனாக இருப்பானோ? இல்லை. அவன் பஞ்சாயுதந் தாங்கி மார்பில் மலர் மடந்தையை ஒதுபோதும் விலகாமல் அணிந்து கொண்டிருப்பான். ஓகோ! ஒருவேளை மன்மதன்தானோ? சேச்சே! நமக்கென்ன புத்திமயங்கிப் போய்விட்டது. மன்மதனுக்கு உருவமேது? ஒருவேளை தன்னைப் பணிவார்களுக்கு நேர்ந்த பகைகளைக் களைந்து சுகத்தை அளிக்கவல்ல எங்களது குலதெய்வமாகிய பர்வதராஜ குமாரியினது அருமைக் குமாரனாகிய ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளே என்னைக் காப்பாற்றும் பொருட்டு இங்கு வந்து சிங்கத்தைக் கொன்று திருக்காட்சி கொடுக்காமல் நித்திரைகாட்சி தருகின்றாரோ? அப்படியானால் வேலாயுதத்தை ஒருக்காலும் கைவிடமாட்டாரே, வேறு யாராயிருக்கலாம்?

பாட்டு

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி

சித்ரரூப சிங்காரன் செந்தமிழ் வாணவர்
தேடிப்புகழ் ஒய்யாரன் (சித்)

அநுபல்லவி

வஸ்திர பூஷண மணமலியாரன்
வசன விநயசுக மருவு கெம்பீரன் (சித்)

சரணம்

அந்தரமேவிய இந்திரனெனினுடல்
அண்டியவடுவுண்டு பாற்கடற்பள்ளி
நந்தனெனச் சொலி லைந்து விதப்படை
நன்கு தெரிவதுண்டு கந்தனாமெனில்
சுந்தரமிஞ்சி விளங்கறு முகமொடு
துண்டிடு மயிலுண்டு மன்மதனெனில்

இந்தெனுமொருகுடை வந்தெனு மொருரத
மிங்கெதிருதலுண்டு இவர்களில்லை
சந்தனமணமது தழுவுமுலாசன்
சங்கீதசாகித்யந் தனிலும்விஸ்வாசன்
செந்தமிழ்ப் பிரசங்கஞ் செயும்வித்வர்நேசன்
திவ்யமங்கள இன்பந் திகழுஞ்சந்தோஷன் (சித்)

வ-ம்- நாமென்ன வீண்காலம் போக்கி உளறிக்கொண்டு நிற்கின்றோம்! களைப்படைந்தவருக்குச் சைத்தியோபசாரஞ் செய்ய வேண்டாமா? செய்ய வேண்டும். ஒரு வாலிப புருஷனிடத்தில் முன் பின் பழக்கமில்லாத மங்கை எப்படி அணுகுவது? அம்மாடி எனக்கு வெட்கமாக இருக்கிறது! (நாணங்கொள்ளுதல்) ஆனால், எப்படி நமது எண்ணம் நிறைவேறும்? சும்மா அருகில் சென்று எழுப்புவோம். (சற்று அருகில் நெருங்கி) நமது சகிமார்கள் கண்டாலுங்கூட இப்பொழுது பரிகாசம் செய்வார்களே! அன்னியர் கண்டால் எளிதில் விடுவார்களா? பெரும்பழியல்லவோ நமது தலையிலேசூட்டிக் குலநிந்தை பேசித் தூற்றுவார்கள். இதற்கென்ன செய்யலாம் (ஆலோசித்தல்) சும்மாதான் எழுப்புவோம். நன்றிசெய்தவருக்கு நன்றிசெய்யாத பழியைப் பார்க்கிலும், அதாவது தெய்வசம்மதமான காரியத்தைச் செய்யாது அகலுவதைப் பார்க்கிலும், ஊரார் சொல்லும் பழிச்சொல் அவ்வளவு பிரமாதமில்லை. நல்லது, எழுப்பி உபசரிப்போம். இந்தாங்கோ, உங்களைத்தானே!

(ஒருபக்கம் விலகி மறைவில் நிற்றல்)

(சத்-எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்து)

சுமாலி! சுமாலி! அடே சுமாலி! என்னடா பரிகாசமா செய்கிறாய்? அருகிலே வா, (எழுந்து) அவனையல்லாமல் இந்தவிடத்தில் வேறு யார் என்னை எழுப்பக்கூடும்?

சா- (தலைமுக்காடிட்டு வெளிவந்து) யார் தங்களை எழுப்பினதென்றா கேட்கிறீர்கள்?

சத்- (திடுக்கிட்டு) ஆ! ஆ!! இதென்ன ஜோதி! வானிலிருந்து மின்னல் பூமியில் நழுவிவிழுந்து விட்டதா? என் நேத்திரங்களுக்கு இந்த ஒளியைப் பார்க்கக்கூடாமல் கூச்சமுண்டாகிறதே! ஓகோ இது ஒரு பெண் உருவந்தானா? அப்படியானால் இந்திராணியா, ரதியா, கந்தர்வ ஸ்திரீகளில் ஒருத்தியா?

(தெள்ளுதமிழுக்குதவு சீலன்-என்ற காவடிச்சிந்து மெட்டு)*

இராகம்-செஞ்சுருட்டி, தாளம் - ஆதி

கண்ணிகள்

அந்தர மதிபோல்முகங் காணும்- நல்ல
அஞ்சுகமொழியைக்கேட்டு நாணும்-கொடும்
ஆலமஞ்ச ளானகண்கள் நாடுகின்ற வேளைமனம்
கோணும் மையல் தோணும்

வ-ம். இம்மாது லோகமோகன வசியம் செய்யவல்ல மனோகரசுந்தரி. மன்மதன் அதிகாரம் இவள் இல்லையானாலில்லை. இவளை நேரில் கண்டால் இந்திரன் சசியை வெறுத்துவிடுவான். அல்லாமலும் மதி நாணும் முகமும், கிளிநாணும் மொழியும், விடம்நாணும் விழியும் பார்த்தோரைப் பரவசமாக்கும். அம்மட்டோ என்றால்.

(பாட்டு)

கந்தரங் கமுகுமலர் செங்கை-இவள்
காமனா ரதிக்கிளைய தங்கை-இரு
காதுவள்ளை போலுமுல்லை யானபல்லை ஓதுமெல்லை
சங்கை கொல்லு மங்கை

வ-ம்- அலங்கார பூஷணம் ஆடம்பர விக்கிரகம். பத்தரைமாற்றுப் பசும்பொன்னால் உருக்கி வார்த்தமைத்தெடுத்திட்ட எழிலுள்ள சித்திரப்பதுமை. திரிலோக விஜயனான மாரனை மகிழ்விக்கும் இரதிமாதுக்கு இளையவளாகவே இருக்க வேண்டும். கமுகு போன்ற கழுத்தும், வள்ளை போன்ற காதும், முல்லை போன்ற தந்த வரிசையும் காணக்காணக் களிப்பை உண்டாக்குகிறது. மேலும்,

(பாட்டு)

அத்தர்பணி நீர்புனுகு வாசம் - இவள்
அங்கமெங்கும் மங்களவி லாசம் - பார்க்க
ஆகமிஞ்சி னாலுமங்கை யாள் திரண்ட காலம்ரெண்டு
மாசம் என்னுத் தேசம்

வ-ம். மின்னலின் மிக்க இன்னெழில் வாய்ந்த கன்னிகை அன்னமும் வெட்கும் நன்னடைபெற்ற ஆரணங்கு. சுவர்க்க மத்திய பாதாள லோகங்களில் இப்பேர்ப்பட்ட பெண் கிடைப்பதரிது. இவ்வளவு

* அண்ணாமலை ரெட்டியார் பாடல்

சௌந்தரியமுள்ள மாதுஇருப்பதை நான் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதும் கிடையாது, அபூர்வ அலங்கார உற்பத்தி யென்றே நினைக்க இடமுண்டாகிறது. மதுவுண்டால் மகிழ்ச்சி தரும் காமம் இனிதென்பது நான் இன்றுதான் அறிந்தேன். நான்மாத்திரம் இவளைக் கண்டு மயங்கிவிட்டேனோ என்றால்,

(பாட்டு)

சித்தர்யோக மாதவருங் கண்டு - தினம்
செய்குவா ரிவளடிக்கே தொண்டு - உயர்
தேவரம்பை போலுமிந்த வேளைவந்த மாதுகொங்கை
செண்டு நலம் உண்டு

வ-ம். மூவாசை ஒழித்த முதியோரும் நேரில் கண்டால் இந்த ஸ்திரீ ஆசை மட்டும் ஒளியார். அம்மட்டோவென்றால் அடித் தொண்டுச் செய்வார். நல்லது; பன்னிப்பன்னி பார்த்து நிற்பதேன். அருகில் சென்று யாராயிருக்கலாம் என்று விசாரிப்போம்.

சா- ஏன் இன்னும் ஆலோசிக்கின்றீர்? தம்மை எழுப்பியது நான்தான் என்று சொல்லுகிறேன்!

சத்- என்னை எழுப்பியது நீயா?

சா- ஆம்.

(பாட்டு தர்க்கம்)

இராகம்-மால்கோஸ்* தாளம்-ஏகம்

கண்ணிகள்

சத்- ஏனோ என்னை எழுப்ப லானாய்மட மானே
எனக்கதனை யுரைக்கவேணும் இசைந்து கேட்பே னானே

சா- சிங்கத்தால் நானடைந்த துன்பந்தீர்த்த தாலே
செய்தநன்றி எண்ணிவந்தேன் தேர்ந்த அன்பி னாலே

சத்- எந்தவூ ரோஇருப்ப தேதுபேர் யார் தந்தை
இன்றெனக்கு நீ யுரைத்தால் இன்பங்கொள்ளுஞ் சிந்தை

சா- அழகிய மத்ராபுரி அஸ்வபதி புத்ரி
அக்கம்பக்கத் தோர்களென்னை அழைக்கும்பேர்சா வித்ரி

சத்- இன்னுமண மானதோ இல்லையோநீ ஓது
இச்சைகொண்டேன் கேட்பதற்கு லஜ்ஜையுமா காது

சா- சொல்ல வெட்க மிஞ்சுதே இன்னுமண மில்லை
சொந்தமான தந்தை தாயார் எண்ணிடவு மில்லை

* மால்கோஸ் - இந்தோளம்

சத்- தையலுன் இன்பமொழி தந்ததுசந் தோஷம்
தாரணியில் ராஜமைந்தர் யாரின்மீது நேசம்

சா- சாலவபுரிதுயுமத் சேனர்மைந்த ருண்டு
சத்யவானென் பார்மேலிச்சை சார்ந்தேன் மையல் கொண்டு

(பாட்டு தர்க்கம்)

போய்வருவேன் சபையோரே-என்ற மெட்டு

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

துக்டா

சத்- ஆஆசத்ய வானென்றுசொல்வோ னான்றான் மாதே

சா- அப்படியா அப்படியா ஆனந்த மிப்போதே

சத்- ஆனந்தத்துக் கேதுகுறை ஆசை தாங்காதே

சா- அன்புகொண்ட பேர்களுக்கு இன்பம் நீங்காதே

சத்- அற்புதமே மிக்க ஒரு முத்தந்தா யிங்கே

சா- அன்பாய்த் தருவேன் யான்

சத்- நின்பால் வருவேன் யான்

சா- ஆனால் போவோம்

(பாட்டு தர்க்கம்)

செந்தின்மாநகர்-என்ற மெட்டு*

சத்- பெண்ணே!

தந்தையா ரென்னை வந்துசேர மொழி
சாற்றியனுப்பினார் மானே - சென்று
பார்த்துவர வெண்ணி னேனே - இங்கு
தங்கினால் வரு கின்றபாதக
நிந்தையானது பங்கமேதரும் (தந்)

வ-ம். சசி! ஏதோ அவசரமாக எனது பிதா என்னை அழைத்ததாக என் தோழன் சுமாலி வந்து சொன்னான். உடனே மணிபுரத்திலுள்ள என் மாமனாரிடம் விடைபெற்றுக் கொண்டு மித்திரனும் நானும் புறப்பட்டு வந்தோம். வழிதூரங்கடந்த சிரமத்தால் குதிரைகளை ஆசுவாசப்படுத்த எனது மித்திரன் போயிருக்கிறான். அதற்குள் இங்கு நடந்த விஷயங்களெல்லாம் நீ தெரிந்து கொண்டதே ஆகையால் நீ எனக்கு விடைகொடு. நான்போய் என் தந்தையைக் கண்டு மீண்டு உன்னிடம் வந்து சேருகிறேன்.

---

* நாடகம்: கோவலன் சரித்திரம்

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

(பாட்டு)

சா- உம்மை நான்பிரிந் தாலுயிர் வாழுவ
துத்தம மேகிடை யாது - இது
சத்தியமாகும டாது - இன்று
ஓதுவாசக மேதுபோவது
ஆதலாலக லாதுநீரும் (உம்)

வ-ம். பிராணேசா! நீர் சொல்லுமொழி உமக்கே தகுதியாக விருக்கின்றதா? உம்மை அரைக்கணமேனும் பிரிந்து என் ஆவி நிலை நிற்குமா? ஒருக்காலும் உம்மை நான் பிரிந்திருக்க என் மனம் இடங்கொடாது. ஆகையால் நீர் இங்கே என்னை விட்டகலாமல் உடனிருக்கப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

(பாட்டு)

சத். சொந்தமாகிய தந்தைசொல் லைமிக்க
மந்திர மாவதொன் றில்லை - என்று
தந்தபெ ரியோர்கள் சொல்லை - இங்கு
தொட்டிடாதினி விட்டுவாழ்வது
கெட்டபாதகம் அட்டியேன்விடு (சொ)

வ-ம். அன்பிற்கிசைந்த மாதரசே! தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற முதுமொழியை நீ கேட்டதில்லையா? எதற்காக வீண்வாது செய்கிறாய்? நான் அங்குபோய்த் தங்கிவிடுவேனென்று சொப்பனத்திலும் நினையாதே. பிதாவின் கட்டளைப்படி நடக்காதுபோனால் மகத்தான பாபஞ் சம்பவிக்கும். நான் பாதகனாக வாழ்வது உனக்குச் சம்மதமாகுமா? ஆகாதல்லவா? ஆகையினாலே தடைசெய்யாமல் விடைகொடு.

(பாட்டு)

சா. சென்றுநீ ரென்னை யங்கும றந்திடில்
சேயிழை நான் வாழு வேனோ-உயிர்
மாயுமல் லால்பிழைப் பேனோ-இங்கு
சேரநாடிய வேளையால்வரு
சோகமாமித லாதுவேறெது (செ)

வ-ம். உயிருக்கு உயிராகிய உத்தமநாதா! தாம் அங்கு போன உடனே தாய்தந்தையாராலோ அல்லது வேறெந்த முக்கிய காரணத்தாலோ என்னை மறந்து போகும் பட்சத்தில் நான் உயிர்வாழ்வது கூடுமா? கூடாதல்லவா? இறந்து போவது உமக்குச் சம்மதமாகில் நீர் அங்குபோம். இல்லையேல் இங்கு என்னைக் கூடி இரும். இவ்வளவுதான் என்னாலே சொல்லமுடியும். அப்பால் தமதிஷ்டம்.

விருத்தம்

சத். தத்தைபோல் பேசும்பெண்ணே தந்தைதா யரைநான்கண்டு
சித்தமு மகிழ்ச்சியாகிச் செய்பணி யெல்லாஞ்செய்து
நத்திய விடையுங்கொண்டு நானுன்னைக் காண்பதற்குச்
சத்தியம் வந்துசேர்வேன் தடையின்றி விடை யீவாயே

வ-ம். பஞ்சரக் கிள்ளைபோலக் கொஞ்சிமொழியுங் கோமளமே! நீ கொஞ்சமேனுஞ் சந்தேகங்கொள்ளாதே. நான் அதி சீக்கிரம் அங்குபோய் என் தாய்தந்தையரைக் கண்டு பணிந்து அவர்களிடம் விடைபெற்று உன்னைக் காண இங்கு வந்து சேருகிறேன். இது சத்தியம் விடை கொடுத்தனுப்பு.

விருத்தம்

சா. மந்தரம் நிகர்த்ததோளா மனமகிழ் தருமணாளா
சிந்தையிற் சலனமின்றிச் சீக்கிர மங்குசென்று
தந்தைதாய் பாதம்போற்றித்தையலென்னிடத்தைத் தேடி
வந்திடு மில்லாலிங்கு மரணம்நா னடைகு வேனே

வ-ம். மகாமேருகிரியை நிகர்த்த புயங்களுடைய புரவலா! நான் வேறு சொல்வதற்கில்லை. அங்குபோய் நீர் சீக்கிரம் என்னை வந்து காணாது போனால் பின்பு என்னுடலை நீர் காணமாட்டீர். இது ஒன்றுதான் என்னால் உமக்குச் சொல்லக்கூடியது. இதனை ஞாபகத்தில் வைத்துநீர் போய்வரலாம்.

சத். சகி! கவலைப்படாதே, போய் வருகிறேன்.

(பாட்டு தர்க்கம்)

வாருமையா யிதுவே - என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி

சா துக்டா

நா. மன்னாஎன் னாசைம நந்திடாதீர் - எண்ணம்
மாறிநீ ரங்கேஇ ருந்திடாதீர்

சத். உன்னாசை நானோம மறப்பதில்லை
உண்மையாய் நம்பென் உறுதிச் சொல்லை
ரூபசித்திர மாமரக்குயி லேஉனக்கொரு வாசகத்தினை
நானுரைத்திட நாடிநிற்கிறதால்
அன்பினால்
இன்பமாய்
இங்குவா

சா. அப்படியே இதோ கிட்டவாறேன்

சத். சித்தமானேன் சமீ பத்தில் நீவா

சா. வந்தேனானோடி
முன்பாக நாடி
அன்பான சேதி
என்பால் நீரோதும்

சத். கண்டாசை மீறி
யுண்டான மோகம்
இங்கே தீராமல்
எங்கே நான் போவேன்

சா. ஆனாலேது தங்களுக்கு
வேணுமோது மிங்கெனக்கு

சத். பண்பான முத்தம்
ஒன்றே என் சித்தம்
தந்தால் வருத்தம்
அண்டாது நித்தம்

சா. இன்றாவி தத்தம்
என்றே அடுத்தேன்
அன்பான முத்தம்
இங்கே கொடுத்தேன்

சத். ஆ ஆ இந்த முத்தம்
ஆக்கியதே பித்தம்

சா. (மன்னா என்னாசை)

(சாவித்திரி மறைகிறாள். சுமாலி வருகிறான்)

பாட்டு தர்க்கம்)

வேட்டையிலே விருப்பங்கொண்டேன்-என்ற மெட்டு

துக்டா

சுமா. தோழா-எங்கு நீ சென்று மிருந்தனையோ
என்னைக் காணாமல் வருந்தினையோ (எங்)

வ.ம். மித்திரா! என்னைக் குதிரைக்குத் தண்ணீர்காட்டி ஆசுவாசப் படுத்தச் சொல்லிவிட்டு இதுவரை எங்கே போயிருந்தாய்? நான் உன்னைத்தேடி இந்த நந்தவன முழுதும் சுற்றித்திரிந்தேன். நானுன்னைத் தேடிச் சுற்றித்திரிந்ததுபோல் நீயுமென்னைத்

தேடிச் சுற்றித் திரிந்தாயோ! ஐயோ பாவம்! எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு கஷ்டம்!! என்னாலே உமக்கு ஒருநாளும் சுகமே கிடையாது. பலநாளுந் துன்பந்தான்.

சத். அப்படி ஒன்றுங் கஷ்டமில்லை, என்னை இதுநேரம் வரை எங்கே இருந்தாயென்றா கேட்கிறாய்?

சுமா. ஆம்.

(பாட்டு)

சத். காட்டில்-சிங்க்மொன்று வேட்டையாடி வந்தேன்
பின்பு - தேடி உன்னைக்கண்டு இங்கடைந்தேன் (சிங்)

சுமா. ஆ ஆ ஆண்சிங்கமா அது பெண்சிங்கமா
அற்புத மாதல்ல தசிங்கமா (ஆண்)

சத். எப்போதும் உனக்கு வேடிக்கைதான்
இந்தக்கேலி வேண்ட மென்றே நான் (எப்)

வ.ம். எப்போது பார்த்தாலும் உனக்குக் கேலி, பரிகாசம் நையாண்டிப் பேச்சுகள். நான் சிங்கத்தோடு போராடின சேதியைச் சொன்னால் அது ஆண் சிங்கமா அல்லது பெண் சிங்கமா என்றா கேட்கிறது? வேட்டையின் வீராவேசத்தில் ஆண் பெண் என்ற தராதரங்களை யார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

சுமா. ஆனால் சிங்கத்தோடு கடுத்த போராடி யிருக்கிறாய் போலிருக்கிறது.

(பாட்டு)

நீ வென்றையா சிங்கம் தான் வென்றதா
பார்க்க-நேர்த்தியாகத் தா னிருக்கின்றதா (நீ

வம். ஆனால் சிங்கத்தோடு போராடினாயே!

சத். நாய் நானல்ல.

சுமா. நாய் நானல்லவென்று நீ சொன்னால் என்னைத்தான் நாயென்கிறாயாக்கும்! நானுன்னை நாய் என்று வாய் கூசாமல் சொல்லுவேனா? போராடினாயே என்றேன்.

சத். போராடி நாயா? போராடாத நாயா?

சுமா. அருத்தம் அப்படியும் ஒடுகிறதோ. இல்லை அந்தச் சிங்கத்தோடு போராடும் வேளையில் அந்த சிங்கந்தான் உன்னை வென்றதா, நீதான் சிங்கத்தை வென்றாயா என்று நானுன்னைக் கேட்கிறேன்? அது எதற்கென்றால், நான் குதிரைக்குத் தண்ணீர் காட்டப் போன இடத்தில் இரண்டு

சிங்கங்கள் சண்டைபோட்டுக் கொண்டிருந்தன. ஒன்று ஆண் சிங்கம் ஒன்று பெண் சிங்கம். என்ன சண்டை! என்ன சண்டை!! அதுபோல இருக்குமோ என்றுதான் நானுன்னைக் கேட்க ஆரம்பஞ்செய்தேன்.

சத். அடே தண்ணீர்த்துறையில் இரண்டு சிங்கங்கள் சண்டை போடுகிதைப் பார்த்தனையா?

சுமா. ஆம் பார்த்தேன். அந்தச் சிங்கங்கள் சாமானியமான சிங்கங்களல்ல, ஆண்சிங்கமும் அப்படித்தான், பெண்சிங்கமும் அப்படித்தான். எத்தனை பாட்டுகள்! எத்தனை சம்பாஷணைகள்! எத்தனை முத்தங்கள்! ஒன்றுக்கொன்று போட்டி போட்டு மதன போராட்டமாடின.

சத். அடே! எங்கேயாவது சிங்கம் பேசுமா? பாடுமா?

சுமா. நீ பார்த்ததும் கேட்டும் ஆலோசித்திருந்தால் தெரியும். அந்த சிங்கங்கள் பாடிய பாட்டுக்களில் ஒன்றிரண்டு பாட்டுக்கள் என் ஞாபகத்திலிருக்கின்றன. கேள், சொல்லுகிறேன்

சத். அப்படியானால் சொல்லு கேட்கிறேன்

சுமா. முதல் பெண்சிங்கம்.

(பாட்டு)

துக்டா

மன்னா என்னாசை மறந்திடாதீர் - எண்ணம்
மாறிநீ ரங்கே இருந்திடாதீர்

உடனே ஆண் சிங்கம்,

உன்னாசை நானோ மறப்பதில்லை-நீ
உண்மையாய் நம்பென் உறுதிச் சொல்லை
என்றது அப்புறம்,

சத். அடே நீ கண்ட சிங்கங்கள் எனக்கு வெளியாய்விட்டது!

(பாட்டு)

(வேட்டையிலே முன் தொடர்ச்சி)

அந்த விபரங்கேள் சொல்லுகிறேன்
ஆனாலும் கொஞ்சம் நான் யோசிக்கிறேன் (அந்)

(இருவரும் போகிறார்கள்)

காட்சி - 5

நேரம் - பிற்பகல்

இடம் - காடு

பாத்திரங்கள் - துயுமத்சேனன் பத்மாட்சி முதலியோர்

தந்தையின்று தான்பிரிந்தார்-என்ற மெட்டு

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

கண்ணிகள்

கண்ணிழந்து வாடலானோம் காட்டின்வழி தேடலானோம்
பண்ணிஎண்ணி நோகலானோம் ஈசன் செயலேதோகாணோம்
நாடிழந்தோம் நகரிழந்தோம் நமது பாவத்தால்மெலிந்தோம்
ஈடில்லாத சுதனிருந்தும் ஏழைபோல இங்கு வந்தோம்
புத்திரனைக் கூட்டிவரப் போனசுமாலி வரவுங் காணோம்
இத்தினமார்க்கத்தினிலே என்ன நேர்ந்தவிபத்தோ காணோம்

ஐயோ! கண்கள் நோகின்றனவே! சுமாலி மைந்தனிடம் சென்றானோ! அல்லது வழியிலே ஆபத்துக்குட்பட்டு வருந்துகின்றானோ! எங்களுக்கு நேர்ந்த கெதியைச் சத்தியவான் எப்படியறிவான்? ஒருவேளை ராச்சியத்திற்குள் நாங்கள் இருக்கிறோமென்று சுமாலியும் மைந்தனும் ஊருக்குள் பிரவேசித்தார்களோ! துஷ்டகஜகேது அவர்களைப் பிடித்துச் சிறையிட்டானோ! வேறு எவ்விதக் கெடுதிக்குள்ளாக்கினானோ தெரியவில்லையே! ஜெகதீசா! எல்லாம் உனது திருவியைாடலோ! கண்களை இழந்த நாங்கள் இனி எவ்வாறு ஜீவிப்போம்!

(சுமாலியும் சத்தியாவனும் வருகிறார்கள்)

சுமா. ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! மித்திரா! இதோ உன் தாய் தந்தையர் இவர்களிங்கு வரக் காரணம் யாது?

சத். ஆ! இதென்ன பரிதாபம்! என் தாய் தந்தையருக்கு இவ்வித கஷ்டம் எங்கிருந்து வந்தது? எந்தத் துஷ்டர்கள் இந்தக்கொடிய பாதகத்துக்கு ஆளாகி நின்றார்கள்? இனி என்ன செய்வேன் அந்தோ! என் மனம் ஒரு நிலைகொள்ளவில்லையே! பற்பல மண்டலீகர்கள் வந்து பணியும் இவர்கள் பாதாம்புயங்கள் வருந்த காட்டில் எவ்விதம் நடந்து வந்தார்கள்? தெய்வம் சகிக்குமா? பூமி பொறுக்குமா? ஆ பிதா! ஹே! மாதா! நான் கர்ம சண்டாளன். பெற்றோர்களுக்கு உதவியில்லாத வீணன், இருக்கட்டும், எளிதில் விடுவதில்லை. நானில்லாத சமயம் பார்த்துத் தங்களுக்கு இவ்வித கஷடத்துக்குள்ளாக்கிய மட்டிப்பிரஷ்டன் யார்?

* நாடகம்: ஞானசௌந்தரி

(பாட்டு)

இராகம்-அடாணா-தாளம்-ஆதி

கண்ணி

இப்படிச்செய்திட்ட துஷ்டன்
எப்படிப்பட்டவன் கிட்டிக்
கைப்பிடியாகப் பிடித்தடித்திடித்தெதிர்த் திமுத்துக்
குப்புற விழுத்தி யுதைப்பேன்-உதைத்
தப்புறம் உடலைச் சிதைப்பேன்
தப்பிதமில்லாத உம்மைப் பத்தினியினோடு கண்ணைக்
குத்திக்காட்டில் விட்டவனை
வெட்டிக் கொல்லாமற் போவேனோ (இப்)
எறிபடை குத்துப்படை விடுபடை வெட்டுப்படை
எய்படை யெல்லாம் பயின்றவன்-ஒரு
எதிரி இதுவரையும் வரவில்லையென்றுநினைத்
தெதிர்பார்த்துக் கொண்டு நின்றவன்
மரியரதகஜ துரகபதாதிகளணி
வகுக்கக் கற்றிருக்கின்றவன்-உமது
மைந்தனென இந்தச்சண்டா ளனைச்சொல்லப் பூமியிலே
வந்து பிறந்திருக்கின்றவன்
சிறியவய துள்ளவன் செய்தென்ன வென்றுபாவி
தீமையை உமக்குச் செய்தான் சீக்கிரத்தில் கொல்வேனாவி(இப்)

மாதா பிதாக்களே! தாய்தந்தை பேரில் பட்சமில்லாதவன் எவனோ அவன் செல்வமழிந்து நடுக்கமுற்றுவாழ்வான். நேத்திரங் கெட்டுப்போவான் என நீதி சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. மேலும் புத்திரர்களைப் பெற்றுக்கொள்வதெதற்கு? தனது சிரம துக்க தாபங் களைப் போக்கிக் கொள்ளவன்றோ? அவ்வகையில் என்னைப் புத்திரனாகப் பெற்றும் ஆபத்துக்குதவாப் பிள்ளையாகினேன். நல்லது, இக்கொடிய காரியத்தைச் செய்தவன் இன்னானென்று எனக்குத் தெரிவியுங்கள். இப்பொழுதே எனது கட்கத்தினால் அவனுடலைக் கண்டதுண்டமாக வெட்டி அவனுடைய தேக மாமிசங்களை நாய் நரி முதலிய தரை மிருகங்களுக்கும், காக்கை, கழுகு முதலிய ஆகாய பட்சிகளுக்கும் இரையாக்கி விடுகிறேன். சீக்கிரம் தெரியப்படுத்துங்கள்.

(பாட்டு

இராகம்-கீர்வாணி-தாளம்-அடதாளம்

கண்ணி

து.ப. கஜகேது எங்களின் கண்களைக் கெடுத்தான்
கட்டிப்பிடித்துவந்து காட்டிலே விடுத்தான்
நிசிவேளை படைகூட்டி நகருக்குள்ளே புகுந்து
நீதியெண்ணாம லிந்தவிதஞ் செய்தான் துணிந்து (கஜ)

உனக்கு ஆளனுப்பினோம் நீ வருமுன்னே
உற்ற கெடுதிசெய்தான் என்செய்வோம் பின்னே
மனக்கவலை கொண்டிங்கே வாடுவதாலே
மகனே விதிவிடுமோ வருத்து மென்மேலே (கஜ)

வத்ஸா கண்மணி! நீ ராஜ்யத்தில் இல்லாத தருணத்தைக் கவனித்து பொல்லாக் கொடியனாகிய கஜகேது, நடுநிசிவேளை படை கூட்டிவந்து நமது கோட்டையை முற்றுகையிட்டுத் தனது கொடியை நாட்டியதுமல்லாமல், எங்களிருவரையுங் கைப்பிடியாகப் பிடித்து, மன்றாடியும் சற்றாவது இரக்கங்கொள்ளாமல், நிரபராதியாகிய எங்கள் இருவர்களின் கண்களைக் குத்திக்கெடுத்து இந்தக்காட்டில் பரிதவித்துப் புலம்பி வழி தெரியாமல் அவதியடையவிடுத்தான். அந்தோ! இனி நாங்கள் எவ்வித சௌக்கியத்தையடையப் போகிறோம்.

(சத்-பாட்டு)

(வில்லைவளைத்தம்பெய்திடுவேன்-என்ற மெட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

கண்ணி

காதகனாகிய கஜகேது
காலநீதியை யறியாது
வாதனையைச் செய்தா னிப்போது
வாழுவதங்கே இனியேது-இந்த
வாளுக்கவன் தலை தப்பாது
கோட்டையிலே கொடி போடட்டும்-கண்
குத்திடலாமோ ஆகட்டும்
கூட்டமோடெபோ ராடட்டும்-அவன்
கோத்திரமெல்லாஞ் சாகட்டும்-என்
கோவந்தீரா திம்மட்டும்

அன்னை தந்தையர்களே! கொடிய துஷ்டனாகிய கஜகேது தகாத காரியத்தைச் செய்திருப்பதால் அவனை எளிதில்விட மனமில்லை.

வலியவருக்கே ராச்சிய செல்வங் கிடைப்பதாம் ஆயினும், மனுமுறை சட்டமும் ஒருவித நீதியை அனுசரித்திருக்கிறது. அதாவது ஒரு அரசனை மற்றொரு அரசன் எதிரிட விரும்பினால் முன் தூது போக்குவதும் இல்லையேல் தன் பலத்தைக் கொண்டு அறிவிக்கும் பொருட்டு அன்னிய தேசப் பசுக்களை மடக்கிக்கொண்டு போய்ப் பாதுகாப்பதும் உத்தம நீதியாம். இதை அனுசரிக்காமல், அதர்ம யுத்தத்துக்குடன்பட்டுச் சண்டைக்குரிய நேரம் எதிர்பார்க்கும் பலாஷ்டியர் அன்னிய பிரதேசம் போயிருக்கும் இவ்வகைகளை உணர்ந்து கபடமாகக் கோட்டையை முற்றுகையிட்டு கொடியையும் ஏற்றிவிட்டான். அல்லாமலும் நிரபராதி களாகிய தங்களுடைய இருநேத்திரங்களையும் கெடுத்து இந்தக்காட்டில் ஓட்டியிருக்கிறான். இப்பேர்ப்பட்ட கொடிய வஞ்சனை என்ன செய் தாலும் தோஷமில்லை. எண்சாண் உடம்பிற்குச் சிரசேபிரதானம். அவற்றில் கண்ணில் சிறந்த உறுப்பில்லை, அப்படி மேன்மையுற்ற விழி இழந்தாலென்ன? பிராணன் இழந்தாலென்ன? இவ்விரண்டும் சமந்தான். இவ்வகையினாலே கஜகேது கொலைகாரனென்பதில் ஆட்சேபனை யில்லை. இதே தருணம் இங்கிருந்து புறப்பட்டுப்போய் எனது உறை கழிந்த கட்கத்தினாலே அவனுடலைச் சின்னாபின்னமாக்கிச் சித்திரவதை செய்து, அவனால் ஸ்தம்பத்தில் ஏற்றிய துவஜத்தைப் புவியில்விழ அறுத்துத்தள்ளி, நமது கொடியை நாட்டி, ராச்சியபார செல்வத்தை மீண்டும் நமக்கே சுவாதீனமாக்கிவிடுகிறேன். மனமங்கள மாக விடை கொடுத்தனுப்புங்கள். பகவானுடைய கிருபாகடாட்ச வீட்சண்யத்தினா லும், தங்களுடைய ஆசீர்வாத பலத்தாலும், எனது புஜபல பராக்கிரமும் ஒன்றுகூடி அந்தக் கஜகேது என்னும் கர்மச் சண்டாளன் தலைக்கு உலை வைத்து விடுகிறேன். இனி எங்கே அந்தப் பாதகன் மீளப்போகிறான்? தடை செய்யாமல் எனக்கு உத்திரவு கொடுத்தனுப்புங்கள்.

துயுமத். புருஷசிங்கமாகிய புதல்வா! நான் சொல்வதைச் செவி கொடுத்துக்கேள். நமக்கோ காலபலம் சரியாயில்லை. எதிரியோ சதுரங்க சைனியங்களையும் பல ஆயுதங்களையும் உடைய சகாய பலமுடையவன். நீ ஒண்டியாகப்போய் யுத்தஞ்செய்து ஜெயமடைவது அசாத்தியம். ஆகையால், இது சமயம் சண்டைக்குப் போவது நியாயமில்லை. மேலும் நாங்களோ கண்களை இழந்தவர்கள். எங்களைக் காப்பாற்றுவதற்கு உன்னையன்றி ஒரு உதவியும் இல்லை. ஆகையினாலே, இவ்வேளை எங்கள் பசிக்குவேண்டிய பழவர்க்கங் களைத்தேடிக் கொண்டுவந்து கொடுப்பதுமல்லாமல், எங்களை விட்டுப் பிரிந்து போகாமல் அருகிலேயிருந்து அப்போதைக்கப் போது வேண்டிய உபகாரங்களைச் செய்து கொண்டிருப்பாயாக.

பத். அப்பா கண்மணி! நீ எங்களுக்கு ஒரு வரந்தர வேண்டும். அது என்னவென்றால், எங்கள் அனுமதி இல்லாது ஒருபோதும் பிரியலாகாது.

சத். மாதா பிதாக்களே! தங்கள் கட்டளைப்படியே நடந்து கொள்ளுகிறேன்.

காட்சி - 6

நேரம் - மாலை

இடம் - அந்தப்புரம்

பாத்திரங்கள் - சாவித்திரி, சகிகள், மாளவி, அசுவபதி, நாரதர்

சாவித்திரி மஞ்சத்திலிருந்து சத்தியவானை நினைத்து விரகதாபத்தால் வருந்திக் கொண்டிருக்கிறாள்

(பாட்டு)

கௌள மிஸியாரதோ - என்ற மெட்டு

இராகம்-காப்பி தாளம்-ஏகம்

துக்டா

சா : வருந்தவிட்டுப் பிரிந்துபோன
மன்னனைக் காண் பேனோ
வக்கணைச் சொற் றானோ
பக்கம்வரா தேனோ - இந்த
மானிலத்தி லேது-எனக்கு
வாழ்வினிக்கிடை யாது - அந்த
மாரன் விட்டிடு வாளி மிக்கவு
மேமயக்குதிப் போது
வாட்டந் தீர்த்திடவே
நாட்டம் பார்த்திடவே
வாசகமொழி ஓதியபடி
மாலைசூடிட நாடிடாமலே

(பாட்டு தர்க்கம்)

சாவலி சூரத் பியாரி - என்ற மெட்டு

கண்ணிகள்

சகி. ஏதுக்குச் சோகமா இருக்கிறாய் நீ சொல்லம்மா
எங்களுக் குரைக்கவேணும் இல்லால் நல்லதல்லம்மா

சா. இல்லாத சேதி உங்களுக்கென்ன சொல்லப்போகிறேன்
ஏதோ மயக்கமா இருக்கிறது வாடுகிறேன்

சகி. வாட்டத்துக்கென்ன காரணம்வாய் திறந்து சொல்லம்மா
மாதே உன் தாதியிடம் மறுத்துரைப்பதேனம்மா

சா. துக்கமெனக் கொன்றுமில்லைசொன்னே னப்பாலேபோங்கள்
தொந்தரவு செய்ய வேண்டாம் சும்மாயிருங்கள் நீங்கள்

சகி. தொந்தரவு செய்யவில்லை சோகமுனக்கேனம்மா
தோகைராணிகண்டால்வசை சொல்வா ளெம்மைத் தானம்மா

சா. என்னடி அடிக்கடி எதிர்த் தெதிர்த்துப் பேசுறீர்
ஏற்றபடி வாயில்வந்த தெல்லாஞ் சொல்லி வீசுறீர்

(மாளவி வருகிறாள்)

சகி. அம்மணி நமஸ்கரிக்கிறோம்

மாள. கல்யாண்! தோழிமார்களே! குழந்தை சாவித்திரி என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

சகி. அம்மணி! நாங்களென்னவென்று சொல்லுவோம். சில நாளாக எங்கள் எஜமானி அன்ன ஆகாரங்கொள்ளாமலும், நித்திரை பிடிக்காமலும் ஒருவித ஏக்கங்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் போய் சமாசாரத்தை வினவினால் கடிந்துகொள்ளுகிறார்கள். அதோ பாருங்கள்! அவர்கள் சயனித்திருக்கும் நேர்மையை!

சா. (எழுந்துவந்து) தாயே நமஸ்கரிக்கிறேன்.

மா. மங்களம் உண்டாகுக! குழந்தாய்! அன்றலர்ந்த செந்தாமரையை நிகர்த்த நினது வதனமானது இன்று சோபையை இழந்து காணப்படுகிற காரணமென்ன?

(மாளவி பாட்டு தர்க்கம்)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணி

மா. வாட்டம் வந்ததென்ன மாதே நீ ஓதுவாய்
மாமேனி நோவாகி நீ நாளு மாறிட (வாட்)

சா. ஒன்றுமில்லை யம்மா ஓதினேன் சஞ்சலம்
ஊணாடை யாலேது தானுமோ ஓர்குறை (ஒன்)

மா. காட்டிலொரு பேயைக் கண்டாண் டிட்டதோ
காணுமற் றோர்களின் கண்ணேறு பட்டதோ (வாட்)

சா. என்றும்போ லேதா னிருக்கிறே னானம்மா
ஏதுக்கென் னைப்பார்த்துச் சோதிக்கி றாய்சும்மா (ஒன்)

மா. தேகம்வெ ளுத்துத் திகைத்தும யங்குறாய்
தேறாம விந்நாளில் சித்தமதி யங்குறாய் (வாட்)

சா. தூக்கக் கலக்கத்தால் தோன்றுது வேறில்லை
துன்பமெ னக்கேது சொன்னேனம் பென்சொல்லை (ஒன்)

சா. தாயே! நேற்றிரவு சேடிகளை வீணை வாத்தியத்தோடு பாடச் சொல்லி வெகுநேரம் சங்கீத சுரரஸ இன்பானுபவத்தை அனுபவித்துக் கொண்டிருந்தேன். அதனாலே இன்று காலை முதல் இதுவரை உடம்பு ஒருவித அயர்வை அடைந்து தூக்கக் கலக்கத்தினாலே அசௌக்கியமுடையவள் போல் மிக்க வாட்டத்தோடு காணப்படுகின்றேனே அன்றி வேறுவிதமான வியாகூலம் எனக்குச் சற்றேனும் இல்லை அம்மா.

மா. அம்மா! அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம். நீ எவ்வளவு சமாதானங்களைச் சொன்னாலும் அவ்வளவும் பிரயோசனந் தருவதற்கில்லை, நல்லது. தோழிகளை விசாரித்தறிவோம்.

(பாட்டு)

இராகம்-கீர்வாணி-தாளம்-ஆதி
கண்ணி

சகிநீ வாடி இவளொடு கூடி
சம்ப்ரமநந்தவ னந்தனிலோடி
வருநாள் முதலா யிதுநாள் வரையே
மங்கை வருந்திமெ லிந்திடலெதுவோ
தவறாதோதி வெளியிடுசேதி
சங்கடமென்பத கன்றிடும் நீதி
தான றிந்திம்மா திணங்கநாடுவேன் (சகி)

வ-ம். சகிமார்களே! சென்ற பௌரணை தினத்திற்குமுன் தினம் நீங்கள் சாவித்திரியினோடு சிங்கார வனவேடிக்கை பார்க்கப் போய் வந்தீர்களே, அதுமுதல்தான் என் குழந்தை இவ்வித வருத்தம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. அங்கு ஏதாவது சங்கட சமாச்சாரம் நடந்ததுண்டோ?

பாட்டு

கதர்க்கப்பல்கொடி தோணுதே-என்றமெட்டு*

---

* 'அம்மணி நீ' என்ற வர்ணமெட்டில் அமைந்ததே 'கதர்க்கப்பல்' விஸ்வநாததாஸ் பாடிய விடுதலைப் போராட்டப்பாடல். வேலுச்சாமிக் கவிராயர் இயற்றியது. காலத்தால் பிந்தியது.

இராகம்-பரசு தாளம்-ஆதி

பல்லவி

அம்மணி நீ சொல்லக் கேளாய் - நாங்கள்
அன்று பூங்காவனத்தில் சென்றுவந்த விதத்தை (அம்)

அநுபல்லவி

செம்மையான மலரைத் தேடிப் பறிக்கும் வேளை
வெம்மைக்குணமோர் சிங்கம் விரட்டியதுன் மகளை
வேதைகொண்டாள் - அங்கு
பாதைகொண்டாள் - வாடி
மெனிநொந்தோடித்துவண்டாள் (அம்)

சரணம்

வந்தவ்வேளையில் சத்ய வானென்னும் ராஜபுத்ரர்
அந்தச்சிங்கத்தைக் கொன்று ஆரணங்கை ரட்சித்தார்
அதுநாளாய் - செய்
வதுதோணாள் - அவர்
ஆசையா லிவ்விதமானாள் (அம்)

வ-ம். அம்மா! நாங்கள் எல்லோரும் நந்தவனம் சென்றபோது எங்கள் எஜமானி எங்களை நாலாபக்கங்களிலும் சென்று மலர் கொய்து வரும்படி கட்டளையிட்டு அவர்கள் ஒரு தேமாமரப்படர் கொடி விநோதம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது எப்படியோ ஓர் கொடிய சிங்கம் தோட்டத்திற்குள் புகுந்து சாவித்திரி மாதைத் துரத்தியது. அப்போது சாலவபுரியாளும் துயுமத்சேன ராஜருடைய குமாரராம் சத்தியவானென்பவர் பிரவேசித்து அந்தச் சிங்கத்தைக் கொன்று தங்கள் புதல்வியை ரட்சித்தார். அதுமுதல் எங்கள் எஜமானி அந்த ராஜபுத்திரர் மீது கடைக்கண்ணைச் செலுத்தினார்கள். அப்பார்வையானது பருவகாலத்தின் ஆசைப்பார்வை என்பதற்குத் தடையில்லை. இவ்வளவுதான் அம்மணி எங்களுக்குத் தெரிந்த விஷயம்.

மா. அம்மா! அதோ! உனது பிதா வருவதுபோல் தெரிகிறது. நான் அவரிடம் கலந்து பேசி உனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைக்கிறேன்.

(அசுவபதி ராஜர் வருகிறார்)

மா. பிராணேசா! நமஸ்கரிக்கின்றேன்.

அசு. மங்களமுண்டாகட்டும்

மா. பிராணேசா!

(பாட்டு)

வழிவிடப்போன அத்ரி - என்ற மெட்டு

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி

பல்லவி

மங்கைக் கிசைந்த ஒரு மணவாளனைத் தெரிந்து
மணஞ்செய் வியாததழகோ (மங்)

அநுபல்லவி

எங்கும் இசைபரவ இலங்கும் ராஜ உல்லாசா
என்னாசைக்குத் தகுந்த இன்பமுள்ள பிராணேசா (மங்)

சரணம்

தந்தைதாய் பெண்களுக்குத் தக்கவரனைப் பார்த்துத்
தாலிகட்டியும் வைப்பார் தரணியிலொன்று சேர்த்து
அந்தவிதம் நம்பெண்ணுக் கானகடனைத்தீர்த்து
ஆளனொருவனுக்கே அளிப்போம் தாரைநீர் வார்த்து (மங்)

வ-ம். பிராணேசா! நமது குழந்தை பருவகாலத்தை அடைந்துவிட்டாள். அவளுக்குத் தக்க வரனைப் பார்த்து விவாகத்தை நிறைவேற்றி வைக்காது போனால், அநியாயமாய்ப் பெண்பழிக்கு நாமல்லவோ ஆளாகவேண்டும்! இப்படிக் கவலையற்றிருப்பது தங்களுக்கு நியாயந்தானா?

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

கண்ணி

அசு. எண்ணமெனக்குமுண்டு ஏந்திழை மானே
இன்னாள்வரை யோசித்தேனே அன்புகொண்டு (எண்)
பெண்ணுக்கிசைந்த பெருமையோனைத் தேடி
பேசி மாலைசூட்ட வேணுமுறை நாடி (எண்)
பாராளும் ராஜரின் பால ருருவத்தைப்
பார்க்கச் சேகரித்தேன் அன்னார் சித்திரத்தை (எண்)
வேந்தர் படங்கள் சாவித்திரிக்குக் காட்டி
விரும்புவோனைக் கூட்டி வைப்போமாலை சூட்டி (எண்)

வ-ம். சகி! எனக்கும் அதே எண்ணந்தான். நான் மந்திரியிடம் ஆலோசித்து அழகில் சிறந்த அநேக ராஜபுத்ரர் படங்களை வரவழைத்திருக்கிறேன். அவைகளைச் சாவித்திரிக்குக் காட்டி அவள் எந்த ராஜபுத்திரன்மேல் பிரியப்படுகிறாளோ அவனுக்கே மணமுடித்து வைக்கலாம் தடையில்லை.

மா. பிராணேசா! தேசராஜர் படங்களைக் காட்டி மணவாளன் இன்னாரென்று நிச்சயிக்கும் சிரமம் நமக்கு வேண்டுவதில்லை. சில தினங்களுக்கு முன் சகிகளுடன் சாவித்திரி சிங்கார வனவேடிக்கை பார்க்கப் போயிருந்தாள். அங்கு ஒரு சிங்கம் அவளைக் கொல்லத் துரத்தியதென்றும் சாலவபுரி துயுமத்சேனர் குமாரர் சத்தியவானென்பவர் அந்தச் சிங்கத்தைக் கொன்றாரென்றும், அதுமுதல் சாவித்திரி அவரையே நாயகராக அடையக் காதலித்து இருக்கிறாளென்றும் பாங்கிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அந்த ராஜபுதல்வருக்கே நமது குழந்தையை மணமுடித்து வைத்துவிடலாமென்று நினைத்திருக்கிறேன். அப்பால் தங்கள் சித்தம் என் பாக்கியம்.

(நாரதமுனிவர் கீர்த்தனம் பாடி வருகிறார்)

இராகம்-காபி-நாராயணி-தாளம்-தேசாதி

பல்லவி

சரசசாமதாந பேததண்ட சதுர
சாடிதைவ மெவரே ப்ரோவவே (சா)

அநுபல்லவி

பரமசாம்பவா க்ரேஸருண்டனுத்சு
பலுகுராவணுன்டு தெலியலேக போயே (சா)

சரணம்

ஹிதவுமாடலெந்தோ பாகபல்கிதிவி
சதமுகானயோத்ய னிச்சேனண்டிவி
நதசகோ தருனி ராஜு சேஸிராக
ஹதமுஜேஸிதிவி த்யாகராஜவிநுத (சா)

வ-ம். நானோ திரிலோகசஞ்சாரி! ஒருநாளைக்குமேல் ஓரிடந் தங்கக் கூடாத சாபத்தைப் பெற்றவன். தேவர் முதலான சிஷ்டர்களுக்கு அநுகூலமும், அசுரர் முதலான துஷ்டர்களுக்குப் பிரதிகூலமும் விளைவிக்கப்பட்டவன். என் செய்கைகளெல்லாம் ஆரம்பத்தில் கலகங்களாகக் காணப்பட்டாலும் முடிவில் உலக க்ஷேமாபிவிருத்தி யாகவே முடியும். நல்லது அசுவபதிராஜனைக் கண்டுவந்து அப்பால் யோசிப்போம்.

அசுவபதி, மாளவி, சாவித்திரி சகிகள் யாவரும் வணங்குகிறார்கள்

(பாட்டு)

எங்கே புத்திரி-என்ற மெட்டு*

பல்லவி

அ.மா.சா. பாதம் போற்றினோம் உமதிரு (பா)

அநுபல்லவி

பாவவினை யாவும் போக
பத்தியும் சித்தியும் முக்தியு முண்டாகப் (பா)

சரணம்

வேதகீதம் ஓது நாதரே
மேனிலை தானுரை ஞானபோதரே
வேட்கைமி குந்தும்மைப் பார்த்திடப் பெற்றோம்
மேதினி மீதினில் வேண்டுமேன் மையுற்றோம் (பா)

அசு. சுவாமி நமஸ்காரம்

நா. மங்களமுண்டாகட்டும்.

மா. சுவாமி நமஸ்காரம்.

சா. சுவாமி! அடியாள் நமஸ்கரிக்கிறேன்.

நா. தீர்க்க சுமங்கலிபவா! தீர்க்க சுமங்கலிபவா! தீர்க்க சுமங்கலிபவா! ஹே ராஜன்! நீ பத்தினிபுத்திரியோடு ஒருங்கு கூடியதே அபூர்வ சம்பவம். நீங்கள் ஏதோ ஆலோசனையில் கவலை கொண்டவராகக் காணப்படுகிறீர்கள். நானிருக்கும் பட்சத்தில் உங்கள் ஆலோசனைக்கு விக்கினம் ஏற்படுமானால் நான் சென்று வருகிறேன்.

அசு. சுவாமி! தங்களுடைய பாத தெரிசனமே எங்களுக்குப் பாவ விமோசனப் பலப்பிராப்தியன்றோ! அப்படியிருக்கத் தங்களுக்குத் தெரியாத காரியம் என்ன இருக்கிறது? தங்கள் அநுக்கிரகத்தினால் எனக்குக் குழந்தையாக ஜெனித்த இந்தச் சாவித்திரியென்னும் சிறுமிக்கு விவாக மகோற்சவம் நடத்திப்பார்க்க ஆலோசனை செய்தோம். இச்சிறுமியோ சாலவபுரி துயுமத்சேனருடைய புதல்வன் சத்யவானை இச்சித்திருப்பதாகத் தெரியலானோம். ஆகையினாலே,

---

* நாடகம்: ஞான சௌந்தரி

(பாட்டு)

ரசசியமிது ரகசியம் -என்ற மெட்டு

இராகம்-பியாக்-ஏகதாளம்

துக்டா

தக்கவானா சத்யவான் சாற்றவேணும் கேட்கநான்
இக்கணமந்தப் பூமான் ஏற்றவனோதான்
இருக்கும்விபரம் எனக்கு நேரில் உரைக்கவேணும் நீர் (தக்)

வ.ம். சுவாமி! சத்யவான் என் புத்திரிக்குத் தக்க கணவன்தானா? அவனுக்குச் சாவித்திரியை மணமுடித்து வைப்பது தங்களுக்குத் திருப்திதானா? ஆலோசித்துச்சொல்லுங்கள்.

நா. ஏ ராஜ! சத்தியவானோ வித்தையிலும் புத்திலும் அறிவிலும் ஊக்கத்திலும் குலத்திலும் நலத்திலும் ஆசாரத்திலும் அநுஷ்டா னத்திலும் இன்னும் சகல வகையிலும் சிறப்புடையவன்தான்.

அசு. சுவாமி! சகலவகையிலும் சிறப்புடையவன்தான் என்றால் ஏதோ ஒரு வகையில் பொருத்தமில்லாதவனென்று எண்ணும்படி தங்கள் வார்த்தை சற்று இழுப்பாகத் தோணுகின்றது. அதை அடியேனுக்குச் சொல்லக் கூடாதா?

நா. அது அப்படித்தான்.

அசு. அது அப்படித்தான் என்றால்?

நா. இப்பொழுது பிரஸ்தாபத்துக்கு வந்த சங்கதியின் பலன் அப்படித்தானென்றேன்.

அசு. சுவாமி! சத்தியவான் குணங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.

நா. நல்லது கவனமாய்க் கேள்!

(பாட்டு)

மீனாக்ஷி பதமே-என்ற மெட்டு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

அநுபல்லவி எடுப்பு

மாமறையாகம காவியமேவிய
வாசகநீதிகள் கற்றான்
வருசிவனுமையரி பருதிகரிமுருகன்
ஒருபொருளெனுமறி வுற்றான்-அற
வழியிலொழுகு நடை பெற்றான்-சிறு
மடமதி யினருற வற்றான்-கெடு
மாறுபடுதீமையைப் பற்றான்

பல்லவி

ஆனாலவனுக்கோ அற்பப்பிராயமே (ஆனா)

சரணம்

பூதலராஜர்கள் ஓடிட ஓர்நொடி
போர்புரி புயபல சிங்கம்
பொறுமையினுலகிய லறநெறிதெளிவோடு
புகலுவன் மிகுபிர சங்கம்-எழில்
பொருந்துமவனுடைய அங்கம்-ஒளி
பொருந்தியவிலை பெறு தங்கம் இன்னும்
போதிக்கலாம்சாங்கோ பாங்கம் (ஆனா)

வ-ம். இவ்வளவு பொருத்தங்களெல்லாம் இருந்தாலும் அற்ப ஆயுள் காரனாக இருக்கிறான். இன்னும் ஒரு வருஷந்தான் அவன் ஆயுள். அப்பால் இறந்துபோகும் நிலையிலிருப்பதால் வேறு ஒருவரனைப் பார்ப்பது நலமென்று நினைக்கிறேன்.

அசு. சுவாமி! ஒரு வருஷத்துக்குள் இறந்துபோகும் ஒருவனை மணவாளானாக அங்கீகரிப்பது ஞாயமாகுமா? ஆயிரங்காலத்துப் பயிராகிய எனது அருமைக் குழந்தையை வேணுமென்றே பாழுங்குழியில் தள்ளுவது போலல்லவா முடியும்? அம்மா சாவித்ரி! இப்படிச் சமீபத்தில் வா.

(பாட்டு தர்க்கம்)

பழிக்குப் பழிகொடடா-என்றமெட்டு

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

கண்ணி

அசு. ஆண்டு ஒன்றிலிறப்பான் உனக் காகாது சத்தியவான்
ஆதலினால்வேறுநாயகனைச் சொல் லவனைத் தேடிப்பேனான்

சா. இப்படிச்சொல்லலாமா கொண்ட எண்ணம் வீணேபோமா
ஏற்காதுதாங்களுரைப்பதெனக்குற்ற இச்சையை மாற்றலாமா

அசு. வாதேனோ தந்தைசொல்லை மிக்க மந்திரமொன்றுமில்லை
மாறுபேசுவதானன்மையில்லை சத்ய வானாலுண்டாகுந்தொல்லை

சா. தங்கள் பாதம்பணிந்தேன் இங்கு சத்தியமாய் மொழிந்தேன்
தாரணியில்வேறுநாதன் குறித்திடில் சாகமனந்துணிந்தேன்

வ.ம். பிதா! தாங்கள் என்ன சொன்னபோதிலும் என் மனம் சமாதானத்தை அடையாது. பிறந்தவர்கள் எல்லோரும் இறக்கப்பட்டவர்களே அன்றி ஒருவரும் சாசுவதமாக இருப்பவரில்லை. எப்பொழுது

நான் அவரைக் கணவனாகக் கருதிவிட்டேனோ பின் மற்றொருவரை நினைத்தாலும் பதிவிரதா தர்மத்துக்குப் பங்கமுண்டாகும் தங்களுக்குத் தெரியும். வீண் சிரமம் வேண்டாம்.அவரையே நாயகனாக்கி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அசு. மாளவி! நீதான் அவளுக்குத் தேறுதல் சொல்ல வேண்டும்.

மா. அம்மா! உனது பிதாவின் வார்த்தையை மீறி நடக்கலாமா? தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற நீதியைப் படிக்கவில்லை? நான் சொல்வதைக்கேள்.

(பாட்டு தர்க்கம்)

தோகாதேனேவாலாகும்மே-என்ற மெட்டு

கண்ணிகள்

மா. சத்தியவானை மணக்கத் தக்கதில்லை சாவித்திரி (சத்)

சா. உத்தமிநான்உன்புத்திரி கற்பு நீங்காமல் ஆதரி

மா. அர்த்தமெவனுக்கில்லையோ பற்றவனையுற்றவருஞ்
சுற்றவருமற்றவருஞ் சற்றுமே மதிப்பதில்லை

சா. குற்றமில்லை கேளென்சொல்லை விட்டுநீங்க ஞாயமில்லை

மா. தாய்மொழி நம்பு இனி நீ விடுவம்பு

சா. தட்டினேனென்று வருத்தப்பட்டுக் கொள்ள வேண்டாமம்மா

சா. புத்திரியும் குணமும் நல்ல வித்தையுமிருந்தால் போதும்
அர்த்தமில்லாததற்கு வருத்தமடையே னெப்போதும்

மா. உற்றபலனில்லை யாதும் பெற்றமையல் நீங்குபோதும்

சா. ஓதுதல் தீது இந்த வாதுமாகாது

மா. ஓர் வருடத்துக்குள் சாவு நேரு மற்பாயுசுக்காரன்

சா. என் தலை எழுத்துப்படி என்ன ஆனாலுமாகட்டும்

மா. யார் தடுத்தாலும்மறக்க மாட்டேனவனைமட்டும்

மா. எங்களைத் தவிக்கவிட்டும் ஏற்றாய்போதுமிந்தமட்டும்

சா. ஏன் வருத்தமா சொல்லல் தான்பொருத்தமா

மா. இச்சைபோல் நடப்பேனென்றாய் பெற்றகும்பி பற்றுதம்மா

சா. தாயே! நீ என்போல் பெண் ஜெனனம் எடுத்தும் ஸ்திரீ தர்மங்களைத் தெரியாதவள்போல் பேசுவது எனக்கு வியப்பாகத் தானிருக்கிறது. மனதில் ஒருவரைக் கணவனாக வரித்த பிறகு அந்நியரை மணமுடிக்க நினைப்பது விபசார தத்துவத்தை விளைவிக்காமல் போகுமா? உன் புத்திரி பதிவிரதையென்று உலகம் புகழுவது சம்மதமா? அல்லது விபசாரியென்று இகழுவது சம்மதமா? அன்று எழுதினவன் அழித்தெழுதப்போகிறதில்லை. கோட்டையிலே பிறந்தாலும் போட்ட புள்ளி தவறாது. நீ ஏன் இதற்கு மாறுபேசித் தடுக்கிறாய்? வேறு ஒரு புருஷனைக் கனவிலும் விரும்பேன். எவ்வித சொல்லுக்கும் என் செவி சாய்க்க மாட்டேன். நான் கருதின புருஷனை எனக்கும் மணவாளன் ஆக்குவதற்குத் தங்களுக்கு இஷ்டமில்லாது போனால் என் பிராணனைத் தங்கள் காலடியிலேயே இழக்கச் சித்தமாக நிற்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?

மா. அம்மா! பொறு பொறு, சுவாமி! தாங்கள் தான் இதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

நா. அம்மா! சாவித்திரி இப்படி வா.

(பாட்டு தர்க்கம்)

பியாரி தோரி பியாரிஜான்-என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்

(தற்காலம் ஏகதாளம் திச்ரநடையில் பாடப்படுகிறது)

பல்லவி

சத்யவான்மீதுனக் காசையேன்
சாவித்திரிவேண்டாம் ஓதினேன்

அனுபல்லவி

எத்தனைநல்லவனாயினும் எங்கும்புகழ் கல்வியாயினும்
இல்லைபொருள் கொஞ்ச மாயினும் (சத்)

பல்லவி

சா. சாமியுமக்கிது தர்மமா
சாற்றுகின்றீரென்மேல் வர்மமா

அநுபல்லவி

பூமியிலீதொரு விந்தையே புருஷன் வேறுஎண்ணல்நிந்தையே
புண்படுதையோ என் சிந்தையே (சாமி)

சரணம்

நா. நாடுநகரங்க ளொன்று மில்லாதவன்
நாடிவந்தூரார் மதிக்க இல்லாதவன்
காடுகுடியாகி வீடு மில்லாதவன்
கண்ணிழந்த பெற்றோரோடுழல் வானவன் (சத்)

சா. ஆற்றுவெள்ளம்போலே செல்வம் வந்துபோகும்
அவ்வகை முன்செய் பாவபுண்ய மாகும்
நேற்றுத் தரித்திரர்க் கின்றதிஷ்ட மாகும்
நீதியில்லாமொழி நீர்சொல்லாம லேகும் (சாமி)

நா. ஆயுளவனுக்கு இன்னுமொரு ஆண்டு
அப்புறமையையோ போவானவன் மாண்டு
நீயவனைவிட்டுத் துன்பக்கடல் தாண்டு
நிச்சயம் வேறு மணவாளனை வேண்டு (சத்)

சா. சாகாதிருப்பவர் தாரணியி லில்லை
சஞ்சலம்நேர்வதெல் லாம்ஊழ்வினைத் தொல்லை
ஆகாதுமற்றாரைக் கொள்ளமன மில்லை
ஆகையினாலே கேளுமடியாள் சொல்லை (சத்)

வ-ம். சுவாமி! தங்களுடைய வாக்குப் பழுதுபடாதே! என்னைப் பரிசோதிக்கிறீர்களா என்ன?

நா. என்ன! எனது வாக்குப் பழுதுபடாது என்கிறாய்? நான் என்ன சொன்னேன்?

சா. ஆதியில் தாங்கள் வந்தபோது நான் நமஸ்காரம் செய்தேனே! அப்பொழுது என்ன வார்த்தை சொல்லி ஆசீர்வதித்தீர்கள்?

நா. தீர்க்க சுமங்கலிபவா! என்று ஆசீர்வதித்தேன்.

சா. நான் தீர்க்க சுமங்கலியாக இருக்கும்போது என் கணவனுக்கு எப்படி அற்ப ஆயுள் உண்டாகும்?

நா. ஓகோ! நமது வார்த்தையை வினையாக முடிந்தது. இப்படி முன்பின் அறியாமல் மாட்டிக் கொண்டோம். நல்லது, அம்மா, சமீபத்தில் வா! (காதில் உபதேசம் செய்து) தெரிந்து கொண்டனையா?

சா. தெரிந்துகொண்டேன் சுவாமி.

நா. அசுவபதிராஜனே!

பாட்டு

வாரிதனா வனஜோபனா-என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகதாளம்

துக்டா

சாவித்திரி உறுதியுள்ளாள்
சத்யவானன்றிமற் றாரைக்கொள்ளாள் (சா)
தலைவிதி யவனுக்கு ஒருவருஷந்தான்
தகுதியுடைய இவள்தவம் பெருகுந்தான்
சற்றுமனங் கோணாமலே சித்தமொப்பி நின்றனள்
தன்சுகம் பாராமல் கற்புத்
தர்மம் கைக் கொள்கின்றனள் இவள்
சாற்றும் சொற்படி கேள்
சாற்றும் சொற்படி கேள்
சாற்றும் சொற்படி கேள் (சா)

வ-ம். ஏ, ராஜராஜா! சாவித்திரி உறுதியுடையவள். இவளுடைய கற்பு நிலையே அவனுக்கு ஆயுள் விருத்தியை உண்டாக்கும். இதுவே நல்ல தருணம். இதுவே நல்ல சம்பவம். நீ இப்பொழுதே புறப்பட்டுப் போய் அந்தச் சத்தியவானுக்கே சாவித்திரியை மணமுடித்து வைப்பாயாக. எல்லோருக்கும் எனது பூரண ஆசீர்வாதம். நான் போய் வருகிறேன்

(போகிறார்)

காட்சி - 7

நேரம் - பகல்

இடம் - வனம்

பாத்திரங்கள் - சத்தியவான், சுமாலி

சத்தியவான் தனியாக நின்று சாவித்திரியை நினைந்து மனவேதனை அடைந்து வருகிறான்

இராகம்-காப்பி-தாளம்-ஏகம்

மதியழிந்து வாடி நோகலானேன் (மதி)
மாலைதரு சாவித்திரி மாதாலே
அந்த மாதாலே
ஆசை மாதாலே
சண்டமாதாலே தீராத மாமோகம் நானாகி (மதி)

வ-ம். ஹே அருமைநாயகி! உன்னை நந்தவனத்தில் எப்போது கண்டேனோ அப்போதே என்நெஞ்சை உன் வாசஸ்தான மாக்கிக் கொண்டாய். பிறகிஷ்டமாக உன்னை மறுமுறைபார்க்கக் கிடைக்கிலேன். நான் நித்திரை செய்ய விரும்பிக் கண்களை மூடினால் நீ வந்து தோன்றுகிறாய். கண்களைத் திறந்தால் நீ உடனே திடீரென்று மறைந்து விடுகிறாய். இவ்வித ஜெகஜால வேடிக்கையை நீ எங்கு கற்றாயோ நானறியேன். நீ என்னையே மணஞ்செய்து கொள்வதாகச் சொல்லிய உறுதி வாக்கை நம்பித்தான் இன்னும் உயிர்வைத்திருக்கிறேன். இல்லையேல் என்ஆவி பிரிந்து என்னுடல் மண்மூடிப் போய்விடும். சாவித்திரி!

எங்கு பார்த்தாலும் நின் உருவம் புலப்படுகின்றதே. சாவித்திரியென்ற உருவம் ஒன்றுதானே. அல்லது பலவோ? ஆகா! என்னமந்தகாச முகத்தோடுங்கூடி என்னைக் கடைக்கணித்துப் பார்க்கிறான். இந்தப் பார்வை ஒன்றே திரிலோகங்களிலும் அடிமை கொள்ளுமே! நீ என்மீதில் ஆசைகொண்டு இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்தும் என்னிடத்தில் ஒரு வார்த்தை பேசாமல் மௌனமாயிருக்கின்றாயே! இது தகுமா? ஆசை நேசா என்று கூப்பிடு. நான்தான் உன்னைத்தேடி வந்துவிட்டேனே! இனியேன் கவலைப்படுகிறாய் என்று கட்டியணைத்து ஒரு முத்தந்தா! (மரத்தைக் கட்டிப்பிடிக்கிறான்) சே! என்ன பயித்தியக்காரத்தனம்? உருவெளித்தோற்றமென்றுணராமல் சாவித்திரி என்பதாக நம்பி ஒரு மரத்தைக் கட்டி முத்தமிடப் போனேனே! என்ன மதியீனம், அன்னியர் பார்த்தால் சித்த சுவாதீனமற்றவனென்று நகைப்பார்களே! சதா சாவித்திரியின் ஞாபகமே குடிகொண்டு விட்டால், எங்கும் அவளாகவே காணப்படுகிறாள். ஆகாரம் நித்திரையோ அடியோடு மறந்து போயிற்று. தேகமோ நாளுக்கு நாள் மெலி வடைந்து விட்டது. ஏககாலத்தில் ஒருவனுக்கு இவ்வளவு கஷ்டம் நேரிடுமானால் அவன் எப்படி நிர்வகிப்பான்? என்னால் சாத்தியப்படவில்லை.

(பாட்டு) முன் தொடர்ச்சி

கதியெனக்கு மேது கவலையோ தீராது
காணேனே
எங்குங் காணேனே
தேடிக் காணேனே
ஓடிக் காணேனே மானாளைநான் மாலையேசூட (மதி)

(சுமாலி வேதியராக வேடமிட்டு வருகிறான்)

சத். ஐயா பெரியவரே! நீர்யார்? இவ்வளவு துரிதமாக எங்கு போகிறீர்?

சுமா. மிகுந்த அவசரம்! மிகுந்த அவசரம்!! வழிவிடு தடுக்காதே.

சத். என்னையா அவசரப்படுகிறீர்? எங்கிருந்து வருகிறீர்? அதையாவது சொல்லும்?

சுமா. மத்ராபுரியிலிருந்து வருகிறேன்.

சத். மத்ராபுரியிலிருந்தா வருகிறீர்?

சுமா. ஆம்.

சத். என்ன அவசரம் எங்கே போகிறீர்?

சுமா. கல்யாண அவசரம்.

சத். கல்யாண அவசரமா? யாருக்குக் கல்யாணம்!

சுமா. அவையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க அவகாசமில்லை. வழி விடு! வழிவிடு!

சத். கொஞ்சம் பொறுமையா! யாருக்குக் கல்யாணம்? அதை மாத்திரம் சொல்லிவிட்டுப்போம்?

சுமா. ராஜபுத்திரிக்குக் கல்யாணம்.

சத். ராஜபுத்திரிக்கா கல்யாணம்?

சுமா. ஆம்.

சத். அவள் பெயர் என்ன?

சுமா. என்னால் இனிமேல் தாமதிக்க முடியாது வழிவிடு! வழிவிடு!

சத். கொஞ்சம் பொறுமையா! அவள் பெயரென்ன? அதை மட்டும் சொல்லிவிட்டுப் போம்?

சுமா. அவள் பெயர் சாவித்திரி!

சத். சாவித்திரிக்கா கல்யாணம். புருஷன் யார்?

சுமா. வழிவிடு! வழிவிடு! நான் போக வேண்டும்,

சத். கொஞ்சம்பொறுமையா! புருஷன் யார்? அதை மாத்திரம் சொல்லிவிட்டுப்போம்.

சுமா. வரனைத் தேடித்தான் போகிறேன்.

சத். சாவித்திரியும் சத்தியவானென்னும் ராஜபுத்திரன்மேல் காதலுற்றிருக்கிறாள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவனைத்தான் தேடிப் போகிறீரோ?

சுமா. இல்லை, இல்லை.

சத். வேறு யாரைத் தேடிப் போகிறீர்?

சுமா. வேறு யாரைத் தேடிப்போனால் உமக்கென்ன?

சத். சத்தியவானும் அவளைச் சந்தித்து இருவரும் சம்மதமான உடன் படிக்கை கல்யாணம் நடத்தியிருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

சுமா. அப்படித்தான் முன்னாலே பேச்சு நடந்திருக்கிறது. என்னைக் கூப்பிட்டு அசுவபதி மகாராஜா ஜோசியம் பார்க்கச் சொன்னார். நான் சத்தியவான் ஜாதக மேஷரிஷபராசி லக்கினங்களைப் புரட்டித் தாருமாறாகப் பொருத்தமில்லை யென்று சொல்லி விட்டேன். பிறகு என்னைத்தானே ஒரு வரனைத்தேடி வரச் சொன்னார். அதற்காகத்தான் நான் புறப்பட்டுப் போகிறேன். வழிவிடு! வழிவிடு!!

சத். ஓய்! ஒருவனுடைய ஜாதகத்தைப் பார்த்து உள்ளபடி சொல்லாமல் பொருத்தமில்லையென்று சொல்வதால் உமக்கென்ன லாபம்? அப்படித் தாருமாறாகச் சொல்லலாமா?

சுமா. அப்படிச் சொல்லி வேறொருவனுக்கு மணமுடித்தால்தானே இந்த ஜோசியனுக்கு நல்ல வெகுமதிகள் கிடைக்கும்? சத்திய வானுக்கே பொருத்தமிருக்கிறதென்று சொன்னால், என் சன்மானம் எவன் கொடுக்கப்போகிறான்? காடே கெதியாய்க் குருட்டுக்கண் தாய்தந்தையருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கிறான். வழிவிடு. வழிவிடு.

சத். ஓய் நீர் சுத்தப்பிரளிக்காரராய் இருக்கிறீர். (சுமாலி வேடத்தைக் களைந்துவிடுகிறான்) சுமாலி இதெல்லாம் என்ன வேடிக்கை?

சுமா. நண்பா! உனக்குத்தான் கல்யாணம்! சாவித்திரி தாய் தந்தையர் எல்லோரும் வந்திருக்கிறார்கள். உன்னையழைத்துக் கொண்டு வர என்னை அனுப்பினார்கள். என்னை மறந்து விடாதே! சாவித்திரியோடு சகிமார்கள் வந்திருக்கிறார்கள். அவர் களில் ஒருத்தியை எனக்குக் கல்யாணம் செய்விக்க ஏற்பாடு செய்.

(இருவரும் போகிறார்கள்)

காட்சி - 8

காடு

(சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் விவாஹம் நடக்கிறது)

காட்சி - 9

நேரம் - பகல்

இடம் - வைசுதபட்டணம்

பாத்திரங்கள் - தூதர்கள், எமதருமன்

(கிங்கரர் தூதர்கள் நிற்கிறார்கள் எமதர்மராஜன் வருகிறார்)

(எமதர்மன் பாட்டு)

மூட்டையும் கொடுவும் - என்ற மெட்டு

இராகம் - பியாக் தாளம் - ஆதி

துக்டா

விண்டலமு மண்டலமு மெண்டிசை அடங்கலும்
விளங்கு நீதிமார்க்க மடுப்பன் - நல்ல
வேதவிதிப்படி தானே நடப்போரை
மேலுலகம் விடுப்பேன் - நெறி
விட்டதுஷ்டர்களைக் கட்டிவந்து நர
கத்தினிலே விடுப்பேன் - உயிர்
வேதனை மிகவுங் கொடுப்பேன் - துண்டாய்
வெட்டிவெட்டியுடல் கெடுப்பேன் - இன்னும்
மேலும்மேலும் பாவிகளைக் காணக்கோபமாகி வெவ்வே
றாக்கினைகள் செய்யத் தொடுப்பேன்-உயிர் (விண்ட)

(தூதர்கள் பாட்டு)

இராகம்-அமிர்கல்யாணி தாளம்-ஏகம்

(நோட்டு)

சாமிதேவ தேவதேவ தர்மராஜனே
சற்சனர்க் கெந்நாளும் நன்மை செய்யும் நேசனே
பூமி அந்தரம் பாதாளம் போற்றும் நாதனே
புண்ணியருக் கிந்தப் போக மீயும்நீ தனே
ஜோதிரூபமர யெங்கும்மே வும்ப்ரதாபனே
துஷ்டருக் கெந்நாளும் சிட்சை செய்யுங்கோபனே
நீதிகோ லான பாச சூலதண்டனே
நியாயமற்ற பேர்களைக் கொல் லும்ப்ரசண்டனே
தங்கள் கட்டளைக் கின்று தயாராக வந்தோம்
தாளடியைப் போற்றி நின்று வந்தோம்

வந்தோம்

வந்தனஞ் செய்தோம்

பிரபு! நமஸ்காதிக்கின்றோம்

---

* நாடகம்: சதி அனுசயா

சந்த விருத்தம்

இராகம்-கல்யாணி தாளம்-ஏகம்

நாடுமிருநாலுதிசை யாளுகிற பாலர்களின்
நானொருவ னாக எவையே
நக்கச் சடைக் கடவுள் தெற்குத் திசைக்கரசு
நத்திக்கொடுத் படியே
நீடுமொரு சூலமொடு பாசமுயர் வானகதை
நேருபடை யாக எதிரே
நீட்டிச் சுழற்றியுயிர் வீட்டிப் பிடித்துடலை
நீக்கிப் பிண்த தனையே
தேடுபவ மானசெய லேதுதொடர் வானநிலை
தேறிமிகு நீதி முறையே
செலுத்தித் துடித்துப் பதைக்கப் பதைக்கச்
சிதைத்துத் தகர்த் தெறியவே
கோடுபல கோரமுக மேவுபடர் கூடிமொழி
கூறுமென தாணைநெறியே
குத்திச் சடத்தைக் கிழத்துச் சிரத்தைக்
குறைத்துப் புதைத் திடுவரே

வ.ம். நான்கு வதனகளுடைய பிரமாவினால் ஆக்கப்பட்ட நால் வகை யோனி, எழுவகைத்தோற்றம், எண்பத்து நாலு லட்ச ஜீவபேதங்களின் இருவினைகளுக்கு ஒப்பதாய், உயிர்களைக் கவர்ந்து, அவரவர் பாவ புண்ணியத்துக்குத் தக்கபடி கஷ்ட சுகங்களை நரக சுவர்க்க மூலமாயக்கொடுத்து வருகிறேன். சங்கார கர்த்தனாகிய சிவபெருமான் எனக்கிட்ட கட்டளைப்படி லாலாயவகம் பூவலயம், சக்கரம், முட்பீப்பாய், அட்டைக்குழி, அரணைக்குழி, புழுக்குழி, அக்கினிக்குண்டம், பகுக்கக்காய்ச்சிய இரும்புஸ்தம்பம், தேள், பூரான், செய்யான், பாம்பு முதலிய விஷஜந்துக்கள் கூடிய திமிரப்படல ஸ்தானங்களையும், கும்பிபாகமுதலான ரகங்களையும், கதை, சூலம், பாசம், பிண்டி, கண்ட கோடரிமுதலான ஆயுதங்களையும், நலாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும், பன்றி, சிங்கம், கரடி, செந்நாய், முகங்களுடைய கிங்காரர்களையும் சகாயமாகக் கொண்டு எனது ராச்சிய பாரத்தைமிகு நீதியோடு காப்பாற்றி வருகிறேன். சற்றாவது நான் நியாயம் தவறி நடப்பேனானால், ஆசனத்திற்குமேலே தலைக்கு நேராக மயிர்க்காம்பினால் கட்டித் தொங்க விட்டிருக்கும் பர்வதமானது அறுந்து, என்சிரசில்

விழுந்து, ஆசனத்தின் கீழாகத் தகத்தகாயமாய் சுவாலை வீசிக் கொண்டிருக்கும் அக்கினியாற்றில் அமிழ்த்திவிடுமென்பதற்கு ஆட்சேபனை இல்லை. நல்லது, இன்று என்னால் நடத்தக்கூடிய சட்டதிட்டங்களைக் கவனிக்கிறேன்.

(மலர்பறிப்போம் பந்தடிப்போம்-என்றமெட்டு)*

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணிகள்

விக்ரதண்ட உக்ரசண்ட வக்ரதுண்ட வித்தகா
மேவுகுண்ட மண்டகண்ட விண்டதந்தி மத்தகா
விகடபத்ர குருதிநேத்ர மின்னெயிற்று வெங்கதா
வீரசூர தீரகோர ஆரவார வங்கதா
வானளாவி மீளலான வாறுகண்டி டும்பதா
வந்துநின்று கொண்டதொண்டடைந்துநின்றீ ராசதா
கொட்டமிட்ட டிக்கலுற்ற குச்சகப்ர தத்துவா
குற்றமற்ற சித்ரகுப்த னுக்குரைத் தழைத்துவா

வ-ம். அடே! குருதிக்கண்ணா! விகடபத்ரா! துன்முகா! வக்ரதந்தா! ஜீவ கோடிகளின் ஆயுள்பிரமாணங்களை உள்ளபடி அறிந்து சொல்லவல்ல சித்ரகுப்தன் எங்கே? அதி சீக்கிரமாக அழைத்து வாருங்கள்.

தூத. இதோ, அழைத்து வருகிறோம். பிரபு!

(சித்திரகுப்தன் வருகிறான்)

சித். மகாராஜ்! நமஸ்கரிக்கிறேன்.

எம. கல்யாண்! சித்ரகுப்தா!

சித். மகராஜ்! நானின்று அதிகாலையில் எழுந்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு திரிலோகக்கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருக்கும் வேளை, தங்கள் ஆக்ஞைபெற்ற கிங்கிரர்கள், அதிவிரைவாய் அழைத்துவரச் சொன்னீர்களென்று சொன்னார் கள். அவர்கள் வாய்மொழியைக் கேட்டதும், அரைக்கண நேரமும்தாங்காமல் அதிவிரைவாய் ஓடிவந்தேன். தாங்கள் அழைத்த காரணம் யாது? தெரியப்படுத்துங்கள்.

(பாட்டு)

(எனக்குமிஞ்சி பாக்கியசாலிகள்-என்ற மெட்டு)

கண்ணி

எம. இன்றுநம் மாக்கினைக் குள்ளாக நிற்க
இசைந்த பொல்லாதவ ரெல்லாமெங்கே
எல்லாம் விசாரித்துத்தக்க தண்டமீய
எல்லோரையுங் கொண்டு சேர்ப்பாயிங்கே

வ-ம். கருணீகா! இன்று நம் விசாரணைக்கு வரவேண்டிய பாவ புண்ய ஜீவர்களைக் கொண்டு வா. சீக்கிரத்தில்?

சித். அடே கிங்கிரர்களே! நாமின்று சிறையி லடைத்து வைத்திருக்கும் பாப ஆத்மாக்களை ஒவ்வொருவதாக சமுகத்தின்கண் கொண்டு வாருங்கள்.

(தூதர்கள் பாபாத்மாக்களைக் கொண்டு வருகிறார்கள்)

(வந்தவேளையிது நல்லவேளை - என்ற மெட்டு)

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணி

சித். வீட்டுப்பசுவி னிளங்கன் றுக்குப்பால்
விடாமற் கறந்துநாளும் விற்றவன்
வீணான பாதக னாகுமிவனோ
மிகவும் பொல்லாதான் தயவற்றவன்

வ-ம். இவன் பசுவினது இளங்கன்றுக்குப் பாலைவிடாமல் ஒருபடி பாலில் இரண்டுபடி தண்ணீர்விட்டு விற்றவன் பாவி.

(எனக்குமிஞ்சிய-என்ற மெட்டு)

கண்ணி

எம. கன்றுக்குப் பாலைவிடாமற் கறந்தோனை
கத்தியாற் குத்திக் கிழித்திடுங்கள்
கண்ட துண்டமாகக் கொத்திக் கொத்தி
காக்கை கழுகுக் கிரை கொடுங்கள்

வ.ம். தருமதேவதையாகிய பசுவினங்களினது கன்றுகளுக்குப் பாலை விடாமல் கறந்த இவனை, கத்தியாலே கண்ட துண்டமாக வெட்டி, காக்கை, நாய், நரி, கழுகுகளுக்கு இரையாகக் கொடுத்து விடுங்கள்.

வந்தவேளையிது - என்ற மெட்டு

கண்ணி

சித்-கொண்டகணவனை ஏமாற்றி யன்னியனைக்
கூடிக்கலந்து சுகித்திட்டவள்
கூச்சமில்லா அவி சாரியிவளே
குலத்துக்கு நிந்தை விளைத்திட்டவள்

வ.ம். இவள் தன் புருஷனை விட்டு அன்னியன் கூடச் சேர்ந்து சுகம் பாராட்டினவள் சண்டாளி.

பாட்டு

எம. அந்நியனைக்கூடி அன்பனைநீக்கும்
அவிசாரிகொள்வாளெண்ணிக் கொள்ளுங்கள்
அக்கினி ஸ்தம்பத்தில் கட்டி வளருமா
லடித்துப் புழுக்குழி யிற்றள்ளுங்கள்

வ.ம். இவளை அக்கினி ஸ்தம்பத்தில் சுட்டிக் புளியவளாரால் அடித்துப் புழுக்குழியிற் தள்ளிவிடுங்கள்.

பாட்டு

சித். உத்தமியரான கற்புள்ள மாதரை
உற்றுப்பார்த்து மதிகெட்டவன்
ஊராரெல்லாருங் கொடியவனாமென்
றுரைக்க வீதியிற் றிரிந்திட்டவன்

வ.ம். இவன் கற்புள்ள மாதர்களை உற்றுப் பார்த்துத் தகாத எண்ணங் கொண்டவன்.

பாட்டு

எம. கற்புள்ளமாதரை நோக்கிய சண்டாளன்
சண்ணி ரண்டும் ஊகியாலே குத்தி
கட்டப்பாரை கொண்டு நெஞ்சிலிடித்துக்
கழுத்தை யொடிப்பீர் கதையால் மொத்தி

வ.ம். இவன் இரண்டு கண்களிலும் இரும்பு ஊசியைப் பழுக்கக் காய்ச்சிச் சொருகி விடுங்கள்.

பாட்டு

எம. வித்தை கற்பித்த குருவுக்குத் துரோகம்
விளைத்த பாவியுடலை வெட்டுங்கள்
மேவுந்தேள் பாம்பு விஷஜெந்துக்கள் கொட்ட
விட்டுத் தலை தெறிக்க குட்டுங்கள்

வ.ம். இவனை விஷஜெந்துக்களால் அவஸ்தைப்படுத்தி விடுங்கள்

பாட்டு

சித். பெற்ற தாயைத்தலை பற்றிடித்திட்ட
பேய்க்குண மூர்க்கன் அந்யாயக்காரன்
பேசும் வார்த்தையெல்லாம் மோசம் உண்மையில்லாப்
பித்தன் கொடியவன் பேராசைக்காரன்

வ.ம். இவன் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயைத் தலையைப் பற்றி அடித்தவன்.

பாட்டு

எம. தாயைத் தலைமுடி பற்றி யடித்திட்ட
சண்டாளன் கையைத் தறித்திடுங்கள்
சக்கரத்திலேற்றிச் சுற்றிச் சுற்றித் தேகஞ்
சாருமெலும்பை முறித்திடுங்கள்

வ.ம். இவன் இரண்டு கைகளையும் தறித்துவிடுங்கள்.

(பாட்டு)

சித். நித்தங்கோள் சொல்லி யுறவாகி யெந்நாளும்
நேசக் குடும்பங் கலைத் திட்டவள்
நீலி சண்டாளி படுமோசக் காரி
நிகரற்ற பொய்க்குத் தலைப் பட்டவள்

வ.ம். இவள் நேசமாய் இருந்த குடும்பத்தைக் கலைத்தவள்

(பாட்டு)

எம. கட்சிவிளைத்துக் கோள்சொல்லிக் குடும்பக்
கலகம் விளைத்தவள் வாயினிலே
காய்ச்சி நாராசத்தை யூற்றிக்குடிப்பித்துக்
காலாலே தள்ளுங்கள் தீயினிலே

வ-ம். இவள் வாயினில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றிவிடுங்கள்.

சித். மகராஜ்! ஒரு புண்ணிய புருஷர் வருகிறார்.

(புண்ணிய புருஷர் (பாட்டு)
(இந்தவித தொந்தரைநீ -என்ற மெட்டு)
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி
துக்டா

தேவர் முதல்யாவர்களும் பாவனைசெய் காவலனே
தெய்வீக தர்ம ராஜனே - சேவை
செய்வோர்க் குண்மை நேசனே (தெய்)
பூவலய மேவிவரும் பாவநிலை மானரிடரைப்
போராடி வெல்லும் வர்மனே (போ)

புண்செய்யும் எம தர்மனே (போ)

தீதுவும் ஏதுமிலா யோகநிலை மானிடரை
சிக்கிக்கொள்ள கொண்டு வந்தனை
செப்பவேணும்மிகு சிந்தனை

வ-ம். (புண்ணிய புருஷர்) ஐயா, தர்மராஜனே! யான் யாதோரு குற்றமும் செய்தறியேன். அப்படியிருக்க என்னை இங்கு கொண்டு வந்த காரணம் யாதோ தெரியவில்லை.

எம. ஐயா, புண்ணியவானே! நீர் ஒருவனுக்குக் கொடுத்த தர்மத்தினால் அவன் செய்த பாபத் தொழில் உம்மையும் சேர்ந்ததால் இந்த எமபட்டணத்துக்குக் கொண்டு வரும்படியாக நேரிட்டது யாரடா தூதர்களே! இவரை விமானத்தில் ஏற்றிச் சுவர்க்க பதவியை அடையச் செய்யுங்கள்.

(சற்று நெஞ்சில் அச்சமின்றி - என்ற மெட்டு)*

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

(சந்தம்)

நீ மொழிந்தவாறு வந்த பேர்களன்றி நாடுமிந்த
நேரம்வந்து சேருகின்ற பேர் துலங்குதா
நேரறிந்து சேதிகண்டு பேதமின்றி ஓதலின்று
நீதிகொண்டு நானிணங்குவே னியம்புவாய்

வ-ம். கருணீகா! இனிமேல் இந்த இடத்திற்கு வந்து சேரவேண்டியவர் யார்?

சித். இதோ கணக்கு பார்த்துச் சொல்லுகிறேன் பிரபு! பூலோகத்தில் சாலவபுரிக்கு அரசனாகிய துயுமத்சேனன் புதல்வன் சத்தியவான் இன்னும் ஐந்து நாழிகைக்குள் வந்து சேரவேண்டும்.

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

துக்டா

எம். உக்கிரவீரமதுற்றிடு தூதரே இத்ததிபோய்க் கண்டு
உத்தமனாகிய சத்தியவானுயிர் பற்றியே நீர்கொண்டு
வருவீர் இங்கு வருவீர்
வந்துயிரை என்னிடத்தில் தருவீர்
ஆகையாலே வேகமாக (உக்)

---

* நாடகம்: பிரகலாதன் சரித்திரம்

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

(சந்தம்)

தூத. சாமியுரைப்படி நாளும் நடப்பது தாமெமதிச்சையதால்
சாகசமிக்கவு மாகநடித்தொரு தாமதமற்றிடவே
பூமியிலித்தின மேவிய சத்தியவானுயிரிக்கணமே
பூரணமற்றிடு வாறுவனத்திது போது கையிற்றருவோம்

வ-ம். பிரபு! இதோ கொண்டு வருகிறோம். (போகிறார்கள்)

(நாரதமுனிவர் வருகிறார்)

எம. நாரதமுனிவரே! நமஸ்காரம் இவ்வாசனத்தில் அமர வேண்டும்.

நாரர. கல்யாண்! தர்மராஜா! மெத்த சந்தோஷம்.

எம. கானப்பிரியரே! தாங்கள் அடியேன் பேரில் கிருபை பாலித்து எழுந்தருளிய காரணம் யாது?

நாரர. ஹே, தர்மசீலா! நான் வழக்கம்போல் திரிலோக சஞ்சாரம் செய்து வரும் மார்க்க மத்தியில் உனது ஞாபகம் வந்தது பார்த்துப் போகலாமென வந்தேன். நானிங்கு வந்தும் அநேக நாளாய் விட்டதல்லவா, அதனால் உன்னைப் பார்த்துப் போகலாமென வந்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை. நல்லது, நீ க்ஷேமமாக இருக்கின்றாயா?

எம. சுவாமி! சிவபெருமானுடைய கிருபாகடாட்ச வீட்சண்யத்தி னாலும், தங்கள் போன்ற பெரியோர்கள் ஆசீர்வாதப் பலத்தினாலும் என் செங்கோல் நீதியினாலும் சௌக்கியமாக இருக்கிறேன்.

நாரர. இருப்பாய்! இருப்பாய்! உனக்கென்ன குறை. நீ என்ன சமான்யமுள்ளவனா? சிவபக்தியில் சிறந்தவன், ஜீவகாருண்ய முள்ளவன், பாவ புண்ணிய நிலைகளை முற்றுமறிந்தவன், அபயம் புகுந்தோரை ஆதரித்துக் காப்பாற்றும் புண்ணிய சீலன் பெரியோர் மொழிகளை மிகு அன்போடுங் கேட்டு நடப்பவன், தரும சொரூபி, உனக்கென்ன குறைவு நேரிடப்போகிறது! ஆனாலும் லோகாசார முறையாக வினவ நேர்ந்தது, நல்லது ஒரு சமாசாரமல்லவா?

எம. சுவாமி! என்ன சமாச்சாரம்?

நாரர. என்றும் என்னாலே காணக்கூடாத ஒரு படபடப்பு, இன்று உன் முகத்தில் உண்டாகியிருக்கிறது, அதன் காரணமென்ன?

எம. முனிவரே! வேறொன்றுமில்லை பூலோகத்தில் துயுமத்சேனன் புதல்வன் சத்தியவான் என்பவனுக்கு இன்றோடு ஆயுள் முடி வடைந்திருக்கிறது. அவன் உயிரைப்பற்றி வரத் தூதர்களை

அனுப்பினேன். அவர்களின்னும் வரவில்லை. ஆகையால் அவர்கள் வரவை நோக்கிய கவனம் இப்படிப் படபடப்பைக் கொடுத்திருக்கிறதென்று நினைக்கிறேன்

நார. அப்படியா! அந்த சத்தியவான் உயிரை அவசியம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமோ?

எம. சுவாமி! அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவரவர்கள் பிராரத்துவ கர்மங்களை அநுபவித்து ஒழிந்தபோது அரைக் கணமாவது பூலோகத்திலிருக்கலாமோ? அப்படியிருந்தால் என் அதிகாரத்துக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

நார. அதனாலே உன் அதிகார யோக்கியதை போய்விடுமென்பதில்லை. ஆனாலும் வழக்கம்போல் உனக்கேற்பட்ட தொழிலைக் கவனித்திருக்கிறாய். தோஷமில்லை.

எம. சுவாமி! என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள் எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?

நார. உனக்கு விளங்காததொன்றுண்டா? நீ தான் கருணாமூர்த்தி ஆயிற்றே! உனக்கு நான் சொல்லவேண்டுமா? நீயே அந்த நன்மையைச் செய்வாய். ஆனாலும் நான் வரும் மார்க்க மத்தியில் கண்டதால் பெண் பரிதாபம் சகிக்கக் கூடுதில்லை. அது விஷயமாகத்தான் நாமே சொல்லலாம் என நினைத்தேன்.

எம. சுவாமி! ஏதோ என்னிடத்தில் சொல்ல வேண்டுமென்பதாக நினைத்தேன் என்கிறீர். வரும் மார்க்கத்தில் ஒரு பெண் பரிதாபத்தைக் கண்டேனென்கிறீர். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத மொழிகளாக என்னை மயக்கத்துக்குள்ளாக விடுகிறீர் காரணமென்ன? சவிஸ்தாரமாகச் சொல்லுங்கள்.

நார. சவிஸ்தாரமென்ன நீ இப்பொழுது பிரஸ்தாபித்த சத்தியவானைப் பற்றித்தான்.

எம. சத்தியவானைப் பற்றியதென்ன?

நார. இல்லை! சத்தியவான் பத்தினி இருக்கிறாளே சாவித்திரி, அவள் எப்படியோ தேவ ரகசியத்தைத் தெரிந்து கொண்டாள்! ஓகோ! நமக்கென்ன மதிமயங்கிப்போய்விட்டது. எப்படியோ தேவ ரகசியத்தைத் தெரிந்துகொண்டாள் என்று சொல்வானேன். அவள் மகாபதிவிரதையாயிற்றே! தேவரகசியம் மாத்திரமென்ன, அண்டரண்ட பகிரண்டங்களில் தற்காலம் நடக்கும் விவகாரங்களை அறிய வேண்டுமென்று நினைத்தாலும் உடனே தெரிந்து கொள்ளும் யோக்கியதை அவளிடத்திலிருக்கிறது. பதிவிரதா

ஸ்திரீகளாலாகாத காரியம் என்ன இருக்கிறது? சாபாநுக்ரக சாமர்த்தியம் அவர்களிடமிருப்பதுபோல் தவசிரேஷ்டருக்குங் கிடையாது. மழை பெய்யென்றால் பெய்யும், பொழுது விடியாதே என்றால் விடியாது. நினைத்ததைச் செய்து முடிக்கும் வல்லமை கணவனைத் தெய்வமென்று கருதுங் கற்புடைய மங்கையர் களுக்கு உண்டு.

எம. முனிபுங்கவரே! விபரத்தைச் சொல்லாமல் பதிவிரதா மகிமையையே விஸ்தரித்துக் கொண்டிருக்கிறீரே! நயநிலை சொல்லினும் சொல்லுக சான்றோர் பயநிலை சொல்லாமை நன்று என்பது வேத மொழியன்றோ? தங்களைப் போன்ற பெரியோர்கள் பயன் தராத வார்த்தைகளைச் சொல்லக் கூடாதே. தாங்கள் இதுநேர பரியந்தம் பிரஸ்தாபித்த சேதி களைக் கேட்டு நான் தெரிந்து கொண்ட பயன் என்ன ஒன்று மில்லையே. ஆதலால் தாம் சொல்ல வேண்டுமென்று விரும்பு கிறேன்.

நார. சத்தியவான் பத்தினியாகிய சாவித்திரி தன் கணவன் ஆயுள் நாள் இன்றோடு முடிவடைந்திருப்பதைத் தெரிந்து கொண்டு மனம் வருந்திக் கதறிக் கொண்டிருக்கிறாள். அந்தப் பரிதாபத்தை என்னால் சகிக்கக்கூடுதில்லை. இதுதான் சேதி.

எம. சுவாமி! அதற்கு யாராலென்ன செய்யக்கூடும்? தன் வினையின் படியே எல்லாம் நடைபெறும். கணவன் இறந்து போகிறான் என்றால் மனைவிக்குத் துன்பம் உண்டாகுந்தான். அழுதாலும் தொழுதாலும் போவது நிற்குமா? இல்லாத வருமா? ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டு ஒன்றாகும், அன்று அதுவரினும் வந்தெய்தும், ஒன்றை நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல் என்றபடி அவரவர் முன் செய்திருக்கும் பாவபுண்ணியத்துக்குத் தக்கபடி கஷ்ட சுகங்களை அனுபவிக்க வேண்டியதுதானே! அதற்காகத் தாங்கள் விசன முறலாமோ? அப்படித் தாங்கள் விசனமுற்றாலும் சத்தியவான் உயிர் எடுத்த உடம்பில் நிற்பதைக் கண்டு சாவித்திரி சந்தோஷமடையப் போகிறாளோ? இல்லையே! அதற்காகத் தாங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்?

நார. அப்படியல்ல! பல நன்மையைக் குறித்து ஒரு ஜீவனை நிறுத்தலாம். ஒரு தீமையைக் குறித்து பல ஜீவன்களை அழிக்கலாம். இவ்வகை ராச்சியாதிகார நேர்மை உனக்குத் தெரியாதா என்ன! ஆதலால் தற்காலம் நீ சத்தியவான் உயிரைக்

கவராதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எம. ஆ ஹா! ஹா! நல்ல வார்த்தை சொன்னீர்! நல்ல வார்த்தை சொன்னீர்! சுவாமி! என் ராச்சியத்தைக் கெடுக்கவா புறப்பட்டீர்? என் தொழிலென்ன? சிவபெருமான் எனக்கென்ன கட்டளை யிட்டிருக்கிறார்? அந்தக் கட்டளையை மீற என்னால் முடியுமா, சத்தியவான் உயிரைப் பூலோகத்தில் விட்டு வருவதெப்படி? இவைகளைத் தாங்களேன் ஆலோசிக்கவில்லை.

நாரா. எமதர்மா! வருத்தப்படாதே. உன்னால் ஆகாத காரியத்தை நான் சொல்லவில்லையே. பூலோக நன்மையைக் குறித்துப் பதிவிரதா மகிமையை விளங்கும்படி செய்தால் நன்றாயிருக்கும் என்றே சொன்னேன்.

எம. முனிபுங்கவரே! நீதியில்லாத காரியத்தை மீண்டும் மீண்டும் சொல்லாதிருக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

நாரா. எமதர்மா! சினங்கொள்ளாதே. நான் சொல்வதைக் கவனி. ஸ்திரீகள் கற்பு நிலையின் லட்சணங்களை உணராதவராகித் தனது கணவன்மார்களைப் பணிவிடைக்குரியவராக்கிக் கொண்டு நரக துன்பத்திற்கு ஈடாகிறார்கள். அவர்களெல்லாம் நற்கெதி பெற வேண்டுமானால், சாவித்திரி மூலமாகக் கற்றுக் கொள்ள ஏதுவாகும் என்ற எண்ணத்தினாற்றான் சத்தியவான் உயிரைக் கவராதிருக்க வேண்டுகிறேன்.

(பாட்டு)

இராகம்-அடாணா தாளம்-ஆதி

பல்லவி

எட்டி நில்லும் நாரதரே
என்னாணையை மீறமதி சொன்னீரே நலமாகுமா (எட்)

அனுபல்லவி

கொட்டியளந்திட்டாலு குருணி பதக்காகாது
கொண்டவினையின்படியே அண்டுவதொன்றும்போகாது (எட்)

சரணம்

முத்தொழில் களைவிதித்த கர்த்தனாகிய சங்கார
மூர்த்திதன் றொழிலைக் கொடுத்தான்-ஜீவர்
முன் செய்த வினைக்குத் தக்க புண்ணிய பாவங்களை
முறைபுரிய எனை விடுத்தான்
அத்தொழிலைநான் தவற லாகுமோ தர்மமே இல்லை
ஆகையினால் நிற்கவேண்டாங் கேளேனானுமது சொல்லை

(எட்)

வ-ம். நாரதரே! நீர் சமீபத்தில் வரவேண்டாம். ஒருவன் நீதியில் வழுவுவானேயானால் அவனுக்கு நல்ல புத்தி போதிக்க வேண்டுவது தம்போன்ற பெரியோர்கள் கடமை. அப்படியிருக்க நீதியைச் செலுத்தும் என்னை அநீதிமார்க்கத்தில் பிரவேசிக்கப் போதனை செய்கிறீர், இது தகுமா? எவனுக்கு ஆயுள் முடிந்ததோ அவன் அதே கணத்தில் என் விசாரணைக்கு வந்து சேரவேண்டியவனாகிறான். அக்காரியத்தில் நான் அஜாக்கிரதையாய் இருப்பேனானால் நீதியைச்செலுத்தாத பாவியும் ஈசுவரக் கட்டளையை மீறிய துரோகியுமாய்விடுவேன். ஏன் விருதா சிரமங்கொடுக்கிறீர்? போய்விடும்.

நார. ஏ மறலி! நீ சற்றாவது ஆலோசிக்காமல் பேசிவிட்டாய். சாவித்திரியினுடைய பதிவிரதா தர்ம மகத்துவத்தை நீ யறியாய் போலிருக்கிறது. சென்ற தூதர்கள் சத்தியவான் உயிரைக் கொண்டுவரமாட்டார்கள். உன்னாலும் சாத்தியப்படாது சொன்னேன்! சொன்னேன்! உனக்குத் துணையாக தேவர்கள் வந்தாலும் முடியாது. நான் மார்பில் அணிந்திருப்பது பிரமமுடிச்சானால் உன்னால் இக்காரியம் நிறை வேறாதிருக்கும்படி நானே கச்சைகட்டிக் கொள்ளுகிறேன். முன்மார்க்கண்டன் விஷயமாய் உதைபட்டதை நினைத்துக்கொள் ஜாக்கிரதை!

(பாட்டு)

ஆயாபஹாரியான்-என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

பல்லவி

கச்சைகட்டிக்கொண்டு நானே உன்
கைவரிசை பார்க்கிறேன் (கச்)

அநுபல்லவி

இச்சைப்படியே எழுந்தங்கு செல்லுவாய்
இன்றுசத்யவானைக் கண்டுவாய் மெல்லுவாய் (கச்)

சரணம்

ஓங்கும் கற்புக்குமேல் உன்வலியானதோ
ஓகோ உன்புத்தி இந் நாளற்றுப் போனதோ (கச்)
மாறாத கற்புக்கு மேலாய்ச் சிறந்தாயோ
மார்க்கண்டனால் பட்ட வாதை மறந்தாயோ (கச்)

(போகிறார்)

தூதர்கள் வருகிறார்கள்

எம. தூதர்காள்! என்ன சமாச்சாரம்? ஏன் நடுக்கங்கொண்டு நிற்கிறீர்கள்? சத்தியவான் உயிரைக் கொண்டு வந்தீர்களா?

தூத. அந்தச் சத்தியவான்பத்தினியாகிய சாவித்திரியின் பதிவிரதாக்கினி எங்களை அணுகுவதற்கு விடவில்லை. நாங்கள் உயிரோடு மீண்டு வந்ததே எங்கள் பெண்டாட்டிமார்கள் தாலிப்பாக்கிய மாயிற்று மகராஜ்!

(சந்தம்)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

கண்ணிகள்

திட்டமுற்றதொரு சத்யவான் மனைவி
கற்பிலுற்றிடுதீ யாச்சரியம்
சென்ற நீங்களனல் அண்டவிட்டதில்லை
யென்று செப்புவது மாச்சரியம்
கற்றலுற்றதொழில் விட்டு மீண்டுவரு
காலபாசமது மாச்சரியம்
கட்டும்நீதிநெறி ராஜ்யபார அதி
காரவென் முறையு மாச்சரியம்
மட்டுமிக்கசின முற்றதிக்கணம
னக்கவற்சிமிக லானது
மடையர் நீங்களிரு வேருமென்னிட
மதித்திடாதுரை கொடுத்தது
வட்டமுற்ற திசை யுற்றொளிக்கினும்
வரிந்தகட்டியவ னாவியை
வந்துசேர்வதுமெய் கொண்டு வந்துவிடும்
வாகனத்தை இது நேரமே

வ-ம். சீக்கிரம் எனது வாகனத்தைக் கொண்டு வாருங்கள்.

தூத. மகராஜ்! வாகனம் மண்டிபோட்டுப் படுத்துக் கொண்டது.

(பாட்டு)

மகனே மகனே என்று - என்ற மெட்டு

இராகம்-மோகனம்-அடதாளம்

கண்ணி

என்றன் ஆக்கினைக்குள்ளே அடங்கிய ஜீவனுக்
கடடா அவ்வளவு மமதையோ-அங்கு
அணுகவிடாதொரு வனிதையா - அவள்

அவன் மனையெனும்பதி விரதையா - இனி
அரைநொடியினிற்சென்று அவனைக்கட்டிவிரைந்து
ஆரண்யமலைகடந்து வருவேன் காலால்நடந்து (ஆக்)

(போகிறார்)

10-வது களம்

நேரம் - பகல்

இடம் - சத்தியலோகம்

பாத்திரங்கள் - பிரமா, நாரதர்.

(பிரமா உட்கார்ந்திருக்கிறார். நாரதர் வருகிறார்)

நார. பிதா! நமஸ்கரிக்கிறேன்.

பிர. கல்யாண்! நாரதா விசேஷமென்ன?

(பாட்டு)

அஞ்சாதே அஞ்சாதே - என்ற மெட்டு

பல்லவி.

சாவித்திரியாள் பதிவிரதாதர்மம்
தாரணியில் மேலுலகி லேது மிகுசிரமம்

அநுபல்லவி.

நாவிற்குள் தாம்வைத்த வாணிக்குமேலாள் - அவள்
நாதன் வயதோ குறைவு ஆனதினால் நோவாள்
ஆவிக்கு நாளிற்ற தாலுற்ற நீரே
ஆயுள்வெகு நாள் புவியில் வாழவருள்வீரே

வ-ம். பிதா! சாவித்திரி மாது மஹாபதிவிரதை. அவள் கணவனுக்கு இன்றோடு ஆயுள் நாள் முடிவடைவதைக் குறித்துக் காட்டில் கதறிக்கொண்டிருக்கிறாள். ஆகையால் சத்தியவானென்னும் அவள் பதிக்கு ஆயுள் நீடிக்குமாறு தாங்கள் அநுக்கிரகஞ் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

பிர. நாரதா! நீ சொல்வது நியாயமாகவில்லை. அவரவர் முன் ஜெனன புண்ணிய பாவவினைக்குத்தக்கபடி நான் சிருஷ்டிக்கும் போதே எனது பிர்மதண்டம், அவர்கள் சிரசிலே நடைபெற வேண்டிய யோக பாக்கியங்களை எழுதிவிடும். அந்த விபரங்கள் அப்போதைக்கப்போது சித்திரகுப்தன் கணக்கேட்டில் பதிவாகிவிடும். பின்னர் அக்கணக்கின்படி முடிவு நாள் தெரிந்து எமதர்மன் லயத்தைச் செய்து புண்ணிய நிலைக்குச் சுவர்க்க

பதவிகளையும், பாவநிலைக்கு ரௌரவாதி நரகங்களையும் கொடுப்பான். இது சாட்சாத் கைலையங்கிரிவாசன் நியதிஇட்ட கட்டளை. இக்கட்டளைக்கு மாறுசெய்ய யாரால் முடியும்? நீயே ஆராய்ந்து சொல்லு?

நார. பிதா! அப்படியில்லை. தாங்கள் சாவித்திரியின் கற்புநிலையும், சத்தியவானின் உத்தம குணமும், நிலைநிற்கும் வண்ணங்கிருபை செய்யவேண்டும்.

பிர. நல்லது, அப்படியே அநுக்கிரகிப்போம், நீ போய்வா.

(நாரதர் போகிறார்)

பிர. ஹே கருணா!

கரு. சுவாமி! என்னை அழைத்த கட்டளை என்ன?

பிர. ஹே கருணா! எமதர்மன் சத்தியவானுயிரை இன்று கவர்ந்து வைவச்சுதபட்டணம் நோக்கி நடப்பான், சாவித்திரி கணவன் உயிரைத்தரவேண்டும் என்று எமன் பின்தொடருவாள். அப்போது அவனுக்குக் கோபம் உண்டாகாமல் கருணையாகிய உனது சொரூப சாந்தத்தை அவனுக்குண்டாக்கி அவள்மீது பச்சாத்தாபம் அடையும்படி நடந்துகொள்வாயாக.

கரு. அப்படியே சுவாமி. (போகிறாள்)

காட்சி - 11

நேரம் - நண்பகல்

இடம் - காடு

பாத்திரங்கள் - சாவித்திரி, சத்தியவான்

சத்தியவான் சாவித்திரியிடம் காய்கனி கொண்டுவர விடை கேட்கவருகிறான்

சா. இன்றுதான் எனது நாயகருக்குக் குறிப்பித்த இறுதிநாள். இவ்விஷயத்தை நன்குணர்ந்துதான் இம்மூன்று நாளாகக் கௌரி விரதத்தை அனுஷ்டித்து வருகிறேன். இன்று எவ்விதத்திலும் எனது பிராணேசரை நான் பிரியக்கூடாது. நாரத மஹாமுனிவர் உபதேசம் ஒருக்காலும் பலப்பிராப்தியை அளிக்காமல் போகாது, நல்லது கவனிப்போம்.

(சத்தியவான் வருகிறான்)

(பாட்டு)

இராகம்-பியாக் தாளம்-ஆதி

கண்ணிகள்

சத். காட்டுக்கேகி யங்கு கண்டு - கனி
காய்கிழங்கு வகை கொண்டு-இங்கு
ஓட்டமாகவாரேன்
உற்றபசியினாலே பெற்றவர் நோவதாலே
ஒருநிமிஷம் தங்கலாமோ இனிமேலே

சா. கோரினேன் என்னைநீர் காடு - பார்க்கக்
கூட்டிக்கொண்டு போமும் மோடு
நாரியாசை யாகினேன்
நலமிதனிலுண்டு எனமகிழ்வுகொண்டு
இப்பொழுது நாடி ஏழைமுகங் கண்டு

சத். கண்ணிழந்தவர் தாய் தந்தை - இங்கு
கலங்கிநோகு மவர் சிந்தை
புண்ணியவதியே கேள்நாம்
இருவருமேபோனால் மிருகம்வருமானால்
அவரெழுந்து எங்குபோ யொளிப்பார்தானாய்

சா. (உமது) தோழர் சுமாலி இருக் கின்றார்-அவர்
துணையாயருகிலேநிற் கின்றார்
தாழுகின்றேன் பாதம்
தடைபுரிவதேது நலமிலை தகாது
தயவுடனே கூட்டிப் போவீர்கை விடாது

சத். வனத்துக்குப் போய்வருவேன் மாதே-இங்கு
மனதுவாடி மெலி யாதே
இத் தினத்திலென்னைப் பெற்றோர்
அவரை நீ கண்பார்த்துக் கவலைகளைத் தீர்த்து
அருமை மொழியாலே தேற்றுபுறங்காத்து

சா. இன்னும் வாதுசெய்வ தேனோ-கூட்டி
ஏகும் இல்லால் சகிப் பேனோ-நீர்
என்னை நீங்கிப்போனால்
எனதுயிர்நில்லாது பதில்மொழி சொல்லாது
விடைகொடும் நீர்வேறு தான் மதி செல்லாது

சத். சகி! பிடிவாதஞ் செய்யாதே. எனது தாய் தந்தையரோ நேத்திரங்களை இழந்தவர்கள். நாமிருவரும் இவர்களை விட்டகன்று போனால் மிருக உபாதை ஏற்பட்டாலும் ஏற்படும், அப்பாவம் நம்மை விடுமா? ஆகையால் நீ இவர்களைக் காத்துக் கொண்டு

இங்கே இரு. நான் வனத்துக்குப் போய் வேண்டிய காய்கனி கிழங்குகளையும் விறகுக் கொடிகளையும் வேண்டிய அளவு சேகரித்துக் கொண்டு, பொழுது அஸ்தமனத்திற்குள் வந்து சேருகிறேன். கவலைப்படாமல் விடைகொடு கண்மணி!

சா. பிராணேசா! தங்கள் வார்த்தையைத் தடுத்துப்பேசுகிறேனென்று சற்றேனும் என்மீது சீற்றங்கொள்ளலாகாது. இன்று எவ்விதமேனும் கருணாநோக்கம் வைத்து உம்மோடு அழைத்துக் கொண்டுதான் போக வேண்டும். நாமிருவரும் பாணிக் கிரஹணம் செய்துகொண்ட நாள்முதல் நேற்றுவரை நான் ஆரணிய விநோதங்காண இச்சையானேன் என்றதற்கு அழைத்துப் போகிறேன், அழைத்துப்போகிறேன் என்று சொல்லி வந்திருக்கிறீர்களேயன்றி, ஒருநாளேனும் உடன் அழைத்துப் போனதே இல்லை, இன்னும் அப்படி ஏமாற்றிப் போகலாமென நினையாதீர்கள். நேத்திரங்களற்ற முதியோர்களைக் காப்பாற்று வதற்கு உமது ஆப்த நேசராகிய சுமாலி இருக்கிறார். ஆகையால் என்னைத் தாம் உடனழைத்துக் கொண்டு போகவேணும். எனக்கும் தங்கள் தாய்தந்தையரிடம் உத்தரவு தாங்களே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

சத். அப்படியே ஆகட்டும். (தாய்தந்தையரிடம்) தாய்தந்தையர்களே! இன்று நான் காய்கனி கொண்டு வரப்போய்வருகிறேன். சாவித்திரியும் உடன் வரப் பிரியப்படுகிறாள். அழைத்துக் கொண்டு போவதற்குத் தங்கள் அனுமதியை எதிர்பார்க்கிறேன்.

துயு. அப்பா! அப்படியே கூட்டிக்கொண்டுபோய் நமக்கு வேண்டி யவைகளைச் சேகரித்துக் கொண்டு சூரியனஸ்தமனத்திற்கு முன் வந்து சேருங்கள்.

சத். பிதா! விடைபெற்றுக்கொள்ளுகிறேன். (போகிறார்கள்)

காட்சி - 12

நேரம் - பிற்பகல்

இடம் - வனம்

பாத்திரங்கள் - சத்தியவான், சாவித்திரி, எமன்

எமதர்மன் தோற்றம், சத்தியவான் உயிரைக் கவர்தல்

சாவித்திரி எமதர்மனைக் கண்டு மாங்கல்ய பிச்சை கேட்குதல்

சத். சகி! இதோ இந்த மரம் காய்ந்து உலர்ந்து போருக்கெழுந்து தோன்றுகிறது. இதன் கிளைகள் நன்றாய் சுவாலித்துப் பற்றி

எரியும். இதனை நான் கண்டகோடாரியால் சிறிது சிறிதா வெட்டுகிறேன். நீ அவைகளைப் பொறுக்கிக் கட்டு. (வெட்டிக் கொண்டிருக்கும்போது எமன் உருத்தோற்றங் கண்டு) ஆ! ஆ!! சாவித்திரி.

(பாட்டு)

வருத்தாதே மன்மதா - என்ற மெட்டு

இராகம்-சாவேரி - தாளம்- சாப்பு

பல்லவி

வருகிறார் கண்மணி
என்னைப்பிடிக்க அதோ (வரு)

அநுபல்லவி

கருமைமேனி யுடையார் கையில் சூலமுடையார்
அருமையிலே என்னை அடித்துப் பிடித்திழுக்க (வரு)

சரணம்

வக்ரதந்த முடையார் வாய்பிலம் போலுடையார்
கைக்கதையைச் சுழற்றிக் கால்விசை கொண்டதட்டி
செந்தீப்பொறி பறக்கச் சிவந்தகண்களைக் காட்டி
பந்துபோல சுருட்டும் பாசக்கயிற்றைநீட்டி (வரு)

வ-ம். ஆ! என்ன செய்வேன். சாவித்திரி! நீ எங்கே இருக்கிறாய்? என் சமீபத்தில் வா. ஐயோ, என் பொறி புலன் கலங்குதே! புத்தி தத்தளிக்குதே! நினைவு அடிக்கடி மாறிவருகின்றதே! பேசக்கூட நா எழவில்லையே! ஏதேது உயிர் பிழைப்பதாகத் தோன்ற வில்லை, நேத்திரமிழந்த என் தாய்தந்தையரை இனியார் காப்பாற்றுவார்? சகி! உன்னை இந்தக் காட்டில் தனிமையாகக் கைவிட்டுப்போகும் பாதகனாகவிட்டேனே! இப்படி வருமென்று நான் சொப்பனத்திலும் நினைக்கவேயில்லை. கருணாகரா! மகாதேவா! முக்கண்மூர்த்தி! அநியாயமாக இந்த ஆரணியத்தில் கண்ணிழந்த பெற்றோரையும் அன்புமிகுந்த தேவியையும் பரிதவிக்கவிட்டுப்போகும் அபாக்கிய வந்தனாகிவிட்டேன். ஆ, காதலி! என்னைச் சத்தியவானென்று நம்பிவந்தாயே, உன்னை ஒரு நாளும் பிரிந்திருக்க மாட்டேனென்று சொல்லிய வாக்கை எப்பொழுது காப்பாற்றாதவனாகப் பிரிந்து போக எத்தனிக்கின்றேனோ, அப்பொழுதே அசத்தியவானானே னன்றோ? அடே சத்தியவான்! நீ படு மோசக்காரன், வயோதிகத்தாலும், தேகஉபாதைகயாலும், மனோ வியாகூலத்

தாலும், பீடிக்கப்பட்ட இருமுதியவரைக் காப்பாற்ற யோக்கிய மில்லாதவனான மாதா பிதாத்துரோகி! யௌவன ரூப சௌந்தரியவதியாகிய ஒரு இளம்பெண்ணை நட்டாற்றில் கைவிட்ட சண்டாளா! நீ எதற்காக மானிடஜென்மமெடுத்தாய்? உலகம் நிந்திக்கும் வசைக்கல்லவோ ஆளாகின்றாய். ஐயோ! பாவம்! பாவம்!! பூர்வ வினை இருந்தவாறென்னே! **"பல்லாவுளுய்த்து விடினுங் குழக்கன்று வல்லதாந் தாய்நாடிக் கொடலைத் தொல்லைப் பழவினையுமன்னத கைத்தேதற்செய்த, கிழவனை நாடிக்கொளற்கு"** என்றவாறு பல பசுக்கூட்டத்தின் மத்தியிலே ஒரு இளங்கன்றைச் செலுத்தினால் கன்று மற்றும் பசுக்களை அணுகாமல் தன் தாயையே நாடிச்செல்லுவது போல் ஒருவன் பூர்வத்தில் செய்த பாவமும் தன்னையே தொடருகின்றது.ஐயோ! முன் ஜென்மத்தில் என்ன பாவங்களைச் செய்தேனோ, கொண்ட மனைவியை விடுத்துத் தாசிக்கிரகம் புகுந்தேனோ? கூலி குறைத்தேனோ? குறை மரக்கால் இட்டேனோ?அந்நியர் பொருளை அபகரித்தேனோ? கற்புடைய மங்கையர்க்குக்கஷ்டத்தை விளைவித்தேனோ இன்னும் தெய்வத்துக்கடுக்காத செயல்களைச் செய்தேனோ? ஒன்றுமறியேனே, ஆ! சாவித்திரி! மார்படைக்குதே! தலை கிறுகிறுவென்று சுழலுகின்றதே! நீ எங்கிருக்கிறாய்? அருகில் வா. ஆ! எதற்கிவ்வளவு கஷ்டம்? ஆ, கண்மணி! கறுத்த சரீரமுடையவராய், கையில் சூலம், கதை, பாசம் முதலிய ஆயுதங்களை ஏந்தி வக்ரதந்த கோரரூபமுடையவராய் ஒருவர் என்னை அச்சுருத்தி அழைக்கிறார். ஆ! எனக்குப் பயமாக இருக்கிறதே! இங்கு நடக்கும் விபத்துக்களை என் தாய் தந்தையருக்குச் சொல்லுவாரில்லையே! ஆ! சாவித்தரி! சாவித்திரி!!

சா. (நெஞ்சில் மூக்கில் கைவைத்துப் பார்த்து) ஆ! நாதா!

(பாட்டு)

ஐஸா நாலே நாலே - என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான்-தோடி-ஆதி தாளம்

பல்லவி

இனிநா னென்செய்வேனே தனியாயெனை
நடுவனந்தனிலே நீ விடலானீர்
பிராணேசா நீ விடலானீர் (இ)

அநுபல்லவி

ஞாயமாமா மாதெனைஇந் நாளிலொண்டி யாய்விட்டீர்
நாசகால மானதோ ஆசைமாதைக் கைவிட்டீர் (இ)

சரணம்

மஞ்சள்குங்கு மங்களப மாலையாவும் போச்சுதே
மங்கைஎன்னைக் கண்டபேர்கள் நிந்தைபேச லாச்சுதே (இ)

கானம்போ னாரிருவர் காய்கனிகொண் டேயின்று
கடுகிவருவா ரெனவேநினைவார் கண்ணில்லாரங்கேநின்று (இ)

உம்மைநீங்கி உலகினில்நா னுயிருடனே வாழ்வேனோ
ஊரிலுள்ளார் சகுனம்பார்த்து ஓதமுகமுந்தாழ்வேனோ (இ)

நாரதர் சொன் னவாக்கிந்த நாளிலே பலித்ததோ
நாடிழந்து காடுவந்த தாலேநெஞ்சஞ் சலித்ததோ (இ)

மாநிலத்தி லாசைநீங்கி வாழ்வையெல்லாந் துறந்தீரோ
மானேஉன்னைப் பிரியேனென்ற வார்த்தைதன்னை மறந்தீரோ (இ)

கௌரிவிர தத்தின்பலன் கைகொடுக்கு மென்பரே
கானகத்தில் நீரிறக்கக் காரணமேன் அன்பரே (இ)

மணமுடித்தோ ராண்டிலேநீர் வாணாள்நீங்க ஞாயம்
மாநிலத்தி லும்மையன்றி மற்றுண்டோசகாயம் (இ)

வ-ம். ஆ! தெய்வமே! இனி நானென் செய்வேன். தருமம் பொய்த்துப் போச்சோ! கௌரிவிரதநோன்பு பலன் கொடுக்காத காரணமென்ன? நாரதமுனிவர் உபதேசம் பழுதுபட்டுப்போக நியாயமேது? ஒருவரும் பக்கத்தில் துணையாகக் காண்கிலேனே. கண்ணிழந்த மாமன் மாமியாருக்கு இனி யார் உதவி செய்வார்கள்? பிராணேசா! பிராணேசா!! நீர் ஒருநாளும் என்னைப் பிரியமாட்டேனென்று முன் வாக்குக் கொடுத்தீரே! அதனை மறந்து போனீரோ? புருஷனை இழந்த பெண்கள் பூமியில் உயிர்வாழ்வதில் என்ன நலமுண்டு? நல்ல ஆகாரங் கொள்ளலாமா? அலங்கார ஆபரணம் பூட்டிக்கொள்ளலாமா? சுகந்த பரிமள மலர்மாலைகளைப் புனையலாமா? உயர்ந்த பீதாம்பரசோபித ஆடைகளை உடுக்கலாமா? ஒருசுகத்துக்கும் பாத்தியமில்லாமல் போகவல்லவோ நேரிடலானது. நாதா! இனி என்னை விதவை வருகிறாள் என்று கண்டோர் சகுனம் பார்த்து நிந்திக்கப் பூமிக்குப் பாரமாக வைத்து விண் புகுந்தீரோ? நீர் போயிருக்குமிடம் நானனறியேனோ? அங்கு வருவதற்கு எனக்கு

வழிதெரியாதென்றா நினைத்துவிட்டீர்? இதோ பாரும் நீரிருக்குமிடத்திற்கு நான் ஓடிவந்து சேருகிறேன். இப்படி வீண் புலப்பங்கொண்டு காலங்கழிப்பது நலமல்ல? நான் பதிவிரதை என்பது உண்மையானால் எந்த மஹானுபாவர் எனது நாயகன் உயிரைக் கவர்ந்தாரோ அவர் இப்பொழுது என் நேத்திரத்துக்குத் தோன்றக் கடவாராகுக.

(எமன் தோற்றம்)

ஏனோ என் மீதில் கோபம் - என்ற இங்கிலீஷ் நோட் மெட்டு*

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

துக்டா

சா. திவ்ய புருஷ னீர்யார்

எம. தென்திசைத் தர்மனென்பர்

சா. இவ்விடம் வந்ததே னீர்

எம. இவனுயிர் பற்றினேன் பார்

சா. இவரெனதொரு பதியுயிரினை விட்டிடுவீர்

எம. எதிர்மொழிவது விடுசரியில்லை எட்டிடு நீ

சா. அவர்புகுமிடம் எனதுயிரையும் வைத்திடுவீர்

எம. அயனெழுதிய தினமுடிவிலை கிட்டுவதேன்

சா. ஐயா பாதம் பணிந்தேன்

எம. பொய்யாது நான் மொழிந்தேன்

சா. மெய்யாய் மிகவும் நொந்தேன்

எம. வையாதுயிர் கவர்ந்தேன்

சா. அறநெறிநிலை கருதிவிடுவீர் அன்பனே நீர்

(எமதர்மராஜன் மறைதல்)

சா. இங்கு தோன்றிய திவ்விய புருஷராகிய எமதர்மராஜர் மறைந்தனர். இனி நாம் சும்மா இருந்தால் நாயகன் உயிரை மீட்டுக் கொள்ள முடியாது. அவரைப் பின்தொடர்ந்து செல்லும் வழி மறித்து மாங்கல்ய பிச்சை கேட்க வேண்டும். அதுவரை இவ்வுடலை மிருக பட்சிகள் சின்னா பின்னப்படுத்திவிடாமல் இருக்கத் தழை கொடி களினால் மூடிப் பத்திரப்படுத்திப் போடுகிறேன். (இலைகளால் மூடி) ஓ, ஆகாயவாணி! பூமாதேவி! வனதேவதைகளே! நீங்களே

* வெனிசு வர்த்தகன் நாடகப்பாடல்

எனக்குத் தஞ்சமன்றி இவ்வேளை உங்களை அன்றி வேறு ஒரு துணை கிடையாது. நான் எமதர்மராஜாவைக் கண்டு மீண்டுவருகிற பரியந்தம் இத்தேகத்துக்கு யாதொரு கெடுதலும் வராமல் பாதுகாக்க வேண்டியது உங்களைச் சேர்ந்த கடமையே. நமஸ்காரம். போய் வருகிறேன்.

காட்சி - 13

நேரம் - பிற்பகல்

இடம் - அடுத்த வனம்

பாத்திரங்கள் - சாவித்திரி, எமன்

சாவித்திரி தனது மாமன் மாமியாருக்கு

கண்ணொளி விளங்க வரங் கேட்குதல்

(பாட்டு தர்க்கம்)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணி

சா. நாயகன்மாள நேருமேயானால்
மாதர்கள்வாழ லாகுமோ பூமியிலே
அதனால் எனையும் அவர்போமிடங்கொண்டு செல்லும்

வேறு கண்ணி

எம. உன்னாயுள் தீர்ந்திடும் அந்நாளிலே
உன்னுயிர்கொண்டுபோ வேனானே
இன்று போகனே
நெறி மாறேனே கேளாய் (உன்)

சா. மாங்கல்யமில்லா மாதர்கள் வந்தால்
பாங்கிலே கண்டோர் பாவச்சகுனமென்பார்
பதிபோய் உயிர்வாழ் வது பாரிலவதியன்றோ

எம. தான்செய்த தீவினை தள்ள லாமே
தையலே என்னுடன் நீ வாது
செய்வ தகாது
உயிர் மீளாது முன்னே (தான்)

சா. கண்ணில்லா பெற்றோர் உண்ணுதற்காக
காய்கனிகொள்ள காட்டுக்கென்னோடு வந்தார்
கதியார் முதியோர் களைக் காக்க ஒருவரில்லை

எம. கர்த்தனுண்டெல்லோர்க்கும் காவல்செய்ய
காணுவாய் கர்மமொன் றால்கஷ்டம்
அது சுழல்வட்டம்
சிவன் அருளிஷ்டம் அந்த (கர்)

சா. வ-ம்.சுவாமி! தாங்கள் சினங்கொள்ளலாகாது. தயவு செய்ய வேணும். கணவனை இழந்து உயிர் வாழ்வது பெண்களுக்குத் தகாது. ஆதலால் தாங்கள் என் கணவனுயிரோடு என்னுயிரையும் பற்றிக்கொண்டு போகப் பிரார்த்திக்கிறேன்.

எம. கணவனே தெய்வமென்று கருதிய காரிகை! உனக்கு ஆயுள் நாள் முடியவில்லை. நான் முகத்தேவரால் வரையப்பட்ட லிபியின் படியே எவருக்கு விதி முடிந்ததோ அவரைப் பற்றிக் கொண்டு போகும் நிலையைச் சாட்சாத் கைலையங்கிரிவாசன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறாரன்றி, என்னிஷ்டம்போல் எவரையும் பற்றிக் கொண்டு போகுஞ் சுவாதீனத்தை நான் பெறவில்லை. உன் பர்த்தா ஆயுள் முடிந்தது பற்றிக் கொண்டேன். உனக்கு ஆயுள் முடியுங்காலம் பாக்கி இருக்கிறது. அந்தக் கணக்கை அனுசரித்து முடிவறிந்து உன்னைப் பற்றிக்கொண்டு போவேன். இப்பொழுது உன்னைப் பற்றிப் போக எனக்கு அதிகாரமில்லை. ஆதலால், நீ மீண்டுபோய் உன் பதிக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்கு விதிகளைச் செய்வாயாக. (மறைதல்)

சா. ஐயோ ! திடீரென்று மறைந்துவிட்டாரே. நான் நிச்சய பதி விரதையானால் மறைந்த மகானுபாவர்மீண்டும் எமக்குத் தோன்ற வேண்டும்.

(எமன் தோன்றுதல்)
(பாட்டு தர்க்கம்)
வாருமையா இதுவே நற்காலமே - என்ற மெட்டு
கண்ணி

(என்னைக்) கண்ணால் திரும்பிப்பாருமையா உயிர்க்
காதலனாவி தாருமையா

எம. எண்ணுவதேனோ இசைவது நானோ
சா. புண்ணியந்தானோ உமக்குப் (புண்)
புருஷனாவி கொண்டீர் (என்)

(தோரா)
எனதோடு வனம்நாடி வரலான மணவாளனாவியை
இதுபோது கவர்வாகி வழியேகு முமைநாடி ஓதினேன்

மனதேநல் மகிழ்வாகி அருளேசெய் துயிர்தாரும் நீதியை
மறவாத நிலையோடு மரசாளும் எமராஜ தேவனே

(பாட்டு)

எம. வேதன் விதித்திட்ட விதிதவறாது
வீணாயேன்வாது அப்பால்போ (வீணா)

சா. சினங்கொள்ளலாகாது என்னை (கண்)

எம. வ-ம். என்னுருவம் ஒருவருக்குந் தோற்றமாட்டாது. உனது பதிவிரதா தரும மகத்துவத்தினாலே நேரில் பார்த்தனை. அம்மகத் துவத்துக்கு மெச்சி இதமான வார்த்தைகளாலே நீதிகளை எடுத்தோதினேன். நீ மீண்டும் மீண்டும் என்னை வழிமறிக்கத் தொடருகிறாய், இது நியாயமில்லாத காரியம். ஆகையினாலே,

(பாட்டு தர்க்கம்)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

(கண்ணி)

எம. எட்டி வனத்திலுற்று நடப்பதை
விட்டுவிடு வனிதா

சா. இச்சைவிளைத்தவர் நட்புயிரைத்தர
ஏது வாது ஏழைக்கிரங்குமையா

எம. இட்ட விதிப்படி முற்றுமதைப்புவி
தப்புவதே தில்லையே

சா. இப்புவியிற்பதி பிச்சைகொடுத்திடும்
ஏகேன் ஏகேன் இல்லையென்றாலுண்மையாய்

எம. நாத னுயிரன்றி வேறுவரமிங்கு
நான் தருவேன் கேட்டுக்கொள்

சா. இந்நாளில் மாமன்மாமி யாரின்விழி முன்போல்
நாடக்காண நல்வரந் தாருமையா

எம. அப்படியே தந்தேன் அப்படியே தந்தேன்
அண்டாதே என்னை நீ போ

சா. ஆளனில்லாமட மாதர்கள் வாழ்வதும்
அன்போ என்போ லார்படு பாவியையா

(சாவித்திரி எமன் பின் தொடருகிறாள்)

காட்சி - 14
நேரம் - பிற்பகல்
இடம் - மறு வனம்
பாத்திரங்கள் - எமன், சாவித்திரி
(சாவித்திரி தனது மாமனாரிழந்த
நாடுநகரங்களை மீட்க வரங்கேட்குதல்

எம. (தனிமொழி) சண்டனென்று எனக்கு ஒரு நாமமுண்டு. அதற்குக் கோபக்காரன் என்பது பொருள். அப்படியிருக்க என்னை வழிமறித்து வாதாடிய சாவித்திரியினிடம் அனுப்பிரமாணமாவது சினமுண்டாகவில்லை. அவளது மாமன் மாமியார் இருவருக்கும் கண்ணொளி உண்டாக வரங் கொடுத்து வந்தேன். இனி அவள் மீண்டும் போய்விடுவாள். நாம் நமது இருப்பிடம் நோக்கி விரைவில் நடப்போம்.

சா. சுவாமி! நமஸ்கரிக்கிறேன்.

(பாட்டு தர்க்கம்)
(கபரதரஹான்-என்ற மெட்டு)
இராகம் இந்துஸ்தான் தோடி - தாளம்- ஆதி
பல்லவி

எங்கு நீ வந்தாய்
இன்னமும் என்னைத் தொடர்ந்து (எங்)

அநுபல்லவி

எத்தனைவிதமாகவே புத்தியுனக்குச் சொல்லியும் (எங்)

பல்லவி

சா. நானிங்கு வந்தேன் என்
நாதனுயிர்தேடி ஓடி (நா)

அநுபல்லவி

நாளுமட மாதர்மண வாளரை நீக்கலாகுமோ (நா)

சரணம்

எம. பங்கயனெழுதியபடி தவ றாது
பாரில் நான்பற்றிய பிராணன்மீ ளாது
இங்கு வருந்திடில் லாபமு மேது
என்னுருவங்கண்டஞ்சாமல் எட்டிவிரைவாயிப்போது (எங்)

சரணம்

சா. ஆனதால் பதியுயி ரளித்திடு மெனக்கு
அகற்றினால் நானவருடனிருப் பதற்கு
கோனே என்னுயிரையுங் கொண்டுபோமிதற்குக்
கொஞ்சமுந்தடைசெய்யாதீர் வஞ்சகமாகாதுமக்கு (நா)

எம. உனது மதுரமான மொழிகளைக் கேட்டு
உளமகிழ்ந்தேனுளபதி உயிர்தள்ளிப் போட்டு
எதுவேணுமேனு மினித் தருவேனென் மாட்டு
இப்பொழுதே பெற்றுக்கொள்ள அப்பொருளைச் சொல்லிக்காட்டு
அட்டி செய்திலேன்
ஆ!ஆ! வெகுநேரமாச்சு (அட்)
ஆரண்ய மலையக்கினி யாறுகடந் தேகவேணும் (அட்)

வ-ம். பெண்ணே! உனது மதுரமான வாசகம் என்னை மெய்மறக்கச் செய்தது, மெச்சினேன்! மெச்சினேன்! உன் புருஷன் உயிரைக் கொடுப்பதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. ஆகையால் அது ஒன்றை நீக்கி வேறு எவ்வித இஷ்டமோ அவ்விதமான வரம் கேள் தவறாமல் கொடுக்கிறேன்.

(தோரா)

சா. அன்பான தொண்டர்களை யாதரவு செய்யுமிகு நேசனே
தென்பாலிருந்தரசு செய்துவருகின்றதர்ம ராஜனே
முன்பே இழந்திட்ட நாடுநகரங்களை என்மாமனார்
இன்பா யடைந்து நலமேவவரம் நீரருள வேணுமே.

வ-ம். பாதம்போற்றி வந்திருக்கும் பக்தர்களுக்கு வேண்டிய வரம் கொடுக்கும் தேவா! எனது மாமனார் தமக்குச் சுவாதீனமாக உள்ள ராச்சிய செல்வத்தை அந்நிய அரசன் கவர்ந்து கொண்டானன்றோ அந்தச் செல்வாதிகாரத்தை மீண்டும் என் மாமனால் அடையும்படி அனுக்கிரகிக்க வேண்டும்.

(பாட்டு)

(வந்தேன் வந்தேன்-என்ற மெட்டு)

இராகம்-கல்யாணி-ஏகதாளம்

துக்டா

தந்தேன் தந்தோன் தந்தேன் இனியகல் (தந்)
தகுதிப் படிசொற் கிசைவுற் றுனதற்
புதமுற் றியகற் புயர்வுக் கருளித் (தந்)

தாமதித்தினி மேலிருப்பது
மேன்மதித்துநீ போ போ போ

(எமதர்மன் மறைகிறார்)

காட்சி - 15

நேரம் - பிற்பகல்

இடம் - மலை

பாத்திரங்கள் - சாவித்திரி, எமன்

(சாவித்திரி தனது தாய் தந்தையருக்கு
ஆண் சந்ததியுண்டாக வரங்கேட்குதல்)

(பாட்டு தர்க்கம்)

(ஏனோ-என்மேல் பழிசுமத்துகிறீர்-என்ற மெட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

துக்டா

சா. எமதர்மராஜா என் நாத னுயிர் தாரும்

எம. ஈதென்னா லாகுமா

சா. வேதனை போகுமா

எம. இதுவே ளையில்வா துரையா டுவதேன்விடு

சா. தர்மராஜா (நா)

எம. ஆயுளு மேமுடி வானத னாலென தாணையை மீறிடலாமா

சா. மணவாளனுமாகிய நாயக னாருயிர் மாயவும் வாழுவதாமா

எம. யாரென்ன செய்யலாம்

சா. நீர் தயை செய்யலாம்

எம. அயனார் வரைநாள் முடிவா னது போய்விடு

சா. தர்மராஜா (நா)

எம. வ-ம். மாதே! என்னையேன் மறுபடியும் வழிமறித்து தொந்தரை செய்கிறாய்? என்னால் கூடுமான காரியத்தை நான் செய்யலாமே யல்லாமல் கூடாத காரியத்தை எப்படிச் செய்வது? ஈஸ்வர கட்டளையை மீறலாமா? எனக்கு ஈஸ்வரனிட்ட கட்டளையானது முடிந்தவனை அரைக்கணநேரமும் பூமியில் வையாமல் பற்றிக் கொண்டு போய் அவன் ஆயுள்வாணாட்களில் செய்த பாவ புண்ணிய வகைகளுக்குத் தக்கபடி பதவிகளில் ஏறவிடுவதும்

தண்டிப்பதுமாகும். இவையல்லாமல் என்னிஷ்டப்படி ஒரு ஜீவனை மீட்டுக் கொடுப்பதற்கு அநுமதியில்லையே? நான் என்ன செய்வேன்! பிராரத்துவ கர்மம் எல்லோரும் அநுபவித்தே ஒழிக்க வேண்டும். ஆகையால் எதிர்மொழி கொடுக்காமல் போய்விடு.

விருத்தம்

நாதனை இழந்தமாதர் நாட்டினி லிருப்பதாலே
வேதனை யடைவதன்றி வேறொரு பலனுமில்லை
பேதைநான் கலங்கியும்மைப் பின்தொடர்ந்தோடி வந்து
பாதமும் பணிந்துநின்றேன் பர்த்தாவி னுயிரைத்தாரீர்.

வ-ம். சுவாமி! தங்களுக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப் போகிறேன். உலகத்துவம் எவர் பெறுகிறாரோ அவர் ஈயலாம். இல்லாதார் கொடுப்பாரோ. உடையவரே கொடுக்கும் யோக்கி யதையுடையவர். உண்டு கழித்தவனிடம் ஒரு பிடி சோற்றுக்குப் போ, உடுத்திக்கழித்தவனிடம் ஒரு முழத் துணிக்குப்போ என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்துமே. உயிரைக்கவரும் நிலையுள்ள தாங்கள் அதனை மீட்டுங்கொடுக்க அதிகாரமில்லை என்பது எப்படிப் பொருந்தும்? கருணை செய்து கைப்பற்றிய கணவனுயிரை விட்டுப் போகப் பிரார்த்திக்கிறேன்.

(பாட்டு சந்தம்)

இராகம்-பியாக் தாளம்-ஆதி

(கண்ணி)

வாசமாமலரில் வாழும்நான் முகன் வரைந்த நாள்களு மகன்றதால்
வந்துகொண்டுவிழி கண்டதுண்டுமதி மாறும்நாதனுயிர் மீளுமா
வீசமானசிறி தேனும் நீதிமுறை மேவலே அரசு காவலாம்
மித்தையாகுமுல கத்தில்வேதநெறி விட்டொழிப்பதொருசட்டமா
பாசமானதொரு மாயமாமிது படைப்புநாள்முத லடுத்ததாம்
பதவிபுண்யவினை ஜீவகோடியுழல் பாதையே பெரிய வேதையாம்
ஆசையாலழிவு நேருமேயலது அற்பலாபமு மளிக்குமா
ஆதலாலினியெ னோடுவாதுமொழி ஆடிடாமல் வழிகூடுவாய்

வ-ம். நீ என்ன சொன்ன போதிலும் இவ்விஷயத்துக்கு என் மனம் இசையாது அப்பால் போய்விடு.

(பாட்டு தர்க்கம்)

(ஆபரணவகை யாவுந்தந்தேனினி-என்ற மெட்டு)*

* நாடகம்: கோவலன் சரித்திரம்

இங்கிலிஷ் நோட்

கண்ணி

என் நாதனுயிர்தனைத் தாருமையா - இந்
நாளினிலே கண் பாருமையா

எம. நாடியெனை நீதொடர லானது மடாது

சா. நான்வருவேன் போகுமிடம் யாவினும் விடாது

எம. நலமலமொழி வதைவிடுவிடு போ போ போ போ

சா. என் நாதனுயிர்

எம. வேறு வரங் கேள் தருவேன் மாறுசொல்லேன் மாதே

சா. வேணுமென்தந் தைக்குமைந்தர் நீர்கொடுமிப்போதே

எம. மிகமகிழ்வோடு மகவருளினேன் நீ போ போ போ

சா. நாதனுயிர் (எமதர்மன் மறைகிறான்)

காட்சி - 16

நேரம் - பிற்பகல்

இடம் - அக்கினியாறு

பாத்திரங்கள் - சாவித்திரி, எமன்

(சாவித்திரி தனக்கு ஆண் சந்ததியுண்டாக வரங்கேட்குதல்)

எம. கற்பில் மிகுந்த சாவித்திரிமாது யாசித்த பிரகாரம் அவள் தந்தைக்கு ஆண் சந்ததி உண்டாக வரங்கொடுத்து வந்து விட்டேன். இனிக் கவலை யில்லாமல் நமது வைவசுத பட்டணம் நோக்கிப் போகலாம்.

சா. சுவாமி! இப்படி எளியாளை விட்டுத் தாங்கள் வரலாமா? என் மனோரதம் நிறைவேறாமல் மீண்டு போவதெப்படி? மாங்கல்யப் பிச்சை கொடுக்கப் பிரார்த்திக்கிறேன்.

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

சந்தம்

எம. அண்டகோடிக ளழிந்திடும்பெரிய ஜந்துபூதமு மழிந்திடும்
அமரரோடுமக பதியும்நாகருல காருமாதவரும் யோகரும்

எண்டிசாமுக மிகுந்தநீதிபரும் இன்பதுன்பம்விடு மோனரும்
இயக்கர் கந்தருவர் சித்தர் சாரணரும் இசையைநாடியகின் னரர்களும்
முண்டகாதிபனும் மாலும்யானும்வரு முடிவுநாளிலழி வோமெனில்
முன்னுமுன்கணவ னென்னுமன்னனுடல் முற்றுநாளும்நிலை
நிற்குமா
அண்டிவாதுபுரி கின்றரேதுவரு மாசையே பெரிய மோசமாம்
அட்டி செய்தவனை விட்டுமேன்மைபெற லாகுவாய் இனிநீ ஏகுவாய்

வ-ம். ஏ மாதே! இந்திராதி தேவரும் நானும் பிர்மவிஷ்ணுக்களும் ஒவ்வொரு கற்பங்களில் அழிந்துபோவோம் என்றால் உன் கணவனுயிர் என்ன பெரிதா? பிறப்பு உண்டான பொழுதே இறப்புமுண்டு. ஏன் வீண் மன்றாட்டம்? உன்னிருப்பிடம் போய்ச்சேர்.

விருத்தம்

சுற்றமிக்க விருந்தென்ன பொருள்கள்பல விருந்தென்ன
சூழ்ந்து கொண்டு
பெற்றவர்க்க மிருந்தென்ன அரண்மனையு மிருந்தென்ன
பேசவல்ல
கற்றவித்தை யிருந்தென்ன பெண்களுக்குக் கணவனில்லால்
கதிவே றுண்டோ
பற்றலுற்ற என்கணவ னாவிகொடுத் தேழைமுகம்
பார்ப்பீ ரின்றே

வ-ம். சுவாமி! கல்வி இருந்தாலென்ன, செல்வமிருந்தாலென்ன? சுற்றிப் பந்துவர்க்கத்தினர் இருந்தாலென்ன? பெண்களுக்குப் புருஷனல்லவோ பிரதானம்? ஆகையால்,

(பாட்டு தர்க்கம்)

(பையல் மாரன் எய்யும் வாளி-என்ற மெட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்

கண்ணி

சா. வாதையாகு தாதலாலே நாதனுயிர் தாருமே
எம. பேதைமதி ஓதிடாதே தீதிதாலே நேருமே
சா. என்னதீது மன்னனாவி பின்னமான பின்னையே
எம. இன்னுமேனோ இன்னலோத முன்னுறாய் நீ என்னையே
சா. நம்பிவந்தே னன்புகொண்ட துன்பந்தீரு மேகவே
எம. வெம்பவேண்டாம் இன்னுவரம் ஒன்றுகேள்வே றாகவே

வம். உத்தமகுண வனிதையே! உன்நாயகன் உயிரை அல்லாமல் இன்னுமொரு வரங்கேள் தவறாமல் கொடுக்கிறேன்.

(பாட்டு தர்க்கம்)

(தாசரோது வேதகீத-என்ற மெட்டு)

இராகம்-பியாக் தாளம்-ஏகதாளம்

கண்ணி

பரமனேவல் நன்மைதீமை	பகுதிகண்டவா
பாசசூல தண்டுகையின்	மீதுகொண்டவா
பாவியோர் கூவவே	மோதிநின்றவா
பக்தர்மீது கருணைகொண்டு	ரட்சிக்கின்றவா

பாரீர் நீரன்போடு
பாலனொன்று நான் ஜெனிக்க ஆவலாகினேன்
பகருமிவ் வரமதை அருள் புரிந்திடும்

எம. பாலனொன்று நான் ஜெனிக்க ஆசிதந்தே னினியகல்

(எமதர்மராஜன் மறைகிறார்)

காட்சி - 17

நேரம் - மாலை

இடம் - வைவசுதபட்டணத்தின் கோட்டையின் வெளிப்புறம்

பாத்திரங்கள் - எமன், தூதர்கள், சாவித்திரி

(சாவித்திரி தனது கற்புமகிமையால் கோட்டைக் கதவைத் திறக்கும்படி செய்து எமதர்மராஜனைக் கண்டு நாயகன் உயிரை மீட்டுக்கொள்ளல்)

எம.(வ-ம்.) நாம் சாவித்திரி மாதுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து விட்டு அவளை அறியாமல் ககனமார்க்கமாக வந்துவிட்டோம். யாரடா கிங்கிரர்களே! சாவித்திரியெனும் பெண் இங்கே வந்தாலும் வருவாள். அவளை உள்ளே பிரவேசிக்காதபடி இக்கோட்டை வாசல் கதவுகளையெல்லாம் பூட்டிவிடுங்கள் ஜாக்ரதை?

தூத. உத்தரவுப்படியே மகராஜ்!

சா. நான் பின் தொடர்ந்து வருகிறேனென்று எமதர்மராஜா கோட்டை வாசலைச் சுற்றிப் பூட்டித் தாளிட்டிருக்கிறார். கடல் தாண்டிய நமக்கு கால்வாய் தாண்டமுடியாதா பார்ப்போம்?

விருத்தம்

முக்கோட்டை வல்லவர்கள் முரண்டு செய்ய
முன்னவரின் வலியடக்க முயன்றதாலே
அக்கோட்டைமார்பிலுங் கையிலுந் தாமேந்தும்
அரன்பூமி ரதமூர்ந்து மழித்தசேதி
திக்கோட்டை படவிளங்க லுண்மையானால்
சேயிழையா ளென்கற்பு மகிமையாலே
இக்கோட்டை கதவு திறந் திடுதல் வேண்டும்
எமனிடம் போய் நான் கேள்வி யிசைக்குமாறே

(கோட்டைக்கதவு திறக்கின்றது)

எமதர்மராஜன் தர்பாரில் வீற்றிருக்கிறார்

சா. சுவாமி! நமஸ்கரிக்கின்றேன்

எம. அம்மா! பதிவிரதா! நீ கேட்ட வரங்களை எல்லாம் கொடுத்து வந்தேனே, மீண்டும் எதற்காக இங்கு வந்தாய்?

சா. சுவாமி! ஒரு சந்தேகம் ஏற்பட்டது, அதைத் தங்களிடம் கேட்டு நிவர்த்தித்துக் கொண்டு போகலாமென வந்தேன்.

எம. அது என்ன சந்தேகம்?

(விருத்தம்)

வித்தில்லாச் சம்ப்ரதாய மேலில்லை கீழுமில்லை
சத்திய மென்னும்வேதம் தனையனைப் பெறுவா யென்றீர்
கர்த்தனே அன்பனான கணவனில்லா வோர்மாது
புத்திரன் பெறுவதுண்டோ புகன்றையம் நீக்குவீரே

வ-ம். சுவாமி! வித்தில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை என்று வேதங்கள் ஆணையிட்டுக் கூறுகின்றன. மேலும் தாங்களோ எனக்குப் புத்திரசந்தானங் கொடுத்துவிட்டீர்கள். என் கணவனுயிரைத் தாங்கள் கைப்பற்றிவிட்டதால் புருஷ சேர்க்கை இல்லாதவர்களுக்குப் புத்திரன் உண்டாவதெப்படி என்ற சந்தேகந்தான். வேறில்லை.

எம. அம்மா! நீயே பதிபக்தியில் சிறந்த வனிதாமணி. எனக்கு மதி மயங்கிப் போயிற்று. நான் கொடுத்தவரம் பழுதுபடா வண்ணம் உன் பதியின் உயிரை இதோ தந்தேன். உன் தோத்திரகாயனங்களால் என் மனநிலையை இளக்கிவிட்டனை. நானே அங்குவந்து உன் புருஷனை எழுப்பி ராஜாதிபதியாக்கி மகுடஞ்சூட்டி வைக்கிறேன். நீ இந்த வைவசுதபட்டணம் வந்தபடியால் என்பத்தினியையும் கண்டு அவளுக்குப் பதிவிரதா

லட்சணங்களையும் போதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதோ என் தேவியை அழைப்பிக்கிறேன். யாரங்கே?

தூத. மகராஜ்!

எம.சாமளாவை நானழைப்பதாக அழைத்து வாருங்கள்

(சாமளா வருகிறாள்)

(பாட்டு)

(எங்கே போனாலுமுந்தன்கூட-என்றமெட்டு)

இராகம்-செஞ்சுரட்டி தாளம்-ஆதி

கண்ணி

நாதா அழைத்தவித மேது - அதை
நானறியச் சொல்வீரிப் போது
தாதவிழ் பூமாலை தங்கும்வெற்றித்தோளா
தர்மமுருவாகச் சார்ந்த மலர்த்தாளா (நா)

வ-ம். நாதா! என்னை அழைத்த காரணம் யாது?

எம. பிரியசகி! இவள் மஹாபதிவிரதை. இவள் பெயர் சாவித்திரி. இவள் புருஷன் சத்தியவான் என்பவனுக்கு இன்றோடு ஆயுள் முடிவென்பது தெரிந்து தூதர்களை ஏவினேன். அவர்கள் போய் இவள் பதிவிரதாக்கினியால் தகிக்கப்பட்டு மீண்டு வந்தார்கள். பின்பு நானே போய் உயிர் கவர்ந்து திரும்பினேன். இவள் பதி பக்தியினாலும், இதமொழிகளினாலும், பரவசப்படுத்தித் தன் கணவனுயிரை மீட்டுக் கொண்டாள். இவ்விதச் சிறப்புடைய கற்பலங்காரியை நீயும் தரிசித்து அவளால் பதிவிரதா லட்சணங்களையும் கேட்டுப் புனிதமடையும்படி உன்னை அழைத்தேன்.

சாம. அம்மணி! நமஸ்கரிக்கிறேன்

சா. மங்களமுண்டாகட்டும்

(பாட்டு)

அற்புத மிகக்குண மாதே - உனக்
கானந்தம் நாளுங்குறை யாதே
கற்பின்வி சேஷத்தைக் காரிகையார்பூணும்
கடமையி னாலா?கும் பெருமைசொல்ல வணும் (அ)

அம்மா! கற்பின் விசேஷத்தைப் பற்றிச் சொல்லு?

சா. அம்மணி! நான் தங்களைப் பார்க்கிலும் அதிக விசேஷமாகத் தெரிந்தவளில்லை. என்றாலும் எனக்குத் தெரிந்தவரை சொல்லு கிறேன். கேளுங்கள்.

நொண்டிச்சிந்து

கற்புமங்கை மார்கள் பெருமை தேடிக்
காணவேணு மென்றாலுல கத்திலருமை
அற்புத மவர்கள் மகிமை வேதன்
அச்சுதனோ டேசிவனு மெச்சு புதுமை

பெற்றவர்க்குப் பாதம் பணிவார் கல்வி
பேணுவார் தந்தைதாயார்க ளாணையில் நிற்பார்
சுற்றம்புகழ் சொல்ல நடப்பார் தன்னைத்
தொட்டுத்தாலி கட்டியோரை நித்தந் துதிப்பார்
சற்றும்நாதன் சொற் பிசகிலார் தெய்வந்

தானவர லாதுவேறு தான் கருதிலார்
முற்றுமவ ரேவலில் நிற்பார் அவர்
முன்னுறங்கப் பின்னுறங்கி முன்னே எழுவார்
காலையிலே ஸ்நானமுஞ் செய்வார் நல்ல

கந்தகள பங்கள் பூசிச் சுந்தரஞ் செய்வார்
சேலைசுத்த மாகக் கட்டுவார் கணவன்
சேவடியைப் பூஜைசெய்து சிந்தை மகிழ்வார்
உண்டஅவ ரெச்சி லே உண்பார் அவர்

உட்காரென்று சொல்லும் வரை ஒதுங்கியே நிற்பார்
கொண்டகோபங் கண்டும் வெறுக்கார் அவர்
கோணுதலில் லாமலேஎந் நாளும் நடப்பார்
ஆண்டிபர தேசிக் கிடுவார் வீட்டில்
அன்னமென்று வந்தவர்க்குப் பின்னென்று சொல்லார்
தாண்டி அயல் வீடு சென்றிடார் நாதன்
தன்னில்லமில் லாதவேளை பொன்னெழில் செய்யார்

மாமன்மாமிக் குத்தொண்டு செய்வார் வீட்டு
வாசற்படி முறமுரல் அம்மியிலிரார்
தீமைச்செயல் ஒன்றும் புரியார் தங்கள்
ஜீவன்போக நேரினும்நா வினிற்பொய் சொல்லார்

மக்கள்போ லடிமையைக் காப்பார் கணவன்
வரவுக்குத் தக்கபடி செலவு செய்வார்

தக்கவித உண்டி சமைப்பார் நித்தம்
தங்கள் வீட்டை இந்திரலோகம் போல்சிங்காரிப்பார்
பூப்புநாள் மூன்று முகங்காட்டார் நீரிற்
போய்க்குளிப்பார் நாலாநாள்பாண் டந்தொடமாட்டார்
காப்பதுமா தர்க்கென்றுங் கற்பே எந்தக்
காலம்மழை பெய்யென்றாலும் பெய்யுஞ் சொல்லுக்கே
இன்னும்பல தர்மங்களுண்டு கேட்க
இங்குநா னியம்பினேன் தெரிந்ததைக் கொண்டு
மன்னும்வகை யாவுந் திரண்டு கூடும்
மாதர் நீதி போதநூலை வாசிப்பீர் கண்டு
கற்பே பூஷணமாம் பெண்களுக்குக்
கற்பே அனுதினந் தொழுந் தெய்வமாம்
கற்பே பெருநிதியாம் பெண்களுக்குக்
கற்பே மருவிய கணவனுமாம்

கற்பே போஜனமாம் பெண்களுக்குக்
கற்பே பிணிதீர்க்கு மருமருந்தாம்
கற்பே நற்கல்வியாம் பெண்களுக்குக்
கற்பே உதவிசெ யுயிர்த் துணையாம்

கற்பில்லா மாதர்களை உயிர்நிலை
காணலில்லாச் செத்தசவ மாகுமென்பரே
எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன் இன்னும்
ஏற்கவென்றால் பெரியோர்கள் வாக்கிலே உண்டு.

வ.ம். எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்
எம. அம்மா மிக்க சந்தோஷம்! வா நாம் போகலாம்.
சா. அப்படியே வருகிறேன் சுவாமி!

காட்சி - 18

நேரம் - மாலை

இடம் - வனம்

பாத்திரங்கள் - சாவித்திரி, சத்தியவான், எமதர்மன்

(எமதர்மராஜன் சத்தியவானை உயிர்பிழைக்கச் செய்தல்)

சத். சாவித்திரி! நாம் வந்து வெகு நேரமாய்விட்டது. தாய்தந்தையரும் பசியால் வருந்துவார்கள், சீக்கிரம் அவர்களுக்கு உணவுப் பொருள்

களைச் சேகரித்துக் கொண்டு போகலாம் வா. இந்த விறகுக் கட்டைகளைப் பொறுக்கிக் கட்டுவோம். (எமதர்மராஜனைப் பார்க்கிறான்) ஆ! நாயகி பயமாக இருக்கின்றது.

எம. பயப்படாதே! பயப்படாதே!

சா. பிராணேசா! பயப்படவேண்டாம். இவர்தான் கருணாமூர்த்தி யாகிய எமதர்மராஜர், கொஞ்சநேரத்திற்கு முன்பு உமது உயிரைக் கவர்ந்து போனார். நான் பின் தொடர்ந்து மாங்கல்யப் பிச்சை கேட்க உமது உயிரைக் கொடுத்து ரட்சித்தார். ஆகையால் இவரை வணங்கிக் கொள்ளுங்கள்.

சத். சுமாமி நமஸ்காரம்.

நார. மங்களமுண்டாகட்டும்

சா. சுவாமி அடியாள் நமஸ்கரிக்கின்றேன்

நார. தீர்க்கசுமங்கிலி பவா! (திரும்பிப்பார்த்து) எமதர்மா! எங்கு வந்தாய்? ஓகோ! சத்தியவானுயிரைக் கவரவந்தாயோ சரி! சரி! உன் வேலையைப் பார்.

எம. சுவாமி! பரிகசிக்க வேண்டாம்.

நார. மஹா சமர்த்தன்! எடுத்த தொழிலை முடிக்காமல் விடமாட்டாய்! சொன்ன சொல்லை மாறமாட்டாய்! இப்போது எப்படி மாற்றினாய்?

எம. நான் மாறவில்லை. அது தானாக மாறிப்போய்விட்டது?

நார. சரி, வாருங்கள், சத்தியவானுக்குப் பட்டஞ்சூட்டி வைத்துப் போகலாம்.

19-வது களம்

நேரம் - மாலை

இடம் - வனம்

பாத்திரங்கள் - சாவித்திரி, சத்தியவான், நாரதர், எமதருமன்

நாரதமாமுனிவர் சத்தியவானுக்கு முடிசூட்டுதல்

சகலருக்கும் ஆசீர்வாதம் செய்தல்

(மங்களம்)

(நோட்டு மாதுபாக மானவா - என்ற மெட்டு)

இராகம்-பியாக் தாளம்-ஏகதாளம்

கண்ணி

ஆடல்பாடல் கூடிய நாடக மங்களம்
ஆதர வானபடி வேலன்பாத மங்களம்
ஆசான் ஓதிய நீதியெந்நாளு மங்களம்
அரனுமையாள் கரிமுகனார்
அரிதிருமான் மலரயனார்
ஆரண வாணியாள் யாவரு மங்களம்
அற்புத மிக்கவே
நாதனான சத்யவான் நற்குண மங்களம்
நாயகிசா வித்ரியாம் நங்கைகற்பு மங்களம்
நல்லோர் கல்வியில் வல்லவர் சொல்லு மங்களம்
நடுநிலையார் எமதர்மனார்
அடிதொழுமோர் தொழிலுடையார்
நாடிநல் வேதமே ஓதுவார் மங்களம்
நற்றவ முற்றவே
முற்றுப்பெற்றது.

----

6. பவளக்கொடி சரித்திரம்

பவளக்கொடி சரித்திரம்

காட்சி - 1 (தர்பார்)

(அல்லிராணி-சகிகள், சேவகிசகிதம் தர்பாரில் வீற்றிருக்கிறாள்)

(பாட்டு)

தசரதராஜ ராஜ ராஜ, என்ற மெட்டு

கண்ணிகள்

இராகம்-தோடி தாளம்-ஆதி

சகிகள். பாண்டியர் குமாரியான பாவை யல்லியே
பட்டம் பொருந்திஇம் மதுரையை யாளும் சௌ
பாக்ய வல்லியே

பல பல அரசர்கள் பணிவொடு தருகிற
பகுதிகள் பெறும் அல்லியே
பகைத்த நின்முகனுயிர் துடித்துச் சமரில் விழ
படியிற் கிடத்தும் வில்லியே

பண்புறு மிங்கித சம்பிரம மிஞ்சுமின்
பம்பெரு ரஞ்சித மென் சொல்லியே
பசிய அல்லிக்கொடியி லவதரித்து வளர்ந்த
பராக்கிரம மிகு மல்லியே
பராக்கிரம மிகு மல்லியே
பராக்கிரம மிகு மல்லியே (பாண்)

அம்மணி! நமஸ்கரிக்கின்றோம்.

அல். மங்களமுண்டாகட்டும். எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். ஆத்மகோடிகளுக்கு இதத்தைச் செய்யும் பொருட்டு அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நடத்திய சாக்ஷாத்காரப் பரம்பொருளான ஸ்ரீ சொக்கநாதப் பெருமானின் பக்கம் விட்டு விலகாத மீனாம்பிகையின் கிருபா கடாக்ஷ வீக்ஷண்யத்தால் அயோநிதையாக அறுபதினாயிரம் பாண்டியருக்குப் புத்திரியாக அல்லியிலையிலவதரித்துத் துஷ்டச் சண்டாள நின்முகனைக்கொன்று இம்மதுரை மாநகருக்கு ராணியாகி அதிபுய பல வழியிற்சிறந்து அன்னிய தேச மன்னர் கப்பங்கட்டி வரமனு முறைப்படி யாவருங் கொண்டாட ராஜ்யபரிபாலனம் செய்துவருகிறேன்.

ஆதலால் இன்று கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதிலைச் சொல்லவீர்களாக.

சகி. . அப்படியே ஆகட்டுமம்மா.

(பாட்டு)

திண்டுக்கல் ஜானகி - என்ற மெட்டு

அல். மந்திரி பவளச்சேனை கேட்கும் கேள்விக்குப்பதில்
வார்த்தைசொல் ஞாபகமாய்
இந்த மதுரை நக ரறுபது காதமும் வாழ்ந்
திருக்கும் குடிகள் சுகமா

மந்திரி! பவளச்சேனை நமது தேசத்தின் நிலைமை எப்படி இருக்கிறது?

(பாட்டு)

திண்டுக்கல் ஜானகி - என்ற மெட்டு

பவ. அம்பிகை கயற்கண்ணி அருளினாலே பிறந்த
அல்லிராணியே கேளம்மா
நம் அரசுரிமைக் குடிகள் எவரும்நல்ல சௌக்கிய
மாயிருக்கிறா ரம்மா

பாண்டியர் மகிழும் பட்டாபிஷேகச் செல்வியே! நமது தேசத்திலுள்ள பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நான்கு வருணத்தாரும் தங்கள் ஆக்கினைக்குப் பயந்து தத்தம் தொழிலைச் செய்துவருவதால் நாளதுவரை. குறை என்ற சொல்லிருப்பதற்கு இடமில்லாமல் தத்தளிக்கலாயிற்று. ஆதலால் நம் தேசத்தின் செழிப்பை இத்தன்மையென எவராலும் சொல்லுதற்கு இயலாதென மொழிகிறேன் அம்மணி!

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி

சேனாதிபதியான மதி வதனி சொல்வாய் நமது
தேர்கரிபரி காலாள் விபரமது நீ

(அ) சேனாதிபதி! நமது சைன்னியங்களின் பெருமை சற்று சொல் கேட்போம்

அநுபல்லவி

(மதி) யானை குதிரை தம் ஆளெனும் படைத்தொகை
ஆறுகோடியுமுண்டு அவ்விபரங்கள் வகை
அறிந்த நிலைமைதானே
இன்னமுங்கேட்டால் அடியாளுரைத்திடுவேனே.

வசனம்

அம்மா! என்னிடம் ஒப்பித்துள்ள, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படையென்ற நான்கு வகைப் படைகளும் தக்கபயிற்சியில் தயாராக இருக்கின்றன அம்மணி.

(பாட்டு)

எட்டி வனத்தில் - என்ற மெட்டு

அல். பொக்கிஷங்காக்கும் கனகாம்புஜமென்னும்
பொற்கொடி நம்மிடத்தில்
தக்கநாணயமிருக்கும் விபரங்கள்
தன்னை என்முன் சொல் சீக்கிரத்தில்

வசனம்

பொக்கிஷாதிபதி கனகாம்புஜம், நமது களஞ்சியத்தில் எவ்வளவு திரவியமிருக்கிறது?

கன. தங்கம் வெள்ளி செம்பு நாணய மாந்தொகை
சாற்ற முடிந்திடுமா
எங்கும் நிறைந்து இடங்கள் கொள்ளவில்லை
என்றால் இன்று எவ்வளவென்று சொல்வேன்

தாரணியாளும் சம்ரக்ஷணி! நேற்றுவரை நமது களஞ்சியத்தில் இருப்பு, சுவர்ண நாணயத்தில் எண்பத்து மூன்று கோடியே நாற்பத்தேழு லக்ஷத்து முப்பத்து ஐயாயிரத்து எழுநூற்றி ஐம்பத்திரண்டு. இரசித நாணயத்தில் ஏழுசங்கத்து இருபத்தைந்து கோடியே அறுபத்தெட்டு லக்ஷத்தி ஐம்பத்து ஏழாயிரத்து முன்னூற்றி இருபத்தொன்பது. தாம்பிரவர்க்க நாணயம் மஹா அற்புதத் தொகைக்கு மேற்பட்டதாகும். இத்யாதி நாணயத் தொகைகளையெல்லாம் களஞ்சியத்தில் நிறைக்க இடமில்லாமல், பக்கமுள்ள மண்டபங்களிலும் நிறைக்கப்பட்டிருக்கிறது அம்மணி!

(பாட்டு)

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்

கண்ணிகள்

அல். கொத்தவாலுத்யோகம் பார்க்கும்கோமளாங்கி வாடி
இத்தினம் விசாரிக்கும் வழக்குகளுண்டோடி

கொத்தவால்,கோமளாங்கி! இன்று நாம் விசாரிக்கும்படியான வழக்குகள் ஏதேனும் உண்டோ?

மெட்டு

கோ. அம்புவியை ஆளுகின்ற அல்லிமகராணி
வம்புவீண் வழக் கொன்றில்லை
வார்த்தையைக்கேள் பேணி

வசனம்

அம்மா! இன்று தாங்கள் விசாரிக்கும்படியான வழக்குகள் ஒன்றுமில்லை அம்மணி!

பாட்டு

ரகசிய மிது ரகசியம் என்ற - மெட்டு

கண்ணிகள்

அல். ராயசரத்தினாம்பாள் நீ வாடி
நான்சொல்லும் வார்த்தைகளைக் கேளடி
நாட்டியமுத்திரை வைக்கும் விதத்துக்கை
நாட்டுக்களுமுண்டோ இந்நாளடி

ராயசரத்தினாம்பாள்! இன்று நாம் கையொப்பம் வைக்கும் படியாவது, நோக்கும்படியாவது, போக்குவரவு அஞ்சலுண்டோ?

மெட்டு

ரத். இத்தின முத்திரை வைப்பதற்கு
ஏதுமில்லை சொன்னே னானுனக்கு
எள்ளளவாயினும் சேதியிருந்தால்
இயம்பிடேனோ சந்தேகமெதற்கு

அம்மா! இன்று தாங்கள் நோக்கும்படியாவது, கையொப்பம் வைக்கும்படியாவது போக்குவரவு கடிதங்களிது வரை ஒன்றுமில்லை அம்மணி!

புலந்திரன் வருகிறான்

(பாட்டு)

இராகம்-கமாஸ் தாளம்-அடதாளம்

புல. தாயே போற்றினேன் பாதம்
தந்தருள் ஆசீர் வாதம்
நேயமுடனே இந்த நிலத்தை ஆண்டிடுஞ் சொந்தத் (தா)
வீரம்புகழ் செல்வங்கள்
விருத்திமென் மேலுமுற்ற
விநய குணராணியே விருப்பமோடென்னைப் பெற்ற (தா)

வசனம்

அம்மா! வந்தனஞ்செய்கிறேன்

அல். வத்ஸா! அருகில்வா. பாலகா! சமீபத்தில் வா. கண்மணி! ஏன் அருகில்வராமல் மனச்சலிப்படைந்து பின் புறமாய்த் திரும்பி நிற்கிறாய்?

பாட்டு

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

பல்லவி

அருகில்வாமகனே நல்
அழகியமதிமுகனே என் (அரு)

அநுபல்லவி

திருமகள் கலைமகள் செறிந்தமதுரை
செழிக்க அரசுசெய்ய இனிநீ ஒருதுரை
பெருமைபுகழ் செல்வங்கள் பெற்றிட நல்லுரை
பேசினேன் போயிருந்த தெங்கோ யிதுவரை (அரு)
அழைக்க அழைக்க என தருகில் வராமல்
அதற்குக்காரணமான மொழிபுகலாமல்
விழித்தகன்று நிற்கிற விதமேனஞ்சாமல்
விளம்புவாய் மகிழ்ந்து நீ வருந்தங்கொள்ளாமல் (அரு)

அடே! என் அருமைச் செல்வமே! நான் கூப்பிடக் கூப்பிட ஏன் அருகில்வராமலும், அப்படி நிற்பதற்கு நேர்ந்த காரணத்தைச் சொல்லாமலும் ஏன் இப்படி பிடிவாதம் செய்து நிற்கிறாய்? என்னாலாவது இங்குள்ள பரிவாரஸ்திரீகளாலாவது, வேறு யாராலாவது உனக்கு வருத்தம் நேர்ந்ததா? என்ன? எவ்விதமாக

இருந்தாலும் விபரத்தைச் சொல், முன்பே அதற்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்து நிவர்த்திக்கிறேன்.

புல. அம்மா! அப்படியொன்றும் வருத்தமில்லை!

அல். பின்பென்ன?

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-சாப்பு

கண்ணிகள்

புல. நான் கேட்கும்பொருளைத் தருவேனென்றால்
உந்தன் கிட்டவருவே னின்று
கிட்டவருவே னின்று
அதற் கட்டி இல்லையே ஒன்று

அல். நாட்டிலுள்ள பொருள் யாவு முனக்காக
நான் வைத்திருக்கும் போது
நீ-கேட்டபொருளைத் தராமலிருப்பேனோ
கிட்டியதனை ஓது

புல. சொக்கர் மீனாக்ஷியின் சத்தியமாக
நீ சொன்னால் நம்பு வேனின்று
சொன்னால் நம்பு வேனின்று
தாரேன் இந்நாளில் உண்மையென்று

அல். சொக்கார் மீனாக்ஷியின் சத்தியமாக
நீ சொன்ன பொருளைத்தர
இக்கணம் சம்மதித்தேன் தாமதமேனோ
இன்னும் அருகில் வா

வத்ஸா! மீனாக்ஷிசுந்தரேசுவரர் சாக்ஷியாக, நீ கேட்கும் பொருளைத் தருகிறேன். இன்னும் ஏன் தாமதம் செய்து நிற்கிறாய்? அருகில் வா.

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

பல்லவி

புல. வந்தேன் வந்தேன் வந்தேன் அருகினில் (வந்)

அநுபல்லவி

வாகை வெற்றியி லேமிகுத்திடில்
மாதுனைத்தொழு பாலனித்தினம் (வந்)

மகுடம்

மதுராபுரியை	அரசேபுரியும்	
மகராணியே	வருமாதரசி	(வந்)
வானோர் பணிபுரி	மேலோன் மகபதி	
யானோன் கபட	மாலே தரவரு	(வந்)
மாலாதியர் புனை	வீராதியர் குல	
மாதா உனதடி	நானே துதி செய்	(வந்)

பாட்டு

ஆயிமேசீமேபஹார் - என்ற மெட்டு

அல். பாலகா! ஏன் முரண்டு செய்து நிற்கிறாய்?

பாட்டு

ஆயிமேசீமேபஹார்-என்ற மெட்டு

பல்லவி

புல. துக்கமிகுந்ததம்மா எந்தனுக்கின்று

அநுபல்லவி

பக்கமிருக்கிறேன்	பால்பழம் உண்டிலேன்	
நிற்கமனங்கொண்டிலேன்	இந்தயிடத்தில்	(நிற்)
இப்போதே	போறேன்	(துக்)

தாயே! எனக்கு சகிக்கொண்ணாதுக்கம் நேர்ந்திருக்கிறது. அதனாலேதான் ஆகாரம் பிரியமில்லை. நான் கோரிய பொருளைப் பெற்றாலொழிய இத்துக்கம் ஒருபோதும் நீங்காது!

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்

கண்ணிகள்

அல். அப்படியான குறையுனக்கென்ன அடுத்ததடா
எப்பொழுதெப்பொருள் நீ கேட்டிட்டாலு மில்லை என்கிலேன்
இப்பொழுதாசையினோடுன் மனதினிலெண்ணியதை
செப்பிடிலப்பொருளைத் தருவேனடா சீக்கிரத்தில்

புல. பாலுக்குச்சர்க்கரை இல்லையென்பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப்போட உப்பில்லைஎன்பார்க்குங் குத்தித்தைத்த
காலுக்குத்தோல் செருப்பில்லைஎன்பார்க்குங் குத்தித்தைத்த
மேலுக்குப்பஞ்சனை இல்லைஎன்பார்க்கும் விசனமொன்றே

அல். ஆடையணிபணியான செல்வமுதலானதொடு
ஈடிலாதபலவேடிக்கை வஸ்துமெடுத்துத்தந்தேன்
ஓடிவிளையாடி வந்திடப்பந்து முனக்குத்தந்தேன்
வாடிவருந்தி விசனிக்கலாமோ மதிமுகனே

புல. ஆண்டவன் சொக்கர் மீனாக்ஷி கிருபையினாலெனக்கு
வேண்டிய செல்வங்கள் நீ யளித்தாய் விளையாடுதற்கு
ஈண்டும்சிறுவர்களெல்லா மென்னைப் புகழ்பேசுதற்கு
பாண்டியராஜகுமாரி பவளத்தேர் வேண்டுமம்மா

அம்மா! மீனாக்ஷி சொக்கநாதருடைய கிருபையினாலே நான் விளையாடுவதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் சேகரித்துக் கொடுத்திருக்கிறாய். ஆனால், ஒரு கருவி குறைவுண்டு. அது இதுவரை எனக்குத் தெரியாது. என்றும் போலின்று நான் என் தோழர்களோடு சிறு தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தேன். ஒரு சிறுவனின் மாத்தேர் என் முத்துத்தேரின்மீது மோதிற்று. நீ ஏனப்படி என் தேரின்மீது உன் தேரை மோதவிட்டாயென்று நானவனைக் கேட்டேன். அதற்கவன் உன் தேர் அருமையான பவளத்தேரோ, உடைந்தால் உடைந்து போகட்டுமே! என்ன குடி கெட்டுப்போச்சுதென்று கேட்டான். பக்கத்தில் நின்ற மற்றுஞ் சிறுவர்கள் எல்லோரும் கை கொட்டி நகைத்தார்கள். ஆதலால் பவளத்தேர் சிறந்ததென எண்ணி, அந்தச் சிறுவர்களைப் பார்த்து சபதம் செய்து வந்தேன். அதாவது, இனி பவளத்தேர் கொண்டு வந்தே விளையாடுவேன். இல்லையேல் உங்களோடு என்னை ஆட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்தேன். ஆதலால், எனக்கொரு பவளத்தேர் செய்து கொடுக்க வேண்டும் இதுவே என் கோரிக்கை!

பாட்டு

இராகம்-பியாக் தாளம் - ஆதி

திட்டமுற்றதொரு சத்யவான் என்ற மெட்டு*

கண்ணிகள்

அல். நமதுநாடுகளில் விளைவில்லாததொரு
பவளமான பொருளால்
ரதமும்வேணுமென மொழிகளாடியது
தகுதியான செயலா

* நாடகம்: சத்தியவான் சாவித்திரி

வத்ஸா! நமது நாட்டில் விளைவில்லாத பவளத்தினால் தேர் செய்து கொடுவென்று கேட்கிறாய். நீ சிறுவனானதால், இப்பொருள் கிடைக்கும், இப்பொருள் கிடைக்காதென்பதை உணராது கேட்டுவிட்டாய்! ஆனாலும் பரவாயில்லை. உனக்கு ரதந்தானே வேண்டும்? சுவர்ணகஜிதமாகவும், நவமணிகள் பதித்ததாகவும் ஒரு அழகிய ரதம் செய்வித்துக் கொடுக்கிறேன். அதனைக் கொண்டுபோய் உன் தோழர்களோடு விளையாடு.

மெட்டு

புல. அரசையாளுமுன தருமையான மக
னெனவுமோத வெனிலோ
அழகுசார் பவள ரதமும் வேணு மது
விரைவிலே தருவையே

அம்மா! என்ன வார்த்தை சொல்கிறாய்? நீ க்ஷத்திரிய முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசியல்லவா! சொன்ன வார்த்தை தவறலாமா. மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சாக்ஷியாக நான் கேட்கும் பொருளைக் கொடுப்பதாக சத்தியம் செய்து கொடுத்த நீ, அந்தப் பிரமாண வாக்கை மறக்கலாமா? இது நியாயமில்லை. மேலும் அந்நியச்சிறுவர்கள் வைத்து விளையாடும் ரதத்தை நானும் வைத்து விளையாடுவது, அரசியாகிய உனக்கு அவமரியாதையன்றோ? உன் பிள்ளையென்னும் பெருமை எனக்கு வேண்டாமா? அந்தப் பெருமைக்கு அடையாளம் பவளத்தேரே அல்லாமல் வேறில்லை. ஆகையால், நீ எப்படியாவது பவளத்தேர் ஒன்று செய்து கொடுத்தே தீரவேண்டும். என்ன சொல்லுகிறாய்?

பாட்டு

போய்வருவேன் சபையோரே என்ற மெட்டு*

அல். மாணிக்கத்தால் தேரியற்றி நானுனக்குத் தாரேண்டா
புல மாணிக்கத்தேர் தந்தை தந்தார் ஆதலாலது வேண்டா
அல். பொன்னினாலே தேரியற்றி இந்நாளில் நான் தாரேண்டா
புல. பொற்றேரோ அனந்தமுண்டு மற்றெதற்கதுவேண்டாம்
அல். முத்தினாலே தேரியற்றி இரத்தினம் நான் தாரேண்டா
புல. முத்துத்தேரோ மெத்த உண்டு மற்றெதற்கதுவேண்டாம்

* நாடகம்: கோவலன் சரித்திரம்

அல். சந்தனத்தால் தேரியற்றி இந்த நாளில் தாரேண்டா
புல. சந்தனத்தேர் தர்மர் தந்தார் எந்தனுக்கதுவேண்டாம்
அல். நீலக்கல்லால் தேரியற்றிப் பாலனே தாரேண்டா
புல. நீலத்தேரோ கிருஷ்ணன் தந்தார் ஆதலாலதுவேண்டாம்
அல். வயிரத்தாலே தேரியற்றி வத்ஸனே நான்தாரேண்டா
புல. வயிரத்தேரோ பாட்டன் தந்தார் மற்றெதற்கதுவேண்டாம்

அம்மா! நீ என்ன சொன்னபோதிலும் நான் சமாதானம் அடையவே மாட்டேன். அந்த பவளத்தேர் எனக்கு கிடைக்கும்வரை அன்னாகாரங் கொள்ளவேமாட்டேன் உன்னால் முடியாதென்றால், இப்பொழுதே சொல்லிவிடு. இதோ நான் போய்விடுகிறேன்.

அல். அப்பா! கொஞ்சமும் பொறுத்துக்கொள். பவள ரதம் செய்வித்துத் தருகிறேன்.

(புலந்திரன் போகிறான்)

(அல்லி சகிகளைப்பார்த்து)

(பாட்டு தர்க்கம்)

கபரதரஹான் என்ற மெட்டு*

கண்ணிகள்

அல். பவளமெங்கே விளைகிறது பாவையரே (பவ)
பாலகன் தேர் வேண்டுமென்ற
தாலதனைக் கொண்டு வர (பவ)

சகி. கடல் கடந்தால் காணலாம் பவளவனம் (கடல்)
காவலாயிந்த மதுரையாளும் மாதரசி ஏழு (கடல்)

அல். எவ்வளவு காததூரம் இருக்குதக்காடு
யாவர்க்குரிய இடம் ஏது ஏற்பாடு
அவைகளின் விபரங்கள் யாவுமென்னோடு
அணுவும் பிசகில்லாமல் அறைவீர் விரைவினிலே (பவ)

சகி. இடமங்கு செல்லவெனில் யாவர்க்குமாகாது
எண்ணூறு யோசனைக்குக் குறையாது
அடவியெங்கும் வண்டுகள் அலையுந்தப்பாது

---

* இராகம் - சிந்துபைரவி, தாளம் - ஏகம்

அங்குபோனால் கொன்றுவிடும்
அல்லி மாதே கேளிப்போது (கடல்)

அம்மா? ஏழு சமுத்திரங்களைக் கடந்துபோக எவராலுமாகாது. இங்கிருந்து எண்ணூறு யோசனை தூரமிருக்கிறது. அப்படித் தப்பித்தவறி அங்கு போய்ச் சேர்ந்தாலும், அங்குள்ள பிராணாவஸ்தைகளும் அனந்தம். வண்டு, கதண்டுகள் கும்பல் கும்பலாய்ப் பறந்துதிரியும். அவைகள் காட்டுக்குள் பிரவேசிப்போரைக் கடித்துக் கொன்றுவிடும். யானை வாயில் அகப்பட்ட கரும்பு மீண்டாலும், மீளும். அந்தப் பவளக்காட்டிற்குள் பிரவேசிப்போர்கள் எவராயினும், மீண்டு வரமாட்டார்கள். இதனை உறுதியாக நம்புவாய் அம்மணி!

வசனம்

அல். அடி! எவ்வளவு கட்டுக்காவலையுடைய இடமென்றால் தானென்ன? எத்தனை விஷஜந்துக்கள் சஞ்சரிக்கப்பட்ட இடமென்றால் தானென்ன? பிராணனைத் துரும்புக்குச் சமானமாக மதிக்கப்பட்டவர்கள், அஞ்சாமல் அங்குசென்று காரிய சித்தியோடு வரத்தடையில்லை. ஆதலால்.

பாட்டு

இராகம்-அடாணா தாளம்-ஏகம்

பல்லவி

சமர்த்துள்ள பேர்கள் தாம்பூலம் வாங்குங்கள்
தகுதியுடைய ரதமதுசெய்ய
உரியபவள வனமது செல்ல (சம)

அநுபல்லவி

அமர்க்கஞ்சாமலே யாரெதிர்த்திட்டாலும்
அவர்க்குத் தேவர்சகாயஞ் செய்திட்டாலும்
இமைக்கொண்ணாத்துன்ப மென்னவந்திட்டாலும்
இருப்புத்தண்டால் தலையுடைந்திட்டாலும்
இளைத்தி டாமலே
எதிர்த்து வாளியால்
அடித்து மானிலம்
வழுத்த வேமிகு (சம)

ஆரடி பணிக்காரி! தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு நிறைத்தெடுத்து வந்து, இந்தக் கூட்டத்தார் முன்னிலையில் சுற்றிவா. சாகரந்தாண்டிப் பவளங்கொண்டு வர மனோ தைரியமுடையவர்கள் தாம்பூலம் எடுத்துக்கொள்ளட்டும்.

சேவ. அப்படியே ஆகட்டும் அம்மணி!

(சேவகி தாம்பூலத்தட்டை சகிகளிடம் நீட்டுகிறாள் சகிகள் பெற்றுக்கொள்ளாது நிற்கிறார்கள்)

அல். சேச்சே! உங்களில் ஒருவராவது பவளக்காட்டிற்குச் செல்ல மனோதைரியம் உடையவர்களில்லையா?

ரத். அம்மா நான் சமுத்திரக்கரை வரையிலும் போவேன்! அப்பால் எப்படி சமுத்திரத்தைக் கடப்பதென்றுதான் ஆலோசிக்கிறேன்?

கோ. அம்மா! நான் சமுத்திரத்தைத் தாண்டிவிடுவேன்! பவளக் காட்டிற்குள் எப்படிச் செல்வதென்றுதான் ஆலோசிக்கிறேன்.

கன. அம்மா! நான் சமுத்திரத்தைத் தாண்டிப் பவளக்காட்டிற்குள் நுழைந்துவிடுவேன். வண்டு கதண்டுகள் கடிக்குமானால் என்ன செய்கிறதென்றுதான் ஆலோசிக்கிறேன்!

மதி. அம்மா! நான் சமுத்திரத்தைக் கடப்பதற்கும், பவளக் காட்டிற்குள் நுழைவதற்கும், வண்டு கதண்டுகள் கடிப்பதற் கும் பயப்படவில்லை. என்னுயிர் போய்விடுமே என்றுதான் ஆலோசிக்கிறேன்.

பவ. அம்மா! நான் சமுத்திரத்தைத் தாண்டவும் பயப்படமாட்டேன்! வண்டு கதண்டுகள் கடிக்குமென்றும் பயப்படமாட்டேன்! விஷமேறுமென்றும் பயப்படமாட்டேன்! உயிர் போகு மென்றும் பயப்படமாட்டேன். என்றாலும், அப்படி என்னுயிர் போகும்படி நேர்ந்தால், அங்கு என் கெதி இவ்வித மாயிற்றென்று இங்குவந்து சொல்ல ஒருவருமில்லையே என்றுதான் ஆலோசிக்கிறேன்.

அல். போடி போங்கள்! நீங்களெல்லோரும் பிராண பயங்கொண்ட பேடிப்பெண்கள்! உங்களால் ஆகாமற்போனாலும் வேறு.

பாட்டு

இராகம்-கமாசு தாளம்-ஆதி

பல்லவி

யாரைக் கொண் டிந்த
காரியம் செய்திடலாம்
அறைவீர் அறைவீரினி (யா)

அநுபல்லவி

பாருக்குள் அழகிய பவளக்காட்டினில்
படைபல எதிரினும் அமர்செய்துகொண்டுவர (யா)

பாட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-சாப்பு

கண்ணிகள்

சகி. அர்ச்சுனராஜ கெம்பீர துரை
யாலே முடியும் அழைய வரை
வேறொருவ ராலிதனை
வேண்டி முடிக்கத் தூண்டினுமாகாது (அர்)

விருத்தம்

அல். சண்டாள மூர்க்கன் தறுதலை மடையன்
தடித்தன முடையதோர் கொடியன்
கண்டோர்கள் சொல்லக் கேட்டாலும் பதுமை
கற்களை யலங்கரித் தாலும்
பெண்டாகு மெனவே பிதற்றிடும் பித்தன் அவன்
பேரினி யுரைக்கிலுன் னாவை
துண்டாக அறுத்து நெருப்பினி லிட்டுச்
சுருக்கினில் கருக்குவேன் விடடி.

பாட்டு

வில்லைவளைத்தம்பெய்திடுவேன்-என்ற மெட்டு

கண்ணிகள்

உரைத்தால் நாவை யறுத்திடுவேன்
உனக்குத் தண்டனை செய்திடுவேன்
அரக்கப்பாவியவன் பேச்சை
அறையலாமோ சேச் சேச் சே
ஆகாது கொஞ்சமும்
அன்பில்லாத வஞ்சகன் அவன்பேரினி (உ)

அடிசகியாள்! கருமச்சண்டாளன்! மூர்க்கன்! கொடியன்! தடியன்! காமாந்தகன்! மடையன்! அறிவிலாதவன்! அசத்தியன்! அபலஸ்திரீகளை ஏமாற்றும் நயவஞ்சகன்! மோசக்காரன். அவன் பெயரை மறுமுறை நீங்கள் உச்சரித்தால் உங்கள் நாவைத் துண்டு துண்டாய் நறுக்கி நெருப்பிலிட்டுக் கருக்கி விடுவேன் ஜாக்கிரதை!

பாட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-சாப்பு

கண்ணிகள்

சகி.	இந்தக்கோப மெங்கள்	மேலெனம்மா	
	ஏற்றது சொன்னோம்	வேறில்லையம்மா	
	இப்பொழுதே	தப்பிதமாய்	
	எண்ணிடலாகுமோ	பெண்ணரசே விடு	(இந்)

விருத்தம்

அல். மைந்தனும் பிறந்தபோதிங்கு வந்தான்
மறுத்தவன் போயிது வரையும்
ஐந்துநல் வருஷமாச்சுது பாவி
அவனிங்குதான் வரவில்லை
எந்தனின் ஆசையில்லை யென்றாலும்
இப்பிள்ளைமே லன்புகொண்டு
வந்திடாதவனை வரவழைப்பதற்கென்
மதியினிலில்லை சம்மதியே

பாட்டு

வில்லைவளைத்தம்பெய்திடுவேன்-என்ற மெட்டு

கண்ணிகள்

அவனையழைத்	திடலாமோடி	
முகமதிலும்	விழித்திடலாமோடி	
கவனமில்லாப்	பாவிநேசம்	
காரிகையேண்டி	கால்வீசம்	
கணமேனு மாகாது		
சினமது போகாது	இனி	(அவ)

அடி மதிமந்தமுடைய பெண்களே! அத்துஷ்டன் இக்குழந்தையின் பிரசவகாலத்தில் வந்தவன், மீண்டுமொரு முறையேனும் வந்திலன். பிள்ளையைக் கண்டவுடன் மனைவி அன்பு குறைவது உலக இயல்பே ஆயினும், என் மீது அன்பு கொண்டு அவன் வராதிருந்தாலும், அருமைக் குழந்தையாகிய இப்பாலகன் மீதேனும் அன்பு கொண்டு வர வேண்டாமா? இப்படிப்பட்ட துரோகியை வரவழைப்பதற்குச் சற்றேனும்

எனக்குச் சம்மதமில்லை. இனி அவன் பேச்சை உபயோகிக்காமல் விட்டு விடுங்கள்.

வசனம்

சகி. அம்மா! தாங்கள் ஏழைகளாகிய எங்கள் மீது சினங் கொள்ளுதல் தகாது. காரியம் சித்திபெற விரும்புவோர், முன்பின் உள்ள விவகாரங்களைக் கருதலாகாது. அந்தப் பவள வனம்போய்த் திரும்ப வேண்டுமானால், பார்த்த மகாராஜா வாலே முடியுமன்றி, மற்றொருவராலும் முடியாதென்று மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!

அல். அப்படி நீங்கள் சொல்லுவதற்கு நான் உடன்பட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரை எவ்விதம் வரவழைப்பது?

சகி. ஒரு ஓலை எழுதி தூதன் மூலமாகக் கொடுத்து அனுப்புவது!

அல். என்ன வியாசத்தைக் கொண்டடி ஓலை யெழுதுவது?

சகி. தங்கள் புத்திரர் புலந்திரருக்கு ஜன்னி கண்டிருப்பதாய் ஓலை எழுதிய தூதன் மூலமாய் கொடுத்தனுப்புவது!

விருத்தம்

அல். உத்தமமான புத்திரன் பொருட்டாய்
ஓலையை முறைமையாய் எழுதி
இத்தின மவரை வரவழைத்தாலும்
இவ்வூரிலுள்ளவர் பலரும்
மெத்தவு மிழிவாய் கைகொட்டி நகைத்து
மெல்லியா ளல்லி இப்பொழுது
சித்தஜன் மயலால் அழைத்தனளென்று
செப்புவ ராதலால் விரும்பேன்

வசனம்

அடி தோழிகளே! நான் உபாயமாக புத்திரன் பொருட்டாய் ஓலை யெழுதினும், கண்டோர் கேட்டோர் அது உண்மை என்று எண்ணாமல், ஐந்து வருஷமாய் புருஷனைக் காணாமல் மன்மத விவகாரங்கொண்டு, கலவி இன்பத்தை வேட்டு, அல்லி ஓலை எழுதினாள் என்றல்லவோ என்னை நிந்திப்பார்கள். ஆதலால், அவனுக்கு ஓலையெழுதியனுப்ப அணுவளவேனும் என்மனம் இசையவில்லை. இதற்கென்ன செய்வது? சொல்லுங்கள்!

சகி. அச்சுனராஜருக்கு நேரில் ஓலை எழுதவேண்டியதில்லை. அவர் சிரேஷ்டராகிய தர்மபூபதிக்கு எழுதினால் போதும்.

அல். நல்லது அப்படியே செய்வோம். யாரடி ராயசக்காரி! நான் சொல்லுகிறபடி ஒரு லிகிதம் வரைவாயாக.

(லிகிதம்)

சத்திய நெறியார் தர்மபூ பதியார்
தாமரை மலரடி வணங்கி
பத்தியா யல்லி எழுதிய ஓலை
பாலனாம்புலந்திர னுக்கு
மெத்தவும் ஜுரமாய் ஜன்னியும் பிறந்து
மிகுதி கைதோஷித் ததனால்
இத்தினம் தந்தை கண்ணினில் விழிக்க
ஏங்கினா னிசைவது முறையே

அடி எழுதி முடித்தனையா?

ராக. எழுதி முடித்துவிட்டேன். முத்திரையும் போட்டுவிட்டேன். தங்கள் கையெழுத்துதான் பாக்கி!

அல். எங்கே இப்படிக்கொடு! (கையெழுத்து போடவேண்டும்) யாரடி பணிக்காரி! இந்தக் கடிதத்தை தூதன் மூலமாகக் கொண்டு போய் இந்திரப் பிரஸ்தத்தில் தர்மபூபதிக்குக் கொடுத்து வரச்சொல்லு!

சே. அப்படியே அம்மா!

காட்சி - 2

தர்மராஜா, வீமன் நகுலன், சகாதேவன் வீற்றிருக்கின்றனர்

(பாட்டு)

திண்டுக்கல் ஜானகி - என்ற மெட்டு

தர். இளவரசாகிய பீமனே நமது
ராஜ்ஜியங்கள் சுகமா
இதுவரை யாதொரு குறைவுமில்லாம
லிருக்கிறதா சொல் ஞாபகமா

தம்பிசகோதரா! உன்னை யுவராஜனாக நியமித்து, ராஜ்ய காரியங்களை அப்போதைக்கு அப்போது கவனித்துவரக் கட்டளையிட்டிருக் கிறேனன்றோ? அந்த வகையில், தற்போதுவரை பிரஜைகளுக்கு யாதொரு இடையூறும் நேராவண்ணம், மநுநீதிச் சட்டப்படி விவகாரங்களைக் கவனித்து வருகிறாயா!

பீம. அண்ணா! சாக்ஷாத் கோபாலகிருஷ்ண பரமாத்மாவின் கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தாலும், தமது நெறிமுறை சத்திய அநுக்கிரகத்தினாலும், நாளதுவரை நம் நாட்டுக்கும், நாட்டில் வாழுங் குடிகளுக்கும் யாதொரு இடையூறும் நேராவண்ணம், மநுநீதிச் சட்டப்படி விவகாரங்களைக் கவனித்து வருகிறேன். அதனால் காலாகால மழைகளும், விளைவுகளும் மிகுந்து நாட்டு வளமும், பிரஜைகள் மகிழ்வும் மென்மேலும் அபிவிருத்தியாகி வருகின்றன அண்ணா!

மெட்டு

தர். நாளும் நிதிகள் காக்கும் நகுலா நீயுரைப்பாய்
ராஜர் பலரின் சித்தம்
நமக்குச்சேர வேண்டிய பகுதிகளை முறையாய்
நல்கு கின்றாரா நித்தம்

தம்பி நகுலா! உன்னைப் பொக்கிஷாதிபதியாக நியமித்திருக்கிறேன் அன்றோ! ஆதலால், மறுமன்யராஜர்கள் நமக்குக் கட்ட வேண்டிய பகுதித் தொகைகளை, அவரவர்களுக்கு நாம் நியமித்திருக்கும் கட்டளைப்படி, அவ்வப்போது உபசார மரியாதையோடும் களஞ்சியத்தவரிடம் சேர்ப்பித்து வருகிறார்களா?

நகு. அண்ணா! நாளது வரை மறு மன்னியராஜர்கள், பகுதிகளை ஒழுங்குடன் களஞ்சியத்தில் கொண்டு வந்து சேர்ப்பித்து வருகிறார்கள்.

மெட்டு

தர். அமைச்சனெனவுமுயர் அறிவுபுகலுமொரு
அழகிய சகாதேவா
நமக்கு மகிமைகள் தரும் பிரஜைகளது
நலமென உரைதாவா

தம்பி! அறிவில் உயர்ந்த நீ அருகில் வந்து குடிகளுடைய க்ஷேமாபி விருத்தியைப்பற்றி விளக்கமாகச் சொல் கேட்கலாம்.

சகா. அண்ணா! தர்மமும், சத்தியமும் பொறுமையும் ஒருங்கு கூடி உருவெடுத்ததுபோல ஜென்மித்த நமது ஆளுகையில், குடிகள் யாவரும் சுகசௌக்கியமடையத் தடையுமுண்டோ? யாவரும் க்ஷேமாபி விருத்தியடைந்து வருகிறார்கள் அண்ணா!

தர். *சந்தோஷம்.*

தூத. *மகாராஜா! நமஸ்கரிக்கின்றேன்.*

தர். *நீ யார்?*

தூத. *அல்லி மகாராணியா லேவப்பட்டு வந்த தூதன்.*

தர். *விசேஷமென்ன?*

தூத. *இதோ பாருங்கள் ஓலை!*

(பீமராஜர் ஓலையை வாங்கி தர்மபூபதியிடங் கொடுக்கிறார்)

(ஓலையை வாங்கிப் பார்த்து)

விருத்தம்

தர். சத்திய நெறியார் தர்ம பூபதியார்
தாமரை மலரடி வணங்கி
பாத்தியா யல்லி எழுதிய ஓலை
பாலனாம் புலந்திரனுக்கு
மெத்தவும் ஜுரமாய் ஜன்னியும் பிறந்து
மிகுதிகை தோஷித்ததனால்
இத்தினம் தந்தை கண்ணினில் விழிக்க
ஏங்கினா னிசைவது முறையே

தூதா! நீ விரைவாய்ச்சென்று அர்ச்சுனன் வருவானென்னு சொல்.

தூத. *உத்தரவு மகராஜ்.* *(போகிறான்)*

தர். *தம்பி பீமா! இதுவென்ன விபரீத காலமாயிருக்கிறது. வத்ஸன் புலந்திரனுக்கு ஜன்னிகண்டு வருந்துவதாக ஓலை வந்திருக்கிறதே! அாச்சுனனை எங்கே என்று தேடிப்பிடிப்பது அசாத்தியமல்லவோ? அவன் புத்திரன் முகத்தில் விழிக்க இப்பொழுது மதுராபுரிக்குப் போகாவிடில், அல்லியால் ஆபத்து விளையும். அவள் கோபக்காரியென்பதும், சமாதானத்துக்கு உடன்பட மாட்டாள் என்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே! இதற்கென்ன செய்கிறது?*

பீம. *அண்ணா! தாங்கள் ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம். பார்த்தன் எங்குமிருந்தாலும் சரி, கண்டுபிடித்து சேர்ப்பிக்கிறேன். தம்பி சகாதேவா, இதற்கொரு யுக்தி சொல்.*

சகா. அண்ணா! காண்டீபரோ ஸ்திரீலோலப்ரியர், மனைவிமாரும் அநேகர். எவர் வீட்டிலிருக்கிறாரோ தெரியவில்லை. அவர் வெளியேறுவதற்கு நினைத்தாலும், அவரைக் கூடியிருக்கும் மங்கைமார்கள் விடமாட்டார்கள். ஆதலால், நானொரு தந்திரம் சொல்லுகிறேன். அப்படிச் செய்தால்தான் அவரைக் காணலாம். நானிப்பொழுது சொல்லப்போகிற தந்திரம் கற்பனையாகையினாலே, பொய் பேசுவதற்கு உடன்பட மாட்டேனென்று தாங்கள் நிராகரிக்கக் கூடாது. "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும்" என்பது வேதமொழி. அதாவது, உள்ளதைச் சொல்லினும், அம்மொழி அந்நியருக்கு நன்மையை விளைவிக்குமெனில், அது உண்மை என்றும் சொல்லப்படும். ஆகையால், இப்பொழுது நன்மை உணர்ந்தே இந்தக் கற்பனையாகிய தந்திரப் பொய்யைத் தாங்கள் நிராகரிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பீம. உனக்குத் தெரியாத நீதி உலகிலுண்டோ! சொல் கேட்கிறேன்.

சகா. பார்த்தண்ணாவோ, சிரேஷ்டராகிய தர்மண்ணா மீது மிகுந்த அன்புள்ளவர். கண்ணுங் கருத்தும் உயிரும் அவரேயன்றி வேறில்லை என்று கருதியிருப்பவர். ஆகையால், தற்காலம் தர்மண்ணாவுக்குப் பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தையி லிருக்கிறார், அர்ச்சுனராஜரை முகத்தில் விழிக்க விரும்பி னார் என்று கண்டோர் கேட்டோர் அவருக்குச் சொல்லி அனுப்ப வேண்டும். இது யுவராஜர் ஆக்ஞை என்று பறையடிக்கச் செய்வதே நல்லயுக்தி, வேறு உபாயங்கள் இக்காலங்களில்பயன்படாது.

பீம. அப்படியே செய்வோம். இதுதான் நல்ல யுக்தி! ஆரடா சேவகன்?

சேவ. மகராஜ்!

பீம. நீ பறை முழக்குவோனை அழைத்துக்கொண்டு வீதி வீதியாகப் போய் நான் சொல்லுகிறபடி சித்தம் செய்துவா. அதாவது தர்மபூபதி இன்று தாம்பூலதாரணஞ் செய்து கொள்ளும்போது பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தைப்படுகிறார். அவர் அர்ச்சுன ராஜரை முகத்தில் விழிக்க விரும்புவதால் கண்டோர் கேட்டோர் அவருக்குச் சொல்லி அரண்மனை சேர்ப்பிக்க வேண்டும். இது இளைய அரசர் பீமசேனர் ஆக்ஞை என்று அறிவி.

சேவ. அப்படியே சித்தம் (போகிறான்)

காட்சி - 3

(அர்ச்சுனன் சுபத்திரையோடு மஞ்சத்தில் வீற்றிருக்கிறான்

(வீதியில் வள்ளுவன் பறை அறைகிறான்)

வள். இதனால் சகல கனதனவான்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால், இன்று தர்மபூபதி தாம்பூலதாரணம் செய்து கொள்ளும்போது பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தைப் படுகிறார். அவர் அர்ச்சுனராஜர் முகத்தில் விழிக்க விரும்பு வதால் கண்டோர் கேட்டோர் அவருக்குச் சொல்லி அரண்மனை சேர்ப்பிக்க வேண்டும். இது இளவரசர் பீமசேனர் ஆக்ஞை.

பறைச் சத்தங் கேட்டு அர்ச்சுனன் மஞ்சத்தினின்றும் எழுந்திருக்கிறான்

சுபத்திரை அர்ச்சுனன் கையைப் பிடித்துக்கொண்டு

பாட்டு தர்க்கம்

அன்னமுண்ணாமலே என்ற மெட்டு*

பல்லவி

சுப. எங்கு செல்லுகிறீர் இப்போதெழுந்து-நீர் (எங்)

அநுபல்லவி

என்னாசை மன்னாசம் பன்னாஇந் நாளினில்

பல்லவி

அர். வந்துசேருகிறேன்

மாதவ னாரின்ச கோதரி கேளடி

சுப. அங்கமிரண்டு யிரானதொன்றார் மீது லீலையில்

ஆரணங்கே உன்னை நான் பிரியேன் மோகலாகிரி மீறுவேளையில் (எங்)

அர். சிந்தையிற் சஞ்சலம் சேர்ந்ததுமேனடி

தேவியுன்னாவலை நான்மறப்பேனோடி (வந்)

சுப. எந்தச் சிறுக்கிமே லிச்சை வந்திட்டதோ

என்மீதிலேகொண்டு இன்பிற்றுவிட்டதோ (எங்)

அர். எத்தனை தேவிமார் ஏற்பட்டிருப்பினும்
எந்தனுக்குந்தனைப் போலுண்டோ எண்ணினும் (வந்)

வசனம்

சுப. பிராணேசா! மலர் பரப்பிய மஞ்சமீது நாம் சல்லாப சுகத்தை அடைந்து கொண்டிருக்கும்போது, தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டென்னும் பழமொழிக்கிணங்க, எவள் ஆசையையோ நினைத்துக் கொண்டு இப்படிப் பரபரப்பாய் எழுந்து ஓடுகின்றீரே? இது ஞாயமா? எத்தனை பத்தினிமார் ஏற்பட்டிருப்பினும் எனக்கு உன்னையல்லாமல் மற்றோர் பேரில் ஆசை கிடையாதென்று நீர் முன்னமே சொல்லியிருக்கிறீரே? அதனை மறந்தீரோ? அல்லது என்னிடத்தில் இப்பொழுது பிரஸ்தாபித்த மொழிகளையே, பாஞ்சாலி முதலான மற்றும் உமது பத்தினிமார்களுக்குச் சொல்லி இருக்கிறீரோ? உமது மாய வித்தைகளெல்லாம் எனக்குத் தெரியும். எங்குபோக எத்தனிக்கிறீர்? உம்மை விடுவேன் என்பதாக நினைத்தீரா? உமது தந்திரோபாயங்களெல்லாம் என்னிடம் செல்லாது. ஏன் தாமதிக்கிறீர்? காலம் கடத்தாதீர்! வாரும் போகலாம் பஞ்சணைக்கு!

வசனம்

அர். அடி காதலி! என்னென்னவோ சொல்லுகிறாயே! ஆவியைப் பிரிந்து தேகமிருந்தாலல்லவோ உன்னைவிட்டு அர்ச்சுனனின் மனம் பிரியும். எதற்காக வீண் கலவரப்படுகிறாய்! நான் போய் வந்துவிடுகிறேன்! நீ கொஞ்சநேரம் காத்திரு.

பாட்டு

வழிவிடப்போன அத்திரி என்ற மெட்டு

பல்லவி

சுப. எந்தச் சக்களத்திமேல் இச்சைகொண்டு செல்கிறீர்
எனக்கதை விளங்கச் சொல்லும் (எந்)

அநுபல்லவி

சொந்தத்தில் ஒன்றிரண்டோ தோகையர் பலருண்டு
துரையே அவரெல்லோரும் பிரியமுரிய பெண்டு (எந்)

சரணம்

தரையின் குணமே நீரைச் சாருமதுபோல் சேரும்
தமது நேசரின் குண மனிதர்களுக்கு நேரும்

உரைசெய்யிலென தண்ண னுடைய தோழராம் நீரும்
உமக்குக் கண்ணன்குணந்தான் நிலைக்கும்யோசித்துப்பாரும்
ஊசல் நற்குழையார் விதிபோல்
மணமே செய்து கூடுசித்தினியார்
பலபேர் உளராவெனும் ஆசையைவைத்தனலார்
இலையோ பல் கோபியர் ஓத எத்தனைபேர்
அதனா லவர்போல்மதி
உற்றிருப்பதுமக்கு நிச்சயம்
மற்றெனக்கு வியப்பளித்தல
முற்றுமிப்படி நிற்பதற்புதம்
நற்குணச் செயல் சற்றடுத்தில

(சந்தம்)

முறைமை யன்புங் கொண்டண்டும் பண்புங்கண்டின் பந்தந்
தெனையிணங்கும் சொந்தங் கொஞ்சங்கண்டென்றென்
றென்றும்
கலவிநண்புந் தங்குந்துன்பம் பங்கம் பொங்கும்புண்
படவகன்றும் சென்றின்றன் கண்டஞ்சும் பொன்றங்கம்
தழுவிமுத்தி மடியில்வைத்து
மனமகிழ்ச்சி மொழியுரைத்து
மதனும் வெட்கமடையலுற்ற
கலவியைச் செய்திட மதித்து
தாதிமாரழகாகவே விரிவாசபூமணமீது லீலையில்
சாரமானவை போகமேவிய மோகலாகிரி மீறுவேளையில் (எந்)

வசனம்

உம்மைச் சொல்லிப் பலனில்லை. நிலத்தியல்பால் நீர் திருந்தல் தகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு. அதாவது, ஆகாயத்திலிருந்து பெய்யும் மழை ஜலம் முழுவதும் ஒரே குணமுடையதானாலும், நிலத்தின் பாகுபாட்டினாலே, செந்நிறம், வெண்ணிறம், கருநிறமடைந்து குணம் மாறுபடுவதுபோல, மனிதர்கள் பிறக்கும்போது, கல்மிஷமில்லாத பளிங்குபோல் உள்ளத் தெளிவுடையவர் ஆயினும், அவர்கள் யார் யாரை நேசம் செய்கிறார்களோ அவர்களது குணங்களையே அடைகிறார்கள் என்பது பெரியோர் சம்மதம். பாரினில் பிறந்தபோது எவரும் பண்பினார் பூரியரெனப் பெயர் பூண்டதில்லையால், சீரியரென்னலும், தீயரென்னலும், சேரினத்து இயற்கையால் சேர்ந்த நாமமே என்றும்

நீதிநூல் வாசகமும் போதிக்கும். அந்தவகையில் நீர் யாரைச் சிநேகித்திருக்கிறீர் என்று யோசித்தால், எனதண்ணன் கோபிகா ரமணனை ஆப்த நேச தோழராக அடைந்திருக்கிறீர். அவர் ஒழுக்கச் சீர் திருத்தங்களைச் சொல்ல வேண்டுவதில்லை. பட்டமகிஷியர் எட்டுப்பேரை அக்கினி சாக்ஷியாக மணஞ்செய்து கொண்டதும் போதாமல், பதினாயிரம் கோபிகாஸ்திரீகளையும் போக பாக்கியவதிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர் தோழரான உமக்கும், அந்தக் குணந்தானே பிரதிபலிக்கும். காமுகனும், கட்குடியனும் ஒன்றென்பர் சிலர். நான் கட்குடியனிலும் காமுகனே மிகுமயக்கம் உடையவன் என்பேன். அது எப்படியெனில், உண்டார்க்கு நல்லாதடு நராக்காமம்போல் கண்டார் மகிழ் செய்தலின்று அதாவது, ஒரு புட்பம் நிரம்பத் தேனிருக்க, அதனை முழுவதும் உண்டமையாமல், பற்பல மலர்கள் தோறும் சென்று சென்று மது மாந்தியுழலும் வண்டைப்போல், உமக்குச் சல்லாப இன்பத்தை நிரம்பத்தந்து மகிழ்விக்கும் என் ஒருத்தியோடு சுகித்துவிளையாடி அமையாமல், பற்பல பெண்டிர்களின் சுகபோகம் வேண்டி அநுதினம் உழன்று திரிகிறீர். இது உமக்குத் தகுமா? ஏமாந்த சிறுக்கிகள் போல என்னை நினையாதீர், சுபத்திரை என்பது ஞாபகமிருக்கட்டும்.

விருத்தம்

அர். சத்திய நெறியாய்த் தரணியை யாளும்
தருமராகிய தமயனுக்கு
இத்தினம் பாக்குச் சொக்கிய தாலே
எனையவர் முகத்தினில் விழிக்க
சித்தமாய் தூதர் பறையடித் தலைந்து
தெருவெல்லாம் தேடுகின்றார்கள்
பத்தினியான சுபத்திரை மாதே
பார்த்து நான் வருகிறேன் விடடி

வசனம்

சுபத்திரா! சினங்கொள்ளாதே. இப்பொழுது வீதியில் பிரசித்தப்படுத்திய பறைச் சத்தத்தை நீ கேட்கவில்லையோ? எனது சிரேஸ்டராகிய தர்மபூபதி தாம்பூலதாரணஞ் செய்து கொள்ளும் போது, பாக்குச் சொக்கேறி மரணாவஸ்தையிலிருப்பதாகவும், அவர் முகத்தில் என்னை விழிக்க விரும்பியதாகவும் இளவரசாகிய எனது சின்னண்ணா பிரகோதரருடைய ஆக்ஞைபெற்ற தூதர்கள் பறையறைந்து என்னைத் தேடுகிறார்கள். ஆகையால், நான் சீக்கிரம் சென்று அவரது தேகசௌக்கிய சிகிச்சைகளைக் கவனித்து, அரைக் கணமேனும் தங்காமல் அதிக

துரிதமாக உன்னிடம் வந்து சேருகிறேன். மறுத்து உரையாடாமல் பிடி வாதத்தை விட்டு மன ஒருமையோடு விடைகொடுத்து அனுப்புவாயாக.

சுப. நாதா! சீக்கிரம்போய் பார்த்துவிட்டு வந்து விடுங்கள்.

காட்சி - 4

தர்மபூபதி, பீமன், நகுலன், சகாதேவன் வீற்றிருக்கின்றனர்
அர்ச்சுனன் வருகிறான்

(பாட்டு)

அர். சரணஞ்சரணந் தர்மண்ணா
தங்கள்திருப் பாதமலர் இங்குபோற்றி நின்றேனின்று (ச)
தருணமிதனில் பாக்காலே
தமக்குச் சொக் கேறியதாலே
மரணாவஸ்தையைப் போலே
வாய்ந்ததென்று பறையடித்தார்
நான்கேட்டு நொந்தேன் மென்மேலே (சா)

அண்ணா! தங்களுக்கு பாக்குச் சொக்கேறி மரண அவஸ்தை யில் இருப்பதாக பறையடித்தனர். அது கேட்க ஓடிவந்தேன். தேகசௌக்கியம் இப்பொழுது எப்படி யிருக்கிறது?

தர். தம்பி அர்ச்சுனா! அப்படியொன்றும் நேரவில்லை. உன்னைக் கண்டுபிடிப்பதற்காக நமது பாந்தவர்கள் செய்த உபாயமிது. இந்த ஓலையை வாசித்துப்பார்.

(ஓலையை வாங்கிப் பார்த்து)

பாட்டு

இராகம் - முகாரி தாளம் - ஆதி

தேங்காயுடைந்துபோச்சே என்ற மெட்டு*

அர். அப்பா புலந்திரனே அருமைக்கண் மணியே நான்
இப்பாரில் பாவியானேண்டா மகனே மகனே மகனே
ஒருமுறை கண்டகண்ணால் மறுமுறை காண்பதற்குள்
உனக்கிந்த பிணிவந்ததோ மகனே மகனே மகனே
ஜன்னி பிறப்பதற்கு என்ன காரணமோடா
தலைவிதிப்பயனிதுவோ மகனே மகனே மகனே

----

* நாடகம்: கோவலன் சரித்திரம்

வசனம்

தர். தம்பி! நீ இப்படிப் புலம்பி வீண்காலம் போக்குவது பிரயோசன மில்லாத காரியம். சீக்கிரம் மதுராபுரி போய் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சை செய்து குணங்கண்டு மீண்டு வருவாயாக.

அர். அப்படியே! நமஸ்கரிக்கின்றேன்.

காட்சி - 5 (சாலை)

அர்ச்சுனன் தனிமொழி

அர். அல்லியோ மிகு கோபக்காரி, நாம் ஐந்து வருஷமாக அங்கு போகாததால் சினமுற்றிருப்பாள். நம்மைக் கண்டதும் கொல்ல எண்ணினும் எண்ணுவாள். ஆகையால், ஆபத்பாந்தவனாகிய கோபாலனைச் சகாயமாய் உடன் அழைத்துப் போக வேணும். நல்லது அவரையே நினைக்கிறேன்.

இராகம் - ஹமீர்கல்யாணி

கஜல்

கன்றுகொண்டு விளவெறிந்த கண்ணா நீலக்
கார்முகிலே காயாம்பு மேனி வண்ணா-தூணில்
நின்று தொண்டன் துயரொழித்த நேயா-துஷ்ட

நிசிசரரின் குலமழித்த மாயா-நீதி
ஒன்று கின்றதூயமன ஒளியே-கஞ்ச
னுயிர்வதைத்த பரசுமகவெளியே ஏழை
இன்று சிந்தைவாடுகின்ற என் நிலையைக்காண
இன்னும் நீ வாராதிருப்பதென்ன எழுவாயிங்கே

பாட்டு தர்க்கம்

திருவுற்றிலகு கங்கை என்ற மெட்டு*

கிரு. மனமிக்க மெலிவாகி எனைநத்தியிது வேளை
வசனித்த விதமேது மைத்துனா-எனக்
கதனைச்சொல்லவும்வேணும் அர்ச்சுனா-விழி
மாறிநீர் நிறை வாரிபோல்வர
ஏதுகாரணம் நேரலானது
வருகஷ்ட நிலையாது தோணிலேன்-அந்த
வகை செப்பி விடுசோகம் வீணிலேன்

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

அர். வனிதைக்கு ளுயர்வான	மதுரைக்கரசியாளின்
மகனுக்குரிய நோயு	மானதாம்-உண்ண
வகையற்று மொழியற்றுப்	போனதாம்-அந்த
மாது நான்வர	ஓலையீகினள்
போயும் நானதி	நாளுமானது
வருந்தித்த நிலையாளம்	மாதினாள்-தரு
தருமிடத்திலொருவோலை	ஏவினாள்

வசனம்

கிரு. ஒகோ? எனதருமை மருமகன் புலந்திரனுக்கா நோய்கண்டு உணர்ச்சியற்றுப் போகும்படி நேரிட்டது! அடடா! புத்திசாலியான குழந்தையாயிற்றே! என்மீது மிகு விசுவாசம் பாராட்டியது கண்டு உனக்கென்ன வேண்டும் கேள் என்றபோது மாமா உங்களை எப்போதும் நேரில் கண்டு கொண்டிருப்பது போல ஞாபகம் வைத்திருப்பதற்குத் தங்கள் நிறத்தைப்போல் உருட்டி விளையாடும் சிறுதேர் ஒன்றுண்டாக்கிக் கொடுங்களென்று கேட்டான், உடனே யான் வியப்படைந்து நீலமணியாலே அவன் விளையாட ஒரு தேர் செய்து கொடுத்து வந்தேன். என்மனம் சகிக்கவில்லை. வாவா விரைவிலே மதுராபுரிக்குப் போவோம்! குழந்தைக்கு இந்நேரம் என்ன ஆயிற்றோ தெரியவில்லையே!! என்ன சும்மா நிற்கிறாய்? ஜல்தி புறப்படு!

அர். மைத்துனா! அங்கு போகத்தானே உன்னை நினைத்தேன். போனால் ஒரு சங்கடமல்லவோ குறுக்கே இருக்கிறது! அதற்காக அன்றோ அஞ்சுகின்றேன்!

கிரு. அப்படி என்ன சங்கடம்?

வசனம்

அர். கண்ணா! வருஷத்திற்கு ஒருமுறை அல்லி மாதினிடம் நான் போய்வர வேண்டுமென்ற நியமம் தவறிவிட்டேன்! குழந்தை புலந்திரன் பிறந்த வருஷம் அவளைப்போய் நான் கண்டு வந்தேன். அப்பால் ஒரு முறையேனும் போகவில்லை. சுமார் ஐந்துவருஷ காலமாய்விட்டது. அவள் சேதிதான் நீயறிவாயே! என்னை நேரில் கண்டால் எளிதில் விடமாட்டாள்! கணவனென்றாவது கருதுவாளா? உடனே கத்தியை எடுத்து கழுத்தை வெட்டுவாளென்பதற்கு ஆக்ஷேபணையில்லை! புருஷனைக் கொன்றால் நம் மாங்கல்யம் இழந்து மூலையில் ஒதுங்கி இருக்க வேண்டும் என்பதையும் கவனிப்பவள் அல்லவே! இதற்கென்ன செய்வது?

கிரு. ஓகோ! இதற்கு நானென்ன செய்வேன்? நீயேன் நிபந்தனைப் படி வருஷம் ஒருமுறை அவளிடம் போகாதிருந்தாய்? உன்னோடு நானும் அங்கு வந்தால் எனக்கும் அவமானந்தான் கிடைக்கும். ஆகையால், நான் மதுராபுரிக்கு வரமாட்டேன்! இதோ துவாரகைக்குப் போகிறேன். நீ எப்படியாவது போ!

வசனம்

அர். இதற்காகத்தான் உன்னை நினைத்தேனோ! எப்படியாவது அவளை நீ என்னோடு சந்தோஷமாகச் பேசச் செய்வாய் என்றல்லவோ நினைத்தேன்! அந்தவகையில் பெண்களை இதவசனங்கள் சொல்லி சமாதானப்படுத்தி, எனக்குக் கூட்டி வைப்பதில் உனக்கு நிகர் யார் இருக்கிறார்கள்.

கிரு. சரி! சரி!! நல்லவேலையைப் புகழ்ந்து சொன்னாய்! விடு விடு மற்றார் இம்மொழியைக் கேட்டால் கைகொட்டி நகைக்கப் போகிறார்கள்!

அர். கோபாலா! சோதனை செய்யாதே! வா. நேரம்போகிறது! மதுரைக்குப் போவோம்.

வசனம்

கிரு. நான் சொல்வதைக்கேள். அவளோ மிகப் பொல்லாதவள்! கோபக்காரி! இருவரும் ஒருங்கேபோனால் நமது காரியம் சித்தியாகாது. நீ முன்பதாகப்போய் நயமொழிகளாலே வசப்படுத்த முயன்றுபார். அவள் இணங்காதுபோனால், தக்க சமயம்பார்த்து நான் அங்குவந்து, உன்னைக் காணாதவன் போல் அவளிடம் ஆவலுடன் பேசி, தந்திரோபாயத்தால் உன் மீதுள்ள கோபத்தை மாற்றி வைக்கிறேன். தாமதிக்காதே. முன்பதாகப் போ.

வசனம்

அர். நான் முன்பாகப் புறப்பட்டுப் போகிறேன். நீ என்னை இழுத்து விட்டு வேடிக்கை பார்க்கப்பட்டவன், என்னை முன்பதாக அனுப்பி விட்டு நீ அங்கு வராமலிருந்து விடாதே! அப்பால் எனக்கு பிராணாபத்தாக முடியும். இப்பவும் உன் தைரியத்தாலே தான் நானங்கு போகிறேன். ஜாக்கிரதை! வந்துவிடு! மறந்துவிடாதே! (போகிறார்கள்)

காட்சி - 6

அல்லிராணி, சகிகள்சகிதம் வீற்றிருக்கிறாள்

அல். சகிகளே! அர்ச்சுனன் வருவானாகில் அவனுடன் நீங்கள் யாவரும் பேசக்கூடாது (அர்ச்சுனன் வருகிறான்)

பாட்டு

இராகம்-மத்தியமாவதி தாளம்-ரூபகம்

பல்லவி

அர் வந்தேன் வந்தேன் முன்னரசுக்குத்
தந்தேன் மதுராபுரி ராணியே

அநுபல்லவி

இந்துகுலமதில் பிறந்திட்ட
இறைவியுனது எழுத்துக்கோடி
விரைவிலுரிய இடத்தைத்தேடி (வந்)

சரணம்

மீனாள் பதமலரைத் துதிக்கும்மெல்லி விஜயதுரந்தர
வேந்தர் கப்பமீந்து தினந்துதிசொல்லி மிகவணங்கிநின்றிட
தானாயரசாக்ஷி செய்யு மல்லி
சாம்ராஜ்ய சௌபாக்கிய வல்லி
தேனார் வெற்றிமாலை வீரவில்லி
ஜெமுற்றடை யலர்மர்த்தனி
நயமுற்றவர் தொழுசற்ஜனி (வந்)

வசனம்

இதென்ன ஆச்சரியம்! நாம் இத்தனை நாளாக இங்கு வராததால் கோபம் அதிகரித்துப் பிணக்கங் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவளுடைய பரிவாரப் பெண்களும் திரும்பி நம்மைப் பாராது நிற்கிறார்கள். அரசி கோபங்கொண்டிருந்தாலும், நாம் வந்த போதெல்லாம் அன்பாய் உபசரிக்கும் சேடிகள் இப்படி நிற்கக் காரண மென்ன? ராணியின் கட்டளை ஏற்பட்டிருக்குமென நினைக்கிறேன். இல்லையேல் இப்படி நிற்கவுமாட்டார்கள். ஏதுக்கும் இவர்களை விசாரித்தே பார்ப்போம்! சேடிகளே! என் முகத்தைப் பாருங்கள்.!

(சகிகள் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்கள்)

அர். சரிதான்! சரிதான்!! ஐயமில்லை. ராணியின் கடினகட்டளை ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இனியென்ன செய்வது?

பாட்டு

ஆண்டு ஒன்றிறப்பான் என்ற மெட்டு*

கண்ணிகள்

காலக்ள் நோகுதம்மா கருணைசெய்யம்மா
காவலாயுலகாளும் ராணியே கோபமாகுமா-உன்
ஆக்னைக்குப் பயந்துநான் அஞ்சிஓடிவந்தேன்
ஆதலாலினிமேலுங் கோபமதாமோ மேனி நொந்தேன்
ஓலை கண்டவுடன் ஓடிவந்த என்மேல்
உற்றகோப மெதற்கு விட்டெனை ரக்ஷிப்பாய் நீ அன்பாய்

மதுரை மகாராணியே! உனது திருமுக லிகிதங் கண்டதும் தாமதிக்காமல் ஆக்கினைக்குப் பயந்து ஓடோடியும், வந்தேனே! எவ்வளவு நேரம் இப்படி நின்றுகொண்டிருப்பது, கொஞ்சம் தயவு செய்து சமீபத்தில் உட்காரென்று ஒரு மொழி சொல்லக் கூடாதா! கால்கள் நோகுதே! என்னையறி யாது ஏதாவது குற்றஞ் செய்திருந்தாலும் நீ சற்றுப் பொறுத்துக் கொள்ளலாகாதா?

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

எத்தனை நேரமாக இப்படி நிற்பேன் கால்கள்
இற்றிற்று நோகுதையோ (எத்)

அநுபல்லவி

சத்தியமாக இனி சகிக்க என்னாலாகாது
தரணியாளரசியே வருமமேனோதகாது (எத்)

சரணம்

அபசாரந்தினம் செய்யும் பகைவனும் வீடுவந்தா
லுபசாரம் செய்ய வேணும் என
அறிவுடையோருரைப்பார் அதிலும் நான் உன்கணவ
னான தாலமைக்க வேணும்
சபையினில் வந்துநின்று சாமநேரமாவதாலே
சஞ்சலமிகுந்த தெந்தன் நெஞ்சமுந் துன்பத்தினாலே (எத்)

---

* நாடகம்: சத்தியவான் சாவித்திரி - (இங்க்லீஷ் நோட்)

மாதரசே! நீ இவ்வித கடின கோபம் செய்யலாமா! அபசாரம் செய்து திரியும் பாதகனாய் இருந்தாலும், அவன் வீடு தேடி வந்து விட்டான் ஆனால், அவனுக்கு உபசாரஞ் செய்ய வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்களே! அப்படியிருக்க, உன்னை மாங்கல்யதாரணஞ் செய்த மணவாளனாகிய என்னை, இப்படி அலக்ஷியப்படுத்துவது உன் பெருமைக்குத் தகுமா? காலில் இரத்தக்கட்டி உறைத்து உணர்ச்சியற்றதோடு நிற்பதற்கும் வசமற்று தள்ளாடுகின்றேன். இன்னும் சற்று நேரம் இப்படி நின்றால், நான் பூமியில் விழுந்து மரண மூர்ச்சை அடைவேனென்பதற்கு ஆக்ஷேபணை இல்லை. ஆகையால் என் சஞ்சலந்தீர தயவுசெய்யடி சரசாங்கி!

(கிட்ட நெருங்க வேணும்)

அல்லி கோபத்துடன் அர்ச்சுனன் மீது உடைவாளை
வீசப்போகும் சமயம் கிருஷ்ணன் வருகிறார்

அல். அண்ணா! வாருங்கள்! வாருங்கள்!! இவ்வாசனத்தில் உட்காருங்கள்.

கிரு. மங்களமுண்டாகுக! நீயும் உட்காரு.

அல். அண்ணா! ஏது இவ்வளவு கிருபைவைத்து எழுந்தருளியது!

கிரு. அம்மா! நான் இங்கு குழந்தை புலந்திரனைப் பார்த்துப் போய் வெகு நாளாய்விட்டதல்லவா? விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்னும் பழமொழிக்கிணங்க, அவன் இளம் பிராயத்திலேயே அறிவு முதிர்ச்சியுடையவனாகி, நான் முன்னம் என்ன வேண்டுமென்று கேட்டதற்கு, மாமா! நான் தங்கள் மறவாதிருக்கும் பொருட்டு உங்கள் மேனியின் வண்ணமான நீலரதத்தேர் ஒன்று செய்து கொடுத்தால் என் எண்ணம் உங்களை மறக்க ஒருவேளை நேரிடினும், அத்தேரின் நிறம் உங்கள் உருவை வெளிக்காட்டி எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்து, உங்கள் அன்பை ஞாபகப்படுத்தும் அதுவே என் கோரிக்கை என்றான். அவ்விதமே நீலரதத்தேர் செய்து கொடுத்தேகினேன். இவ்வளவு புத்தி நுட்பச் சிறுவனை என் எண்ணம் மறக்குமா? அவனையும் பார்த்துவிட்டு, உனது யோகக்ஷேமங்களையும் விசாரித்துக் கொண்டு போகலாமென வந்தேன்! (திரும்பிப்பார்த்து) அர்ச்சுனா? என்ன இப்படி நிற்கிறாய்!

அர். மகாராணி தயவு பிறக்கவில்லை!

கிரு. தயவு பிறக்க வில்லையென்றால்?

அர். ஆம்! ஆம்! உனக்கு ஒன்றும் தெரியாது!

கிரு. தெரிந்தால் உன்னையேன் கேட்கிறேன்?

அர். என்னை இன்னும் கேலிசெய்யத்தான் கேட்கிறாய்! எருதுக்கு நோவு காக்கைக்கு கொண்டாட்டந்தானே!

கிரு. அர்ச்சுனா! என்ன இப்படிச் சொல்லுகிறாய்?

அர். என் தலைவிதி சொல்லி நிற்கிறேன்!

கிரு. அது இருக்கட்டும் நீ எப்போது வந்தாய்?

அர் நீ எப்போது இந்திரப்பிரஸ்தத்தை விட்டுப் புறப்பட்டாயோ அப்போதுதானே நானும் புறப்பட்டு வந்தேன்!

கிரு. (எழுந்து) அடே! அடே!! அப்படிச் சொல்லாதே!

அர். நீ பாக்கியசாலிதான். நீ இப்பொழுதுதான் வந்தாய்! உனக்கு உட்காருவதற்கு ஆசனம் கிடைத்துக் கொண்டது. நான் வந்து எவ்வளவு நேரமாயிற்று! இன்னுங்கால்கடுக்க நிற்கிறேன் தலைவிதி!

பாட்டு

இராகம்-தேசிகதோடி தாளம்மிச்ரசாபு

பல்லவி

கிரு. அருமைத் தங்கையே என் (அரு)

அநுபல்லவி

மணவாளனிப்படி யேது நிற்கிறான்
நீ யதைச் சொல்ல வேணு மித்ததி (அரு)

சரணம்

பெரும்பிழைகளைச் செய்தானோ-உன்
பேச்சைக்கேளா திருந்தானோ
பின்னுமென்னகுறை செய்திட்டானோ
அன்னதைச் சொல்லு என்னிடம் (அரு)

அம்மா! என் பிரியமான தங்காய்! உன் கணவன் ஏன் இப்படி மூட்டைதூக்கி முத்தையன்போல் நிற்கிறான். உன் கட்டளையை மீறிப் பெருங்குற்றத்தைச் செய்தானோ? காரணத்தை விளக்கிச் சொல்!

அல். அண்ணா! அதை எல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? அந்தப் பாதகன் பேச்சைப்பேச எனக்கிஷ்டமில்லை. துவாரகையில் என் அண்ணிமார்கள் சௌக்கியமாய் இருக்கிறார்களா?

கிரு. யாவரும் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்கள். அர்ச்சுனன் உனக்கு என்ன பிழை செய்தான்?

அல். அண்ணா! அதைத்தான் கேட்காதீர்கள் என்றேனே! அப்பாலே அண்ணா பலராமர் சௌக்கியமாயிருக்கிறாரா?

கிரு. அவர் ஆனந்தத்துக்கு குறைவில்லை. உனக்கு மனவருத்தம் உண்டாக இந்தக் காண்டீபன் என்ன குற்றம் செய்தான்.

அல். அண்ணா! இனி எனக்குக்கோபம் வரும். தேவகி அம்மாள் சுகமாயிருக்கிறார்களா?

கிரு. சௌக்கியந்தான். அதுயிருக்கட்டும். நான் கேட்கிறதற்கு சரியான பதில் சொல்லுகிறாயில்லை! இந்தப் பற்குணன் பொல்லாதவன், உன் கட்டளையை மீறி பொல்லாத குற்றம் செய்திருப்பான். இல்லையேல், நீ இப்படி தண்டனை விதித்திருக்கமாட்டாய்! இந்தத் தண்டனை இவனுக்குப் போதாது. இன்னும் கடின தண்டனை விதிக்க வேண்டும்.

அர். நல்ல யோக்யதையாய்ப் போய்விட்டது! உன்னை எனக்குத் துணையாய் அழைத்து வந்தது, கொள்ளிக்கட்டையைக் கொண்டு தலையைச் சொரிந்து கொண்டதுபோலேதானா யிற்று! நீ என்ன செய்வாய்! என் துர் அதிர்ஷ்டம்!

கிரு. அம்மா! என்ன சும்மாயிருக்கிறாய்! இந்தப் பயல் செய்த குற்றத்தைச் சொல்லு. அதற்குப்பின் அவனுக்கு நான் தக்க தண்டனை விதிக்கிறேன்.

அல். அண்ணா! அதையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்?

கிரு. அம்மா! வருத்தப்படாதே சொல்.

அல். அண்ணா! நீங்கள்தான் கேளுங்களேன்! இந்த மனுஷன் பெண்டாட்டி பிள்ளைகளை வைத்து வாழப்பட்டவனா? ஆதியிலேயே எனக்கு என்ன வாக்குத்தத்தம் செய்து கொடுத்தான்? வருஷத்துக்கொருமுறை தவராது வந்துபோவ தாகத் தங்கள் முன்னிலையில் தானே சத்தியஞ் செய்து கொடுத்தார்! அதன்படி வந்தாரா? ஊம். ஊம். சத்தியமும் பொய்யுந்தான் இவருக்கும் இவரைச் சேர்ந்த தோழருக்கும் தயிரும் சாதமுமாகிவிட்டதே!

கிரு. ஓகோ! மெள்ள நமக்கும் மேல் விலாசம் வாசிக்கிறாப்போலிருக் கிறது! அம்மா! இவனை மாத்திரம் சொல்லு, இவன் தோழனை யேன் இழுத்துப் பேசுகிறாய்?

அல். இல்லை அண்ணா! ஒரு சொல்லுக்குச் சொல்லுகிறேன்! நீங்கள் தான்கேட்டுப் பாருங்களேன்? இவர் இங்கு வந்து எத்தனை வருஷ காலமாயிற்றென்று. பாவி புலந்திரனை பிரசவிக்குங் காலத்தில் வந்தவன், இதுவரை குழந்தை நிலை என்ன, மனைவி நிலை என்னவென்று நினையாமல், கோவில் மாடு திரிவதுபோல் கண்ட கண்ட சிறுக்கிகள் வீடுகளில் திரிந்து வந்து நிற்கிறார். தீவட்டி மரம்போல்! அப்படிப்பட்ட சண்டாளன் முகத்தில் விழிக்கலாமா? இவரைப் பார்க்கக் கண்களும் கூசுகின்றது! சேச்சே கெட்டான் மட்டிப்பிரஷ்டன்!

பாட்டு தர்க்கம்

உந்தனைச் சும்மாவிடுவேனோ என்ற மெட்டு

கண்ணிகள்

கிரு.	அர்ச்சுனா இது	உனக்குத்தகுதியா
	அல்லிநிலையறியாயோ	மடமதியா
அர்.	உரைத்ததை மறுக்கிலேன்	உண்மையிதுவே
அல்.	உளறாதீர் தெரியும்	உமதாசையெலாம்
	உணர்வேன் மனைவியும்	நானலவே
அர்.	கால்களும்நோகுது	கருணை செய்வாய்
	கருத்துமயங்கு துரைத்தே	னுண்மையாய்
கிரு.	இனிமேலிப்படிப்	பிழைகள்செய்யாதே
அர்.	ஒருபோதும் பிழைசெய்	யேனானருளே
	புரிய இவளிடத்தில்	உரைசெய்வீரே
கிரு.	போதும் போதுமினிக்	கோபம்விடு
	உன்-புருஷனானதாலழைத்திடு	அன்பொடு
அல்.	ஏ தண்ணா நீ ரெனை	ஏய்த்திட வந்தீரோ
கிரு.	இனிநா னுரையேன்	உன்பாடவள்பாடு
	எனக்கொன்றுந் தெரியாது	நான்போறேன்
அர்.	உன்னையல்லா லெனக்குத்	துணை செய்வதார்
	உதறினுங்காலை	விடமாட்டேன் பார்
கிரு.	என்ன அம்மா	சங்கடமாயிருக்கு
அல்.	எல்லாவிதமும்	நல்லாயறிவேன்
	எனதண்ணா உமது	வஞ்சகங்கள்விடும்

கிரு.	இனியென்ன நான் செய்வேன்	அர்ச்சுனனே
	எனது கால்களை விடு	மைத்துனனே

அர். நீரென்ன சொன்னபோதிலும் உமது கால்களை விடமாட்டேன். நீ வேணுமானால் திமிரிக்கொண்டு போம்!

வசனம்

கிரு. அம்மா எனக்கு ஆபத்து வந்துவிட்டது. இவன் முரட்டுப்பயல்! கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்கிறான் என்று நினையாதே! கொல்லன் பற்றுக்கொரடு போட்டு இரும்பை கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வதுபோல், தன் இரண்டு கைகளாலும் என்காலை இறுக்கிப் பிடித்து இழுத்துக் கீழே தள்ள வழி பார்க்கிறான்! என் பிராணாபத்துக்காக இவன் மீதுள்ள கோபத்தை விடுத்து தயவு செய்யென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாட்டு தர்க்கம்

இராகம்-மோகனம் தாளம்-ஆதி

கண்ணிகள்

அல்.	என்னவிதம்	சொன்னாலுங்கேளேன்
அர்.	இனிமேல்	நிஜமாய்
	மொழிந்தேனிங்கு	நிற்கமனந்தாளேன்
கிரு.	இன்னமுங் கோபம்	நீ செய்தால்
	நன்னயமாமோ	தங்கையே
அல்.	என்னருமைகண்டுமன் பில்லாதவருக்காக இங்கே	(என்)
அர்.	நாயகனானல்லவோ	துயரால்
	இந்நாளில்	விடலழகோ
அல்.	எவளாலிது நாள்வரை	வராதிருந்ததோ
	அவளை விட்டு நாடிவர	ஏது நேர்ந்ததோ
அர்.	இன்னுமேனோ	கோபம்
கிரு.	இனியொருபிழைசெய்ய	இசையானருகிலழை
அல்.	என்னவிதம்	

விருத்தம்

கிரு. கொண்டவன் குற்றம் செய்தால்
கோதையர் கோபங்கொண்டு

திண்டுமின் டுரைப்பதிந்த
ஜெகத்தினுக் கடுத்திடாது
கண்டவர் பழிக்க நேரும்
காருண்யம் சற்றுவைத்திங்
கண்டுமுன் கணவன்றன்னை
அருகினி லழைப்பாயம்மா

அம்மா! மாங்கல்யதாரணம் செய்த மணவாளன் ஒரு பிழையைச் செய்தால், மனைவி பொறுத்துக்கொள்வதே பதிவிரதா தர்மம். இல்லையேல், உலகம் பழிக்கும். இவன் செய்த குற்றத்திற்கு இதுவரை கால் கடுக்கும்படி எள்ளுக்குத்திய உலக்கையை மூலையில் சாத்தி வைத்ததுபோல், ஒரே நிலையில் நின்றதே போதும். இனி உபசாரமாக அருகில் அழைப்பாயாக!

விருத்தம்

அல். உன்னத முடைய அண்ணா உரைத்தது வாஸ்தவந்தான்
என்னினு மிவரின்சேதி எவருக்கு மனங்கொள்ளாது
மன்னவர் குலத்துதித்து மனைவிமைந்தர் மேலன்பு
தன்னையும் விடுத்தாரோடு சரசிக்க ஞாயமுண்டோ

வசனம்

அண்ணா! தாங்கள் இப்பொழுது சொல்லியது சரிதான். ஆயினும் மனைவி, மைந்தர்மேல் அன்பில்லாதவரோடு கூடி வாழ்வது நியாயமாகுமா? இவருக்குத்தான் சூடு சொறனை கிடையாதே! இப்பொழுது பட்ட அவஸ்தைகளையெல்லாம் இன்னும் சற்று நேரத்தில் மறந்து விடுவாரே!

விருத்தம்

அர். அருமைசேர் மயிலே உன்னை
அகன்றிடேன் ஒதுபோதுமிங்கே
இருவென்றா லிருப்பேன்
எழுந்துபோவென்றால் போவேன்
உரிமையா யேவல் கேட்பேன்
ஒருபோதும் மறக்கமாட்டேன்
கருணைசெய் கால்கள் கன்றிக்
கடுக்குது நடுக்கங் கொண்டேன்

வசனம்

என் பிரியநாயகி! இனி ஒருபோதும் நீ இட்டகட்டளைக்கு மாறாக நடக்கமாட்டேன். இருவென்றால் இருப்பேன். எழுந்து

போவென்றால் போவேன். கால்கள் மிக நோவடைந்துவிட்டன! தயவு செய்!

அல். இனி ஒருபோதும் என்னைவிட்டு அகன்று போகமாட்டீரே?

அர். போகேன்! போகேன்!! அப்படிப்போனால் இப்பொழுது அடைந்த தண்டனை ஞாபகப்படுத்தாதா! நல்லது ஒரு சமாச்சாரமல்லவா?

அல். அது என்ன சமாச்சாரம்!

பாட்டு

வஞ்சகங்கொண்டேண்டி என்ற மெட்டு*

கண்ணிகள்

அர். கண்மணி மைந்தனுக்கின்று நோயால்
கைதோஷித்துப் போச்சுதென்று ஒரு
கடிதத்தினிலெழுதித்தெரி யவும் விட்டனையதனுக்கிது
காலம் ஓடி வந்தே னின்று நொந்தேன்
காணச்செய்தால் மிகநன்று

வசனம்

அன்பார்ந்த சுந்தரி! நமது அருமைக் குழந்தையாகிய புலந்திரனுக்கு சுரங்கண்டு, ஜன்னிபிறந்து கைதோஷித்துப் போனதாக நீ எழுதிய ஓலையைக் கண்டு தாமதிக்காமல் ஓடி வந்தேன்! இப்பொழுது அவனைக் காணவேண்டும்.

(மெட்டு)

அல். ஜன்னிபிறந்திட வில்லை கை
தான் தோஷித்துப்போக வில்லை அவன்
தருவாய்பவ ளமதாலொரு ரதமானது மெனவேமொழி
சாற்றிடக் கேட்டேனா னதற்கு ஓலை
தான்விட்டேன் தாம் வருவதற்கு

வசனம்

ஜன்னியும் பிறக்கவில்லை! கைதோஷித்துப் போகவுமில்லை! அவன் விளையாடுவதற்கு பவளத்தேர் செய்வித்துக் கொடுவென என்னைக் கேட்டான். அதற்கு நான், நம் நாட்டில் பவளம் விளைவு கிடையாதபடியால், உம்மால் அதைப் பெற்றுக்கொள்ளச் செய்யலாமென ஓலை எழுதினேன்.

* நாடகம்: கோவலன் சரித்திரம் - காவடிச்சிந்து

(மெட்டு)

அர். அற்ப ஒரு பொருட் டாக-மைந்தன்
ஆபத்தினாலின்று சாக-நிலை
அணுகிற்றென எழுதத்துணி வதுவுற்றது மடைமைக்குண
மல்லவோ என்மனம் நோக-அடி
அல்லியென்செய்தாய்முன் பாக

வசனம்

அடி! கேவலம் பவளமென்னும் ஒரு அற்பப்பொருளுக்காக மைந்தனுக்கு பிராணாபத்து நேர்ந்ததென்று எழுதத்துணிந்தது, பெண்ணாகிய உனது பேதமைக்குணமல்லவா? அண்ணா முதல், அந்தப் புரஸ்திரீகளெல்லாம் அழுதழுது சஞ்சலமைடயச் செய்தாயே! அப்படி ஏன் எழுதச் செய்தாய்?

(மெட்டு)

அல். அப்படி நானெழு தாமல்-போனால்
அன்புகொண்டு நீரெண் ணாமல்-இங்கு
அதிசீக்கிரம் வருமார்க்கமு முடியச்செயலதுவேற்படும்
ஆனதால் தாமதிக் காமல்-உமக்
காள்விட் டேனுண்மைசொல் லாமல்

வசனம்

அப்படி நானெழுதாமல் வேறுவிதமாக உண்மையை எழுதியிருப்னோகில், நீர் இவ்வளவு சீக்கிரம் வந்து சேருவீரா? பாஞ்சாலி, சுபத்திரை முதலான உமது மனைவிமார்கள்தான் விடுவார்களா? அதற்காகத்தான் தந்திரோபாயமாய் ஓலை எழுதினேன்.

(அர்). அது போனால் போகட்டும்.

பாட்டு

எங்கே புத்திரி என்ற மெட்டு*

கண்ணிகள்

எங்கே மைந்தன்
என் கண்ணினால் காணவேணும்
இந்த யிடத்தினில் வந்திடச்செய்குவாய் (எங்)
ஐந்து வருஷ மாச்சுது கண்டு
ஆதலால் பார்க்க நான் ஆசைமேற்கொண்டு
அன்பாய் மகிழ்ந்து இன்பங்கொள்ள இப்போதே (எங்)

---

* நாடகம்: ஞான சௌந்தரி

வசனம்

பிரியசகி! கண்மணி புலந்திரன் எங்கே? அவனை என் கண்ணால் காண மிக ஆசையுண்டாகிறது. பார்த்து ஐந்து வருஷமாயிற்று அல்லவா? சீக்கிரம் வரவழை.

பாட்டு தர்க்கம்

மர்க்கத்தில் கண்ட என்ற மெட்டு*

அல். அந்தரதங்கொண்டு வந்த பின்பேநீ அவனெழில்வதனமும்
அவனைப் பார்க்கலாகும்

அர். அப்படிச்சொல்லாதே இப்போகாணவிட்டா
லாவி அப்பாலேகும்

அல் புத்திரன் மேலாசை யுற்றவரென்றிந்தப்
பூவையறிந்திடுவேன்

அர். பூரணக்கிருபைவைத்துக் காட்டவேணுமிப்
போதுன்னைக் கும்பிடுவேன்

அல். என்னசொன்னாலு மிசையேன் மைந்தனுக்காக
ஏன் செய்கின்றீர்வாது

அர். எங்கே இருக்குது அந்தப்பவள
இரதமெனக்கோது

அல். ஏழுகடலுக்கப் பாலே இருக்குதாம்
ஏகுவீரிப்போது

அர். எட்டுநாளையிலே கொண்டுவருவேனான்
எந்தன்சொல் தப்பாது

வசன தர்க்கம்

அல். எட்டு நாளையிலா கொண்டு வந்து கொடுப்பேனென்கிறீர்?

அர். ஆம்! எட்டுநாளையில் கொண்டுவந்து கொடுக்கிறேன்.

அல். அப்படிப் பிரமாணம் செய்து கொடுத்துப்போம்.

அர். இந்த கிருஷ்ணமூர்த்தி தலையில் கைவைத்து சத்தியமாக எட்டு நாளைக்குள் கண்மணி புலந்திரனுக்குப் பவளத்தேர் கொண்டு வந்து கொடுக்கிறேன்.

* நாடகம்: கோவலன் சரித்திரம்

வசனம்

கிரு. அடே அர்ச்சுனா! அவள் கையிலடி, அல்லது உன் வயிற்றிலடித்துக் கொள். என் தலையில் ஏன் அடிக்கிறாய்? நீ சத்தியம் செய்து சத்தியம் செய்துதான் என் தலையும் வழுக்கலாயிற்று. இன்னும் இருப்பது ஐந்தாறு ரோமந்தான். அதையும் அப்பத்துவிட்டு பம்ளீஷ் நாரத்தம் பழம்போல் வழுக்கலாக பார்க்கிறாயோ!

அர். பார்ப்பதென்ன பார்த்துத்தான் விட்டேனே!

வசனம்

அல். நல்லது. இனித்தாமதிக்க வேண்டாம். ஞாபகமிருக்கட்டும். என்சேதி தெரியுமல்லவா? அங்குபோய் எவளாவது ஒருத்தியைக் கண்டு பல்லை இளித்துக்கொண்டு நின்று நாளைக் கடத்தினீரோ, அங்கு வந்து உம்மை இக்கட்கத்துக்கு இறையாக்கிவிடுவேன்! என்ன சாக்குப்போக்கு சொன்னாலும் ஒப்புக்கொள்ள மாட்டேன்! எட்டு நாளென்பதை மறுமுறையும் ஞாபகப்படுத்துகிறேன். உஷார்!

அர். மைத்துனா! வா, போகலாம்.

கிரு. அம்மா தங்காய்! போய் வருகிறோம் (போகிறார்கள்)

காட்சி - 7 (காடு)

அர்ச்சுனன் கிருஷ்ணன் இருவரும் பவளக்காட்டின்

வினோதங்களைக் கண்டு வர்ணிக்கிறார்கள்

பாட்டு

இராகம்-மோகனம் தாளம்-ஆதி

பல்லவி

(அர்). ஆ ஆ ஈதென்னகாக்ஷி அற்புதமாக்ஷி (ஆ)

அநுபல்லவி

அழகுபவளமது விளைகிற வனமிது (ஆ)

சரணம்

சாகைகளெல்லாங் கொடி
சன்னல் பின்னலாய்ப் படர்ந்து
தழைத்துச் செழித்து ஓங்கி
சார்ந்து எங்கு மடர்ந்து (ஆ)

சரணம்

அமரர்களதிபதியெனு முயர்மகபதி அதிசய முறுவனமும்
அரனின் தோழன்
அளகை நகரிலொரு குளமருகிலுள அதிபரிமளவனமும்
அதிகாலையில்
இமையமலையரசன் உயர்தவமதில்வரு மிறையவளெழில்வனமும்
இன்னும் யோகியர்
இருடிமுனிவர்தவமறையவர் நிறைபெறவிசைபத்ரிகவனமும்
இதற்கிணையோ
திமிர நீங்கச்சூரியன் சேர்ந்திடுங்காலே
செங்காடுதீப் படர்ந் தெரிவதுபோலே
நமது விழிக்கு முனம் நாடுவதாலே
நாகரீகமிதுவே காணக்காண மென்மேலே (ஆ)

பாட்டு

(கல்யாணம் செய்துவையுமே - என்ற மெட்டு)

பல்லவி

கிரு. இங்கு நீ வேடிக்கைபாராய் எனது தோழா (இங்)

சரணம்

தங்கமலைக்குப்பனி சார்ந்தது போலும்
சந்தனத் தருவுக்குச் சர்ப்பத்தைப்போலும்
மங்கள அகிலுக்கு வந்த முட்போலும்
வண்டுகள் வருகுது மலைமலைபோலும் (இங்)

செங்குழவிகள் கருங் குழவிகள் கூட்டம்
சிவ்வெனப் பறந்து திரிவது கொண்டாட்டம்
எங்கெங்கும் ரீங்காரத் தொனிகளின் நாட்டம்
இந்தப்பவள வனமோ அதிசிரேஷ்டம் (இங்)

(வேடன் வருகிறான்)

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

கண்ணிகள்

வேட. வேட்டையிலே விருப்பங்கொண்டேன்-இதோ
வில்லம்பு நானிங்கு கையில்கொண்டேன்
காட்டினிலே அலைந்துநின்றேன்-ஒன்றுங்

காணாமலே மனம் வாடுகின்றேன்
கண்டாலோ ரெண்டான துண்டாக இன்றேபோம் (வே)
மான்முயல்கள் பன்றிகளும்-நல்ல
மாடப்புறா கொக்கு பக்ஷிகளும்
நானுணவுக்காக இன்றுதேடி
நாடுகிறேன் மூலை மூலை ஓடி
களைத்தேனேகண் காணாதென் தேகம் நொந்தேனே (வே)

அர். (வேடனைப்பார்த்து) நீ யார்?

வேட. நானிவ்வனசரன்.

அர். இவ்வனம் யாருக்குரியது?

வேட. பவளநாயகி என்னும் மாதரசிக்கு உரியது.

அர். அவளுடைய தந்தை பெயரென்ன?

வேட. ஐயா! அந்த அம்மாளுக்குத் தந்தை தாய் கிடையாது. இந்தப் பவளக்கொடியிலே பிறந்தாள். ஆனால், சேராம்பு ராஜா எடுத்து தன் மகளாகப் பாவித்து வளர்த்து வருகிறார்கள்.

அர். என்ன! அசுத்தமான மாதர் கர்ப்பத்தில் பிறவாது இந்தப் பவளக் கொடியில் பிறந்தவளா அவள்!

வேட. ஆம் ஐயா! ஆம் ஐயா!

அர். ஆனால், அவள் அழகு விசேஷமாகத்தானே இருக்கும்?

வேட. அதற்குத் தடையென்ன? அந்த அம்மாளைப் போல் ஒரு பெண் எங்குதேடிப் பார்த்தாலும் கிடையாது!

அர். அப்படியானால் அவள் அழகைக் கொஞ்சம் சொல்லு பார்ப்போம்!

வேட. எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன்.

பாட்டு

புள்ளிக்கலாபமயில் பாகன் என்ற மெட்டு*

கண்ணிகள்

கூந்தல் நீருண்ட	மேகம்போலிருக்கும்-நீளங்
கொஞ்சமல்ல	பத்துப்பாகமிருக்கும்-ஒரு
குற்றமில்லாச்	சந்திரனிருக்குமே முகத்தினை ஒத்
திருக்கும்	மனம் உருக்கும்
கண்களிரண்டும் மத	னம்பு-புருவங்
காணிலந்தக் காமன்கைவிற்	கரும்பு-நல்ல
கண்டமுஞ் சங்கினழகு	கொண்டிடும் தந்தவரிசை
விரும்பு	முல்லை அரும்பு
கச்சடந்திருக்குந்தன	பாரம்-யாருங்
காணநேரில் மோகமோ	அபாரம்-எழில்
கண்டுவமை சொல்லக்	கல்வி கம்பனுமயங்குவானன்
நேரம் உண்டோ	தீரம்

வ.ம். இவ்வளவுதான் என்னாலே சொல்லமுடியும்!

அர். நல்லது அவளுக்கு மணமாயிற்றா?

வேட. இன்னும் ஆகவில்லை. மணத்துக்கேற்ற பருவந்தான். ஏதோ விவாகத்தை மறுத்திருக்கிறார்கள்.

அந். ஆனால் அவளைக் காணமுடியுமா?

வேட. இந்த வன விநோதம் பார்க்க மாதம் இருமுறை வருவதுண்டு. அப்பொழுது மறைவாக இருந்து பார்க்கலாம். வேறுவிதமாகப் பார்க்க முடியாது! இன்று இங்கு வருவதாக வதந்தியுண்டு.

அர். நல்லது! அவளுக்குப் பிரியமான வஸ்து இன்னதென்பது உனக்குத் தெரியுமா?

வேட. வேறு பொருள்களில் அவளுக்கு இச்சையுண்டென்பது எனக்குத் தெரியாது. ஆனால், அன்னப்பக்ஷியைக் கண்டால் மிகு பிரியமாகப் பிடித்து விளையாடுகிறார்கள்.

அர். சரி! நீ போகலாம்.

வேட. போய் வருகிறேன்.

அர். கிருஷ்ணா! வேடன் சொல்லிய யாவும் கேட்டாயா!

கிரு. ஆம். கேட்டேன்.

---

* அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து

பாட்டு

இராகம்-புன்னாகவராளி தாளம்-ஆதி

கண்ணிகள்

அர். பவளக்கொடிமாதை நான் பார்க்கவேணுமே-அவள்
பாதாதிகேசம்வரை நோக்கவேணுமே
அவளுக்குள்ள அழகு எவருக்குமில்லை-யென
அணுகிக்கண்ணெதிர்வேடன் அறையக் கேட்டதனாலே
அனலிற் பிறந்தவளும் அல்லியிற் பிறந்தவளும்
மனதிற் கிசைந்தபல வடிவிற் சிறந்தவளும்
எனைநத்தியன்புகொண்டு வகை கட்கிணங்கியனு
தினமுற்றணைந்திடினும் அவளற்புதந்தெரிய (பவ)

வசனம்

கிருஷ்ணா! அக்கினியிலே பிறந்த துரோபதையும், அல்லிக் கொடியிலே பிறந்த பெண்ணணங்கும், இன்னும் அவர் போன்ற பற்பல ரூபசௌந்தரியமுள்ள மங்கையரும் அநுதினம் என்னை அடுத்துச் சுகபோக சல்லாபம் அளித்து வருகிறார்கள் என்றாலும், இங்கு வந்த வனசரன் வர்ணித்துச் சொல்லிய அயோநிதையான பவளநாயகியினுடைய அற்புத விசித்திரங்களையும் அறிய எனக்கு அவா மேலிட்டிருப்பதால் அவளை ஒருமுறை நான் கண்ணால் காணும் பாக்கியத்தை, நீ அருள்செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு வந்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

பாட்டு தர்க்கம்

இராகம்-கமாஸ் தாளம்-ஏகம்

பல்லவி

கிரு. விட்டுவிடு பார்த்தா வீணானசெய்கையிது (விட்)

அநுபல்லவி

எட்டுநாளில் வாரேனென்று
இயம்பினாய் அல்லிமுன் நின்று
சட்டென அதை மறந்து
சாற்றலாமோ நீ நினைந்து (விட்)

பல்லவி

அர். பார்க்கவேணும் கண்ணால் பாவையாள்
தன்னை இன்று (பா)

அநுபல்லவி

கார்க்கதிக மேனிமாயா
கண்ணே எங்கள் சகாயா
தீர்கக்மாகச் சொல்லுகிறேன்
சீக்கிரத்திலருள் செய்யாயா (பா)

கிரு. அல்லி கோபம் வந்தால்மோசம்
யார்தடுப்பா ரதுப்ரயாசம்
சொல்லினேன் கேளென்னுத் தேசம்
துயரம் நேரும் கெட்டதோஷம் (விட்)

அர். அல்லிகோபம் வந்தாலென்ன
அடியேனுயிர் போனாலென்ன
மெல்லி யிவளைப் பாராமல்
மேவிடேனென்றெண்ணு முன்னம் (பா)

கிரு. பாலனுக்குப் பவளரதம்
பார்க்கவந்து சேர்ந்தயிடம்
மாலடைந்து மதிமயங்கி
வாடலாமோ யிந்தவிதம் (விட்)

அர். சோதனையேனோ மாதவா
சுந்தரரூபா யாதவா
வாதனை செய்யாதே சும்மா
மறுத்து மறுத்து மோதவா (பா)

வசனம்

மைத்துனா! நீ என்ன சொன்னபோதிலும் இசையமாட்டேன். இந்தப் பவளக்கொடியாளைக் கண்ணாலே பார்க்க மாத்திரம் கிருபை செய்! வேறொன்றும் நீ எனக்குச் செய்ய வேண்டாம்! அவள் அழகு எப்படியிருக்கிறதென்று பார்த்த உடனே உன்னோடு வந்து விடுகிறேன்! அவளைப் பார்க்காமல் இந்த இடத்தைவிட்டு ஒரு அடியேனும் அப்புறம் எடுத்து வைக்க மாட்டேன்! இங்கு வந்த வேடனும் இன்று வன விநோதங்காண வருவாள் என்று சொல்லிப் போயினன்! எப்படியாவது நான் அவளைப் பார்க்க வேண்டும். தயவுசெய் ஓகோ! அதென்ன ஆரவாரம்?

கிரு. அவள்தான் வருவது போல் காணுகிறது!

அர். சுவாமி! இதற்கொரு மார்க்கஞ் சொல்லும்

விருத்தம்

கிரு. தொண்ணூறு வயது சென்ற
துவண்டதோர் மறையோனாகி
மண்ணோடு சாய்ந்துகொள்ள-நீ
வண்டுனைக் கடித்ததென்று
பெண்ணாக வேடம் பூண்டு
பிதற்றிநான் புலம்பிநின்று
கண்ணீர் விட்டழுகின்றேனக்
காரிகைவரக் காண்பாயே

வசனம்

அர்ச்சுனா! நீ தொண்ணூறு வயது சென்ற விருத்தாப்பியர் வேடம் பூண்டு, இறந்ததுபோல் பாசாங்கு செய்து, தரையிலே சாய்ந்து விழுந்துகிட, நானொரு இளம் பெண்ணாக வேடம் பூண்டு, உன்னைப் புருஷனாகப் பாவித்து, வண்டுகடித்து இறந்துபோனான் என்று மாரடித்து விழுந்து ஒப்பாரியிட்டு அழுது புலம்புகிறேன்! அம்முறைக்குரல் கேட்டு அருகில்வருவாள். அப்பொழுது வெகு சமத்காரமாய் அவள் அறியாதபடி கண்ணாலே அவள் அழகைப் பார்த்துக்கொள் ஜாக்கிரதை! நீ பார்ப்பது அவளுக்குத் தெரிந்தால் மோசம் வந்துவிடும்! வா வேஷம் போட்டுக் கொண்டு வருவோம்! (போகிறார்கள்)

பவளக்கொடி சகிகளோடு வருகிறாள்

பாட்டு தர்க்கம்

மந்தகாசமுகமாதரே என்ற மெட்டு*

கண்ணிகள்

பவ.	தாமரைமாமுக	மாதரே யாவரும்
	சந்தோஷமாக என்னோடு	சேர்ந்து வாரும்
சகி.	தடைசெய்யவில்லை நீ	சொல்லியபடி
	சார்ந்து வந்திட்டோம்	பவளக்கொடியே
பவ.	வண்டுகதண்டுகள்	வேடிக்கை பார்க்கலாம்
	மாலை வேளையில்	இச்சோலையைச் சுற்றி நாம்
சகி.	வருவோம் விரைவில்நட	நீ விரைவாய்
	மாதரசே மிகவும்	நீ மகிழ்வாய்

* நாடகம்: சத்தியவான் சாவித்திரி

இராகம் - ஹமீர் கல்யாணி தாளம் - ஆதி

பவ. செக்கச் செவேலென சேர்ந்தெங்கும் காணுது
தேரலங்காரம்போல் திவ்யமாத் தோணுது

சகி. தெய்வலோகத்திலும் இவ்வித மேதம்மா
தேவி நீ அதிஷ்ட சாலியம்மா

வசனம்

பவ. சகிமார்களே! உடலை நிழல் தொடர்ந்து செல்வதுபோல என்னை விடாமல் பின்பற்றி வாருங்கள். நீங்களெல்லாம் என்னுயிரைக் காப்பாற்றும் உடற்காப்பாள ஸ்திரீகளாயினும், இடபேதத்தால் உங்கள் உயிரைக் காக்கும் சேவகம் என்னைச் சேர்ந்ததாக இருக்கிறது. நான் உங்களைப் போலவே மானிட ரூபமாகக் காணப்பட்டாலும், தெய்வாம்ஸ உற்பன்னியாகி அசுத்த நீர்க்குழியின் வழியே ஜெனிக்காமல் சோராம்பு ராஜர்களாகிய எனது தந்தைமார்களது தவபலத்தால், இந்த வனத்தில் பவளக் கொடியிலே ஈஸ்வரன் அநுக்கிரகத்தால் உதித்து, இங்குள்ள வண்டுகதண்டு முதலான விஷஜெந்துக் களின் உபத்திரவம் அந்நியருக்கு உண்டாகாமல், பரோபகாரியாய், அநுதினம் இந்த இடத்தைச் சுற்றிப் பாட்டை சரியாகப் போக்குவரவு செய்பவர்களைப் பாதுகாத்து வருகிறேன். இந்த இடத்தில் வசிக்கும் வண்டுகதண்டுகள், வழிப்போக்கர்களைக் கடித்து மயக்கம் உண்டு பண்ணினால், சொற்ப நேரத்திற்குள் அந்த விஷமயக்கத்தைத் தீர்க்க மந்திரபலம் என்னிடம் உண்டு. அது கொண்டு உங்களையும் ரக்ஷித்து வருகிறேன்.

பாட்டு

(அரேசையான் என்ற மெட்டு)

வாரீர் ஓடிமகிழ்ந்து ஒன்றாயக் கூடி
வனசிங்காரங்கள் பாடி
மலை போல பெரிதான பலவண்டு
மகத்வ கீதங்கொண்டு
வருவதுவும் உண்டு
வளர்கொடிகள்
விழிகுளிர
அதிசய மாம்
வலவுமுள (வா)

நாம நுதினமிங்கு நாடியே நாள்தோறும்
நன்றாகப் பார்த்திருக்கின்றோம்

நலமாக விளையாடியிருக்கின்றோம்
இந்நாளிலுள்ள காக்ஷி
நாம்-கண்டதில்லை சாக்ஷி
நமது விழி
அலதுளதோ
உரைசெய்குவீர்
இது தருணம் (வா)

வசனம்

அடிசகிமார்களே! பார்த்தீர்களா! எங்கு பார்த்தபோதிலும் செக்கச் செவேலென செங்காடு தீப்பட்டுபோல பவளங்கள் விளைந்து கொடிவீசிச் சன்னல் பின்னலாகப் படர்ந்திருக்கின்றன! அங்கங்கு மலைபோல பெரிய பெரிய வண்டுகளும் கதண்டுகளும் பாடி ஆடித் திரிகின்றன! சமுத்திரத்தினது அலை ஓசையையும் அடக்கி மேல் ஆரவார சப்தங்காட்டும் இந்த விஷ ஜெந்துக்கள் அற்ப மானிடரை எளிதில் விடுமா? பகவான் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமன்றோ என்னை உண்டாக்கி மந்திரபலத்தையும் அளித்திருக்கிறார்! நல்லது சுற்றிப்பார்த்து வருவோம் வாருங்கள்,

----

கிருஷ்ணன், மாயப்பெண்ணாகவும், அர்ச்சுனன்
வயதுசென்ற கிழவனாகவும் வேஷமிட்டு வருகிறார்கள்,
அர்ச்சுனன் கீழே படுத்துக் கொள்கிறான்.

பாட்டு

(இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஏகம்)

மாய.	சாக உமக்கு	விதி வந்ததோ
	சஞ்சலம் வண்டினாலே	நேர்ந்ததோ
	ஆவிசோருது	கண்பார்த்திடும்
	அன்புடெனன்பேர்	சொல்லிக்கூப்பிடும்
	நாமப்பெட்டியெடுத்தாடி	யென்று
	எந்நாளும் சொல்வீரது	சொல்லெங்கேயின்று
	பூமிக்குப்பாரமாய்	என்னை வைத்து
	போய் மறைந்தீரோ	
	சின்னஞ்சிறு பெண்ணா	ளென்னைவிட்டு
	சேர்ந்ததேனோ	விண்ணுலகத்துக்கு

* நாடகம்: கோவலன் சரித்திரம்

இன்னும் தூங்கிக்கொண்டு நீரிருக்க
இச்சையேன்வாரும் வழிநடக்க
உச்சிப்பொழுதேறிப் போச்சுதையா
ஊர்வழியோ வெகு தூரமையா
பிச்சைமுந்திப்போகும் வாருமையா
பெண்ணாளென் சோகத்தைத் தீருமையா

வசனம்

பவ. சகிமார்களே! ஓடிவாருங்கள்!! ஓடிவாருங்கள்!!! நம்மைப் போலுள்ள ஒரு பெண் அபயக்குரலிட்டு அழுதுகொண்டிருக் கிறாள். சீக்கிரம் போய்ச் சேருவோம்!

பாட்டு தர்க்கம்

இராகம்-கல்யாணி தாளம்-ஏகம்

கண்ணிகள்

பவ. என்னவிதி வந்தது
ஏனழுது புலம்புவது
அன்னதெனக்குச் சொன்னால்
அவதிதொலைப் பேனின்னாள் (என்)

மாய. வண்டு கடித்ததாலே
மணவாளன் செத்ததாலே
அண்ட இடமோ யில்லை
யார்தணிப்பா ரிந்தத் தொல்லை (வண்)

பவ. எந்தவூ ருங்களுக்கு
இங்குவந்த தெதற்கு
அந்த விபரமுறை
அன்பா யெனக்கு உரை (எந்)

மாய. தூரம் வடக்கே வாசம்
துவாரகை எங்கள் தேசம்
பாரும் பசியால் நொந்தோம்
பஞ்சம் பிழைக்க வந்தோம் (தூர)

பவ. புருஷன் பிழைக்கச்செய்வேன்
போனபிராணன் வரவுஞ்செய்வேன்
கருதிச் சோகிக்க வேண்டாம்
கண்கலங்கி நோக வேண்டாம் (புரு)

ஹே மாதே! நீ விசனப்படாதே. உன் கணவன் உயிருக்குச் சேதமில்லை. இந்த இடத்திலுள்ள கொடிய விஷமுள்ள வண்டு கதண்டுகள் கடித்திருக்கின்றன. அவ்விஷமிறங்கிப் போக எனக்கு மந்திரந் தெரியும். நீ சற்று மறைவாக இரு. நான் அதற்கு வேண்டிய பரிகாரஞ் செய்கிறேன். (மறைந்த பின்) அடி பாங்கிகளே! இதுவென்ன ஆச்சர்யம்? இவளைப் பார்த்தால் நம்மைப்போல் சிறு பெண்ணாகத் தானிருக்கிறாள்! இவள் தன் புருஷனென்று சொல்லும் இவனைப் பார்த்தால் குடுகுடு கிழவனாக இருக்கிறான். இப்படிப்பட்ட கிழவனுக்குச் சிறு பெண்களைக் கல்யாணம் செய்து கொடுப்பது மாதாபிதாக்களின் குற்றமல்லவா? மேலும், இந்தக் கிழவன் நடப்பானானால் அருகம்புல் தட்டி ஆயிரம் இடத்தில் விழுவான் போலிருக்கிறதே! இவன் இவளைக் கட்டிக் கொண்டு என்ன செய்வது? இவளும் இவனிடத்திலிருந்து என்ன சுகமடையப் போகிறாள்? இவன் மாண்டுபோனானென்று மாரடித்துக் கொள்ளுகிறாளே? ஐயோ பாவம்! பாவம்!! கல்லென்றாலும் கணவன்! புல்லென்றாலும் புருஷன் அல்லவா? நல்லது. அதைப் பற்றி நாம் எதற்காக விசாரிக்க வேண்டும்? எப்பொழுது ஒரு ஜீவனுக்கு ஆபத்துண்டாயிற்று என்று கேள்விப் பட்டோமோ, அப்பொழுதே அதற்கு வேண்டிய சகாயத்தைச் செய்ய வேண்டுவது நமது கடமையாயிற்று. நல்லது பச்சைப் பவளக்கொடிகளை அறுத்துக் கொண்டு வந்து இந்தக் கிழவனுடைய கால்களைக் கட்டுங்கள். நான் மந்திரோச்சாடனஞ் செய்கிறேன்.

சகி. அப்படியே அம்மா! (போகிறார்கள்)

அர்ச்சுனன் கண்ணை விழித்து தலையைத்தூக்கிப் பவளக் கொடியாளைப் பார்க்கிறான் சகிகள் வருகிறது தெரிந்து தலையைக் கீழே போட்டு கண்ணை விழித்துப் பார்க்கிறான் சகிகள் கொடியால் அர்ச்சுனன் கை கால்களைக் கட்டுகிறார்கள்

பாட்டு

இராகம் தோடி தாளம்-ஆதி

---

* நாடகம்: கோவலன் சரித்திரம்

பல்லவி

பவ. வண்டுகடித்ததில்லையடி இவனை (வண்)

அநுபல்லவி

இவன் வஞ்சகமாயங்கள் தந்திரமறிந்த கள்ளனடி (வண்)

சரணம்

பெண்டுகளுக்குள்ளே இவள் பெரும் ஜெகஜாலியடி
பேசுவதென்னதிருட்டு வேஷமிட்ட நீலியடி (வண்)
எத்தனையோமங்கையரை இவன்கற்பழித்தவண்டி
இவனுக்குத் துணையாயிருந்த வளிந்தலவண்டி
இத்தனை பாசாங்கு செய்து ஏழைப்பாப்பான்போலே அண்டி
என்னை மோசம் செய்வதற்கு எண்ணியிங்கு வந்தவண்டி (வண்)

வசனம்

தோழிகளே! இவர்களைப் பார்த்தால் பெரும் மோசக் காரர்களைப் போல் தோற்றுகிறது! இவன் கிழவனல்லன். அனேக ஸ்திரீகளைக் கற்பழித்த கள்ளன என்பதாக நினைக்கிறேன். இவளும் இவனுக்குச் சகாயமாயிருந்து பல பெண்டுகளைக் கூட்டிவைத்திருப்பாள் என்றும் யூகிக்க இடம் உண்டாகிறது. ஒருக்கால் பெண்வேஷமிட்ட திருடனென்று சந்தேகிக்கின்றேன்! இவர் இருவரது நடைநொடி பாவனைகளைப் பார்த்தால், எனக்கு ஏதோ ஒரு ஆபத்தையோ, அவமானத் தையோ விளைவிக்க வந்தவராக விளங்குகிறது. இதற்கு என்ன செய்யலாம்? இவளோ ஜாலஞ்செய்து மாரடித்து அழுது புலம்புகிறாள்! இந்தக்கிழவனோ பிராணன் நீங்கியது போல் பாசாங்கு செய்து விழுந்து கிடக்கிறான்!

அர்ச்சுனன் கட்டுகளைத் தெறிக்கும்படி செய்கிறான்

பாட்டு

இராகம்-பியாக் சதாளம்-ஏகம்

கண்ணிகள்

பவ. கட்டிய கட்டுகள் பட்டுப் பட்டென்றின்று
விட்டுத் தெறிக்குதடி
கள்ளனிவனைய மெள்ளளவில்லை இச்
செய்கை யுரைக்குதடி
பச்சைப்பவளக் கொடிகொண்டு கட்டியும்
இற்றுத் தெறிக்குதடி

என்னவிதமாகக் கட்டியுருட்டினோம்
எல்லாம் அறுந்ததடி
என்னைத் தேடிக்கற்ப ழிக்கவந்திட்டவன்
என்று விளங்குதடி
இந்த ஜெகஜால வித்தைக் கள்ளிப் பேச்சை
எப்படி நம்பிடுவோம்
இன்னுமரை நாழி யிங்கிருந்தால்நாமெல்
லோருந் துன்பப்படுவோம்
எந்தன் சரப்பளி யாலே யிவனை
யிறுக்கிக் கட்டிநடப்போம்
இன்னுமேழரை நாழிகைவேளை வரை அப்பா
லேமறை வாயிருப்போம்

வசனம்

அருமைத்தோழிகளே! பழைய பவளக்கொடிகளை அறுத்து இவனைக் கட்டி உருட்டினோம்! நாம் பலங்கொண்டு கட்டிய கட்டுகளெல்லாம் தானாகவே பட்டுப்பட்டென்று இற்றுத் தெறித்துப் போயின! இவன் மந்திரக்காரனா! சூன்யவாதியா! ஜெகஜாலவேடிக்கை காட்டுகிறவனா! இனிமேல் அரைக்கணமேனும் இங்கு தங்கலாகாது! நின்றால், கட்டாயம் கெடுதி விளையாமல் போகாது! ஆகையால், எனது சரப்பளியினாலே இவனது கைகளை பலங்கொண்டவரை இறுக்கிப் பிணித்து மந்திரத்தை உச்சரித்து, இதன் உண்மை விபரமறிய அப்பால் மறைவான இடத்தில்போய் ஏழரை நாழிகை வரை தாமதித்திருப்போம் வாருங்கள். (சரப்பளியால் கைகளைக் கட்டி மந்திர உற்சாடனம் செய்து போகிறாள்)

(அர்ச்சுனன் எழுந்து வேஷத்தைக் களைந்துவிட்டு)

பாட்டு

இராகம்-காமஸ் தாளம்-ஆதி

பல்லவி

கண்டேன் கோபாலா அந்தக் கன்னி ரூபம்
அவள் காமன்ரதியென்பதற்கேது ஆக்ஷேபம் - நான் (கண்)

பவளக்கொடியறுத்துப் பாதங்களைப் பிணித்து
அவளென்முகம் பார்த்தடுத்து-அருகில் நிற்கக் (கண்)
ஈதிவளுக்கு நிகர் எதிராகவருபவர்

இல்லை இல்லை ஒருவர் இது நிச்சயம் (கண்)
அழகுக்கொரு ஆலயம் அவளோ அமுதமயம்
பழகத் தெரியும் நன்னயம் பாரதிசயம் (கண்)

வசனம்

கிரு. நீகண்டாய்? அவள் மிகுந்த அழகுள்ளவளாகத் தானிருக்கிறாள்! அதற்கென்ன செய்ய வேண்டும் மென்கிறாய்.

அர். அப்படிக் கேட்டால் அல்லவோ சொல்லுவேன்!

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

கல்யாணஞ் செய்துவையுமே கண்ணபிரானே (கல்)

அநுபல்லவி

சொல்லு முன்பே அடியேன் சுகப்படுவதற்கு
தோகைமாரை ஆதியில் கூட்டிவைப்பதற்கு
எல்லை இல்லாதபணி புரிந்தேனானுமக்கு
இந்தவேளையினிலு மிவளை நீ ரெனக்கு (கல்)

வசனம்

கிரு. பேஷ்! நல்லவார்த்தை சொன்னாய். முதலாவது அவள் அழகைக் கண்டால் போதும் வந்து விடுகிறேன் என்றாய்! இப்போது கல்யாணம் செய்துவை என்கிறாய்! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? வா! வா!! பவளரதத்துக்கு வழிதேடுவோம்.

அர். கிருஷ்ணா! உனக்குத்தான் பைத்தியம் பிடித்துவிட்டது பவளரதம் கிடைப்பதற்குத்தானே நான் உபாயம் சொல்லு கிறேன்! இந்தப் பெண்ணுக்குச் சொந்தம் இந்தப் பவளக்காடு! இவளை நீ எப்படியாவது எனக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டால் அப்பால் நாம் பவளரதம் தேட வேண்டுமோ? எல்லாம் நமது சுவாதீனமாகிவிடும். ஆதலால், முன்பதாக அவளை நான் கல்யாணம் செய்துகொள்ள ஒரு உபாயத்தைத் தேடு.

(சகிவருகிறாள் அர்ச்சுனன் சகியைப் பார்த்து)

பாட்டு தர்க்கம்

(ஏனோ என்மீதில் கோபம் என்ற மெட்டு)

சகி. சிறப்புள்ள என்னரசி விடுத்தனளித்தினமே
சரப்பளிவாங்கிக்கொண்டு சுருக்கினில்வாடியென்றே
சீக்கிரத்தில் தந்தனுப்புவீர்

அர். மதிக்கு நிகரெனவே உரைக்கு முகமயிலே
தனித்திந்தவேளையிலே எதற்கிங்கு நீ வந்தனை
சாற்றவேணுங் கேட்பதற்கின்று

சகி. ஐயா! எங்கள் அரசி சரப்பளிவாங்கிக்கொண்டு வரச் சொன்னார்கள்.

அர். அப்படியா!

பாட்டு

இராகம்-பூரிகல்யாணி தாளம்-ஏகம்

கண்ணிகள்

ஏதுக்கிந்த சரப்பளியினால்
இறுக்கிக் கட்டினாளென்னை
வாதுக்கிங்கவள் வந்தெதிரிட்டாலும்
வாங்குவாளோ பொருள்தனை (ஏது)
கோட்டைக் கொத்தள மேறிக்குதித்தேனா
கொல்லைவழிவந்து கன்னமும் வைத்தேனா
வீட்டுப்பொருள்களை கொள்ளையுமிட்டேனா
வேடிக்கைக்கு கட்டினாலு மிப்படித்தானா (ஏது)
ரத்தத்திமிரினால் செய்திட்டமதமா
ராஜகுலத்தில் பிறந்த மேன் பதமா
இத்தரைமீது பெண்களுக்கு இதமா
எள்ளவும் எண்ணா மலிருந்த விதமா (ஏது)
தாதிபெண்டுகளும் தானுமொன்றாய்க்கூடி
சம்ப்ரமமாகச் சந்தோஷங் கொண்டாடி
ஓதிக்கேட்டு வாங்க உன்னைவிட்டாளோடி
உன்கையில் நான்தர மாட்டேனோடிப்போடி (ஏது)

அடி நான் சரப்பளியைக் கொடுக்கமாட்டேன் என்றதாக உங்கள் அரசியிடம் போய்ச் சொல்லு போ.

சகிபோன பின் கிருஷ்ணனைப் பார்த்து

பாட்டு

கல்யாணஞ் செய்துவையுமே என்ற மெட்டு

கந்தமலர்க்கோன் செய்திடும் வாதை
கணக்குவழக்கோ காமவுபாதை
அந்தப் பவளக்கொடி யாளெனு மாதை
அணைந்து சுகித்துவிளை யாட இப்போதே
கல்யாணஞ்செய்து வையுமே-கண்ணபிரானே (கல்)

கோபாலா! காலதாமதஞ் செய்யாதே கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்.

(பாட்டு தர்க்கம்)

கண்ணாயிரம்படைத்த என்ற மெட்டு

கிரு. என்சொல்-தட்டாதே தலைகொய்வாள்
கட்டாயங் கொலைசெய்வாள்
தரணியிலிவளெதிர் அமர்செய்த இனிஎவர் தானுண்டு
இது-தகுதியிலைவிரைவி லிரதநிலைதெரிய வாகண்டு

அர். போனால் போகுதுமையல்
ஆனால்சா கேனோதையல்
புணர இதுதருணம் மணமுடி அருள்புரி பூரணா
பெயர்-புகலுமொருகரியி னிடரதுகெடவரு காரணா

கிரு. எப்போது மிந்தத் தொல்லை
இப்போதும் விட்டாயில்லை
இது வுனது பிறவி தனிலுள் செயலது போகுமா
புகல்-எனது மொழியுனது செவியிலுறினுமிதமாகுமா

அர். இப்போதி வளைக்கூட்டி
வைப்பாய் மாலையைச் சூட்டி
இனியகலவி செய்ய எனது மனதுருகி வாடினேன்-உன
திணையடி மலர் துணை யெனவுயர் தமிழ்மொழி பாடினேன்

வசனம்

கிரு. காண்டீபா! என்ன மதிகெட்டுப் பேசுகிறாய்? எப்பொழுது பார்த்தாலும் உனக்கு இதுவே தொழிலாகப் போய்விட்டது. உன்சேதி தெரிந்திருந்தும் நான் உன்னோடுவந்தது மடத்தனம். உன்னால் எனக்கு அல்லியால் அவமரியாதை கிடைக்கும் போலிருக்கிறது! இனி என்னைத் தொந்தரவு செய்யாதே! இதோ நான் துவாரகாபுரிக்குப் போகிறேன்.

அர். நீ எங்கே போவது? நான் விட்டால் அல்லவோ துவாரகைக்குப் போவாய்!

பாட்டு தர்க்கம்

இராகம்-பியாக்-தாளம்-ஆதி

அர்.	அந்தமாதை எந்தனுக்குச்	சொந்தமாய்ச்சேர்த்து
	ஆனந்தமடையச்செய்வீ	ரென்முகம் பார்த்து
கிரு.	இந்தவாறு நீ சொல்லுவ	தேற்குமோகேடு
	எண்ணுவாளே அல்லிகேளாய்	என்சொல் அன்போடு
அர்.	இவளாலுயிர்போம்	அருள் நீ புரிவாயே
கிரு.	கண்ட கண்ட பெண்களாசை	கொண்டிடலாமா
	கானகத்தில் நீ புலம்பி	நொந்திடலாமா
அர்.	தொண்டுசெய்ய வேனின்னமும்	சோதனையேனையா
	இந்தத் தோகையைக் கூட்டிவைத்தால் சுகிர்தமுண்டையா	
கிரு.	தொழுதாய் அழுதாய்	இதனால் நலமாமா

வ.ம். நீ அழுதாலும் தொழுதாலும் பிரயோசன மில்லை. சும்மா இரு.

அர். ஒருக்காலுமுடியாது! இதோ! பிராணனை இழந்து விடுகிறேன்.

கிரு. பிராணனை இழந்துவிடு. அதைப்பற்றி எனக்கென்ன?

அர். உனக்கென்னவென்றா சொல்லுகிறாய்! உனக்குத்தான் அதைப் பற்றித் துக்கமுண்டாகும்.

கிரு. ஏனப்பா! எனக்கு அதைப்பற்றித் துக்கமுண்டாகும்?

அர். சொல்லட்டுமா?

கிரு. சொல்லேன் கேட்கிறேன்!

அர். நான் இறந்து போனால் உன் தங்கை சுபத்திரை தலையை மொட்டையடித்து, தாலியறுத்து, வெள்ளைப்புடவையாலே மூடிமுக்காடிட்டு மூலையில் வைப்பார்கள். அதைப் பார்த்து நீ துக்கப்படுவாயோ சந்தோஷப்படுவாயோ! சொல்லு?

கிரு. நல்லது. பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ என்னும் பழமொழி சரியாய் விளங்கிவிட்டது! உனக்காகப் பார்க்காது போனாலும் தங்கை சுபத்திரைக்காக வல்லவோ பார்க்க வேண்டியிருக்கிறது! நல்லது நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.

விருத்தம்

முன்னமே வேடன்சொன்னான் மொய்குழலந்தமாது
அன்னமேல் பிரியமுள்ளாள் ஆகையாலன்னரூபம்

தன்னை நீ எடுத்துக்கொள் நான் தருவன வேடனாகி
உன்னையின் றவட்குவிற்பேன் உள்ளத்தின்படி செய்வாயே

வசனம்

உன்னை இப்பொழுது ஒரு அன்னப்பக்ஷியாக்கி, நானொரு வேடன் வேஷமாக உருமாறி, அவளுக்குக் கிரையப்படுத்தி விடுகிறேன். அப்பால் நீ சமயோசிதப்படி நடந்துகொள்.

அர். சந்தோஷம்! நேரமாகிறது. என்னைச் சீக்கிரமாக அன்னப் பக்ஷியாக்கி அவளுடைய கையில் கொடுத்து விடுங்கள். அவள் பரிசம்பட்டாவது பரமானந்தமடைந்து கொண்டிருக்கிறேன்!

(போகிறார்கள்)

காட்சி - 8 (தர்பார்)

பவளக் கொடியாள் சரப்பளி வாங்கிவரச் சொல்லியனுப்பிய
சகி வராததால் ஆலோசித்துக் கொண்டிருக்கிறாள்

பாட்டு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி

பவ. சரப்பளி வாங்கிக் கொண்டு சுருக்கினில் வாடியென்றேன்
வரக்காணோ மின்னுமவளை (சர)

அநுபல்லவி

உரைத்த வார்த்தைதடுத்துக் கொடுக்க மாட்டேனானென்று
உலுத்தனவட்குச் சொல்லி யிருப்பான் எதிர்த்துநின்று (சர)

சரணம்

படுத்துக் கிடக்கும்போதே படக்குப் படக்கெனகண்
விழித்துப்பின்மூடிக் கொண்டு-மிகு
பாசாங்கு செய்யக்கண்ட போதினில் அவன்மீது
பற்றியசந்தேகமு முண்டு
அடுத்துக் கெடுக்கவந்த அவன் மோசக்காரனென்று
அட்டியில்லாமற் சொல்லுவேன் கிட்டிய சகியேயின்று (சர)

வசனம்

சகிகளே! பாங்கி மதனவல்லியைச் சரப்பளி வாங்கி வருவதற்காக அனுப்பிப் பத்து நாழிகைக்கு மேலாகிவிட்டது. இன்னும்

அவளைக் காணோம்! காரணம் யாதொன்றும் தெரியவில்லை. அந்தக்கிழவன் மாயவேஷதாரியாகவே இருப்பானென்று நினைக்கிறேன்! அவன் இறந்ததுபோல் பாசாங்கு செய்தவனே யல்லாமல், உண்மையில் உயிர் நீங்கினவன் அல்லன்! பவளக்கொடிகளை அறுத்து அவனைக் கட்டும்போதும், சரப்பளியினால் கட்டும்போதும் நன்றாய்க் கவனித்தேன். மூடிய தனது இரு கண்களையும், திறந்து! திறந்து!! அடிக்கடி நான் பார்த்தபோது கண்களைச் சிக்கென மூடிக்கொண்டும் பாசாங்கு செய்தான். அப்பொழுது எனக்குச் சந்தேகமுண்டாயிற்று. ஆயினும் நம்போன்ற ஒரு பெண் முறைக்கிணங்கிச் சென்றதன் நிமித்தம் எடுத்த தொழிலை முடித்துப்போக மந்திர பரிகாரங்களைச் செய்து வந்தேன். சரப்பளி அவனிடத்தில் அகப்பட்டுக் கொண்டது. அவன் வம்பன்! சகி மதனவல்லி! எவ்வளவு சமத்கார வாக்குவல்லபி என்றாலும், அந்தப் பொல்லாதவன் வழக்குப்பேசிப் பொழுது போக்குவானேஅன்றி, சரப்பளியைக் கொடுத்தனுப்பமாட்டான். இதற்கென்ன செய்யலாம்?

(சகி வருகிறாள்)

சகி. அம்மணி! சரப்பளியைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லி விட்டான்.

பவ. சகிகளே! நான் அப்பொழுதே சொன்னேனல்லவா! இருக்கட்டும்.

கிருஷ்ணன் அர்ச்சுனனை அன்னப்பக்ஷியாக்கி பவளநாயகியிடம் விற்க வேடரூபம் கொண்டு வருகிறார்.

(பாட்டு)

பத்தொன்பதாம் நூற்றுக்குமேல் என்ற மெட்டு

வே. சந்தோஷங் கொடுக்கும் அன்னம்
சஞ்சலங்கள் தீர்க்கும் அன்னம்
தந்தானம் பாடும் அன்னம்
தக்கவிலை தருவாருண்டோ
தளுக்கு அன்னம் குலுக்கு அன்னம்
ஜலமும் பாலும் பிரிக்கும் அன்னம்
தனக்கு நிகராய் நினைக்க ஒருவர்
இருக்குமெனிலோ எதிர்க்கும் அன்னம்
அன்னம் வாங்கலையோ அம்மா (அன்)
கண்டோர்கள் மகிழும் அன்னம்
கண்காக்ஷி யான அன்னம்
பண்பாடு மிந்த அன்னம்

பாத்து விலை தருவாருண்டோ
பகட்டுமன்னம் பசப்புமன்னம்
பழக்கி நன்றாய் வளர்க்குமன்னம்
பலத்தில் மிகுந்து எதிர்த்து மயக்கும்
விதத்தில் உறுத்து மிருக்கும் அன்னம் (அன்)
குந்தி மன மகிழும் அன்னம்
கோதையர் மே லாசை அன்னம்
சந்திரனை நிகர்த்த அன்னம்
தக்கவிலை தருவாருண்டோ
சரச அன்னம் அரச அன்னம்
தழுவி அல்லியி லடையும் அன்னம்
தருமநெறியை நினைவரைவொரு
தமையனெனவும் கருதும் அன்னம்

பாட்டு

(என் பேரைச் சொன்னானென்று என்ற மெட்டு)

பவ. அன்னப்பறவ்வை பாராய்
ஆ ஆ ஆ என்ன சீராய்
அருமையுடைய இறகுவிரிய தலைநிமிர நேராய்
அன்பாய் நின்று பார்க்கின்றது
அதனை விலைக்கு வாங்குவோம்
அதனை விலைக்கு வாங்குவோம்
அதனை விலைக்கு வாங்குவோம் (அன்)

வசனம்

சகி! அதோ பார். ஒருவன் அழகிய ஒரு அன்னப் பக்ஷியை விலை கூறிக்கொண்டு வருகிறான். அந்தப் பக்ஷியோ இறகுகளை விரித்து, தலையை உலர்த்தி நம்மைப் பார்க்கிறது. ஆ! ஆ! எனக்கு மிகவும் பிரியமுண்டாகிறது. விலை கூறிவருபவனை இங்கே அழைத்து வா! அந்தப் பக்ஷியை நாம் கிரையத்துக்கு வாங்கிக்கொண்டு விளையாடலாம்!

சகி. அடே அன்னப் பக்ஷிக்காரா! இங்கு கொண்டு வா.

பாட்டு

இராகம்-கல்யாணி தாளம்-ஏகம்

பல்லவி

பவ. நான் தருவேனடா வேண்டும் பொருள்கள்
இந்நாளினிலே உனக்கு (நா)

அநுபல்லவி

நவரத்தின முடனற்புத
மிகுபொற்பணி நகைநட்டுகள் (நா)

சரணம்

ஏன்தாமத மிதற் கென்னவிலை சொல்லு
இப்போதது தப்பாமல்
உனக்கேதர நிற்கேனறி (நா)

அடே வேடா! இந்த அன்னத்தை எனக்குக் கொடு. பிரதியுபகாரமாக அநேக நவரத்தினங்களும், தங்க நாணயங் களும், ஆபரணங்களும், பட்டுப் பீதாம்பர ஆடைகளும் ஏதேஷ்டமாகக் கொடுக்கிறேன்.

வேட. அண்டர்கள் மகிழும் அன்னம் அரசர்கள் பணியும் அன்னம்
கண்டவர் புகழும் அன்னம் கணவலி தெரிந்த அன்னம்
பெண்டுகள் கூட்டந்தன்னை பிரியமாய்ப் பார்க்குமன்னம்
எண்டிசைவென்ற அன்னம் இதன்விலைக்களவுமுண்டோ

விருத்தம்

பவ. மழைக்குலங் கண்டாலாடும் மயில்கண்கள் போலிலங்கும்
இழைக்கோராயிரம் பொன்பெற்ற இந்திரவர்ணப்பட்டும்
வழிக்கிவன் சுமக்கும் பாரம் வ்ரை பசும் பொன்னுமிங்கே
அழைத்திவனிடங் கொடுத்து அனுப்புவீர் தோழிமாரே

வசனம்

அடிசகிகளே! இவனுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து அனுப்புங்கள். இந்த அன்னப்பக்ஷிக்கு வேண்டிய தீனிகளையும் பால் முதலானவைகளையும் கொடுத்து நன்றாய்ப் போக்ஷித்து சுவர்ணக் கூண்டில் அடைத்து வையுங்கள்.

பவளக்கொடி மஞ்சத்தில் சயனித்துக் கொள்கிறாள்
அர்ச்சுனன் அன்னப்பக்ஷி ரூபத்தை மாற்றி வருகிறான்

வசனம்

அர். நான் இப்பொழுது அன்னப்பக்ஷி ரூபத்தைவிட்டு எனது சுய ரூபத்தோடு வந்திருக்கிறேன். இப்பொழுதோ இரவு பதினைந்து நாழிகை இருக்கலாம். இவளோ நல்ல நித்திரையில் இருக்கிறாள். உறங்கும்போது தன்கையில் கட்கம் வைத்துக்

கொண்டிருக்கிறாள். ஒருவேளை இவள் அல்லியிலும் மிகு கோபக்காரியாக இருந்தாலும் இருப்பாள். எதற்கும் நமது ஆபத்பாந்தவனாகிய கண்ணபிரானைத் தோத்திரம் செய்து கொள்வோம்.

பாட்டு

முத்திநெறியறியாத என்ற மெட்டு

மாதவனே மதிசூதா மாடுகள்பின் திரிநாதா
சீதரனே இவளோடு சேரமய லானதனால்
காதல்மிக வென்ரூபங் கண்டவுடன் கொண்டிடவே
நீ தயவா யருள் புரிவாய் நிதமுமுனைத்தொழுவேனே

அர்ச்சுனன் மஞ்சத்தை அசைக்கிறான். பவளக்கொடி கோபத்துடன் தன் கையிலிருக்கும் உடைவாளை வீசுகிறாள். அந்தச் சமயம் அர்ச்சுனன் விலக மஞ்சத்தின் ஒருகாலில் பட்டு இரண்டு துண்டாக முறிந்துவிடுகிறது.

பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

பவ. வேற்றாளின் ஓசையது கேட்டேனி தேதுமறு
நாட்டாரெந் நாளும்வர மாட்டார பாயமிது
விட்டிட்டால் நம்தொழில்
இஷ்டப்பா டும்செய்த
கட்டுப்பா டும் தலை
கெட்டுப் போம் இன்றோடு
வேகமுடன் மூலைகளெல் லாம்நுழைந்து பார்ப்போம்
வேற்றுநிலை தோற்றுமெனில் வெட்டியின்று தீர்ப்போம்
விடமனமில்லை எளிதினிலிதை யானதனால்

(நாலாபக்கமும் சுற்றிப்பார்த்து)

பவ. எங்கே ஒருவரையும் காணவில்லையே? ஒருவேளை நாம் உருண்டு புரண்டிருப்போம். அதனாலே, மஞ்சம் அசைந்து மணிகள் சப்தித்திருக்கின்றன. அந்த மர்மம் உணராமல் நாம் அந்நியன் பிரவேசித்து விட்டான் என்பதாகக் கருதி விட்டோம்! நல்லது சயனித்துக் கொள்வோம்.

(மஞ்சத்தில் சயனிக்கிறாள்)

அர். (வெளிவந்து) நல்லவேளை நாம் ஒதுங்காது போனால், இந்தத் தூணில் விழுந்த வெட்டு என் கழுத்தில் விழுந்து நான் இறந்து போயிருப்பேன்!

மறுபடியும் மஞ்சத்தை அசைக்கிறான்

பவளக்கொடி எழுந்து கோபத்துடன்

பாட்டு

ஆரடா ஆரடா என்ற மெட்டு

பவ. நில்லடா நில்லடா நில்லடா நில்லடா
நில்லடா சொல்லுகிறேன்
வல்லமையாயிருள் வேளையிலே மெள்ள
வந்து புகுந்தது மெய்ப்பொருளைக் கொள்ள
சொல்லடா யில்லையேல் ஈரல் வெளிதள்ள
துண்டாக வெட்டுவே னுன்னுடலுந்துள்ள ! (நில்)

அர். இனி நமது புன்சிரிப்பால் இவளை மோகத்துக்குட் படுத்துவோம்! (சிரிக்கிறான்)

பவளக்கொடி உடைவாளை கீழே நழுவவிட்டு

நாணப்பட்டுக்கொண்டு அர்ச்சுனனைப் பார்த்து

பாட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி

பல்லவி

பவ. சுந்தர மதனன்
தோகையர்கள் காணில்மிக ஆசைகொள்ளலாகிய (சுந்)

அநுபல்லவி

சந்ததமிவனருகி ருந்தாலும்போதுமெனக்கு
சந்தோஷ முண்டாகுமென் மேலும் சிறு
தையல் என்னைக்கூடிச்சேரமெய்யாகஎண்ணிவந்தானோ
ஞாலவித்தை யாடுபவன் போலும்
வந்து-சார்ந்து இங்கு நேரில் நின்றதாலும்
சேரமாலும் ஆனதாலும் அன்பினாலும் (சுந்)

வேறுபாட்டு

தோக்காதேனே வாலே கும்மே என்ற மெட்டு

பத்தரைமாற்றுப் பொன்னைப் பழிக்குமிவன் தேககாந்தி
சித்தஜ னுருவெடுத்துத் தேடியிங்கு வந்ததுபோல்
இந்தினந்தனிமையாக என்னிடத்தில் வந்து நின்றான்
சிந்தையில் மையலாகுது
மிஞ்சியென் மேனி நோகுது
வந்தகோபம் மாறினது
கொஞ்சிட எண்ணமானது மாதெனைப் பார்த்து
கொண்டமாமயில் தீர்த்து
மஞ்சமீதில் ரஞ்சிதமாய் இன்றணைந்து சேருவானோ

வேறு பாட்டு

இராகம் காப்பி தாளம்-ஆதி

பல்லவி

இந்த மன்னன்யார் தெரியேன் இவிடம்வந்த (இந்)

அநுபல்லவி

இருள் செறிந்திடும் வேளையிலேயொரு
வருமறிந்து கொள் ளாமலுமேவரு (இந்)

மகுடங்கள்

என்கண் கண்டின் றின்பங்கொள்ள
தன்சொந் தம்பெண் டென்றிங்குள்ள (இந்)
ஈடெவர்பொற்புக் கெதிரொன்று
நாடிடிலொப்பும் பொருளின்று (இந்)
ஏது காரண மோதெரியாதிது
சூதுதானிட மேவரவானது (இந்)
இச்சைப் பட்டுக் கெட்டதுநெஞ்சம்
நச்சுப் பற்றக் கிட்டுது கொஞ்சம்
எனக்கி ணக்கமு முரைக்க முற்பவ
மனக்க லக்கமும் விலக்க நிற்பவன் (இந்)
இமயவரு மிவிடம் வரவெனில் மிகுபயம்
அமைவர்க டினமிரவில் வருமிவ னிருதயம் (இந்)

சரணம்

அந்தர உலகத்தை யாளும் இந்திரனோ
அழகிய கிரணங்கள் பொழியுஞ் சந்திரனோ

எந்த மாதினையு மிணக்குந் தந்திரனோ
எனக்கென் றயன்படைத்து விடுத்த சுந்தரனோ (இந்)

வசனம்

இவர் அழகில் நான் மயங்கிவிட்டேன்! என் அபிப்பிராயத்துக்கு இவர் உடன்படுவாரோ உடன்படமாட்டாரோ தெரியவில்லை! சம்பாஷணையால் தான் தெரிய வேண்டும். முன்பு, நம் உள்ளத்தின் நிலைமையை வெளிப்படுத்தக்கூடாது! சினங் கொண்டதுபோல் மிரட்டிப் பார்ப்போம்.

பாட்டு தர்க்கம்

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஏகம்

பவ. இரவில் வந்த திருடா நீ யாவனோ உரையடா
அர். ஏதிது கோபம தாயுரை யாடு கிறாய்வனி தாமணியே
பவ. மாதர்கள் வாழிடம் ஆடவர் மேவுதல் ஞாயம தோமடையா
அர். மாரன்விடு மலர்வாளிகள் பாயநான் வந்தேனென்னைக்கூடு
பவ. வாய்மத மோதுவ தாலேதுயரது வந்துசேருமோடு
அர். எவ்விதமான துயரம் வந்தாலும் நான்
எள்ளளவுஞ் சகியேன்
பவ. இன்றே உனக்குக் கேடு காலங்கிட்டிய
தென்றுநான் எண்ணுகிறேன்
அர். இச்சை ரத்தினமே
பவ. இல்லையோ லஞ்ஜை இத்தினமே
அர். எப்படியேனும் செப்பியுமேகேன்
இப்படி மோடி ஏற்காது வாடி
பவ. ஏவலர் காணி லதோகெதி யாகுவை
ஆவலி னால்விளை வாவதுபாதகம்
நீர்யார்? அதனை முன்பு சொல்லும்
அர். என்னை யாரென்றா கேட்கிறாய்? தெரிவிக்கிறேன்!

(விருத்தம்)

இந்திரப் பிரஸ்தம் வாழும் இறையவன் தருமராஜன்
சிந்தையில் மகிழுந்தம்பி ஜெயங்கொண்ட பார்த்தனென்பேர்
முந்திய நற்றவத்தின் முறைமையா லுன்னைக்கண்டு
வந்தனனா சைகொண்டு மருவிஎன் மயல்தீர்ப்பாயே

வசனம்

ஹே! களங்கமற்ற சந்திரவதனி! நான் சந்திரகுலத்து உதித்தவன். இந்திரப் பிரஸ்தத்திற்கு இறையவனாகிய தர்மராஜருடைய தம்பி அர்ச்சுனன், விஜயன், காண்டீபன், விபர்சு, சவ்யசாசி, தனஞ்சயன் முதலான பல நாமதேயங்களைப் பெற்றவன். நான் முன்செய்த தவ பலத்தால் உன்னைக் கண்டு ஆசைகொண்டு இங்குவந்தேன். என் மதனாவஸ்தையை நீக்க மருவிச்சேரவா! காலதாமதம் செய்யாதே!

(கிட்ட நெருங்க)

பவ. சற்றுப்பொறும். சமீபத்தில் வரவேண்டாம்!

(விருத்தம்)

சந்திரகுலத்தில் வந்த தனஞ்சய வீரவேந்தர்
எந்தவேளையிலுங் கண்ண னிடத்தினில் பிரியாநட்பு
சொந்தமாய்க் கொண்டசேதி தொல்லுலகியம்பக் கேட்டேன்
அந்தமா யவனைக்காணேன் ஆதலால் நம்பிலேனே

வசனம்

நான் தனஞ்சய ராஜரைப்பற்றி நன்கு கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் கண்ணபிரானைப் பிரியா நட்புக் கொண்டவர் அன்றோ! இங்கு நீர் தனித்து நிற்கிறீர்! அந்த மாயவனைக் காணோம்! ஆகையால், உம்மை அர்ச்சுனரென்று நம்பமாட்டேன்!

அர். அடி பேதாய்! எவ்வளவு பிரியநட்பு கொண்டாலும், இப்படி அந்தரங்கமாகக் கலவி இன்பத்தை வேட்டு ஒருஸ்திரீயினுடைய அந்தப் புரத்தில் பிரவேசித்திருக்கும்போது, மற்றொரு புருஷன் நோக்கிக் கொண்டிருப்பானோ? அது அவமரியாதையும் லஜ்ஜையற்றதனமும் அல்லவா? நான் எப்பொழுது அழைப்பேனோ அப்பொழுது வருவார்! தடையில்லை நீ சந்தேகப்பட வேண்டாம்!

பாட்டு தர்க்கம்

(பாலுங்கேநாக்ராவ் என்ற மெட்டு)

அர். நானே அருச்சுனன் நானே அருச்சுனன்
நாயகியே கண்ணன் மைத்துனன்
ஏனோ உனக்கென்மேல் இன்னமுஞ்சந்தேகம்
ஏந்திழையே கொண்டேனுன் மோகம்
அடி ஏந்திழையே உண்மை (நானே)

பவ. ஆனாலழைத்திடும் ஆனாலழைத்திடும்
அம்மாயவனை உண்மைப்படும்
வீணான வாதுகள் வேண்டாமுமக்கின்று
வேறென்ன சொன்னாலும் நம்பிலேன்
நீர் வேறென்ன இங்கு (ஆனா)

கிரு. சந்தேகம் ஏனம்மா சந்தேகம் ஏனம்மா
தங்காய் பார்த்தனிவன் தானம்மா
வந்தான் உன்னைத்தேடி மையல்மிகக்கொண்டு
மாலைசூடு புண்ணிய முண்டு
நீ மாலைசூடு உனக்குச் (சந்)

வசனம்

பவ. அண்ணா! நமஸ்கரிக்கிறேன்!

கிரு. அம்மா! அர்ச்சுனன் இவனே! இன்னும் உனக்குச் சந்தேகம் இருக்கிறதா!

பவ. அண்ணா! தங்களைக் கண்டபின் சந்தேகமுண்டோ! இது விஷயமான சந்தேகமில்லை.

கிரு. வேறு எந்த விதமான சந்தேகம்?

வசனம்

பவ. அண்ணா! என்பிதா முதலானவர்கள் இந்நாள்வரை எனக்கு வற்புறுத்தி புத்திசொல்லியும் கேளாமல், பிடிவாதமாகக் கல்யாணமே செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லி யிருக்கும் நான், எவ்விதம் வெட்கமில்லாமல் இப்பொழுது கல்யாணம் செய்விக்கும்படி சொல்லுவேன். அதுதான் சந்தேகமாயிருக்கிறது!

வசனம்

கிரு. அம்மா! அதற்கு நானொரு உபாயஞ்சொல்லுகிறேன் கேள். நீ இரவில் நிலா முற்றதில் தங்கியிருந்ததாகவும், அங்கு ரிஷபாரூடராக சிவபெருமான் உமையவளோடு தோன்றி மேலக் கோட்டைவாசலில் தங்கியிருக்கும் இருவரில், உன்மனதிற் கேற்ற மணவாளனை மணஞ்செய்து கொள்ளென்று சொல்லி மறைந்ததாகவும் உன் பிதாவிடம் சொல். உன் பிதா தாமதிக் காமல் மனமகிழ்ச்சியோடு மணத்தை நிறைவேற்றுவைப்பார்.

பவ. அண்ணா! இது நல்லயுக்திதான். ஒருவரும் பழிக்கமாட்டார்கள். அப்படியே செய்கிறேன்.

கிரு. அர்ச்சுனா! வா மேலக்கோட்டை வாசலில் போயிருக்கலாம்.

அர். பிரியநாயகி! நான் போய்வரவா? ஞாபகமிருக்கட்டும் மறந்துவிடாதே கண்ணே! (போகிறார்கள்)

பவ. பிராணேசா! தம்மை மறந்தால் என்னுயிர் தரிக்குமா?

(சேராம்பு ராஜர் வருகிறார்)

பவ. பிதா! நமஸ்கரிக்கிறேன்!

சே. மங்களம் உண்டாகட்டும் அம்மா!

பாட்டு

இராகம்-பந்துவராளி தாளம்ஆதி

பல்லவி

என்ன துக்கம் உனக்கம்மா
என் அம்மா அம்மா (என்)

அநுபல்லவி

அன்னதை என்னிடம்
இன்னதெனச் சொல்லு (என்)

மகுடம்

முன்னமே உனக்கு நான் நன்னயமாக
உன்னதஞ் செய்வித்தேனே இன்னமும் நோக (என்)

சரணம்

ஆடையணி பணிக ளதிற் குறையேது
அடிபணியுந்தாதிமா ருளரகலாது
மாடமாளிகைசெல்வ வகை குறையாது
மற்றுனக்கிச்சை வந்த தெப்பொருள் மீது (என்)

அம்மா! ஏனிவ்வாறு மனங்கலங்கி நிற்கிறாய்? உனக்கு நேர்ந்த குறையென்ன? அதனைத் தெரிவி!

(பவளக்கொடியின் விருத்தம்)

நேற்றிராவினிலே ஆனந்தமாக நிலாமுற்றந்தங்கிநானிருந்தேன்
தோன்றினார் சிவனார் உமையவளோடு சொல்லின ரென்னிட மதனைச்
சாற்றுவேன் கோட்டைமேலவாசலிலே தங்கினரிருவர்களில்
ஏற்றதாமொருவன்றனை மணமுடிப்பாயென்றனர் கனவினில் நிஜமே

வசனம்

சே. அம்மா! மெத்த சந்தோஷம். நாங்கள் முன்னமே உனக்கு மணஞ்செய்விக்க முயன்றோம். அக்காலங்களிலெல்லாம் தடுத்துவந்தனை! இப்பொழுது நீ மணஞ்செய்துகொள்ள விரும்புவதால் உன்னிஷ்டப்படியே விவாகத்தை முடித்து வைக்கிறோம். இதோ சென்று கோட்டை வாசலில் தங்கியிருக்கும் பூமான்களை அழைத்து வருகிறேன்.

(போகிறார்)

கோட்டைவாசலிலிருந்து அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் அழைத்து வருகிறார்

சே. அம்மா! உன் விருப்பத்தின்படியே இதோ அழைத்து வந்திருக்கிறேன். உன் மனத்திற்கு உகந்த மணவாளனை மாலை சூடுவாயாக.

பவளக்கொடி அர்ச்சுனனுக்கு மாலை சூடுகிறாள்

விவாஹம் நடக்கிறது

காட்சி - 9 (அந்தப்புரம்)

அல். வத்ஸா! நீயேன் ஆகாரங்கொள்ள மாட்டேனென்கிறாய்?

பாட்டு

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி

புல. தாயே பவளரதம் தருவாய்-மிகு
சஞ்சலமானேன் நீ தெரிவாய் (தா)
சேயெனக்காதியில் நீயுரை செய்தது
மாயமாகும் நான் நம்பவேமாட்டேன்
சீக்கிரம் தந்திடவேணு மிவ்வேளை-இல்லால்
செப்பினேன் சாப்பிடவே மாட்டேனதால் (தா)

வசனம்

அம்மா! நீ எனக்குப் பவளரதம் தந்தாலொழிய நான் சாப்பிட மாட்டேன். இதோ செய்வித்துத் தருகிறேன்! இதோ செய்வித்துத் தருகிறேனென்று எத்தனை நாள் ஏமாற்றி வருகிறாய்! இனி உன் சொல்லை நம்பமாட்டேன்! நான் சாப்பிட வேண்டுமென்ற பிரியம் உனக்கிருந்தால் இப்பொழுதே பவளத்தேரைக் கொடு.

அல். அடி சகிகளே!

பாட்டு

எந்தனது திருநாடு கேள்கிறாயோதம்பி என்ற மெட்டு

எட்டு நாளையில் வாறேனென்றவர்
இன்னும் ஏன் வரவில்லை
அவர்-ஏகினாரோ அவ்வெல்லை
அங்கு-என்ன நேர்ந்ததோ தொல்லை
அவரை-ஏனனுப்பினேன் தேர்கொண்டுவர
சேதி தெரியவில்லை
அங்குபோம் வழியுந் தெரியாமல்
எங்குதேடு கின்றாரோ
மன-மங்கிவாடு கின்றாரோ
வழி-கண்டு ஓடுகின்றாரோ
அல்ல-தந்தக்காட்டில் வாழ்பெண்டுகள்
மயல்கொண்டு கூடி நின்றாரோ

வசனம்

சகிமார்களே! சண்டாளனாகிய பார்த்தன் என்னிடத்தில் எட்டு நாளைக்குள் பவளத்தேர் கொண்டு வருவதாகச் சத்தியம் செய்து போனான். இன்னும் வரவில்லை. அவன் சேதி எனக்குத் தெரிந்தும், நான் அவனை அனுப்பியது மடத்தனம். மூர்க்கன்! அங்கு எவளை நேசித்துக் கொண்டிருக்கின்றானோ தெரியவில்லை! நல்லது.

பாட்டு

(கழுத்தில் விழுந்தமாலை என்ற மெட்டு)*

இந்த யிடத்திலவன் இயம்பு மொழிப்படியே
எட்டு நாளாச்சுதேனோ வரவில்லை
எனக்குச்சொல்லிய வார்த்தைதனைப் போக்கடித்ததாலே
இயற்று வேனவனுக்குப் பெருந்தொல்லை
என்னையாரென்றெண்ணிக் கொண்டான்
லேசில் நான் விடேன்
யார்வந்து தடுத்தாலு மதற்குடன் படேன்
எங்கே பெரியகத்தியை
எடுத்துக் கொண்டுவாரு மிருதுண்டமாக்குவேன் (இந்த)

சீக்கிரம். எனது பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு வாருங்கள். அவன் எந்த இடத்தில் பதுங்கினாலும் நான் எளிதில் விடப்போகிற தில்லை! இந்தக் கட்கத்தால் அவனை இருதுண்டாக்கி என் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறேன்! குழந்தாய் வாபோகலாம்.

(போகிறார்கள்)

* நாடகம்: கோவலன் சரித்திரம்

காட்சி - 10 (அந்தப்புரம்)

வசனம்

கிரு. (தனிமொழி) ஓகோ! மோசம் வந்துவிட்டது! அல்லி அர்ச்சுனனைக் கொல்லப் புறப்பட்டுவிட்டாள்! அர்ச்சுனன் என்னை மேலக்கோட்டை வாசலில் காத்திருக்க வைத்துவிட்டு பவளக் கொடியாளின் மோகபரவசனாகி இரவு பகல் தெரியாமல் லீலா விநோதத்தில் இருக்கின்றான்! இந்தவேளை நான் காப்பாற்றாது போனால் அவனுக்குப் பிராணாபத்தாகவே முடியும். இதற்கொரு மார்க்கம் செய்வோம்.

பாட்டு

வாடிநீ வாடிநீ என்ற மெட்டு

அர்ச்சுனா அர்ச்சுனா
அதிகதுரிதமாக விரைவினில் ஓடிவா (அர்)
அல்லியிப்போது படைக்கூட்டி வந்திட்டாள்
ஐயையோ உன்னைக் கொல்லக்கண் சிவந்திட்டாள்
அப்பொழுதேசொன்னேனான் சட்டையாயிருந்தனை
யார்தடுத்தாலும் நிற்பதற்கே இசையாள் சிந்தனை
அங்கம் ரெண்டு துண்டாய் போமே (அர்)

வசனம்

கிரு. ஓ! அர்ச்சுனா!!

அர். அவன் யாரடா? அங்கே காமாட்டிப்பயல்! கத்துகிறவன்! சிவபூஜையில் கரடி நுழைந்தது போல் சுகவேளையில் கூப்பாடு போடுகிறான்!

பவ. பிராணேசா! வாருங்கள் பஞ்சணைக்குப் போவோம்!

கிரு. ஓ! அர்ச்சுனா! வாடா! வாடா!!

அர். அவன் யாரடா! ஓயாமல் கூப்பாடுபோடுகிறவன்? வந்தேனோ தலையை வீசிவிடுவேன் ஜாக்கிரதை!

பவ. என் துரையே! கலவிசெய்ய வாருங்கள்!

அர். பிரியநாயகி! தலைவாசலில் எவனோ கூப்பாடு போடுகிறான்! உனக்குக் கேட்கவில்லையா? கவனி.

பவ. எவனோ பரதேசிப்பயல்! பிச்சைக்கு வந்திருப்பான். சகிமார்கள் பிச்சைகொண்டு போடுவார்கள். நீங்களேன் அதனைக் கவனிக்கிறீர்கள்! வாருங்கள் பஞ்சணைக்குப் போகலாம்!

கிரு. (தனிமொழி) அவள் அவனை நல்லவனாக்கி விட்டாள். அவனாவது எவனோ கூப்பாடுபோடுகிறான் என்று சொன்னான். அவள் என்னைப் பிச்சைக்காரப் பயலாக்கி விட்டாள். இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. என் பேரிலல்லவோ குற்றமிருக்கிறது. இவர்கள் இருவரையும் நான் இப்படிக் கூட்டிவைக்காது போனால், என்னை இப்படி அவமரியாதைப் படுத்துவார்களா? பேஷ்! பேஷ்!! நமது ஜென்மம் நல்ல ஜென்மந்தான்! இருக்கட்டும். என்ன செய்யலாம்! தங்கை சுபத்திரை தாலியறுந்து போமென்றல்லவோ பார்க்க வேண்டியிருக்கிறது! அடே அர்ச்சுனா! ஓடிவா!! ஓடிவா!!! குடிக்கெட்டு போச்சுதடா! ஓடிவா!

அர். நாயகி கண்ணன் குரல்போல் கேட்கிறது! நீ சற்று பொறுத்திரு. இதோ வந்துவிட்டேன்!

(தனியிடம்)

அர். கண்ணா! என்ன சமாச்சாரம்?

கிரு. நல்லவேலை செய்தாய்! சந்திரனை ராகுபிடிக்க வருவதுபோல், அல்லி உன்னைத்தேடி வந்து விட்டாள்! இன்னும் அரைக் கணத்தில் உன் உயிர் போகப்போகிறது! அதற்குள் இவ்வளவு சந்தோஷமா? போ! போ! இன்னும் அறைகுறையாயிருக்கும் இன்பத்தையும் பவளநாயகியிடம் அநுபவித்துக் கொள். இறந்தபிற்பாடு என்ன வரப்போகிறது?

அர். என்ன! என்ன!!

கிரு. எல்லாம் நல்ல காரியந்தான்!

அர். என்ன நல்ல காரியம்?

கிரு. அல்லி உன்னைத்தேடி வருவது நல்ல காரியமில்லையா?

அர். அல்லி வருகிறாளா?

கிரு. வருகிறாளா! வந்துவிட்டாள்!

அர். எங்கே வந்துவிட்டாள்?

கிரு. எங்கே வந்து விட்டாளென்றா கேட்கிறாய்? அவள் சும்மா வரவில்லை! கையில் கத்தியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள்!

அர். ஐயோ! என் தலை போய்விடுமே! கிருஷ்ணா! கிருஷ்ணா!! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

கிரு. நான் பிச்சைக்காரப்பயல் உன்னை என்னால் எப்படிக் காப்பாற்ற முடியும்? அந்தப் பவளக்கொடி அம்மாளிடம் போ! அந்த மகாராணியம்மாள் உன்னைக் காப்பாற்றுவாள். என் காலவிதி துவாரகைக்குப் போகவேணும் நேரமாகுது!

வசனம்

அர். பகவானே! இதுவென்ன சோதனையா? சிறியோர் செய்த பிழையைப் பாராட்டலாமா! தெரியாமல் சொன்னதை பிழையென்று எண்ணாமல் ஜீவதானம் கொடுத்துக் காப்பாற்றுமையா! அல்லியோ பொல்லாதவள்! அடங்காப்பிடாரி என்றெண்ணாமல் அவளை மணஞ்செய்துகொண்டு அவஸ்தைப்படுகிறேன். தயவுசெய்து ரக்ஷியும் சுவாமி!

(காலைப்பிடிக்கிறான்)

கிரு. இப்பொழுதுதான் புத்தி வந்ததோ? நல்லது எழுந்திரு! என்னோடு வா.

அர். ஐயோ! என்னை அல்லியிடத்தில் பிடித்துக் கொடுக்கவா கூப்பிடுகிறீர்!

கிரு. இல்லை! இல்லை!! சும்மாவா காப்பாற்றுகிறேன்.

அர். சுவாமி! எனக்கு உம்மையல்லாது வேறு கெதியில்லை. ரக்ஷித்தாலும் சரி! பக்ஷித்தாலும் சரி! இதோ வருகிறேன்.

(போகிறார்கள்)

வசனம்

கிரு. (தனிமொழி) அர்ச்சுனனை மரணமூர்ச்சையாக்கி, அவனுயிரை இந்தச் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டேன். நான் இனிமேல் ஒரு வெட்டியான் வேடமெடுத்து தருமருக்கு இழவுஓலை கொடுப்பதுபோல் நடித்து அல்லியைச் சந்தித்து யாவரையும் மகிழ்விக்கிறேன். இதோ வெட்டியான் வேடம் போடப் போகிறேன். (போகிறார்)

காட்சி - 11 காடு

பாட்டு

இராகம்-கல்யாணி-தாளம்-ஏகம்

புல. தந்தை சென்றவழி அம்மா இந்தவழி தானோ
சாற்றவேணும் கேட்பதற் கில்லாமல் மகிழ்வனோ

அம்மா! தந்தைசென்ற பாதை, இந்தப் பாதைதானா? சொல்லு.

பாட்டு

இராகம்-அடாணா தாளம்-ஆதி

அல். தந்தையென்று சொல்லுகின்றாயா
சொன்ன சத்தியம் மறந்தவனை
பித்தனைக் கொலைகாரனை (தந்)

மந்தமதி கொண்டுசொன்ன
வாக்குமீறி நடந்தோனே
வாட்டிக்கொல்ல வந்தவீர
மாது மைந்தன் நீயவனைத் (தந்)
உத்தமகுலத்தினி லுதித்திருந்திட்டாலுமென்ன
உணர்வணுவில்லா மடையன்
ஒரு உரலிலே சேலைகட்டியிருந்தாலும் மங்கையென
உற்று உற்றுப்பார்க்குங் கொடியன்
சித்தசுத்தி இல்லாதவன்
தீயமுடன் பொல்லாதவன்
நித்தியமும் பொய் சொல்பவன்
நீசன் கெட்ட கள்ளனவன் (தந்)

வசனம்

அடே சிறுபயலே! நீ மதுராபுரியை அரசு செலுத்தும் வீரதீரம் பொருந்திய அல்லி ராணியினுடைய புத்திரனல்லவா? அப்படியிருந்தும் கேவலம் சத்தியம் தவறிய சண்டாளன்! குடிப்பிறப்பொழுக்கங்குன்றிய கொடியன்! அறிவீனன்! மோசக்காரன்! காமாதூரன்! திருடன்! அறிவில்லாதவன்! துஷ்டநேசத்துக்கு இணங்கியவன்! இவ்வளவு தீய குணங்களையும் ஒருங்கேயுடைய அந்த தப்பிலிப்பயலையா தந்தை யென்று சொல்லுகிறாய்? அவனை தந்தை என்று சொல்லியதற்காக இந்தத் தண்டனையை அநுபவித்துக் கொள்!

(கன்னத்திலடிக்கிறாள்)

(கிருஷ்ணன் வெட்டியான் வேடம்பூண்டு வருகிறார்)

பாட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஏகம்

வெட். அர்ச்சுனன் மகாராஜா செத்துப்போன ஓலை
அஸ்தினாபுரம் இந்திரப் பிரஸ்தத்துக்கப்பால்
செப்பிவரப்போர வெட்டியானும் நானே
கையில் காசு கிடைக்கும் காரியத்தில் தானே

அல். யாரடா நீ! எங்கே போகிறாய்!

வெட். அம்மா! நானொரு வெட்டியான்! சேராம்புராஜர் ஒரு இழவோலை கொடுத்தனர். இதை இந்திரப்பிரஸ்த ராஜர் தர்ம பூபதிக்குக் கொடுக்கப் போகிறேன்!

அல். அடே! இழ ஓலை என்றாயே! யார் இறந்தது!

வெட். அம்மணி! அர்ச்சுன ராஜராம்! அவர் தர்மராஜர் தம்பியாம்! அவரிங்கு வந்து இறந்துபோனாராம்! நேரமாகுது. நான் போக வேண்டும். வழிவிடுங்கள்!

அல். அடே நில்! இறந்தகாரணமென்ன? வியாதியா?அவமிருத்யுவா?

வெட். அதெல்லாம் எனக்குத் தெரியாது! பொழுது போவதற்குள் நான் இந்திரப்பிரஸ்தம் போய் அவர்களை அழைத்துக் கொண்டு வர வேண்டும்! நேரமாகுது! வழிவிடுங்கள்.

அல். அடே! அந்த அர்ச்சுனன் இறந்தது உண்மைதானா?

வெட். இதென்னம்மா! இப்படிக் கேட்கிறீர்கள்? எனக்கு என்ன வந்தது! நான் ஏன் பொய் சொல்லவேண்டும்? இதுவரை அர்ச்சுனராஜர் ஒருவர் இருக்கிறாரென்ற பெயரைக்கூட நான் கேள்விப்பட்டதில்லையே! இங்கே பறைசாற்ற மகாராஜா ஓலை கொடுத்து விபரம் சொல்லத் தெரியும். இனியென்னை ஒன்றும் கேட்காதீர்கள். நான் போகிறேன்.

பாட்டு

இராகம்-பிலஹரி தாளம்-ரூபகம்

அல். இறந்து போனானோ
என்னாலவன் சாகுமுன்னாலே தன்னாலே (இறந்)
மறந்துபோ யிங்கே
இறந்தா னென்றவன்
திறங்காணு முன்னே (இறந்)
குழந்தைக்குப் பவளமதாலே-ரதம்
கொண்டுவருவேனெனச் சொன்ன விதம்
கொஞ்சமே னுந்தன்
நெஞ்சி லெண்ணாத
வஞ்சனா மவன் (இறந்)
வில்லிலவனை விஜயனாமென்று
மேதினிபுகழ் வலியை - நானின்று

வெளிச்ச மாக்கவே
நினைத்த வோட்டமாய்
அடுத்து நோக்கினேன் (இறந்)

(போகிறான்)

காட்சி - 12 (அடர்ந்த காடு)

(அர்ச்சுனன் இறந்து கிடக்கிறான்)

பாட்டு

(திருக்கடையூர் தன்னிலே என்ற மெட்டு)

தர். தம்பி இறந்தாயோ
என்றன்னை மறந்தாயோ (தம்)
நம்பி இருந்தேன் நடுத்தெருவில்விட்டு
நல்விடம் சென்றாயோ நாடி இச்சைப்பட்டு (தம்)

வசனம்

ஆ அர்ச்சுனா! உன்னையல்லவோ நான் நம்பி இருந்தேன். என்னை நீ இப்படி நடுத்தெருவில் கைவிட்டு உனக்குச் சுகமான இடத்தைத் தேடிப்போய்ச் சேர்ந்தாயே இது ஞாயமா. பகைவராகிய துஷ்ட துரியோதனாதியார் கையில் என்னைக் காட்டிக் கொடுத்து விட்டாயே. நான் என்ன செய்வேன்.

பாட்டு

(திருக்கடையூர்தன்னிலே - என்ற மெட்டு)

பீம. பாவிநான் செய்சூது
உன்னைப்-பாழ்செய்த திப்போது (பாவி)
ஆவிகொள்ளுங் கூற்றன் போல பறை சாற்றி
அய்யோ அழைப்பித்தேன் பொய்சொல்லி ஏமாற்றி (பாவி)

வசனம்

தம்பி! நான் பாவி. பொய்பறை முழக்கி உன்னை இங்கு வரவழைத்ததனாலன்றோ நீ இங்குவந்து மடிந்தாய். இல்லையேல் இவ்விதம் நேர்ந்திருக்க ஞாயமேது இப்பாவத்துக்கு நானல்லவோ ஆளாகிவிட்டேன்.

பாட்டு

மெட்டு

நகு. கொன்றதும்மை நானே
கேட்டுக் கொண்டங்கு நின்றேனே (கொ)
அன்று பாக்குச்சொக் கண்ணருக்கானதென்று
அங்குசொல்லத்தடுத்தால் சாவீரோ இன்று (கொ)

வசனம்

அண்ணா! நானல்லவோ உம்மைக்கொன்ற பெரும்பாவியானேன். தர்மண்ணா உம்மைக்காண வேணுமென்று ஆலோசிக்கவும் பீமண்ணா அதற்கு உபாயம் கேட்கவும் தம்பி சகாதேவன் அண்ணாவுக்கு பாக்குச்சொக்கேறியதாக பறைசாற்ற வேணுமென்று உரைக்கவும். கண்டு கேட்டு நின்ற நான் இந்தப் பொய் வேண்டாமென்று தடுத்திருந்தால் இவ்விதமான துக்கச்சம்பவம் ஏற்படுவதற்கு ஞாயமில்லை நான் உடன்பட்டு நின்றபடியினாலன்றோ நீர் இங்குவந்துயிர் துறந்தீர். இப்பழிபாவம் என்னையல்லவோ சேர்ந்திருக்கிறது இதற்கென்ன செய்வேன்.

பாட்டு

மெட்டு

சகா. பாவிநா னுதாரணம்
இப்-பழிக்கு நானே காரணம்
ஏவியழைக்க உபாயஞ்சொன்னதாலே
இங்குவந்து நீரிறந் தீராதலாலே (பாவி)

வசனம்

அண்ணா! என் உபாயமொழியாலன்றோ நீர் இங்கு வந்து இறந்தீர்! ஆகையால், நான் உம்மைக்கொன்ற பெரும் பாவியானேன்! இதற்கென்ன செய்வேன்!

(நால்வரும் விலகிநிற்கிறார்கள்)

சுபத்திரை வருகிறாள்

பாட்டு

இராகம்-முகாரி தாளம்-ஏகம்

சுப. இறந்தீரோ எனை நினையாமல்
ஏதோநீர் மறதியானீர் (இற)
சிறந்ததமது திருமுகத்தை
தேவியான இப்பாவி காண்பேனோ (இற)
அண்ணரைக்கண்டு வருவேனென்று
அறைந்ததால் விடை மொழிந்தேனன்று
எண்ணிலேனுயிர் கெடும் வகையொன்று
இந்தவிதம் துயர் வந்து
சிந்தை வருந்தி மெலிந்து (இற)
மாங்கல்யந்தன்னை நீங்கி வாழ்வேனோ
மற்றார்நகைக்க மனமும் நோவேனோ
ஏங்கிரங்கி நானிருந்தழுவேனோ
எனக்கொரு இடமதுதேடி
அமைத்திடும் வருகுவேனோடி (இற)

பவளக்கொடி வருகிறாள்

பாட்டு

இராகம்-தேசிகதோடி தாளம்-ரூபகம்

பவ. மாலையிட்டென்னை மூன்றுநாளாகவில்லை
மன்னாநீர்கைவிட லாமாஇனி
மற்றென்ன நானும்மைச் சொல்வேனிந்தச்சிறு
மாதுபாவமும்வீண் போமோ
விரித்தமுகூர்த்தம் மணப்பந்தலின்னும்
பிரிக்கவில்லையையோ நாதா இங்கு
வீணாயதற்குள்ளே நீரேன்மடிந்தீரென்
வேதை சற்றுத்தெரி யாதா
கல்யாண வேளையில் பூசியகந்த
களபமணமாற வில்லை பொல்லாக்
காலவினையாலே நீர்மடிய நேர்ந்த
காரணமோமிகு தொல்லை

அல்லி வருகிறாள்

பாட்டு

(ஆற்றுவாரில்லை-என்ற மெட்டு)

அல். பாலனுக்குத்தேர் கொண்டுவந்திட
பாவிநானுமக் கோதலால்
காலனூருக்கு நீர் நடந்தீரோ
காதகி நானே ஆதலால்
மாலைகுங்கும சந்தனமண
வாசம்யாவு மிழந்தேனே
சேலைவெள்ளையுமாக வாழ்வேனோ
சிந்தைவாடியும் நொந்தேனே
இவ்விதம் நேருமென்று முன்னமே
எண்ணிலேன் எண்ணிலேனெனில்
எவ்விதத்திலும் இங்கனுப்ப
இசைந்திலே னவ்விடந்தனில்

மூவருக்கும் சக்களத்திப் போராட்டம்

பாட்டு தர்க்கம்

மாலையொன்று கையில்-என்ற மெட்டு*

பவ. எனது கணவர் தேகமதில் விழுந்
தேனடி இங்கு புலம்புகிறாய்
அல். நீ-எனது கணவர் தேகமதில் விழுந்
தேனடி இங்கு புலம்புகிறாய்
பவ. இவரோ உனது நாயகரானவர்
இங்குற்றுப்பார்த்துண்மை யாய்க்கூறடி
அல். நீ-இவரோ உனது நாயகரானவர்
இங்குற்றுப்பார்த்துண்மை யாயக்கூறடி
பவ. என்னடி நானிங்கு சொல்லச் சொல்லச் சும்மா
எதிர்த்தெதிர்த்தெனை வாதிக்கின்றாய்

* நாடகம்: கோவலன் சரித்திரம்

அல்.	நீ-என்னடி நானிங்கு	சொல்லச் சொல்லச் சும்மா
	எதிர்த்தெதிர்த்தெனை	வாதிக்கின்றாய்
சுப.	தாலிகட்டிக்கொண்ட	தேவிநானிருக்கச்
	சண்டைநீங்கள்போடு	வதேனடி
பவ.	கேலிமொழிபேசி	இந்த வேளையினில்
	கிட்டியிங்குவந்த	துமேனடி
அல்.	வந்ததுமல்லாமல்	தாலிகட்டிக்கொண்ட
	மாதுநானென்றுசொல்	வதேனடி
சுப.	என்-மாமிமகன்சொந்த	மான மணவாளன்
	மற்றாருக்குண்டோ	சொந்தந்தானடி
அல்.	நல்லது நல்லது	உன்பெயரென்ன இந்
	நாளிலெனக்கு நீ	சொல்வாயடி

சுப. அடி! நங்கையே என்பேர் சுபத்தி ரையுன்பெயர்
நானறிய இங்கு சொல்வாயடி

அல். அம்மா சுபத்திரை மாதே அல்லி யென்பேர்
ஆளனெனக்கிவ ராகாரோ

சுப. அக்காள் தங்கை நாமே தன்கணவனென்
றதட்டிநிற்கின்றா ளிவளாரோ

அல். எப்படியுனக்குப் பாத்தியமுண்டிவர்
எங்களுக்குண்மையாய் நீ ஓது

பவ. எட்டுநாளாச்சுது என்னைத் தாலிகட்டி
என்கணவர் தானயமேது.

(மூவரும் விலகி நிற்கிறார்கள்)

கிருஷ்ணன் வைத்தியர் வேடம்பூண்டு வருகிறார்

வைத். நீங்கள் ஏனையா இங்கு அழுது கொண்டிருக்கிறீர்கள்?

தர். ஐயா! நானிருப்பது இந்திரப் பிரஸ்தம். என் பேர் தர்மனந்தன். இவர்கள் எல்லோரும் தம்பிமார்கள். இறந்து கிடப்பவனும் என் தம்பிதான்! இந்த மூன்று பேர்களும் இவனுடைய பத்தினிமார்! நாங்கள் எல்லோரும் இவனுடைய இறப்பைக் குறித்து வருந்துகிறோம்! தங்களைப் பார்த்தால் வைத்தியர்போல் காணப்படுகிறது. ஏதாவது விஷமயக்கந் தீர்க்கக் கூடுமானால் சிகிச்சை செய்து பார்த்தால் பெரும் புண்ணியம் கிடைக்கும்.

வைத். விஷமயக்கமென்ன! இறந்தவன் உயிர் எமனிடம் போனாலும் மீட்டிக் கொண்டுவரும் மருந்து என் கைவசமிருக்கிறது. அதன்பேர். எமகண்ட சண்டமாருத ப்ராணசண்ட வஜ்ஜிர தண்ட குடிகோடீர பகீரண்டவங்க பஸ்பரஸகந்தக காளகூட அமிர்தசஞ்சீவி மாத்திரை! இந்த மாத்திரையை எடுத்து மூன்று தடவை மூக்கிலே காட்டினால் போதுமானது. இறந்தவன் தூங்கி எழுவதுபோல் எழுவான்! ஆனால், அதற்கொரு நிர்ப்பந்தம் உண்டு. அது என்னவென்றால், ஒரு மனிதன் தன் ஜீவ காலத்தில் தெரிந்துந் தெரியாமலும் அநேகம் பிழை செய்திருக்கக்கூடும். அதுகொண்டு மாச்சரியங்கருதினால், என் மருந்து பலனைக் கொடுக்காதுபோகும். ஆகையால், இறந்தவன் மேல் யார் யாருக்கு மனவருத்தமிருக்கிறதோ அவர்களெல்லாம் இப்பொழுது அந்த மனவருத்தத்தை நீக்கிவிட்ட தாகசத்தியஞ் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் என் மருந்து நல்ல பலனைக் கொடுக்கும்! என்ன சொல்லுகிறீர்கள்.

வசனம்

தர். சுவாமி! எல்லோரும் அப்படியே பிரமாணஞ் செய்து கொடுக்கிறோம். அநுக்கிரகியுங்கள்!

வைத். ஆடவர்களாக நிற்கும் ஒருவருக்கும் மனவருத்த மில்லையென்றும், இந்தப் பெண்களில் சிலருக்கு மனவருத்த மிருக்குமென்றும், அதிலும் (அல்லியைச் சுட்டிக்காட்டி) இந்தப் பெண்ணுக்கு இறந்தவன்மேல் அடங்காக் கோபமிருக்கும் என்றும் என்புத்திக்குத் தென்படுகிறது. ஆதலால் அம்மணி! நீதான் சத்தியஞ் செய்து கொடுக்க வேண்டும்!

அல். எவ்விதமாக!

வைத். இறந்தவன் மீதிலுள்ள மனவருத்தத்தை இப்பொழுதே நீக்கிவிட்டேன் என்று சத்தியம் செய்ய வேண்டும்.

அல். இப்பொழுது வருத்தமில்லை என்றதுதானே!

வைத். இப்பொழுது மாத்திரமா? இல்லை! இல்லை!! இதுமுதல் எப்பொழுதும் வருத்தங்கொள்வதில்லை என்று பிரமாணஞ் செய்து கொடுக்க வேண்டும்.

அல். (தனிமொழி) இதென்ன விபரீதமாக முடிந்தது! இந்தவைத்தியர் உயிர் எழுப்பி விட்டவுடனே என் சொல்லுக்கு மாறு செய்ததற்காக இந்தக் கட்கத்தால் இரு துண்டாக்கி என் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென நினைத்தேன்!

அதற்கிடமில்லாமல் போயிற்றே! ஐயா வைத்தியரே! இவர் என்ன குற்றம் செய்திருந்தாலும் இனிமேல் செய்தாலும் மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் சாக்ஷியாக இவர்மீது நான் கோபங் கொள்ள மாட்டேன்!

வைத். சரி. நீங்களெல்லோரும் மறைவாக இருங்கள்! நான் ஔஷதப் பிரயோகஞ் செய்யவேண்டும். (மூக்கில் சிமிழைத் திறந்து காண்பிக்கிறார்)

(அர்ச்சுனன் எழுந்திருக்கிறான்)

புல. அப்பா! அப்பா!! பவளரதம் எங்கே?

பவ. குழந்தாய் உனக்கென்ன வேண்டும்?

அர். பவளரதம் வேண்டுமாம்.

புலந்திரன் பவளத்தேர் இழுத்து விளையாடுகிறான்

மங்களம்

பாட்டு

வாடி நீ வாடி நீ என்ற மெட்டு

மங்களம் மங்களம்

மதுரையரசியொடு அவளருமை மகனும் (மங்)

மன்னாதிமன்னர் தர்மர் பீமர் அர்ச்சுனர்

மானகுல சகாதேவராம் சர்ச்சனர்

மகிழ்செய்-மாதவன் சுபத்திரையாள்

மாது பவளக்கொடி

மாமதுரையில் வாழுவோர் மீனாம்பாளருள்படி

வாழ்வுண்டாகும் எந்த நாளும் (மங்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று

7. இரணியன் நாடகம் (அல்லது) பிரகலாதன் சரித்திரம்

இரணியன் நாடகம்
(அல்லது)
பிரகலாதன் சரித்திரம்

வெண்பா

பெட்புகுங் கீர்த்திப் பிரகலா தன்மாவின்
நட்புமிகக் கொண்டோங்கிந் நாடகத்திற்-கெட்பொறியு
ருண்டையவல் தோசையொடு ளுந்துவடை முப்பழங்கற்
கண்டையுண்ணு முன்னோன்கால் காப்பு.

காட்சி - 1

காலம்- பிற்பகல்

இடம் - தர்பார் மண்டபம்

பாத்திரங்கள் - இரணியன், தூதர்கள்

இரணியன் தர்பார்

இரணியன் சிம்மாசனத்திலிருக்கிறான். மந்திரிமார்கள் பக்கத்தில் நிற்கிறார்கள்.

இரணி. மந்திரிமார்களே! எனது பாந்தவனான இரணியாட்சன் பூமியைப் பாயாகச் சுருட்டிப் பாதாளம் புகுந்ததைக் கேள்விப்பட்ட துஷ்டச் சண்டாள மாயாவியான நாரணன் மலமுண்ணும் சுவேதவராக ரூபமெடுத்து, அவனோடு, அமர் புரிந்து கொண்டிருக்கிறானென்று சாரணர் வந்து தெரிவித்தார்கள். அது கேட்ட நாம் தூதர்களையனுப்பி வெற்றி தோல்வியைக் கண்டு வாருங்களென்று கட்டளையிட்டோம். சென்ற தூதர்கள் இன்னும் வராத காரணமென்ன?

சேவ. பிரபு! இதோ தூதர்கள் வருகிறார்கள்.

இரணி. அடே சேவகா! சடுதியில் இங்கே வரவிடு.

பெ.தூ. மகாராஜ்! நமஸ்கரிக்கின்றோம் (ஒதுங்கி நிற்றல்)

இரணி. தூதர்களே! என்ன வாய்மூடி மௌனமாக நிற்கிறீர்கள்? எனது பாந்தவனாகிய இரணியாட்சனும், மட்டிப் பிரஷ்ட விஷ்ணுவும் யுத்தம் செய்தார்களே. அங்கு நடந்த விபரமென்ன?

சி.தூ. அண்ணா! நீயே சொல்லு.

பெ.தூ. தம்பி! நீயே சொல்லு.

இரணி. என்னடா ஒன்றுஞ் சொல்லாது நிற்கிறீர்கள்?

பெ.தூ. பிரபு! எங்களுடைய எஜமானாகிய தங்களுடைய தம்பியும், அந்தத் திருட்டுப் பயலாகிய மாயனும் சண்டை போட்டார்கள்.

இரணி. அடே! சண்டை போட்டதைத்தான் முன்னமே கேள்விப் பட்டேனே விபரமென்ன?

சி.தூ. அவர்களிருவரும் சண்டை போட்டபோது,

இரணி. சண்டை போட்டபோது என்ன நடந்தது?

பெ.தூ. யுத்தம் நடந்தது.

இரணி. தூதர்காள்! யுத்தம் நடந்ததில் வெற்றி தோல்வி விபரமென்ன? சீக்கிரம் சொல்லுங்கள்.

சி.தூ. யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது தங்கள் தம்பி தடாரென்று ஒரு அறை அறைந்தார்.

இரணி. ஆ! ஆ. சந்தோஷம் என் தம்பி அற்பப் பயலாகிய மாயனைத் தடாரென்று ஒரு அறை அறைந்தார்.

பெ.தூ. ஆம் மகாராஜா! அந்த அறையிலே அந்த மாயன் மயக்கமாகிக் கீழே விழுந்துவிட்டான்.

இரணி. பேஷ்! பேஷ்! (பெருஞ்சிரிப்புடன்) அப்பால்?

சி.தூ. அப்பால் அவன் களை தெளிந்தெழுந்து தங்கள் தம்பியை ஒரு குத்துக் குபீலென்று குத்தினான்.

இரணி. அடே துஷ்டர்களே! எனது தம்பியை அந்தச் சோனிப் பயல் குபீலென்று குத்தினானா?

பெ.தூ. குத்தினதில் ஒன்றுமில்லை.

இரணி. அப்பால் என்ன நடந்தது?

சி.தூ. அப்பால் தங்கள் தம்பி, அந்த மடப் பயலைக் காலாலே ஒரு எற்று எற்றினார்.

இரணி. என் தம்பி அவனைக் காலால் எற்றினானா? (சிரிப்பு)

பெ.தூ. ஆமாம். மகாராஜா!

இரணி. அச்சா! அச்சா! (பெருஞ்சிரிப்புடன்) அப்பால்?

சி.தூ. காலால் எற்றினவுடனே வருத்தம் சகிக்கமாட்டாமல் அந்தப் பயல் கீழே விழுந்துவிட்டான்.

இரணி. மாயன் கீழே விழுந்துவிட்டானா?

பெ.தூ. விழுந்துவிட்டான் பிரபு!

இரணி. பேஷ்! பேஷ்! பேஷ்! கேவலம் அந்த விஷ்ணுவென்னும் பயல்

என் கனிஷ்டனுக்கு எம்மாத்திரம்? மந்திரி பிரதானிகளே! யானை, தேர், பரி முதலான வாகனங்களை அலங்கரித்துச் சகலமான விருதுகளோடு சென்று என் தம்பியை உபசரித்துப் பல்லக்கிலேற்றி ஊர்வலஞ்செய்து கௌரவப்படுத்திக் கூட்டி வாருங்கள்.

சி.தூ. பிரபு! அப்பாலே கீழே விழுந்த மாயன் எழுந்தான்.

இரணி. அடே! என்ன சொன்னாய்? (உருத்து நோக்கல்)

சி.தூ. ஒன்றும் சொல்லவில்லை. ஒன்றும் சொல்லவில்லை. (நடுங்குகிறான்)

இரணி. பயப்படாதே! பயப்படாதே!

சி.தூ. இல்ல இல்லை.

இரணி. சும்மா சொல்லு?

சி.தூ. வாயை மெல்லுகிறான்.

இரணி. (பெரிய தூதனைப் பார்த்து) அடே! நீதான் சொல்லு மாயனெழுந்து என்ன செய்தான்?

பெ.தூ. மாயனெழுந்து ஓடுவதற்கு வழிபார்த்தழுது மிரள மிரள எமனென விழித்தான்.

இரணி. ஓடுவதற்கு வழி தேடினான்.

சி.தூ. ஆம். ஓடுவதற்கு வழி தேடினான்.

இரணி. (பெருஞ்சிரிப்பு)

பெ.தூ. அப்படி ஓடுவதற்கு வழி தேடியவுடனே, தங்கள் தம்பி இரண்டு புயங்களையும் கொட்டி, மீசையையும் முறுக்கி, தலையை அசைத்துச் செருமி, கனைத்து, பெரிய கூச்சலிட்டு, அவனைக் கிட்டிப் பிடரியைப் பிடித்துக் கீழே தள்ளி அவனைப் புரட்டினார்.

இரணி. சபாஷ்! சபாஷ்! (சிரித்து) அப்பால்?

சி.தூ. அப்பால் அந்த துஷ்டமாயன் தங்கள் தம்பியைப் புரட்டினான்.

இரணி. என் தம்பியை அவன் புரட்டினானா?

பெ.தூ. இல்லை இல்லை உடனே தங்கள் தம்பி, அவனைப் புரட்டினார். அவன் கீழாகவும், தங்கள் தம்பி மேலாகவும் இருக்க நாங்கள் பார்த்தோம்.

இரணி. சந்தோஷம். அவன் கீழாகவும், என் தம்பி மேலாகவும் இருக்கப் பார்த்தீர்கள்?

இருவ. ஆம். எங்கள் கண்களாலேயே பார்த்தோம். அப்பால்.

இரணி. அப்பாலென்ன?

பெ.தூ. அப்பால் அந்தத் திருட்டுமாயன் மேலாகவும் தங்கள் தம்பி கீழாகவும் இருக்கக் கண்டோம்.

இரணி. என் தம்பி ஒருக்காலும் கீழாகவே மாட்டான். நீ கனவு கண்டாயா என்ன?

சி.தூ. இவன் பட்டப்பகலிலே விழித்துக் கொண்டிருந்துதான் கனவு கண்டிருக்கிறான். அப்படி ஒருக்காலுமில்லை. தங்கள் தம்பியும், அந்த மாயனும், கீழ்மேலாக உருண்டு கொண்டே பத்து யோசனைத் தூரம் புரண்டார்கள்.

இரணி. பின்பு?

பெ.தூ. பின்பு இரத்தம் பெருகியோடும்படி மார்பைப் பிளந்து விடும்படி நேர்ந்தது.

இரணி. யார் மார்பை யார் பிளந்துவிடும்படி நேர்ந்தது?

சி.தூ. தங்கள் தம்பிதான் இந்த வேலைக்குட்பட்டவர்.

இரணி. அடே நீ சொல்லுவதொன்றும் விளங்கவில்லையே! என் தம்பி எந்த வேலைக்கு உட்பட்டார்.

பெ.தூ. மார்பு பிளக்கும் வேலைக்கு உட்பட்டார்.

இரணி. அந்த மலமுண்ணும் பன்னியுருக் கொண்டவன் மார்பைப் பிளக்க உடன்பட்டானா?

சி.தூ. தாங்கள் சொல்லியது உண்மையான வாசகந்தான்.

இரணி. பேஷ்! பேஷ்!! மிகுந்த சந்தோஷம். மந்திரி! சந்தோஷ சமாசாரம் சொல்லிய இவர்களுக்கு வெகுமதியாக ஒரு முத்தாரங் கொண்டு வந்து கொடு.

மந். மகாராஜ்! இவர்கள் சொல்லும் வார்த்தை கவர்படு பொருளாகத் தோன்றுகிறதே தவிர உண்மை விளக்கமில்லை. இன்னும் தெளிவாக விசாரிக்க வேண்டும்.

இரணி. அடே தூதர்களே! காலதாமதமாக்கி நேரத்தைப் போக்காமல் வெற்றி தோல்விகளின் விபரத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாக சொல்லுகிறீர்களா? அல்லது இந்தக் கட்கத் தினாலே உங்கள் சிரசைப் போக்கிக் கொள்ள நிற்கிறீர்களா?

பெ.தூ. பிரபு! அந்தச் சுவேதவராக ரூபங்கொண்ட மாயன், கொம்பாலே குத்தி மார்பைப் பிளக்கத் தங்கள் தம்பி உதிரம் வழிந்தோடப் பாதாள லோகத்தில் விழுந்திறந்தார்.

இரணி. ஆ தம்பி! இரணியாட்சா! இ-இ (மூர்ச்சை)

பாட்டு
பூவருந் திருவே என்ற மெட்டு
இராகம் - தேசிகதோடி
தாளம்- ஏகம்
கண்ணி

தம்பிபெருந் துணையான் உனை
நம்பியிருந்தனனே தனி
இந்தமாதிரி வஞ்சமாயெனை ஒன்றியாய்விட நின்றபாதக
மேனெனக்கதை நீயுரைத்திட வேணுமித்தினம் நிச்சயமிங்கு (த)

பன்னிக் கொம்புபிளந்த தனால் உடல்
வெம்பி விழுந்தனையோ உயி
ரங்குநீவிட நின்றபோதுநி னைந்ததேது தெரிந்திலேனினி
யாருயிர்த்துணை யாயிருப்பவர் வாழ்வொழித்திட வுற்றதுதீங்கு (த)
உம்பர்பயந் தெளிவார் இங்கு
வந்தவருந் திரிவார் துயர்
கொண்டுவாடுமெ னெஞ்சமோர்நிலை யின்றுசோகமு மிஞ்சலானது
அதிவிரைவி லிதுபொழுது வருகுவேன் (த)

வசனம். ஆ! பாந்தவா! என்னைவிட்டு நீ எப்படிப் பிரிந்தாய்? அண்ணா! அரைகண நேரத்தில், ஹரியைக் கண்டுபிடித்துக் கொன்று வருகிறேனென்று சொன்ன சொல்லை மறந்தாயோ? கேவலம் மல மூத்திராதிகளை ஆகாரமாகவுடைய பன்றியோ உனது மார்பைப் பிளந்து கொன்றது? உன்னை நீங்கி இனிநான் உயிர் வாழ்வதெப்படி? நமது தாயாதியராகிய தேவர்களும் இனிப் பயமில்லாமல் என்னெதிரே உலவுவார்களன்றோ?

விருத்தம்

பலமிகு மெனதுதம்பி பராக்ரம னானதம்பி
கலைபல பயின்ற தம்பி(என்) கண்மணி யான தம்பி
நிலைபெய ராமனாளும் நின்றிருந்த தம்பியுன்னை
மலமுண்ணும் பன்றியாகி மாயனோ கொன்றானந்தோ

வசனம். ஆ! கனிஷ்ட பாந்தவா! உனது பிரிவாகிய சோகத்தை என்னால் எவ்விதஞ் சகிக்க முடியும்? நீ இறந்தாயென்று கேள்விப்பட்டு இன்னும் உயிரோடிருக்கிறேன்? என்றபோது சகோதரத்துரோகி யாரிருக்கிறார்கள்? ஐயோ! நீ ஆவி விடும்போது என்ன

நினைத்தாயோ? பொறு பொறு நீ இருக்குமிடத்தைத் தேடி நானும் நொடிக்குள்ளே வந்து சேருகிறேன். இல்லையேல்.

பாட்டு

திருக்கடையூர்தனிலே என்ற மெட்டு*

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

இனி எங்குன்னை நான் பார்ப்பேன் பார்த்து
என்துயரைத் தீர்ப்பேன்
அங்கம் பதறுதே யந்தமு குந்தனை
ஆகா கொல்லாம லடங்குமா சிந்தனை (எ)

இங்கு தனி யானேனே தோளி
ரண்டி லொன்று போனேனே
பங்கம் பிறர்சொலப் பழிக்குமுடன் பட்டுப்
பாரிலுயிர் வாழு வேனோ மானங்கெட்டு (இ)

நம்பினே னெனைக் கெடுத்தாய் என்னை
நட்டாற்றில்கை விடுத்தாய்
வம்பனான மாய னோடமர் செய்போது
வாடியிளைத்து மடிந்தாயோ மண்மீது (ந)

பன்றிக் கொம்பு மார்பில் பாய்ந்ததோ உடல்
கூறுபட வாய்ந்ததோ
செம்புருக்கி விட்டாற் போலெங்குங் சிவந்து
சேர்ந்ததோ ரத்தந் தசைமுற்றும் நிறைந்து (கொ)

வசனம். நீ! இறந்தபோதே என்னிரண்டு தோளில் ஒரு தோள் இழந்தவானேன். உடன் பிறப்பால் தோள்வலிபோம் என்ற நீதிமொழி இன்றுதான் அனுபவத்துக்கு வந்தது. இனிப் பூமியில் உயிர்வாழ்வதற்கு எனக்கிஷ்டமில்லை சேனாதிபதி! ஒரு அக்கினிக் குண்டம் நிருமித்து, நெருப்பை வளர்த்துவிடு. அதில் விழுந்து என் பிராணனைப் போக்கிக் கொள்கிறேன்.

சேனா. மகாராஜ்! தங்கள் தம்பியைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்காமல், தங்கள் பிராணனைஇழப்பீராகில், நமது குலத்துக்கு இழிவு வருவதோடு. நமது பகைவராகிய தேவரும் கெக்கேலி கொட்டிச் சிரிப்பாரன்றோ? இதனை ஆலோசனை செய்யுங்கள் பிரபு!

---

* நாடகம்: கோவலன் சரித்திரம்

இரணி. ஆம். ஆம்! அதுவும் தக்க யோசனைதான். தம்பியைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டியது அவசியம். ஆகையினாலே, நீங்கள் அவனைத் தேடிப்பிடித்து என் முன்னே கொண்டு வாருங்கள். அவன் மாயாவியான படியினாலே உங்கள் நேத்திரங்களுக்குப் புலப்படமாட்டான். அதற்கு உபாயஞ் சொல்லுகிறேன். நான் சொல்லுகிற உபாய வழியில் நீங்கள் பிரவேசித்து நிற்பீர்களாகில், அந்தத் திருட்டு மாயன் அகப்படுவான் அதாவது.

சந்தப்பாட்டு

இராகம்-கல்யாணி தாளம்-ஆதி

ஈட்டுதானதவம் நாட்டுவாருடலை யீட்டிமீதிலுற வாட்டுவீர்
காட்டிலேயெரியை மூட்டியோமநிலை காட்டுவாருயிரை யோட்டுவீர்
மீட்டுமாமுனிவர் கோஷ்டியேபெரிய வேட்டையாகு மெனமாட்டுவீர்
கூட்டமானபசு மாட்டை நேரிலிரு கோட்டைநூ றிவிழ வீட்டுவீர்

வசனம். ராட்சச வீரர்களே! தான தருமங்கள் செய்யும் நரர்களின் தலையைக் கட்கத்தால் வெட்டி எறியுங்கள், வேள்வி யாகாதியெக்ய கருமச் சடங்கு செய்வோர்களைக் கொல்லுங் கள். தவரிஷி முனி வர்க்கங்களை நாசமாக்குங்கள். பசுக் கூட்டங்களைக் கால்மாடு தலைமாடாக விழும்படி வதையுங் கள். இவ்வகைகளைச் சகிக்க மாட்டாதவனாகி, அந்தக் கெடுதல்களை நிவர்த்தி செய்ய, உங்கள் எதிரில் தோன்றினாலும் தோன்றுவான். அவ்வகைகளின் மார்க்கமாக அவனை நீங்கள் காணாது போவீர்களாகில், அவனிருக்கும் இடங்களை விபரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சந்தப்பாட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஏகம்

எத்தான வித்தைபல கற்றேயொ ளித்தவனி
ருப்பான தைப்பு கலுவேன்
எப்பாடு பட்டுமவ னைப்போயி ழுத்துவர
விப்போது சித்த மிசைவீர்
தொத்தாரு நற்றுளசி பொற்பார்ப சுத்திரள்தொ
குப்பாகு நிற்கு நிலையுள்
கட்டேது மற்றநிலை நிற்பார்மதிக்குள் மொழி
சொற்பாடு பத்தர் குழுவுள்
சித்தாதி பர்க்குளெரி யுற்றார்ம கத்துளுயர்

சிட்டாச ரப்பு நிதருள்
திக்கோடு திக்கொலிப டத்தாவி யெற்றுயர்தி
ருப்பால லைக்க டலினுள்
சத்தாமெ வற்றுளுமொ ளிப்பான்வி டிற்பொழுது
தப்பாது கட்டி விரைவே
சற்றேனு நிற்கமன மொப்பாது கிட்டிடுமின்
இப்போவீ ரட்டியிலையே

வசனம். எங்கே சடுதியில் போய் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்.

(போகிறார்கள்)

காட்சி முடிவு

காட்சி - 2

காலம்- மாலை

இடம் - அந்தப்புரம்

பாத்திரங்கள் - இரணியன், லீலாவதி

லீலா. நாதா! நமஸ்கரிக்கிறேன்

இரணி. கல்யாண் லீலாவதி!

லீலா. பிராணேசா! என்றும் என்னால் கண்டிராத ஒரு விசனக்குறி இன்று தங்கள் முகத்தில் காணப்படுகிறதே காரணமென்ன?

இரணி. சகி! வாஸ்தவந்தான். அதாவது, எனது கனிஷ்ட பாந்தவனுக்கும், துஷ்ட மட்டிப் பிரஷ்டன் விஷ்ணுவுக்கும், பாதாள லோகத்தில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? அந்த யுத்தத்தில் எனதருமைக் கண்மணி இரணியாட்சன் இறந்து போனான்.

லீலா. ஆ ஆ ஆ ஆ! (மூர்ச்சையாகித் தெளிந்து)

பாட்டு

அப்பா மகனே பாம்பு என்ற மெட்டு

இராகம்- செஞ்சுருட்டி தாளம்- - அட தாளம்

கண்ணிகள்

மைத்துனரே இந்த மா நிலத் தரசைவிட்டுச்
செத்துமடிந்து போனீரோ ஐயையோ
அண்ணருக் குதவியா யமரைச் செயித்திட
எண்ணிவிண்புவி சென்றீரோ ஐயையோ

மலத்தை யுண்ணும் பன்றியால் மாண்டுமடிந்தாலிந்தத்
தலத்திலுள்ளார் நகையாரோ ஐயையோ

விருத்தம்

சத்துரு வான மாயவ னெனது
தம்பியா மிரணியாட் சனையே
இத்தினம் வெள்ளைப் பன்றியா முருக்கொண்
டெதிர்துயிர் வதைத்தன னதனால்
நத்தினே னிந்தப் பகைமுடிப்பதற்கு
நான்முகத் தேவனைக் குறித்துப்
பதிசெய் தவத்தால் வரம்பெற நினைத்தேன்
பாவை நீ விடைகொடுப்பாயே

வசனம். சகி! மிஞ்சிப்போன காரியத்தைக் குறித்து வருந்துதலை யொழி. என் தம்பியைக் கொன்ற மாயாவி என்னையுந் தருணம் நோக்கிக் கொல்லுவான் என்பதற்கு ஆட்சேபனையில்லை. ஆதலால், அவன் என்னைக் குறித்து யுத்தத்திற்கு முயலா முன்னம், நான்முகத்தேவனைக் குறித்து, மகத்தாகிய தவத்தைச் செய்து, சாகாத வரம் பெற்றுவந்து, எனது குலத்துரோகியான அந்த மலமுண்ணும் பன்றியுருவெடுத்துக் கனிஷ்டனைக் கொன்ற சண்டாளனைப் பழிக்குப்பழி வாங்கிக் கொள்ளு வதற்கு விரும்பினேன். ஆகையால், நீ சற்றேனுந் தடைமொழி புகலாமல் சந்தோஷமாகத் தவஞ்செய்து வருவதற்கு விடை கொடுத்தனுப்பு.

லீலா. கலித்துறை

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மேத்தியடி
தொட்டுப் பணிபுரி யச்செய்து விட்டசிங் கத்துரையே
மட்டுக் கமலத்து நான்முக னைக்கண்டு வாரேனென்றீர்
விட்டுப் பிரிந்து புலம்புவனே யெந்த வேளையுமே

வசனம். பிரியதுரையே! என்ன வார்த்தை சொல்லுகிறீர்? தம்மைப் பிரிந்து அரைட்சணந் தனித்திருக்க என்னாலாகுமா? என்னைப் பரிசோதிக்கிறீர்களா என்ன?

இரணி. விருத்தம்

எண்ணறப் படித்து நன்றா யெழுத்தற வாசித்தாலும்
பெண்மணி பேதையென்றும் பேச்சையுன் னளவிற் கண்டேன்
மண்மிசை பகைமை நேர்ந்தால் மாற்றிடார் வாழ்வ துண்டோ
கண்மணி கவலை வேண்டாங் கருதிநீ விடையீ வாயே

வசனம். பிராணசகி! உண்மையாகவே சொல்லுகிறேன் இனித் தாமதித்தால், நமக்கு ஆபத்து விளையாமற் போகாது. ஆகையால் சீக்கிரம் மணமங்களமாக விடைகொடு.

லீலா. விருத்தம்

அரைக்கண மும்மை நீங்கி ஆவியைத் தாங்கி இந்தத்
தரைக்கணான் வாழு வேனோ தாமறி யீரோ துன்பம்
உரைக்கவோ மேலுங் கெற்ப முடையவ ளேழை யென்மேல்
இரக்கமு மில்லை யோவிட் டேகநா னிசைகி லேனே

பாட்டு

வருவேயே வடமாலி என்ற மெட்டு

இராகம்-பைரவி தாளம்-ரூபகம்

பல்லவி

சரியோ வாதுமிப் போதோ
தாளேன் நா னெனது நாதா (ச)

அநுபல்லவி

திரிலோகமும் நடுங்கும் போர்செய்
தீரரே ஜெய வீரரே யிது (ச)

சரணம்

பூரண கெற் பத்தைக் கண்டீர்
போவதற்கு மாசை கொண்டீர்
தாரணியிற் றனித்திருக்கச்
சார்வேனோ வுடல் சோர்வேனோ விது (ச)

மலரும் மணமும் போலே கூடி
வாழ்வதை விட்டுத் தவசை நாடி
அலரோனைக் கண் டுவரு மட்டு
மாறுமோ மனந் தேறுமோ விதி (ச)

வசனம். பிராணணேசா! தாங்களிப்போது என்னைத்தனியாக இங்கு விட்டுத் தவத்திற்குப் போய் வருகிறேன் என்கிறீர்? தம்மை என் நேத்திரங் காணாது போனால் நிலை நிற்கமாட்டேனென் பதையுந்தாம் தெளிவாயறிவீர். மேலும், நான் பூரண கருப்ப வதியாகவுமிருக்கிறேன். தாம் பிரிந்து போவது ஞாயமில்லை அடியாள் சொல்லை மாறுமொழி சொல்லி விலகிப் பிரிந்து போகாதிருக்க வேண்டிக் கொள்கிறேன் நாதா!

இரணி.

விருத்தம்

சென்றதைக் குறித்து வருந்துவ தாலே
சிறிதள வாயினும் பயனோ
மன்றலங் குழலாய் கவலை கொள் ளாதே
வனத்தினுக் கிதுபொழு தேகி
நின்றுநற் தவஞ்செய் தயன்வரம் பெற்று
நேர்ந்தவென் பகைவனா மரியைக்
கொன்றுநான் வருவேன் மனமகிழ் வாகக்
கொடுவிடை தடைபுரி யாதே

வசனம். பெண்ணே! நானிங்கில்லாத கவலை உனக்கு வேண்டுவதில்லை. உன் காவலுக்கும், ஏவலுக்கும் பல படை வீரர்களையும் சேடிகளையும் ஏற்படுத்தப் போகிறேன். ஆரடா சேவகர்களே! நான் தபசுக்குச் சென்று மீண்டு வருகிற பரியந்தம், எனது பத்தினியாகிய இவளுக்கு யாதொரு விக்கினமும் வராதபடி சமீபத்தில் காவலாக நின்று, ஏவிய வேலைகளையும் கேட்டு நடந்து வாருங்கள்

சேவ. அப்படியே!

இரணி. சகி! போய் வருகிறேன்.

லீலா. சந்தோஷமாகப் போய்வாருங்கள்.

(போகிறான்)

காட்சி முடிவு

காட்சி - 3

காலம்- பகல்

இடம் - தேவலோகம், இந்திரன் தர்பார் மாளிகை

பாத்திரங்கள் - இந்திரன் முதலிய திக்கு பாலர்கள்

தேவேந்திரன் சபை

இந்திரன் சுதர்மியெனும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான் தேவர்களும், அஷ்டத்திக்கு பாலர்களும், முனிவர்களும் அரம்பாஸ்திரீகளும் புடைசூழவிருக்கிறார்கள்.

வருணன், வாயு, குபேரன், எமன் நால்வரும் சேர்ந்து பாடும்

பாட்டு

இராகம்-பியாக்

தாளம்-ஆதி

பல்லவி

தேவேந்திரா போ கேந்திரா
சேசர யாகமம் நூறும்புரி (தே)

அநுபல்லவி

பூவார்ந்துள கற்பக விருட்சமும்
காமதேனுவும் ஏறுவெள் ளானையும்
சேனையும் புண்ணியவசத்தில் கண்ணுற்ற (தே)

சரணம்

இவணாடிய முப்பது முக்கோடி
வரிசையாளர்கள் சூழ்ந்தருபீரிட
மேலாடர்காண் இன்பமிகுந்திர சம்ப்ரமனே (தே)
புலோமிசை ஊர்வசி
மேனகை சேர் (தே)
ஆசீர்வதிக்குந் தவயோகிகள்
சிவிகை தாங்கிட மேல்வரு மேகநல்வாகனா
அஷ்டதிசைக்கும் பட்டஞ்சேர் (தே)

வேறு பாட்டு

கஜமுக தேவா என்ற மெட்டு

இராகம்-பியாக் தாளம்-ஏகம்

கண்ணி

போக வாசவா புண்ண ஜென்மிதா
பொருப்பை யெதிர்த்துமுடுக்கி யடித்த
இறக்கை யறுத்தவா
மேகவாகனா சபா விண்டலாதிபா
விபத்தை யடுத்து இயற்று மரக்கர்
குலத்தை யொழித்தவா
காவின் மாதவா கண்ணிறைந்தவா
கரும்பு வெறுக்க மொழிந் தசிக்கு
விரும்பு மனத்தவா

வசனம். தேவராஜா! நமஸ்கரிக்கிறோம்.

இற். கல்யாண்! உங்கள் யாவர்க்கும் மங்களமுண்டாகுக.

பாட்டு

கொத்தவால் கோமளாங்கி கூறடியின்று*

என்ற மெட்டு

இராகம் - பியாக்

தாளம் - ஆதி

கண்ணி

அன்புடைய வருணனே நின்செய லென்ன
ஆசைகொண்டேன் கேட்டிடவு மட்குயேன் பன்ன

வசனம். வருணா! நீ எவ்விதம் நடந்து வருகின்றாய்?

பாட்டு தொடர்ச்சி

வருண. மாமறையோர் மன்னர்நீதி மாதர்கள் புக்கும்
மாதமூன்று மழைபெய்வே னானென்றைக்கும்
வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினர்க் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை

என்றபடி மாத மூன்று மழையெனப் பெய்து உலகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுத்து வருகிறேன் மகராஜ்!

இந்.

பாட்டு தொடர்ச்சி

கலையிலேறும் வாயுவேயுன் னிலைமையும் யாது
காதுகேட்டு நான்மகிழ நீசொல்லிப் போது

வசனம். வாயுவே! உன் நிலைமை என்ன?

பாட்டு தொடர்ச்சி

வாயு. உத்தம நாட்டிலே தென்ற லாயடிக்குறேன்
உண்மையற்றி நாட்டிலே மடமிடிக்குறேன்

வசனம். உத்தமர்கள் வசிக்கும் நகரங்களில் தென்றல் காற்று வீசியும், அதர்மர்கள் வசிக்கும் இடங்களில் மடங்களைஇடித்தும் குளங்களைத் தூர்த்தும் வருகிறேன் பிரபு!

பாட்டு தொடர்ச்சி

இந்தி. ஈசனுக்கு நற்றோழமை யானகுபேரா
இன்றுநின் செயலெனக் கியம்புவாய் சீரா

---

* நாடகம்: பவளக்கொடி

வசனம். குபேரா! உன் காரியாதிகளில் எப்படி நடந்து வருகிறாய்?

பாட்டு தொடர்ச்சி

குபேரன். புண்ணிய வான்களுக்குப் பொன்னைக் கொடுக்கிறேன்
போக்கிரிகளை வறுமையில் விடுக்கிறேன்."

வசனம். புண்ணியவான்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களைக் கொடுத்தும், அதர்மர்களுக்குத் தரித்திர தசையை அனுபவிக்கும் படி விடுத்தும் வருகிறேன்.

பாட்டு தொடர்ச்சி

இந்தி. வைவசுதனே யுனது வண்மையும் யாது
வார்த்தையாலே நான் மகிழ நீ சொல்லிப் போது

வசனம். எமதர்ம! நீ எவ்விதம் நடந்து வருகிறாய்?

பாட்டு தொடர்ச்சி

எமன். சுத்த பத்தியோரைச் சுவர்க்கம் விடுக்கிறேன்
துஷ்டர்களுக்கு நரகத்தைக் கொடுக்கிறேன்

வசனம். பக்திமான்களுக்குச் சுவர்க்க முதலிய பதவிகளைக் கொடுத்தும், துஷ்டச் சண்டாளர்களைக் கும்பியாக முதலிய நரகங்களில் தள்ளியும் இம்சித்து வருகிறேன்.

இந்திரன் மற்றோருடன் ஆலோசனை செய்தல்

நமது குலவைரியாகிய இரணியன் இதுவேளை தவஞ்செய்யச் சென்றிருக்கிறான் என்பதையுணர்ந்தேன். அவனோ கொடிய சண்டாளன். மகா பலாஷ்டியன், இப்பொழுதே அவன் செய்துவரும் உபாதை தேவர்களாகிய நமக்குப் பொறுக்க முடியவில்லை. இன்னும் தவப்பலனையும் அடைந்துவிட்டால், மேலும் என்ன அக்கிரமங்களைச் செய்வானோ? இருக்கட்டும் இவைகளைப் பார்க்கிலும், இரணியன் மனைவி லீலாவதி கருவுற்றிருக்கிறாள். துஷ்டனின் வீரியம் நற்குண சாந்தத்தையடைந்து நமக்கு இதத்தைச் செய்யமாட்டாது. விரையொன்று போட சுரையொன்று முளைக்குமா? இந்தக் கருவில் உற்பவிக்கும் சிசுவாலே, நமக்குப் பலநாளும் துன்பமாகிய அனர்த்தத்தையே விளைவிக்கும். ஆதலால் தருண உசிதத்தை நாடி லீலாவதி கருப்பத்தை அழித்தல் வேண்டும். உங்களின் கருத்தென்ன?

மற்றோர்

ஆம் கொடிய முள்ளினுடைய மரவிதையை விதைத்தால் முள்ளுள்ள மரமே முளைத்துப் பிறருக்குத் துன்பத்தை விளைவிக்கு

மாதலால், அதனை முளைக்கும்போதே நகத்தால் கிள்ளித் தூர எறிந்து விட்டால் பின்னால், அவஸ்தையில்லை. இதற்குத் தக்க உபாயம் தேட வேண்டியதுதான்.

இந்தி. நல்லது. நானே சென்று லீலாவதியின் கருப்பத்தைச் சிதைத்து வருகிறேன். நீங்கள் இங்குதானேயிருங்கள்.

(இந்திரன் புறப்படுகிறான்)

காட்சி முடிவு

காட்சி - 4

காலம்- முற்பகல்

இடம் - இரணியன் அரண்மனை

பாத்திரங்கள் - லீலாவதி, இந்திரன், நாரதர்

இந்தி. அண்ணி! இந்திரன் வந்திருக்கிறேன்.

லீலா.

பாட்டு

என்ன கேள்வி முறை என்ற மெட்டு

இராகம் - பிலஹரி தாளம் - ரூபகம்

பல்லவி

வந்ததென்ன இந்திரா உன்றன்
வளமாகிய அமராவதி
நகர் நீங்கியே விரைவாகவே

அநுபல்லவி

எந்த னாதனா ரிங்கு மில்லை
எப்படி வர லாமிவ் வெல்லை
மந்தி மதி தானோ முல்லை
மலரானிறை குழலாரிடம்
மறு ஆடவர் வரலாகுமோ (வ)

வசனம். இந்திரா! நீ தேவராஜனாக இருந்தும் ஆலோசித்து உணர்ந்து பாராமல், எனது நாயகரில்லாமல் தனியாகஇருக்குமிடத்து நீ வந்தாயே இது நியாயமாகுமா? தனித்திருக்கும் பெண்களிடத்தில் வேற்றுப் புருஷர் வரலாகுமா? இருக்கட்டும். நீ வந்த காரியந்தானென்ன? இதனை முன்பு சொல்.

இந்தி. பாட்டு

இராகம் - ஸ்ரீராகம்

தாளம் - ஆதி

பல்லவி

வந்த காரிய மிதுதான் அடி
மட நடை கொடி யிடை
யுடைய பெடை மயிலே (வ)

அநுபல்லவி

சந்தத முங்கள் குலந் தன்னாலாச்சே சஞ்சலம்
நொந்தினிச் சகிக்கிலம்
நொடிதனி லுதுவக லவுமிது சமயமே (வ)

சரணம்

சண்டாள னுன்கணவன் கொண்ட மதத்தினாலே
அண்டரோ டனுதினந் திண்டாடினேனதாலே
ஒண்டொடி நீயவனின் பெண்டுன் வயிற்றின் சூலே
உண்டானாய்ப் புவிமேலே
உரிய சிசுபெறாமல் விடுவேனே யினிமேலே (வ)

வசனம். லீலாவதி! நீ இப்பொழுது உண்டாயிருக்கும் கருப்பத்தில் உற்பவிக்கும் சிசுவினாலே, பிற்காலம் எங்களுக்கு அவஸ்தை நேரிட்டாலும் நேரிடும். முன் நகத்தாலே கிள்ளி எறிவதற்கு எளிதான முட்செடி பின் கண்ட கோடரி முதலான ஆயுதங் களைக் கொண்டு சிரமப்படும்படியான செயலைக் கொடுக்கு மாகையாலே, முளையிலே கிள்ளும் நிலையை நான் எண்ணி வந்திருக்கிறேன். இதனாலே உனக்கு யாதொரு அவஸ்தையும் உண்டாக்க மாட்டேன். நீ இந்தச் சிசுவைப் பெறுகிறவரை எனது காவலுக்குள்ளிருந்து குழந்தை பிறந்தவுடனே அதையென்னிடங் கொடுத்துவிட்டுச் சுகமாக வந்துவிடலாம். ஆகையாலிப்பொழுது என்னைப் பின்பற்றி வருவாயாக.

லீலா. வெண்பா

பொல்லாப் படுபாவி போக்கிரிநீ வந்துநின்ற
தல்லாமலென்னை அதட்டுகிறாய் - கல்லாத

மூடனோ அல்லால் முடிவுகா லம்வந்து
கூடநீ கொண்டதுவோ கூறு.

வசனம். அடே பொல்லாத படுபாவியான சண்டாளா! உனக்குக் கேடுகாலம் வந்து கிட்டிக் கொண்டதா என்ன? எனது கருப்பச் சிசுவைச் சின்னா பின்னப் படுத்தவா நினைத்தாய்? அடே சிசுகாதகா! இங்கு நிற்காதே அப்பாலே விலகிப்போய் விடடா அசட்டு மடப்பயலே!

இந்திரனுக்கும் லீலாவதிக்கும் தர்க்கப்பாட்டு

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - அடை தாளம்

கண்ணி

இந்தி. அடடி நானுன்னை விடுவேனோடி போடி
அநியாய மென்று
அவனியில் பயப்படு வேனோடி வாடி
தடைய னாகுமுன் கணவன் வருமுன்
கதறிநீ அழுகினும் வருந்தி
இதமுடன் மனமது பொருந்தி (அ)

லீலா. கெடுமதி கொண்டு பட வெண்ணினா யோடா
அடடா முழு மூடா
கெருவமாக யோசனை பண்ணினா யோடா
சடுதியிலோடிச் சாரில்லா விடில்
தலைதனை யசுரர்க ளுடைத்துக்
கொலைபுரி குவரரு கடுத்து (கெ)

இந்தி. அசுரர்கள் வலி யறிவேனடி நானே
வர அட்டி செய்திடில்
அடடி யவஸ்தைப் படுவாய் நீ தானே
சிசுவை வதைத்து என் சினத்தைத் தணித்துத்
திருவமராபதி சென்று
நிலை பெறு வேனடி இன்று (அ)

லீலா. கொடிய சண்டாளா நிலைவேண்டா கொண்டாய்
குழந்தையை வதைக்கக்
கூடுமோ உன்னால் பேடியே வண்டா
தடிமரம் போல் வளர்ந்த முரட்டுத்
தறுதலை மடையனே மூடா

அறிவிலி வெறியனே போடா (கொ)

வசனம். அடே மடையா! வாயில் வந்தவாறு பேசி வாதாடுகிறாய். இது நியாயமல்லாத காரியம் என்நாயகனில்லாத சமயம் நோக்கி இங்கு வந்து, என் கருப்பச் சிசுவை நாசம் செய்வதற்குடன் அழைக்கிறாய். நீ சரியான மீசை முளைத்த ஆண்பிள்ளையாக விருந்தால், ஒரு பெண்ணிடத்தில் வந்து வீரப்பிரதாப வார்த்தைகள் பேசமாட்டாய். நீ ஆணுமில்லாத பெண்ணு மில்லாத பேடியென்றே நினைக்கிறேன். உனக்கு ஸ்திரீஹத்தி தோஷமும், சிசுஹத்தி தோஷமும் நேரிட வேணுமா? அல்லது அகன்று போகின்றாயா? எது இஷ்டம்?

இந்தி. சந்த விருத்தம்

விரைத்தமலர் தொடுத்தமுடி தரித்திடம
ரருக்கு மிறை, வீர னானின்
றுரைத்தமொழி தடுத்ததென விடுப்பனென
நினைத்தமதி யோடி, யல்லால்
நுரைத்தமது குடிக்கவரு குலத்தினிலு
முதித்தவலி, நோக்கி யோடி,
வரைத்தபடி யிழுத்தமுனை வயிற்றினிட
முளைத்தசிசு, வாங்கு வேனே

வசனம். நானுன்னை மிக மரியாதையான மொழிகளினாலே அழைக்கிறேன். நீ அவைகளைக் கவனிக்காமல் என்னை நிந்திக்கின்றாய்? இந்தக் கருப்பச் சிசுவாலே நேரிடும் அவஸ்தை களை உத்தேசித்தேஇக்காரியத்தில் பிவேசித்தவனாகவிருக் கிறேன். நினைத்த காரியத்தை நிறைவேற்றாமல், இடை நடுவில் விட்டுப் போகப்பட்டவனான் அல்லன். எவ்விதத்திலும் உன் கருப்பத்திலிருக்கும் சிசுவை நான் சேதப்படுத்தாமல் போக மாட்டேன். இதனை உறுதியாக நம்பு. என்னை யாரென்று நினைத்தாய்? (புயந்தட்டுகிறான்)

லீலா. கலித்துறை

கொட்டிப்பு யங்களைத் தட்டிவந் தேபெருங் கூச்சலிட்டு
வெட்டிச் சிசுவை வதைத்திடு வேனென வீண்மொழிகள்
எட்டிக் கனியென என்செவி கேட்கவு மின்றுரைத்தாய்
மட்டிப் பயலுனக் குத்தகு மோவிந்த வாய்மதமே!

இந்தி தர்க்கப்பாட்டு

மகனே மகனே யென்று செகசாலி என்ற மெட்டு

இராகம்-மோகனம் தாளம்-அடைதாளம்

கண்ணிகள்

மதமாக என்னோடு எதிர் வாது பேசிடும்
விதமேது அதனையே சொல்லடி பெரு
மிதமணு வேணு நன்றல்லடி என்ன
கெருவித முனக்கித மல்லடி எனக்
கெது போனாலும் கெற்பச் சிசுவைநான் விடமாட்டேன்
அதனை நீ தந்துபின் செல்லடி

லீலா. அழையாத வீட்டிலே நாய்போலே
பழியார நீ நுழைந் தாயடா சிசு
வதைசெய்வே னெனமொழிந் தாயடா முன்ன
மகலிகையி னாலழிந் தாயடா என்னைத்
தழுவிய நாயக னிதுவறிந்தா லந்த
க்ஷணமே யுயிரொழிந் தாயடா

இந்தி. தாறுமாறாய் மொழி கூறுகிறா யுன்றன்
தலைமயிர் பற்றிப் போ வேனடி இல்லாமல்
அமரேந்த்ர னாவேனா நானடி மிக்க
இறு மாப்புக் கொள்வது மேனடி ஆர்க்கும்
ஆறிலுஞ் சாவுண்டு நூறிலுஞ் சாவுண்டு
அதனா லசுரர்க் கஞ்சி லேனடி

லீலா. பாபமென் றெண்ணாமல் கோபங்கொண்டுமிக
பரபரப் பாகவே நடிக்குறாய் மனப்
பாலைக் குமட்டாமல் குடிக்குறாய் உந்தன்
பவுஷுகளைச் சொல்லிப் படிக்குறாய் ராஜ
பூப னென்னாதனிச் சேதி கேட்டு விட்டால்
போச்சேயுன் சிரமேண்டா துடிக்கிறாய்

வசனம். அடே! சண்டாளா! எனது பிராணநேசர் இது சமாச்சாரத்தை அறிந்தால், உனது கதி என்னவாக முடியும்? ஏண்டா இக்கொடிய பாவத்திற்கு ஆளாக நிற்கிறாய்? வேண்டாம் என்னை விட்டகன்று போ.

இந்தி. விருத்தம்

இதுவரை அபலையென்று இதமான வார்த்தை சொன்னேன்
மதமது கொண்டுநீயு மறுத்தனை இனிச் சகிக்கேன்
அதமனின் வீரியத்தா லானவுன் சிசுவைத் தந்தால்
கொதிமன மடங்கு மில்லாமல் கூந்தல்பற் றிப்போவேனே

வசனம். நீ பெண்ணென்பதாக நினைத்து இதுவரை இதமான வார்த்தைகள் சொல்லி உடனழைத்தேன். நீ அவைகளைக் கவனிக்காமல், என்னை நிந்தித்துப் பேசிவிட்டாய். நீ உண்டாயிருக்கும் சிசுவைத் தருகின்றாயா? அல்லது உன் கொண்டையில் கைபோட்டு இழுத்துக் கொண்டு போக வேண்டுமா? பதிலென்ன சொல்லுகிறாய்?

விருத்தம்

லீலா. ஒருயோனிக் காசைப்பட்டு உடம்பெல்லாம் யோனியானாய்
வருபாப மதுவெண்ணாமல் வதைத்திடச் சிசுதா வென்றாய்
எருதாநீ பேயாசற்று மிரக்கமில்லாத தென்ன
கருதாயே யருகுறாதே கள்ளனே யகன்று போடா

வசனம். அடே நீ ஆதிநாளில் ஒரு யோனிக்காசைப்பட்டு உடம்பு முழுதும் யோனியானாய். அக்கிரம நிலைப்பாவத்தைக் கூட ஆலோசித்துப் பாராமல், நான் உண்டாயிருக்கும் சிசுவை வதைக்கக் கருதிக் கொடுவென்றாய். நீ மனுஷனா? மாடா? புத்தி சிறிதேனுமில்லவே இல்லையா? எட்டி அப்புறம் அகன்றுபோடா வெட்கங் கெட்ட வெறி நாய்ப்பயலே!

தர்க்கப்பாட்டு

தந்திடு தந்திடு தையலே என்ற மெட்டு

இராகம்-பியாக்

தாளம்-ஆதி

கண்ணி

இந்தி. என்னடி, என்னடி எதிர்வார்த்தை பேசுகிறாய்
ஏற்றபடி வாயில் வந்ததெல்லாஞ் சொல்லி ஏசுகிறாய்

லீலா. மூடா குடிகேடா ஆகு மோடா
முசுவே வயிற்றுச் சிசுவை வதைக்கத் தகுமோஉனக்கு

இந்தி. அட்டி நீ செய்திடில் வெட்டுவேனான் பாரடி
அண்டருக் கரசனென்னை யாவர்தடுப் பாரடி

லீலா. மதமா என்ன விதமாக மொழிந்தாய்
மலடனைப்போல்என்குல விளக்கைநீ கொலைசெய்யவந்து

இந்தி. கொஞ்சமும் அஞ்சாமல் வாய்மிஞ்சுவது மேனடி
கொண்டையில் கைபோட்டு முன்னைக்
கொண்டுபோவே னானடி

லீலா. ஆளனில்லாத வேளைவந்து நின்று
அதட்டி அளகம் பிடித்திழுத்திடத்
துடிக்கின்ற முழு மூடா

வசனம். அடே துஷ்டா! என் கூந்தலிலே கைபோடுவாயாகில் உடனே நீ நாசமாய்ப்போவாய். கணவனைத் தெய்வமாக நினைக்கும் காரிகையார் சாபம் பலனைக் கொடுக்காமல் போகாது. வேண்டாம் அக்கிரமப் பிரவிர்த்தியை விட்டுவிடு.

இந்தி. சந்த விருத்தம்

செருக்கடி மனத்தினி லிருக்கடி உனக்கது
செழித்தபுக ழைக்கொடாது
திருக்கடி விடுத்திடி லுனக்குயர் சிறப்படி
சிறுக்கிவல ரக்கியேயுன்
கருக்கடி தில்வைத்திடி லெடுத்தடி யெர்ப்பனடி
கற்றமொழி வித்தையெல்லாந்
தருக்கடி யெதுக்கடி நிறுத்தடி அடிக்கடி
சவுக்கடிகொ டுப்பேனடி

வசனம். அடி உன் வயிற்றிலிருக்கும் சிசுவை என்னிடம் கொடாது போனால், உன்னைவிடமாட்டேன். இதை நிச்சயமாக நம்பு. இந்தச் சவுக்குப்பூசை வேணுமா, அல்லது என்பின் தொடர்ந்து வருகிறாயா?

லீலா. விருத்தம்

மாட்டைமேய்ப் பவனைப்போல வந்தொரு சவுக்கை நீட்டிக்
காட்டுறாய்க் கடினவார்த்தை கனைக்கிறாய் கழுதைபோல
கூட்டுறாய் சுருதிபாடிக் குதிக்கிறாய் அடடா இந்த
மேட்டிமை செல்லாதிங்கு வீணணே அகன்றுபோடா

வசனம். மாடு மேய்ப்பவனைப்போல சவுக்கொன்றை நீட்டிக் காட்டி மிரட்டுகிறாய். உனது பட்டி மிரட்டுகள் இங்கு பலிக்காது. நீ வாவென்று உடனழைக்குங் கழுதைக்குரலைக் காட்டாமல் இப்பொழுதே அகன்று போய்விடு.

இந்தி. சே சே துஷ்டே! வாடி என் பின்பற்றிவா! (கூந்தலைப் பிடித்திழுக்கிறான்)

லீலா. பாட்டு

பாலா என்ன காலம் வந்ததடா மகனே என்ற மெட்டு

இராகம்- செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்

கண்ணி

ஐயோ இந்தபாவி யிழுக்கிறான்
ஆகா தெய்வமே என்றன்
அங்கம் பதறி நடுங்கி வருந்துதே
பங்க மடையாம லெங்குபோய்த் தங்குவேன் (ஐ)

இந்தி. பாட்டு

இராகம் - பூர்வி கல்யாணி தாளம் - ரூபகம்

ஏதுக்கிந்தச் சரப்பளியினால் என்ற மெட்டு*

கண்ணி

தெய்வ மென்னடி செய்யுமென்னோடு
சேயிழாய் வந்து சேரடி
வைய மழிக்குஞ் சிசுவைத் தந்திட
மாட்டே னென்றாயுளை வாட்டுவேன் பாரடி (தெ)

லீலா. துணை யொருவரையுங் காணேன்
ஐயோ தெய்வமே ஆ ஐயோ தெய்வமே
துஷ்ட சண்டாளனாங் கெட்ட பயலிங்கு
மட்டிப் புத்திக்கொண்டு கிட்டிக் கொண்டைபற்றி (ஐ)

இந்தி. தடுத்து மொழிந்த வாயைக் கிழித்துப்
படுத்தும் பாடினிப் பாரடி
திடத்துடன் வயிற்றி லிருக்குஞ் சிசுவை
இழுத் தறுத்துயிர் வதைப்பே னித்ததி (த)

வசனம். அடி! தடுத்துப் பேசும் உனது வாயைக் கிழித்தெறிவேன். என்னை யாரென்பதாக இன்னும் எண்ணி நிற்கிறாய்?

விருத்தம்

பூனைவா யெலிதப்ப வகையேது புலிவாயின்
புல்லாய் தப்பாது மதமே
றானைவா யதிலுற்றி டுங்கரும் போமீளும்
ஆரடி யெனைத் தடுப்பார்
மான மானதுசற்று வேண்டுவ துனக்கெனில்
மரியா தையோடு சிசுவைத்
தானிதே க்ஷணமிக்க மகிழ்வோடு கரமீது
தந்திடு விடேனானடி

வசனம். அடி பூனைவாய் எலி மீண்டாலும் புலி வாயில் அகப்பட்ட

* நாடகம்: பவளக்கொடி

மான் மீண்டாலும், ஆனைவாயில்போன கரும்பு மீண்டாலும் என் கைவசமானவர் மீளார். நான் திரிலோகாதிபதியாகையால் என்னைத் தடுப்பவர் எவரேனுமில்லை. உன் வயிற்றில் இருக்குஞ் சிசுவை என் வசந் தந்துபோ இல்லையேல் உன்னை விடமாட்டேன்.

லீலா. விருத்தம்

பத்துமா தத்தோடு கிரகமுச் சமராசி
பகர்யோக கரணம் நன்னாட்
சத்திரா திக்கமும் நிறைவாகி யீசனின்
றன்னருள் சுரந்திடாமல்
புத்திரா ளுற்பவித் திடவேது வழிகெட்ட
புலையனே என்றும் வேலை
சித்தியோ பெற்றுநா னெப்படி யளிப்பது
சிறப்பிலை யகன்று போடா

வசனம். அடே மூடா! நினைத்த வேளையில் பிள்ளையைப் பெறுவரோ? பத்துமாதமும் பூரணமாய் கழிந்து, நட்சத்திரம், ராசி, லக்கினம், யோகம், கரணம், திதி முதலான கால அளவு, நன்மை தீமை விளைக்கும் கஷ்டசுக லாலனபாலன நிலைகளெல்லாம் பூர்வ வினைப்படி அமையப் பெற்று, ஈசுவரனியதிப்படி அல்லவோ குழந்தை பிறக்க வேண்டும். இவ்வகைகளைச் சற்றேனும் ஆலோசித்துத் தெரியாமல், சிசுவைக்கொடு, சிசுவைக்கொடு வென்று கேட்கிறாயே உன் புத்தியென்ன தென்னைமரமேறிப் புல்பிடுங்கிவரப் போயிருக்கிறதோ? அகன்று போடா அறிவு கெட்ட மூடா!

நாரதர் வருகை

பாட்டு

ஆனாலவனுக்கோ அற்ப பிராயமே என்ற மெட்டு*

இராகம்- நாதநாமக்கிரியை தாளம்-ஆதி

பல்லவி

சங்கீத சாரமே
சாற்றவு மபார மாமே (சங்)
ஜதி சுதிலயவகை மனமதை யொருநிலை
தனிலுற நிலை நாட்டும் மதி

---

* நாடகம்: சத்தியவான் சாவித்திரி

தரும் நிஜமது காட்டும் சிவ
ஸ்தல மதிலருள் கூட்டும் ஒரு
சஞ்சல மில்லாம லோட்டும்

சரணம்

பிறவி யெனு மரிய பிணி விலகிட விது
பெரிய அவிழ்த மாகும் வந்து
பெருகிய வினை போகும் செய்த
பிழை விலகியு மேகும் ஆசை
பித்த மென்னுங் காடு வேகும் (சங்)

இந்தி. சுவாமி நமஸ்கரிக்கிறேன்.

நாரத. கல்யாண்! இந்திரா! இது என்ன தகாத காரியத்தில் பிரவேசித்து, ஸ்தீரிஹத்தி தோஷத்தை ஏற்றுக்கொள்ள முயன்று நிற்கிறாய்?

பாட்டு

விவரதுசமயம் வா வா வா அரசனறியநேரே என்ற மெட்டு

இராகம் - பியாக்

தாளம் - ஆதி

பல்லவி

அதம மிதல்லவோ அமரர்க ளிறையே
அகல் வாயிது ததியே பொல்லாததாம்

அநுபல்லவி

இதமில்லையதனால் இவள்மீ தடமேன்
இனிநீ விடுவா யிலையேலழிவாய்

சரணம்

வேதநெறி மாறுதல் தீ ததென வேதெரி
யாதவித மேது முறையா-சொல்லாடி
வேளையிதில் நீதியை நீ நினைகிலாமலும்
வேதை செய்ய நாடுகிறையா
பாதக தாகிய வேலை செய்யலேன் மொழி
பகர்வே னதுகேள் நலம் நீ யடைவாய்

வசனம். அமரேந்திரா! வேதாகம உபநிடதங்களை நீ கற்றுணர்ந்து மற்றொருக்குப் போதித்தும், செய்கையில் மாறுகொண்டு நடந்தால், உனக்குப் பெருமையைக் கொடுக்குமா? இவள் மகா பதிவிரதை! ஒரு குற்றமுமில்லாதவள். இவள் மீது உனக்கிவ்வளவு கொடிய கோபமுண்டாகக் காரணமேன்?

இந்தி. சுவாமி! இவள் இரணியன் மனைவி, அவனோ எங்கள் குல வைரியாகி நாடோறும் எங்களுக்கு அனர்த்தத்தை விளைத்து வருகிறான். அந்த வேதையைச் சகிக்கமாட்டதவர்களாகி, நாங்கள் தத்தளித்து வாடித் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், இவளும் கருப்பமடைந்து விட்டாள். இக்கருப்பத்திலிருக்கும் சிசுவானது கொடிய துஷ்டனின் வீரியமானதால் பின் இச்சிசுவாலும் எங்களுக்கு அநேக அனர்த்தங்கள் விளைய நேரிடுமென்று பயந்து, இப்பொழுதே இக்கருப்ப சின்னத்தை ஒழித்துவிட நினைத்து வந்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை. இதில் தோஷமென்ன? தேவமானுஷிய பிராணி வர்க்கமனைத்திற்கும் இடுக்கண் விளைவிக்கும் ஒரு சிசுவை ஒழித்து விடுவது சர்வ ஜீவ சம்ரட்சண தருமந்தானே?

நாரத. யாகபதே! அப்படியில்லை. நான் சொல்வதைக் கேள். இவளது கர்ப்பத்திலிருக்கும் சிசுவினுடைய மகத்துவத்தை அறியாத படியால், பயப்பிராந்தி கொண்டு உளறுகிறாய். நீ யாதொன்றுக்கும் இனி வருத்தமடைய வேண்டாம்.

பாட்டு

இராகம்-சாவேரி தாளம்-ஆதி

பல்லவி

இந்தச் சிசுவினாலே யிந்திரா உங்களுக்கு
இன்பம் வருந்தப் பாது

அநுபல்லவி

சிந்து சயனனடி தினமு மறந்திடாமல்
புந்திதனை யொடுக்குப் பூசை செய்யுமதனால் (இ)

சரணம்

மூங்கிலி லேயிருந்து முளைக்கும் நெருப்பினாலே
முழுது மதன்குலமே மோசமா மது போலே
தாக்கிய விரணியன் தமரோடு மாலாலே
சாவதுவே நிச்சயம் தடையிலை யினிமேலே

வசனம். ஆகண்டவா! இவள் கருப்பத்திலே நின்றும் பிறக்குஞ் சிசுவினாலே உங்களுக்கெல்லாம் ஷேமமுண்டாகும். ஸ்ரீவிஷ்ணு பகவானுக்குப் பரம பக்தி செலுத்தும் ஜீவாத்மாவே இவள் வயிற்றில் தங்கியிருப்பதாக நினைப்பாய். துஷ்ட ராட்சச ரெல்லோரும் நாசமடைவதற்கு ஏதுவானது இவள் கருப்பம்.

மூங்கிலிலே பிறந்த நெருப்பு, தன்னினமாகிய மூங்கிலை யெல்லாம் சுட்டெரித்து அழிப்பது போல் இக்கருப்பச் சிசு தோன்றித் தன் குலத்தினரை எல்லாம் நாசப் படுத்தும் என்பதற்கு ஆட்சேபனை இல்லை. ஆதலால், இவளை என்னிடம் விடுத்து நீ உன்னிடம் போய்ச் சேர். நான் இவளை நாயகன் இரணியனிடம் சேர்த்து விடுகிறேன்.

இந்தி. சுவாமி! நான் இவ்வித தகாத காரியத்தைச் செய்தேனென்று, இரணியன் கேள்விப்பட்டால், என்னை எளிதில் விடமாட்டானே இதற்கு நானென்ன செய்வேன்?

நாரத. மேகவாகனா! அஞ்சாதே. இவ்விஷயங்களினாலே உனக்கு ஒரு துன்பமும் வராமல் நான் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறேன். நீ உன்னிருப்பிடம் போய்ச்சேர். (இந்திரன் போகிறான்) (லீலாவதியைப் பார்த்து)

அம்மா! உனது நாயகனோ தவசு செய்யப் போயிருக்கிறான். அவன் வரம் பெற்று மீண்டு வருகிறவரை எனது ஆச்ரமத்தில் சுக செளக்கியமாக வசித்திருப்பாயாக. வா போகலாம்.

லீலா. சுவாமி! அப்படியே போகலாம்.

(போகிறார்கள்)

காட்சி முடிவு

காட்சி - 5

காலம்- பிற்பகல்

இடம் - மலைச்சாரல்

பாத்திரங்கள் - இரணியன், பிரமா

இரணியன் தவநிலை

பாட்டு

முத்திநெறி யறியாத என்ற மெட்டு

இராகம்-ஆரபி தாளம்-ஆதி

கண்ணி

வெண்கமலந் தங்கிநித மன்பருளுஞ் சுந்தரியாம்
பெண்கொடியின் பங்கருது மெண்கண்ணாநின் சரணம்
மண் புவனங் கண்டுதொழ வந்துதவங் கொண்டதனால்
பண்புடனின் றென்ற னெதிர் வந்துதவும் பங்கயனே

பிரமன் பிரசன்னம்

வசனம். வரம்ப்ரோகி பக்தா! வரம்ப்ரோகி

பாட்டு

மெல்லிசை வண்ணம்

இரணி. அண்டர்பகை யின்றுகெட•வென்றுஜெயங் கொண்டிடவும்
பண்டமெது தந்தைமுதல் வந்தவர்கள் நின்றநிலை
கண்டவர்க ளும்பணிய நன்குபுகழ் கொண்டிடவும்
வண்டுபல சிண்டுமலர் வந்தவனே தந்தருளே.

பிர.வச. பக்தா! உனது தவத்திற்கு மெச்சினேன். நீ யாரைக் குறித்துத் தவஞ்செய்து நின்றாயோ அந்த நான்முகன் பிரத்தியட்சமாக வந்திருக்கிறேன்.

இர.வச. அடே! துஷ்டா! நீ யாவன்? எனது தவநிலையைக் கெடுக்க மாறாட்டமான மொழியோதுகிறாய். அப்பாலே அகன்று போய்விடு. இல்லையேல் இப்பொழுதே உனது பிராணனை எமலோகமனுப்பி விடுவேன். போ, போ, நிற்காதே.

பிர.வச. வத்சா! மாறுபாடுடைய ஒருவன் உனது தவநிலையைக் கெடுக்க வந்திருக்கிறானென்று நினையாதே. கண் விழித்து என்னைப் பார். நானே உன் லட்சியத்தில் நிற்கும் பிரமன்.

இரணி. (கண் விழித்துப் பார்த்து)

பாட்டு

கண்டேன் கோபாலா அந்த என்ற மெட்டு

இராகம்-கமாஸ்

தாளம்-ஆதி பல்லவி

உண்டு பண்ணு கின்ற தொழி
லுள்ள பரனே

அநுபல்லவி

அண்டர் பதம் அண்டிப் பணி
நான்கு சிரனே (உன்)

சரணம்

கல்விக் கிறையவள் கலவிக்கு இதனே
செல்வத் திருமால் புகழுந் திவ்ய சுதனே (உன்)
பாதமலர் மீதுபணி யோதி நின்றேனான்
வேத மறையோனேயாகி பேசுவாய் நீதான் (உன்)

வசனம். தேவா! உண்மை தெரியாமல் வேற்றான தேவரில் எவனோ எனது தவத்தைக் கெடுக்க வந்திருக்கிறானென்று நினைத்து பலவாறு நிந்தித்துவிட்டேன். அந்தக் குற்றத்தை முற்றிலும் பொறுத்து என்னை ஆட்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

பிர.வச. பக்தா! உனது திடச்சித்த வைராக்கியத்தை மெச்சிப் புகழ்ந்தேன். உன் நிந்தை மொழிகளையெல்லாம் அன்பினால் என்புருகும் தோத்திரமாகச் செவியேற்றேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்.

இரணி. பாட்டு

எப்படியிருந்தால் நமக்கென்று என்ற மெட்டு

இராகம்-தர்பார்

தாளம்-ஆதி

பல்லவி

இந்தவர மொன்றெனக்குத் தருவீர் நீர் (இ)

அநுபல்லவி

மிகு-கந்தமல ராசனத்தில் வந்தவும தாதரத்தில் (இ)

சரணம்

மந்திர வலியுடைய மாமுனிவர் தேவரிஷி
வர்க்க முதலியோர்படை யாலும் கெட்ட
மாரண ஓமயாகங்கள் கோரமுள சூனியங்கள்
வஞ்சனைசேர் பில்லிவகை யாலும்
தந்திர மாயங்களறி யும்பகைவர் போரினாலும்
சாரு மார்க்க மில்லாமலே இருக்கவே யெந்தாகும் (இ)

வசனம். தேவா! இந்திராஸ்திரம், சந்திராஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், நாகாஸ்திரம், கெருடாஸ்திரம், இடியாஸ்திரம், நாராயணாஸ்திரம் முதலான எய்படைகளாலும் சக்கரம், தண்டம், இரும்புக்குண்டு. வளை தடி முதலான எறிபடைகளாலும், வாளாயுதம், சந்திராயுதம், வீச்சரிவாள், கண்டகோடரி முதலான குத்துப் படைகளாலும், உரகர், பன்னகர், சித்தர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர், விஞ்சையர், கந்திருவர்கள், பூமி, அந்தரம், சுவர்க்கங்களாலும், இரவிலும், பகலிலும், புறம்பிலும் நான் சாகாதிருக்கும் படியான ஒரு வரத்தை யெனக்குக் கிருபை பாலிக்க வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடும் கேட்டுக் கொள்கிறேன். அநுக்கிரகிக்க வேண்டும்.

Personal Copy.

பிர. வத்சா! புவியில் பிறந்தோரெல்லோரும் இறக்கும் நிலை வாய்ந்தவர்களே. ஆகையால், நீ விரும்பும் சாகாவரம் கிடையாது. அமரத்வ வரத்தைக் கொடுத்திருக்கிறேன். அதாவது, நீ கேட்டவைகளினாலே உனக்குச் சாவு நேராது. ஆயினும், இதுவரை உலகில் காணக்கூடாத அபூர்வ உருவத்தாலும் சேர்க்கையில்லாத காணா ஆயுதத்தாலும், இராப்பகலில்லாக் காலத்திலும் உள்ளும், புறம்புமில்லாத இடத்திலும், உன் சரீரம் துண்டு துண்டாக அழியினும், அத்தோடு மாய்ந்து போகாத அமரத்வவரத்தை நான் அனுக்கிரகித்திருக்கிறேன். பூரண ஆசீர்வாதம் பூரண ஆசீர்வாதம்!

இரணி. இப்போது இவர் கொடுத்த வரத்தை நான் பரிசோதித்தறிய வேண்டும்.

ஏ நான்முகத்தேவா! நீ கொடுத்துவிட்டாய். ஆகையால், என் பயபலப் பிரதாபத்தையடையும் பொருட்டு என்னோடு யுத்தஞ் செய்வாயா? (புயந்தட்டல்)

பிர. இவன் முழுமடையன் என்பது தெரிந்தும் நாமிவனுக்கு வரங் கொடுத்துவிட்டோம். இவனும் தீட்டிய மரத்திலேயே கூர்மைப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். என்ன செய்யலாம்?

இரணிய மகாராஜா! உம்மோடு யுத்தஞ்செய்யும் வல்லமை எனக்கில்லை. நான் இவ்வேளை உமக்குத் தோல்வியடைந் தவனே. ஆதலால், உமதிஷ்டப்படி நடந்து கொள்கிறேன்.

இரணி. ஆனால் நாள்தோறும் எனது சயனக்கிரக வாசலில் வந்து காத்திருந்து நான் நித்திரை நீங்கி வெளிவரும் போது அன்றன்று நடைபெறும் பலாபலன்களைப் பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லி விடைபெற்றுப் போக வேண்டும். இந்தப் புரோகிதத் தொழிலை ஒருநாளேனும் தவறாமல் நீ பார்த்துவர வேண்டும். சிறிது தவறினாலும் தண்டனைஅடைகுவாய் சாக்கிரதை.

பிர. உத்தரவு (போகிறார்கள்)

காட்சி முடிவு

காட்சி - 6

காலம்- மாலை

இடம் - அரண்மனை

பாத்திரங்கள் - இரணியன், காவலர்

இரணியன் வந்தவுடன் அந்தப்புரம் முதலிய இடங்களில் தனது மனைவி லீலாவதியைத் தேடிப்பார்த்து காணாமல் வந்து அடே, சேவகர்களே! அரண்மனை முழுதும் தேடிப்பார்த்து விட்டேன். என் மனைவியைக் காணவில்லை. அவளெங்கே போனாள்.

மூ.சே. வாயை மெல்லுகிறான்.

இரணி. என்னடா நான் கேட்பதற்குப் பதில்சொல்லாமல் வாயை மெல்லுகிறாய். (இளைய சேவகனைப் பார்த்து) நீ சொல்லடா?

இ.சே. உளறுதல்.

இரணி. அடே நீயும் பதில் விவராமாகச் சொல்லாமல், மிரள மிரள விழித்து உளறுகிறாயா? நடந்ததென்ன?

மூ.சே. ஐயா! தாங்கள் தவசுக்குப் போனவுடனே இந்திரன் இங்கு வந்து நாங்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டுத் தடுத்தும், கைமிஞ்சித் தங்கள் தேவியாரை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

இரணி. அடே கையாலாகாத பேடிப்பயல்களே! நானில்லாத தருணத்தில் என் மனைவியை ஒருவன் இழுத்துப் போக நீங்கள் உங்கள் வல்லமையால் அவனைக் கொன்று மீட்காமல் உயிராசை கொண்டு சும்மா நின்றீர்களோ? சேச்சே! என் முகத்தில் விழிக்க வேண்டாம் அப்பாலே போய்விடுங்கள்.

இனி நாம் சும்மா இருக்கலாகாது. இப்பொழுதே அமராவதி புகுந்து இந்திராதி தேவர்களை நாசஞ்செய்கிறேன்.

(போகிறான்)

காட்சி முடிவு

காட்சி - 7

காலம்- அதிகாலை

இடம் - நாரதர் ஆசிரம்

பாத்திரங்கள் - நாரதர், லீலாவதி

ஆச்ரமத்தில் லீலாவதி நித்திரை செய்யும்போது நாரதர் அவள் வயிற்றிலிருக்கும் கருப்பச் சிசுவுக்கு ஞானோபதேசம் செய்கிறார்.

நாரத. பாட்டு

சும் சும் சும் பியாரி என்ற மெட்டு
இராகம்-இந்துஸ்தானி
தாளம்-ஆதி
பல்லவி

உத்தமலீ லாவதிகருப் பத்திலிருக்கு ஞ்சிசுவே
உண்மைஞான மோதுகிறேன் கேள் கேள் கேள்

அநுபல்லவி

நித்தியம் வாழும் நிலை தவ றாது
நிலைத்தினி லிறப்பொரு நாளும்நே ராது
நீ மறவாமற் சிந் தித்து
நாமபோது வாய்வந்தித்து (உ)
அரிஓம் நாராய ணநம வென்று
அனுதின மோதிற்றுன்ப மணுகாதே யென்று
அலைசா கரவா லிலைமீ தழகா
யற்புத நித்திரை புரிவான்
பொற்பத சித்தி தருவான் (உ)

வசனம். ஏ! லீலாவதியினது கருப்பமாம் புயத்திலிருக்கும் சிசுவே! நான் உனக்குப் போதிக்கும் உண்மை ஞானத்தைக் கேள். நீ சர்வ காலமும் ஸ்ரீ பரந்தாமனைக் குறித்துச் சிந்தித்து, அரி ஓம் நாராயண நம என்று வாக்காற்றுதிப்பாயானால், மலைபோல் உன்னை நெருங்கி வருகின்ற துன்பமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி, நித்ய கைவல்ய பேரின்ப அனுபவ பரமபதம் வீற்றிருப்பாய், எடுத்த தேகமழியாமல் எளிதிலடைவர். இதோ எனது பூரண ஆசீர்வாதம். அஷ்டாட்சரத்தினுடைய அனுக்கிரகமடைவாயாக.

லீலாவதி நித்திரை தெளிந்து பாடுகிறாள்
இஸ்கேபூ ராஞ்செஞ்சல் என்ற மெட்டு
இராகம்- பியாக்
தாளம் - ஆதி
பல்லவி

நாதனை என்று காண்பேன் தவநிலையை
நாடிவ னத்தின்வழி தேடிமுன் சென்ற (நா)

வேதனையைப் பொறுக்கவில்லை யென்னெஞ்சம்
வேறா ரிவ்வேளை தஞ்சம் ஒருவரிலை
வேந்தரைக் கண்டால் சாந்தமாவேனான் கொஞ்சம் (நா)

இரணி. இதென்ன எனது நாயகி குரல்போல் கேட்கிறது. இது நாரதர் ஆச்ரமமல்லவா? நல்லது இங்குப் போய்ப் பார்ப்போம்.

(உள்ளே போகிறான்)

லீலா. நாதா! நமஸ்கரிக்கிறேன்.

இரணி. கல்யாண்! லீலாவதி! (நாரதரைப் பார்த்து) ஓய் நாரதரே என்ன காரியஞ் செய்தீர்? நான் இல்லாதவேளை தெரிந்து எனது தேவியைக் கூட்டிவந்து உம்முடைய இடத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீரே இது நியாயமா?

நார. இதுதான் பாவமொரு பக்கம் பழியொரு பக்கமென்பது. பரிகாரம் செய்பவருக்கு அபகாரமேற்படுவதும் இப்படித்தான். இந்தப் பழிக்கும் இரணியன் கோபத்திற்கும் நர்ன் ஆளாக வேண்டுமா? இவ்விதம் வருமென்று முன்பின் அறியாமல் எத்தனையோ காரியங்களில் மாட்டிக்கொண்டு முன்னமே தலை மொட்டையாய்ப் போனேனே. இப்பவும் ஏன் இந்தச் செய்கைக்கு உடன்பட வேண்டும்? யார் எப்படிப் போனாலும் நமக்கென்ன? இந்திரன் இவள் உயிரைக் கொன்றாலென்ன? இவள் காட்டில் மாண்டால் நமக்கென்ன? நாம் ஒரு காரியத்திலும் பிவேசிக்காதிருந்தால் இவ்வித மனப்புண் நமக்கு உண்டாவதற்கு நியாயமில்லையே?

இரணி. ஓய் நாரதரே! என்ன நான் கேட்கிறேன்? நீரென்ன ஆலோசித்துத்தானா உளறிக் கொண்டு நிற்கிறீரே?

லீலா. பிராணேசா! இந்த மகான்மீது ஒரு தோஷமுமிலை. நானிங்கு இருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன் செவிகொடுத்துக் கவனமாகக் கேளுங்கள்.

நார. அம்மா! நீதானே நடந்த சம்பவங்களை உன் கணவனுக்கு விளக்கமாகச் சொல்.

லீலா. பாட்டு

எப்போதானிரங்குமோ என்ற மெட்டு

இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

பல்லவி

செப்புவ தெப்படி நான்
தேவேந்திரன் கொடுமை (செ)

அநுபல்லவி

மப்பாகவே கெர்வித்து மாதென் மயிர்பிடித்து
பற்பல தப்பிதம் பாடினானே எடுத்துச் (செ)

சரணம்

வாடியென்றே யிழுத்து மதத்தினாலே கொழுத்து
தாடிச்சிசுவை யென்று தனித்த வனத்தின் நின்று
தாங்கினான் ஓங்கினான் தடுத்து அழைத்துவந்தார் (செ)

வசனம். பிராணபதே! தாம் தவஞ்செய்யப் போனபோது தனித்திருந்த என்னிடம் இந்திரன் வந்து, நான் உண்டாயிருக்கும் கருப்பச் சிசுவைக் கேட்டான். நான் எவ்வளவோ நீதி சொல்லியும் கேளாமல், என் சிகையைப் பற்றியிழுத்து ஆ'ரணியத்தில் விட்டுச் சிரசை சேதிக்கவுமுயன்றான். அவ்வேளை இப்புண்ணிய முனிவர் பிரவேசித்து அவனுக்குச் சன்மார்க்கங் களைப் போதித்துப் போக்கி, என்னை விடுவித்தார். நான் அரண்மனையில் போயிருப்பேனாகில், மீண்டும் தேவரால் இவ்வித ஆபத்து எங்கே நேரிட்டுவிடுமோ என்று பயந்து, தாங்கள் வருகிறவரை இவ்விடத்தில் வைத்து ரட்சியுமென்று இவரைக் கேட்டுக் கொண்டேன். ஆகையால், இவர் மீது சற்றேனும் பிழை கிடையாது பிராணேசா! இவரில்லாவிடில், என் சரீரத்தை இப்பொழுது பார்க்கமாட்டீர்கள். மகா சண்டாளனாகிய அந்தத் தேவேந்திரன் செய்த கொடுமையைச் சொல்ல நாவும் அஞ்சுகிறது. நானென்ன செய்வேன்?

இரணி. சகி! நீ யாதொன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இதே க்ஷணத்தில் அமராபதிக்குப் போய் இந்திரனையும் அவனுக்குச் சகாயர்களாகிய திக்குப்பாலர்களாகிய தேவர்களையும் சிறைபிடித்து வந்து காராக்கிருகத்தில் அடைத்துத் தண்டனை செய்விக்கிறேன். நீ அரண்மனையிலிருப்பதற்கு விட்டுப் போகிறேன் வா.

(போகிறார்கள்)

காட்சி முடிவு

காட்சி - 8

காலம்- பகல்

இடம் - தேவலோகம்

பாத்திரங்கள் - இந்திரன் முதலிய திக்பாலர்கள்

இந்திரன் தர்பார்

திக்பாலர் முதலியோர் கூடியிருக்கிறார்கள்.

இந்தி. நண்பர்களே! நான் செய்துவந்த தகாத செய்கையை இரணியன் அறிந்தால், என்ன அனர்த்தம் விளையுமோ? தெரியவில்லை?

எமன். அமரேந்திரா! எதற்காகக் கவலைப்படுகிறாய்? துஷ்டராத்மா வினால் என்ன அனர்த்தம் நேரப்போகிறது? வந்தால் பார்த்துக் கொள்ளலாம்.

வருண. எமதருமா! அப்படிச் சொல்லாதே, அவனோ பொல்லாத சண்டாளன், தன் பத்தினிக்கு அவமானம் விளைவித்ததைக் கேள்விப்படுவானாகில், நம்மீது படையெடுத்துப் போருக்கு வருவான்.

வாயு. வந்தாலென்ன? நமது புயவலியால் அவனை அபஜெயப் படுத்துவோம்.

(இரணியன் படைகளுடன் சபையிற் பிரவேசிக்க)

எல்லோரும் ஓடுகிறார்கள்.

அடே துஷ்டத் தேவர்களே! ஓடாதீர்கள் நில்லுங்கள்! நில்லுங்கள்! நில்லுங்கள்!! படைவீரர்களே! இவர்களைப் பிடித்துக் கட்டுங்கள்.

(தூதர்கள் திக்பாலகர் முதலியோரைக்கட்டி முன்னால் நிறுத்துகிறார்கள்)

இரணி. (இந்திரனைப் பார்த்து) அடே இந்திரா! என்ன காரியத்தைச் செய்தாய்? நானில்லாத வேளை என் மனைவியைச் சிகைபற்றி இழுக்க, உனக்கு அவ்வளவு மமதையா?

இந்தி. பிரபு! என்குற்றத்தைப் பொறுத்தருளக் கேட்டுக் கொள்கிறேன் (விழுந்து பணிகிறான்)

இரணி. நல்லது நீ நாள்தோறும் உன்இனத்தாரோடு நான் குடிப்பதற்குக் கள்ளுக்குடம் சுமந்து கொண்டுவந்து கொடுக்க வேண்டும்.